# அலகு - I

# பண்பாட்டைப் புரிந்துகொள்ளல்

*1. பண்பாடு : ஓர் அறிமுகம்*

*2. இந்தியப் பண்பாடு*

# 1

# பண்பாடு : ஓர் அறிமுகம்

கல்சர் என்ற ஆங்கில சொல் 'கல்ட்' அல்லது கல்டஸ்' என்ற லத்தின் மொழியில் இருந்து தருவிக்கப்பட்டது. மேலும் இதன் பொருள் பண்படுத்துதல் அல்லது விளைவித்தல் அல்லது செம்மைப்படுத்துதல் மற்றும் வழிபடுதல என்பதாகும். மொத்தத்தில் விளைவித்த மற்றும் செம்மைப்படுத்தப்பட்ட பொருட்களின் இறுதி வடிவமானது நமது இரசனை மற்றும் மதிப்பைத் தூண்டுகின்றன. சமஸ்கிருத மொழியிலும் இதே நடைமுறையில் 'சமஸ்கிரிடி' என்றே வழங்கி வருகிறார்கள். சமஸ்கிரிடி என்ற சொல்லானது கிரி (செய்) என்ற சமஸ்கிருதச் சொல்லில் இருந்து பெறப்பட்டது. 'ப்ராகிரிதி' (அடிப்படை கருத்து அல்லது நிலைமை), 'சமஸ்கிரிதி' (செம்மைபடுத்தப்பட்ட பொருள் அல்லது நிலைமை) மற்றும் 'விக்ரிதி' (மாற்றியமைக்கப்பட்ட அல்லது சிதைக்கப்பட்ட பொருள் அல்லது நிலைமை) என்ற மூன்று சொற்களும் இதன் அடிப்படையில் இருந்தே உருவானதாகும். அடிப்படைப் பொருட்கள் அல்லது ப்ராகிரிதியைச் செம்மைப்படுத்தும் பொழுது கிடைக்கப் பெறுவது சமஸ்கிரிதி, மேலும் அது பிரியும் பொழுது அல்லது வழுவும் பொழுது விக்ரிதி ஆக மாறுகின்றது.

## நோக்கங்கள்

இந்தப் பாடத்தைப் படித்த பிறகு, நீங்கள் பண்பாட்டின் மையக்கருத்து மற்றும் பொருளைப் புரிந்து கொள்ள முடியும்.

- பண்பாடு மற்றும் நாகரிகத்திற்கும் இடையே உள்ள தொடர்பை அறிய முடியும்.
- பண்பாட்டிற்கும் பாரம்பரியத்திற்குமிடையே உள்ள பிணைப்பை அறிய முடியும்.
- மனித வாழ்வில் பண்பாட்டின் பங்கினையும், அதனால் ஏற்படும் விளைவினையும் நீங்கள் விவாதிக்க முடியும்.

## 1.1 பண்பாட்டின் மையக்கருத்து

பண்பாடு என்பது ஒரு வாழ்வின் வழிமுறை. நாம் உண்ணும் உணவு, நாம் உடுத்தும் உடை, நாம் பேசும் மொழி, நாம் வாழிபடும் தெய்வம் இவை அனைத்தும் பண்பாட்டில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. சுருங்கக்கூறும்பொழுது, நமது சிந்தனை மற்றும் செயல் வடிவத்தின் முழு உருவமாகப் பண்பாடானது பிரதிபலிக்கின்றது. இதுவே நம் சமுதாயத்தின் அங்கமாகச் செயல்பட வைக்கின்றது. மேலும் பண்பாடு என்பது மனிதனின் அனைத்து வகையான வெற்றிகளையும் ஒரு சமூக அங்கத்தினர் என்ற நிலையில் பெறுவதைக் குறிக்கின்றது. கலை,

இசை, இலக்கியம், கட்டடக்கலை, சிற்பக்கலை, தத்துவம், சமயம் மற்றும் அறிவியல் கலை, பழக்கவழக்கங்கள், பாரம்பரியங்கள், திருவிழாக்கள், வாழும் முறை மற்றும் ஒருவரின் வாழ்வில் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் பண்பாட்டில் அடங்கும்.

பண்பாடு என்பது மனிதனால் உருவாக்கப்பட்ட பொருள் சார்ந்த, மற்றும் பொருள் சாராத குழுக்கள், ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு மாற்றியமைக்கப்பட்ட சூழல் எனத் தகவல் கூறுகிறது. சமூக விஞ்ஞானிகளின் பொதுப்படையான கருத்துப்படி பண்பாடு என்பது மனிதனால் பெறப்பட்ட, வெளிப்படையான மற்றும் வெளிப்படையற்ற நடத்தையின் அறிகுறியாகும். இவற்றை அவர்கள் சின்னங்களாகவும், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சிறந்த பண்புருவங்களாகவும் வெளியிடுகின்றனர். மற்றும் நல்ல கருத்துக்கள், நுணுக்கங்கள் அந்தந்தக் குழுவில் பறிமாற்றிக் கொள்ளும் பொழுது அது வரலாற்று ஆதாரத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டு, சார்நத விழுமங்கள் பண்பாட்டின் முக்கிய கூறுகளாக இருக்கின்றன.

தற்காலத்தில் பண்பாடு என்பது வரலாற்று ஆதாரமாக அதனுடைய பாணியில் பண்புருவங்களாக, சின்னங்களாக, மக்களின் தகவல் தொடர்பு நீடித்திருக்க மற்றும் அவர்களது அறிவு முன்னேற, மற்றும் அவர்களது வாழ்வின் அணுகுமுறைகளை வெளிப்படுத்துதலையும் சுட்டிக் காட்டுகிறது.

பண்பாடு என்பது நமது இயற்கையான பண்புகளுடன் நாம் வாழும் வாழ்க்கை மற்றும் நமது சிந்தனைகளின் வெளிப்பாடாகும். இதை நமது இலக்கியம், நமது சமய முறைகள், பொழுதுபோக்கு மற்றும் மகிழ்ச்சிகரமான நேரங்கள் ஆகியவற்றில் காணலாம். பண்பாட்டில் இருபெரும் பிரிவுகள் உள்ளன. அவை பொருள் சார்ந்த மற்றும் பொருள் சாரா பண்பாடு ஆகும். பொருள் சார்ந்த பண்பாடானது நமது வாழ்க்கையோடு கூடிய பொருட்களான நமது உடைகள், உணவு மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களாகும். பொருள் சாரா பண்பாடு என்பது கருத்துகள், லட்சியங்கள், எண்ணங்கள் மற்றும் நம்பிக்கைகள் என்பவையாகும்.

பண்பாடு இடத்திற்கு இடம் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. இதனுடைய முன்னேற்றம் சமூகம், அங்கு பின்பற்றப்படும் வரலாற்று செயல்பாடுகள், மற்றும் தேசத்தை அடிப்படையாக கொண்டது. உதாரணமாக நாம் ஒருவரை ஒருவர் வாழ்த்துதலில் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டு இருக்கிறோம். நம்முடைய உடைகள், உணவு பழக்கம், சமூக மற்றும் தொன்றுதொட்டுக் கையாளும் சமய பழக்க வழக்கங்கள் மற்றும் வழக்கமாகச் செய்யும் செயல்கள் ஆகியவற்றில் மேற்கத்தியரிடமிருந்து வேறுபடுகிறோம். இன்னும் சொல்லப்போனால், எந்த நாட்டைச் சார்ந்த மக்களாக இருந்தாலும் அவர்களின் குறிப்பிடத்தக்க பண்பாட்டுப் பாரம்பரியத்தை வைத்துதான் அவர்களின் தனித்தன்மையைக் கூற முடியும்.

## இப்பகுதிக்கான கேள்விகள் 1.1

1. பண்பாடு மற்றும் தூய்மைப்படுத்தப்பட்ட நிலை ஒரே மாதிரியான பொருளைத் தருகிறது என்று எவ்வாறு கூறுவாய்?
2. கோடிட்ட இடத்தை நிரப்புக.

   அ. மனிதனின் எல்லா சாதனைகள் மற்றும் குழுக்களை இவ்வாறாக அழைக்கலாம் ___________.

   ஆ. பண்பாடு தனித்தன்மையான இரு பகுதிகளைக் கொண்டது. அவை பொருள் சார்ந்த மற்றும் ___________.

## 1.2 பண்பாடும் நாகரிகமும்

'பண்பாடு' மற்றும் 'நாகரிகம்' என்ற சொல் ஒரே பொருளைத் தருகின்ற சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது, இருந்தாலும் அவை தங்களுக்கான பொருளில் வேறுபட்டு நிற்கின்றன. நாகரிகம் என்பதற்குச் சிறந்த வாழ்வை வழி நடத்துவதையும் மேலும் அதற்கான தேவைகளை இயற்கையிடமே பூர்த்தி செய்து கொள்வது என்பதாகும். இதில் ஒரு சமூகத்தை அரசியல் குழுக்களாகப் பிரிந்து அனைவரையும் இணைந்து உழைக்கச் செய்து மனித வாழ்வின் முன்னேற்றம் அதாவது, உணவு, உடை, தகவல் பரிமாற்றம் மற்றும் பிற வசதிகளுடன் முன்னேற்றுவதும் அடங்கும். சில சமூகத்தினர் இவ்வாறு முன்னேறி நாகரிகம் மிக்கவர்கள் என்றும், மற்றவர்களை இழிவாகவும் பார்க்கிறார்கள். இந்த சமூதாய ஏற்றத்தாழ்வுகளால் மற்ற சமூகத்தினர், போர் மற்றும் தீயினால் ஏற்படுத்தக்கூடிய நாச வேலையில்ஈடுபட்டு மக்களுக்கு ஒட்டு மொத்த அழிவை ஏற்படுத்துகிறார்கள்.

வேறு வகையில் கூறினால், பண்பாடு என்பது மனிதனின் அறிவும் உள்ளமும் செம்மையுற்ற உள்ளுணர்வாகும். இது கலை மற்றும் அறிவியல், இசை, நடனம் மற்றும் மனித வாழ்வின் பல்வேறு பொழுதுபோக்குகளை உள்ளடக்கியதாகும். ஒருவர் மிக ஏழையாக இருக்கலாம் மற்றும் விலை குறைவான ஆடையை அணிந்திருக்கலாம். அவரை நாகரிகமில்லாதவர் என்று கருதுவது தவறு. ஆனால் அவர் அல்லது அவள் மிகுந்த பண்பாடுடையவராக இருக்கலாம். சிலர் தான் வைத்திருக்கும் செல்வத்தால் பகட்டான வெளித்தோற்றம் உடையவர்களை நாகரிகமானவர்கள் என்றும் கூறுவர். ஆனால் அவர்கள் மிகுந்த பண்பாடற்றவர்களாகவும் இருக்கலாம்.

ஆகையால் நாம் பண்பாட்டைப் பற்றி நினைக்கும் பொழுது, பண்பாடு நாகரிகத்திலிருந்து மாறுபட்டது எனப் புரிந்து கொள்ள வேண்டும். பண்பாடு என்பது மனிதனின் தூய்மையான மேலான உள்ளுணர்வு என்பதைப் பார்த்தோம். மனிதர்கள் வெறும் உடலால் மட்டும் ஆனவர்கள் அல்ல. அவர்கள் உடல் சார்ந்த, அறிவு சார்ந்த மற்றும் ஆன்ம நிலை சார்ந்த நிலைகளில் வாழ்ந்து செயல்படுகின்றனர். சமூகரீதியாக, அரசியல் ரீதியாக, சிறந்த வாழ்க்கை ரீதியாக, நம்மைச் சுற்றியுள்ள இயற்கை வளங்களைப் பெற்றிருப்பது "நாகரிகம்" என்று முத்திரையிடுகிறோம். இது பண்பாட்டிற்குப் போதுமானது அல்ல. மனிதனின் ஆழ்ந்த அறிவார்ந்த நிலை, உணர்ந்தறிகிற நிலை ஆகியவற்றால் நல்ல செயல்கள் வெளிப்படும் போதுதான் அவனை , அவளை பண்பாடுள்ளவர் என்று அழைக்கலாம்.

### இப்பகுதிக்கான கேள்விகள் 1.2

1. நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?
2. நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் இடையே உள்ள இரண்டு ஒற்றுமைகளைக் கூறுக?

## 1.3 பண்பாடும் மரபும்

பண்பாட்டின் முன்னேற்றம் என்பது வரலாற்றுச் செயல்முறை. நமது மூதாதையர்கள் பலவற்றை அவர்களுடைய முன்னோர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர். நாளடைவில் அவர்கள் சொந்த அனுபவத்தில் சிலவற்றை சேர்த்ததுடன் தங்களுக்குப் பயனில்லாதது என்று கருதுவனவற்றை விட்டுவிட்டார்கள். நாமும் நம் மூதாதையர்களிடமிருந்து நிறைய கற்றுக்கொண்டுள்ளோம். நாள்கள் செல்லச் செல்ல ஏற்கனவே நடைமுறையில் இருந்தவனற்றுடன் புதிய எண்ணங்கள், புதிய கருத்துகளைச் சேர்த்தும், மற்றும் எது பயனில்லையோ அதை சில விட்டும் விட்டோம். இவ்வாறாகப் பண்பாடு இடம்மாறி ஒரு

தலைமுறையினரிட மிருந்து அடுத்த தலைமுறையினருக்கு எடுத்து செல்லப்பட்டது. பண்பாட்டை நாம் நமக்கு முன்பு இருந்தவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டதை பண்பாட்டு மரபு என்று அழைக்கிறோம். இது பல்வேறு நிலைகளில் உள்ளது. மனித இனம் ஒட்டு மொத்தமாகப் பெறப்பட்ட பண்பாட்டை மனித மரபு என்று அழைக்கப்படுகிறது. ஒரு நாடே பண்பாட்டை முன்னோர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் பொழுது, அதை தேசியப் பண்பாட்டு மரபு என சொல்லலாம்.

இந்த மரபுவழிப் பண்பாட்டில் மேற்கூறிய எல்லா கூற்றுகளும், பண்பாட்டு விழுமங்கள், மனித இனத்திற்கு அவர்களின் மூதாதையர்களால் தலைமுறை தலைமுறையாக மாற்றி அமையப்பெற்றதும் அடங்கும். அவர்கள் அதை இடைவிடாமல் மலரச் செய்து, காப்பாற்றி, பராமரித்தார்கள். அதனை வெகு பெருமையாகவும் நினைத்தார்கள்.

சில உதாரணங்கள், மரபின் மையக்கருத்தைத் தெளிவு செய்வதற்கு உதவியாக இருக்கும். டெல்லியில் உள்ள தாஜ்மஹால், காந்தி நகரில் உள்ள சுவாமி நாராயண கோவில், ஆக்ராவில் உள்ள செங்கோட்டை, டெல்லி குதுப்மினார், மைசூர் அரண்மனை, தில்வராவில் (ராஜஸ்தான்) உள்ள ஜெயின் கோவில், நியாசுமுதின் அயாவின் தர்கா, அமிர்தசரசில் உள்ள தங்கக் கோவில், டெல்லியில் உள்ள குருதுவாரா சிஸ்கன்ஜ், சாஞ்சி ஸ்தூபி, கோவாவில் உள்ள கிருஸ்துவர்களின் ஆலயம், இந்திய நுழைவாயில் முதலியவை நமது தேசிய பண்பாட்டு மரபுக்கு எடுத்துக்காட்டுகளாகும். இவற்றை எல்லா வழிகளிலும் காப்பாற்றப்பட வேண்டும். இந்த கட்டடக் கலைகளைத் தவிர, நினைவு சின்னங்கள், கைவினை சாதனங்கள், அறிவு சார்ந்த சாதனைகள், தத்துவம், அறிவுப் பொக்கிஷங்கள், அறிவியல் ஆராய்ச்சிகள் மற்றும் கண்டுபிடிப்புகளும் இந்திய மரபின் ஒரு பகுதியாகும்.

இந்திய பங்களிப்பாளர்களான பௌத்தாயன், ஆர்யபட்டா, கணிதத்துறையைச் சார்ந்த பாஸ்கராச்சார்யா, வான சாஸ்திரம் மற்றும் ஜோதிடம், பௌதிகத் துறையைச் சார்ந்த கனாட் மற்றும வராகமிகிரர், வேதியியல் துறையைச் சார்ந்த நாகார்ஜுனன், மருத்துவத் துறையைச் சார்ந்த சுஸ்ருதா மற்றும் சாரகா, மற்றும் உடல் சார்ந்த பயிற்சித் துறையைச் சார்ந்த பதஞ்சலி, ஆகியவர்கள் புலமை வாய்ந்த இந்தியப் தேசிய பண்பாட்டு மரபுகளின் பொக்கிஷங்கள் ஆவர். பண்பாடு மாறும் தன்மை கொண்டது. ஆனால் நமது மரபு அப்படியல்ல. தனி நபர்களாகிய நாம் ஒவ்வொருவரும் பண்பாடு அல்லது ஒரு குறிப்பிட்ட குழுவைச் சார்ந்தவர்கள்; மற்ற சமுதாயக் குழுக்களில் சில பண்பாட்டுக் கூறுகளைச் சேர்த்து அல்லது அதையே பின்பற்றுதலை பொறுத்து அமைகின்றது. ஆனால் இந்திய தேசிய பண்பாட்டு மரபு எப்பொழுதும் எவ்வித மாற்றமும் இல்லாமல் நிலைத்திருக்கும். நமது இந்திய தேசியப் பண்பாட்டு மரபு நம்மை என்றும் ஒருங்கிணைக்க வைக்கிறது. உதாரணமாக, இந்திய இலக்கியங்கள் மற்றும் திருமறை நூல்களான வேதங்கள், உபநிடதங்கள், கீதா மற்றும் யோகாசன முறைகள் முதலியன நாகரீகம் மேம்பாடடைய மற்றும் நல்ல அறிவு, நல்ல செயல், நல்ல நடத்தை மற்றும் நல்ல பழக்கவழக்கங்களுக்கு வெகுவாகப் பங்களிப்பு செய்கின்றன.

## இப்பகுதிக்கான கேள்விகள் 1.3

1. பண்பாட்டு மரபு என்றால் என்ன?
2. பண்பாட்டு மரபிற்குச் சில எடுத்துக்காட்டுகளைக் கூறு?





## 1.4 பண்பாட்டின் பொதுவான இயல்புகள்

நம் பண்பாட்டின் சில பொதுவான இயல்புகளையும், அவை உலகிலுள்ள பல்வேறு பண்பாட்டு முறைகளுடன் வேறுபடுவதையும் பின்வரும் தலைப்புகளில் காண்போம்.

1. **கற்பதும் அதைப் பின்பற்றுவதுமே பண்பாடு:** பண்பாட்டைப் பெறுவது என்பது நமது பரம்பரைப் பழக்கவழக்கங்களைப் பெறுவதாகும். தனி நபர்கள் குறிப்பிட்ட குணங்களைத் தமது பெற்றோர்களிடமிருந்து பரம்பரையாகப் பெறுகின்றனர். ஆனால் சமூக பண்பாட்டு கூறுகளை அவர்கள் பெறுவதில்லை. இவை குடும்ப அங்கத்தினர்களிடமிருந்து அல்லது குழு மற்றும் அவர்கள் வாழக்கூடிய சமுதாயத்திடமிருந்து கற்றுக் கொள்ளப்படுகிறது. இதன் மூலம் மனிதர்களின் பண்பாடு அவர்கள் வாழும் சமூகத்தின், சமூக சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு இருக்கும் என்பது தெளிவாகிறது.
2. **பண்பாடு, ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரால் பின்பற்றப்படுவது:** ஒரு குழு மக்களால் பண்பாட்டின் குறிப்பிட்ட ஒரு எண்ணம் அல்லது செயலைப் பின்பற்றுவது மற்றும் நம்பிக்கை கொள்ளுதல், அல்லது பழக்கப்படுத்திக் கொள்ளுதல்.
3. **பண்பாடு, கூடிப் பெருகுவது:** பல்வேறு வகைப்பட்ட அறிவு, பண்புருவமாக பண்பாட்டின் மூலமாக ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்குக் கடந்து செல்கிறது. காலம் செல்லச் செல்ல அதிகமான அறிவு குறிப்பிட்ட பண்பாட்டில் சேர்க்கப்பட்டது. ஒவ்வொருவரும் தன்னுடைய வாழ்வின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது ஒரு தலைமுறையினரிடமிருந்து அடுத்த தலைமுறையினருக்குக் கடந்து செல்கிறது. இந்தச் சுழற்சி முறை பண்பாட்டில் எல்லாகாலத்திலும் சேர்ந்து கொண்டே இருக்கிறது.
4. **பண்பாடு, மாற்றங்கள்:** அறிவு, எண்ணங்கள் அல்லது பாரம்பரியம் ஆகியவற்றுடன் புதிய பண்பாட்டு முறைகளைச் சேர்க்கும் பொழுது பழையன மறைந்து விடுகின்றன. அந்த குறிப்பிட்ட பண்பாடு, காலம் செல்லச் செல்ல பண்பாட்டு மாறுதல் ஏற்படுவதற்கு வழி வகுக்கிறது.
5. **பண்பாடு என்பது தொடர் மாற்றங்களுக்கு ஆட்பட்டுக் கொண்டே இருக்கிறது:** எந்த ஒரு பண்பாடும் நிலையாக இருப்பதில்லை. புதிய கருத்துகள் மற்றும் புதிய தொழில் நுட்பங்கள் சேர்ந்து நாளடைவில் பழைய முறைகளை மாற்றியமைக்கின்றன.
6. **பண்பாடு நமக்கு ஒழுங்கு நடத்தையின் தரத்தை கொடுக்கிறது:** இது, எப்படி ஒரு செயலை நடத்துவது, அதே சமயம் ஒரு தனி நபர் அதற்குத் தகுந்தவாறு எப்படிச் செயல்பட வேண்டும் என்பதில் ஈடுபடுகிறது.
7. **பண்பாடு வெவ்வேறானது:** இது பல்வேறு பரஸ்பரமான, ஒன்றையொன்று சார்ந்த பகுதியின் ஒரு முறையாகும். இந்த பகுதிகள் வெவ்வேறாக இருந்தாலும் ஒன்றை யொன்று சார்ந்து முழுப்பண்பாட்டினை ஏற்படுத்துகின்றன.
8. **பண்பாடு இலட்சியத்தைக் கொண்டது:** இலட்சிய பாணியின் நடத்தைகளை வலியுறுத்தி அவை தனி நபர்களைப் பின்பற்ற செய்து அதன் மூலம் அவர்கள் சார்ந்த மொத்தச் சமூகத்தையும் பின்பற்றச் செய்கிறது.

### இப்பகுதிக்கான கேள்விகள் 1.4

1. அனுமதிக்கப்பட்ட பழக்கவழக்கங்கள் என்றால் என்ன?
2. பண்பாடு என்பது தொடர் மாற்றங்களுக்கு ஆட்பட்டுக் கொண்டேயிருக்கிறது என்பதை எவ்வாறு நிரூபிப்பாய்?

குறிப்புகள்

## 1.5 மனித வாழ்வில் பண்பாட்டின் முக்கியத்துவம்

பண்பாடு மனித வாழ்வுடன் நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளது; இது ஒரு விளம்பரம் அல்ல. மனிதஇனம் மட்டும் பயன்படுத்தக்கூடிய ஓர் ஆபரணம்;. இது வெறும் தொட்டுப்பார்க்கக்கூடிய நிறம் அல்ல; இதுதான் நம்மை மனிதர்களாக உருவாக்குகிறது. பண்பாடில்லாமல் மனித இனமே இல்லை; பாரம்பரியம், நம்பிக்கைகள், வாழும் முறை உயர்ந்த ஆன்மீகத்திலிருந்து பெறபட்ட உயர்ந்த பொருட்களால் ஆனது; இது நமக்கு வாழ்வின் பொருளையும், வாழ்க்கையை எவ்வழியில் கொண்டு செல்வது என்பதையும் உணர்த்துகிறது. மனித இனம்தான் பண்பாட்டினை உருவாக்கியவர்கள், அதே சமயம் பண்பாடுதான் நம்மை மனிதனாக உருவாக்குகிறது.

பண்பாட்டின் அடிப்படைக்கூறு என்பது சமய நம்பிக்கைகள், மற்றும் அதன் அடையாள சின்னங்களின் தத்துவத்தை வெளிப்படுத்துவதாகும். நாம் இந்த சமயத்தினர் என்பதற்கு மதிப்பு கொடுத்தல் மற்றும் அதை முழுமைப்படுத்தும் வகையில் நடத்தல் என்பது இதன் பொருள். நம் உள் நம்பிக்கைகளின் உரையாடல், பண்பாட்டு உரையாடலாக மாற்றம் பெற வேண்டும். உலகம் மிகவும் பரவலாகிக் கொண்டிருக்கின்றது. எனவே, நாம் தனியாக ஒரு வழியினை மட்டும் நினையாமல் இந்த உலகத்தோடு ஒன்றி இருத்தல் அவசியம். சேர்ந்து வாழும் வாழ்க்கைக்கு, பண்பாட்டின் ஒற்றுமை, மற்றும் நம்பிக்கைகள் தேவையாக உள்ளன. தவறுகளைச் செய்யாமல் இருப்பதற்குச் சிறந்த வழி, நமது பண்பாட்டினை அறிந்து கொள்ளுதல் மேலும் மற்ற பண்பாடுகளையும் பற்றி அறிந்து கொள்ள வழி வகுக்கின்றன. உண்மையிலேயே நமது பண்பாட்டினைப் பற்றி நாம் அறியாதபோது, எவ்வாறு நாம் மற்ற பண்பாட்டினைப்பற்றி உரையாட முடியும்?

என்றும் நிலைத்திருக்கிற மூன்று கூறுகள் மற்றும் பிரபஞ்சத்தின் மதிப்புகளான உண்மை, அழகு மற்றும் நல்ல குணம் ஆகியவை பண்பாட்டுடன் தொடர்புடையவையாகும். பண்பாடுதான் நம்மை தத்துவம் மற்றும் சமயத்தின் மூலமாக உண்மைக்கு நெருக்கமாக கொண்டு செல்கிறது. கலைகளின் மூலம் நம் வாழ்விற்கு அழகு சேர்க்கிறது மற்றும் அழகுணர்ச்சி உள்ளவர்களாக உருவாக்குகிறது மற்றும் நம்மை அறவாளிகளாக மாற்றுகிறது. மனிதர்களிடம் நெருக்கமான உறவை ஏற்படுத்துகிறது மற்றும் நமக்கு அன்பு, சகிப்புத்தன்மை, மற்றும் சமாதானம் ஆகிய விழுமங்களைக் கற்றுக் கொடுக்கிறது.

### இப்பகுதிக்கான கேள்விகள் 1.5

1. மனநிறைவான வாழ்க்கைக்குப் பண்பாடு எதைத் தருகிறது?
2. சமுதாயத்தில் எந்தத் தனி மனிதர் நாகரிகமற்றவர் என்று அழைக்கப்படுவர்?

### நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- கலாசாரம் 'கல்ட்' அல்லது 'கல்ட்ஸ்' - பொருள் 'தோண்டுதல்' அல்லது தூய்மைப் படுத்துதல் என்ற இலத்தீன் சொல்லிலிருந்து எடுக்கப்பட்டது.
- சமஸ்கிருதி என்ற சொல் 'சமஸ்கிருதம்' என்ற சொல்லின் வேரிலிருந்து பெறப்பட்டது மேலும் இதில் 'கிரி' என்பதன் பொருள் 'செய்' என்பதாகும்.

- பண்பாட்டினைத் தனி மனிதர் மற்றும் சிறப்பாக ஒரு குழுவாக வாழும் முறை எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் அவர்களுக்குள் உள்ள ஒருங்கிணைப்பு முறை கொண்டாடுதல் மற்றும் வாழ்க்கையில் பங்கெடுக்கும் முறை என வரையறுக்கப்படுகிறது.
- பண்பாடு பல்வேறு வகைப்பட்ட இயல்புகளைக் கொண்டது. இவை எடுத்துக் கொள்ளப்பட்டவையாக இருக்கலாம், மறைந்து போனவையாக இருக்கலாம் அல்லது பகிர்ந்து கொண்டவையாக இருக்கலாம். பண்பாடு என்பது கூடிப் பெருகுவது. இது தொடர் மாற்றங்களுக்கு ஆட்பட்டுக் கொண்டே இருக்கும். வெவ்வேறானது மற்றும் அனுமதிக்கப்பட்ட நடத்தை முறையினை நமக்கு அளிக்கிறது. இதுவும் மாறக்கூடியது. பண்பாடு, பொருள் சார்ந்த பண்பாடு மற்றும் பொருள் சாராப் பண்பாடு என இரண்டு பகுதிகளைக் கொண்டது.
- இன்னும் ஆழமாகச் சிந்திக்கும்பொழுது பண்பாடுதான் இலக்கியத்தின் வகைகளான பாடல், நடனம், சிற்பக்கலை, கட்டடக்கலை மற்றும் வெவ்வேறு கலைகளின் வடிவங்கள் ஏராளமான நிறுவனங்கள் மற்றும் கட்டமைப்புகள், இடர்பாடுகள் இல்லாத மற்றும் ஒழுங்கான சமுதாயத்தை இயக்குவதாகும்.
- மனநிறைவான வாழ்வைத் தொடரப் பண்பாடு நமக்குக் கருத்துகள், இலட்சியங்கள் மற்றும் விழுமங்களை அளிக்கிறது.
- நடத்தையில் தன்புலனடக்கம், பிறர் நலத்தைக் கருத்தில் கொள்ளும் குணம், மற்றவர்களின் உரிமை அறிதல் இவை பண்பாட்டின் மேலான அடையாளங்களாகும்.
- பண்பாட்டின் மரபு என்பது எல்லாக் கூறுகள் மற்றும் பண்பாட்டின் மதிப்பை, மனித இனத்திற்கு அவர்களது மூதாதையர்களால் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்வது ஆகும்.
- கட்டடக் கலையின் படைப்புகள், வரலாற்று நினைவுச் சின்னங்கள், கலைப் பொருள்கள், அறிவுப்பூர்வமான சாதனைகள், தத்துவம், அறிவின் மகிழ்ச்சி, அறிவியல் புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவை மரபின் பகுதிகளாகும்.

## பயிற்சிக்கான கேள்விகள்

1. பண்பாட்டின் கருத்து மையத்தை எவ்வாறு வரையறுப்பாய்?
2. எவ்வாறு பண்பாடு மற்றும் நாகரிகம் ஒன்றுபடுகிறது?
3. பண்பாட்டு மரபு என்றால் என்ன?
4. பண்பாட்டின் பொதுவான இயல்புகள் யாவை?

## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 1.1

1. பண்பாட்டின் அடிப்படையான பொருள் ‘செய்ய’ மற்றும் ‘சமஸ்கிரிதி’ யின் அடிப்படை பொருள் தூய்மைப்படுத்தப்படுதல் மற்றும் விளைவிக்கப்படுதல்.
2. அ) பண்பாடு ஆ) பொருள் சாராத

### கேள்விகளுக்கான பதில்கள் 1.2

1. பண்பாடு என்பது நாம் யார், நாகரிகம் என்பது நமக்குள் இருப்பவை எவை அல்லது நாம் பயன்படுத்துபவை ஆகியன பற்றியதாகும்.
2. மாறுதல்கள் பண்பாட்டிலும் மற்றும் நாகரிகத்திலும் ஏற்படும். நாகரிகம் பண்பாட்டின் உயர்ந்த நிலை.

### கேள்விகளுக்கான பதில்கள் 1.3

1. பண்பாடு, நாம் நமது மூதாதையர்களிடமிருந்து பெற்றுக் கொண்டதை பண்பாட்டு மரபு என்று அழைக்கப்படுகிறது.
2. தாஜ்மஹால், ஆக்ராவில் உள்ள செங்கோட்டை, வேதங்கள், உபநிடதங்கள் மற்றும் கீதை. (கட்டடக்கலைச் சின்னங்கள், அறிவின் பொக்கிஷங்கள், அறிவியல் மற்றும் அறிவுப்பூர்வமான சாதனைகள்).

### கேள்விகளுக்கான பதில்கள் 1.4

1. பண்பாடு இலட்சியப் பணியை அடிப்படையாகக் கொண்ட நடத்தைகள், தனி மனித நபர்களால் பின்பற்றப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.
2. பண்பாடு அவ்வப்பொழுது மாறும் தன்மை கொண்டது. புதிய கருத்துகள், மற்றும் புதிய நுட்பவியல் அவ்வப்பொழுது சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

### கேள்விகளுக்கான பதில்கள் 1.5

1. பண்பாடு, நமக்கு இலட்சியங்கள், கருத்துகள் மற்றும் மதிப்பு ஆகியவற்றை அறிந்து நாகரிகமாக வாழ வழி செய்கிறது.
2. ஒருவர் தன் எண்ணம், உணர்வுகள் செயல்கள் ஆகியவற்றில் தற்புலனடக்கம் இல்லாதவரை பண்பாடற்ற மனிதர் என அழைக்கப்படுகிறார்.

# 2

# இந்திய பண்பாடு

நீங்கள் எப்பொழுதாவது, மொழி, இலக்கியம், கலை, அறிவியல் அல்லது சமயம் பற்றிய பல்வேறு துறைகளில், மனிதர்களாகிய நாம் செய்துள்ள வியத்தகு முன்னேற்றம் பற்றி நினைத்ததுண்டா? இவை எல்லாம் எப்படி முடியும் என்று நீங்கள் உங்களைக் கேட்டதுண்டா? இவை எல்லாம் நடந்தன ஏனென்றால் ஒவ்வொரு முறையும் நாம் புதிதாக ஆரம்பிக்க வேண்டும் என்பதில்லை, ஆனால் அவை கடந்த கால தலைமுறையினரின் உழைப்பாக இருந்ததால், அவர்கள் அவற்றை பயன்படுத்தமுடிந்தது. நீங்கள் ஒருபொழுதும், உங்களது எழுத்துப் படிவத்தை உருவாக்கவும் அல்லது புதிய மொழியை உங்களுக்காக உருவாக்கவும் நீங்கள் கவலைப்பட நேர்ந்ததில்லை ஏன்? நீங்கள் இந்த சமுதாயத்தின் அங்கத்தினர் என்ற நிலையை அனுபவிப்பது, உங்களுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் உங்களது பங்களிப்பு மிகைப்படுத்தப்படும் பொழுது, அது பின்வரும் தலைமுறையினருக்கு ஒரு சொத்தாக மாறுகிறது. இது தொடர் மற்றும் எப்பொழுதுமே முடிவு பெறாத ஓர் நிகழ்வாகும். இது மனிதர்களுக்கு ஒரு விலை மதிப்புமிக்க, இணையற்ற உடைமை, இதுவே பண்பாடு என்றும் அறியப்படுகிறது. பண்பாடு, வாழ்க்கையின் வழியாகும். உங்களுக்கும் உங்களுடைய குடும்பத்திற்கும் பண்பாடு உள்ளது போல, உங்களுடைய வட்டாரம் மற்றும் உங்களின் நாட்டிற்கும் பண்பாடு உள்ளது. நீங்கள் இந்திய பண்பாட்டின் தனித்தன்மை மற்றும் அதனுடைய நிகரற்ற பண்புக்கூறுகளை பற்றி அறிய, அதிக ஆர்வமுள்ளவர்களாய் இருக்கலாம். இந்த பாட அலகில் எவ்வாறு இந்திய கலாச்சாரம் தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது மற்றும் அதன் பண்புக்கூறுகள் எவை என்று நாம் புரிந்து கொள்ளலாம்.

## நோக்கங்கள்

நீங்கள் இந்தப் பாடத்தைப் படித்த பின்பு, உங்களால் திறமையாக,

- இந்திய பண்பாட்டின் சிறப்புக்கூறுகளைப் பற்றி விவரிக்க
- இந்திய பண்பாட்டின் மையக்கருத்து மற்றும் தனித்தன்மையைக் கண்டுகொள்ள
- இந்திய பண்பாட்டின் ஆன்மிகத்தின் முக்கியத்துவத்தை விவாதிக்க
- வேற்றுமை ஒற்றுமை கருத்துகளை விவரிக்க் மற்றும்
- இந்திய பண்பாட்டில், பிறபண்பாடுகளின் கூறுகள் நடைமுறையில் புகுந்து ஒன்றோடொன்று இணைந்தன என்பதைத் தெளிவாக்க முடியும்.





## 2.1 இந்திய பண்பாட்டின் இயல்புகள்

வாழ்க்கையில் இருப்பது போலவே இந்திய பண்பாட்டிலும் பல பகுதிகள் உள்ளன. இது எந்த ஒரு மனிதனின் அறிவு சார்ந்த மற்றும் சமூகக்கூறுகளை உள்ளடக்கியது. இது மனிதனின் அழகுணர்ச்சியின் உந்துதல் மற்றும் ஆன்மீக வேகத்தையும் குறிப்பிடுகிறது. இத்துடன், பண்புகளை உருவாக்கும் உள் மனதின் வேண்டுகோளாக இதன் விளைவுகளும் உள்ளன.

இந்திய தேச வரைபடத்தைப் பாருங்கள். ஏராளமான வேற்றுமைகள் தனது இயற்கை மற்றும் சமூகச் சூழ்நிலையுடன் கூடிய இந்தியா, ஒரு பரந்த நாடாகும். நம்மைச் சுற்றி இருக்கும் மக்கள் வெவ்வேறு சமயத்தைச் சார்ந்தந்தவர்களாக மற்றும் வெவ்வேறு மொழி பேசுபவர்களாக மற்றும் சமய சடங்குகளை நடைமுறைப் படுத்துபவர்களாக இருப்பதை நாம் காணலாம். நீங்கள் இந்த வேற்றுமைகளை, அவர்களுடைய உணவுப் பழக்கங்கள் மற்றும் ஆடை வடிவமைப்புகளிலிருந்தும் காணலாம். இது தவிர, மிகப் பலவகையான நடனங்கள் மற்றும் பாடல்களை நம் நாட்டில் காணலாம். ஆனால் இந்த வேற்றுமைகள் இருந்தாலும் முக்கிய மறை பொருளாக உள்ள ஒற்றுமை என்றும் வலிமையாக இருந்தது. மக்களின் ஒருவரோடு ஒருவர் கொண்டுள்ள தொடர்பு, இந்தியாவில் நூற்றாண்டுகளுக்கும் மேலாக சீராக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. ஏராளமான மக்கள், வெவ்வேறு இனப்பிரிவைச் சார்ந்தவர்கள் குறிப்பிட்ட மனித இனத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள் மற்றும் சமய நம்பிக்கை கொண்டவர்கள் இங்கு குடியேறியுள்ளனர், வெவ்வேறு வகைப்பட்ட பண்பாட்டு குழுவின் மிகச் சிறந்த பங்களிப்பு, நீண்ட காலத்திற்க்கும் மேலாக இருந்தது என்றால், அது பல கூறுகளாகக் கொண்ட தொடர் மாற்றங்களுக்கு ஆட்பட்டுக் கொண்டேயிருக்கும் இந்திய பண்பாட்டின் விளைவுதான் என்பதை நாம் மறக்கக் கூடாது. இந்தியர்களின் விலை மதிப்பற்ற உடைமை என்னவென்றால், தனித்தன்மை மற்றும் இணையற்ற பண்புகளைக் கொண்ட இந்திய பண்பாடு ஆகும்.

### 2.1.1 தொடர்ச்சியும் மாற்றமும்

உலகின் பல்வேறு நாடுகளிலும் வட்டாரங்களிலும் பல சிறந்த பண்பாடுகள் வளர்ந்துள்ளன. அதில் பல அழிந்து விட்டன அல்லது மற்ற பண்பாட்டினால் இடம் பெயர்ந்துள்ளன. இருந்தாலும் இந்திய பண்பாடு நிலைத்திருக்கக்கூடிய பண்பைக் கொண்டது. இருப்பினும் பெரிய மாற்றங்கள் தீடீரென ஏற்படும் மாறுதல்கள் முக்கியத்துவம் வாய்ந்த காலத்தின் தொடர்ச்சியை எவர்கள்..... விட்டுச் சென்ற அடையாளங்களை இந்திய வரலாற்றில் இன்றைய நாள் வரை காணலாம்.

இந்திய துணைக் கண்டத்தில் 4500 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய ஹரப்பா நாகரீகத்தைப் பற்றி நீங்கள் படித்திருப்பீர்கள். ஹரப்பா நாகரீகம் முழு வளர்ச்சி அடையும் முன்பே, இங்கே பண்பாடுகள் இருந்தன என்பதை எடுத்துக்காட்ட தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சான்றுகளைக் கண்டெடுத்துள்ளனர். இதிலிருந்து நமக்குப் பின்னால் நீளமான ஒரு வரலாறு உண்டு என கூறுகிறது. இருந்த போதிலும், இதில் வியப்புக்குரியவை என்னவென்றால் இன்றைய நாளில் கூட இந்திய கிராமத்திலுள்ள ஒரு வீட்டின் அமைப்பு, ஹரப்பா நாகரீக காலத்தில் கட்டப்பட்ட வீட்டிற்கும் அதிக வேறுபாடு இல்லை. சில ஹரப்பா பண்பாட்டின் கூற்றுகளான பெண் தெய்வங்கள் மற்றும் பசுபதியை வணங்குதல் இன்றும் நடைமுறையில் உள்ளன. இதைப் போன்றே வேத, புத்த மத, சைன மத மற்றும் சில பாரம்பரியங்கள் இன்றைய நாள் வரை பின்பற்றப்பட்டுவருகின்றன. அதே சமயம், ஹரப்பா காலத்து வீடுகள் அடுக்கு மாடிகளைக் கொண்டது போல, முக்கிய நகரங்களான மும்பை மற்றும் டெல்லி போன்ற இடங்களில் பல அடுக்கு மாடிகளைக் கொண்ட கட்டிடங்கள் சான்றாக விளங்குவதை காணாமல் இருக்க முடியாது. இங்கு குறிப்பிடத்தக்கவை என்னவென்றால், நமது நாகரீகத்தின்

தொடர்ச்சி மற்றும் மாறுதல், ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குச் சென்றுவிட்டது. இருந்தபோதிலும், தொடர்ச்சியுடன், மாறுதலும் அடைகிறது. அப்படியிருக்க, நமது கலாச்சாரத்தின் அடிப்படைப் பண்பு தொடர்ந்தது என்பது தான் நமது பண்பாட்டின் குறிப்பிடத்தக்கக் கூறுகளாகும். இது நவீன காலத்திற்குப் பொறுத்தமில்லாமல் இருப்பவர்களை ஒதுக்கிக் கொண்டேயிருந்தது. நமது நீண்ட கால வரலாற்றில் எழுச்சிகள் மற்றும் வீழ்ச்சிகளின் காலங்கள் இருந்தன. இதன் விளைவாக இயக்கங்கள் வளர்ந்து, சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தன. வேத சமய காலத்தில், சீர்திருத்த இயக்கங்கள் புத்த மற்றும் சமண சமயத்தால் 6-ஆம் நூற்றாண்டில் கொண்டு வரப்பட்டன, 18-ஆம் மற்றும் 19-ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட சமய மற்றும் சமூக விழிப்புணர்வுகள், நவீன இந்தியாவிற்கு இந்திய கருத்துகள் மற்றும் பழக்கங்களைக் கொண்டுவந்தது புரட்சிகரமான மாறுதல்களுக்கு சில எடுத்துக்காட்டுகளாகும். இன்னும் இந்தியப் பயன்பாட்டின் அடிப்படை நூலிழையான இலக்கியம் இன்று வரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஆகையால், தொடர்ச்சி மற்றும் மாறுதல் ஆகிய செயல்பாடுகள், எப்பொழுதும் இந்தியப் பயன்பாட்டின் அம்சமாக உள்ளன. இது, பண்பாடு என்பது தொடர் மாற்றங்களுக்கு ஆட்பட்டுக் கொண்டு இருக்கிறது என்ற பண்பினைக் காட்டுகிறது.

### 2.1.2 பல வகைகளும் ஒற்றுமையும்

கடந்த மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேல், இந்திய பண்பாடு, வெற்றிகரமாக ஆனால் அமைதியாகப் பிற சமய பண்பாட்டினை அவ்வப்பொழுது தன்மயமாகக் கொண்டு தன்னுடைய பண்பாட்டுடன் ஒருங்கிணைத்துக் கொண்டது.

நிச்சயமாகவே இந்திய பண்பாட்டில் ஏராளமான வகைகள் இருப்பதுபோல், உலகில் சில பண்பாட்டில்தான் இந்த வகைகள் உள்ளன. ஒரு வேளை நீங்கள், கேரள மாநில மக்கள் தேங்காய் எண்ணெயைச் சமையலுக்கு பயன்படுத்தும்பொழுது, உத்திரபிரதேச மக்கள் ஏன் கடுகு எண்ணெயைப் பயன்படுத்துகிறார்கள் என்று ஆச்சரியப்படலாம். ஏனென்றால், கேரளா ஒரு கடற்கரை மாநிலம் மற்றும் தேங்காய் அங்கு ஏராளமாக விளைகிறது. அதே சமயம் உத்திரபிரதேசம் ஒரு சமதள நிலப்பகுதி, அவை கடுகு வளர்வதற்கு ஏற்றதாக உள்ளது. பஞ்சாபின் 'பங்கரா' நடனத்திற்கும் அல்லது தமிழ்நாட்டின் பொங்கல் விழாவில் நிகழும் கிராமிய நடனத்திற்கும் அல்லது அஸ்ஸாமின் 'பிஹு' நடனத்திற்கும் உள்ள ஒற்றுமைகள் யாவை? இரண்டுமே நல்ல வளமான அறுவடைக்குப் பின் கொண்டாடக்கூடியவை ஆகும். நீங்கள் பெங்காலி, தமிழ், குஜராத்தி அல்லது ஒரியாவைப் போன்ற வெவ்வேறு மொழிகளை பேசும் பொழுது கவனித்திருக்கிறீர்களா? இந்தியா பலவகை நடனங்கள் மற்றும் இசைக்குத் தாயகமாக விளங்குகிறது. இவை பண்டிகைகள் மற்றும் திருமணம் அல்லது குழந்தை பிறந்த விழாக்கள் போன்ற சமூக விழாக்களில் பயன்படுத்துகிறோம்.

இந்தியாவில் பேசப்படுகின்ற ஏராளமான மொழிகள் மற்றும் கிளைமொழிகள், வெவ்வேறு இலக்கியங்களின் வளர்ச்சிக்கு வழி காட்டின. உலகின் சிறந்த எண் வகை சமயத்தைச் சார்ந்த மக்கள், ஒரே இடத்தில் இணக்கமாக வாழுகிறார்கள் உங்களுக்குத் தெரியுமா, அதாவது இந்தியா, சமண மதம், புத்த மதம், சீக்கிய மதம் மற்றும் இந்து மதத்திற்கும் தாயகமாக இருக்கிறது. கிராமிய மற்றும் மரபு சார்ந்த பாட்டு மற்றும் நடனம் இரண்டும் வெவ்வேறு பாணியில் இந்தியாவில் உள்ளன. அதனால் ஏராளமான பண்டிகைகள் மற்றும் பழக்க வழக்கங்களும் உள்ளன. இந்த விசாலமான வகைகள், இந்திய பண்பாட்டினை ஒருங்கிணைத்து மற்றும் அதே சமயம் வளம் மற்றும் பொலிவுடன் உருவாக்குகின்றன. ஏன் நமது பண்பாட்டில் நிறைய வகைகள் உள்ளன? அதற்குப் பல காரணங்கள் அங்கு உள்ளன. பரந்த நாடு மற்றும் வெவ்வேறு வகைப்பட்ட இயற்கை மற்றும் தட்பவெப்பநிலை அமைப்புகள் தான் இந்த வேறுபாட்டிற்கு வெளிப்படையான காரணங்களாகும்.

நமது பண்பாட்டில் வெவ்வேறு வகை இருப்பதற்கு, இரண்டாவது முக்கிய காரணம் வெவ்வேறு இன மக்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டது தான். நினைவிற்கு எட்டாத பழங்காலத்திலிருந்தே, வெகுதூரம் மற்றும் அருகிலிருந்தும் மக்கள் வந்து இங்கு குடியேறி உள்ளனர். நாம் வெவ்வேறு இனத்தைச் சார்ந்த "புரோடோ - ஆஸ்ட்ரலாயிட்ஸ்", "நீக்ரிடிஸ்" மற்றும் மங்கோலியர்கள் போன்றவர்களைக் காணலாம், வெவ்வேறு வம்சா வழியைச் சார்ந்த இரானியர்கள், கிரேக்கர்கள், குஹானர்கள், சாகர்கள், ஹீனர்கள், அரேபியர்கள், துருக்கியர்கள், முகலாயர்கள் மற்றும் ஐரோப்பியர்களும் இந்தியாவிற்கு வந்து குடியேறி, உள்ளூர் மக்களுடன் கலந்துள்ளனர். பிற பண்பாட்டிலிருந்து வந்த மக்கள் கொண்டு வந்த அவர்களுடைய பண்பாட்டுப் பழக்கங்கள், எண்ணங்கள் மற்றும் கருத்துகள் முன்பே பயன்பாட்டில் உள்ள பண்பாட்டோடு ஒன்றிணைந்து விட்டது. இரண்டாம் நூற்றாண்டின் பொழுது தைக்கப் பட்ட துணிகள் சல்வார்கள், குர்தாக்கள், டோபிஸ் முதலியவை. இந்தியாவுக்கு, குஷாணர்கள், சாகாகள் மற்றும் பார்த்தியன்களால் கொண்டு வரப்பட்டன என்பதை அறியும் பொழுது நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்! இதற்கு முன்பு இந்தியர்கள் உடைகளைத் தைக்காமலேயே உடுத்தினர். 8ஆம் நூற்றாண்டின் அண்மைக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டைகள், கால் சட்டைகள், பாவாடைகள் முதலியனவைகள் ஐரோப்பியர்களால் கொண்டுவரப்பட்டன. கருத்து களை ஒருங்கிணைக்கும் குறிப்பிடத்தக்க திறமைகளை இந்தியா காலங்காலமாக காட்டி வருகிறது. இது நமது பண்பாட்டின் வகைக்கும் மற்றும் சிறப்புக்கும் பங்களித்துள்ளது.

வெளி உலக பண்பாட்டுத் தொடர்புடன், பல்வேறு வட்டாரங்களுக்கிடையே பண்பாட்டுப் பரிமாற்றத் தையும் இந்தியா தொடர்ந்து கொண்டிருந்தது. லக்னோவின் சிக்கன் வேலைப்பாடு, பஞ்சாபின் பூங்காரி எம்பிராயிடரி, பெங்காலின் கந்தா எம்பிராயிடரி, ஒரிசாவின் பட்டோலா குறிப்பிடத்தக்க வட்டார வளத்தைக் காட்டுகிறது. இந்தியாவின் தெற்கு, வடக்கு, கிழக்கு மற்றும் மேற்கு மையங்கள் அவர்களின் பண்பாட்டு இயல்புகளைக் கொண்டிருந்தாலும் இன்னும் தனியாக யாரும் முழுமை அடையவில்லை. இயற்கை அமைப்பில் தடைகள் இருந்த போதிலும், இந்தியர்கள் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு வியாபாரத்திற்காகவோ அல்லது புனித யாத்திரைகளுக்காகவோ வழக்கமாகப் பயணம் செய்தனர். சில வட்டாரங்கள் படையெடுப்பின் மூலமாக ஒன்று சேர்ந்தன. இதன் விளைவு, பண்பாட்டு பழக்கங்கள் மற்றும் எண்ணங்களை, மக்கள் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு மாற்றினார்கள். இராணுவச் செயல்பாடுகள் கூட மக்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு சென்றன. இது கருத்து பரிமாற்றத்திற்கு உதவியது.

இத்தகைய தொடர்புகள், இந்திய பண்பாட்டில் பொதுமை நிலை ஏற்பட அடிகோலியது. இவை வரலாற்றில் காலங்காலமாகப் பராமரிக்கப்பட்டுள்ளன. மற்றுமொரு ஒற்றுமை படுத்தக்கூடிய காரணி தட்பவெப்பநிலை, புவியியல் வேற்றுமைகள் தட்பவெப்ப நிலையில் வேறுபாடுகள் இருந்த போதிலும், இந்தியா ஒற்றுமை என்ற இயற்கூற்றை அனுபவிக்கின்றது. இந்திய தட்பவெப்பநிலையின் முக்கிய கூறு என்னவென்றால், பருவமழையின் முறைகளாகும் மற்றும் இது ஒற்றுமையை மொத்த நாட்டிற்கும் கொடுக்கிறது. பருவ மழையின் வருகை, இந்திய மக்களின் முக்கிய தொழில் வேளாண்மை என்பதை உறுதிபடுத்துகிறது. மற்றபடி, இயற்கை அமைப்பில் உள்ள வேறுபாடுகள் உணவுமுறை, உடை, வீடுகள் ஆகியவற்றைப் பாதித்தும் மற்றும் மக்களின் பொருளாதாரச் செயல்பாடுகள், சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் நிறுவனங்கள் உருவாக காரணமாயிருக்கின்றன. இதற்குப் பதிலாக, இத்தகைய காரணிகள், மக்களின் எண்ணங்கள் மற்றும் தத்துவத்தில் தாக்கத்தை ஏற்படுத்தின. இயற்கை அமைப்பு மற்றும் தட்பவெப்பநிலையின் வேறுபாடுகள், வெவ்வேறு வட்டாரங்களில் பல்வேறு விதமான பண்பாடுகள் வளர்வதற்கு அடித்தளமாக இருந்தன. இயல்பான பண்புகளைக் கொண்ட வேறுபட்ட வட்டாரங்களுக்கு இந்த பண்பாடுகள் சில அடையாளங்களைக் கொடுத்தன.

வேறுபட்ட பண்பாட்டுக் கூறுகளின் தொகுதியான நம் பண்பாடு, நமது பாடலில் நடன வடிவத்தில் நாடகம் மற்றும் கலை வடிவங்களான வண்ணம் பூசுதல், சிற்பக்கலை மற்றும் கட்டடக்கலை போன்றவற்றில் பிரதிபலிக்கின்றன. வெவ்வேறு மொழியில் உள்ள நமது இலக்கியங்களும் கூட இந்த பண்பாட்டுக் கூறுகளின் தொகுதியில் பிரதிபலிக்கின்றன.

நமது அரசியல் அமைப்பிலும், வேற்றுமையில் ஒற்றுமையைப் பிரதிபலிக்கிறது. முன்வேத காலத்தில் நாட்டுப்புற வாழ்க்கையைச் சார்ந்த சமுதாயமாக இருந்தது. அதாவது, மக்கள் மேய்ச்சல் நிலங்களைத் தேடி இடம் விட்டு இடம் செல்வது வழக்கமாக இருந்தது. ஆனால் இந்த மக்கள் விவசாயம் செய்ய ஆரம்பித்த பின்பு அவர்கள் அங்கேயே குடியேறினர்கள். இந்த குடியேற்ற வாழ்க்கை, இனக்குழுவின் முன்னேற்றம் மற்றும் நகர வளர்ச்சிக்கு வழி காட்டியது. இவற்றிற்கு விதிகள் மற்றும் வரையறை செய்யப்பட்ட நியதிகள் தேவைப்பட்டன. இதன் வாயிலாக அரசியல் நிறுவனம் தோன்றியது. இது 'சபா' மற்றும் 'சமிதி' என்ற அரசியல் குழுமங்களை உள்ளடக்கி இதன் மூலம் மக்கள் ஆட்சி ஆளுவதில் பங்கேற்றனர். காலப்போக்கில் 'ராஷ்டிரா' என்பதன் மையக்கருத்து தோன்றி மற்றும் நாட்டிற்குச் சொந்தமான நிலப்பகுதி புதிய ஆட்சி அதிகாரமாக ஆனது. சில இடங்களில் குடியாட்சி தோன்றியது. இந்தியாவில் கி.மு. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து 4-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலம் ''மஹா ஜனபதாஸ்''என்று அழைக்கப்படுகிறது. இந்த முடியரசு நாடுகளில் அரசர்களுக்கு அதிக அதிகாரம் இருந்தது. அடுத்து முழு அதிகாரம் பெற்ற பேரரசர்களுடன் பெரிய அளவிலான பேரரசுகளும் ஏற்படுத்தப்பட்டன.

நீங்கள் பண்டைய கால அரசர்களான அசோகர், சமுத்திர குப்தர் மற்றும் ஹர்சவர்த்தனரைப் பற்றித்தெரிந்து கொண்டிருப்பீர்கள். முகலாயர்களும் பரந்த பேரரசை இந்தியாவில் நிறுவினர். ஆங்கிலேயர்கள் இந்தியாவில் தங்களை நிலைநாட்டிக் கொண்டனர் 1858-இல் இந்தியா ஆங்கிலப் பேரரசின் ஒரு பகுதியாக மாறியது. எனினும் 1947-இல் நீண்ட போரட்டத்திற்குப் பிறகு, நம்மால் விடுதலையைப் பெற முடிந்தது. இன்று இறையாண்மை, சமதர்மக் கோட்பாடு, மதசார்பின்மையுடைய ஜனநாயக குடியரசு, ஒரே சீரான அரசு, நமது நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாகக் காணப்படுகிறது.

## இப்பகுதிக்கான கேள்விகள் 2.1

1. பாங்க்ரா நடனப் பாணி பிரபலமான மாநிலத்தின் பெயரைக் கூறுக?
2. அஸ்சாமிய நடனப் பாணியை எவ்வாறு தெரிந்து கொள்ளப்படுகிறது?
3. சுமாராக 2-ஆம் நூற்றாண்டின் சல்வார், குர்தாஸ், டுபீஸ் முதலியவற்றை இந்தியாவில் யார் கொண்டு வந்தது?
4. எந்த மாநிலம் பட்டோலோவிற்குப் பெயர் பெற்றது?

### 2.1.3 சமயச் சார்பற்ற நோக்கம்

மதச் சார்பற்ற இந்திய பண்பாடு, பல்வேறு பண்பாட்டுக் குழுக்களைச் சார்ந்த மக்கள் ஒருவரோடு ஒருவர் நீண்ட நாள்களாக தொடர்பு கொண்டதின் விளைவால் ஏற்பட்டதாகும். எடுத்துக்காட்டாக எப்பொழுதாவது அங்கும் இங்கும் முரண்பாடுகள் ஏற்பட்டாலும், மொத்தத்தில் நூற்றாண்டு காலமாய் மக்கள் சமாதானமாக ஒன்றாக வாழ்ந்தனர். இந்தியாவின் பிரபலமான பண்பாட்டு பாரம்பரியம் தான் பண்பாட்டுக் கோட்பாட்டுக்குச் சிறந்த உதாரணம். இவை வெவ்வேறு மதத்தைச் சார்ந்த ஏராளமான மக்களை ஒன்று படுத்தியது.

நமது நாட்டில் சிறந்த வெவ்வேறு எண்ணங்கள், பழக்க வழக்கங்கள் உள்ளன என்பது

உங்களுக்குத் தெரியும். பல்வேறு வகைகளுக்கு மத்தியில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய ஒரு குறிப்பிட்ட எண்ணம் மட்டும் முடியாத செயலாகும். நீங்கள் இந்துக்கள், முகமதியர்கள், கிறித்துவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், ஜைனர்கள், பாரசீகர்கள் மற்றும் யூதர்கள் இந்தியாவில் வாழ்கிறார்கள் என்பதை மறுபடியும் நினைவுக்கு கொண்டு வருவீர்கள், இந்திய அரசியலமைப்பு இந்தியா ஒரு மதசார்பற்ற நாடு என்று அதிகார பூர்வமாக அறிவிக்கிறது. ஒவ்வொருவருக்கும் அவர்களே தேர்ந்து எடுக்கும் எந்தவொரு சமயத்தையும் ஏற்று கொள்ள நடைமுறைப்படுத்த மற்றும் பிரச்சாரம் செய்ய சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. அரசுக்கென்று சொந்தமான மதம் இல்லை அதனால் எல்லா சமயத்தையும் அரசால் சமமாக நடத்தமுடிகிறது. ஒருவரையும் சமயத்தின் அடிப்படையில் வேறுபடுத்துவதில்லை. மக்கள் தங்கள் மனப்பாங்கை மிகப்பரந்த அளவில் விரிவாக்கி மற்றும் 'வாழு' 'மற்றவர்களையும் வாழ விடு' என்ற மையக்கருத்தை நம்பினார்கள்.

சமய சுதந்திரம், நமது ஆட்சி அமைப்பு முறை சமய சார்பற்றது என்பதை உறுதி படுத்துகிறது. மேற்கத்தியக் கருத்துப்படி, சமய சார்பின்மையின் முன்னேற்றம், மற்றும் அரசு முழுமையாக பிரிக்கப்படுதல் என்பதைக் குறிப்பதாகும். இந்தியாவில் சமயச் சார்பின்மை என்பது ஆக்கபூர்வமான கருத்துக் கோட்பாடு, நாட்டின் சிக்கலான சமூகக் கட்டமைப்புக்கு ஈடு செய்ய, எல்லோரின் ஆர்வத்தையும் அதிலும் குறிப்பாகச் சிறுபான்மையினரைப் பாதுகாத்தலாகும்.

## 2.1.4 உலகளாவிய நிலை

ஒருங்கிணைப்புக் கருத்துக் கோட்பாட்டினை நாட்டின் புவியியல் மற்றும் அரசியலின் எல்லைகளாக மறைமுகமாக வெளிப்படுத்துகிறது. இந்தியாவிற்கு உலகைப் பற்றிய பரந்த எண்ணம், சமாதானம் மற்றும் சுமுகமான உறவை உலகெங்கிற்கும் பறை சாற்றியது. இந்தியா இனக்கொள்கை மற்றும் காலனி ஆதிக்கக் கொள்கைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தது. உலகின் அதிகாரமுள்ள நாடுகளின் அணிகளை எதிர்த்தது. இந்தியா கூட்டுச் சேரா அணிகளைத் தொடங்கியவர்களில் ஒருவராக விளங்கியது. இந்தியா பின்தங்கிய நாடுகளின் வளர்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டது. இவ்விதமாக, இந்தியா உலக சகோதரத்திற்காகத் தனது பொறுப்புக்களை நிறைவேற்றியது மற்றும் உலக முன்னேற்றத்திற்காக தனது பங்களிப்பைக் கொடுத்தது.

இந்தியத் துணைக்கண்டம், காலங்காலமாக அரசியல் எல்லைகளையும் கடந்து பண்பாட்டின் கூறாக அமைந்தது என்பதை நினைவு கொள்ளல் வேண்டும்.

## 2.1.5 பொருள் முதன்மைக் கோட்பாடு மற்றும் ஆன்மீகக் கோட்பாடு

பண்பாடு என்பது, ஒரு இனத்தின் அல்லது தேசத்தின் மனம், நாட்டம், நடத்தை, எண்ணங்கள், கலை, திறன்கள் மற்றும் நாகரிகத் துறைகளின் ஆன்மீக வளர்ச்சியாகும்.

இந்தியாவை, ஆன்மீகத்தின் உறைவிடம் என குறிப்பாக மேற்கத்திய நாடுகளுக்குள் பிரபலமாகியுள்ளது. இருந்தாலும், பண்டைய காலத்திலிருந்து இந்நாள் வரை, பொருள் சார்ந்த மற்றும் பொருள் சாராப் பண்பாட்டின் வளர்ச்சியும் இணையாகச் சென்றது என்பதைக் காட்டுகிறது. ஹரப்பா நாகரிகம் ஒரு நகர நாகரிகம் என்பதை நினைவு கூறுவீர்கள். இந்தியா, முறையான நகரத்திட்டமைப்பைக் கொண்டிருந்தது. அங்கு சாலைகள் ஒன்றோடொன்று சரியாண கோணங்களில் பிரிக்கப்பட்டிருந்தது. அவர்கள், கணிதம் மற்றும் எடை அளவுகளைப் பற்றி ஆழ்ந்த அறிவைக் கொண்டிருந்தனர். அவர்கள், நகரங்களை அறிவியல் முறைப்படி கட்டினார்கள் மற்றும் அவை அகலமான வடிகால்களைக் கொண்டிருந்தன. ஹரப்பாக்கள் கடல் கடந்து, சுமேரியர்களுடன் வாணிகம் செய்து, தங்களுடைய வெளி வாணிகத்தைப் பெருக்கினார்கள்.



குறிப்புகள்

மருத்துவம், கோள்கள், விண்மீன்கள், தாவரங்கள் ஆகியவைப்பற்றிய நேர்த்தியான புத்தகங்கள் எழுதப்பட்டன. புவி சூரியனைச் சுற்றிக் கொண்டேயிருக்கிறது அல்லது புவி ஒரு உருண்டை வடிவமானது எனும் விதிகளை, ஐரோப்பியர்கள் ஒத்துக் கொள்வதற்கு முன்பே, இந்தியர்களால் கண்டு பிடிக்கப்பட்டது. இதைப் போலவே, கணிதப்பகுதி மருத்துவத்துறை, மற்ற அறிவியல் துறைகளிலும் இந்தியாவின் சாதனைகள் பண்டைய காலங்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவையாகும். இந்த அறிவைப் பின்தொடர்வதற்கு, சமயம் அல்லது மற்ற சிந்தனைகளால் எந்தவித எதிர்ப்போ அல்லது தடைகளோ இல்லை.

இந்தியாவில் தத்துவ எண்ணங்களும் மற்றும் கூடவே அழகுணர்ச்சியும் முன்னேறி மற்றும் வளரத் தொடங்கியது. நீங்கள் புத்தமதமும், சமண மதமும் இறைவனின் மெய்யான நிலையைப் பற்றி குறிப்பிடவில்லை என்பதை அறிவீர்கள். இவையெல்லாம் நமக்கு எதைச் சொல்கின்றன? உண்மையாகவே இந்தியப் பண்பாடு, இருவகையான பொருள் சார்ந்த பொருள் சாராத அல்லது ஆன்மீகத் தன்மையுடையதாக இருந்தது.

இந்தியப் பண்பாடு, மக்களின் எளிமை மற்றும் ஆழ்ந்த அழுதத்தை வெளிப்படுத்து பவையாக உள்ளது.

## 2.2 பண்பாட்டு அடையாளங்கள், சமயம், வட்டாரம் மனித இனம்

நமது பண்பாட்டின் அடையாளங்கள், பல்வேறு சமயம், வட்டார காரணிகளை அடிப்படையாகக் கொண்டவை. இதன் விளைவு, ஒவ்வொரு இந்தியரும் பன்முக அடையாளங்களைக் கொண்டுள்ளார். இந்த அடையாளங்கள் சில காலகட்டங்களில் மற்றவற்றைக் காட்டிலும் மேலோங்கி நிற்கிறது. இது மனிதன் சார்ந்திருக்கும் அரசியல், சமூக, பொருளாதார சூழ்நிலையைப் பொருத்திருக்கும். இவ்வாறு ஒவ்வொரு மனிதனும் சிலவற்றில் மற்றவர்களுடன் ஒத்திருப்பான்; பலவற்றில் வேறுபட்டிருப்பான். உதாரணமாக நம்பிக்கை கடவுளை வணங்கும் முறை மற்றும் சடங்குகள் தவிர சிறிய அளவில் வேறுபாடுகள் இருக்கலாம், யாரெல்லாம் குறிப்பிட்ட அதே நம்பிக்கையை கடைபிடிக்கிறார்களோ அதுவே நாட்டின் ஒட்டு மொத்த கருத்தாக அமைகிறது. சமய குழுக்களும் மற்றும் வட்டார குழுக்களுக்குமிடையே, கடவுளை வணங்குதல் மற்றும் சடங்குகளில் வேறுபாடுகள் இருக்கிறது.

இவ்வாறாக, பண்பாட்டில் எல்லா இந்துமத மக்களின் பண்பாடு ஒரே மாதிரியாக இல்லை, இதே போன்று முகமதியர்களின் பண்பாடும், தமிழகத்திலுள்ள பிராமணர்கள், அதே ஒத்த நிலையில் உள்ள காஷ்மீர் பிராமணர்கள் வேறுபட்டு இருக்கிறார்கள், இதே போன்றே, கேரளா மற்றும் உத்திரபிரதேசத்திலுள்ள இஸ்லாமியர்கள் அவர்களது பண்பாட்டில் பல்வேறு வேற்றுமைக் கூறுகளைக் கொண்டிருந்தனர். வட்டார அடையாளங்கள் மிகவும் நம்பகமானது. பலவேறு சமயத்தை, சாதியைச் சார்ந்தவர்கள் ஒருவேளை பொதுவான வட்டார பண்பாட்டு பண்புகளான, மொழி, உணவு, உடை விழுமங்களை கொண்டிருக்கலாம் என்பது உலக நோக்கமாகும். வங்காளத்தில் இந்து மதத்தினர் மற்றும் இஸ்லாமியர் இருவருமே வங்காளத்தினர் என்பதில் பெருமைப்படுகின்றனர். இந்துக்கள், கிருஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர்கள் வட்டார பண்பாட்டின் பல கூறுகளை பங்கிட்டுக் கொள்வதைக் காணலாம்.

பொது கோட்பாடுகளில், வெவ்வேறு சமயக் குழுக்கள் அவர்களுடைய ஆதரவை வெவ்வேறு சமய கோட்பாடுகளுக்கு அளித்தனர். இந்துக்களுக்கு, வேதங்கள் மற்றும் சாத்திரங்கள் தெய்வீக ஊக்க மூலங்களாகவும், இஸ்லாமியர்களுக்கு 'குர்ரான்' மற்றும் ஹதீஸ், கிருஸ்தவர்களுக்கு 'பைபிள்' எடுத்துக்காட்டுகளாகும். எப்படியிருந்தாலும் சடங்கு என்ற நிலை மற்றும் வாழ்க்கை முறையில் வேறு வேறு சமயத்தை பின்பற்றுவர்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து கொள்கிறார்கள்.

மலைவாழ் மக்களிடையே இனப்பண்பாடு மிக வலிமையாகக் காணப்படுகிறது. உதாரணமாக, சிறிய மாநிலமான நாகாலாந்தில் ஒரு டஜனுக்கு மேல்பட்ட பழங்குடியினர் இருக்கின்றனர் அவர்கள் தங்கள் உடை, பேச்சு நம்பிக்கைகளில் ஒருவர் மற்றவரிடமிருந்து வேறுபடுகின்றனர். சண்டீஸ்கரில் உள்ள 'பஸ்டார்' என்னும் மாவட்டம் பல்வேறு இனக் குழுக்களை கொண்டுள்ளது.

## 2.3 பண்பாட்டின் விளைவுகள்

இந்த நவீன சூழ்நிலையில் குறைந்த அளவிலான குறிப்பிடத்தக்க தாக்கம் நம் பண்பாட்டில் உள்ளது. அவை மேற்கத்தியமயமாக்குதல் மற்றும் தேசபண்பாட்டுப் பாணியை வெளிப்படுத்துதல் ஆகியவை பிரபலமான பண்பாடுகளாக இருந்தன.

சுதந்திரத்திற்கு முன் சில மேற்கத்திய பாணிகளை மேற்குடி மக்களாலும் மற்றும் குடிமுறை அரசப்பணியாளர்களாலும் தழுவப்பட்டது. குறிப்பிட்ட காலத்தில், அதன் செல்வாக்கு, மத்திய வகுப்பைச் சார்ந்தவர்களுக்கும் மற்றும் குறைந்த அளவில் கிராமப்புற மக்களுக்கும் பரவியது. கிராமபுறங்களில் ஆங்கில போதனா பள்ளிகளின் தேவை வளர்ச்சியுறுவது பற்றிய அறிக்கை இதற்கு ஒரு நல்ல சான்றாகும்.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது புதிய பாணி தோன்றியது. இது நாட்டுப் பணியாக மாறினது. உதாரணமாக, காந்திஜியின் தொப்பி மற்றும் கதர், ஒரு சடங்காக, ஒரு அடையாளமாக உள்ளது. ஆனால் இது நாட்டின் ஒற்றுமை மற்றும் பொதுவான பண்பாட்டினை அளிப்பதில் பங்களித்து உள்ளது.

மக்கள் தொடர்பு ஊடகங்களால் உருவாக்கப்பட்ட மற்றமொறு ஒற்றுமை படுத்தப்பட்ட காரணிதான் பிரபலமான பண்பாட்டாகும். திரைபடத்தின் தாக்கங்கள் ஏராளமானவை. வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒருவரின் உருவம் மற்றும் மனப்பான்மையை மாற்றியமைக்கிறது. அவை நம்மைக்கட்டுப்படுத்தும் திறனை மறுக்கமுடியாது. நவீன ஊடகங்கள், பாரம்பரியம் மற்றும் பொதுமக்களின் நாட்டம் ஆகிய இரண்டு கருத்துகளை துரிதப்படுத்தின.

### இப்பகுதிக்கான கேள்விகள் 2.2

1. வெளியிலிருந்து இந்தியாவிற்கு வந்து குடியேறிய மக்களுக்கு இரண்டு உதாரணங்களைக் கொடுக்கவும்?
2. எந்த கருத்துச் சூழலின் உள்ளடங்கிய பகுதி இந்தியாவிற்கு ஒற்றுமையைக் கொடுத்தது?
3. எந்த நாகரிக காலத்தில் ஹரப்பர்கள் கடல் தாண்டி வாணிப தொடர்பு கொள்ள தெரிந்தார்கள்?

### நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- பண்பாட்டின் பொருள் மிகவும் பரவலானது மற்றும் எல்லாவற்றையும் உள்ளடக்கியது. இது ஒட்டு மொத்தமான ஒருங்கிணைந்த கற்றலின் நடத்தைகள் என வரையறுக்கப் படுகிறது. இது சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு வழியைக் காட்டுகிறது.

- பண்பாட்டின் ஆக்கக்கூறுகளான அறிவு, நம்பிக்கை, கலைகள், நன்னெறிகள், சட்டம், பழக்கங்கள் திறமைகள் சமுதாயத்தின் அங்கங்களாக இருக்கும் மனிதர்களால் பெறப்பட்டது.
- சூழ்நிலைக்குத் தகுந்தவாறு மாற்றிக் கொள்ளக் கூடிய அனைத்தையும் உள்ளடக்கி விரிவாக்கம் கொண்டுள்ளதால் இந்திய பண்பாடு இவ்வளவு காலமாக தொடர்ந்து வந்துள்ளது.
- வேற்றுமையில் ஒற்றுமை என்பது பண்பாட்டின் பண்புகளில் முதன்மையானது. இது பண்பாட்டினை இணையற்றதாகச் செய்தது.
- பல்வேறு பண்பாட்டின் கருத்துக் கோட்பாடுகளின் ஒருங்கிணைப்பு, காலங்காலமாக, பண்பாட்டிற்கு அமைப்பினை கொடுத்து, இன்று இந்திய பண்பாடு என அங்கீகாரம் பெற்றுள்ளது.
- ஆன்மீகத்தன்மை மற்றும் விழுமங்களை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கைப் பாணிதான் இந்தியப் பண்பாட்டின் மிக முக்கியமான கூறு. ஆனால் இதற்கு, மாற்றத்தை ஏற்படுத்துகின்ற அறிவியல் தனிப்பண்புகளும் உண்டு.

## பயிற்சிக்கான கேள்விகள்

1. பண்பாட்டிலுள்ள வெவ்வேறு பகுதிகள் யாவை?
2. பொருள் சார்ந்த மற்றும் பொருள் சாராப் பண்பாட்டின் பொருள் தருக?
3. இந்திய பண்பாட்டின் மதச் சார்பற்ற தன்மையை வரையறு?
4. இந்திய பண்பாட்டின் குறிப்பிடத்தக்க பண்புகளை விவரி?
5. கீழ்கண்டவைகளுக்கு சிறுகுறிப்பு வரைக :

   அ) இந்தியாவில் பண்பாட்டுக் கருத்துக் கோட்பாடுகளின் ஒருங்கிணைப்பு

   ஆ) ஆன்மீகம்

   இ) இந்திய பண்பாட்டில் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு மாற்றிக் கொள்ளும் பண்பு
6. இந்திய பண்பாட்டினைப் பொருத்து வேற்றுமையில் ஒற்றுமை என்பதை விளக்குக.

## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 2.1

1. பஞ்சாப்
2. பிஹூ
3. குஷாணர்கள், சாகர்கள் மற்றும் பார்த்தியர்கள்
4. ஒரிசா

### கேள்விகளுக்கான பதில்கள் 2.2

1. குஷாணர்கள் மற்றும் முகலாயர்கள்
2. பருவ மழை
3. சுமேரியன்

# அலகு - II

# காலங்களின் வழியாக வரலாறும் பண்பாடும்

3. பண்டைய இந்தியா
4. இடைக்கால இந்தியா
5. நவீன இந்தியா

# 3

# பண்டைய இந்தியா

இந்திய மக்களின் பண்பாடு, தொடக்கத்திலிருந்து ஒரே மாதிரியாக உள்ளது என்று நீங்கள் நினைக்கிறீர்களா?. பதில், இல்லை தான். எந்த ஒரு பண்பாடும் ஒரே மாதிரி தங்குவதில்லை இந்தியாவைப் பொருத்தளவில் இது உண்மையாகும். இது மாற்றத்தின் பல படிகளை கடந்துள்ளது. ஏன், இந்த மாறுதல்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஏனென்றால் ஒவ்வொரு வம்சம், ஒவ்வொரு படையெடுப்பவர் அந்த நாட்டிற்கு வந்து குடியேறி, அங்கு அவர்களின் பண்பாட்டு கூறுகளை விட்டுச்செல்கின்றனர். இந்திய மக்களின் இன்றைய பண்பாட்டினை புரிந்து கொள்வதற்கு, இறந்த காலத்தில் இருந்த நடைமுறைகளைப் புரிந்து கொள்வது மிக அவசியம். ஆகையால், இந்தப் பாடத்தில் பண்டைய கால இந்தியாவின் மக்களின் வாழ்க்கையைப் பற்றி அறிய முயற்சி செய்யலாம். நீங்கள் ஹரப்பா காலத்திலிருந்து பண்டைய இந்திய வரலாற்றின் பல்வேறு படிநிலைகளை, வேத, மௌரிய மற்றும் குப்தர்களின் காலங்களில் படிப்பீர்கள். இந்திய சமுதாயத்தின் மாறும்தன்மை, சமுதாயத்தின் தொடர்புடைய மாறுதல்கள் மற்றும் பண்பாட்டினைப்பற்றி அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. நாம் வரலாற்றைப் படிக்கும் பொழுது நீண்ட நூற்றாண்டுகளுக்கு மேல் வளர்ச்சியடைந்த நவீன உலகம் எவ்வாறு தோன்றியது என்பது பற்றி புரிந்து கொள்ளலாம். கடந்த காலத்தில் நாம் பெற்ற சாதனைகள் நமது எதிர் காலத்தைப் பயனுள்ளதாக செய்கிறது என்பதை முக்கியமாக பாராட்ட வேண்டும்.

## நோக்கங்கள்

நீங்கள் இந்தப் பாடத்தை படித்த பிறகு உங்களால்

- வரலாறு படிப்பதன் முக்கியத்துவம் மற்றும் பொருத்தமுடையது என்பதைப் பாராட்டவும்
- இந்தியாவில் ஹரப்பா பண்பாடு தான் முதன் முதலில் தெரியப்பட்ட நகரப் பண்பாடு என்பதை அங்கீகரிக்கவும்
- வேத கால சமுதாயத்தின் தன்மை, சமயம் மற்றும் இலக்கியத்தை ஆராயவும்
- சமண மதமும் புத்தமதமும் தோன்றுவதற்கான காரணங்களை விளக்க
- இந்த காலத்தில் முற்கால தென் இந்தியாவின் வரலாற்றைக் அறிந்து கொள்ளவும்
- குறிப்பிடத்தக்க பண்பாட்டு மேம்பாட்டினை அடுத்தடுத்து ஒன்றன் பின் ஒன்றாக ஆட்சி செய்த பேரரசுகளை மீண்டும் ஆராய
- பண்டைய கால இந்தியாவில் பொதுவான பண்பாட்டு இயக்கத்தின் முன்னேற்றம் பற்றி ஆராயவும் உங்களால் முடியும்.

## 3.1 வரலாறு படிப்பதன் முக்கியத்துவம்

நீங்கள் ஏன் வரலாற்றை படிக்க வேண்டும் என்று அடிக்கடி நீங்களே உங்களைக் கேட்டுக் கொண்டுள்ளீர்கள் என்பதை பற்றி நான் உறுதியாக சொல்கிறேன். வரலாறு படிப்பது என்பது ஒரு வழியில் கடந்த காலத்தைப் பற்றி அறியலாம். எப்படி நமது மூதாதையர்கள் வாழ்ந்தார்கள், என்னென்ன இடையூறுகளைச் சந்தித்தார்கள் எந்தெந்த வழிகளில் அவற்றிலிருந்து விடுபட்டார்கள் என்பதை புரிவதற்கான ஒரு முயற்சியே வரலாறு படிப்பது தான். இன்றைய நாளில் இந்தியாவில் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள, கடந்த கால வரலாற்றைப் பற்றி ஓரளவுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்பது மிக முக்கியம். நீங்கள் இந்தப் பாடத்தை படித்த பிறகு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தொடங்கிய உங்கள் நாட்டின் வரலாற்றைப் பற்றி உங்களுக்குத் தெரிய வரும்.

நீண்ட காலமாக வரலாறு வெறும் காலம் மற்றும் நிகழ்வுகள் பற்றி அதிலும் நிறைய அரசியல் சம்பந்தமான பாடங்களாகத்தான் கருதப்பட்டது. வாழ்க்கையின் பல கூறுகளை சேர்த்ததால், இதனுடைய செயல்பாட்டு எல்லை விரிவானது. இந்த வாழ்க்கையின் அமைப்புகள் உள்ளடக்கியதை, நாம் பண்பாடு என்று அழைக்கிறோம். பண்பாடு முன்பு கலை, சிற்பக் கலை, இலக்கியம் மற்றும் தத்துவத்துடன் தொடர்பு கொண்டது என்று வரையறுக்கப்பட்டது. இப்பொழுது சமுதாயத்தின் எல்லா செயல்பாடுகளிலும் இது அடங்கியுள்ளது. ஆகையால் வரலாற்றின் முக்கியத்துவம் சமுதாயத்தின் மேற்குடி குழுக்களிடமிருந்து, எல்லா நிலையிலிருக்கும் மக்களைப் பற்றியதாக மாறியது. இது, இப்பொழுது வரலாற்றை உருவாக்குகிற அரசர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் சாதாரண குடிமக்கள் பற்றிய விவரங்களை உள்ளடக்கியது. இது கலை மற்றும் சிற்பக்கலை இந்தியாவில் மொழிகளின் படிப்படியான வளர்ச்சி, இலக்கியம் சமயம் இவற்றையும் அடக்கியுள்ளது. இப்பொழுது மேற்குடி மக்களின் சமுதாயத்தில் மட்டும் என்ன நடந்தது என்பதை நாம் பார்க்க வேண்டியதில்லை. கீழான நிலையில் இருக்கும் மக்களின் ஆசை மற்றும் உள்ளார்ந்த வருத்தங்களை கவனிக்க முயற்சி செய்கிறோம். இது வரலாற்றை மிகவும் ஆர்வமுள்ள தாக்கவும் மற்றும் சமுதாய மேம்பாட்டினை புரிந்து கொள்வதற்காகவும் பயன்படுகிறது.

சமுதாயத்தை உருவாக்கச் சென்ற மேற்குடி மற்றும் சாதாரண மக்கள் தொடக்க நிலையிலிருந்தே இந்தியாவில் வாழ்ந்தவர்கள் கிடையாது. பலர், மற்ற வட்டாரங்களிலிருந்து வந்து இந்தியாவில் குடியேறியவர்கள். அவர்கள் உள்ளூர் மக்களுடன் திருமணம் புரிந்து அங்குள்ள மக்களுடன் ஒன்றாகக் கலந்து, பின்பு இந்திய சமுதாயத்தின் ஒரு பகுதியினராக மாறியவர்கள். ஆதலால் நமது சமுதாயம் வளமான மரபுகளைக் கொண்ட வேறுவேறு வகையான மக்களைக் கொண்டதாக உள்ளது. இந்தியாவில் வெவ்வேறு வகையான மக்கள் பெரிய அளவில் இருந்ததினால் அதற்கு இணையாக சமயங்கள் மொழிகள் மற்றும் பழக்கங்களும் பெரிய அளவில் இருந்தன.

வரலாற்றை சரியாகப் புரிந்து கொள்வதில் இரண்டு நிலைகள் உள்ளன. முதல் நிலை, வரலாற்று ஆசிரியர்களால் நமக்கு கொடுக்கப்பட்ட மூலங்களை கவனமாக பகுத்தறிந்து இணக்கமாக முடிவு செய்தல். இரண்டாம் நிலை, வரலாற்று நிகழ்வுகளுக்கு காரணங்களை முழுவதுமாக ஆராய வேண்டும். எல்லாவற்றிக்கும் மேலாக, கடந்த காலத்தையும் பகுத்தறிய வேண்டும். இந்த ஒரு வழியில் தான் வரலாற்று அறிவை மேம்படுத்த முடியும்.

இந்தியாவின் கடந்த காலம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு பின் நோக்கி செல்கிறது. நாம், நமது மூதாதையர் விட்டுச் சென்ற சான்றுகளின் மூலம் அறிந்து கொள்கிறோம். கடந்த காலத்தில் எழுதப்பட்ட, அச்சடித்த ஆவணங்களை வைத்திருக்கிறோம். ஆனாலும், காகிதம் தயாரிக்கப்படாத போது, காய்ந்த பனை ஓலைகளில் எழுதப்பட்டன. பிர்ச் மரத்தின் அடிப்பாகம் செப்புத் தகடுகள் பெரிய பாறைகளில் செதுக்கப்பட்டவை, தூண்கள், கல்சுவர்கள் அல்லது களிமண், கல்லால் செய்யப்பட்ட எழுத்துப்படிவங்கள் ஆகியவை ஆவணங்களாக இருந்தன. முந்திய காலத்திற்கும் முன்னதாக எழுதக்கூட தெரியாத நிலையாக இருந்தது. பண்டைய நாளில் மக்களின் வாழ்க்கையைப் பற்றிய அறிவை அவர்கள் விட்டுச் சென்ற பொருட்களிலிருந்து, உதாரணமாக அவர்களது மட்பாண்டங்கள், ஆயுதங்கள் மற்றும் கருவிகள் மூலம் அறிந்து கொள்கிறோம். இவை கடினமான பொருட்களாகும். உண்மையாகவே சில சமயம் நிலத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்டவைகளாகவும் இருக்கும். வரலாற்றுப் பொக்கிஷங்களை வேட்டையாடும் விளையாட்டில், இவை தகவல்கள் கூறுகளாக அமைகின்றன. இவை நமது பண்பாட்டின் ஒரு பகுதியாக அமைகின்றன. ஆனால் இந்த தகவல் கூறுகளில் பலவகை உண்டு. மிகப் பொதுவான தகவல் கூறாக பயன்படுவது கையால் எழுதப்பட்ட படிவங்களாகும். கையால் எழுதப்பட்ட இந்த படிவங்கள் தான் பழங்கால புத்தகங்களாகும். அன்று காய்ந்த பனை ஓலையில்,பிர்ச் மரத்தின் அடிப்பாகத்தில் காகிதத்தில் எழுதப்பட்டது. மிக பழமையான புத்தகங்கள் சில மொழிகளில் எழுதப்பட்டன. அவை ‘பாலி’ மற்றும் ‘பிராகிருதி’. இந்தியாவில் நம் அன்றாட வாழ்வில் பயன்படுத்துவதில்லை. மற்றவை ‘சமஸ்கிருதம்’ மற்றும் அரேபிய மொழியில் எழுதப்பட்டன. நமது வீடுகளில் பயன்படுத்தாமல் இருந்தால் கூட இவற்றை இன்றும் நாம் படிக்கின்றோம் சில சமயம் நமது சமய சடங்குகளிலும் பயன்படுத்துகிறோம். மற்றுமொரு மொழி தமிழ். இது தென்னிந்தியாவில் பேசப்படுகிறது. இதனுடைய இலக்கியம் முற்பட்ட காலத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும் இன்றும் பயன்படுகிறது. இவை முதல் தரமான மொழிகள் என அழைக்கப்படுகின்றன, உலகின் பல பகுதிகளின் வரலாறு வெவ்வேறு தரமான மொழிகளில் ஆவணங்களில் எழுதப்பட்டுள்ளன. ஐரோப்பாவில் கையெழுத்து படிவங்கள் கிரேக்க மற்றும் இலத்தின், மேற்கு ஆசியாவில் அரேபிய மற்றும் ஹிப்ரு மொழியில் எழுதப்பட்டன. சீனாவில் சீன மொழி பயன்படுத்தப்பட்டது.

## 3.2 பண்டைய இந்தியா

இந்தியா, நீண்ட காலத்தை உள்ளடக்கிய ஒரு தொடர்ச்சியான வரலாறு. புதிய கற்காலத்திய வாழும் இடங்களைப் பற்றிய சான்றுகள் கி.மு. ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பலுசிஸ்தானில் ‘மெஹர்’ என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் முதலாவதாக குறிப்பிடக்கூடிய நாகரிகம் சுமார் கி.மு. 2700-ல் பெரிய பரப்பளவை உள்ளடக்கிய இந்திய துணைக் கண்டத்தின் வடமேற்குப் பகுதியில் செழிப்படைந்தது. அந்த நாகரிகம் தான் ஹரப்பான் நாகரிகம் எனச் சொல்லப்படுகிறது. ஏராளமான நிலப்பகுதிகளில் இந்த நாகரிகம் சிந்து நதி, சாகர் நதி மற்றும் அதன் கிளையாறுகளின் முகத்துவாரத்தில் வளர்ச்சியடைந்தது.

இந்தியாவில் முதன் முதலாகத் தெரிந்த நகர பண்பாடு என்பது ஹரப்பா நாகரிகத்துடன் இணைக்கப்பட்ட பண்பாடுதான். ஹரப்பர்கள் முந்திய நகரங்களை நகர அமைப்பு, சுகாதார நலம், கழிவு நீர் வெளியேற்றம் மற்றும் பரந்த நன்கு கட்டமைத்த தெருக்கள் ஆகியவற்றைக் கட்டி முடித்தார்கள். அவர்கள், சுட்ட செங்கற்களால் இரண்டு அடுக்கு மாடிகளைக் கொண்ட





வீட்டை கட்டினார்கள். ஒவ்வொரு வீடும், குளியலறை, சமையல் அறை மற்றும் கிணறு ஆகியவற்றை கொண்டிருந்தது. சுவரால் சூழப்பட்ட நகரங்கள் பெரிய குளியல் அறை, தானியக் கிடங்கு மக்கள் கூடும் மன்றம் ஆகியவற்றைக் கொண்டிருந்தன.

கிராமப்புற பகுதியில் வசித்துக் கொண்டிருந்த ஹராப்பர்களின் முக்கியமான தொழில் விவசாயம். நகர்ப்புறத்தில் வசித்த மக்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாணிகத்தை நடத்தினர். மற்ற நாகரிகத்துடன், அதாவது மெசபடோமியாவுடன் தங்களின் தொடர்பை வளர்த்து கொண்டனர். அவர்கள் நேர்த்தியான குயவர்கள். பல்வேறு பகுதிகளிலிருந்து அவர்கள் செய்த பலவகைப்பட்ட பாத்திரங்கள், பொம்மைகள், முத்திரைகள், பெண் தெய்வங்கள் ஆகியவை அகழ்ந்தெடுக்கப்பட்டன. ஹரப்பர்கள் உலோகங்கள் மற்றும் உலோகங்களைச் சேர்க்கும் செயல்பாடுகளான தொழில் நுட்ப அறிவைப் பெற்றிருந்தனர். மொஹஞ்சதாரோவில் காணப்பட்ட நடனமாடும் பெண்ணின் சிற்பம், ஹரப்பர்களின் சிற்பக்கலை திறன்கள் மற்றும் அழகுணர்ச்சி சார்ந்த உணர்வுகள் சாட்சிகளாய் உள்ளது. சிப்பிகள், தந்தம், எலும்புகள் போன்றவைகள் பல்வேறு கைத் தொழில்களுக்குப் பயன்படுத்தப்பட்டது. 'லோதல்' என்ற கப்பல் கட்டும் இடம், குஜாரத்தில் அகமதபாத்திலுள்ள 'தோலகா' தாலுாக்கில் அமைந்துள்ளது. இதுவும் நன்கு திட்டமிட்டு கட்டப்பட்ட சுவர்களால் சூழப்பட்ட நகரமாகும். இது மேற்கத்திய உலகுடன் கடல் வாணிகம் செய்வதற்கு ஒரு முக்கியமான மையமாகத் திகழ்கிறது. குஜராத்தில் மற்றுமொரு முக்கியமான நகரம் 'தௌலாவிரா', அதே சமயம் ராஜ்தானின் முக்கியமான நகரம் கலிபங்கம் என்பது.

ஒற்றைக் கொம்பைக் கொண்ட காண்டாமிருகம் அரசமர நிலைகள் மற்றும் ஆண் தெய்வம், இவர்களின் உருவங்களைக் கொண்ட ஏராளமான முத்திரைகள் ஹரப்பர்களின் சமய நம்பிக்கைகளுக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. அவர்கள் தாவரங்கள், விலங்குகள் மற்றும் இயற்கை சக்திகளையும் வணங்கினார்கள் எனத் தோன்றுகிறது. அவர்கள் பிற்காலத்திய சிவா என்ற கடவுளைப்போலே உள்ள ஆண் தெய்வத்தையும் மற்ற பெண் தெய்வங்களையும் வழிப்பட்டனர். அனேகமாக இறந்ததிற்குப் பின் மறுவாழ்வு உண்டு என்பதையும், தாயத்து மற்றும் மந்திரங்களின் மீது நம்பிக்கை கொண்டிருந்தார்கள். திமிலுடன் கூடிய எருது, யானை மற்றும் காண்டா மிருகம் ஆகிய விலங்குகளை புனித விலங்குகளாக கருதியதால், அவற்றின் உருவங்கள் முத்திரைகளில் பொறிக்கப்பட்டன. அரச மரம் சித்தரிக்கப்பட்ட பல முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஹரப்பர்கள் எழுதத் தெரிந்திருந்தார்கள் ஏராளமாக முத்திரைகள் சில எழுத்து வடிவங்களைக் கொண்டிருந்தன. ஆனால் துரதிஷ்டவசமாக இன்னும் ஒருவர் கூட விளங்காத எழுத்துகளுக்கு பொருள் கண்டுபிடிக்க முடியவில்லை. இதன் விளைவு ஹரப்பா நாகரிகத்தைப் பற்றிய நமது அறிவு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் சான்றுகளின் அடிப்படையில் மட்டுமே அறிய முடிகிறது. ஆண் மற்றும் பெண் உருவங்களைக் கொண்ட தோண்டி எடுக்கப்பட்ட முத்திரைகள், ஹரப்பா மக்கள் நூல் நூற்க மற்றும் நெசவு செய்ய தெரிந்திருந்தார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. ஒருவேளை அவர்களே முதன் முதலில் பருத்தி விளைவித்த மக்களாக இருக்கலாம். மெசபடோமியாவில் கண்டெடுக்கப்பட்ட பெரிய அளவிலான சிந்து முத்திரைகள், சிந்து சமவெளி நாகரிகத்திற்கும், மற்றும் மெசபடோமியன் நாகரிகத்திற்கும் இடையே வாணிகம் நடந்தது எனத் தெரிவிக்கின்றன.

கி.மு. 1800-இல் ஹரப்பன் நாகரிகம் வீழ்ச்சியடையத் தொடங்கியது, இருந்தாலும் இந்த மாதிரி ஏன் ஏற்பட்டது என்பதற்கு நமக்கு உண்மையான காரணம் தெரியாது.

## 3.3 வேதப் பண்பாடு

ஹரப்பா நாகரிகம் வீழ்ச்சியடைந்த சில நூற்றாண்டுகளுக்குப் பின், புதிய பண்பாடு அதே வட்டாரத்தில் செழிப்புற்று மற்றும் மெதுவாக கங்கை - யமுனா சமவெளிகளுக்குப் பரவியது. இந்தப் பண்பாடு ஆரியர்களின் பண்பாடு என தெரியப்படுகிறது. குறிப்பிடத்தக்க வேற்றுமைகள் இந்தப் பண்பாட்டிற்கும் மற்றும் இதற்கும் முந்தைய பண்பாட்டிற்கும் இருந்தன.

ஆரியர்கள், சிந்து மற்றும் சரஸ்வதி (இப்பொழுது இது இல்லை) ஆறுகளின் கரைகளில் குடியேறினார்கள். அவர்கள் வணங்கிய ஆண் மற்றும் பெண் தெய்வங்களைப் புகழ்ந்து பாட பல தோத்திர பாடல்களை தொகுத்தார்கள். அவைகள் ரிக்வேதம், சாம வேதம், யஜீர் வேதம் மற்றும் அதர்வண வேதம் என நான்கு வகைகளாகத் தொகுக்கப்பட்டது. ‘வேதம்’ என்பது ‘புனித ஆன்மீகத்தின் அறிவு‘ என்ற பொருளாகும். இந்த வேதங்களை குற்ற மற்ற வேதங்கள் எனக் கருதினர். ஏனென்றால் இவை உயர்ந்த ஆன்மீக அறிவைத் தெரிவிக்கின்றன. தொடக்க நிலையில் வேதங்கள் வாய்மொழி வாயிலாக மாற்றப்பட்டது. வேதங்களை அடிப்படையாகக் கொண்ட முந்தைய ஆரியர்களைப் பற்றிய அறிவு, இந்த பண்பாடு காலத்தை ‘ஆரிய பண்பாடு’ என்று கூறுகிறது. அறிஞர்கள் இந்த வேத காலத்தை முந்தைய கால மற்றும் பிற்காலம் எனப் பிரிக்கின்றனர். முந்தைய காலத்தைப் பற்றி ரிக்வேதத்தில் குறிப்பிடப்படுகிறது. அதே சமயம் பிந்தைய காலத்தை மற்ற பிராமணங்கள், ஆரணயங்கள் மற்றும் உபநிடதங்கள் உள்ளடக்கியதாக வேத இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றன. மிகப் பிந்திய காலத்திற்குப் பின் இருகாவியங்களான ராமாயணம், மஹாபாரதம் மற்றும் புராணங்கள் தொகுக்கப்பட்டாலும் அவைகளும் முந்தைய காலத்தின் வாழ்க்கை மற்றும் சமுதாயத்தைப் பற்றி நமக்கு தெளிவாகக் கூறுகின்றன. இந்தக் காலத்தில் உத்திரபிரதேசத்தில் சில பகுதிகளில் தொல்பொருள் சான்றுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

நகரங்களை அழிப்பவர் என்று வர்ணிப்பவரான இந்திரனைப் புகழ்ந்து 250 பாடல்களும், ‘அக்னி’ கடவுளைப் புகழ்ந்து 200 பாடல்களும், ரிக் வேதத்தில் அடங்கியுள்ளன. ‘அக்னி’ என்ற கடவுள், மனிதர்களுக்கும் மற்றும் தெய்வங்களுக்கும் இடையே ஒரு மத்தியஸ்தர் என்பது உங்களுக்குத் தெரியுமா?

### சமுதாயமும் மற்றும் சமயமும்

ஆரியர்களின் சமுதாயம், ஆண்வழி மரபாக இருந்தாலும், பெண்களைக் கண்ணியமாக உயர்வாக நடத்தினர். சமுதாயத்தின் ஒரு சின்ன அலகாகத்தான் குடும்பம் இருந்தது. பலகுடும்பங்கள் (குலா) ஒன்று சேர்ந்து கிராமத்தை உருவாக்கின, பல கிராமங்கள் ஒன்று சேர்ந்து நகரங்களை உருவாக்கின. ஏராளமாக கிராமங்கள் ஒன்று சேர்ந்து “ஜனா அல்லது “பழங்குடி இன மரபுக்குழு”வை அமைத்தனர். இவை “ராஜன்” என்ற இனக்குழுவின் தலைவரால் ஆளப்பட்டன. அவருடைய முதன்மை வேலை தன் இனக்குழுவினரை வெளித்தாக்குதலிலிருந்து காப்பாற்றுவது மற்றும் சட்டம் ஒழுங்கை நிர்வகிப்பதாகும். அவருக்கு “சபா” மற்றும் “சமதி” என்று அழைக்கப்படுகின்ற இரண்டு மன்றங்களின் உறுப்பினர்களால் துணைபுரியப்பட்டது. புரோகிதர் சமயப் பணிகளை நிறைவேற்றினார். அதே சமயம் “சேனாதிபதி” இராணுவ செயல்பாடுகளை பார்த்துக் கொண்டார். அங்கு அரசைப் பற்றியோ அல்லது அரசனால் ஆளப்படுகிற நாட்டைப் பற்றியோ எந்த வித கருத்துக் கோட்பாடும் இல்லை. இராஜாவின் பதவி, மரபு வழியாக இருந்தாலும், அவர் பலவீனமான மற்றும் திறமையில்லாத அல்லது மிக கொடூரமானவராக இருந்தால் அவரை அதிகாரத்திலிருந்து எடுத்துவிடுவர்.

பிந்தைய வேத காலத்தை நோக்கும் பொழுது, சமுதாயம் பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என நான்கு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இது வர்ணா - வியாவஸ்தா என்றும் அழைக்கப்பட்டது. தொடக்கத்தில் இது வெவ்வேறு பணிகளைச் செய்யும் இன வாரியாகப் பிரிக்கப்பட்டது. ஆனால் நாளடைவில் மரபு வழி மற்றும் மாற்ற முடியாத பிரிவுகளாக மாறியது. ஆசிரியர்கள் பிராமணர்கள் என்று அழைக்கப்பட்டனர். அரசாள்கிற வகுப்பை சத்திரியர்கள் என்றும், விவசாயிகள், வியாபாரிகள் மற்றும் வங்கியாளர்களை வைஸ்யர்கள் என்றும் அதே சமயம் கலைஞர்கள், கைவினைப் பொருட்கள் செய்பவர்கள், தொழிலாளர்களை சூத்திரர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். ஒரு தொழிலிருந்து மற்ற தொழிலுக்கு மாறுவது என்பது கடினமாக இருந்தது. அதே சமயம் பிராமணர்கள் சமுதாயத்தில் முதன்மையான இடத்தைக் கொண்டிருந்தனர்.

அன்றைய காலத்தில் மற்றுமொரு முக்கியமான சமூகக் குழு என்னவென்றால், ''சதுராஸ்ரமா'' அதாவது பிரம்மசர்யம் (துறவற காலம், கல்வி மற்றும் குருவின் ஆசிரமத்தில் ஒழுக்கமான வாழ்க்கை) ''கிரிஹஸ்தா'' (குடும்ப வாழ்க்கை காலம்), ''வனப்பிரஸ்தா'' (குடும்ப வாழ்க்கையிலிருந்து மெதுவாக பிரிதல்) மற்றும் ''சன்யாசம்'' (உலக வாழ்வை விட்டு, ஆன்மீகத்திற்கு வாழ்க்கையை அர்ப்பணித்தல்) இருந்தாலும் இத்தகைய நிலைகள், பெண்களுக்கும் அல்லது கீழ் குலத்தில் உள்ள மக்களுக்கு இது பொருந்தாது என்பதை குறிப்பிடவேண்டும். பெண்கள் சமுதாயத்தில் மதிக்கப்பட்டனர். சுதந்திரத்தை அனுபவித்தார்கள் கல்வி கற்க அனுமதிக்கப்பட்டனர் மற்றும் அவர்களுடைய கணவனை ''சுயம்வரம்'' மூலம் தேர்ந்தெடுக்க சுதந்திரம் வழங்கப்பட்டது. பர்தாமுறை மற்றும் சதிநடைமுறையில் இல்லை. வாழ்க்கையின் இறுதியான முடிவு என்னவென்றால், ''மோட்சம் அல்லது முக்தியை தர்மம், ஆர்தா மற்றும் ''காமா என்ற செயல்பாடுகளின் மூலமாக பெறுவதாகும். ''கர்மம்'' அல்லது திரும்ப எந்த விதபலனையும் எதிர்பார்க்காமல் செய்யும் வேலையைப் பற்றி, பகவத்கீதையில் போதிக்கப்பட்டுள்ளது.

முந்தைய வேதகால மக்கள், இயற்கைச் சக்திகளை வணங்கினார்கள் அவற்றை கடவுள் மற்றும் பெண் கடவுள்களாக ஏற்றுக் கொண்டார்கள். இந்திரா, அக்னி, வருணன், மருத் முதலியவை அவர்களுடைய கடவுள், அதே சமயம் உஷா, அதிதி, பிரிதிவி போன்றவர்கள் அவர்களுடைய பெண் தெய்வங்களாகும். சில சூரிய கடவுள்கள் மற்றும் பெண் தெய்வங்களான சூர்யா, சாவித்ரி மற்றும் புஷப் ஆகியவர்களைப் பற்றி ரிக் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ''யஜ்னா'' (பலியிடுதல்) என்ற சடங்கு, வேத சமயம் பாடல்களை உச்சரித்து நிறைவேற்றப் பட்டது. மக்கள் நெய்யை (வெண்ணெயிலிருந்து நீக்கப்பட்ட) மற்ற பொருட்களுடன், நெருப்பில் கடவுளிடமிருந்து ஆசிர்வாதத்தைப் பெறுவதற்காக ஊற்றினார்கள். ''அக்னி'' அல்லது ''தீ'' மனிதர்களுக்கும் கடவுளுக்கும் இடையே செயல்படுவதாக காணப்பட்டது. வேதகால மக்கள் தனித்தனியாக அதே சமயம் எல்லோரும் ஒருங்கிணைந்தும் தங்களின் இனக் குழுவான ''ஜனா'' வின் நன்மைக்காக வேண்டினார்கள்.

பிந்திய வேதகாலத்தில் சமய நடைமுறைகளில் மாற்றங்கள் இருந்தன. முந்தைய வேதகாலத்தில் முக்கியத்துவம் வாய்ந்த கடவுள்களான இந்திரன், அக்னி மற்றும் வருணன் முதலோர் அவர்களுடைய முக்கியத்துவம் இழந்தனர். அவர்களுடைய இடங்கள் புதிய மூன்று தொகுதி கடவுள்கள் 'பிரம்மன்', 'விஷ்ணு' மற்றும் 'சிவன்' ஆகிய இம்மூவரால் எடுத்துக் கொள்ளப்பட்டது. சமயம், தீவிர சடங்குகளாக மாறியது. சமஸ்கிருத மந்திரங்கள் பிராமணர்களின் முழு உரிமையானது.

இவை சமயச் சடங்குகளுக்கும் தேவையான பகுதியாக மாறியது. இது பிராமணர்கள் அதிக அதிகாரமுள்ளவர்களாகவும் மற்றும் பலிகள் மிகவும் அதிக செலவை ஏற்படுத்துபவையாக ஆயின. இதில் மூன்று மேல்குடி மக்கள் பங்கெடுத்துக் கொள்வது தடை செய்யப்பட்டது.

அரசர்கள் தங்களுடைய அதிகாரத்தை நிலை நாட்டுவதற்காக 'அஸ்வமேத', 'ராஜசுயா' மற்றும் வஜ்பேயர் போன்ற பலிகளை நடத்தினார்கள். வேத காலத்திய சில பண்பாட்டுக் கூறுகள், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து கொண்டிருந்தது என்பதும் மற்றும் இந்திய பண்பாட்டின் ஒரு பகுதியாக இன்றும் உள்ளது என்பதை அறியும் பொழுது வெகு உற்சாகமாக இருக்கிறது. பிந்தைய வேத காலத்தின் இறுதியில் மாற்றங்கள் சமுதாயத்தில் ஏற்பட்டன. முதன் முதலாக மக்கள் குறிப்பிட்ட நம்பிக்கைகள் அதிலும் உலகத்தின் படைப்பு இறப்பிற்குப் பின் வாழ்க்கை மற்றும் வாழ்க்கையின் இன்றியமையாமை பற்றி கலந்துரையாடத் தொடங்கினார்கள். இந்த மாதிரி கேள்விகள் விளக்கமாக உபநிடதங்களில் கையாளப்பட்டுள்ளது.

### பொருள் சார்ந்த வாழ்க்கையும் பொருளாதாரமும்

அடிப்படையாகவே ஆரியர்கள் நாட்டுப்புற இடையர்கள் விவசாயிகள் ஆவர். பசுக்கள், குதிரைகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள், நாய்களை வளர்த்தார்கள். அவர்கள் சாதாரண உணவுகளான தானியங்கள், பருப்பு வகைகள், பழங்கள், காய்கறிகள், பால் மற்றும் பலவகைப் பால் பொருட்களை உண்டார்கள். அவர்கள் "சோமா என்ற பானத்தைக் குடித்தார்கள். சதுரங்க விளையாட்டு, ரத பந்தயம் ஆகியவை பொழுதுபோக்குப் அம்சங்களாக இருந்தன.

முந்தைய காலத்தில் பணம் கைமாறுதல் அல்லது வரிகளும் இல்லை. 'பாலி' அல்லது தானாகவே நன்கொடை அளிக்கும் பழக்கம் இருந்தது. மாடுகள் தான், செல்வத்தை அளக்கக் கூடிய அளவையாக இருந்தது. நாள்கள் செல்லச் செல்ல இரும்பைப் பெரிய அளவில் பயன்படுத்தியதால், அவர்களுடைய பொருள் சார்ந்த வாழ்வில் பெருத்தமாறுதல்களைக் கொண்டு வந்தது. இரும்புக் கோடரிகளினால் காடுகளை சுத்தம் செய்யவும், விவசாயத்தை கங்கை நிலப்பகுதிவரை விரிவாக்கவும் அவர்களால் முடிந்தது. இரும்புக்கருவிகள், பல்வேறு கைத்திறன் வேலைகள் மற்றும் தொழில்நுட்ப வேலைகளை ஏற்படுத்தின. இரும்பு ஆயுதங்கள் மற்றும் குதிரைகளைப் பயன்படுத்துதல், போரில் தங்களை எதிரிகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்ள அவர்களுக்கு முடிந்தது. கைத்திறன் வேலைகளின் அதிகரிப்பு, தங்களது தேவைக்குப் போக மீதமுள்ள உணவு மற்றும் மக்களின் பெருக்கம், திறமைகள் வளர்வதற்கும், நகரமயமாகுதலுக்கும் வழிவகுத்தது. பட்டணங்கள், நகரங்கள் வளர்ச்சியடைந்தன. அரசுக்குட்பட்ட தொகுதிகள் தோன்றின. உயர்ந்த ரகத்தைச் சார்ந்த, சாம்பல் கலரில் வ்ாணம் பூசப்பட்ட பாத்திரங்கள் மற்றும் கருப்பு நிறக்கலவை பாத்திரங்கள் ஆகியவை பல இடங்களில் காணப்பட்டன. நாணயங்கள் புழக்கத்திற்கு வந்தன. வாணிகம் தரைவழியாக மற்றும் கடல் வழியாகவும், பொருட்களின் செல்வச்செழிப்பை அதிகரிப்பதற்காகவும் நடந்தது.

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் பதினாறு மாகாண அரசுகளும் மேல் தக்காணத்தில் 'மஹாஜனபதாஸ்' களும் இருந்தன. அவற்றில் அங்கா, மகதா, கோசலா, காசி, குரு மற்றும் பாஞ்சாலா ஆகியவை முக்கியமானவைகளாகும்.

## 3.4 பிரபலமான சமய சீர்திருத்தங்கள்

இது (கி.மு. 600 முதல் கி.மு. 200) வரையிலுள்ள காலம், நாட்டின் அரசு ஒற்றுமைக்காக மட்டுமில்லாமல், பண்பாட்டின் ஒற்றுமைக்கும் மிக முக்கியமானதாக இருந்தது. பண்டைய கால இந்தியா இரண்டு மிக முக்கியமான சமயங்களான சமண மதம் மற்றும் புத்த மதத்தின் எழுச்சியைக் கண்டது. இவை, இந்திய வாழ்வு மற்றும் பண்பாட்டிற்கு நீடித்த செல்வாக்கை விட்டுச் சென்றுள்ளன. வேத சமயம் தான் முந்தியது அதனால் அது 'பிரம்மணிசம்' என்றும்

அழைக்கப்பட்டது. ஏனென்றால் பிராமணர்கள் பெரும்பங்கெடுத்துக் கொண்டார்கள். பின்பு இது 'இந்து மதம்' என அழைக்கப்பட்டது. பிராமணர்கள், பலிகளின் முடிவில், நிறைய பொருட்களை மரபு ஆர்வத்தினால், உரிமையுடன் கேட்பதை வளர்த்துக் கொண்டார்கள். இதன் விளைவு பலிகள் மிகவும் விலையுயர்ந்தாக மாறின. மேலும், பிராமணர்கள் தங்களை மற்ற சாதியினரை விட உயர்ந்தவர்களாகவும் மற்றும் செருக்கு கொண்டவர்களாகவும் மாறினர். இது, பிராமணர்களின் செல்வாக்கை இழக்ககவும் சீர்திருத்தத்தின் தேவைகளை உணருவதற்கும் வழிகாட்டியது.

இதைத்தவிர மற்ற காரணிகளும், பிராமணர்களைப் போலவே உயர்ந்த அந்தஸ்தை பெறுவதற்காக சத்திரியர் களின் எதிர்மறைச் செயல்பாடுகள் மற்றும் சமுதாயத்தில் நல்ல மேம்பட்ட தகுதியைப் பெறவேண்டும் என்பதே சத்திரியர்களின் முறையீடுகளாகும். வேத சமயம் வெறும் சடங்காகவும் சிக்கலாகவும் மாறியது, ஏழ்மையான அதாவது விலையுயர்ந்த பலிகளை கொடுக்க இயலாத மக்களின் ஆதரவுடன் சத்திரியர்களால் வழிகாட்டப்பட்ட சீர்த்திருத்தங்களின் விளைவு கி.மு. ஆறாம் நூற்றாண்டில் சமண மதம் மற்றும் புத்த மதம் தோன்றலாயின. இந்தப் புதிய சமயங்களான சமண மதமும் புத்த மதமும் இந்து மதத்தின் சமய நம்பிக்கைகள் மற்றும் பலநடைமுறைகளின் மீது தமது செல்வாக்கைப் பதித்தன.

ரிஷபதேவர், இருபத்தி நான்கு தீர்த்தங்கரர்களில் முதலாம் தீர்த்தங்கரர், என்பவர் தான் சமண மதத்தை தோன்றுவித்தவர் என்று நம்பப்படுகிறது, மற்றும் மஹாவீரர் கடைசி தீர்த்தங்கரர் சமண மதத்தை வளர்ச்சியுறச் செய்து சமண மத கொள்கைகளுக்கு ஒரு வடிவத்தையும் கொடுத்தார்.

சமணர்கள், தனக்குத்தானே உடம்பை வருத்திக் கொண்டு கடும் துறவறத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். மஹாவீரர் அவர்களை பொய் சொல்லக் கூடாது உயிரினங்களை சித்ரவதை செய்யக்கூடாது, சொத்துகளை சேர்க்கக்கூடாது, திருடக்கூடாது மற்றும் கற்பை காக்க வேண்டும் என ஐந்து சத்தியங்கள் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். அவர் சமணர்களை நல்ல நம்பிக்கை, நன்னடத்தை மற்றும் நல்அறிவு ஆகிய மூன்று ரத்தினங்களையும் பின்பற்ற கேட்டுக்கொண்டார்.

பிந்தைய நாளில் சமணர்கள் இரு பிரிவாக 'ஸ்வதம்பினர்கள்' (வெண்ணிற ஆடை அணிந்தவர்கள்) மற்றும் 'திகம்பரர்கள்' (நிர்வாணமாக இருப்பவர்கள்) எனப் பிரிந்தனர். பெரும்பான்மையான சமணர்கள் வாணிக இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர்.

மற்றமொரு இயக்கம் (563 - 483 கி.மு) அதே காலத்தில் வாழ்ந்த இளவயதினரான கௌதம புத்தரால் தொடங்கப்பட்டது. அவர் புனிதமான நான்கு உண்மைகளைக் கற்றுக் கொடுத்தார். அவருடைய வழி மத்தியமான வழி அவர் உலகம் துன்பமயமானது. அத்துன்பங்களுக்கு ஆசையே காரணம் மற்றும் எண் வகை மார்க்கங்களை கடைப்பிடித்தால் இவற்றை வெல்லலாம் என்று நம்பினார்.

1. நல்லவற்றை புரிந்து கொள்ளும் தன்மை
2. நல்ல எண்ணம்
3. நல்ல பேச்சு
4. நல்ல நடத்தை
5. நல்ல வாழ்க்கை
6. நல்ல முயற்சி
7. நல்ல சிந்தனை
8. நல்ல கவனம்





அடிப்படையாகவே இந்த இரு இயக்கங்களும் பழமையான சடங்குகளை கொண்ட பிராமண சமயத்திற்கு எதிராக இருந்தன. இந்த இரு சீர்திருத்தவாதிகளுமே, நல்லொழுக்க வாழ்க்கை மற்றும் தர்மத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்கள். இருவருமே மடத்துறவிகளுக்கான ஒரு அமைப்பை சமண மதத்தில் ''ஸ்தனிகாஸ்'' மற்றும் புத்த மதத்தில் ''விகாராஸ்'' என்று அழைக்கப்படுகின்ற மடாலயங்களை ஏற்படுத்தினார்கள்.

பின்னர், புத்த மதமும் இரண்டாகப் பிரிந்தது. ஹீனயானம் மற்றும் மஹாயானம், இத்துடன் ''வஜ்ராயனா'' என்ற அழைக்கப்படுகிற மூன்றாவது அமைப்பும் தொடர்ந்து சேர்க்கப்பட்டது. புத்தமதம் இலங்கை, மியான்மர், கம்போடியா, வியட்நாம், சீனா, ஜப்பான், தாய்லாந்து, கொரியா, மங்கோலியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய உலகின் பெரிய பகுதிகளுக்கு பரவலாயின. இன்றும் கூட இத்தகைய நாடுகளில் பெரிய அளவிலான மக்கள் புத்த மதத்தினர் தான்.

வரலாற்றில் இந்து மதம் பல மாறுதல்களுக்கு உட்பட்டது. இது தனக்குள்ளேயே பலதரப்பட்ட நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகளைக் கொண்ட சமயக்குழு ஏற்படுவதற்கு வழி வகுத்தது. புத்த மதத்தைப் போலவே, இந்து மதத்தின் சமயக்குழுவும், இந்தியாவின் வெளிப்பகுதிகளிலும் குறிப்பாக தென் கிழக்கு ஆசிய நாடுகளிலும் பரவியது. பின்பு இந்து பாரம்பரியம் புத்தரை விஷ்ணு அவதாரங்களில் ஒன்று என ஒத்துக் கொண்டது.

## இப்பகுதிக்கான கேள்விகள் 3.1

கேள்விகளுக்கு விடை தருக

1. ஹரப்பா நாகரிகத்தின் பெரும்பாலான பகுதிகள் எங்கு காணப்பட்டது?
2. ஹரப்பா நாகரிக கால மக்களின் முக்கியமான தொழில் எது?
3. புதிய கற்கால குடியேற்றங்களை எங்கு நீங்கள் காணலாம்?
4. ஹரப்பா நாகரிக காலத்தில் ஒருமொழி வழக்கில் இருந்தது என்று எப்படிக் கூறுவாய்?
5. ஹரப்பர்கள், சிற்பக்கலையின் திறன் பெற்றிருந்தார்கள் என்பதை நீங்கள் எப்படி அறிவீர்கள்?
6. ஆரியர்களின் சிலவேத இலக்கியங்களின் பெயர்களைக் கூறுக?
7. எவ்வாறு மனிதன் முக்தி அல்லது மோட்சத்தை அடைகிறான்?
8. தொடக்கத்தில் வேத 'யஜ்னா' எவ்வாறு நடத்தப்பட்டது?
9. எந்தெந்த யஜ்னாக்கள் அரசர்களால் அவர்களுடைய பதவியைத் தோற்றுவிக்க நடத்தப்பட்டது?
10. பிந்திய வேத காலத்தில் அவர்களுடைய சமய சடங்குகளின் நடைமுறையில், என்ன மாறுதல் இருந்தது?
11. ஆரியர்களின் பொழுதுபோக்கு பாணிகள் யாவை?
12. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வட இந்தியா மற்றும் மேல் தக்காணத்தின் சில மகத அரசுகளின் பெயர்களைக் கூறுக?
13. சமண மதம் எத்தனை வகையாகப் பிரிக்கப்பட்டது?
14. அஷ்டாங்கிகா எத்தனை வழிகளைக் கொண்டுள்ளது?
15. சமண மதம் மற்றும் புத்த மதத்தில் மடாலயங்கள் என்னவென்று அழைக்கப்பட்டது?
16. புத்த மதத்தின் மூன்றாவது பிரிவினைக் கூறுக

## 3.5 பாரசீகப் படையெடுப்பும் இந்தியப் பண்பாட்டில் அதன் தாக்கமும்

கி.மு. ஆறாம் நூற்றாண்டின் முதல் பகுதியில், இந்தியாவின் வடமேற்கு பகுதியில் ஏராளமான சிறு பழங்குடி அரசுகள் இருந்தன. இந்த இனக்குழுவை ஒன்று படுத்த அங்கு அரசனோ அல்லது அரசியோ கிடையாது. பெர்சியாவின் அக்யாமெனிட் ஆட்சியாளர்கள் அல்லது ஈரான் வட்டாரத்தின் அரசியல் ஒற்றுமையின்மையை சாதகமாக எடுத்துக் கொண்டனர். அக்யமெனிட் வம்சத்தை தோற்றுவித்தவரான சைரஸ் மற்றும் அவருக்குப் பின் வந்த முதலாம் டேரியஸ், பஞ்சாப் மற்றும் சிந்துவின் பகுதிகளைக் கைப்பற்றினார்கள். மிகவும் செழிப்பான, மக்கள் தொகை அதிகமுள்ள பகுதியாக ‘அக்யாமெனிட்’ பேரரசு என நம்பப்படுகிறது. இந்திய மக்களும் ‘அக்யாமெனிட்’ இராணுவத்தில் சேர்க்கப்பட்டனர்.

வடமேற்கு இந்தியாவில் பாரசீகர்களின் ஆட்சி சுமார் இரண்டு நூற்றாண்டுகளாய் இருந்தது. இந்தக் காலத்தில் இரண்டு வட்டாரங்களுக்குமிடையே ஒழுங்கான தொடர்பு இருந்திருக்க வேண்டும். ‘ஸ்கைலேக்சின்’ கடற்பியம், பெர்சியாவுக்கும் மற்றும் இந்தியாவுக்கும் இடையே ஏறத்தாழ உற்சாக மூட்டியுள்ளதாக அமைந்தது. பஞ்சாபில் சில பாரசீக தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள் காணப்பட்டுள்ளன.

மிகவும் முந்திய காலங்களிலிருந்தே வடமேற்கு எல்லையில் உள்ள மலை கணவாய்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றாலும் முதலாம் டேரியஸ் இந்தக் கணவாய்களின் வழியாக இந்தியாவை முதல் தடவையாக அடைந்தார் என்று கருதப்படுகிறது. பின்பு, அலெக்சாண்டர் பஞ்சாபின் மீது படையெடுத்த பொழுது அவருடைய படையின் ஒரு பிரிவினர் இதே மார்க்கத்தில் குறுக்காகச் சென்றனர்.

மௌரியப் பேரரசின் நிர்வாகக் கட்டமைப்பின் சில அம்சங்கள் பெர்சியாவைச் சார்ந்த அக்யாமெனிட் அரசர்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தியது. பாரசீக ‘சத்ரபா (ஆளுநர்)’ என்ற பட்டம், இந்திய மாகாண ஆளுநர்களால் ‘ஷத்ரபா’ என்று வெகு நாள்களுக்கு முன்பிருந்தே பயன்படுத்தப்பட்டு வந்தது என்பது இங்கு குறிப்பிடலாம்.

பாரசீகர்களுடன் கொண்ட தொடர்பால், ஏற்பட்ட பண்பாட்டு விளைவுகள் குறிப்பிடத்தக்கவை. பாரசீகர்கள் புதிய பாணியில் எழுவதற்கு எழுத்து வடிவங்களை இந்தியாவிற்கு கொண்டு வந்தனர். இவை ‘காரோஷ்தி’ என அழைக்கப்பட்டன. இது ‘அரமைக்கின்’ கையெழுத்துப் பிரதிகளிலிருந்து எடுக்கப்பட்டது. இவை வலது புறத்திலிருந்து இடது புறத்திற்கு எழுதப்பட்டன. இந்தியாவின் வடமேற்கு பகுதியில், அசோகரின் கல்வெட்டுக்களில் இந்த “காரோஷ்டி எழுத்துகள் காணப்படுகின்றன. இந்த எழுத்துகள் கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரை வடமேற்கு இந்தியாவில் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டன. அசோகப் பிரகடனத்தின் முன்னுரையில் பாரசீகத் தாக்கத்தின் அறிகுறிகள் காணப்படுகின்றன. மௌரிய கலை மற்றும் கட்டிடக்கலையும் கூட, பெருமளவில் பாரசீகக் கலையின் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளன. மேல் முகப்பில் மணி வடிவத்தைக் கொண்ட ஒரே கல்லில் செதுக்கப்பட்ட அசோகரின் தூண் பிரகடனம் ஓரளவிற்கு ‘அக்யாமெனிட்’ பேரரசர்களின் வெற்றித் தூண்களைப் போலவே இருப்பதை ‘பெர்சிபோலிஸ்’ என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ள்ளது.

பாரசீகர்களின் செல்வாக்கு சந்திரகுப்த மௌரியப் பேரரசர் தனது பிறந்த நாளின் போது அவையில் சடங்குகளோடு கூடிய தலை நீராடுதலை காண்பிக்கின்றது. இது அப்படியே பாரசீகப் பாணியில் அமைந்துள்ளது. அரசன், மருத்துவர் அல்லது துறவியிடம் ஆலோசனை செய்யும் பொழுதெல்லாம், அவன் புனிதமான நெருப்பு வைத்திருக்கக்கூடிய அறையில் தான் அமர வேண்டும் என அர்த்த சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பண்டைய ஈரானியரின் ‘ஜொராஸ்டிரிய’ சமயத்தின் தாக்கம் எனக்குறிப்பிடுகிறது.

## 3.6 கிரேக்க (மாசிடோனியர்) படையெடுப்பும் இந்திய பண்பாட்டில் அதன் விளைவுகளும்

கி.மு. நான்காம் நூற்றாண்டில். கிரேக்கர்கள் பாரசீகர்கள் ஆகியோர் மேற்கு ஆசியாவின் மீது அதிகாரம் செலுத்த போரிட்டனர். முடிவில் 'அக்யாமெனிட்' பேரரசு, மாசிடோனியாவைச் சார்ந்த அலெக்சாண்டர் என்பவரது தலைமையில் கிரேக்கர்களால் அழிக்கப்பட்டது. அவர் ஆசியா, ஈராக் மற்றும் ஈரான் ஆகியவற்றை வென்று பிறகு இந்தியாவை நோக்கி சென்றார். இந்தியாவின் அற்புதமான வளம், அலெக்சாண்டரை இந்தியாவை நோக்கி ஈர்த்தது.

அலெக்சாண்டர் படையெடுப்பின் போது, வடமேற்கு இந்தியா பல சிறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவர்களுடைய ஒற்றுமையின்மை கிரேக்கர்களுக்கு இந்த நாடுகளை ஒன்றன் பின் ஒன்றாக வெல்லுவதற்கு உதவியாக இருந்தது. இருந்தாலும் அவர்கள் மகத நாட்டு நந்தர்களின் பரந்த மற்றும் அதன் பலத்தைக் கேள்விப்பட்டதினால், அலெக்சாண்டரின் படைகள் முன்னேறிச் செல்ல மறுத்தன. அலெக்சாண்டரும் திரும்ப வேண்டியதாயிற்று, அவர் மாசிடோனியாவுக்குத் திரும்பும் வழியில் தனது 32வது இள வயதில் பாபிலோன் என்னுமிடத்தில் இறந்தார்.

தான் வென்ற நாடுகளை மறுபடியும் அமைக்க அலெக்சாண்டருக்கு சிறிதளவு கூடநேரம் இல்லை. பெரும் அளவிலான வென்ற பகுதிகளை, யார் தனது அதிகாரத்திற்கு அடி பணிந்தார்களோ, அவர்களுக்கே திருப்பிக் கொடுத்து விட்டார். அவர் தனது எல்லைக்குட்பட்ட நிலப்பகுதி, கிழக்கு ஐரோப்பாவின் பகுதி மற்றும் மேற்கு ஆசியாவின் பெரும் பகுதிகளை மூன்று பகுதிகளாகப் பிரித்து, அவற்றை கிரேக்க ஆளுநர்களின் கீழ் கொண்டு வந்தார். செல்யூகஸ் நிகேடர், அவர் தன் எஜமானர் அலெக்சண்டர் இறந்த பின்பு, தானே அரசன் என்று அதிகார பூர்வமாக அறிவித்தவருக்கு பேரரசின் கிழக்குப் பகுதி கொடுக்கப்பட்டது.

மாசிடோனியர்களுக்கும் மற்றும் பழங்கால இந்தியர்களுக்கும் இருந்த தொடர்பு குறைவான காலமாக இருந்தாலும், அதனுடைய தாக்கம் மிகப் பெரியது. அலெக்சாண்டரின் படையெடுப்பு முதன் முதலாக ஐரோப்பியர்களுக்கு இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. கடல்வழிகளும் தரை வழிகளும் இந்தியாவிற்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் திறக்கப்பட்டன. நெருங்கிய வாணிகத் தொடர்பும் ஏற்படுத்தப்பட்டது. வணிகர்கள் மற்றும் கைவினைப் பொருள் செய்பவர்கள் இந்த வழியை வழக்கமாக தொடர்ந்தார்கள். அலெக்சாண்டர் தன்னுடைய நண்பன் 'நியர்கஸ்' சை கடற்கரை ஓரமாக உள்ள இந்துமுகத்து வாரத்திலிருந்து "யூப்ரடீஸ் வரையுள்ள துறைமுகங்களைக் கண்டுபிடிக்க இட ஆய்வுப் பயணத்தை மேற்கொள்ள கேட்டுக்கொண்டார். கிரேக்க எழுத்தாளர்கள், இந்த வட்டாரத்தின் விலை மதிப்பற்ற நில நூல் பற்றிய விவரங்களை நமக்கு விட்டுச் சென்றுள்ளனர்.

அலெக்சாண்டரின் படையெடுப்பு வடமேற்கு இந்தியாவின் வட்டாரத்திலுள்ள பழங்குடியினரை வென்றதால் இந்திய அரசியல் ஒற்றுமைக்கு வழி வகுத்தது. அலெக்சாண்டரின் திட்டமிட்ட போர் செயல்களால் சந்திரகுப்த மௌரியருக்கு இந்த வட்டாரத்தை கைப்பற்றும் வேலை மிக எளிதாக ஆனது என்று சொல்லப்படுகிறது. அலெக்சாண்டர் வெளியேறியவுடன், அவருடைய படைத்தலைவர்களில் ஒருவரான, 'செல்யூகஸ் நிகேடர்' என்பவரை தோற்கடித்து வடமேற்கு இந்தியா முழுவதும் ஆப்கானிஸ்தான் வரை சந்திரகுப்த மௌரியர் தனது அவரது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார்.

கிரேக்க கலையின் செல்வாக்கு இந்திய சிற்பக் கலையின் வளர்ச்சியில் காணப்படுகிறது. கிரேக்க மற்றும் இந்திய பாணியின் ஒன்று சேர்க்கை 'காந்தாரக் கலை' யாக உருவெடுத்தது. இந்தியர்கள் நன்கு வடிவமைக்கப்பட்ட அழகான உருவ முன் மாதிரிகளையும் தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களை உருவாக்கும் கலையையும் கிரேக்கரிடம் இருந்து கற்றார்கள். கிரேக்கர்கள் இந்திய ஜோதிடத்தின் மீது பற்றுதல் கொண்டிருந்தனர்.

பல தகவல்கள் வடக்கு மற்றும் வடமேற்கு இந்தியாவில் அந்த சமயத்தில் நிலவிய சமூக மற்றும் பொருளாதார சூழ்நிலை, ஆரியன், படைத்தளபதி 'நியார்க்ஸ்' மெகஸ்தானிஸ் ஆகியோர் விட்டுச் சென்ற கிரேக்க தகவல் தொகுப்பிலிருந்து தெரிய வருகிறது. அவர்கள் நமக்கு வளர்ச்சி நிலையிலுள்ள கைவினைத் தொழில் வெளி உலகத்துடன் கூடிய வாணிகம் மற்றும் நாட்டின் பொதுவான செல்வத்தைப் பற்றிக் கூறுகின்றன. இந்தியாவில் தச்சு வேலை ஒரு செழிப்பான வணிகம் என்று அதிகமாக சொல்லப்பட்டிருக்கிறது. அலெக்சாண்டர் இந்தியாவின் மேற்கு கடற்கரையோரமாக 'நியார்க்ஸ்' தலைமையில் அனுப்பிய கப்பல்கள் அனைத்தும் இந்தியாவில் தான் உருவாக்கப்பட்டன.

அலெக்சாண்டரின் சாதனைகள் மேற்கத்தியர்களுக்கு இந்திய மக்களின் வாழ்க்கையையும், எண்ணங்களையும் பற்றி அறிவதற்கு உதவின. இந்திய தத்துவத்தின் கருத்துகள், சமயம் போன்றவை அலெக்சாண்டரால் கண்டறியப்பட்ட கால்வாய் வழியாக ரோமப் பேரரசுக்குள் நுழைந்தன.

கிரேக்க எழுத்தாளர்கள் அலெக்சாண்டரின் போர்ச் செயல்பாடுகள் பற்றிய கால ஆவணங்களை விட்டுச் சென்றிருக்கிறார்கள். இது நமக்கு, பண்டைய இந்திய வரலாற்றில் நிகழ்ச்சிகளின் கால வரிசையை கையாளும் முறையில் உதவுகிறது. அலெக்சாண்டர் படையெடுத்த கி.மு. 326 ஆம் ஆண்டு நமக்கு வரலாற்று நிகழ்வுகளை தொடர்ச்சியாக அமைப்பதற்கு உறுதியான அடையாளத்தைத் தருகிறது.

## 3.7 அசோகப் பேரரசர் : இந்தியப் பண்பாடு அக்மே மாநாட்டில் பிரதிநிதியாகுதல்

அசோகர் இந்திய வரலாற்றில் ஒரு தனி இடத்தைப் பெறுகிறார். அவருடைய கொள்கைகளான உலக சமாதானம், அஹிம்சை மற்றும் சமய நல்லிணக்கத்திற்கு இணையாக உலகின் முடியாட்சிகளில் எதுவும் காணப்படவில்லை.

அசோகர்முடியரசு நாட்டில் கருத்தியல் மற்றும் தத்துவத்தை ஒன்று சேர்த்த வெற்றி மன்னராக விளங்கினார். மற்ற அரசர்களைப் போலவே அசோகரும் தன் ஆட்சிக்காலத்தை போருடன் தான் தொடங்கினார். அது தான் கலிங்கப் படையெடுப்பு. இருந்தாலும் இந்தப் போரில் மடிந்த மக்கள் சேதம் மற்றும் பொருட்சேதத்தின் அழிவு, இவரை வெகுவாக உலுக்கியது. இனிமேல் மறுபடியும் போர் செய்வதில்லை என்று சபதம் எடுத்துக் கொண்டார். இதற்கு பதிலாக "தர்மா விஜயா அதாவது 'அஹிம்சையினால்' வெல்லுவது. பதின்மூன்றாவது கல் ஆணையில் இறைப்பற்று மற்றும் நல் ஒழுக்கமே, உண்மையாக வெல்லுதல் என்று அறிவிக்கிறார்.

அசோகர் ஒரு உண்மையான மனிதாபிமானி. அவருடைய கொள்கைகள் தனது மக்களின் நலத்தை முன்னிட்டு தான் இருந்தன. இவருடைய 'தம்மா' சமூக பொறுப்புகளை அடிப்படையாகக் கொண்டது. பிராமணர்கள் மற்றும் வேலையாட்களுக்கு மரியாதை கொடுப்பதன் முக்கியத்துவம், பெரியவர்களுக்கு கீழ்படிதல், உயிரினங்களைக் கொல்லுவதிலிருந்து விடுபடுதல் இதைத்தவிர தம்மாவும் மக்களை சமய நல்லிணக்கத்துடன் வாழ கேட்டுக் கொள்கிறது. இது வெவ்வேறு கிளை சமயத்தின் நல்ல கருத்துகளை ஒன்று சேர்த்ததாகும். அசோகர் புத்தமதத்தை சார்ந்தவராக இருந்தாலும், அவர் தனது குடிமக்களை தனது சமயத்தை தழுவும் படி வற்புறுத்தவில்லை. அசோகர் ஒரு சமய சகிப்புத்தன்மை கொண்ட முடியாட்சி மன்னர் என நிரூபித்தார். பன்னிரண்டாவது, கல் ஆணையில் மற்ற சமயங்களைப் பெருமைப் படுத்தும் பொழுது நமது சொந்த மதமும் பெருமைக்கு உள்ளாகிறது என்று கூறுகிறார்.

அரசாக இருந்த பொழுதிலும் தனக்கென்று உயர்ந்த இலட்சியங்களை அமைத்துக் கொண்டார். அவர் தன்னை ஒரு தந்தையாகவும், குடிமக்களை தன் குழந்தைகளாகவும் கண்டார். அவர்தம் எண்ணங்கள், தத்துவங்களை கல் தூண்கள், பாறைகளின் மீதும் பொறித்து மக்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். இத்தகைய தூண்கள் மௌரிய கட்டிடக்கலை பொறியாளர் திறனுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும். அவர் காலத்தில் அவைகள் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய நினைவு சின்னங்களாகும்.

வீண் விரயமாகின்ற, அதிக செலவுடைய சடங்குகளை சுட்டிக்காட்டி தன் மக்களுக்கு கல்வி கற்றுக் கொடுக்க முயற்சி செய்தார். அவர் மக்களை 'அஹிம்சை' வழியை பின்பற்றக் கூறினார். இவர் அரச வேட்டை மற்றும் இன்ப சுற்றுலா செல்லும் பழக்கத்தை விட்டு விட்டு தம்மாவின் முன்னேற்றத்திற்காக தம்மயாத்ராவைத் தொடங்கினார். தனது பேரரசுக்கு பொதுவான தம்மா, பொதுவான மொழி மற்றும் புழக்கத்தில் ஒரே கையெழுத்து (பிரமி) களை அரசியல் ஒற்றுமைக்காக கொண்டு வந்தார். புத்த சமயகாலத்திலிருந்து இந்தியா ஒரு மத சார்பற்ற நாடாக விளங்குகிறது.

அவர் அவரே பௌத்தராக மாறினாலும் மற்றவர்களை மாறச் செய்ய வற்புறுத்தவில்லை. ஆனால் மத சகிப்புத்தன்மை கொள்கையைப் பின்பற்றினார். அவர், பௌத்தர் அல்லாதர் மற்றும் பௌத்த மதத்திற்கு எதிராக இருப்பவருக்காகவும் பரிசுப் பொருட்கள் மற்றும் மானியங்களை உண்டு பண்ணினார்.

அசோகரின் புகழ், உலகின் பல்வேறு வட்டாரங்களுக்கு சமாதான செய்தியைப் பரப்புவதற்காக அவர் எடுத்த நடவடிக்கைகளில் உள்ளது. தூதுவர்களை கிரேக்க நாடுகள் மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கும் அனுப்பினார். இந்தியப் பண்பாடு வெகு தூர நாடுகளுக்கு பரவியது. அசோகர், பௌத்த தூதுக் குழுவை இலங்கை மற்றும் மத்திய ஆசியா போன்ற வட்டாரங்களுக்கு அனுப்பினார் என்பது பௌத்த பரம்பரை கருத்தாகும். புத்த மதம் உலகின் பல்வேறு நாடுகளுக்குப் பரவினாலும் இது, இந்நாள் வரை இந்தியாவில் ஒரு முதன்மையானதாக இருக்கவில்லை, இருப்பினும் இலங்கை மற்றும் தூரக் கிழக்கு நாடுகளில் தொடர்ந்து பிரபல மாகிக் கொண்டு வருகிறது.

ஜாதி அடிப்படை முறை என்று சொல்லக் கூடிய வர்ணா முறை, வேத காலத்தில் தோன்றி, அப்பொழுது நன்கு வளர்ச்சி அடைந்து, ஆதிக்கம் செலுத்துகிற சமூக அமைப்பாக இந்தியா முழுவதிலும் உள்ளது. புதிய சமயங்கள் மற்றும் இலக்கியம் நகரங்களின் வளர்ச்சியுடன் கைவினைத் தொழில்கள், வாணிகம், பண்பாட்டு ஒற்றுமைச் செயலை நமது நாட்டில் துரிதப்படுத்தியது. மொத்த நாட்டையும், ஒரு பேரரசின் கீழ் ஒன்று படுத்தி போர் செய்வது என்ற அரசின் கொள்கையைத் துறந்தார். மற்றபடி தனது நன்றிக் கடனை கடும் முயற்சியுடன் வாழும் எல்லா உயிர்களுக்கும் கைமாறு செய்து நிறை வேற்றுவேன் என்று கூறுகிறார்.

## 3.8 கலையும் கட்டடக்கலையும் மௌரியரின் தொடக்கம்

கலைக்கும் கட்டடக்கலைக்கு, மௌரியர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். அசோகர் 84,000 ஸ்தூபிகளை, புத்தருடைய வாழ்க்கையின் பல்வேறு நிகழ்ச்சிகளின் நினைவுகளாய் கட்டினார் என்று தெரியப்படுகிறது. மெகஸ்தனிஸ் பாடலி புத்திராவின் கம்பீரம், பாரசீக நாட்டின் பொலிவுக்கு சமமாக உள்ளது என்று கூறுகிறார்.

அசோகரின் கொள்கைகள் கல்தூண்களில் அதுவும் ஒரே கல்லில் செய்து மெருகிடப்பட்ட மேலே முகப்புடன் கூடிய மணல் கல்தூணில் பொறிக்கப்பட்டு உள்ளது. அசோகரின் பாதுகாக்கப்பட்ட எல்லா கொள்கையிலும் மிகச் சிறந்தது, பீஹார் மாநிலத்தில் "லாரியா நந்தகார் என்னுமிடத்தில் உள்ளது. 32 அடி உயரம் கொண்ட இந்த தூணின் மேல்பகுதியில் ஏறக்குறைய ஐம்பது டன் எடை கொண்ட சிங்கத்தின் உருவம் அமைக்கப்பட்டுள்ளது,

பொறியியலின் வியத்தகு சாதனை ரசிப்பதற்கு தகுதி உடையது. மௌரியர்களின் சிற்பக்கலைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டு, ராமபுராவிலுள்ள காளையின் உருவமாகும். சார நாத் என்னுமிடத்தில் புகழ் பெற்ற தூண், இவை நான்கு சிங்கங்கள் மற்றும் தா்ம சக்கரத்தைக் காண்பிக்கின்றன. இதைக் குடியரசு இந்தியாவின் தேசிய சின்னமாகக்கியிருப்பதால் எல்லாருக்கும் தெரிந்திருக்கும்.

தூண்களைத் தவிர சில பெண்ணின் மெய்யுருவங்களையும் அறியச் செய்கிறது. இவற்றில் மிகவும் பரிச்சயமானது, 'திடார் கஞ்ச்' என்ற இடத்திலுள்ள 'யக்ஷி' என்பது. இந்த உருவங்களின் அழகு, நுட்பமான கைவினையாற்றல் மற்றும் ஒரே கல்லில் செய்யப்பட்டவையாகத் தோன்றுவதாக உள்ளது. தூண்களைப் போலவே இந்த உருவங்களின் இணையற்ற மேல் பரப்பு மெருகேற்றப்பட்டுள்ளது (இப்பொழுது மௌரியன் பாலிஷ் என்று அழைக்கப்படுகிறது), இத்தனை நூற்றாண்டுகளாக இருந்த போதிலும் இந்த வெளிப்புற பளபளப்பு இன்னும் இழக்காமல் இருக்கிறது. மேலும் எல்லா கல்வெட்டுகளிலும் மொழி பயன்படுத்தப்பட்டுள்ளது மற்றும் 'பிராகிருதம்' நாட்டின் பொது மொழியாக தோன்றுகிறது, மேலும், 'பிரம்மி' எழுத்து என்பது முந்தைய கால இந்திய எழுத்து வடிவங்களாகும்.

மௌரிய சிற்பக்கலைக்கு மற்றுமொரு வியப்பூட்டக்கூடிய தோற்றம் பாறையைக் குடைந்து எழுப்பப்பட்ட குகைகள். 'லோமாஹ் ரிஷி' (மெச்சத்தக்க நுழைவுடன் கூடிய) மற்றும் சுதாமா குகைகள், இந்த சிற்பக் கலைக்கு எடுத்துக் காட்டுகளாகும். கடினமான பாறையிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட இந்த குகைகள், அசோகரால் பௌத்தரல்லாத துறவிகளுக்கு கொடுக்கப் பட்டது. பிற்காலத்திய ஆட்சியாளா்களாலும் ஆதரிக்கப்பட்ட இத்தகைய குகைகள், பாறை யைக் குடையும் சிற்பக்கலையின் தொடக்கத்தைக்காட்டும் அடையாளக் குறியாக இருந்தது. அவரது கொள்கைகள், உள்ளூர் மொழி மற்றும் உள்ளூர் எழுத்துகளில் செதுக்கப்பட்டன.

## 3.9 பிற்கால மௌரிய பண்பாட்டின் வளர்ச்சிகள்

கிரேக்கர்கள், சாகர்கள், பார்த்தியர்கள் குஷாணர்கள் ஆகியோர் அந்நிய நாட்டவராக இருந்தாலும், முழு ஈடுபாட்டுடன் உள்ளூர் மக்களுடன் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள். அவர்கள் படை வீரர்களாக இருந்தாலும் சட்டத்தை வழங்குபவர்கள். அவர்களுக்கு 'சத்ரியர்கள்' என்ற தகுதியை வழங்கினர். பெரும் அளவிலான அயல்நாட்டவர்கள், இந்திய சமுதாயத்துடன் ஒருங்கிணைவது மௌரியருக்குப் பிந்திய காலத்தில் தான் என்பது குறிப்பிடத்தக்கது. ஏறத்தாழ கி.மு. 200 லிருந்து கி.பி. 3 ஆவது நூற்றாண்டு வரை பொருளாதார, அரசியல் வாழ்வில் அழுத்தமான மாறுதல்கள் ஏற்பட்டன மற்றும் நமது நாட்டின் பண்பாட்டு வாழ்வில் வெவ்வேறு தோற்றங்கள், சமயம், கலை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் இன்றியமையாத வளர்ச்சியால் ஆழ்ந்த மாறுதல்கள் ஏற்பட்டன. பல்வேறு கைவினைத் தொழில்களின் வளர்ச்சி மட்டுமில்லாமல், வெளி வாணிகத்தில் தரைவழி மற்றும் கடல்வழி இரண்டிலும் நல்ல முன்னேற்றம் இருந்தது.

பல வெளிநாட்டு ஆட்சியாளர்கள் வைணவத்தை தழுவினார்கள். 'ஹெலியோடோரஸ்' (இந்தோ - கிரேக்க அரசன் ஆண்டியால் கிடாஸின் கிரேக்க தூதுவா்) தன்னைத்தானே, 'பகவதா' அதாவது, விஷ்ணுவை வணங்குபவர் என்று 'பெஸ்நகர் தூண்கல்வெட்டு' வா்ணிக்கிறது. இதே போல, கனிஷ்காவின் சில நாணயங்களிலும், சிவனின் உருவம் அதன் மேல் காணப்படுகின்றது. குஷாண அரசா்களில் வாசுதேவா் என்று அழைக்கப்பட்ட ஒருவா் அவரது வைஷ்ணவ சமயத்தின் நம்பிக்கையை தெளிவாக சுட்டிக் காட்டினார் என்பதை நீங்கள் நினைவு கூறுவீர்கள். கனிஷ்கா ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட கி.பி.78 ஆம் ஆண்டில் முக்கியமாக இணைக்கப்படுவது எது என்று தெரியுமா, இது 'சாகா' காலப்பகுதியின் தொடக்கத்தைக் காட்டுகிறது.

இந்தியர்கள் அயல் இனக்குழுவினர்க்குள் ஒருவரோடு ஒருவரின் தொடர்பால் அவர்களின் விருப்பத்திற்கேற்ப இந்திய சமயங்களை தேர்ந்தெடுத்தலில் முக்கிய பங்கு எடுத்தார்கள். இது ஜாதி அமைப்பில் சேருவதில் எந்த வித பிரச்சினைகளும் எற்படுத்தவில்லை. ஆதலால் சில வெளிநாட்டு ஆட்சியாளர்களும் பௌத்த சமயத்திற்கு மாறினார்கள். மீனாண்டர் பௌத்த மதத்திற்கு மாறினார். கனிஷ்காவையும் இந்த சமயத்திற்கு அவர் ஆற்றிய பணிகளுக்காக நினைவு கூறப்படுகிறார். ஆயினும் புத்தமதத்தின் புகழ் வளர்ந்து கொண்டேபோயிற்று. சமயத்தில் பெரும் அளவில் மாற்றத்தைக் கொண்டு வந்தது. புத்த மதத்தின் மூல படிவங்கள், அயல் நாட்டவருக்கு எளிதில் புரிந்து கொள்ள முடியாததாக இருந்தது. ஆகையால் அவர்கள் எளிமையான அமைப்புக்கு ஆதரவு கொடுத்ததால் அவை, அவர்களின் சமய ஏக்கங்களை திருப்தி செய்தன. அதே சமயம், புத்த மதம் இரண்டு மரபுக்குழுவாகப் பிரிந்தது. மஹாயானம் அல்லது பெரிய சக்கரம் மற்றும் ஹீனயானம் அல்லது சிறிய சக்கரம். முந்தியது உருவ வழிபாடு, சடங்குகள் மற்றும் போதி சத்வர்களை (புத்தரின் அவதாரங்கள்) நம்பியது, அதே சமயம் பின் குறிப்பிடப்பட்டது, முந்தைய கால புத்தமதத்தை தொடர்ந்து நடைமுறைப் படுத்தியது.

மஹாயாணம், கனிஷ்கர் காலத்திலிருந்து அரசு ஆதரவைப் பெற்றது. அவர் நான்காவது புத்த சபையை அதன் கொள்கைகளை முடிவு செய்வதற்காக கூட்டினார். பல கல்தூண்களையும், புத்தரின் நினைவாக நிறுவினார்.

## கலையும் சிற்பக்கலையும்

மத்திய ஆசியாவின் படையெடுப்புகள் இந்தியக் கலையையும் சிற்பக்கலையையும் மேலும் வளர்ச்சியடையச் செய்தன. மேற்கத்திய உலகின் நெருக்கமான தொடர்பு, இந்தியக் கலையில் பல புதிய அம்சங்களை அறிமுகப்படுத்தின. மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த முன்னேற்றம் என்னவென்றால் காந்தார தனிமுறை மரபுக்குழுவின் வளர்ச்சியாகும். இந்த தனி மரபுக்குழு கிரேக்க மற்றும் ரோமர்களின் கலை வடிவத்திலிருந்து இரவல் வாங்கப்பட்டவையாகும். குஷாணர் காலத்தில் புத்தரின் பல உருவங்கள், அப்போலோனியர்களின் முகமும், அவர்களுடைய தலைமுடி கிரேக்க - ரோமர் பாணியிலும் மற்றும் அவர்களின் விற்பனைக்கான துணிமணிகள், கிரேக்க ஆண்கள் அணியும் தளர்த்தியான மேலுடைபோன்று அமைக்கப்பட்டிருந்தது. வெவ்வேறு நாட்டிலிருந்து பயிற்சி பெற்ற வெவ்வேறு தனிமுறை மரபுக்குழுவவைச் சார்ந்த கலைஞர்கள் குஷாணர் காலத்தில் ஒன்று கூடியதால் அனேகமாக எல்லா கலைத்திறன்களின் அம்சங்களும் ஒருங்கிணைந்தன.

தாயக மரபுக்குழுவின் மையமாக விளங்கிய மதுராவும், படையெடுப்பினால் செல்வாக்கு பெற்றது. சுடப்பட்ட ஆனால் மெருகூட்டப்படாத செம்பழுப்பு நிற களிமண்ணால் செய்யப்பட்ட ஏராளமான உருவங்கள் சாகர்கள் மற்றும் குஷாணர்களின் செல்வாக்கில் தொடர்ந்து நீடித்தன. மதுரா தனிமுறை மரபுக்குழு, முதன் முதலாக புத்தரின் முகம் மற்றும் உருவங்களை உருவாக்கியது, அதே சமயம் முந்தைய பௌத்தர்கள் புத்தரைச் சித்தரிக்க குறியீடுகளை பயன்படுத்தினார்கள். ஜடகாக்கள் என்று அழைக்கப்படுகின்ற நாடோடிக் கதைகள், நீள, தட்டையான பாறைகளில் வரையப்பட்டன. புத்தரின் உருவங்கள் ஏராளமாக செய்யப்பட்டன. இது தவிர மகாவீரரின் உருவச் சிலைகளும் உருவாக்கப்பட்டன.

## தக்காணமும் தென் இந்தியாவும்

தக்காணத்தில் மௌரியர்களின் கீழ் சாதவாகனர்கள் முக்கியமான அந்தஸ்தை கொண்டிருந்தனர். அசோகரின் இறப்பிற்குப்பின் அவர்கள் முழு சுதந்திரத்தையும் பெற்றார்கள். அவர்கள் மிகவும் அதிகாரம் பெற்றவர்களாக மாறினார்கள் மற்றும் கோதாவரி நதியின் மீது

அவர்களுடைய தலைநகரமான ‘பைதான்’ அல்லது பிரதிஸ்தானை உருவாக்கினார்கள். சாதவாகனர்கள் அயல்நாட்டு சத்ரப்பாகளுடன் குறிப்பாக சாகர்களுடன் முரண்பாடு கொண்டனர். கௌதமபுத்திரர் மற்றும் அவருடைய மகன் வசிஸ்திபுத்திரா சத்கானி தலைமையின் கீழ் சாதவாகனர்கள் மிகுந்த அதிகாரம் உள்ளவர்களாக ஆனார்கள். அவர்கள் நாட்டை சுத்தப்படுத்தினார்கள் சாலைகள் அமைத்து அரசை நல்ல விதமாக நிர்வகித்தார்கள். புதிய நகரங்கள் தோன்றின. பாரசீகம், ஈராக் மற்றும் கம்போடியா போன்ற வெகுதூர நாடுகளுடன் வாணிகம் நடந்தது.

### கலிங்கத்தின் காரவேலர்கள்

மௌரியர்களுக்குப் பின் மற்றமொரு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அரசு தோன்றியதென்றால் அது கலிங்க அரசுதான். கலிங்கம் நவீன ஒரிசா மற்றும் வட ஆந்திரப் பகுதிகளை உள்ளடக்கியது. காரவேலா என்பவர் இதன் முக்கியமான அரசர். உதயகிரி மலையில் சமணகுகை என்னுமிடத்தில் உள்ள ஹதிகும்பா கல்வெட்டுகள் அவருடைய ஆட்சியைப் பற்றி நமக்கு விளக்கமான குறிப்புகளை கொடுக்கின்றன. ஆனால் துரதிஷ்டவசமாக விளங்காத எழுத்தின் பொருளைக் கண்டு பிடிப்பது கடினமாக இருந்தது. அவர் ஒரு சிறந்த நிர்வாகி மற்றும் துணிச்சலான போர் வீரர் என நிச்சயமாக அறியப்படுகிறது. அவர் சாலைகள் அமைத்தல் மற்றும் தோட்டம் பராமரித்தல் ஆகிய வேலைகளைச் சமயப்பற்று மற்றும் பொது நலப் பயன்பாட்டிற்காகச் செய்தார்.

### தென்னிந்தியா

கிருஷ்ணா மற்றும் துங்கபத்திரா ஆறுகளுக்கு தெற்குப் புறமாக அமைந்துள்ள பகுதிகள் தென்னிந்தியா என அழைக்கப்படுகிறது. இது சோழ, சேர, பாண்டியர் ஒருவரோடு ஒருவர் அடிக்கடி போரிட்டுக் கொண்டவர்களின் பகுதிகளாகும்.

### மூலங்கள்

சங்க இலக்கியங்கள், அரசுகள் மற்றும் மக்களின் வாழ்க்கைப் பற்றிய தகவல்களைக் கூறும் முக்கியமான மூலங்களாகும். இதனால் தான் கி.மு. முதலாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதி வரை, தென்னிந்தியா வரலாற்றின் ‘சங்ககாலம்’ என அழைக்கப்படுகிறது.

### சோழர்கள்

கரிகாலன் இந்த அரசின் முக்கியமான ஆட்சியாளர். அவர் சேரர் மற்றும் பாண்டியரின் ஒன்று சேர்ந்த படைகளைத் தோற்கடித்தார். இலங்கைப் படையெடுப்பை முறியடித்து வெற்றி கண்டார். பல நல்ல செயல்கள் கரிகாலனைப் புகழத்தக்கவனாக ஆக்கியது. காவிரி ஆற்றிலிருந்து நீரை நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்துவதற்காக நிறைய கால்வாய்களை வெட்டினார். கரிகாலன் இலக்கியம் மற்றும் கலையை ஆதரித்தார். இவர் வேத சமயத்தைப் பின்பற்றுவராக இருந்தார்.

### பாண்டியர்கள்

ஒரு பெண் அரசியால் பாண்டியப் பேரரசு தோன்றுவிக்கப்பட்டது. அவள் ஒரு பெரிய படையை நிர்வகித்தார். அவள் கலை மற்றும் இலக்கியத்தை ஆதரித்து வாணிகத்தையும் ஊக்கப்படுத்தினாள்.





## வாழ்க்கை மற்றும் பண்பாடு

இந்தக் காலத்தில் வாழ்ந்த மக்கள் எளிமையாக வாழ்ந்தார்கள். அவர்கள் பாட்டு, நடனம் மற்றும் கவிதைகளில் அதிக விருப்பமுள்ளவர்களாக இருந்தார்கள். முரசு, புல்லாங்குழல், மிடற்றிசைக் கருவி போன்ற இசைக் கருவிகள் பிரபலமடைந்தன.

பெரும்பான்மையான விவசாய மக்கள் பள்ளத்தாக்குகளில் வாழ்ந்தார்கள். மற்றவர்கள் கால்நடைகளை மேயப்பவர்கள். கைவினைஞர்கள் மற்றும் கைத்திறன் வேலை செய்பவர்களில் பெரும் பகுதியினர் நகரத்தில் வாழ்ந்தனர். வியாபாரிகள் முக்கியமாக கடற்கரை ஓரமாக இருப்பவர்கள் கடல் வழியாக வாணிகத்தை நடத்தினார்கள்.

## சமுதாயம்

கிரேக்கர்கள், குஷாணர்கள், சாகர்கள் மற்றும் பார்த்தியன்கள், யவணர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் இந்தியப் பெயர்களை ஏற்றுக்கொண்டு அவர்களுக்குள் திருமணம் செய்து விரைவிலேயே இந்திய சமுதாயத்துடன் இணைந்து கொண்டார்கள் . அவர்களுடைய நாணயங்கள் கூட இந்தியக் கடவுள்களான விஷ்ணு, கணேசன் மற்றும் மஹிசாவின் உருவங்களுடன் காணப்பட்டன.

## ஹர்சவர்த்தரின் காலம்

ஹர்சவர்தன அரசன் சிற்றரசுகளின் ஆட்சியாளர்களைத் தோல்வியுறச் செய்து, அவர்களை தனது அதிகார ஆட்சியின் கீழ் கொண்டு வர முடிவு செய்தான். இதற்காக தனது வாழ்க்கையின் ஆறு ஆண்டு அர்ப்பணித்தான். சீனப்பயணியான ஷியான் சங் மற்றும் அவருடைய அவைப் புலவர் பானா பட்டரும், ஹர்சரின் ஆட்சியைப் பற்றி விளக்கமாகக் குறிப்புகள் கொடுத்துள்ளனர். ஷியான் சங்கின் கூற்றுப்படி ஹர்சவர்தன அரசன் திறமையான அரசாங்கத்தைக் கொண்டிருந்தான் என்று கூறுகிறார். மேலும் குடும்பங்களைப் பதிவு செய்யப்படவில்லை என்றும் கட்டாயப்படுத்தப்பட்ட தொழிலாளர்களும் இல்லை என்றும் கூறுகிறார்.

## ஹர்சரின் சமய நடவடிக்கைகள்

ஹர்சர் பல மருத்துவமனைகள் மற்றும் ஓய்வு எடுக்கும் இல்லங்களைக் கட்டினார் என்று உங்களுக்கு தெரியுமா? அவர் பல சமயங்களுக்கு குறிப்பாக, பௌத்த மதம் மற்றும், பிராமண மதத்திற்கு மானியங்கள் கொடுத்தார். தனது வாழ்க்கையின் பிற்பகுதியில் ஹர்சர் பௌத்த மதத்தின் மீது மிகுந்த நாட்டம் கொண்டவரானர்.

நாகானந்தா, ரத்னாவனி மற்றும் பிரியதர்சிகா போன்ற முக்கியமான நாடகங்கள் ஹர்சாவின் இலக்கிய செயல்களுக்கு உதாரணங்களாகும். ஹர்சர் கற்றறிந்த அறிஞர்களை ஒன்று சேர்த்து அவர்களுடன் சூழ்ந்திருந்தார் என ஷியான் சங் மற்றும் பானபட்டாவின் தகவல் ஒரு சான்றாக உள்ளது. பாணர், ஹர்சரிதா, என்ற ஹர்சாவின் வாழ்க்கை வரலாறு மற்றும் ‘காதம் பரி’ என்ற இலக்கியப் படைப்பபையும் எழுதினார்.

## தெற்கு மற்றும் தக்காண அரசுகள்

தக்காணத்தை சாதவாகனர்கள் பல காலமாக தங்களின் அதிகாரத்திற்குள் வைத்திருந்தார்கள் என்பது பற்றி படித்திருப்பீர்கள். அவர்களுடைய வீழ்ச்சிக்குப் பின்பு, பல சிற்றரசுகள் தக்காணத்தில் தோன்றின. அவர்களில், பலமான அரசை ஏற்படுத்த முயற்சி செய்தவர்கள் வடகர்கள். ஆனால் அவர்களால் முடியவில்லை.

வடகர்களுக்குப் பிறகு, வாதாபி மற்றும் கல்யாணிலிருந்து சாளுக்கியர்கள் வந்தார்கள்.

'புலிகேசி' என்பவர் சாளுக்கிய வம்சத்தின் திறமைமிக்க ஆட்சியாளர். சாளுக்கியர்கள் வடக்கே இராட்டிரகூடர்களுடனும் தெற்கே பல்லவர்களுடனும் போர் செய்து கொண்டிருந்தார்கள். இராட்டிரகூடர்கள் அவர்களை கி.பி. 753 இல் தோற்கடித்த பின்பு, சாளுக்கிய ஆட்சி முடிவுக்கு வந்தது.

வாதாபி மிகவும் வளமான தலைநகரமாகும். அங்கு மேற்கே அரேபியா, ஈரான் மற்றும் செங்கடல் துறைமுகங்கள் மற்றும் தென்கிழக்கு ஆசியாவுடனும் வாணிக உறவு கொண்டிருந்தது. இரண்டாம் புலிகேசி, பாரசீக மன்னரான 'குஸ்ரோ' விற்கு ஒரு தூது வரை அனுப்பி வைத்தான். சாளுக்கியர்கள் கலை மற்றும் சமயத்தை ஆதரித்தனர். தக்காண குன்றுகளில் கோவில்கள் மற்றும் புனிதமான குகை சின்னங்களைக் கட்டினார்கள். சாளுக்கியர்கள் மற்றும் இராட்டிரகூடர்களின் ஆதரவில் எல்லோரா குகை சிற்பக் கலைகள் உருவாக்கப்பட்டன.

### இப்பகுதிக்கான கேள்விகள் 3.2

கீழ்கண்ட வினாக்களுக்கு விடை தருக.

1. கி.மு. நான்காம் நூற்றாண்டில் வடக்கு வடமேற்கு இந்தியாவின் சமூக பொருளாதார நிலையினை எந்தெந்த மூலங்கள் தெரியப்படுகின்றன?
2. அசோக மன்னரின் கூற்றுப்படி 'தர்மா விஜயா' என்பது என்ன?
3. அசோகர் தனது பன்னிரண்டாவது பாறை பட்டயத்தில் கூறும் கருத்துகளை கூறுக?
4. அசோகரின் பட்டயத்தை நீங்கள் எங்கு காணலாம்?
5. இந்தியாவின் தேசிய சின்னம் எதிலிருந்து எடுக்கப்பட்டது?
6. கிரேக்க மற்றும் ரோமர்களின் கலைப்படிவத்திலிருந்து என்னென்ன சிறப்பம்சங்கள் காந்தாரக் கலையால் எடுக்கப்பட்டது?
7. மதுரா மரபுக் குழுவின் தனித்தன்மையைப் பற்றி விவரி?

## 3.10 குப்தர் காலத்தில் பண்பாட்டின் முன்னேற்றம்

பண்டைய இந்திய வரலாற்றின் இறுதிநிலை முந்தைய நான்காம் நூற்றாண்டில் தொடங்கி கி.பி. எட்டாம் நூற்றாண்டில் முடிவடைந்தது. அரசியல் ஒற்றுமை மற்றும் வலிமையான அதிகாரமிக்க அரசு குப்தர்களால் ஏற்படுத்தப்பட்டதால், பண்பாடு செயல்பாடுகள் பல வகைகளில் அதிகரித்தன. கிரேக்கப் படையெடுப்பைத் தொடர்ந்து. இந்தியாவின் பல்வேறு கலைப் படிவங்களின் மீது கிரேக்க - ரோமனியப் பங்கின் செல்வாக்கு அதிகமாயிற்று. இந்தக்கலை புத்தமத எண்ணங்களை முக்கியமாக சித்தரிக்கிறது. ஆனால் குப்தர் காலத்தில் கலை மிகவும் படைப்பாற்றலுக்கு உட்பட்டது. இந்து ஆண் கடவுளர் மற்றும் பெண் கடவுளர்கள் விளக்கமாக வர்ணிக்கப்பட்டார்கள்.

குப்தர் காலத்தில் கலை வேலைப்பாட்டு சாதனைகள் மென்மையான வேலைத்திறனில் காட்சி படுத்தப்பட்டு உள்ளன. மேலும் வெவ்வேறு வடிவமைப்பு முறைகளில் குப்தர் காலத்து வெவ்வேறு நாணயங்களில் காட்டப்பட்டுள்ளது. நாணயத்தின் ஒரு புறம் அரசனின் ஓவியம் மற்றுமொரு பகுதியில் பெண் கடவுள் இருப்பதை காட்சி படுத்துதல் தான் பொதுவான திட்டமாக இருந்தது. புலி அல்லது சிங்கத்தை சுடுவது போலவும், கட்டிலில் அமர்ந்து வீணை வாசிப்பது போலவும் அரசனை பல நிலைகளில் காட்டியுள்ளனர். சில நாணயங்களில் ஒரு புறம்

செல்வத்தின் கடவுள் லட்சுமியும் மறுபுறம் கலை கடவுளான சரஸ்வதியும் பொறிக்கப் பட்டிருந்தது.

நாணயங்களைத் தவிர நினைவுச் சின்னங்கள் மற்றும் சிற்பக்கலை மூலமாக குப்தர்களின் கலைத்திறன் போதிய அளவிற்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இக்காலத்தில் திறமையான கலைஞர்கள் கருத்துகள் மற்றும் இந்தியாவின் பரம்பரைத் தத்துவங்களின் வெவ்வேறு கலை வடிவங்களை தங்களுடைய திறமையால் வெளிப்படுத்தி உள்ளனர். அவர்கள் கடவுளின் உருவச் சிலையால் சமய இடங்களின் மூலை முடுக்கெல்லாம் அழகு படுத்தினர். கடவுளைப் பற்றிய மனக்கருத்து சின்னங்களோடு சார்ந்த உருவமாக கருதப்பட்டது. ஆகவே அவர்கள் மனிதர்களாக சித்தரிக்கப்பட்டிருந்தாலும் நான்கு அல்லது எட்டு கைகளை உடையவராக ஒவ்வொன்றும் ஒரு சின்னம் அல்லது ஆயுதத்தை தாங்கிய கடவுளாக காட்டப்பட்டுள்ளது. கற்கள், செம்பழுப்பு நிறக்களிமண் மற்றும் இதர மூலப்பொருட்கள் மூலம் கடவுள் உருவங்கள் கட்டுவதற்காக பயன்படுத்தப்பட்டது.

குப்தர்களின் கலைக்கு எடுத்துக்காட்டுகளை 'தியோ காரில்' உள்ள 'தசாவதாரா கோயில்', உதயகிரி மலையில் உள்ள குகை கோயில்களிலும் காணலாம். இருந்தாலும் இன்று வரை நிலைத்துள்ள சார நாத்திலுள்ள புத்தரின் பல உருவங்கள் தான் குப்தர்களின் கலைக்கு மிகவும் புகழ் பெற்ற உதாரணங்களாகும்.

சாரனாத்திலுள்ள தன் மரபுக்கலை செழிப்புடன் வளர்ந்து. மென்மையான புத்தரின் உருவத்தை நமக்குக் கொடுத்துள்ளது. கல்வேலைப்பாட்டைத்தவிர குப்த கைவினைஞர்கள் பித்தளை வேலைப்பாட்டிலும் திறன் பெற்றவர்களாக இருந்தனர். சுல்தான்கன்ஜா (பீகாரில் பகல்பூரின் அருகில்) என்ற இடத்தில் இரண்டு மீட்டர் உயரத்தில் வெண்கலத்தால் செய்யப்பட்ட புத்தரின் உருவம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. சிற்பக்கலைகளுக்கு எடுத்துக்காட்டாக, 'எல்லோரா குகை' சிற்பக்கலை அடையளாமாக திகழ்கிறது.

## கட்டிடக்கலை

குப்தர்களின் கட்டக்கலை பாறையைக் குடைந்து கட்டப்பட்ட குகைகள் (அஜந்தா) மற்றும் கோவில்களிலும் தியோகாரிலுள்ள 'தசாவதாரம்' கோவில்களின் புனிதமான பேழைகளிலும் இன்னும் தொடர்ந்து காணப்படுகிறது. இந்த வடிவங்கள் கல் மற்றும் செங்கல்லால் செய்யப்பட்டவை. காளிதாசர் தனது நூலில் குப்தர்களின் கட்டடக்கலையை பற்றிய சில தகவல்கள் கொடுக்கிறார். திட்டமிட்டு கட்டப்பட்ட நகரம் தொடர்ச்சியான சாலைகள், வணிகச் செயல்பாட்டு களங்கள். அகலமான படிகளைக் கொண்ட வானத்தை தொடக்கூடிய அரண்மனைகள் ஆகிய வலைத் தொகுதி அமைப்புகளைப்பற்றி கவிஞர் விளக்கப் படமாக கொடுத்திருக்கிறார். அரண்மனைகள் பல அறைகளைக் கொண்டிருந்தன. அவை சுவர்களால் சூழப்பட்ட கட்டிடங்கள், நீதி வழங்கும் அறைகள், சிறைச் சாலைகள் மற்றும் 'சபகிரிஹா' ஆகியவற்றைக் கொண்டிருந்தன. அவர்களின் திறந்த வெளித் தாழ்வாரங்கள் இரவில் நிலவின் ஒளிக்கற்றையால் பிரகாசப் படுத்தப்படுகிறது. அந்தந்த பருவக் காலத்தில் பூக்கக் கூடிய மலர்கள் மற்றும் மரங்களைக் கொண்டு மனத்திற்கு மகிழ்வூட்டக் கூடிய தோட்டங்கள் அரண்மனையை ஒட்டி அமைந்திருந்தன.

## ஓவியக்கலை

குப்தர்களின் காலத்தில் ஓவியக்கலை அதிக பட்சமாக முழு நிறைவு பெற்றது. அஜந்தா குகையின் (அவுரங்காபாத்) சுவர் ஓவியங்கள் மற்றும் பாக்குகை (குவாலியருக்கு அருகில்) ஓவியங்களும் இதற்கு சான்றுகளாக விளங்குகின்றன. அஜந்தா ஓவியங்கள் முதலாம்



நூற்றாண்டிலிருந்து ஏழாம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலமாக இருந்தாலும் பெரும்பான்மையான ஓவியங்கள் குப்தருடைய காலத்தில் தான் வரையப்பட்டன. இத்தகைய ஓவியங்கள் புத்தருடைய வாழ்க்கையின் பல்வேறு காட்சிகளை சித்தரிக்கின்றன. மனிதர், விலங்குகள் மற்றும் தாவரங்களின் உருவங்கள் உணர்ச்சி பூர்வமாக வரையப்பட்டன. அழகுத் தன்மையை கருத்தாகக் கொண்டது தான் குப்தர்களின் கலை இயல்புகளாகும். கருத்துகளை கலையின் மூலம் வெளியீடுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஏனென்றால் ஆன்மிக மகிழ்வுக்கு இது வழிமுறையாகக் கருதப்பட்டது.

## 3.11 பல்லவர்களும் சோழர்களும்

தென்னிந்தியாவில் இரு பல்லவ மற்றும் சோழ வம்சங்களின் கலை, கட்டடக்கலை, நிர்வாகம் மற்றும் படையெடுப்புகளின் பங்களிப்புப் பற்றி சுட்டிக்காட்டாமல், எந்த இந்திய வரலாறும் முழுமையடையாது. கிருஸ்துவ சகாப்தத்தின் முந்தைய நூற்றாண்டுகளில் இருந்தே சில வம்சங்கள் முற்றிலும் தென்னிந்தியாவில் தோன்றின. இவர்களில் பல்லவர்கள், கலை மற்றும் கட்டடக்கலையின் ஆதரவாளர்கள் மகாபலிபுரத்திலுள்ள ‘ரதம்’ பாணியில் அவர்களால் கட்டப்பட்ட குடைவரை கோவில்கள் ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். பல்லவர்கள் கைலாச நாதர் மற்றும் வைகுந்த பெருமாள் போன்ற சீரான அமைப்பு கொண்ட கோவில்களைக் காஞ்சிபுரத்தில் கட்டினார்கள். ஆயிரக்கணக்கான உருவங்களைக் கொண்ட பிரமாண்டமான கட்டமைப்பு கொண்ட கைலாச நாதர் கோவில், ஒரே கல்லில் செதுக்கப்பட்ட நேர்த்தியான கலை படைப்பு என்று சொல்லப் படுகிறது. பல்லவர் காலத்தை சார்ந்த சில புடைப்புச் செதுக்கு ஓவியங்கள் மகாபலிபுரத்தில் கண்டெடுக்கப்பட்டன. பல அடுக்குகள் கொண்டு கோபுர அமைப்பில் உள்ள வழி பாட்டுத்தலங்கள், மகாபலிபுரத்தில் முதல் நூற்றாண்டுக்கு முன்பே கட்டப்பட்டன.



சென்னை அருகிலுள்ள மகாபலிபுரம்

இந்தியாவில் கோவில் கட்டும் பணிகள் கி.பி. 5ஆம் நூற்றாண்டிலிருந்தே வளர்ச்சி அடைந்துள்ளன. தென்னிந்தியாவில் விமானம் அல்லது ஹிகாரா உயர்ந்த சுவர்கள் மற்றும் கோபுரமுகட்டுடன் கூடிய நுழைவாயில்களுடன் திராவிட பாணியில் கட்டப்பட்டன. அதே சமயம் வடஇந்தியாவில் நாகரா பாணியில் (சுருள் கூரைகள்) கர்பகிரகம் (புனிதமான இடம்) மற்றும் மண்டபங்கள் (தூண்களைக் கொண்ட அரங்கு) கொண்ட கோவில்கள் நாகரா பாணியில் கட்டப்பட்டன. பல்லவர்களுக்குப் பின்பு (கி.பி. 6 முதல் 8 ஆம் நூற்றாண்டு வரை) தென்னிந்தியாவில் பரம்பரை பரம்பரையாக கோவில் கட்டும் பணிகள் (கி.பி. 10 லிருந்து 12 ஆம் நூற்றாண்டு வரை) சோழ மன்னர்களால் வளர்ச்சியடைந்தன.



சூரியனார் கோயில், கோனார்க்கு, ஒடிசா

கிராமங்களில் கோவில் தான் முதன்மையான இடமாக இருந்தது. இது கிராம மக்கள் தினமும் அவர்களுடைய கருத்துகளை பரிமாற கலந்து உரையாட கூடும் இடமாக இருந்தது. இது ஒரு பள்ளியாகவும் திகழ்ந்தது. பண்டிகை காலங்களில் நடனம் மற்றும் நாடகங்கள் கோவிலின் முற்றத்தில் நடைபெற்றன.

கடல் கடந்த படையெடுப்பு மற்றும் கிராமங்களில் ஜனநாயக ஆட்சி முறையின் வளர்ச்சி ஆகியவையும் சோழர்களின் சாதனைகளில் அடங்கும். 'சபா' அல்லது 'ஊர்' என்று அழைக்கப்பட்ட கிராம சபை நிர்வாகப் பொறுப்புகள் முழுவதையும் பெற்றிருந்தது. நீதி துறையும் இதனுடைய கட்டுப்பாட்டில் இருந்தது. பல்வேறு குழுக்களைக் கொண்ட இந்த சபை, கிராம நிர்வாகத்தில் பல வகைப்பட்ட சிக்கல்கள் மற்றும் சூழ்நிலைகளைக் கவனித்துக் கொண்டது. கிராம சபையின் நிர்வாகத்தைப் பற்றிய விளக்கமான குறிப்புகள் சோழர் கல்வெட்டு ஒன்றில் காணப்பட்டது. சோழ மன்னர்கள் சிறந்த கட்டடக் கலை நிபுணர்களும் ஆவர், சோழர் ஆட்சிக் காலத்தில் திராவிட பாணியில் அமைந்த கோவில் கட்டடக்கலை உச்சநிலையை அடைந்தது. இந்த நேர்த்தியான கட்டிடக்கலை பாணிக்கு ராஜராஜேஸ்வர் அல்லது பிரகஸ்திவரர் கோவில் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இந்தக் காலத்தில் சிற்பக்கலையின் சாதனைகளையும் ஒருவர் அறிந்து கொள்ளலாம்.

சமய மற்றும் சமய சார்பற்ற இலக்கியங்களும் பெரிதும் வளர்ச்சியடைந்தன. நாட்டின் பல பகுதிகளில் சமஸ்கிருதம் வழக்கு மொழியாக இருந்தது. தமிழ் இலக்கியங்களும் பெரிதும் வளர்ச்சி அடைந்தன. ஆழ்வார்கள் நாயன்மார்கள், வைணவர்கள் சைவ நாயன்மார்கள் இதற்கு நீடித்த பங்களிப்பைக் கொடுத்துள்ளனர். நாட்டின் அதிகமான பகுதிகளில் சமஸ்கிருதம் முக்கியத்துவம் வாய்ந்த நிலையில் இருந்த போதிலும் இந்தக்காலம் பல இந்திய மொழிகள் தனித்திறமை வாய்ந்த எழுத்துகளுடன் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் தொடங்கியதைக் குறிக்கின்றது. சுருக்கக் கூறின் இந்தியப் பண்பாட்டின் வளர்ச்சியை சிறப்பாக இருந்தது என்பதை நாம் பண்டைய கால இந்திய வரலாறு மூலம் அறிகிறோம்.

## 3.12 வேத பிராமணங்களினின்று புராண இந்து மதமாக மாறுதல்

பண்டைய பிராமண நம்பிக்கையிலிருந்து, நவீன இந்து மதக் கொள்கைக்கு மாறுவதை குப்தர் காலத்திருந்தே சிறப்பம்சங்களாக கொண்டிருந்தது எனக் கருதலாம். பிராமணங்கள் அரச ஆதரவை பெரும் அளவிற்கு பெற்று முன்னிலைக்கு வந்தன. குப்த ஆட்சியர்கள் முக்கியமாக இந்து சமயத்திலிருந்து பிரிந்து சென்று பகவத சமயத்தை நிறைவு செய்தனர். அவர்கள் தங்களை பகவதர்கள் என அழைத்துக் கொண்டனர். விஷ்ணு கடவுளை வணங்கினர் 'அஸ:வமேத யஜ்னாஸ:' என்ற யாகத்தை நடத்தினர். பிராமணர்களுக்கு நிறைய நன்கொடைகளை வழங்கினர் மற்றும் பல கோவில்களைக் கட்டினர். இந்த காலத்தின் இறுதியில் புராணங்கள் தொகுக்கப்பட்டன. விஷ்ணு கடவுளின் ஆழ்ந்த பக்தி உடையவராகவும் மற்றும் தர்மத்தைக் காப்பாற்றும் பிரதிநிதியாகவும் தோற்றினார். அவரை சுற்றியுள்ள ஏராளமான புராணக் கதைகளை ஒன்று சேர்த்து விஷ்ணுபுராணம் என்ற முழுமையான புராணம் தொகுக்கப்பட்டது. இதைப் போலவே ஒரு சட்ட புத்தகத்திற்கும் அவரது பெயரைக் கொண்டு 'விஷ்ணு சிம்ரிதி' என்று பெயரிடப்பட்டது. எல்லாவற்றிக்கும் மேலாக கி.பி 4-ஆம் நூற்றாண்டில் (புகழ் பெற்ற வைணவ படைப்பு) ஸ்ரீமத் பகவத புராணம் என்றழைக்கப்பட்ட கிருஷ்ண கடவுளின் மீது ஆழ்ந்த பக்தியை கற்பித்தது. சில குப்த அரசர்களும் அழித்தல் கடவுளான சிவனை வணங்கினார்கள். புத்த மதம் மற்றும் சமண மதம் தோன்றிய காலத்திலேயே பகவதிசமும் தன்னுடைய சீரான கருத்துகள், உபநிடதங்களுடன் சிறப்பாக அமைந்து பிரபலமான சமயமாக ஆயிற்று. பத்து அவதாரக் கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களில் கிருஷ்ணனை முக்கியத்துவம் வாய்ந்த கடவுளாக அறியப்பட்டது.

புத்தமதம் வீழ்ச்சி அடையும் நிலையில் இருந்த போதிலும் அதனுடைய விளைவுகள் இன்னும் தொடர்ந்து கொண்டு இருந்தது. கலைத் திறன் படைப்புக்களான அஜந்தா மற்றும்

எல்லோராவைத் தவிர இதே காலத்தை சார்ந்த, சாரநாத் புத்தரின் உருவங்கள், புத்த மதமும் மிகவும் பிரபலமானது என்பதைக் காட்டுகிறது. சமண மதமும் கூட சில விளைவுகளை குப்தர் காலத்தில் ஏற்றது.

## 3.13 நாளந்தாவின் சிறப்பான கற்றல் மையத் தோற்றம்

ஹர்சருடைய காலத்தில் நாளந்தா சிறப்பு மிக்க கற்றல் மையமாகத் திகழ்ந்தது. உலகின் பல்வேறு பகுதியிலிருந்து மாணவர்கள் இங்கு கற்றுக் கொள்ள வந்தனர். நாளந்தாவின் மீதமுள்ள மண்மேடுகளை அகழ்ந்தெடுக்காவிட்டாலும், பிரம்மாண்டமான கட்டிடங்களின் வெளிப்பாடு சான்றுகளாய் விளங்குகின்றன. இவற்றில் சில 4 அடுக்கு மாடிகளைக் கொண்டது. ஹியான் சாங்கின் கூற்றுப்படி நாளாந்தாவில் 10,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கியிருந்தனர். இது 200 கிராமங்களிலிருந்து பெறப்பட்ட வருமானத்தினால் செய்யப்பட்டது.

பிரமாண்டமான, மடாலய கல்வி மையம் உருவானது. முக்கியமாக மஹாயான புத்த மதம் கற்பதற்காக இருந்த போதிலும், பாடத்திட்டத்தில் இன்னும் சமய சார்பற்ற பாடங்கள் சேர்க்கப்பட்டன. இங்கு இலக்கணம், தர்க்கம், தத்துவ அறிவு மற்றும் அறிவியல் கற்றுக் கொடுக்கப்பட்டன. மாணவர்கள் கேள்வி கேட்டு மற்றும் காரணங்களை அறியும் அறிவை மேம்படுத்த ஆர்வ மூட்டப்பபட்டது. ஹர்சா நாளந்தாவின் ஆயிரக்கணக்கான கற்றுத் தேர்ந்த புத்ததுறவிகளை வர வழைத்து கன்னோசியில் தத்துவ சட்டசபையில் பங்கேற்கச் செய்தார் என்று சொல்லப்படுகிறது. ஹியான்சாங், நாளந்தாவைப் பற்றிய குறிப்புகளை விளக்கமாக கொடுத்துள்ளார்.

### இப்பகுதிக்கான கேள்விகள் 3.3

கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.

1. குப்த நாணயங்களின் சிறப்பம்சங்கள் யாவை?
2. தசாவதாரம் கோவில் எங்கு அமைந்துள்ளது?
3. உதயகிரி மலையில் உள்ள குகை கோவில் எதற்குப் பெயர் பெற்றது?
4. சுல்தான் கஜில், பகல்பூருக்கு அருகில் கண்டெடுக்கப்பட்ட புத்தரின் வெண்கலச் சிலை உயரம் என்ன?
5. குப்தர் கால ஓவியங்களை நீங்கள் எங்கு காணலாம்?
6. ஹர்சர் காலத்தில் எங்கு தத்துவ சபைக் கூட்டம் நடைபெற்றது?

## 3.14 இந்தியாவில் கிறிஸ்தவ சமயம்

மரபின் கூற்றுப்படி கி.பி முதலாம் நூற்றாண்டில் கிறிஸ்துவ சமயம் புனித தோமையாரினால் இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டது. கி.மு. 45 இல் ‘கொண்டபர்நிஸ்’ என்ற பார்த்திய அரசன் தனக்கு ஒரு புதிய நகரத்தை கட்டுவதற்காக ஒரு திறமைமிக்க கட்டிட கலைஞனை தேட சீரியாவிற்கு ஒரு தூதுவரை அனுப்பினான். அந்தத் தூதுவர் மற்றும் அவையைச் சார்ந்த பல அங்கத்தினர்களையும் கிறிஸ்தவ மதத்திற்கு மாறச் செய்த புனித தோமையருடன் திரும்பி வந்தார். யேசுவின் சீடரான இவரை, இந்தியாவிற்கு வர வழைத்து அநேகமாக இந்தியாவிற்கும் மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையே அடிக்கடி ஏற்பட்ட வாணிகமே மக்களின் இடமாற்றத்திற்கு பொறுப்பாகும். வணிகர்கள், கைவினைஞர்கள் அடிக்கடி தரை மற்றும் கடல் மார்க்கத்தின் வழியாக பயணம் செய்தனர். புனித தோமையார் இந்தியாவின் பல பகுதிகளில்





கிறிஸ்தவ மதத்தைப் போதித்தார். அவர் மைலாப்பூரில் கொல்லப்பட்டார் (சென்னைக்கு அருகில்) புனித தோமையாரின் கல்லறை. இன்றும் அதே இடத்தில் காணப்படுகிறது. இன்றும் சிரியன் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகின்ற பெரிய கிறிஸ்தவ சமூகம் கேரளாவில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

கிறிஸ்தவ ஆலயத்தில் இரு பெரும் பகுதிகள் ரோமன் கிறிஸ்தவ ஆலயம் மற்றும் புரொட்டஸ்டாண்ட் ஆலயமாகும். பைபிள் கிறிஸ்தவர்களின் புனித மறை நூலாகும். பைபிள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு. நம் நாட்டில் இன்று பேசக் கூடிய எல்லா முதன்மை மொழிகளிலும் பைபிள் கிடைக்கக் கூடியதாக இருக்கிறது.

இன்று இந்தியாவில் ஒன்றரை கோடிக்கு மேல் கிறிஸ்தவர்கள் உள்ளனர். நாட்டின் எல்லா பகுதிகளிலும் அறப்பணி நிறுவனங்கள் இவர்களுடைய ஆதரவினால் வளர்ந்து கொண்டிருக் கின்றன. நம் நாட்டில் ஏழை மற்றும் வீடில்லாதவர்களின் நலனுக்காக பங்களித்தவர் மிகவும் பிரபலமான கிறிஸ்தவ சமூக சேவையாளரே ஆவார்.

## இப்பகுதிக்கான கேள்விகள் 3.4

கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிக்க:

1. கிறிஸ்துவ மதம் எவ்வாறு இந்தியாவிற்கு வந்தது?
2. கிறிஸ்துவ ஆலயங்களில் என்னென்ன பிரிவுகள் உள்ளன?
3. அன்னை திரேசா என்பவர் யார்?
4. பல்லவர்களால் காஞ்சிபுரத்தில் கட்டப்பட்ட கட்டமைப்பு கோவில்கள் இரண்டின் பெயர்களைக் கூறுக?
5. பல்லவர்கள் மற்றும் சோழர்கள் காலத்திய கோவில் சிற்பக்கலையின் பல வகை பாணிகள் எவை?
6. சோழர்களால் கட்டப்பட்ட கோவிலின் பெயரைக் கூறு?
7. சோழர் காலத்தில் சிற்பக்கலைப் பாணி எவ்வாறு அழைக்கப்பட்டது?
8. மகாபலிபுரத்தில் என்ன பாணியின் வேலைப் பாட்டை நீங்கள் காணலாம்?

## நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- கி.மு. ஏழாயிரத்துக்கு முன்பிருந்தே இந்தியாவிற்கு தொடர்ச்சியாக நீண்ட கால வரலாறு உண்டு.
- ஹரப்பர்கள் திட்டமிட்ட நகரமைப்பு மக்களின் உடல் நல வசதி, கழிவு நீர் வசதி மற்றும் அகலமான வீதிகள் ஆகியவற்றுடன் நகரங்களைக் கட்டி முடித்தனர்.
- கிராமப்புற மக்களுக்கு விவசாயம் முக்கியமான தொழிலாக இருந்தது.
- வேத காலத்தைச் சார்ந்த மக்கள் பல்வேறு துறைகளின் இலக்கியம் சமயம் மற்றும் தத்துவத்திற்குப் பெரும் பங்களித்துள்ளனர்.
- பிந்தைய வேத காலத்தை நோக்கும் பொழுது, பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள் மற்றும் சூத்திரர்கள் என நான்கு வர்ணங்களாக சமுதாயம் பிரிக்கப்பட்டிருந்தது.

- இந்து மதம், சமண மதம் மற்றும் புத்த மதம் ஆகிய முக்கிய சமயங்களில் வளர்ச்சி மற்றும் ஒன்றோடு ஒன்றின் தொடர்பின் விளைவுகள் இந்தியப் பண்பாட்டினை ஒருங்கிணைத்தன.
- முந்தைய வேத கால மக்கள் இயற்கை சக்திகளை கடவுள்கள் மற்றும் கடவுளிகள் ஆக உருவகித்து வழிப்பட்டார்கள்.
- முதலில் வடஇந்தியாவில் மௌரியர்கள் சிறந்த பேரரசை நிறுவினார்கள் அது அசோகருடைய ஆட்சிக் காலத்தில் எல்லா துறைகளிலும் உச்சத்தை அடைந்தது.
- கலை மற்றும் கட்டிடக்கலைக்கு மௌரியர்களின் பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கது.
- சிறந்த கட்டிட நிபுணர்களான பல்லவர்களின் காலத்தில் கோயில் சிற்பக்கலை மிக உன்னதநிலையை அடைந்தது.
- குப்தர் கால கலையின் எடுத்துக்காட்டுகளை தியோகாரில் உள்ள தசாவதாரம் கோவில் மற்றும் உதயகிரியில் உள்ள குகைக் கோவில்களில் காணலாம்.
- ஹர்ச அரசர், துயரமான சூழ்நிலையில் தன் குடும்பத்தை இழந்த பின்பு தானே அவர் அரியணையை அடைந்தார்.
- இரண்டு நபர்கள் ஹர்சரின் ஆட்சியைப் பற்றி விளக்கமாக குறிப்புகள் கொடுத்துள்ளனர். ஒருவர் சீனப் பயணி ஹியான் சங் மற்றவர் அவருடைய அவைப் புலவர் பானபட்டர்.
- ஹர்சர் நன்மை செய்யக்கூடிய அரசர். அவர் மக்கள் நல செயல்பாடுகளில் ஈடுபட்டார். சிறந்த பொது வேலையாட்களுக்கு அறக்கொடை வழங்கினார். திறமையாக பகுத்தறிந்து வேலை செய்த மக்களுக்கு வெகுமதி அளித்தார். பல்வேறு சமய தனிக்குழுக்களுக்கு சன்மானம் கொடுப்பதன் மூலம் சமயச் செயல்பாடுகளை ஊக்கப்படுத்தினார். அவர், பல மருத்துவ மனைகள் மற்றும் ஓய்வு விடுதிகளைக் கட்டினார். ஹர்சருடைய ஆட்சி காலத்தில் நாளந்தா சிறந்த கற்றல் மையமாக மாறியது.
- ஹர்சர் கல்வி அறிவுள்ளவர், அவர் நாடகங்களை அவரே எழுதினார். அவரைச் சுற்றி கற்றறிந்த மனிதர்கள் இருந்தனர்.
- சோழ மன்னர்களின் சாதனைகள் அவர்களின் கடல் கடந்த படையெடுப்புகள் மற்றும் கிராம அளவில் ஆட்சிபுரிய ஜன நாயக நிறுவனங்களின் வளர்ச்சியில் இருந்தது.

## பயிற்சிக்கான கேள்விகள்

1. எவ்வாறு ஹரப்பர்களின் பண்பாட்டுடன், ஆரியர்களின் பண்பாட்டை வேறுபடுத்துவாய்?
2. கி.பி. 6 ஆம் நூற்றாண்டில், சமண மதம் மற்றும் புத்த மதம் தோன்றியதற்கான சூழ்நிலைகள் யாவை?
3. பாரசீகப் படையெடுப்பினால் இந்தியப் பண்பாட்டில் ஏற்பட்ட தாக்கங்கள் யாவை?
4. பண்டைய கால இந்தியாவின் மீது மாசிடோனியன் படையெடுப்பினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?
5. எவ்வாறு பண்டைய கால இந்தியாவில் வேத பிராமணங்களிலிருந்து புராண இந்து மதத்திற்கு மாறுதல் ஏற்பட்டது?
6. தொடர்ந்து வருகிற பேரரசு ஆட்சிக்காலத்திய இந்தியப் பண்பாட்டின் முன்னேற்றத்தைப் பற்றி விவரி?

## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 3.1

1. சிந்து, காகர் மற்றும் அதனுடைய கிளை நதிகளின் கரையோரங்கள்.
2. வேளாண்மை.
3. பலுசிஸ்தானிலுள்ள “மொஹர்ஹார்கு என்னுமிடத்தில் கி.மு. 7000 க்கு முந்திய காலம்.
4. முத்திரைகள் சில கையெழுத்துப் படிவத்தினை கொண்டிருந்தது.
5. குதிரை போன்ற வடிவத்தை கொண்ட ஒற்றை கொம்பு காண்டா மிருகத்தின் உருவங்கள் முத்திரையில் இருந்தன. மொஹஞ்சதாரோவில் நடனமாடும் மங்கையின் வெண்கல சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டது. இது இந்த மக்களின் சிற்பக்கலைக்கு சாட்சிகளாய் விளங்குகிறது.
6. வேதம் - ரிக், அதர்வணம், சாம, யஜீர் மற்றும் பிராமணங்கள், ஆரண்யங்கள் மற்றும் உபநிடதங்கள்.
7. தர்மம், ஆர்தம் மற்றும் காமங்களினால்.
8. வேத ஸ்தோத்திரங்களை உச்சரித்து இந்த சடங்கு நடத்தப்பட்டது.
9. அஸ்வ மேதா, ராஜசூயா, வாஜ்பேய யஜ:னங்கள்.
10. இது மிகவும் சடங்குகளைக் கொண்டதாக மாறின. இந்திரன், அக்னி, வருணன் கடவுள்களுக்குப் பதிலாக பிரம்மன், விஷ்ணு மற்றும் சிவனை வழிப்பட்டனர்.
11. சதுரங்க விளையாட்டு, ரத பந்தயம் முதலியன.
12. அங்கா, மகதம், கோசலம், காசி, குரு, பாஞ்சலம்.
13. இரண்டு - ஸ்வதம்பரர்கள் (வெள்ளை ஆடை அணிந்தவர்கள்) திகம்பரர்கள் (நிர்வாணமாக இருப்பவர்கள்).
14. எட்டு (எண் வகை)
15. ஸ்தனி காஸ: என்று சமண மதத்தில் மற்றும் விகாரங்கள் என்று புத்த மதத்தில்.
16. ஹீனயாணம், மகாயாணம், வஜ:ராயாணம்.

### கேள்விகளுக்கான பதில்கள் 3.2

1. ஆரியன், அட்மிரல் நியார்கள் மற்றும் மெகஸ்தனிஸ் விட்டுச் சென்ற கிரேக்க குறிப்புகள்.
2. மக்களின் நலம் என்பது பக்தி மற்றும் புனித தன்மையுடன் ஆள்வதே உண்மையான ஆளுமையாகும்.
3. ஒரு குறிப்பிட்ட சமயத்தின் மதிப்பு, மற்ற சமயங்களை பெருமைப்படுத்துவதில் இருக்கிறது.
4. லாரியா நந்தகாரில் (பீஹார்).
5. அசோகரின் சாரநாத்தில் புகழ் பெற்ற தூண்.
6. (அ) அப்பலோனியனின் முகங்கள்.
   (ஆ) தலைமுடி பாணி
   (இ) விற்பனைக்கான துணிமணிகளை ஒழுங்கு படுத்துதல்
7. (அ) அவர்கள் புத்தரின் முகங்கள் மற்றும் உருவங்களை வரைந்தார்கள்.
   (ஆ) நீண்ட பாறைகளின் மீது நாடோடிக் கதைகள் வரையப்பட்டது.
   (இ) சிலைகளையும் அவர்கள் வடிவமைத்தார்கள்

## கேள்விகளுக்கான பதில்கள் 3.3

1. நாணயத்தின் ஒரு பக்கத்தில் பல்வேறு நிலைகளில் அரசனும், மறு பக்கத்தில் தனது சின்னங்களுடன் கூடிய பெண் தெய்வத்தின் உருவமும் அடங்கியிருந்தது.
2. தியோகாரில்.
3. குப்தர்களின் கலை.
4. இரண்டு மீட்டர் உயரம்.
5. (அ) அஜந்தா குகையின் சுவரில் தீட்டப்பட்டுள்ள வண்ணங்கள் (அவுரங்காபாத்)
   (ஆ) 'பாக்' குகைகள் (குவாலியருக்கு அருகில்)
6. கன்னோசியில்

## கேள்விகளுக்கான பதில்கள் 3.4

1. புனித தாமஸ் என்பவர் கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்த திறமையான ஓவியர். அவர் கி.மு. 19, 45 கி.பி யில் 'கொண்டபர்நிஸ்' என்ற பார்த்திய மன்னரால் 'சிற்பக்கலைஞர்' என தற்செயலாக அழைக்கப்பட்டார். புனித தாமஸ் பல அங்கத்தினர்களை கிறிஸ்தவ மதத்திற்கு மத மாற்றம் செய்வித்தார்.
2. (அ) ரோமன் கத் தோலிக்க ஆலயம்
   (ஆ) புரொட்டாஸ்டாண்டு ஆலயம்
3. ஏழை மற்றும் வீடில்லாதோருக்கு சிறந்த பணிகளைச் செய்த சமூக சேவையாளர் ஒரு கிறிஸ்தவர்.
4. காளிதாசநாதன் மற்றும் வைகுண்ட பெருமாள்.
5. நாகரப்பாணி மற்றும் திராவிடப் பாணி.
6. ராஜராஜேஷ்வர் , பிரகதீஸ்வரர் கோவில்.
7. திராவிடப் பாணி.
8. பாஸ்மேடுகள்.

# 4

# இடைக்கால இந்தியா

இடைக் காலத்தில் இந்தியாவில் சமயம், மரபுக்கலை மற்றும் மொழி ஆகிய துறைகளின் வளர்ச்சி இந்தியாவின் பல்வேறு கலா சார கலவைகளின் பரிமாணத்தின் முக்கிய மைல் கற்களாக இருந்தன. புதிய சமய இயக்கங்களான சுபி மற்றும் சிக்கிசம் அதனுடன் பக்தி இயக்கமும் இந்த செயல்முறைகளுக்கு பங்களித்துள்ளன. நீங்கள் சிந்தித்து பார்த்தீர்களானால் இந்திய பண்பாட்டின் பல்வேறு அம்சங்கள் மீது இஸ்லாமிய தாக்கங்களைக் காண்பீர்கள். நீங்கள் இந்தியாவில் புகழ் பெற்ற சில நினைவுச் சின்னங்களை பார்வையிட்டிருக்கலாம். இத்தகைய நினைவுச் சின்னங்கள் இந்தியாவில் இந்தோ- இஸ்லாமிய பண்பாட்டின் தொகுதிக்கு அடையாளங்களாக காணப்படுகின்றன. இஸ்லாமை உள்ளடக்கிய பல்வேறு சமயங்கள் எவ்வாறு ஒன்று மற்றொன்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்தின என்பதையும் நீங்கள் காணலாம். இது தவிர இந்தியாவின் ஒவ்வொரு வட 'டாரமும் சில அல்லது பிற மரபுக்கலைக்கு வடிவம் கொடுப்பதில் புகழ் பெற்றுள்ளது. மரபுக்கலை வளர்ச்சியின் மூலம் சாதாரண மக்கள் அவர்களுடைய படைப்பாற்றலைக் காட்டுவது இந்திய பண்பாட்டின் மற்றுமொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். இக்காலத்தில் பரிணாமித்த இன்று நாம் பேசும் பல்வேறு வட்டார மொழிகளும் கவனத்தை ஈர்க்கக் கூடிய வரலாற்றைக் கொண்டுள்ளது.

## நோக்கங்கள்

இந்த பாடத்தைப் படித்த பின்பு உங்களால்,

- இடைக்கால சமுதாயத்தைப் பற்றி புரிவதற்கு
- இஸ்லாமிய மற்றும் சுபிசத்தின் எழுச்சியைப் பற்றி கண்டறிய
- இடைக்காலத்தில் அரசியல் நிலைமையை விவரிக்க
- இந்திய சமயத்தின் மீது இஸ்லாமிய தாக்கத்தை ஆராய
- பக்தி இயக்கத்தின் வளர்ச்சியை கண்டறிய
- இடைக் காலத்தில் மரபுக் கலைகள், ஓவியம் மற்றும் இசையின் வளர்ச்சியை ஆராய்
- நவீன மொழிகளின் வளர்ச்சியை கண்டறிய
- இந்தியாவில் சீக்கிய மதம் மற்றும் சீக்கிய ஆட்சியை பற்றி விவாதிக்க் மற்றும்
- தென்னிந்திய வளர்ச்சியை கண்டறிய முடியும்

## 4.1 டெல்லி சுல்தானியர்களின் கீழ் மக்களின் வாழ்க்கை

முஸ்லிம் படையெடுப்பாளர்கள் இந்தியாவிற்கு வந்த பொழுது அவர்கள் இந்தியாவை தங்களுடைய நாடாக்க தீர்மானித்தார்கள். அவர்கள் கலப்புத் திருமணம் செய்யும் முறையை இந்திய பண்பாட்டிற்கு கொண்டு வந்தனர். அங்கு கருத்துகள் மற்றும் பழக்க வழக்கங்களில் பரஸ்பர மாற்றம் இருந்தது. உடையில், பேச்சில், பாணியில் மற்றும் அறிவார்ந்த வெளித் தோற்றத்தில் இரண்டும் ஒன்றையொன்று மிக ஆழமாக தாக்கிக் கொண்டன. சிலவற்றின் மாற்றங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

### சமுதாயம்

இந்திய சமுதாயம் 4 பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவைகள் பிரபுக்கள், சமய குருக்கள், நகர மக்கள் மற்றும் விவசாயிகள் ஆகும்.

### உயர் குடிமக்கள்

சுல்தான் மற்றும் அவருடைய சொந்தக்காரர்கள், பிரபுக்கள் மற்றும் நிலக்கிழார்கள், உயர்குடி மக்களில் அடங்குவர். அங்கு இந்து ராஜாக்கள், தலைவர்கள், இந்து வணிகர்கள் மற்றும் வங்கியாளர்களும் இருந்தனர். அவர்கள் எல்லா செல்வங்கள் மற்றும் அதிகாரத்தையும் தங்களிடையே வைத்துக் கொண்டனர். அவர்களை சக்தி வாய்ந்த மக்களைக் கொண்ட ஒரு குழு என்று சொல்லத் தேவையில்லை. அவர்கள் சிறந்த பாணி மற்றும் ஆடம்பரத்தில் வாழ்ந்தனர். இதில் சுல்தான் தன்னுடைய உயர்தரமான நிலை மற்றும் அந்தஸ்தை நிலைநாட்ட, அவர் இதை செய்ய வேண்டியிருந்தது. அவர் மற்றவரிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்ட வேண்டியிருந்தது. புதிய சுல்தான் எப்பொழுது ஆட்சிக்கு வந்தாலும் குட்பா அல்லது சமய விளக்கம் இவருடைய பெயரால் மசூதிகளில் படிக்கப்பட்டு மற்றும் வெள்ளிக்கிழமை வழிபாடுகளில் நாணயங்கள் இவருடைய பெயரால் வழங்கப்பட்டன. இது புதிய ஆட்சியாளரை அரியணையில் அமர்த்தியது. இவர் ஒரு ஆட்சியாளர் என்ற தனிச்சிறப்பை நிலை நிறுத்துவதற்கு அரச குடியமைப்புடன் பல அதிகாரிகள் மற்றும் வேலையாட்களையும் வழங்கப்பட்டு அங்கு அவர் ஆடம்பரமாக வாழ்ந்தார். பெருங்குடி பிரபுக்கள் கூட, இவருடைய பாணியை பின்பற்றி அவர்களுடைய செல்வ செழிப்பைக் காண்பித்தார்கள்.

### மத குருமார்கள்

சமுதாயத்தில் மதகுருமார்கள் மற்றுமொரு முக்கிய இனத்தைச் சார்ந்த மக்களாவர். இந்துக்களிடையே பிராமணர்கள் மற்றும் முஸ்லீம்களிடையே உலிமாக்களாகவும் இருந்தனர். அவர்களது பராமரிப்பிற்காக வரி செலுத்த வேண்டியிராத நிலங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன அவ்வப்போது மிகுந்த அதிகாரங்களும் வழங்கப்பட்டன. முஸ்லீம் உலிமாக்கள், முஸ்லீம் சுல்தான்கள் மீது செல்வாக்கை பயன்படுத்தி மற்றும் அவர்களுடைய கொள்கைகளையும் பயன்படுத்தினார்கள். ஆனால் அலாவுதீன் கில்ஜி போன்றவர்களின் காலத்தில் அவர்களை புறக்கணிக்கக் கூட செய்தார்கள். சில சமயம் மதகுருமார்கள் சமய அலுவலர்களில் ஆர்வம் கொள்ளாமல், உலக விவகாரங்களில் மிகவும் அக்கறை கொண்டனர்.

### நகர மக்கள்

நகரத்தில் செல்வ வணிகர்கள், கைவினைஞர்கள் ஆகியோர் வாழ்ந்தனர். நிர்வாகம் இராணுவ மையங்களான பெருங்குடி மக்கள், அதிகாரிகளும் வீரர்களும் தங்கிய நகரங்கள், நிர்வாகம் மற்றும் இராணுவ மையங்களாகத் திகழ்ந்தன. சுபி மற்றும் பக்தி துறவிகள் வாழ்ந்த

இடங்கள், முக்கியமான கோவில்கள், மசூதிகள் இக்கட்டிடத்தில் யாத்திரை மையங்களாக அமைந்துள்ளன. கைவினைஞர்கள் தங்களது சொந்த குடியிருப்பு பகுதியில் வாழ்ந்தனர். நெசவாளர்கள் நெசவாளர் குடியிறுப்பிலும், பொற்கொல்லர்கள் பொற்கொல்லர்களால் வாழ்விடமாக்கப்பட்ட குடியேற்றப் பகுதிகள் முதலியவற்றில் வாழ்ந்தனர். இது கைவினைஞர்கள் கைத்தொழில் வல்லுனர்களுக்கான பொதுவான வடிவமைப்பு மாதிரிகளாகும். இந்த மக்கள் விநியோகித்த ஆடம்பர பொருட்களும் வாணிகத்திற்காக வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டன. அரசகார்கனாக்கள் அல்லது பணிமனைகள், சுல்தானால் பரிசுப்பொருட்களை கொடுப்பதற்காகவும் அழகான பொருட்களை தயாரிப்பதற்காக வேலைக்கு அமர்த்தினார்கள்.

## விவசாயிகள்

விவசாயிகள் இந்த கிராமங்களில் வாழ்ந்தால் கூட அடிக்கடி அவர்களது நிலைமை மிக மோசமானது. அரசுக்கு நில வருவாயாக அவர்கள் அதிக வரிப்பணம் செலுத்தினார்கள். எந்த வம்சம் மாறினாலும் அவர்களுடைய வாழ்வில் எவ்வித விளைவுகளும் இல்லை. அவர்களுடைய வாழ்க்கை முன்பிருந்ததைப் போலவே தொடர்ந்தது.

மாற்றமுடியாத சாதிமுறை இருந்தது. கலப்புத் திருமணங்களும் சமபந்தி போஜனங்களும் முழுமையாகத் தடை செய்யப்பட்டன. ஆனால் கருத்துகளின் பரிமாற்றம் பெரிய அளவில் நடைபெற்றது. இஸ்லாமிய மதத்திற்கு, யார் தங்களை மாற்றிக் கொண்டார்களோ, அவர்கள் தங்கள் வழக்கங்களை மறக்கவில்லை. இவ்வாறாக, கருத்துப் பரிமாற்றம் பழக்கங்கள் இடம் பெற்றன. உணவு, உடை குறிப்பிட்ட ஒரு செயலின் போது உடுத்திக் கொள்ளும் உடுப்பு மற்றும் இசை இது தவிர மற்றும் பல இந்து வழக்கங்கள் முஸ்லீம்களால் மேற்கொள்ளப்பட்டன. அதே சமயம் பல முஸ்லீம் வழக்கங்கள் இந்துக்களால் மேற்கொள்ளப்பட்டன.

## வாணிகம்

வாணிகம் செழித்துக் கொண்டிருந்தது அதை ஊக்குவிப்பதற்காக பல புதிய நகரங்கள் தோன்றின. பணியாளர்கள், மார்வாரிகள் முல்டானியர்கள் போன்ற சில இனத்தவர்கள், வாணிகத்தை அவர்களுடைய முதன்மையான வாழ்க்கைத் தொழிலாக்கி கொண்டனர். நகர்ந்து செல்லும் வீடுகளில், பஞ்சாரர்கள் வாணிகம் செய்தனர் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பொருட்களை தொடர்ந்து கொண்டு சென்றனர்.

பொருட்கள் உள்ளே வருவதற்கும், வெளியே செல்வதற்கும், டெல்லி ஒரு மையமாகத் திகழ்ந்தது. அங்கு கிழக்கிலிருந்து அரிசி, கன்னோஜ்லிருந்து சர்க்கரை, தோப்பிலிருந்து கோதுமை மற்றும் தெற்கிலிருந்து தரமான பட்டுகள் வந்தன. இது தவிர அங்கு உலோகப் பொருட்கள், தந்தம், ஆபரணங்கள், பருத்தி துணிகள் போன்ற ஆடம்பர பொருட்கள் மற்றும் பல பிற பொருட்களும் இருந்தன. இந்தியாவிலிருந்து புறம்பாக உள்ள நாடுகளான கிழக்கு ஆப்ரிக்கா, அரேபியா, சீனாவிலிருந்து பொருட்கள் டெல்லிக்கு வந்தன. இபின் பட்டுட்டாவின் கூற்றுப்படி டெல்லி ஓர் உன்னதமான நகரமாக அந்த சமயத்தில் இருந்தது என்பதாகும்.

வாணிக வளர்ச்சி பண பயன்பாட்டை உற்சாகப்படுத்தியது. அந்த சமயத்தில் வெள்ளி டங்க்கா (நாணயம்) புழக்கத்திற்கு வந்தது. இதை அல்டமிஷினால் அறிமுகப்படுத்தப்பட்டு, மிகச் சாதாரணமாக பயன்படுத்தப்பட்டது. எடை முறைகள் கூட அந்த சமயத்தில் பயன்படுத்தப்பட்டு அண்மையில் மெட்ரிக் முறை தழுவும் வரை பயன்பாடு தொடர்ந்தது.

### சமய நிலை

இஸ்லாமிய மதம் இந்தியாவிற்கு வந்த பொழுது, இந்து மதம் நடைமுறையில் இருந்தது. ஆனால் இந்த சமயத்தில் இந்து மதம், தானாகவே சீர்குலைந்துவிட்டது. அங்கு மூடநம்பிக்கைகள், சடங்குகள், பலியிடுதல் போன்றவைகள் இருந்தன. சாதிமுறை மிக இறுக்கமாக இருந்தது பிராமணர்கள் மிகுந்த அதிகாரம் கொண்டவர்களாயினர். குறிப்பாக கீழ் வகுப்பைச் சார்ந்த மக்களை இழிவாக நடத்தினர். இந்துக்களிடையே இருந்த இஸ்லாம பழக்கங்கள் இஸ்லாமிய சமயத்திற்கு நேர் எதிராக இருந்தது. சமத்துவம், சகோதரத்துவம் ஒரே கடவுள் என்பதை கூறுகிறது. இஸ்லாமிய சமயத்தில் சமயக் கோட்பாடுகள் இல்லை. மற்றபடி, இது எளிமையான கொள்கைகளைக் கொண்ட ஒரு ஜனநாயக நிறுவனமாகும்.

இஸ்லாமிய மதத்தின் வருகை, நாட்டின் அரசியல் கட்டமைப்பில் பல மாறுதல்களைக் கொண்டு வரவில்லை. மற்றபடி இது சமூக வடிவமைப்பு சமுதாயத்திற்கு அறை கூவல் விடுத்தது. பக்தி இயக்கம் மற்றும் சுபி இயக்கத்தின் தோற்றம் இந்தத் தொடர்பின் முக்கியமான விளைவாகும். இரு இயக்கங்களுமே, கடவுள் முதன்மையானவர், எல்லா மனிதர்களும் கடவுளுக்குச் சமம். பக்தி அல்லது கடவுள் பற்று ஆகியவை முக்தியடைவதற்கு வழியாகும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

## 4.2 இஸ்லாமும் சுபிசத்தின் தோற்றமும்

முஸ்லீம்கள் 8-ஆம் நூற்றாண்டில், முதன் முதலில் இந்தியாவிற்கு முதன்மையான வணிகர்களாக வந்தனர். அவர்கள் இந்நாட்டின் சமூக பண்பாட்டு நிகழ்வு காட்சிகளால் ஈர்க்கப்பட்டு இந்தியாவை அவர்களுடைய வீடாக்க முடிவு செய்தார்கள். மத்திய மற்றும் மேற்கு ஆசியாவிலிருந்து வந்த வணிகர்கள் இந்திய அறிவியல் மற்றும் பண்பாட்டை தங்களுடன் திரும்பும் பொழுது எடுத்துச் சென்றனர். இதன் விளைவு இந்த அறிவை இஸ்லாமிய உலகிற்கு மற்றும் அங்கிருந்து ஐரோப்பாவிற்கு பரவச் செய்து, அவர்கள் இந்தியாவின் கலாச்சார பிரதிநிதிகளாக ஆயினர். வேற்று நாட்டிலிருந்து குடியேறிய முஸ்லீம்களும், உள்ளூர் மக்களுடன் திருமண உறவில் நுழைந்து, ஒன்று கூடி இணக்கத்துடன் வாழக் கற்றுக்கொண்டனர். அங்கு கருத்துகள் மற்றும் வழக்கங்களின் பரிமாற்றம் இருந்தது. இந்துக்கள் மற்றும் முஸ்லீம்கள் உடை, பேச்சு, பாணிகள் வழக்கங்கள் மற்றும் அறிவார்ந்த நாட்டங்களில் ஒருவரை ஒருவர் சமமாக ஈர்க்கப்பட்டனர். முஸ்லீம்களும் இந்திய சமுதாயம் மற்றும் பண்பாட்டில் அழுத்தமான தாக்கத்தை கொண்டிருக்கிற அவர்களுது இஸ்லாமிய மதத்தை தங்கள் உடன் கொண்டு வந்தனர். இந்த பாடத்தில், தீர்க்கதரிசி முகமது மற்றும் இஸ்லாமியத்தைப் பற்றி வெகுவாக காணலாம்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் அரேபியாவில் தீர்க்கதரிசி முகமது இஸ்லாமியத்தை போதித்தார். இவர் குரேஷி என்ற இனத்தில் கி.பி. 571-ல் அரேபியாவில் பிறந்தார். இவர் மெக்காவிலிருந்து மதீனாவுக்கு கி.பி. 622 ல் குடியேறினதை ஹிஜிரா சகாப்தத்தின் தொடக்கம் என குறிப்பிடப்பட்டுள்ளது. முஸ்லீம் நம்பிக்கையின் படி குரான் என்பது, தலைமைத் தேவதூதன் கபிரியேலின் மூலமாக அல்லாவின் தூதுச் செய்தியை, முகமதுவிற்கு புலப்படுத்தப்பட்டதாகும். இதை பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

இஸ்லாமிய மதத்தின் 5 அடிப்படைக் கொள்கைகள்

1. டௌஹித் (அல்லாவின் மீது நம்பிக்கை)
2. நமாஸ் (ஒரு நாளைக்கு 5 முறை தொழுவது)
3. ரோசா (ரம்ஜான் மாதத்தில் நோன்பு இருத்தல்)

4. ஜாகட் (பிச்சையிடுவது)
5. ஹஜ் (மெக்காவிற்கு புனித பயணம் செல்வது)

ஹடித் அல்லது ஹடீஸ் என்றழைக்கப்படுகிற தீர்க்கதரிசியால் முகமதுவின் மூதுரைகள் பாதுகாக்கப்பட்டுள்ளது. அவரது இறப்பிற்கு பின்பு காலிபைட்டுகள் தோற்றுவிக்கப்பட்டன. அங்கு ஆழ்ந்த சமய நம்பிக்கை கொண்ட 4 காலிப்புகள் இருந்தனர்.

இஸ்லாமியம், சமத்துவம், சகோதரத்வம் மற்றும் ஒரே கடவுளின் மெய்மை நிலைப் பற்றிக் கூறுகிறது. இதனுடைய வருகை குறிப்பாக இந்திய சமுதாயத்தின் மரபுப் பாணியில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பக்தி மற்றும் சுபி இயக்கங்களின் தோற்றம், இவற்றைப் பொருத்து, ஏராளமாக பங்களித்துள்ளது. பக்தி அல்லது சுபி ஆகிய இரு இயக்கங்கள் எல்லா மனிதர்களும் சமமானவர்கள், கடவுள் ஒருவரே உன்னதமானவர் மற்றும் கடவுளிடம் பக்தியாக இருப்பது தான் ஒரே வழி என நம்பின.

### 4.2.1 சூபிசத்தின் எழுச்சி

இஸ்லாமிய இறையுணர்வுக் கோட்பாடுகளின் பொதுவான ஒரே சொல் சூபிசம் என்பதாகும். சூபிக்கள் தங்களது சமய மனப்பாங்கில் மிகவும் பெருந்தன்மை வாய்ந்தவர்களாக இருந்தனர். அவர்கள் எல்லா சமயத் தேவையான ஒற்றுமையில் நம்பிக்கை கொண்டிருந்தனர். அவர்கள் இசை மற்றும் கொள்கைகளை இணையும், இசை மற்றும் கொள்கைகளின் மூலம் ஆன்மீகத்தை வெளிப்படையாக போதித்தார்கள். சூபிசம் ஈரானில் தொடங்கி மற்றும் இந்தியாவில் துருக்கியர் ஆட்சியின் கீழ் உகந்த சூழ்நிலையில் காணப்பட்டது. அவர்களது பக்தி உணர்வு, சகிப்புத்தன்மை, இரக்கம், சமத்துவ கோட்பாடு மற்றும் நட்பு மனப்பான்மை பெரும்பாலும் தாழ்ந்த வகுப்பைச் சார்ந்த பல இந்துக்களை இஸ்லாமியத்துக்கு ஈர்த்தது. சூபி புனிதர்களான மொயினுதின் சிஸ்டி, நிஜாமுதின் அலுலியா, பாருடுடின் கன்ஜ் - இ - ஷகார் ஆகிய சூபிக்களின் முன்னோடிகளை இன்று வரை இந்தியாவில் அவர்களை அன்புடன் மரியாதையுடன் கௌவரப்படுத்துகிறார்கள். அவர்களுடைய கங்காக்கள் மற்றும் தர்காக்களை தோற்றுவிப்பதில், சூபிக்களும் கிறிஸ்தவ மற்றும் புத்த குருமார்களினால் ஈர்க்கப்பட்டார்கள். வட இந்தியாவில் சூபிக்களால் நிறுவப்பட்ட கங்கா நிறுவனங்கள் (சூபிக்களின் வாழும் இடம்) கிராமபுறங்களில் இஸ்லாமியத்தை வலிமையாக்கினார்கள். மஜார்ஸ் (சமாதிகள்) மற்றும் தக்கியாக்களும் (முஸ்லீம் புனிதர்கள் இளைப்பாறும் இடம்) இஸ்லாமிய கருத்துகளை பிரச்சாரம் செய்யக்கூடிய மையங்களாக மாறின. இவற்றை பெருங்குடி மக்கள் சாதாரண மக்கள் ஆகிய இருவராலும் ஆதரிக்கப்பட்டன. எல்லா மனிதர்களுக்கான மரியாதையை சூபிக்கள் வலியுறுத்தினார்கள்.

சுபிக்களை சமய வரிசைகளாக அல்லது சில்சிலாக்களாக திட்டமிடப்பட்டது. இத்தகைய சில்சிலாக்களுக்கு சிஸ்டி, சுரவார்டி, காடி மற்றும் நக்ஷ் பண்டீஸ் என நிறுவனர்களின் பெயரிடப்பட்டது. 16 ஆம் நூற்றாண்டில் அங்கு இந்தியாவில் இருந்ததைப் போன்று 14 சில்சிலாக்கள் இருந்தன என்பது அயினி - அக்பரி எழுதிய அபுல்பாசலின் கூற்றாகும். ஓவ்வொரு வரிசையும் அதனுடைய சொந்த கங்காக்களை கொண்டிருந்தது. இவைகள் சூபி புனிதர்கள் மற்றும் கைவிடப்பற்றோருக்காக உறையுள் இடமாகவும், பிறகு கல்வி கற்கும் மையமாக வளர்ச்சியுற்று பணிபுரிந்தன.

அஜ்மீர், நாகர் மற்றும் அஜோதன் அல்லது பாக்பட்டன் (இப்பொழுது பாகிஸ்தானில் உள்ளது) சுபிசத்தின் முக்கிய மையங்களாக வளர்ச்சியுற்றது. இவைகளும் பிரிமுருதி (ஆசிரியர் மற்றும் சிஷ்யன்) என்ற மரபை தொடங்கின. ஆன்மா தொடர்பான பேரின்ப நிலையை அடைவதற்கு சூபிக்கள் கவிதை மற்றும் இசை (சாமா) யைக் கேட்டார்கள். இவைகள் முதன் முதலில் பாரசீகத்தில் இருந்தது. ஆனால் பிறகு ஹின்டாவி அல்லது

ஹிந்துஸ்தானிக்கு மாற்றப்பட்டது. அவர்கள் கடவுளின் ஒற்றுமை மற்றும் இறைவனிடம் தன்னை சரணடைதல் போன்றவைகளை பெரும்பாலும் நிர்குன பக்தி இயக்கத்தின் பக்தர்கள் செய்தது போன்றவைகளையே போதித்தனர். இசை மொழிகளை பொருட்படுத்தாது எல்லோரையும் கவருகிறது. மெதுவாக இதே இசை, இந்து மதத்தினரையும் கவர்ந்தது. ஏராளமானவர்கள் தர்காவை பார்வையிட தொடங்கினார்கள். சூபிசத்தின் மீதும் இந்து மதத்தின் தாக்கம் சித்தர்கள் அல்லது யோகியின் தோற்ற அமைப்புகளிலிருந்து அறிந்து கொள்ளக் கூடியதாக ஆகின.

## இப்பகுதிக்கான கேள்விகள் 4.1

1. தீர்க்கதரிசி முகமது மெக்காவிலிருந்து மதீனா விற்கு குடியேறினதை எந்த சகாப்தத்தின் தொடக்கம் என குறிப்பிடப்பட்டுள்ளது?
2. ரோசா என்பது என்ன?
3. இந்து சமயத்தை பின்பற்றுபவர்களை அவர்களுடைய பக்தி மனப்பான்மை, சகிப்புத் தன்மை, சமத்துவக் கோட்பாடு மற்றும் இரக்கத்தினால் அவர்களை இஸ்லாமிய மதத்திற்கு கொண்டு வந்தது?
4. அய்னி - ஐ - அக்பரியின் எழுத்தாளர் யார்?

## 4.3 அரசியல் பின்னணி

1206 லிருந்து 1290 வரை டெல்லியை ஆட்சி செய்தவர்கள் மாம்லக் துருக்கியர்கள் ஆவர். அவர்களுக்குப் பின் கில்ஜிக்கள், துக்ளக்கள், சையதுக்கள் மற்றும் லோடிகள், வட இந்தியாவை டெல்லியிலிருந்து 1526 வரை ஆட்சி செய்தனர். இந்த எல்லா ஆட்சியாளர்களும் சுல்தான்கள் என அழைக்கப்பட்டனர். முஸ்லீம்களின் ஆன்மீக மற்றும் உலகம் சார்ந்தவைகளுக்கும் தலைவராய் இருப்பவர் என கருதப்படுகிற சுல்தான், இவர் கலிபா அல்லது காலிப்பின் பெயரால் நட்டாச்சி பரப்பை ஆளுகிறவர் என எண்ணப்படுகிறார். கலிபா, சுல்தான் இருவரின் பெயர்களும் குட்பாவில் (வெள்ளிக்கிழமை வழிபாடுகள்) உள்ளூர் இஸ்லாமியத் தலைவர்களால் படிப்பது வழக்கமாக இருந்தது.

தொடக்கத்தில் ஆக்ராவிலிருந்து பிறகு டெல்லியிலிருந்து 1707 வரை ஆட்சி புரிந்த டெல்லி சுல்தான்களை 1526ல் முகலாயர்களால் இடமாற்றம் செய்யப்பட்டனர். அதற்குப் பின்பு முகலாய ஆட்சி அந்த வம்சம் முடிவுறும் பொழுது அதாவது 1857 வரை தொடர்ந்து ஆட்சி செய்தது. முகலாயர்கள் எந்த வித பதவியும் கேட்கவில்லை ஆனால், கலியாவிற்கு வெகுமதிகளை தொடர்ந்து அனுப்பினார்கள். அவர்களும் தங்களுடைய சொந்த பெயரில் ‘குட்பாவை’ படித்துக் கொண்டார்கள்.

இருந்தாலும், உள்ளூர் ஆப்கானிய ஆட்சியாளர் ஷெர்ஷா என்பவர் மொகலாய ஆட்சியாளரான ஹிமாயுனிடம் சவால்விட்டு அவரை டெல்லி அரியணையிலிருந்து 15 வருடங்களாக ஒதுக்கி வைத்திருந்தார். ஷெர்ஷாவினுடைய ஆட்சி பல குறிப்பிடத்தக்க சாதனைகளுக்கு முனைப்பாக உள்ளது. இவற்றினுள் பல சாலை கட்டிப்பணிகள் சோனார்களிலிருந்து (இப்பொழுது பங்களா தேஷில் உள்ளது) அட்டாக் (இப்பொழுது பாகிஸ்தானில் உள்ளது) வரை பரவியுள்ள டெல்லி மற்றும் ஆக்ரா வழியாக 1500 கி.மீட்டரில் அமைந்துள்ள சரக்-ஐ-அஜாம் அல்லது கிரேண்ட் ட்ரங்க் ரோடு மிக முக்கியமானது. ஆக்ராவிலிருந்து பர்ஹான்பூருக்கும், ஆக்ராவிலிருந்து மார்வாருக்கும் லாகூரிலிருந்து முல்டானுக்கு செல்லக்கூடிய மற்ற சாலைகளும் இருந்தன. இவர் வெளியிட்ட அழகான தங்க நாணயம், வெள்ளி நாணயம் மற்றும் செப்பு நாணயங்கள் முகலாய அரசர்களால் பின்பற்றப்பட்டது.



1556 லிருந்து 1605 வரை ஆட்சி செய்த முகலாயப் பேரரசர் அக்பர், இந்திய வரலாற்றில் ஒரு சிறந்த அரசராவார். இன, மத மற்றும் பண்பாடுகளை ஒரு சார்பாக ஊக்கங் கொடாமல் மன இணக்க நிலையை தனது குடிமக்களிடையே வளர்த்திட மனமார்ந்த முயற்சிகளை செய்தார். இந்துக்களுடன் நட்பு உறவை வளர்ப்பதற்கு முயற்சி செய்தார். தனது ஏகாதிபத்திய விருப்பங்களை நிறைவேற்ற, ராஜபுத்திர ஆட்சியாளர்களுடன் திருமண உறவை ஏற்படுத்திக் கொண்டார். நாட்டின் அரசியலமைப்பை ஐக்கியமடைய செய்தல் மற்றும் சீரான நிர்வாக அமைப்பை கொண்டு எல்லா அதிகாரங்களைக் கொண்ட மத்திய அரசை ஏற்படுத்தியது இவரது சிறந்த பங்களிப்பாகும். அக்பர், கலை, கட்டடக்கலை மற்றும் கல்வியறிவு ஆகியவற்றின் சிறந்த ஆதரவாளர். மத சார்பற்ற முடியாட்சி மன்னராக இருந்ததால், அவரும் பல்வேறு சமயத்தின் கருத்துகளை உள்ளடக்கிய தீன் - ஐ - இலாஹி என்ற புதிய சமயத்தை தொடங்கினார். ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் வெவ்வேறு சமயத்தை சாாந்த அறிஞர்கள், பேரரசரால் எழுப்பப்படும் சமய பிரச்சனைகளை விவாதிக்க வந்தனர். இது ஆக்ராவிலுள்ள பதே பூர்சிக்ரி என்னுமிடத்திலுள்ள இபடட்கானாவில் நடந்தது. அக்பர் கல்வியறிவற்றவராக இருந்தாலும். அறிஞர்களையும் மற்றும் கற்றவர்களையும் ஆதரித்தார். இவரது அரசரவையில் முல்லா - டு - பியாசா, ஹகின் ஹிமாம் அப்துர்ரஹிம் கான் இ களான், அப்துல் தயல், தான்சென், ராஜா தோடர்மால், ராஜா மான்சிங், பைசி மற்றும் பீர்பால் போன்ற ஒன்பது நவரத்தினங்கள் இருந்தனர். அக்பருடைய கொள்கையான தாராள மனப்பான்மை மற்றும் சகிப்புத்தன்மை அவருடைய பின் தோன்றல்களான ஜஹாங்கீர் மற்றும் ஹாஜஹானால் தொடரப்பட்டது. இருந்தாலும் இந்த கொள்கை ஔரங்கசீப்பினால் கைவிடப்பட்டது.

ஔரங்கசீப்பின் குறுநோக்குடைய கொள்கைகள் மற்றும் நாட்டின் எல்லா பக்கங்களிலும் முடிவில்லாத போர்களின் (குறிப்பாக தென் இந்தியாவில்) விளைவுகள் முகலாய பேரரசை பல சிறு துண்டுகளாக்கின.

தெற்கில் மராத்தியர்களின் எழுச்சி, நாதிர்ஷா மற்றும் அகமது ஷாவின் படையெடுப்புகள், வடமேற்கு இந்தியாவில் சீக்கியர்களின் எழுச்சி மற்றும் அரசவையில் பெருங்குடி மக்களிடையே கொந்தளிப்பு ஆகியவை முகலாய ஆட்சியை அழித்தன. பொருளாதாரத்தை பொருத்து உலகிலேயே அதிக செல்வம் வைத்திருந்த நாடு மற்றும் பெருமளவில் ஏற்றுமதி செய்த நாடு இந்தியா. ஆனால் இவையெல்லாம் நவீனமயமாக்குதல் என்ற செயல்பாட்டில் விடப்பட்டுள்ளது.

## 4.4 பண்பாட்டு வளர்ச்சி

இக்காலத்திய ஆட்சியாளர்கள் கலை மற்றும் கட்டடக்கலைத் துறையில் தீவிரமாக ஆர்வம் கொண்டிருந்தார்கள். இடைக்காலத்தின் பண்பாட்டுத் தொகுதிகளின் தனிச் சிறப்புகள் இந்தத்துறையில் ஏராளமாக சான்றளித்துள்ளன. இந்திய - இஸ்லாமிய பாணியின் இணைவு, புதிய கட்டிடக்கலை பாணியாக அறியப்படுகிறது. இந்தோ - இஸ்லாமிய கட்டடக்கலையின் குறிப்பிடத்தக்க சிறப்பம்சங்களாவன

(அ) மாடவிதானம்

(ஆ) உயரமான கோபுரங்கள் மசூதி அல்லது ஸ்தூபி (stupa)

(இ) வில் வளைவு

(ஈ) உட்கூரை

முகலாய மன்னர்கள் இயற்கையை பெரிதும் விரும்பியவர்களாக இருந்தனர். அவர்கள் அழகான கோட்டைகள் கட்டுவது மற்றும் தோட்டங்கள் அமைப்பதில் தங்களது நேரத்தை செலவிடுவதில் இன்புற்றார்கள். மிகவும் பிரசித்தி பெற்ற ஹாலிமார் பாக் மற்றும் நிஷத் பாக்

ஆகிய தோட்டங்கள் நமது பண்பாட்டு மரபின் முக்கிய மூலக் கூறுகளாகும். படி நிலைகள் அல்லது சமதளங்களைக் கொண்ட தோட்டங்கள் அங்கு இருந்தன. இறுதியாக அங்கு நீர்வழிகள் மற்றும் நீர் ஊற்றுகள், ஒன்றையொன்று குறுக்காக தோட்டங்களில் வெட்டிச் செல்கின்றன. ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு நீர் அலை அலையாகச் சென்று. சிற்றறுவியில் விழச் செய்து, பின்புறமாக அமைந்துள்ள எரிகின்ற விளக்கின் பிரகாசமான ஒளியுடன் நுகர்வதாகத் தோன்றுவது மற்றும் வழி மண்டல முழுவதற்கும் சிறப்பான கவர்ச்சியைக் கொடுக்கிறது. இது மங்கிய ஒளியில், வடிந்த நீர் சரிவாக விழச் செய்ய முடியும். இந்த வகை தோட்டத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டு, லாகூரிலுள்ள (இப்பொழுது பாகிஸ்தானில்) உள்ள ஹாலிமார் தோட்டமாகும். லாகூர் தோட்டம் மூன்று நிலைகளைக் கொண்டுள்ளது. ஆனால் பின்ஜ் ஜோரில், சண்டிகர் - கல்கா ரோட்டில் அமைந்துள்ள ஏழு நிலைகளைக் கொண்ட ஒரு சிறந்த எடுத்துக்காட்டான தோட்டத்தை இந்தியாவில் காணலாம். இது ஆங்கிலேயர்களை மிகவும் கவர்ந்தது. அவர்கள் நீயூ டெல்லியில் வைஸ் - ரீகல் லாட்ஜில் (இப்பொழுது ராஸ்டிரபதி பவனில் உள்ளது) மூன்று நிலை தோட்டத்தை உருவாக்கினர். இதே போன்று 20-ஆம் நூற்றாண்டில் மைசூரில் பிருந்தாவன் தோட்டம் கட்டப்பட்டது.

வண்ணநிறங்களைக் கொண்ட கற்களை சலவைக்கல்லின் மேல்பரப்பி மெரு கூட்டும் வேலை, ஷாஜஹான் காலத்தில் மிகவும் பிரபலமடைந்திருந்தது. டெல்லியிலுள்ள செங்கோட்டை மற்றும் ஆக்ராவிலுள்ள தாஜ்மஹால் இதற்கு சிறந்த உதாரணங்களாகும். இது தவிர பதேபூர் சிக்ரியின் கட்டடத் தொகுதிக்கு உட்பட்ட ஆக்ரா மற்றும் லாகூரிலுள்ள கோட்டைகள் டெல்லி மற்றும் லாகூரிலுள்ள மசூதிகள் ஆகிய கட்டமைப்புகள் நமது மரபின் ஒரு பகுதிகளாகும். மசூதிகள் அரசர்களின் கல்லறைகள் மற்றும் தர்காக்கள், இக்காலத்திய இயற்கை காட்சியை மேம்படுத்தின.

## நாணயம்

கலையின் மற்றுமொரு அம்சமான நியுமிஸ்மேட்டிக்ஸ் நாணயங்களைப் பற்றிய படிப்பு வரலாற்றில் எந்தக் காலத்தைப் பற்றின தகவல்களையும் கொடுக்கக் கூடிய ஒரு சிறந்த முக்கியத்துவம் வாய்ந்த தகவல் கூறாக நமக்கு அமைகிறது. முஸ்லீம் அரசர்களின் நாணயங்கள் வரலாற்றில் மிக்க மதிப்புடையவைகளாகும். அவர்களுடைய வடிவங்கள். கையெழுத்துக் கலை மற்றும் அச்சடிப்பு குறியீடுகள் நமக்கு இக்காலத்தின் கவனத்தைக் கவரக் கூடிய ஏராளமான தகவல்களைக் கூறுகின்றன. அரசர்களின் பட்டங்கள் பெயர்கள், அச்சடிக்கின்ற இடம் ஆகியவற்றிலிருந்து, மன்னரின் இராஜ்ஜியம், அவனது பதவியின் நிலையைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளலாம். முகமது துக்ளக்கின் நாணயங்கள் குறைந்த பட்சமாக 25 பல்வேறு வகைகளில், டெல்லி, தௌலத்தாபாத் மற்றும் பல்வேறு மாகாண தலைமையிடங்களில் அச்சிடப்பட்டன. நாணயத்தின் மேல் காணப்பட்ட சில கட்டுக்கதைகள் மிக சுவாரஸ்மாக உள்ளன. படைவீரன் கடவுளை முன்னிறுத்தி இருப்பது மற்றும் அவன் சுல்தானுக்கு கீழ்படிவது, இரக்கத்திற்கு கீழ்படிவது போன்றதாகும்.

## இப்பகுதிக்கான கேள்விகள் 4.2

கோடிட்ட இடத்தை நிரப்புக

1. கலிபா மற்றும் சுல்தானின் பெயர்கள் __________ல் படிக்கப்பட்டன.
2. உள்ளூர் ஆப்கானிய ஆட்சியாளர், முகலாய மன்னர் ஹிமாயுனிடம் சவால் விட்டு அவரை டெல்லி அரியணையிலிருந்து 15 ஆண்டிற்கு விலக்கி வைத்தார்.

3. அக்பர் தனது ஆழ்ந்த விருப்பத்தை பூர்த்தி செய்ய _________ அரசர்களுடன் திருமண ஒப்பந்தத்தை செய்து கொண்டார்.
4. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் புதிய டெல்லியிலுள்ள ராஷ்டிரபதிபவனை _________ என கருதப்பட்டது.
5. சலவைக்கல்லின் மீது வண்ண நிறங்களைக் கொண்ட கற்களை பரப்பி மெரு கூட்டும் வேலை _________ காலத்தில் மிகவும் பிரபலமடைந்திருந்தது.

## 4.5 பக்தி இயக்கம்

சூபிக்கள் அக்காலத்தில் மிகவும் புகழ்பெற்ற சமய குருக்கள் அல்லர். அங்கு பக்தித் துறவிகளும் இருந்தனர். அவர்களுடைய போதனைகளும் சூபிக்களின் போதனைகளைப் போன்று ஒரே மாதிரியாகத் தான் இருந்தது. ஆனால் அவர்கள் வெகுகாலமாக போதித்து வந்தனர். அவர்கள் கைவினைஞர்கள் கைத்தொழில் செய்பவர்கள் மற்றும் வாணிகர் களிடையே மிகவும் பிரபலமானவர்கள். கிராமத்திலுள்ள மக்களும் அவர்களது போதனைகளைக் கேட்பதற்கு ஒன்று திரண்டனர்.

சூபி மற்றும் பக்தி துறவிகள் பொதுவான எண்ணங்கள், செயல்களைக் கொண்டிருந்தனர். இறைவனுடன் ஒன்றுபடுதலே, அவர்களது முக்கியமான நம்பிக்கை ஆகும். இறைவனுடன் உறவுகொள்ள அன்பும் ஆழ்ந்த பக்தியும் அடிப்படை என வலியுறுத்தினர். இதை எல்லாவற்றையும் நிறைவேற்ற குரு அல்லது பிர் தேவைப்பட்டது.

பக்தி முனிவர்கள் சமயத்தின் நெகிழ்சியற்ற தன்மை மற்றும வழிபாட்டின் நோக்கங்களையும் கண்டித்தார்கள். அவர்கள் சாதிபாகுபாடின்றி சமயக் கூட்டங்களில் பெண்கள் சேருவதற்கு ஆர்வமூட்டினர். பக்தி முனிவர்கள் சாதாரணமானவர்களுக்கும் எளிதாக்க அவர்களின் வட்டார பேச்சு மொழியிலேயே முழுமையான போதனை செய்தனர்.

பெரும்பான்மைபான பக்தி முனிவர்கள் தாழ்ந்த சாதியிலிருந்து வந்தவர்கள். ஆனால் பல்வேறு பின்னணியை சார்ந்தவர்களாவர். பலர் கைவினைஞர்களது பிறப்பிடத்தை கொண்டவர்கள் அல்லது குறைந்த வளமுடைய இனத்தைச் சார்ந்த உழவர்களாவர். அவர்கள் மனிதர்கள் மற்றும் சமயங்களிடையே சகிப்பு தன்மை அவசியம் என வலியுறுத்தினர்.

தெற்கில் நீண்ட நாட்களாகவே, பக்தி இயக்கம் பற்றி தெரியப்பட்டது. பக்தி கருத்துகளை, சமயப்பாடல்கள் மற்றும் கதைகளின் மூலம் வளமான சமய மரபைக் கொண்ட தமிழ் ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களால் போதிக்கப்பட்டது. நீங்கள் இவர்களைப் பற்றி, இந்த புத்தகத்தில் பிறகு படிப்பீர்கள்.

### குருநானக்



நன்கனா என்று தற்போது அழைக்கப்படுகிற தால்வண்டி என்ற கிராமத்தில் கட்ரி குடும்பத்தில் குருநானக் பிறந்தார். குருநானக் கணக்கியலில் பயிற்சி பெற்றிருந்தாலும், சூபிக்கள் மற்றும் புனிதர்களுடன் கூடியிருத்தலை பெரிதும் விரும்பினார். பிறகு சில சமயங்களில் ஆன்மீகத் தொடர்பான காட்சிகளை கண்டார். அவர் துறவிகள் மற்றும் பிர்களுக்காக வீட்டை விட்டு வெளியேறினார். அவர் சமயப் பாடல்களைத் தொகுத்து மற்றும் தன்னை விட மிக முக்கியமாக கருதப்படுகிற 'ரபஸ்' என்ற இன்னிசைக் கருவியுடன் அந்தப் பாடல்களை பாடினார். இவருடைய சமயப் பாடல்கள் இன்றும் போற்றப்படுகின்றன. இவர் அன்பு மற்றும் ஒரே கடவுளின் மீதுள்ள ஆழ்ந்த பக்தியை வலியுறுத்தினார். அவர் உருவ வழிபாடு, புனித யாத்ரிகைகள், பலியிடுதல் மற்றும் சடங்குகள்

அலகு - II

காலங்களின் வழியாக வரலாறும் பண்பாடும்

குறிப்புகள்

ஆகியவை இறைவனை அடைவதற்கான வழிகள் என்பதை வன்மையாக கண்டித்தார். இறைவனை அணுகு வதற்கான முதல் நிலை தூய்மையான பண்புகள் மற்றும் நடத்தை என வலியுறுத்தினார். ஒருவர் இல்லறத்தில் தன் கடமைகளைச் செய்யும் பொழுது அவன் ஆன்மீக வாழ்க்கையும் அடைய முடியும் என நம்பினார்.

## ராமானுஜர்

தெற்கிலிருந்து வந்த இராமானுஜர் சாதாரண மக்கள் பேசும் மொழியிலேயே கற்பித்தார், இவருடைய சீடரான ராமநந்தர் தனது குருவின் நற்செய்தியை இந்தியாவின் வடபகுதிகளுக்கு எடுத்துச்சென்றார்.

## ராமாநந்தா



ராமாநந்தா அலகாபாத்தில் பிறந்து மற்றும் வாரணாசியில் கல்வி பயின்றார். இவர் இந்த இரு இடங்களிலும் போதித்தார். இவர் இந்து சமயத்தின் தீய வழக்கங்கள் மற்றும் செயல் நடைமுறைகளை விடுவிக்க விரும்பினார். இறைவனின் கண்களில் எல்லா மனிதர்களும் சமம் மற்றும் ஒருவரும் உயர்ந்த வகுப்பில் பிறந்தவருமல்ல அல்லது தாழ்ந்த வகுப்பில் பிறந்தவரும் அல்லர். இவருடைய சீடர்கள் சமுதாயத்தில் வெவ்வேறு படி நிலையில் இருந்தவர்கள். உதாரண மாக கபீர் ஒரு நெசவாளர், சாதனா ஒரு கசாப்புக் கடைக்காரர், ரவி தாசா என்பவர் செருப்பு தைக்கும் தொழிலாளி மற்றும் சேனா என்பவர் நாவித வேலை செய்பவராவர்.

## கபீர்



கபீர் ராமாநந்தரின் விரும்பத்தகுந்த சீடராவார். நானக்கைப் போல இவரும் பயன்பாட்டிலுள்ள சமூக நிலைகளை குறை கூறி, மற்றும் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு வேண்டுகோள் விடுத்தார். முஸ்லீம் நெசவாளரின் மகனான கபீர், உருவ வழிபாடு, நாமாஸ், புனித பயணங்கள் அல்லது ஆறுகளில் குளிப்பது போன்ற சம்பிரதாய வழிபாடுகளை வன்மையாக கண்டித்தார். எல்லோரும் ஒத்துக் கொள்ளக்கூடிய மற்றும் எல்லா சமயத்தையும் ஒன்றுபடச் செய்கிற சமயத்தை போதிக்க விரும்பினார். கடவுளின் ஒற்றுமையை வலியுறுத்தினார். அவர் இறைவனை ராமா, கோபிந்தா, ஹரி மற்றும் அல்லா என பல்வேறு பெயர்களில் அழைத்தார். நீங்கள் அவருடைய "தோகாக்கள் அல்லது ஈரடிச் செய்யுள்களை இந்தியில் படித்திருக்கலாம்.

## சைதன்ய மஹா பிரபு



சைதன்யர் என்பவர் வங்காளத்திலிருந்து வந்த துறவியாவார். அவர் கிருஷ்ண கடவுளின் பக்தராவார். அவர் ஒரு பிராமணராக இருந்தாலும் சாதி முறையை கண்டித்தார் மற்றும் எல்லோரும் சமம் என்பதை வலியுறுத்தினார். அவர் உண்மையான வழிபாடு என்பது அன்பு மற்றும் அர்ப்பணிப்பில் உள்ளது என்பதை மக்கள் அறிய வேண்டும் என எண்ணினார். அவர் மெய் மறந்த நிலையில் கிருஷ்ண கடவுளை போற்றி புகழ்ந்து, பக்தி பாடல்களை பாடுவது வழக்கமாக இருந்தது.





## மீராபாய்



மற்றுமொரு பக்தி துறவியான மீராபாய் கிருஷ்ண கடவுளை வழிபட்டு, பாடல்களைத் தொகுத்து மற்றும் அவரைப் புகழ்ந்து பாடியுள்ளார். சைதன்யாவைப் போல இவரும் இறைவனின் அன்பில் மெய் மறந்த நிலைக்கு சென்று விடுவார்.

## நாமதேவா

நாமதேவா ஒரு தையற்காரர், அவர் மராத்தியில் எழுதியுள்ளார். இறைவனின் மீது அளவில்லாத அன்பு மற்றும் இறைவனுக்கு அர்ப்பணித்தல் ஆகியவற்றை இவரது கவிதை கூறுகிறது.

## பக்தி இயக்கத்தின் செல்வாக்கு

பக்தி இயக்கம் எவ்வாறு மக்களிடையே பிரபலமடைந்தது? உயர்வு மனப்பான்மை கொண்ட பிராமணர்கள், சாதிமுறைக்கு அறை கூவல் விடுத்தது ஒரு முக்கியமான காரணமாகும். சூபி புனிதர்கள் போதித்த சமத்துவம் மற்றும் சகோதரத்வ கருத்துகளையும் ஏற்றுக்கொண்டனர். மக்கள் பழமையான சமயத்தினால் அதிக நாட்களுக்கு திருப்தி அடையவில்லை. அவர்களுடைய பகுத்தறிவு மற்றும் உணர்ச்சி இரண்டிலும் திருப்தி தரக்கூடிய சமயத்தை விரும்பினார்கள்.

எல்லா பக்தி துறவிகளும் கடவுள் ஒருவரே என வலியுறுத்தினர். அவர்கள் அர்ப்பணித்தல் மற்றும் பக்தி தான் இறைவனை அடைவதற்கு வழி என்றும் மற்றும் எந்த சடங்குகளிலும் இல்லை என கூறினர். அவர்கள் சடங்குகள் மற்றும் பலிகளை கண்டனம் செய்தனர்.

வடஇந்தியாவில் இது நிர்குண பக்தி மற்றும் சகுண பக்தி என இரண்டு கிளைகளாக வளர்ச்சியடைந்தது. நிர்குண பக்தர்கள், உருவமில்லாத கடவுளின் பக்தர்களாக இருந்தாலும் கூட அவரை ராமா, கோவிந்தா, ஹரி அல்லது ரகுநாதா என வெவ்வேறு விதமாக அழைத்தனர். இவர்களில் கபீர் மற்றும் நானக் மிகவும் கவரப்பட்டவர்கள். சகுண பக்தர்கள், தசரதனின் மகனான ராமனின் பக்தர்கள் அல்லது தேவகி மற்றும் வாசுதேவனின் மகனான கிருஷ்ணனின் பக்தர்களாவர். ராமரை தன்னுடைய புகழ் பெற்ற 'ராம சரித மனசில்' போற்றிய துளசிதாஸ், மற்றும் கிருஷ்ண கடவுளை தன்னுடைய புகழ்பெற்ற 'சுர்சாகரில்' புகழ்ந்து பாடிய சூர்தாசும், சகுணா பக்தர்களில் குறிப்பிடத்தக்கவராவர். கிருஷ்ண கடவுளின் பக்தனான முஸ்லீம் கவிஞன் ரக்ஷனும் இதே மரபினைச் சார்ந்தவர் தான்.

பக்தி இயக்கத்தின் முக்கியமான முதல் அம்சம் ஒரே கடவுள் மற்றும் மனித இனத்தின் சகோதரத்துவம் என்ற கோட்பாடு ஆகும். இது சாதிமுறை அல்லது பாலின வேற்றுமை அடிப்படையில் எவரையும் வேறுபடுத்தவில்லை. அனைத்து இடங்களில் வியாபித்துள்ளவர் மற்றும் பக்தர்களின் பிரச்சனைகளைத் தீர்க்கக் கூடிய சக்தி உடையவருமான, இறைவனுக்குள் சரணடைவதே இரண்டாவது முக்கிய அம்சமாகும். நல்ல ஒழுக்கமுள்ள வாழ்க்கையுடன் தனிப்பட்ட தீவிரமான பக்தியை இறைவனுக்கு செலுத்துவது, முன்றாவது முக்கிய பக்தி அம்சமாகும். ஓயாது இறைவனின் பெயரை உச்சரிப்பது ஆன்மாவை தூய்மைப்படுத்துகிறது மற்றும் ஒருவனை இறைவனின் இரக்கத்திற்கு ஆயத்தப்படுத்துகிறது. சொர்க்கம் அல்லது மோட்சத்தை உண்மையான பக்தன் விரும்புவதில்லை. அவன் இறைவனின் பெயரை உச்சரிப்பதற்காகவும் மற்றும் இறைவனைப் புகழ்ந்து பாடுவதற்காகவும் மறுபடியும் மறுபடியும் பிறக்க விரும்புகிறான்.

இதனுடன் மக்களுக்கு நம்பிக்கை, பலம் மற்றும் உள்ளார்ந்த துணிவுகளை வழங்குவதற்காக குரு அல்லது ஆன்ம குரு வந்தார். இவர் பக்தி என்ற பாதையில் முன்னேறி

சென்றவராகவும் இறைவனை உணர்ந்த வராகவும் மேலும் மற்றவர்கள் இறைவனை அடையத் தூண்டுபவராகவும் இருந்திருக்க வேண்டும். இது 'பாகல்' என்ற முறையைக் கொண்டுவந்தது. பாகல் என்பது புனிதப் படுத்தப்பட்ட நீரை குருவினால் மாணவன் அல்லது சீடனை தெய்வ பக்திக்குப் பயிற்சி பெற இட்டு செல்ல அனுமதிக்கப் படுவதற்கு அடையாளமாக வழங்கப்படுகிறது. சீக்கியர்கள் 'காண்டே கா பாகல்' என்று அழைக்கப்பட்ட, வாள்களைக் கழுவும் சமய சடங்கை பீர் முந்தி வழக்கம் (துறவி வீரர்கள் கோட்பாடு) பரிணாம வளர்ச்சியடைய நிறைவேற்றினார்கள். சூபிக்களின் பழக்கங்கள் கருத்துகள் போன்றே பக்தி மரபின் சில அம்சங்களை உங்களால் கவனிக்க இயலும்.

இடைக்காலத்திய புனிதர்கள் மற்றும் மெய்ஞானிகளின் சமய கவிதைகள் அவர்கள் எந்த சமய நம்பிக்கைகளை நம்புகிறவர்களாக இருந்த போதிலும் தெளிவான அற்புதமான உணர்ச்சிகளை வெளிப்படுத்தி ஆன்மீக பக்தியை இந்தியா முழுவதும் பரப்பினர். அவர்களது இலக்கியத் தொகுப்புகளான கீதங்கள், கவாலி முதலியன மக்களை ஒற்றுமைபடுத்த வழங்கப்பட்டதேயன்றி, வேறு எதுவும் செய்ய முடியவில்லை. இது, வட்டார மொழிகளின் வளர்ச்சியையும் தூண்டியது.

### இப்பகுதிக்கான கேள்விகள் 4.4

கீழே உள்ள வினாக்களுக்கு விடையளி

1. பக்தி இயக்கத்தின் இரண்டு முக்கியமான கிளைகள் எவை?
2. முக்கியமான நிர்குணா மற்றும் சகுணா பக்தி கவிஞரின் பெயரைக் கூறுக?

## 4.6 நாட்டுப்புறக் கலைகள்

நாட்டுப்புறமக்கள், தங்களுடைய ஆக்கத்திறன்களை காட்சி படுத்தவதற்கு சந்தர்பத்தைப் பெற்றுக்கொண்டார்கள். பல்வேறு சமயங்களில் விவசாய பணிகள். உதாரணமாக நிலத்தை உழுதல், இள மரக்கன்றுகளை நடுதல், பருத்தியை பெருக்குதல், களை எடுத்தல் மற்றும் பல சமூகப் பணிகள், பாடுவதற்கும் மற்றும் நடனம் ஆடுவதற்கும் வாய்ப்புக்களை வழங்கின. இந்த சத்தம் உங்களுக்கு பரிச்சயமானவையாக உள்ளதா? ஆம் நீங்கள் இன்றைய நாளில் கொண்டாடும் திருவிழாக்கள் மற்றும் சடங்குகள் கடந்த காலத்திலிருந்தே காலத்திற்கு தகுந்த தேவையான மாறுதல்களுடன் தொடர்ந்து நடத்தப்பட்டன.

மழையின் வருகை, நடனம் மற்றும் மகிழ்ச்சியை உருவாக்கும் தருணங்களாக ஆயின. கோவில்களில் கடவுள்கள் வணங்கப்பட்டு சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டன. இது ஊஞ்சலாடி மகிழ்வதற்கும் ஒரு தருணமாக அமைந்தது. இதைப் போலவே பெண்கள் நூற்பு சக்கரங்களில் மற்ற பெண்களுடன் இணைந்து இரவு வெகுநேரம் வரை பாடிக் கொண்டு இருந்தனர். இது இந்தியாவில் பெரும்பான்மையான கிராமங்களில் காணக்கூடிய சாதாரண காட்சியாகும்.

பெரும்பாலும் ஒவ்வொரு வட்டாரமும் அதனின் விசித்திரமான நடனத்தை தனிப்பட்ட பண்பு களுடன் வளரச் செய்தன. இவ்வாறாக கார்பா, கல்பேலா, பாங்கரா கீதா, மூங்கில் நடனம், லாவனி மற்றும் ஏராளமான நடன படிவங்கள் வரத் தொடங்கின. இன்று குடியரசு கொண் டாட்டங்கள் பிற பண்டிகை நாட்களில் இவற்றில் சிலவற்றை இடம்பெற செய்கின்றனர்.

பெண்களுக்கு முறையான கல்வி முக்கியம் என கருதப்படாவிடினும், இது அவர்களை பல்வேறு துறைகளில் அவர்களது திறமைகளை காண்பிப்பதற்கு தடை செய்யப்படவில்லை.

அவர்கள் தங்களுடைய கைப்பின்னல் படைப்பாற்றலை காட்சிப்படுத்தினர். இராஜஸ்தானில் பெண்கள் ஓதானிஸ், ஷர்ட்டுகள் காக்ராசில் அழகான வடிவமைப்பு முறைகளை கொண்டு வந்தனர். இராஜதானியர்களும் ஆண், பெண் இருபாலரும் பயன்படுத்திய கழுத்துக்கச்சை மற்றும் சாயமேற்றிய துணிகளில் அழகான வடிவமைப்பை உருவாக்கினர். இன்றைய நாளில் கூட இந்தியாவில் மிகப்பெரும் அளவில் வண்ண நிறங்களில் உடுத்தியது இராஜஸ்தானியர்கள் தான் என்பதை நாம் காணலாம். அவர்கள் தங்களது விலங்குகள் (குதிரைகள், எருதுகள், ஒட்டகங்கள், யானைகள் கூட) அலங்கரிக்கும் விதத்திலிருந்து, அவர்களது மித மிஞ்சிய செலவளிக்கும் தன்மையை காணமுடிகிறது. பஞ்சாபில், பெண்கள் அழகான பூங்காரிஸ்களை உருவாக்கினர். ஷர்ட்டுகள் சல்வார்கள் ஓதானிகள், புடவைகளில் கூட வேலைப்பாடு லக்னோவைச் சுற்றிலும் இருந்தன. நாடக ஆசிரியர்களைப் பற்றி பாரதா தன்னுடைய 'நாட்டிய சாஸ்திராவில்' (கி.பி. 5-ஆம் நூற்றாண்டு) குறிப்பிடப்பட்டது, முழுவதுமாக அழியவில்லை என தெரிகிறது. 'தமாஷா' மற்றும் லவாணி நாட்டிய நாடக வடிவமைப்புகள் மஹாராஷ்டிராவில் வளர்ச்சியடைந்தன. மத்திய இந்தியாவில் பாண்ட வாணிகள் மற்றும் வட இந்தியாவில் மேரசிஸ்கள் இத்தகைய கலைப் படிவங்களை சிறிதளவு மாற்றத்துடன் பயன்படுத்தினார்கள். பொம்மாலட்டக்காரர்கள், கவிஞர் மற்றும் அபிநயகூத்து நடத்துபவர்களும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சென்று மக்களை வெவ்வேறு வழிகளில் மகிழ்வித்தார்கள். கழைக் கூத்தாடிகள் மற்றும் ஜால வித்தை செய்பவர்களும் ஒரு இடத்திலிருந்து வேறோரு இடத்திற்கு செல்வதைக் காணமுடியும். தொன்றுதொட்ட காலத்திலிருந்து மல்யுத்த விளையாட்டு இந்தியா முழுவதும் பிரபலமாகிக் கொண்டிருக்கும் போது சில பகுதிகளில் வீர விளையாட்டு கலைகள் வளர்ச்சியடைந்தன.

### இப்பகுதிக்கான கேள்விகள் 4.5

1. ஏதாவது இரண்டு முக்கியமான நாட்டுப்புற நடனத்தின் பெயரைக் கூறு?
2. இந்தியாவில் வளர்ச்சி அடைந்த எதாவது ஒரு முக்கியமான வகையைச் சார்ந்த கைப்பின்னல் வேலையின் பெயரைக் கூறு?

## 4.7 ஓவியம்

இஸ்லாமிய பண்பாட்டினால் தாக்கத்தை ஏற்படுத்திய மற்றுமொரு பகுதி ஓவியமாகும். ஹீமாயூன் அகதியாக 12 ஆண்டுகளுக்கு மேல் பெர்சியாவில் கழித்தார். மறுபடியும் அவர் 1555ல் டெல்லி ஆட்சியாளராக ஆனபொழுது, அவர் ஓவியர்களைத் தன்னுடன் இந்தியாவிற்கு அழைத்துவந்தார். அவர்களில் கைப்பிரதிகளுக்கு வண்ணம் தீட்டுதலுக்கு ஊக்கமளித்த மிர் சையத் அலி மற்றும் அப்தஸ் சமாத் ஆகியோர் பிரசத்தி பெற்றவர்களாவர். 1200 ஓவியங் களைக் கொண்ட டஸ்டன்- இ - அமீர் ஹம்ஜா இதற்கு உதாரணமாகும். இந்தக் காலமும் சொல்லோவியம் மற்றும் நுண்படிவ ஓவியங்கள் மலர்ச்சிக்கு சான்று பகர்கின்றன. இருந்தாலும் பெருவியப்புக்குரியவை என்னவென்றால் சில ஓவியர்கள் செவ்வியல் தன்மையிலான ராகங்களுக்கு வடிவம் மற்றும் நிறங்களை கொடுத்து கருத்துருவின் சாரத்தை இசையாக்க முயன்றார்கள். இதே போன்று காலங்கள் அல்லது பாரமாசா ஓவியங்களும் கலைக்குரிய படிவங்களைப் பெற்றன. நீங்கள் எப்பொழுதாவது இந்தக்கலைஞர்களின் படைப்பாற்றலை மதிப்பீடு செய்துள்ளிர்களா? உலகின் எந்த பகுதியிலும் இல்லாத ஒரு வேளை சீனாவைத் தவிர கலைஞர்கள் இசை அல்லது காலங்களை ஓவியமாக வரைவதற்கு முயற்சி செய்தார்கள். அக்பர், ஜஹாங்கீர் மற்றும் ஷாஜஹான் இத்தகைய கலைஞர்களுக்கு தொடர்ந்து

ஆதரவளித்தனர் மற்றும் இதன் விளைவாக, முகலாய தனி மரபுக் குழுவின் வளர்ச்சி தொடர்ந்தது. பரந்த மனப்பான்மை கொண்ட ஆட்சியாளரான அக்பர் தனது ஆதரவை ஓவியத்திற்கு அதிகரித்தார். இவர் தஸ்வந்த் மற்றும் பசவன்லால் போன்ற ஏராளமான இந்து ஓவியர்களையும் வேலைக்கு அமர்த்தினார். இதன் விளைவாக இக்காலத்தில் அங்கு பாரசீக மற்றும் இந்திய பாணிகள் (ஓவியர்கள்) ஒன்றாகின. இந்திய ஓவியங்களின் மீது இருந்த ஐரோப்பாவின் செல்வாக்கும் கவனிக்கப்பட்டது.

சிறந்த ஓவியரான ஜஹாங்கீரின் கீழ் முகலாய தனி மரபுக்குழுவின் ஓவியங்கள் புகழின் உச்சியை அடைந்தன. இவரது அரசவை, புகழ் மிக்க ஓவியர்களான உஸ்தாத் மற்றும் அப்துல் ஹாசன் உடன் அலங்கரிக்கப்பட்டது. மன்சூர் என்பவர் அவரது நுண்கலை ஓவியத்திற்கு பிரசத்தி பெற்றவர் இருந்தாலும் ஔரங்கசீப் அவருடைய பழமையான கருத்துகள் மற்றும் அரசியல் சிந்தனைகள் இசை மற்றும் ஓவியங்களுக்கு கொடுத்த ஆதரவை நிறுத்திவிட்டார். சில இளவரசர்களும் தங்களுடைய மாஸ்டர்களை போலவே ஓவியர்களுக்கு ஆதரவை அதிகரித்தனர். இவ்வாறாக முகலாய தனிமரபுக்குழு தவிர ராஜபுத்திர மற்றும் பஹாரி தனிமரபுக்குழுவும் ஆதரவை பெற்றன. சமுதாயத்தில் மேற்குடியில் பிறந்தவர்கள் கூட ஓவியர்களை ஆதரிக்கத் தொடங்கினர். இதன் விளைவு ஹவேலிஸ் (மாளிகைகள்) மற்றும் கோவில்கள் அபரிமிதமாக அழகு படுத்தப்பட்டது. ராஜஸ்தானில் இத்தகைய மாளிகைகள் ஏராளமான சுற்றுலா பயணிகளை இன்று வரை கவருகிறது. உங்களுக்கு ராஜஸ்தானை பார்வையிட வாய்ப்பு கிடைத்தால், நீங்கள் இத்தகைய மாளிகைகளை பார்வையிடலாம்.

16ஆம் நூற்றாண்டிலிருந்து 18ஆம் நூற்றாண்டு வரை முகலாய தனி மரபுக்குழு இந்தோ - பாரசீக நுண்கலை மரபுக்குழு தோன்றிட வழி வகுத்தது. முகலாய அரசவை ஓவியர்கள், இயற்கை காட்சிகள் ஒரு சேர மனித உருவங்கள் மற்றும் ஆடை பாணிகளையும் அறிமுகப்படுத்தினர். அவர்கள் இந்திய மரபு பாணிகளுடன் தொடர்பு கொண்ட பொழுது அவர்கள் மிகவும் இயல்பானவர்களாக ஆனார்கள். சிறிய சித்திரங்களின் மீது பாடுகிற மரபும் தொடங்கின. கலைஞர்கள் இப்பொழுது மாத சம்பளத்திற்கு வேலையில் அமர்த்தப்பட்டார்கள். அவர்கள் சங்கேஸ் நாமா, ஜபர் நாமா மற்றும் இராமாயணத்தை ஓவியங்கள் அல்லது வரைபடங்களில் விளக்கினார்கள்.

## 4.8 இசை

முகலாயப் பேரரசர்களான அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான் ஆகியோர் பல பாடகர்களை ஆதரித்தனர். அக்பரின் அவையை அலங்கரித்த தான்சென் செவ்வியல் தன்மையான ராகங்களைப் பாடியது மல்லாமல், புதிய ராகங்களையும் தொகுத்தார். ஷாஜகானே ஒரு நல்ல பாடகர் என சொல்லப்படுகிறது. இத்தகைய பாடகர்கள் பேரரசர்களை பொருத்தமான ராகங்களுடன் பல்வேறு சமயங்களில் மற்றும் பல்வேறு காலங்களில் கேளிக்கைகளில் ஈடுபடுத்தினர்.

இந்தியாவில் துருக்கிய ஆப்கானிய ஆட்சியின் பொழுது, இந்தோ இராணியின் கூட்டிணைவுத் தொகுப்புகளும் ஆரம்பமாயின. மொகலாயர் ஆட்சி காலத்தில் இது மேலும் வளர்ச்சியடைந்தது. ஔரங்கசீப் இசைக்கு முரண்பாடாக இருந்தார். ஆனால் பாரசீக மொழியில் மிகப்பெரிய எண்ணிக்கையிலான செவ்வியல் தன்மையான இந்திய இசை இவருடைய காலத்தில் எழுதப்பட்டன. வடக்கில் இந்துஸ்தானி மரபு இசைக்குழு என்று தெரியப்பட்ட குறிப்பிடத்தக்க மரபுக்குழு வந்தது மற்றும் இதனுடைய சிறப்பு செவிக்கு இனிமையான மற்றும் பேரானந்தத்தைக் கொடுக்கிற இன்னிசை வாழ்க்கையின் பல்வேறு மனநிலைகளுக்கு பொருந்துகிற மாதிரி உருவாக்குவதில் அமைந்துள்ளது. ராகங்கள் மற்றும் ராகினிகள் அவ்வண்ணமே பண்பின் உருவாயிருந்தன. காயல் தும்ரி மற்றும் கஜல்களும்

இக்காலத்தில் விரிவாக்கம் செய்யப்பட்டன. ஒரு வகையில் இந்த மரபுக் குழுவின் முன்னோடி தான் சென் ஆவார். இதே போன்று தெற்கில் கர்நாடக மரபு இசைக்குழு வளர்ச்சியடைந்தது. ஆயினும் சாதாரண மக்கள் உள்ளூர் முதன்மையாளர்களான அல்கா - உதல் துல்லா பட்டி, ஜெய்மல் - பாட்டா போன்றவர்களை “ஞாபகார்த்தமாக கொண்டாடுவதற்கு நாட்டுப்புற இசை மற்றும் நாட்டுப்புற பாடல்களை தன்வசம் வைக்கக் கூடிய இயல்பான ஆற்றலை பெற்றிருந்தார்கள்.

### இந்தோ - முகலாய பண்பாடு

முகலாய மன்னர்கள் சுல்தான் என்ற ஆப்கானிய பட்டத்தை ஒதுக்கிவிட்டு பாதுஷா (பேரரசர்) மற்றும் டின் - இ - பன்ஹ் (சமயப் பாதுகாவலர்) என்ற பாணியில் தங்களை அழைத்துக் கொண்டனர். மேலும் குடிமக்களுக்கு பேரரசர் மீது பயபக்தியை தூண்டுவதற்காக அவர்கள் ஜரோகா தர்ஷன் அல்லது சிறப்பாக கட்டப்பட்ட ஜன்னலின் மூலம் பொது மக்களிள் முன்தோன்றும் பழக்கத்தை தொடங்கினார்கள். அவர்கள் ‘சிஜ்டா’ (அரசனுக்கு முன்பு கீழ் நோக்கி நெடுஞ்சான் கிடையாகப்படுத்தல்) என்ற அரசவை பழக்கத்தையும் ஆதரித்தனர். சமயம் மற்றும் அரசியல் ஆதிக்கம் தங்களுடைய கைகளிலேயே நிலையாக வைத்துக் கொள்வதிலும் கவனத்தைச் செலுத்தினார்கள்.

## 4.9 நவீன இந்திய மொழிகளின் எழுச்சி

இந்தக் காலத்தில் மற்றுமொரு முக்கியமான வளர்ச்சி, பல்வேறு நவீன இந்திய மொழிகளின் தோற்றமாகும். ஒருவேளை, உருது டெல்லி சுற்றுப்புறத்திலிருந்து தொடங்கி இருக்கலாம். இது அலாவுதீன் கில்ஜி, கிட்டத்தட்ட கி.பி.14 ஆம் நூற்றாண்டில் தக்காணத்தில் தங்கி இருந்த பொழுது, உருது ராணுவ முகாம் மொழியாக வளர்ச்சியடைந்தது. ஒரு வேளை தக்காணத்திலுள்ள பிஜப்பூர் மற்றும் கோல்கொண்டா உருது இலக்கியத்தின் தொட்டில்களாக ஆகியிருக்கலாம். இந்த மொழி இதனுடைய இலக்கணத்தில் வெகு சீக்கிரமாக வளர்ச்சி அடைந்து தனிச் சிறப்பு வாய்ந்த மொழியாக மாறியது.

காலம் செல்லச்செல்ல இம்மொழி மேனிலை மக்களாலும் பயன்படுத்தக் கூடியதாகியது. இந்த மொழியில் கவிதைகளை தொகுத்த புகழ் பெற்ற கவிஞரான அமீர்குஸ்ரு இதை பிரபலப்படுத்துவதிலும் முக்கிய பங்கேற்றார், 18ஆம் மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் கவிதைகளைத் தவிர அழகான உரைநடை, சிறு கதைகள், நாவல்கள் மற்றும் நாடகம் முதலியன உருது மொழியில் எழுதப்பட்டன. 19-ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியில் சுதந்திரப் போராட்டத்தின் பொழுது, உருது பத்திரிக்கை முக்கிய பங்கு வகித்தது.

உருதுடன் மற்ற நவீன இந்திய மொழிகளான பெங்காலி, அஸ்ஸாமிய, ஒரியா, கரிபோலி, பஞ்சாபி, குஜராத்தி, மராத்தி, சிந்தி, காஷ்மீரி மற்றும் நான்கு தென்னிந்திய மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம், தங்களுடைய படிவத்தை பெற்று இக்காலத்தில் வளர்ச்சியடைந்தது.

## 4.10 புதிய நம்பிக்கைகள்

இக்காலத்தில் இந்தியாவில் இரண்டு புதிய சமய நம்பிக்கைகள் வளர்ச்சியடைந்தன. அவை சீக்கிய மதம் மற்றும் ஜொராஸ்டிரியனி மதமாகும். ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களை சமயத்திற்குள் கொண்டு வருவதற்கு பல்வேறு சமய இயக்கங்களும் இந்தியாவில் தொடங்கப்பட்டன.

## சீக்கிய மதம்

நமது மக்கள் தொகையில் ஒரளவிற்கு பெரிய அளவிலான சீக்கியர்களில் பெரும் பான்மையோர் பஞ்சாப்பைச் சார்ந்தவர்கள். மரபுறுதி வாய்ந்த சீக்கியர்கள் அவர்களுடைய சமயம், கடவுளால் குருநானக்கிற்கு வெளிப்படுத்தப்பட்டது. அவருடைய ஆன்மா இரண்டாவது குருவுக்கும் மற்றும் அவரை தொடர்ந்து வருகின்ற 10-வது குரு வரை நுழைந்து உள்ளது என நம்பினார்கள். அவர்களுடைய குருவான குருகோபிந்சிங், குரு கிரந்த சாகிப் என புகழப்படுகிற ஆதி கிரந்தத்தை கையாள சீக்கியர்களுக்கு கட்டளையிட்டார். ஆனால் வரலாறு மற்றும் சமயம், இந்த சமயத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சிக்கான விதைகள் பக்தி இயக்கத்தின் நிர்குணா கிளையிலேயே இருந்தது. அடிப்படையிலேயே சீக்கியர்கள் உருவமில்லாத கடவுள், எல்லா மனித இனத்திற்கும் சமத்துவம், குருவின் தேவை மற்றும் பாகல் மரபை நம்பினர்.

சில சமயங்கில் சீக்கிய அரசாட்சி, மகன் மற்றும் சில சமயங்களில் சிறந்த சீடருக்கு வழங்கப்பட்டது. 5ஆவது குருவான குரு அர்ஜீன்தேவ் சீக்கியர்களுக்கு மூன்று பொருட்களைக் கொடுத்தார். முதலாவது ஐந்துகுருக்கள் மற்றும் அவர்களுடன் இணைந்த மற்ற புனிதர்களின் மூதுரைகளைக் கொண்ட ஆதி கிரந்தத்தின் வடிவைக் கொண்டது. இரண்டாவது முதன் முதலில் தரமான குருமுகி எழுத்துகளில் எழுதப்பட்ட ஆதி கிரந்தத்தின் எழுத்துப்படிவம் கடைசியாக ஹர் மந்திர் சாகிப் அல்லது தங்கக் கோவில் அமைந்துள்ள இடம் மற்றும் கட்டிடம் மற்றும் அமிர்தசரசில் உள்ள 'அகல் தக்ட்' என்ற உயரமான இருக்கை. அங்கிருந்து முழு சீக்கிய வகுப்பினருக்கு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன.

1699இல் பத்தாவது குருவான குரு கோவிந்சிங் தூய்மை என்ற பொருள் கொண்ட கல்சாவை உருவாக்கினார். அவர் சீக்கியர்களை 5 உறுதி மொழிகளான கெஷ் (நீளமான முடி மற்றும் தாடி) காங்கா (சீப்பு) கடா (ஒரு உலோக வளையல்) கிர்பன் (ஒரு வாள்) மற்றும் கச்சா (முழங்காலிற்கு சிறிதளவு உயரமான உள்ளாடை) ஆகியவற்றை வைத்துக் கொள்ள வலியுறுத்தினர். இதன் விளைவாக இத்தகைய அடையாளங்கள் சீக்கியரின் தனித்தன்மை வாய்ந்த முத்திரையாக ஆனது. மேலும் அவர் அவருடைய இறப்பிற்கு பின்பு 'ஆதி கிரந்த்' சீக்கியர்களின் குரு ஆவார் மற்றும் அவர்கள் இந்த புனிதமாக புத்தகத்திற்கு வணக்கம் செலுத்த வேண்டும் என்று கூறினார்.

இசை, எப்பொழுதும் மதத்தின் முக்கிய அம்சமாக இருந்தது. இசையின் மூலம் ஒருவர் பேரின்ப நிலை அல்லது சமாதியை அடையலாம் என நம்பினர்.

## ஜொராஸ்டிரியனிசம்

கி.மு 8 ஆம் நூற்றாண்டில் ஐரதுஷ்ட்ரா அல்லது ஜொராஸ்டர் என்பவரால் பார்சி அல்லது ஜொராஸ்ட்ரியன் சமயம் தோற்றுவிக்கப்பட்டது. இப்பொழுது பாரசீகம் என்று அறியப்படுகிற வட்டாரத்தில் இவர் ஒரே கடவுள் என்ற கோட்பாட்டை போதித்தார்.

இவர் அக்னி வழிபாடு நல்லவை தீயவை ஔராமஸ்டா மற்றும் ஔரா மனிதனிடத்தில் காணப்படுகிறது என போதித்தார். அவர் அற வழிக் கோட்பாடுகளான அன்பையும் கருணையையும் போதித்தார். இத்தகைய கோட்பாடுகள் செண்ட் அவஸ்தாவில் புனிதமாக போற்றப்பட்டு வருகின்றன.

முஸ்லீம்கள் இந்த வட்டாரத்தை வென்ற பொழுது ஜொராஸ்டிரியன் சமயம், பாரசீகம் முழுவதும் பரவி கி.பி. 8 ஆம் நூற்றாண்டு வரை முதன்மையான சமயமாக நிலைத்திருந்தது. பெரும்பாலான பார்சியர்கள் உலகின் பல்வேறு பகுதிகளுக்கு குடியேறினார்கள். அவர்களும் இந்தியாவிற்கு வந்து குஜராத்திலுள்ள 'நவசரி' என்னு மிடத்தில் நிலையாகத் தங்கி வாழ்ந்தார்கள். பின்பு இந்தியாவில் எல்லா பகுதிகளுக்கும் பரவினார்கள். அவர்கள் இந்திய பண்பாட்டிற்கு அதிக அளவில் பங்களித் துள்ளார்கள். புகழ் பெற்ற தேசிய தலைவரும்

பார்சியுமான தாதாபாய் நௌரோஜி ஆங்கிலேயர்கள் இந்தியாவை நாகரிகப் படுத்துதல் என்ற பெயரில் சுரண்டினார்கள் என்பதை வெளிப்படுத்தினார். மற்றுமொரு குறிப்பிடத்தக்க மனிதர் இந்திய தொழிலதிபர்களின் முன்னோடி ஜாம்ஷெட்ஜி டாடா வகுப்பை சாா்ந்தவர். இவர் ஆங்கிலேயர்களின் எ∴கு மில்களினால் கடுமையான போட்டி இருந்தாலும் கூட இந்தியாவில் இரும்பு, எ∴கு தொழிற்சாலைகளை ஏற்படுத்தி தொடர்ந்து வளமடையச் செய்தார். பார்கியர்களும் ஏராளமான தர்ம செயல்களுக்கான பொது நிறுவனங்களை நிறுவினர். ஜொராஸ்டிரியனிசம் கொள்கைகளை மாற்றக்கூடிய சமயம் அல்ல ஆனால் எந்த ஒரு சூழ்நிலையிலும் புதிய இனத்தவரை தன்னுள் அனுமதிக்கப்படவில்லை.

ஆகவே இந்தியாவில் பண்பாட்டின் படைப்பு பாணி, புதிதாக வருபவர்கள் எல்லாரையும் தொடர்ந்து ஒருங்கிணைப்பதற்காகவும் பண்பாடு மாற்றத்தின் விளைவாகவும் பன்முகப் பரிமாணங்கள் பன்முக மொழிகள், பன்முக சமயங்கள் இன்னும் இந்திய பண்பாட்டின் சிறப்பியல்புகள் வேறுபட்ட பண்பாடுகளின் தொகுதியானது.

## இப்பகுதிக்கான கேள்விகள் 4.5

கோடிட்ட இடத்தை பூர்த்தி நிரப்புக

1. ___________ கல்சாவை ஏற்படுத்தி, 5 உறுதி மொழிகளான கே.எஸ்.ஐ நிலைப்படுத்தினார்.
2. ____________ அக்னி வழிபாடு, நல்லவை, தீயவையில் நம்பிக்கை, அன்பையும் அறத்தையும் ஊக்கப்படுத்துதல்.

## 4.11 தென் இந்தியா

கி.பி. 9-ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 11ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் தென்னிந்தியாவில் சோழ மண்டல வட்டாரத்தை சோழ மரபினர் என அழைக்கப்படுகிற சோழ அரசர்கள் ஆண்டார்கள். சோழ அரசர்கள் வலிமையான கடற்படையைத் தவிர வலிமையான ராணுவத்தையும் வளர்ச்சி அடையச் செய்தனர். சில இந்தோனேசிய தீவுகளை ராஜேந்திர சோழன் வென்றிருக்கலாம் என சொல்லப்படுகிறது. அவர்களும் ஜனநாயக நிறுவனங்களை கிராமிய அளவில் வளர்ச்சியடையச் செய்தனர். புத்த, சமண சமயங்கள் இந்த வட்டாரத்தில் செழிப்புற்றன. இலக்கியம், இயல், இசை, நாடகக் கலைகள் சிற்பக்கலை மற்றும் உலோகத்தை உருக்கி அமைக்கும் வேலைப்பாடுகள் ஆகியன இவர்களுடைய ஆதரவில் இருந்தன. 14 ஆம் நூற்றாண்டு விஜய நகரம் என அழைக்கப்பட்ட, இப்பொழுது கர்நாடகம் என அழைக்கப்படுகிற ஒரு புதிய அரசு எழுச்சியைக் கண்டது. இந்த அரசிற்கு வடக்கே, துங்க பத்திரா ஆற்றிற்கு குறுக்கே பாமனி என்றழைக்கப்பட்ட இப்பொழுது ஆந்திரபிரதேசம் என தெரியப்படுகிற பகுதியில் புதிய இஸ்லாமிய அரசு தோன்றியது. பாமனி மற்றும் விஜய நகர அரசுகள் வளமான ரெய்ச்சூர் தோப் மீது ஒருவரோடு ஒருவர் மோதினர்.

சோழ மண்டல வட்டாரத்தில் தமிழ்மொழி மகிவும் பிரபலமாக இருந்தது. கர்நாடகாவில் கன்னடம், ஆந்திராவில் தெலுங்கு கேரளாவில் மலையாளம் ஆக வெவ்வேறு எழுத்துப் படிவங்களுடன் எல்லா மொழிகளும் வளர்ச்சியடைந்தன. ஆரம்பத்தில் தமிழ் மிகப் பழமையான மொழியாக இருப்பதால் வட்டாரம் முழுவதும் தமிழில் பேச சாத்தியமாக இருந்தது. ஆனால் இடைக்காலங்களில் 4 மொழிகள் குறிப்பிடத்தக்க அடையாளங்களைக் கொண்டதாக ஆனது. இருந்தாலும் 14ஆம் மற்றும் 16ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலங்களில் விஜய நகரம் சிறந்த புகழை அடைந்தது. 15ஆம் மற்றும் 16ஆம் நூற்றாண்டுகளில் இத்தகைய பகுதிகளை வெளிநாட்டவர்கள் பார்வையிட்டு அரசர்கள், நகரம்

மற்றும் மக்களைப் புகழ்ந்தனர். ஹம்பியியல் காணப்படுகிற விஜய நகரத்தின் எஞ்சிய பகுதிகள் இன்றும் உலகை வியப்படையச் செய்கின்றன.

சோழர் காலத்தில் காஞ்சி ஒரு சிறந்த கற்றல் மையமாகத் திகழ்ந்தது. விஜய நகர அரசர்களும் கலைக்கும் மற்றும் கல்வியறிவுக்கும் சிறந்த ஆதரவாளர்களானர்கள்.

## நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- காலிப்ஸ்களுக்காக ஆளப்பட்டிருக்க வேண்டும் என கருதப்படுகிற முந்தைய துருக்கிய ஆட்சியாளர்கள் (1206 - 1526) சுல்தான்கள் என அழைக்கப்பட்டனர்.
- முகலாயர்கள் டெல்லி சுல்தான்களின் இடத்தை தக்க வைத்துக் கொண்டனர். அவர்கள் இசை, ஓவியம் மற்றும் கட்டடக்கலையை ஆதரித்தனர் 1707 வரை இந்தியாவை ஆட்சி செய்தனர். அவர்களும் ஏராளமான கட்டடங்களைக் கட்டினார்கள். 1707க்கு பிறகு முகலாயப் பேரரசின் வலிமை குன்றி சிதறுண்டன. இந்த குழப்பமான சமயத்தில் ஆங்கில கிழக்கந்திய கம்பெனியின், அரசியல், ஆட்சி உரிமையாக தோன்றியது.
- சூபிக்களுடைய சமயப் பற்று, சகிப்புத்தன்மை இரக்கம், சமத்துவக் கோட் பாட்டின் மனப்பான்மை, இந்திய மக்களின் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது.
- 14ஆம் மற்றும் 16ஆம் நூற்றாண்டுகளில், பக்தி இயக்கம் நிர்குணா மற்றும் சகுணா என 2 கிளைகளாக வளர்ச்சியடைந்தன.
- மக்கள் தங்களுடைய சொந்த வட்டார மற்றும் உள்ளூர் நாட்டு மரபுகளான நடனத்தையும் இசையையும் மேம்படுத்தினர்.
- இடைக்காலத்தில் உருது தோன்றிய இந்தக் காலம் தற்போது தெற்கில் உள்ள மராத்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் வடக்கிலுள்ள அஸ்ஸாமிய, பெங்காலிய, ஹிந்தி அல்லது காரிபோலி, பஞ்சாபி குஜராத்தி ஆகிய மொழிகளின் எழுச்சியைக் கண்டது.
- சீக்கிய மதத்தை தோற்றுவித்தவர் குருநானக். குரு அர்ஜின் தேவ், தற்பொழுதுள்ள குருமுகி எழுத்துப் படிவத்தில் ஆதி கிரந்தம் மற்றும் அமிர்தசரசில் உள்ள ஹர் - மந்திர் கட்டடத்தையும் முடித்தார்.
- கி.மு. 8ஆம் நூற்றாண்டில் ஜொராஸ்டிரியனிசம் பெர்சியாவாவில் ஜொராஸ்டர் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.
- சோழர்கள், வங்காளம் இந்தோனேசியா ஆகிய பகுதிகளை வென்றார்கள். அவர்கள் கிராமிய அளவில் ஜனநாயக நிறுவனங்களை அறிமுகப்படுத்தினர்.
- காஞ்சி சிறந்த கல்வி மையமாகத் திகழ்ந்தது.
- கர்நாடகாவில் உள்ள ஹம்பியில் விஜய நகரத்தின் எஞ்சிய பகுதிகள் கண்டுபிடிக்கப் பட்டன. ஆந்திரா வட்டாரத்தில் பாமனி அரசு வளர்ச்சியடைந்தது.
- இந்த சமயத்தில் இந்திய சமுதாயம் மேற்குடி மக்கள் மதகுருமார்கள் நகரமக்கள் உழவர்கள் என 4 பெரும் குழுக்களாகப் பிரிக்கப்பட்டது.
- உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரத்தின் மையமாக டெல்லி வளர்ச்சியுற்றது.
- இந்திய சமுதாயத்தின் மீது இஸ்லாமிய தாக்கம் மிகுந்திருந்தது, இக்காலத்தில் அங்கு சூபி மற்றும் பக்தி இயக்கங்கள் என இரு முக்கியமான சமய இயக்கங்கள் இருந்தன.

- சிஷ்டி பிர்தௌசி மற்றும் நிஜாம் உட் டின் ஆலியா ஆகியோர் மிக முக்கியமான சூபி புனிதர்களாவர்.
- சில புகழ் பெற்ற புனிதர்களாக குருநானக், ராமானுஜர், ராமாநந்தா, கபீர், சைதன்யா, மீராபாய் நாம தேவா ஆகியோராவர்.

## பயிற்சிக்கான கேள்விகள்

1. இந்தியாவின் மத்திய காலத்திய அரசியல் சூழ்நிலையைப் பற்றி விவரி.
2. இந்து மதத்தின் மீது இஸ்லாமிய மதத்தின் செல்வாக்கைப் பற்றி விவரி.
3. இந்திய பண்பாட்டை வளப்படுத்துதலில் பக்தி இயக்கத்தின் பங்கை ஆராய்க.
4. நவீன இந்திய மொழிகளின் எழுச்சி பற்றிக் குறிப்பு வரைக.
5. புதிய நம்பிக்கைகளான சீக்கிய மதம் மற்றும் ஜொராஸ்டிரியினிசத்தின் எழுச்சி பற்றி விவாதி.

## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 4.1

1. ஹிஜிரா சகாப்தத்தின் தொடக்கம்
2. ரோசா என்பது ரம்ஜான் மாதத்தில் நோன்பு இருப்பது
3. சூபிக்கள்
4. அபுல் பாசல்

### கேள்விகளுக்கான பதில்கள் 4.2

1. குட்பா
2. ஷெர்ஷா
3. இராஜபுத்திரர்கள்
4. வைஸ் - ரீகல் - லாட்ஜ்
5. ஷாஜஹான்

### கேள்விகளுக்கான பதில்கள் 4.3

1. நிர்குணா, சகுணா ஆகிய 2 முக்கியமான பக்தி இயக்கத்தின் கிளைகளாகும்.
2. நானக் மற்றும் கபீர் (ஏதாவது ஒன்று) நிர்குணா கவிஞர்கள், துளசிதாஸ் மற்றும் சூர்தாஸ் (ஏதாவது ஒன்று) சகுணா கவிஞர்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 4.4

1. கார்பா, கல்பேலியா, பாங்க்ரா (ஏதாவது இரண்டு)
2. பஞ்சாபில் பூங்காரி, லக்னோவில் சிக்கன் வேலைப்பாடு

### கேள்விகளுக்கான பதில்கள் 4.5

1. குரு கோபிந் சிங்
2. ஜொராஸ்ட்ரியன்கள்

# 5

# நவீன இந்தியா

நமது நாட்டின் வரலாற்றை பண்டைய, மத்திய, நவீன என மூன்று காலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மனிதன் எவ்வளவு காலம் உலகில் வாழ்ந்தானோ, அப்போதிலிருந்தே பண்டைய காலம் தொடங்கிவிட்டது. அதாவது கி.பி 8-ஆம் நூற்றாண்டிலிருந்து 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை நீடித்த மத்திய கால இந்தியாவில் என்ன நிகழ்ந்தது என்பதை இதற்கு முந்தைய பாடத்தில் படித்தீர்கள். இப்போது நாம் வரலாற்றில் நவீன காலத்தைப் பற்றி படிப்போம். கடந்த இரு காலங்களில், நீங்கள் சமுதாயம், பொருளாதாரம், அரசியல், பண்பாடு ஒவ்வொன்றும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு இருந்ததை நீங்கள் படித்திருப்பீர்கள். இத்தகைய வேறுபாடுகள் முன்னேற்றம், வளர்ச்சி நம்முடைய வாழ்க்கையிலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அயல்நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்த துருக்கியர்கள் ஆப்கானியர்கள் மற்றும் முகலாயர்கள். இந்தியாவை அவர்களுடைய குடியிருப்பாக மாற்றினர் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் ஆங்கிலேய ஆதிக்க ஆட்சியாளர்கள், இந்நாட்டில் எப்பொழுதும் அந்நியர்களாகவே தங்கி இருந்தனர். இருந்த போதிலும் ஆழமான சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாறுதல்களை அவர்களுடைய ஆர்வத்திற்கு பொருந்துகிற வண்ணம் கொண்டு வந்தனர். மேலும் நடைமுறையில் இந்திய பண்பாட்டின் சில அம்சங்களின் அடையாளங்களை ஆழமாக பதித்துள்ளனர். நீங்கள் டெல்லியிலுள்ள, ராஷ்டிரபதி பவனைப் பார்த்தால் இந்திய சிறப்பக்கலையின் மீது ஆங்கிலேயரின் தாக்கத்தை நீங்கள் தெளிவாக உணரலாம். கல்கத்தாவிலும் மும்பையிலும் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கட்டிடங்களின் வடிவமைப்பு மாதிரிகள் இருப்பதை நீங்கள் காண்பீர்கள், இவையெல்லாம் இப்பொழுது, நமது பண்பாட்டு மரபின் ஒரு பகுதியாக ஆகிறது. இத்தகைய கட்டிடக்கலையின் எஞ்சிய பகுதிகளைத் தவிர, மேற்கத்திய கருத்துகள், அறிவியல் மற்றும் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரே மாதிரியான முறையைக் கொண்ட அரசு, கல்விமுறைகளை ஏகாதிபத்திய அரசு விட்டு சென்றது. 19ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் நவீன இந்தியாவை உருவாக்குவதற்கு உதவியன என்பதை நீங்கள் அறியும் பொழுது உங்களுக்கு ஆச்சரியமாக இருந்திருக்கக்கூடும். இந்திய மொழிகளில் நவீன இலக்கியங்களும் மேற்கத்திய கருத்துக்களும் நிறுவனங்களும் ஆங்கிலக்கல்வியின் பரவுதலால் தீவிரமாக செல்வாக்கு அடைந்தன.

## நோக்கங்கள்

நீங்கள் இந்த பாடத்தைப் படித்த பின்பு உங்களால்

- 19ஆம் நூற்றாண்டில், மேற்கில் நடந்த நிகழ்வுகள் பற்றியும் இந்தியாவின் மீது அவற்றின் தாக்கத்தைப் பற்றியும் கண்டறிய
- 18ஆம் நூற்றாண்டில் இறுதி ஆண்டின் இந்தியாவின் நிலைபற்றி விவரிக்க
- இக்காலத்தில், இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களின் சமூக நிலைகளைப்பற்றி ஆராய
- சமூக மற்றும் சமய சீர்திருத்தவாதிகளான ராஜாராம் மோகன்தாஸ், சுவாமிதயானந்த சரஸ்வதி மற்றும் பிறரின் பங்களிப்பை பட்டியலிட
- நாட்டுப்பற்றை மக்களிடையே உருவாக்குவதில் அச்சகம் மற்றும் செய்தித்தாள்களை பாராட்ட
- இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தை பாராட்ட முடியும்.

## 5.1 மேற்கின் எழுச்சியும் இந்தியாவின் மீது அதன் தாக்கமும்

1450லிருந்து, மூன்று முக்கிய காரணிகள் ஐரோப்பாவின் எல்லையையே மாற்றிவிட்டன, (1) புதிய கண்டுபிடிப்பான அச்சடிக்கும் இயந்திரம் (2) மறு மலர்ச்சியின் தொடக்கம் மற்றும் பரவல் மற்றும் சீர்திருத்த இயக்கங்கள் (3) புதிய வாணிக மார்க்கங்களின் கண்டுபிடிப்பு அதற்கு பின்பு அறிவியல், இட ஆய்வு மற்றும் வெடி மருந்துத் துறைகளில் சிறந்த முன்னேற்றமடைந்தது. மேலும் அவர்களது ராணுவம் மற்றும் கடற்படை உலகிலேயே மிகச் சிறந்ததாக இருந்தது. அறிவியல் கல்வி பரவத் தொடங்கியது. தர்க்கம், பகுத்தறிவின் பழமையான உறுதிக்கோட்பாடுகள் மற்றும் கற்றல்களை பரிசோதிக்கும் உரைகல்லாக ஆனது.

ஐரோப்பிய நாடுகளுக்கிடையே, போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள் மற்றும் கடைசியாக ஆங்கிலேயர்கள் இந்தியாவிலிருந்து வியாபாரத்தை கட்டுப்படுத்த பந்தயத்தில் இறங்கினார்கள். இறுதியாக ஆங்கிலேயர்கள், வியாபாரத்தை கட்டுப்படுத்தலில் வெற்றி கண்டார்கள். அதனால் இந்தியா இரண்டு நூற்றாண்டுகளாக, அந்த ஆதிக்க நாட்டின் கீழ் இருந்தது. இந்திய நாட்டின் மனித வளங்கள், நாட்டின் செல்வம் துணிச்சலாக சுரண்டப்பட்டது. ஆங்கிலேயர்கள் நடைமுறையிலுள்ள சமூக மற்றும் அரசியல் சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்டனர். முகலாய பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு ஏராளமான அரசுகள் தோன்றின. ஒரு ஆட்சியாளர், மற்ற ஆட்சியாளரை எதிர்த்து போர் அல்லது உரிமையில்லாதவரை அரியணைக்கு ஏற்றுதல் போன்ற சூழ்நிலையை ஆங்கிலேயர்கள் அனுகூலமாக்கிக் கொண்டார்கள். மைசூரைச் சேர்ந்த திப்பு சுல்தான், ஆங்கிலேயர் பயன்படுத்திய அதே கொள்கைகளைப் பயன்படுத்த முயற்சித்தாலும், அதாவது பிரெஞ்சு மற்றும் ஆங்கிலேயருக்கும் இடையே உள்ள போட்டியை பயன்படுத்திக் கொண்டாலும், ஆங்கிலேயரின் விஞ்சிய அரசியல் தந்திரத்துக்கும் வலிமைக்கும் அவரால் ஈடு கொடுக்க இயலவில்லை.

இந்தியாவில் ஆங்கிலேய ஆதிக்கம் பல கட்டங்களில் வேரூன்றியது. முதல் கட்டமாக, இந்திய வாணிகத்தைப் பற்றிக் கொள்வதை அடங்கியது. அவர்கள் இந்திய பொருட்களை மிகக்குறைந்த விலைக்கு வாங்கி, அவற்றை மேற்கத்திய சந்தைகளுக்கு அதிக விலைக்கு விற்றனர். அதன் மூலமாக உழவர்களுக்கு எதுவுமே கொடுக்காமல் ஏராளமான இலாபங்களை

அடைந்தார்கள். இதில் அவர்கள் இந்திய சத்திரியர்கள், குமாஸ்தாக்களால் உதவி செய்யப்பட்டனர். இரண்டாவது கட்டம், ஆங்கிலேயர்கள் தங்களது ஏற்றுமதிக்கான நோக்கங்களுக்கு பொருந்தும் வகையில், உற்பத்தி செயல்முறைகளை கட்டுப்படுத்தினர். இந்த செயல்முறையில் இந்திய தொழிற்சாலைகளை வெற்றிகரமாக அழித்துவிட்டனர். இந்தியா ஆங்கிலேயர்களால் ஆளப்பட்டபொழுது ஆங்கிலேயரின் பொருளாதார தேவைகளை நிவர்த்தி செய்ய மூன்றாவது கட்டமான ஆங்கிலேய ஏகாதிபத்தியமும் காலனி ஆதிக்கமும் தீவிர கட்டமாக இருந்தது.

ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வாணிகம் மூலமாக இலாபம் பெறுவதற்கு வந்தனர். பின்பு அவர்கள் நாட்டின் அரசியல் பொருளாதார ஆதாயத்தை பெற்றனர். கி,பி 1757, பிளாசிப் போருக்குப்பின், அவர்கள் வங்காளத்தின் உண்மையான உரிமையாளர்களாக ஆனார்கள், அவர்கள் வாணிகம் மற்றும் ஏற்றுமதி பொருட்களை அதிகரிக்க, வங்காளத்தின் மீது அரசியல் கட்டுப்பாட்டை பயன்படுத்தினர். அவர்கள் அங்கு எந்த ஒரு போட்டியும் இல்லாமலிருப்பதற்காக இந்தியர்களையும் அந்நிய போட்டியாளர்களையும் தடை செய்தனர். அவர்கள் பருத்தி விற்பனையில், ஏகபோக உரிமை செலுத்தினர் வங்காள நெசவாளர்களைக் கூடுதலான விலையை செலுத்தும்படி செய்தனர். அவர்களுடைய சொந்த தொழிற்சாலைகளை பாதுகாப்பதற்காக, இந்தியப் பொருட்கள், இங்கிலாந்திற்குள் நுழையும் பொழது அவற்றின் மீது அதிகமான சுங்க வரியை விதித்தார்கள்.

ஐரோப்பாவில், தொழிற்புரட்சி ஏற்பட்ட போது, இந்தியத் தொழிற்சாலைகள் பெரிதும் அடிபட்டன. 1813இல் இந்தியக் கைவினைப் பொருட்கள், உள்நாட்டு அயல்நாட்டு இரு சந்தைகளின் ஆதரவை இழந்தன. இந்தியப் பொருட்கள், இங்கிலாந்து தொழிற்சாலைகளில், இயந்திரங்களால் பயன்படுத்தி செய்த பொருட்களுடன் போட்டியிட இயலவில்லை.

இன்னொரு பக்கத்தில், ஆங்கிலேய வியாபாரிகள் அதிக அளவில் பணத்தை திரட்டி தொழிற்சாலைகள் அமைத்து வாணிகத்திற்கு முதலீடு செய்தார்கள். கிழக்கு இந்தியக் கம்பெனி அவர்கள் தொழிற்சாலையை விரிவுபடுத்துவதில் நிதி உதவி செய்தன. இக்காலத்தில் உற்பத்தியில் இலாபமடைந்ததைவிட, வியாபாரத்தில் நிறைய லாபம் பெற்ற, உற்பத்தியாளர்கள் குழு ஒன்று இங்கிலாந்தில் இருந்தது. அவர்கள் கச்சா பொருட்களை இந்தியாவிலிருந்து பெறவும், அதனுடன் முழுமையடைந்த பொருட்களை திரும்ப அனுப்புதலிலும் மிகவும் ஆர்வமாக இருந்தார்கள். 1793 ஆம் ஆண்டுக்கும் 1813க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆங்கிலேய உற்பத்தியாளர்கள், கம்பெனியின் ஏகபோக உரிமை அனுபவிக்கின்ற சலுகைகளை எதிர்த்து, போர்க்களச் செயல்பாட்டு முறையை தொடங்கினர் இறுதியாக 1813ல் இந்திய வாணிபத்தில் கிழக்கிந்திய கம்பெனியின் ஏகபோக உரிமைகளை ஒழிப்பதில் வெற்றி கண்டனர். இதனால் தொழில்வளமிக்க இங்கிலாந்துக்கு ஒரு பொருளாதாரக் குடியேற்ற நாடாக மாறியது.

இதன்விளைவு, இந்திய கைவினைப் பொருட்கள் அழிவை எதிர்நோக்கும் பொழுது, இந்திரங்களால் உருவாக்கப்பட்ட ஆங்கிலேய பொருட்கள் மலிவான விலைக்கு வந்தன. இந்தகைய பொருட்கள் இந்தியாவில் நுழைவதற்கு ஒன்று இலவச நுழைவுக் கட்டணம் அல்லது மிகக் குறைந்த இறக்குமதி சுங்கவரியை செலுத்தினார்கள். இந்தியர்கள் நவீனமயமாக்கப்பட வேண்டிய நிலையில் இருந்தார்கள். அப்பொழுது தான், மேற்கத்திய பொருட்களின் மீது ஈடுபாட்டை வளரச் செய்து அவற்றை வாங்கச் செய்ய முடியும். இந்திய தொழிற்சாலைகள் சுரண்டப்பட்டு பாதிப்புக்கு உள்ளாயின. இந்தியர்களின் வாணிக ஈடுபாட்டில் அக்கறை கொள்ளாத ஆங்கிலேயரின் கைகளினால் சுரண்டப்பட்டு பாதிப்புக்கு உள்ளாயினர். இந்தக் காலத்தில். அவர்கள் இந்திய வாணிகத்தை பாதுகாக்கவும் இல்லை. மேம்பாடான எந்த தொழில் நுட்பத்தையும் அறிமுகப்படுத்தவில்லை. வெளிநாட்டுப் பொருட்களுக்கு இலவச நுழைவு கொடுக்கப்பட்ட பொழுது, இந்திய கைவினைப் பொருட்கள் பாதிக்கப்பட்டன. மற்றபடி

இந்திய கைவினைப் பொருட்கள் இங்கிலாந்திற்குள் சென்ற பொழுது வரி அதிகமாக விதிக்கப்பட்டது. இந்திய சர்க்கரை ஆலைகள், உண்மையான விலையை விட மூன்றுமடங்கு அதிகமாக சுங்கவரி, இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்ட பொழுது செலுத்தினார்கள். ஆதலால் இந்தியாவிலிருந்து வாணிபம் நிறுத்தப்பட்டுவிட்டது.

1813-இல் இந்தியா ஆங்கிலேய பொருட்களின் உன்னதமான நுகர்வோராகவும் வளமான கச்சா பொருட்களை அளிப்பவராக மாறியது.

வாணிக இலாபத்திற்காக, இங்கிலாந்து இந்தியாவை சுரண்ட விரும்பியதிலிருந்து, கச்சாப் பொருட்களை வாங்குவதற்கும், செய்து முடிக்கப்பட்ட பொருட்களை விற்பதற்கும் அவர்கள் நீராவிக்கப்பல்கள் இரயில் வழிகளை அறிமுகப்படுத்தினார்கள். இரயில் வழிகள் இங்கிலாந்துக்கு விசாலமான சந்தையை வெளிப்படுத்தி அயல் நாட்டிற்கு இந்திய கச்சாப் பொருட்களை ஏற்றுமதி செய்ய ஊக்குவித்தது.

1853இல் முதன் முதல் இருப்புப் பாதை பம்பாயிலிருந்து தானே வரைக்கும் பொது மக்களுக்காக திறக்கப்பட்டது என்பது பற்றி உங்களுக்குத் தெரியுமா? இரயில் வழிகள், கச்சா பொருட்களை உற்பத்தி செய்யும் பகுதிகளை ஏற்றுமதி செய்யும் துறைமுகத்துடன் இணைக்கப்பட்டன, இதன் விளைவு ஆங்கிலேய பொருட்கள் இந்திய சந்தையில் குவிந்தன.

இரயில் வழிகள் நாட்டில் தேசிய விழிப்புணர்வை எழுப்புவதிலும் பெரும் பங்கு வகித்துள்ளது என்பது பற்றி உங்களுக்குத் தெரியுமா? அவை மக்களையும் அவர்களது கருத்துக்களையும் நெருக்கமாக ஒன்று சேர்த்தது ஆங்கிலேயர் ஒரு பொழுதும் எதிர்பார்க்காதது ஆகும். இது விசித்திரமாக இல்லையா?

மறுபடியும் 1853இல் டல் ஹௌசி பிரபு கல்கத்தாவிலிருந்து ஆக்ரா வரைக்கும் முதல் தந்தி வழி மற்றும் முதல் தபால் சேவையையும் இந்தியாவில் துவக்கினார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

### இப்பகுதிக்கான கேள்விகள் 5.1

1. இந்தியாவின் மீது அரசியல் கட்டுப்பாட்டை பெறுவதில் வெற்றிகண்டவர் யார்?
2. இந்திய ஆட்சியாளர்களில், பிரெஞ்சுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே உள்ள போட்டியை பயன்படுத்திய இந்திய ஆட்சியாளர்களில் வெற்றி பெற முடியாதவர் யார்?
3. இந்தியாவில் ஆங்கிலேய ஆதிக்கத்தை எத்தனை கட்டங்களில் காணமுடியும்?

## 5.2 18-ஆம் நூற்றாண்டில் இந்திய-பொருளாதாரம் சமுதாயமும் பண்பாடும்

18-ஆம் நூற்றாண்டில், இந்தியா வேறுபாடுகளும் முரண்பாடுகளும் நிறைந்த நாடாக இருந்தது. விவசாயம் இந்தியாவின் முக்கிய தொழிலாக இருந்தது. ஆட்சியாளர்கள் அடிக்கடி போர் செய்யத் தொடங்கிய திலிருந்து அவர்கள் விவசாயத்தை முன்னேற்றுவதற்கு நேரமில்லை.

முகலாயர் காலத்தில் அயல்நாட்டு வாணிகம் தழைத்தோங்கியது, முத்துக்கள், பண்படுத்தப்படாத பட்டுக்கள் கம்பளி, பேரீச்சம் பழம், பாரசீக வளைகுடா, வட்டாரத்திலிருந்து உலர்ந்த பழங்கள், காபி, தங்கம் அரேபியாவிலிருந்து காபி, தங்கம், பானங்கள் தேன்

சீனாவிலிருந்து தேயிலை, பீங்கான், பட்டு ஆகியவை இந்தியாவிற்கு வந்தன. திபெத், சீங்கப்பூர், இந்தோனேசிய தீவுகள், ஆப்ரிக்கா மற்றும் ஐரோப்பாவிலிருந்து ஆடம்பரப் பொருட்களையும் இந்தியா இறக்குமதி செய்தது.

பண்படாத பட்டுகள், பட்டுதுணிவகைகள், கருநீலம் சர்க்கரை, மிளகு மற்றும் பல பொருட்களை இந்தியா ஏற்றுமதி செய்தது. இந்தியாவின் பருத்தி வகை துணிகள், உலகமெங்கிலும் மிகப் பிரபலமானவை.

இம்மாதிரி சாதகமான சமநிலையிலான வர்த்தகமாயிருந்தும், அடிக்கடி போர் நிகழ்ந்ததால் இந்தியாவின் பொருளாதார நிலை, வளர்ச்சியடையவில்லை. நாட்டிற்குள் சீக்கியர்களின் புரட்சி, ஜாட்டுகளின் புரட்சி மற்றும் மாரத்தியர்களின் புரட்சிகள் அதிகரித்தன. 1761-ஆம் ஆண்டின் அகமதுஷா அபுதாபியின் படையெடுப்பு மற்றும் 1797-ஆம் ஆண்டின் நாதிர்ஷாவின் படையெடுப்பு ஆகியன பொதுவான நிகழ்வுகளாகும்.

18-ஆம் நூற்றாண்டில், பிரான்சு, இங்கிலாந்து, போர்ச்சுக்கல், ஸ்பெயின் ஆகிய ஐரோப்பிய நாடுகள், இந்தியாவுடன் வாணிகம் செய்வதில் ஆர்வமாயிருந்தன. அவர்கள் நாட்டில் அரசியலிலும் பொருளாதாரத்திலும் நிலையற்ற தன்மையை உருவாக்கி இந்திய பொருளாதாரத்தை அழித்து விட்டார்கள். இந்த சமயத்தில் அழகான கைவினைப்பொருட்களின் நிலம் என இந்தியாவின் புகழ் உலகெங்கும் பரவினது.

சமுதாயத்தை பொருத்த வகையில் மக்களின் சமூக, மற்றும் பண்பாட்டு வாழ்க்கையில் ஒரே மாதிரியான ஒற்றுமை அங்கு இல்லை. அவர்கள் இந்துக்களாயிருந்தாலும் சரி, முஸ்லிம்களாயிருந்தாலும் சரி, அவர்களிடையே, வட்டாரம், இனம், மொழி மற்றும் சாதிமுறை அடிப்படையில் பிளவுகள் இருந்தன. சமபந்தி காரியங்களான திருமணம், உணவு, சமபந்தி மற்றும் தொழிலைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவற்றை சாதி விதிகளின் அடிப்படையில் கடைபிடிக்க வேண்டும். யாராவது ஒருவர் சாதி விதிகளை கீழ்படியாமலிருப்பதை கண்டு பிடித்தால் அவரை அந்த இனத்திலிருந்து விலகிட வாய்ப்புண்டு.

அறிவியல் துறையில் பெரிதும் வளர்ச்சியுற்ற இந்தியா, இப்பொழுது கணிதவியல் மற்றும் அறிவியல்களை அலட்சியப்படுத்துகிறது. மேற்கத்தியர்களால் வளர்ச்சியுள்ள அறிவியல் துறையைப்பற்றி அறியாமையாக இருக்கிறார்கள்.

அக்காலத்தில் ஆசிரியர்கள் சமுதாயத்தில் மதிக்கப்பட்டார்கள். கல்வி மரபில் ஊடுருவியிருந்து மாணவர்களுக்கு எண் கணிதத்துடன், படித்தல், எழுதுதல் போன்றவை கற்றுக் கொடுக்கப்பட்டன. பெண்கள் எப்போதாவது பள்ளிக்கு சென்றார்கள். கல்வி அரசால் ஆதரிக்கப்படவில்லை, ஆனால் உள்ளூர் ஆட்சியாளர்கள், மேற்குடியினர் மற்றும் பங்களிப்பாளர்கள் ஆதரவு அளித்தனர்.

## இந்து-முஸ்லிம் உறவுகள்

இரண்டு சமய மக்களுக்கிடையே நட்புறவு இருந்தது. மத சகிப்புத்தன்மை பழக்கத்தில் இருந்தது. அங்கு சமய காரணங்களுக்கு பதிலாக அரசியல் மற்றும் சுயநலக் காரணங்கள் இருந்தன. இரு வகுப்பைச் சார்ந்த மக்கள், ஒவ்வொருவரின் பண்டிகைகளில் பங்கெடுத்தனர். பல இந்துக்கள், முஸ்லீம் புனிதர்கள் மீது நம்பிக்கை கொண்டிருந்தனர். அதே சமயம் பல முஸ்லீம்கள் சமமான மரியாதையை இந்து கடவுள்கள் மற்றும் புனிதர்களுக்கு கொடுத்தனர். மேல் குடியை சார்ந்த இந்துக்கள் மற்றும் முஸ்லீம்கள் பல விஷயங்களை ஒருவருக்கொருவர் பொதுவாக கொண்டிருந்தாலும் அவர்களுடைய சொந்த இனத்தைச் சார்ந்த கீழ்குடி மக்களிடம் அப்படியில்லை. இது தவிர முஸ்லீம்கள், இந்திய பாணி மற்றும் பண்பாட்டை நன்றாக தழுவினர். ஆனால் இதை ஒன்றிலிருந்து வேறுபடுத்திக்காட்டுவது சிரமமாக இருந்தது.

## 5.3 சமூக நிலை

ஒரு புது நூற்றாண்டு தொடங்கும் வேளையில், பெண்களின் நிலை சிறிதளவு மகிழ்வடையக் கூடியதாக இருந்தது. பெண் குழந்தை பிறப்பு, துரதிஷ்டம் என கருதப்பட்டது. பெண்கள் இள வயதிலேயே மணமுடிக்கப்பட்டனர். ஒரு ஆண் பல பெண்களை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட்டது. பெண்களுக்கு சொத்துரிமை அல்லது விவாகரத்து உரிமையும் இல்லை.

குறிப்பாக மேல் சாதி வகுப்பை சார்ந்த மக்களிடையே நீண்ட காலமாக தொடர்ந்து நிகழ்கின்ற ‘கைம்மை’ சமுதாயத்தின் அதிகார ஆணையாக இருந்தது. தீய சகுனமாக கருதப்பட்டதிலிருந்து இத்தகைய விதவைகள் வண்ண நிற ஆடைகளை உடுத்த முடியவில்லை. திருமணத்தில் பங்கு கொள்ள முடியவில்லை. இம்மாதிரி சந்தர்பங்களில் குழந்தைத் திருமணங்கள் சாதாரணமாக இருந்தன. சில வேளைகளில் சிறு பெண் குழந்தைகள் கூட விதவையானார்கள். வலிமையாக கண்டிக்கக்கூடிய தொடர்ந்து நிகழ்கிற கைம்மைக்கு ஆளாகிறார்கள்.

கலப்புத்திருமணங்கள் அனுமதிக்கப்படவில்லை. நடப்பிலுள்ள சமூக முறைகள் கூட, கீழ் சாதியில் உள்ள ஒரு மனிதன் மேல் சாதி மனிதனுடன் சாப்பிட அனுமதிக்கப்படவில்லை. முஸ்லிம் பெண்களின் நிலையும் இதே மாதிரியாகத்தான் இருந்தது. அவர்கள் பர்தா அணியும் பழக்கம், கணவன் ஒரு பெண்ணிற்கு மேல் மண முடிப்பது, கல்வியறிவின்மை, சொத்துரிமை ஆகிய ஏராளமான பிரச்சனைகளை எதிர் கொண்டார்கள்.

## 5.4 சமூக, சமய சீர்திருத்த வாதிகள்

கிறிஸ்துவ மத குருமார்கள் கிழக்கு இந்திய கம்பெனியில் பணிபுரிபவர்களுடன் பெயர் சூட்டு விழா, திருமணம், இறுதி சடங்கு ஆலயப்பணிகள் செய்யும் தருணங்களில், சமயச் சடங்குகள் செய்திட இந்தியாவிற்கு வந்தனர். ஆனால் இந்த மத குருமார்கள் விரைவிலேயே கிறிஸ்துவரல்லாத கம்பெனி அலுவலர்களுக்கு கிறிஸ்துவமதத்தை போதிக்க ஆரம்பித்தார்கள். மெதுவாக பள்ளிகளை திறக்க ஆரம்பித்தார்கள், அவற்றில் இந்திய குழந்தைகள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இந்த மத குருமார்கள் வார, மாத மற்றும் பருவ இதழ்கள், கிறிஸ்துவ அறிவுரைகள் மற்றும் இலக்கியத்தின் கருத்துக்களை பரப்புவதற்காக அச்சடிக்கும் அச்சகங்களைத் தொடங்கினார்கள்.

கிறிஸ்தவ மத பிரச்சாரத்துடன், ஆங்கிலக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு, இவை இந்தியாவின் சமுதாயத்தின் மீதும் பொருளாதாரத்தின் மீதும் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தின. ஆங்கிலக்கல்வியை அறிமுகப்படுத்தியதின் நோக்கம், ஆங்கிலேய அரசியல், நிர்வாக தேவைகளை பூர்த்தி செய்யவும் ஆகும். இது இந்தியர்களுக்காக மேற்கத்திய நாடுகளில் வாய்ப்பை ஏற்படுத்தியது. அவர்கள் தாராளமனப்பான்மை, அறிவார்ந்த மனப்பான்மை, ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தின் புதிய கருத்துக்களை மனதில் எடுத்துக் கொண்டார்கள். விரைவாக ஆங்கில கல்வியும், படித்த இந்தியர்களுக்கு ஆங்கிலம் தொடர்பு மொழியாகி உறுதிப்படுத்துகிற ஆற்றலாக செயல்பட்டது.

### இராஜாராம் மோகன் ராய்

இராஜராம் மோகன் ராய், நவீன இந்தியாவை உருவாக்கிய முன்னோடி எனக் கருதப்படுகிறார். அவர் கிரேக்கம் இலத்தின் உள்ளடக்கிய பல்வேறு மொழிகளில் புலமை பெற்றுள்ளார். இந்து சமுதாயத்தில் சீர்திருத்தம் செய்வதிலும் இந்தியாவை விழித்தெழச் செய்ததிலும் இவரது பங்கு மிகவும் முக்கியமானது. ஏராளமான சமூக பழக்கங்கள்



இந்துக்களிடையே மேலோங்கி காணப்படுகிற பொழுது, சமய அங்கிகாரத்தை கோரப்பட்டது. இராஜாராம் மோகன்ராய், சமய புத்தகங்களிலிருந்து, இது உண்மையல்ல என்பதை எடுத்துக்காட்ட மிகுதியான சான்றுகளை மேற்கோளிட்டார். இந்தப் பட்டியலில் சதி, முதன்மையாக இருந்தது. சதி என்ற பலியை, இறந்த கணவக்கு மனைவி நடத்தும் ஈமச்சடங்கு, இது வங்காளம், ராஜஸ்தானில் தாங்களே கடைப்பிடிக்கும் பழக்கமாக மாறியது. இராம் மோகன்ராய். இந்த கனத்த தண்டங்களை எதிர்த்து, இறுதியில் இந்த பழக்கத்தை சட்ட உதவியுடன் நிறுத்தினார். அவர் பிரம்ம சமாஜத்தை தோற்றுவித்து அவருடைய செய்தியான அறிவார்ந்த பகுத்தறிவு, சமூக சமத்துவம் ஆகிய கொள்கைகளை எடுத்துச் சென்றார். அவருடைய சீடர்கள் ஒரே கடவுள் வழிப்பாட்டை நம்பினர். உருவ வழிபாடு, பல கடவுள் வழிபாடு மற்றும் சமய சடங்குகள் ஆகியவற்றை எதிர்த்தார்.

தேபேந்திரநாத்தாகூர் (1817-1905) இராஜாராம் மோகனை அடுத்து, பிரம்ம சமாஜத்தின் தலைவராகப் பின் தொடர்ந்தார். அவர் சமாஜத்திற்குள் புதிய வளத்தைக் கொணர முயற்சித்தார். இராஜாராம் மோகன் ராயின் கருத்துகளை பிரச்சாரம் செய்தார். கேசப் சந்திராசென் (1838-1884) தலைமைப் பதவியை தாகூரிடமிருந்து எடுத்துக் கொண்டார். எல்லா சமயத்திலும் தனிமனித சுதந்திரம், தேச ஒற்றுமை, ஒத்துணர்வு, எல்லா சமூக நிறுவனங்களையும் ஜனநாயகமாக்குதல், சமூக உறவுகளையும் சமாஜ் வலியுறுத்தியது. பிரம்ம சமாஜம், இந்தியாவில் தேசிய விழிப்புணர்வை வெளிப்படுத்தக் கூடிய முதன்முதலாக வடிவமைத்த வாகனமாக மாறியது.

## பிரார்த்தன சமாஜம் மற்றும் ரானடே

1867இல் பிரார்த்தன சமாஜம் முனைவர் ஆத்மராம் பாண்டுரங்கனால், பாம்பேயில் தோற்று விக்கப்பட்டது. அவர்கள் சமபந்தி விருந்து, கலப்புத் திருமணம், விதவை மறுமணம் ஏராளமான நலிந்த வகுப்பைச் சார்ந்த பெண்களின் முன்னேற்றத்திற்கான சமூக சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்த முயற்சி செய்தனர். ரானடேயின் கூற்றுப்படி இறுக்கமான கொள்கைகளைக் கொண்ட சமயம், சமூக, பொருளாதார அரசியல் கட்டங்களில் வெற்றியை அனுமதிக்காது. அவர் கடவுளின் ஒற்றுமையை நம்பினார் உருவ வழிபாட்டையும் சாதிமுறையையும் வலியுறுத்தவில்லை.

## இராமகிருஷ்ண பரமஹம்சர்



சுவாமி விவேகானந்தரால், இராமகிருஷ்ணா மிஷன் இந்திய சமுதாயத்தை மறு உருவாக்க தோற்றுவிக்கப்பட்டது. பின்பு, இராமகிருஷ்ண பரமஹம்சர் என அழைக்கப்பட்ட கடதார் சட்டோ பாத்தியாவின் சீடராவர்.

விவேகானந்தர், இராமகிருஷ்ண பரமஹம்சரின் போதனை களுக்கு இறுதி வடிவம் கொடுத்தார். இவர் சுதந்திரம், சுதந்திரமாக எண்ணுதல் சமத்துவம் ஆகியவற்றை ஆதரித்தார். அவர் எல்லா சமயங்களும் ஒரே சமயம் என வலியுறுத்தினார். வேதாந்த தத்துவத்தை மிகவும் அறிவு சார்ந்த முறையின் எண்ணங்கள் என கருதினார்; அதை வளரச் செய்தார்.

## பிரும்மஞான சபையும் அன்னிபெசன்ட் அம்மையாரும்



மேடம் H.P பிளவட்ஸ்கி (1837-91) - கர்னல் H.S ஆல்காட் ஆகியோருடன் வேறு பலரும் இணைந்து பிரும்மஞான சங்கம் எனப்படும் தெய்வீகப் பேரவை உருவாக்கப்பட்டது. இச்சங்கமானது சீர்திருத்த இயக்கத்தை வலிமைப்படுத்தியது.

மற்றவர்களுடன் சேர்ந்து தோற்றுவிக்கப்பட்ட தியோ சபிக்கல் சொசைட்டியையும் வலிமையாக்கின.

அன்னிபெசண்ட் பண்டைய இந்திய சமயங்கள் தத்துவங்கள் மற்றும் கொள்கைகளைப் படிப்பதை ஊக்குவித்தார். கல்வியை ஊக்குவிப்பதற்காக அவரும் சென்ட்ரல் இந்து பள்ளியையும் தோற்றுவித்தார்.

## நாராயண குரு



நாராயண குரு, தென்னிந்தியாவின் சிறந்த புனிதராவர். அவர் கேரளாவில் 1854 செப்டம்பரில் பிறந்தார். அவர் உள்ளூர் ஆசிரியரின் வழிகாட்டுதலின் பேரில் ஆயத்தக் கல்வியைப் பெற்றார். அவர் மலையாளம், சமஸ்கிருதம் மற்றும் தமிழில் புலமை பெற்றவரானார் தனது குமரப்பருவ நாளிலிருந்து தனது மனதை பற்றுத் துறந்த நிலைக்கு உள்ளாக்கினார்.

அவருடைய பெற்றோர்கள் இறந்த பிறகு உண்மையான அறிவைத் தேடுவதற்காக அவருடைய பயணத்தை மேற்கொண்டார். அவர் சட்டாம்பி சுவாமிகளுடன் தொடர்பு கொண்டார். அவர்கள் சிறந்த தோழர்களானார்கள். அவர்கள், புனிதமான ஆண்களுக்கு பணிவிடை செய்வதிலும் தனிமையில் தியானம் செய்வதிலும் மற்றும் புனித யாத்திரை மேற்கொள்வதிலும் நேரத்தைச் செலவிட்டனர்.

சுவாமிகள் மற்றும் நாராயணன் இருவரும் எல்லா வகையான முன்னேற்றங்களையும் கொண்ட கேரளா நாயர் மற்றும் ஈழவர் வகுப்பைச் சார்ந்தவர்களிடையே நல்லெண்ணம் மற்றும் ஒற்றுமையை எதிர்பார்த்தனர். இதில் இருவரும் குறிப்பிடப்பட்ட அதே வரிசையில் பிறந்தவர்கள் என உணரப்படுகிறது. இந்த இரு வகுப்பினருக்குமிடையே இருந்த முரண்பாடு, கேரளாவின் அழிவுக்கு அச்சுறுத்தின. அவர்கள் இரு வகுப்பினரையும் ஒன்று சேர்க்க ஒன்றாக வேலை செய்ய தீர்மானித்தார்.

நாராயண குரு, சமூக, சமய சீர்திருத்தவாதியாவார், அவர் துறவி வாழ்க்கையை வாழ்ந்து கேரள மக்களின் ஆன்மீக வாழ்க்கையும் சமூக வாழ்க்கையையும் மேம்படுத்தினார்.

### அலிகார் இயக்கமும் மற்றும் சர் சையத் அகமது கானும்

முஸ்லீம்களிடையே சர் சையத் அகமத்கான் குறிப்பிடத்தக்க சமூக சீர்திருத்த வாதியாவார். அவர் முஸ்லிம்கள் நவீன கல்வியைப் பெற்றால் தான் அவர்களால் முன்னேறமுடியும் என்பதை உணர்ந்தார். சையத் அகமதுகான், சமய சகிப்புத்தன்மையின்மை, அறியாமை, பகுத்தறிவின்மை ஆகியவற்றுக்கு எதிராக இருந்தார். அவர் பர்தா முறை, ஒருவன் பல பெண்களை மணப்பது, எளிதான விவாகரத்து ஆகியவற்றை கண்டித்தார். சையத் அகமத்கான், அலிகார் இயக்கத்தை தொடங்கினார். இவர் அலிகாரில் முகமது ஆங்கிலோ-ஓரியன்டல் கல்லூரியை தோற்றுவித்தார். இது அறிவியல் மற்றும் பண்பாட்டைப் பரப்பும் மையமாக திகழ்ந்தது. பின்பு, இது அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகமாக வளர்ந்தது.

அலிகார் இயக்கம், முஸ்லிம்கள் வலுவடைய உதவியது. இது அவர்களுக்கு பொதுவான மொழியான உருதைக் கொடுத்தது. பல்வேறு நூல்களிலிருந்து பெறப்பட்ட தனிக் கூறுகளை உருது மொழியில் தொகுக்க ஒரு முஸ்லிம் அச்சகமும் வளர்ச்சியடைந்தது. பிந்தைய

காலங்களில் சையத் அகமத்கான் முஸ்லிம்களை தேசிய இயக்கத்தில் சேர வேண்டாம் என ஊக்கப்படுத்தினார். முஸ்லீம்களுக்கு தேவை கல்விதான், அரசியல் அல்ல என்பதை அவர் உணர்ந்தார். ஒரு வகையில் அவர் சாதிப்பிரிவினை மற்றும் பிரிவினை சக்திகளை ஊக்கப்படுத்தினார்.

குறிப்புகள்

## சமூக சீர்திருத்தம்

கிட்டத்தட்ட எல்லா சமய சீர்திருத்த வாதிகள் சமூக சீர்திருத்த இயக்கத்திற்கும் பங்களித்துள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியுமா? இது இந்திய சமுதாயத்தின் பின்தங்கிய நிலையினால் அதாவது சாதிமுறை மற்றும் ஆண் பெண் பாலினங்களில் சமத்துவமின்மை, ஆகியவை கடந்த காலத்தில் சமய ஆணையை பெற்றிருந்தன. சமூக சீர்திருத்த இயக்கங்களுக்கு 2 முக்கியமான நோக்கங்கள். இவை அ) அடிமைத்தளையினிடமிருந்து விடுவித்து, ஆண்களுக்கு நிகரான சமத்துவத்தை அளித்தல். ஆ) சாதி இறுக்கமுறைகளை நீக்குதல். குறிப்பாக தீண்டாமையை ஒழித்தல் நலிவடைந்த பிரிவினரை மேம்படுத்துதல் ஆகியவையாகும்.

## பெண்களின் விடுதலை



இன்றைய இந்திய சமூக வாழ்க்கையில் மிகவும் குறிப்பிடத்தக்க மாறுதல் என்னவென்றால் பெண்களின் நிலையாகும். அரசு, சீர்திருத்தவாதிகளும், குறிப்பிட்ட வயது வருமுன் திருமணம் செய்யும் பழக்கத்தை சட்டத்தின் நடவடிக்கைகள் மூலம் விட்டொழித்தனர்.

பெண்கள் தாங்களாகவே, எல்லாவற்றையும் முடியக் கூடிய எல்லா வழிகளிலும், முயலுவதில் கல்வி வசதிகள் மற்றும் சமூக துஷ்பிரயோகம் சம்பந்தமாக முயற்சி எடுத்தலில் உற்சாகம் கொண்டவர்களாக இருந்தனர். இப்பொழுது. பெண்களிடையே அரசியல் உணர்வு வளர்ந்துள்ளது. 1930இல் சாரதா சட்டம் ஆண்களுக்கு திருமண வயது 18, பெண்களுக்கு திருமண வயது 14 என்று நிர்ணயித்து இயற்றப்பட்டது. மகரிஷி கார்வேக்கு விருது பெண்களின் கல்வித்துறையில் அவரது சிறந்த சேவைக்காக பாரத ரத்னா வழங்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியுமா? அவர் பெண்களுக்காக, விதவைகள், கைவிடப்பட்ட பெண்களுக்காக பணி இல்லங்களை பள்ளிகளை ஏற்படுத்தினார். விரைவிலேயே இந்த இயக்கம் உத்வேகம் பெற்று பெண்களுக்காக பல பள்ளிகளும் கல்லூரிகளும் திறக்கப்பட்டன.

## சாதி முறைக்கு எதிரான போராட்டம்



இந்தத்துறையில் ஏராளமான பணிகள், ராம கிருஷ்ணா மிஷன் ஆர்ய சமாஜம் ஆகியவற்றால் செய்யப்பட்டன. குறிப்பாக ஆர்ய சமாஜத்தின் சுத்தி இயக்கத்தினால், இஸ்லாமியராக அல்லது கிறிஸ்துவனாக மாற்றப்பட்ட ஒருவர் மீண்டும் அவரது சொந்த சமயத்திற்கே திரும்பிவிடலாம் என்ற பங்களித்தது.

B.R.அம்பேத்காரும் மகாத்மாகாந்தியும் தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாவலர்கள். அம்பேத்கார் பல பள்ளிகளை கல்லூரிகளை அவர்களுடைய நன்மைக்காக திறந்தார். மற்றபடி மகாத்மா காந்தி தீண்டத்தகாதவர்களின் நிமித்தம் ஆதரவளித்தார். அவர்களை 'ஹரிஜனங்கள்' என அழைத்தார். கோவில்கள் அவர்களுக்கு திறக்கப்பட வேண்டும் சமமாக நடத்தப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.



குறிப்புகள்



சுதந்திர இந்தியாவின் அரசியல் அமைப்பு சட்டப்படி மற்றும் அரசியல் அமைப்பு இந்த இயக்கத்தை ஆதரித்தது. ‘தீண்டாமை’ சட்டப்படி குற்றம் என அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்னும் நாம் முழுமையான சமத்துவத்தையும் நியாயத்தையும் அடிப்படையாகக் கொண்டு, ஆண்கள் அல்லது பெண்கள் எந்த ஒரு சமூக அல்லது பொருளாதார பின்னனியில் இருந்தாலும் அவர்கள் மகிழ்வாக, சமமாக அவர்கள் தேவைகள் பூர்த்தியடைய வேண்டும். இந்த மாதிரி சூழ்நிலையைக் கொண்டுவர நாம் எல்லோரும் ஒன்றாக நீண்ட காலம் பணி செய்ய வேண்டும்.

## சுவாமிதயானந்தர்



சுவாமிதயானந்தாவின் சிறந்த சொத்து, சமஸ்கிருத மொழி மீதும் வேதங்களின் மீதும் இவருடைய புலமையாகும். இவர் எண்ணற்ற சமூக மற்றும் சமய தீயவைகள், இந்து சமயத்தில் நூற்றாண்டுக்கும் மேலாக பதுங்கியுள்ளமைக்கு காரணம் வேதங்களைப்பற்றி அறிவு இல்லாமையே யாகும் என்றார். ஆகையால் இவர் இந்து சமுதாயத்திற்கு உருவ வழிபாடு மற்றும் பெண்கள் கல்விக்கு சவால் விட்டார்.

1875-இல் அவர் ஆர்ய சமாஜத்தை நிறுவினார். இதனுடைய முக்கியமான நோக்கம் உண்மையான வேதங்களின் அறிவை பிரச்சாரம் செய்வதற்கும், மற்றும் இந்து சமுதாயத்தில் பதுங்கியுள்ள எல்லா தீயவைகளையும் இதனுடைய பெயரால் ஒதுக்கி விடுவதாகும். அவர் தீண்டாமையை எதிர்த்தார். அதே போல பல கடவுள் நம்பிக்கை, அவதாரவர்தா, சடங்குகள் ஆகியவற்றை எதிர்த்தார். இவருடைய கொள்கையான வேதத்திற்கு திரும்பி செல்லும் ஆணையை இவர் சம்மதித்தார்.

முதன் முதலாக இந்திய வரலாற்றில் இவருடைய ஆதரவில் இந்தியாவில் வேதங்கள் அச்சிடப்பட்டன. தனிப்பட்ட முறையில் இவரது மிகமுக்கியமான நூல் சத்யார்த்த பிரகாஷ்(உண்மையின் ஒளி) ஆகும்.

1883இல் சுவாமி தயானந்த குறிப்பிடத்தக்க நிகழ்வுகளுக்குப் பின் தன் உயிரை விட்டார். இவருடைய ஆதரவாளர்கள் 1886இல் லாகூரில் தயானந்த-ஆங்கிலோ வேத (DAV) பள்ளியையும் கல்லூரி (இப்பொழுது பாகிஸ்தானில் உள்ளது)யையும் தொடங்கினார்கள். இந்த டிஏவி இயக்கம் இவருடைய வேலையை முன்னின்று நடத்தி, இப்பொழுது இது 750 நிறுவனங்கள் ஒரே கூரையில் உள்ளன.

இந்த இரண்டு ஆதரவாளர்கள் மற்றும் சமமான புகழ் பெற்ற தனித்தன்மையுள்ளவர்களான ஈஷ்வர் சந்திரா வித்யா சாகர், ராதா கந்த தேப் மற்றும் நிறுவனங்களான பிரும்மஞான சபை ஆர்ய சமாஜம் போன்றவை இந்தியாவின் கிழக்கு வட கிழக்கில் பெரும்பாலோர் விழித்தெழுந்தார்கள். பல சமூக தீமைகள், ஆங்கிலேயரின் உதவியால் சட்டமுறைப்படி தடை செய்யப்பட்டன.

## ஜோதிராவ் கோவிந்தராவ் பூலே (1827-1890)



‘ஜோதிபா’ எனப் புகழ் பெற்ற ஜோதிராவ் கோவிந்தராவ் பூலே என்பவர் பூனாவில் தாழ்ந்த சாதியான மாலிகள் குடும்பத்தில் 1827இல் பிறந்தார். அவருடைய கருத்துப்படி தாழ்ந்த சாதியினரையும், பெண்களையும் கல்வியின் மூலமாக முன்னேற்றுவது தான் ஒரே வழியாகும் என்றார். ஆகையால்

இவர் குறிப்பாக தாழ்ந்த சாதி மக்களுக்காக பள்ளியைத் திறந்தார் சத்ய ஷோடக் சமாஜையும் 1873இல் தொடங்கினார். அவருடைய முக்கியமான நோக்கம், தீண்டாமையினர் பின் தங்கிய வகுப்பினர் என்று அழைக்கப்பட்ட மக்களுக்காக சமூக நீதியை நாடுவதாகும். இந்த வேலைக்கான அங்கீகாரம் பிந்தைய காலங்களில் இவரை வந்தடைந்தது இவர் பூனா நகர சபைக்கு அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### பண்டிதராமாபாய் (1858-1922)

இந்தியாவில் இக்காலத்திய பெண்கள் சமூக சீர்திருத்தவாதிகள் பெயர்களிடையே மிக முக்கியமானவர், மகாராஷ்டிராவில் பண்டித ரமாபாய் ஆவார். அவருடைய பெற்றோர்கள் இறந்த பிறகு அவர் தன்னுடைய சகோதரனுடன். ஓவ்வொரு இடத்திற்குப் பயணமாகச் சென்று, புராணங்களின் மீது கருத்தாய்வுகளை கொடுத்தார். இதன் விளைவாக, அறிஞர், சமய பிரசங்கி என்ற புகழ் எல்லாப் பக்கம் பரவியது. கல்கத்தா பண்டிதர்களும் நகர மக்களுக்கு சொற்பொழிவு ஆற்ற இவரை அழைத்தார்கள். ஒவ்வொருவரும் அவருடைய அறிவையும் நாவன்மையையும் கண்டு பெரிதும் வியந்தனர். ஆகையால் படித்த பெண்கள் மீதான வழங்கப்பட்ட பட்டமான பண்டிதர் என்று மக்கள் இவரை அழைக்கத் தொடங்கினர்.

1882இல் ராமாபாய் பூனாவிற்கு திரும்பிச் சென்றார் இயல்பாகவே மஹாராஷ்டிரத்தில் பிரம்ம சமாஜ்யத்தை பிரச்சாரம் செய்து கொண்டிருந்த, சீர்திருத்த சமூகத்து பிரார்த்தன சமாஜத்துக்கு ஈர்க்கப்பட்டார். இங்கும் இவர் பெண்களின் நிலையை முன்னேற்றுவதில் கருத்தூன்றினார். 1890இல் சாரதா சதன் என்ற வீட்டை விதவைகளுக்காக தொடங்கினார்.

மற்ற பிரபலமான பிரமுகர்களான மகாதேவ் கோவிந்ரனடே, சு.மு படர்கார், தாதாபாய் நௌ ரோஜி, பெஹ்ராமஜி மல்பாரி ஆகியோர் மேற்கு இந்தியாவில் சமூக சீர்த்திருத்தவாதிகளாவர்.

## 5.5 அச்சகம், நவீன இந்திய மொழிகளின் வளர்ச்சி, இலக்கியம்

1798இல் கல் அச்சுக்கலை கண்டு பிடிக்கப்பட்டது. இதை, பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட கல்லின் மேல் பரப்பில், கையெழுத்துப் படிவங்களை அச்சடிக்க, படம் அல்லது வரை படங்களுக்காக பயன்பட்டது. ஏராளமான இதே மாதிரியான பிரதிகள் இவ்விதத்தில் அச்சடிக்கப்பட்டது. சுமாராக 1820யலிருந்து நூற்றுக்கணக்கான துண்டு பிரசுரங்கள், புத்தகங்கள் அச்சிடப்பட்டன. இவை இந்தியாவின் வளர்கின்ற படித்த மக்களின் தேவைகளை நிறைவேற்றின. இது மேற்கு இந்தியாவிற்கு வழங்கின மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். இதன் விளைவாக, 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் அச்சகம் பொது மக்களின் கருத்துகளை செல்வாக்கடையச் செய்யும் ஒரு கருவியாக மாறியது.

புதிய அச்சடிக்கும் அச்சகங்கள், மிக விலையுள்ளதாக இல்லாததால், அவற்றினுடைய எண்ணிக்கைகள் துரிதமாக வளர்ந்தன. இது ஒருவருக்குப்பின் ஒருவராக ஏராளமான எழுத்தாளர்களை, வெவ்வேறு இந்தியமொழிகளில் இலக்கியத்தை உருவாக்க ஆர்வமூட்டியது. அவர்களுடைய மூல நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டவை மற்றும் பழமையான இந்திய மற்றும் புகழ பெற்ற மேற்கத்திய நூல்களிலிருந்து தழுவப்பட்டவைகள். நமது பண்பாட்டு மரபை வளப்படுத்த உதவினது. இது இந்தியர்களின் விழிப்புணர்ச்சியை கொண்டு வருவதற்கு உதவின.

வார இதழகள், திங்களிரு முறை இதழ்கள் தினசரி செய்தித்தாள்கள் பெரும்பாலும் ஒவ்வொரு மொழியிலும் வெளியிடப்பட்டன.ஐரோப்பிய நாடுகளில் செய்தித்தாள் படிப்பவரின்





எண்ணிக்கையை ஒப்பிடுகையில், செய்தித்தாள்கள் படிப்போரின் மொத்த எண்ணிக்கை சிறியதாக இருந்தாலும், நாவல்கள், கட்டுரைகள், செய்யுள்கள் வடிவத்தில் ஒரு புதிய முழு அடுக்கு தேசிய இலக்கியங்கள் நாட்டுப்பற்றை உருவாக்குவதில் குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றியுள்ளன. பன்கிம் சந்திராவின் ஆனந்த மாதா, தினபந்து மித்ராவின் நீல்தர்ப்பன், பார்டென்டு ஹரிஷ் சந்திராவின் பாரத் துர்தர்ஷா, லஷ்மிளாத் பெஜ்பருவாவின் அஸ்ஸாமிய நூல்கள், சுப்பிரமணி பாரதியின் தமிழ் எழுத்துகள் மற்றும் உருதுவில் அல்டப் ஹீசைனின் நூல்கள், இந்தியர்களின் மனதை பரபரப்பூட்டின.

### செய்தித்தாள்களின் பங்கு

இவ்வாறாக 19ஆம் நூற்றாண்டின் இறுதியில், இந்தியாவில் பொது மக்களின் கூர்மையான கருத்துகளை உருவாக்குவதற்கு, பரப்புவதற்கு செல்வாக்கடையச் செய்வதற்கு அச்சங்கள் வலிமையான முக்கியமான கருவியாக மாறியது.

இதன்விளைவாக ஆங்கிலேயருக்கு எதிரான உணர்ச்சிகளை அரசுக் கொள்கைகளின் மீது முக்கியமான சமூக பொருளாதார பிரச்சனைகள் மீதும் கலந்துரையாடலில், விமர்சனம் செய்வதில், கருத்துரைகளைப் பரப்புவதில் செய்தித்தாள்கள் குறிப்பிடத்தக்க பங்கை வகித்தன. இது முழுமையான இந்தியன் என்ற உணர்வு நிலையை வளர்ப்பதிலும் இந்திய மக்களுக்கு முக்கியமான அரசியல் கல்வியை கொடுப்பதிலும் இது உதவியது.

### சில முக்கியமான செய்தித்தாள்கள்

| | |
|---|---|
| வங்காளம் | இந்து தேசபக்தர் (ஆங்கிலம்) |
| | அமிர்தா பஜார் பத்திரிகை (ஆங்கிலம்) |
| பம்பாய் | மகாரதா(ஆங்கிலம்)கேசரி (மராத்தி) |
| சென்னை | தி ஹிந்து(ஆங்கிலம்) |
| | சுதேசமித்திரன்(தமிழ்) |
| பஞ்சாப் | தடிரிபியுள் (ஆங்கிலம்) |
| | கோஹினுார், அக்பர் அம்(உருது) |

## 5.6 சுதந்திரத்துக்கு பின் இந்தியா

சுதந்திர இந்தியா, தனது சாதனைகளுக்காக பெருமைப்படுவது நியாயமானது. சுதந்திரத்திற்கு பின் மத சார்பற்ற ஜனநாயக குடியரசிற்கு வலிமையான அஸ்திவாரத்தை அமைத்தது மிக முக்கியமான சாதனைகளில் ஒன்றாகும். இந்தியா சுதந்திரம் அடைந்திலிருந்து பார்லிமெண்ட் முறை அரசாட்சியைத்தான் தழுவிக் கொண்டிருந்தது. இப்பொழுது மிகப் பெரிய ஜனநாயகக்குடியரசாகத் திகழ்கிறது. முன்னாளைய சமஸ்தான அரசுகளை இந்திய யூனியனுடன் ஒருங்கிணைத்தது மற்றுமொரு பெரிய சாதனையாகும். அரசுகளின் மறு சீரமைப்பு பரிசீலித்துக் கொண்டிருந்த வேளையில் புதிய அரசுகள் மற்றும் கூட்டிணைவு மாகாணங்கள் மக்களின் விருப்பத்திற்கேற்ப அமைக்கப்பட்டன. சுதந்திரத்திற்கு பின் பொருளாதார திட்டங்கள் சமூக நீதியுடன் கூடிய பொருளாதார வளர்ச்சியை உறுதிப் படுத்த அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக பொருளாதார மேம்பாடு, குறிப்பாக விவசாயத்துறையிலும் விவசாய அடிப்படை தொழிற்சாலைகளிலும் பெரும்படியான வளர்ச்சியை இந்தியா உருவாக்கியது. அறிவியல், தொழில் நுட்பத்திலும் இந்தியா

மெச்சத்தக்க வளர்ச்சியை அடைந்தது. உயர்ந்த தொழில் நுட்ப பகுதிகளிலும் வளர்ந்த நாடுகளின் தொழில் நுட்பத்தை விரைவாக ஈடுபடுத்திக் கொள்கிறது. இந்த வட்டாரத்தில் அரசியல், பொருளாதாரத்தின் உறுதி, ராஜ தந்திர அந்தஸ்து ஆகியவற்றினால் இந்தியாவின் குரல் இப்பொழுது பன்னாட்டு மன்றங்களில் மரியாதையுடன் கேட்கப்படுகிறது. இந்தியா ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலில் அங்கத்தினராவதற்கான பிரச்சனைக்கு இதே போன்று பெரிய அளவிலான சம்மதத்தை இன்று எதிர்நோக்கியுள்ளது.

## இந்தியாவில் தேசிய இயக்கம்- தொடக்கம்

ஆங்கிலேயரின் காலனி ஏகாதிபத்தியம் தான் இந்தியா எல்லா நிலைகளிலும் பின் தங்கியிருப்பதற்கான முக்கிய காரணமாகும். இந்தியர்கள் இப்பொழுது உண்மையை உணருகிறார்கள். உழவர்கள், பணியாட்கள் ஆங்கிலேயரின் பேராசை மற்றும் உழவர்கள் மற்றும் நாட்டமின்மைக்கு மிக மோசமான பாதிப்புக்குள்ளானார்கள். தொழில் அதிபர்களும் முதலாளித்துவ கொள்கைகளை கொண்டவர்களும், ஆங்கிலேய ஆட்சியில் திருப்தி அடையவில்லை. இந்த சமயத்தில் கற்றறிந்தோர் குறிப்பிடத்தக்க பங்கை அளித்தனர். அவர்கள் தான் முதன் முதலில் இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின் உண்மையான இயல்பை உணர்ந்தவர்கள். ஆங்கிலேயர்கள் நன்மை செய்யக் கூடிய ஆட்சியாளர்கள் என்ற அவர்களது தொடக்க நம்பிக்கை சிதறுண்டது. இப்பொழுது பொதுவாகவே ஆங்கிலேயர்களை பேராசையும் தந்நலத்திலும் முற்றிலுமாக ஈடுபாடு உடையவர்களாகப் பார்க்க முடிகிறது.

19-ஆம் நூற்றாண்டில் எல்லா இந்தியர்களும் ஒன்று கூடி அவர்களுக்கு பொதுவான எதிரி ஆங்கிலேயர்கள் என உணர்ந்தார்கள். தங்களது சொந்த நன்மைகளுக்காக இந்தியாவை அழிப்பதற்கு வந்த ஆங்கிலேயர்கள். நிர்வாகம் மற்றும் நாட்டின் ஒற்றுமையைக் கொண்டு வருவதில் உதவினார்கள். அவர்கள் அறிமுகப்படுத்தின இரயில் வழி தொடர்பு, தபால், தந்தி. சாலைகள் வளம்படுத்துதல், சாலை வாகனப் போக்குவரத்துகள் இந்த ஐக்கியத்திற்கு பெரும் பங்களித்தன. ஆங்கிலேயருடன் இந்தியாவிற்கு வந்த மேற்கத்திய எண்ணங்கள் மற்றும் கல்வி இந்திய மக்களின் தேசிய உணர்வைத் தட்டியெழுப்புவதில் உதவின. நவீன கருத்துகளான ஜனநாயகம், மனித இனம், தேசப்பற்று மக்களின் இறையாண்மை இந்தியர்களை தேசிய உணர்வு நோக்கி செல்ல வழிகாட்டத் தொடங்கியது. அச்சகமும், இலக்கியமும் தேசப்பற்றுணர்வை பரப்புவதில் சமபங்கை வகித்தன. அங்கு பல தேசப்பற்று எழுத்தாளர்கள் தங்களுடைய எழுத்தினால் மக்களை பரவசப்படுத்தினார்கள் 19-ஆம் நூற்றாண்டின் பொழுதும் கூட இந்தியாவின் பழமையான நன் மதிப்பு வலுப் பெற்றது. இந்தியாவின் கடந்த நாட்களைப் படித்து அதனுடைய ஆழமான நன்மதிப்பை கொண்டு வந்த சில தெளிவான ஐரோப்பியர்களால் முன்னின்று நடத்தப்பட்டது.

சில புகழ் பெற்ற கற்றறிந்த இந்தியர்களும் விழிப்புணர்வை இந்நாட்டில் வலுப்பெற பரப்புதலில் பங்களித்தார்கள். இந்தியாவில் பல இந்தியர்கள் பஞ்சத்தின் காரணமாக இறந்து கொண்டிருக்கும் பொழுது ஆங்கிலேய ஆட்சியாளர்களின் இன கர்வம் வேறுபாடு, ஆங்கிலேயர்களின் இல்பர்ட மசோதா, லிட்டன் பிரபுவின் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகள், ஏராளமான பணச் செலவில் இந்தியாவில் ஆங்கிலேயர் நடத்தின அரசின் தர்பார் இவையெல்லாம் ஆங்கிலேயருக்கு எதிரான உணர்ச்சிகளை இந்தியர்களிடையே தீவிரமாக்கியது. 19ஆம் நூற்றாண்டில் இவையெல்லாம் தேசீய உணர்வுகளைப் பரப்புவதற்கான காரணங்களாயின. இத்தகைய உணர்வுகள் இந்திய தேசிய காங்கிரசின் வருகையுடன் 1885இல் ஏ.லு ஹியூமால் தொடங்கப்பட்ட தேசிய இயக்கமாக உருவானது. இந்திய தேசீய காங்கிரசின் வரலாறு, இந்தியாவில் தேசீய இயக்கமாக மாறியது. இதனுடைய

தோற்றத்தின் முதல் 20 ஆண்டு அரசியலில் காங்கிரஸ் வெகுவாக எதையும் சாதிக்கவில்லை. ஆனால் இது அரசியல் விழிப்புணர்வை, ஒற்றுமையுணர்வை உருவாக்குவதில் வெற்றி பெற்றது. இந்தக் கட்டத்தை தேசீய இயக்கத்தில். மிதவாதிகளின் சகாப்தம் என அழைக்கப்படலாம்.

1906-இல் முஸ்லிம் லீக் உருவானது. அறிவுத்திறன் மிக்க ஆங்கிலேயரின் செயல் அணுகு முறையான பிரித்தாளும் முறையின் உருவாக்கம் ஆங்கிலேயரின் முதல் இலக்காக கருதப்பட்டது. ஆங்கிலேயர்கள் 62 மில்லியன் முஸ்லிம்களை இந்துக்களிடமிருந்து பிரிப்பதில் வெற்றி கண்டதில் மகிழ்ச்சி அடைந்தார்கள். இவ்வாறாக. தீய கோரமான வகுப்புவாத பிரிவினை நம்நாட்டில் உதித்தது.

## தன்னாட்சி இயக்கம்

முதல் உலகப் போர் 1914இல் தொடங்கியது காங்கிரஸ் ஆங்கிலேயருக்கு ஆதரவு கொடுக்க முடிவு செய்தது. ஆங்கிலேயர்கள், போர் முடிந்தவுடன் நன்றிக் கடனாக. இந்தியர்களுக்கு சுதந்திரத்தை வழங்கலாம் என குறிப்பாக மிதவாதிகளால் நம்பப்பட்டது. ஆனால் இந்த நம்பிக்கை பூர்த்தி அடைய முடியாது ஏனென்றால் குடியேற்றங்களைத் திரும்பப் பெறுவதற்காகவே இந்த போர் நடத்தப்பட்டது. இதன் விளைவாக 2 தன்னாட்சி லீக்குகள் 1915-16இல் தோற்றுவிக்கப்பட்டன. ஒன்று பூனாவில் திலகராலும் மற்றொன்று அடையாறில் அன்னிபெசண்டினாலும் தொடங்கப்பட்டன. இத்தகைய லீக்குகள் சுவராஜ் அல்லது தன்னாட்சியை அடைவதை இலக்காக கொண்டிருந்தன. அவை இந்திய தேசீய வாதிகள் உறுதியான இலக்கை அடைய கொடுத்தது. இயக்கம், வன்மையான அல்லது புரட்சிகரமான வழிகளை தவிர்த்தது, தன்னாட்சி லீக்குகள், காங்கிரசின் உதவி அங்கங்களாக பணியாற்றியது.

## மிதவாதிகளின் காலம் (1905-1918)

1905 மற்றும் 1918க்கு இடைப்பட்ட காலத்தினை தேசீய காலமாக, மித வாதிகளின் சகாப்தம் என அழைக்கப்படுகிறது. தீவிரவாதிகள், மிதவாதிகளை அரசியல் நோக்குகளை வரையறுப்பில் தோல்வி, மிதமான, பலனற்ற முறைகளைப் பயன்படுத்தல், இயக்கத்தை ஒரு பெரிய மக்கள் கூட்டமாக மாற்றுவதில் தோல்வி என குறைவிமர்சனம் செய்தனர். தீவிர வாதிகள் நேரடியான அரசியல் செய்கைகள், அரசியலமைப்பின் சீர்திருத்தம் ஆகியவற்றுக்கு பதிலாக சுயராஜ் அல்லது தன்னாட்சியைக் கோருவதை நம்பினார்கள். தீவிர வாதிகளின் பிளவு கொண்ட கட்சியை பிரபலமான மூவரான லால்-பால், அதாவது லாலா லஜபதிராய், பால கங்காதர் திலக், பிபின் சந்திரா பால் ஆகியோரால் நடத்தப்பட்டது, பின்கிம் சந்திரா, ராசுவாமி விவேகானந்தா, சுவாமி தயானந்த் சரஸ்வதி, அரபிந்தோ கோஷ் ஆகியோர் தீவிரவாதிகளை, அவர்களுடைய தீவிர வாத தத்துவம் கருத்துகள் மற்றும் போதனைகளினால் வயப்படுத்தினார்கள்.

இந்தியாவில், கர்சன் பிரபுவின் அடக்குமறை கொள்கைகள், வகுப்பு பிரிவினையாக பிரித்தாளும் கொள்கையின் அடிப்படையில் வங்கப் பிரிவினையின் உச்ச நிலையை அடைந்து போராட்டத்தின் உடனடிக் காரணமாக ஆனது. அங்கு வங்கம் பிரிவினையை எதிர்த்து கிளர்ச்சி நடந்தது. அந்நியப் பொருட்களை புறக்கணித்தல், உள்நாட்டுப் பொருட்களை ஆதரித்தல் ஆகிய வழி முறைகள் தழுவப்பட்டன. புறக்கணிப்பும் சுதேசியும் விரைவிலேயே பரவி, நாடு தழுவிய இயக்கங்களாக மாறின. மாணவர்கள், பெண்கள் உள்பட சமுதாயத்தின் எல்லா பிரிவிற்கும் இந்தக் கிளர்ச்சியில் மிகவும் ஈடுபாடு உடையவர்களாக ஆனார்கள். இது பேரளவில் எண்ணிக்கை கொண்ட கூட்டமாக மாறினது. ஆங்கிலேய அரசு இதை ஒடுக்க எல்லாவிதமான அடக்குமுறைகளைப் பயன்படுத்தியது.

### 5.6.3 தீவிரவாதிகளின் காலம் (1919-1934)

மாண்டேகு-செம்ஸ் போர்டு சீர்திருத்தங்கள், 1919 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்துடன் இரட்டை ஆட்சியை மாகாணங்களில் அறிமுகப்படுத்தியது. மிதவாதிகள் இத்தகைய சீர்திருத்தங்களை வரவேற்றார்கள். அதே சமயம் தீவிரவாதிகள் நிராகரித்தார்கள். அரசியல் வன்முறையை அடக்க, 1919ஆம் ஆண்டு ரௌலட் சட்டமும் இயற்றப்பட்டது. இந்த சூழ்நிலையில் இந்திய விடுதலை இயக்கத்தின் புதிய அரசியல் களம் தோன்றியது. காந்திஜி காங்கிரஸ் உயர்மட்ட தலைமையின் வெற்றிடத்தை நிரப்பியவர். இவர் காந்திஜி, தெற்கு ஆப்ரிக்காவில் இந்தியர்களுக்கு எதிரான பாரபட்சத்தை எதிர்த்து இயக்கத்தை நடத்தினார். அவர் சத்யா கிரகம் (உண்மையின் ஆற்றல் அல்லது அன்பின் ஆற்றல் அல்லது ஆன்மாவின் ஆற்றல்) என்ற அரசியல் ஆயுதத்தை பயன்படுத்தினார். இந்தியாவில் இவரது முதல் வெற்றி சாம்ப்ரான் சத்யாகிரகம் ஆகும். இது விடுதலைப் போராட்ட மூன்றாவது கட்டத்தின் தொடக்கமாகும். இதை காந்திய சகாப்தம் என அழைக்கப்படலாம்.

ரௌலத் சட்டத்திற்கு எதிராக ஒரு இயக்கம் உருவாக்கப்பட்டது. வன்முறை தொடங்கியதால், காந்திஜி அதை திரும்ப பெற்றுக் கொண்டார். அவர் வன்முறைக்கு கடுமையான எதிரியாக இருந்தார். ஜாலியன் வாலா பாக் படுகொலை, 1919, ஏப்ரல் 13ஆம் தேதி நடந்தது. ஜெனரல் டயரின் கட்டளைப்படி, 1000க்கும் மேலானவர் படுகொலை செய்யப்பட்டார்கள். 1919 நவம்பரில் கிலாபத் இயக்கம் தொடங்கியது. கிலபாத் இயக்கம், ஒத்துழையாமை இயக்கத்தடன், காந்தியின் தலைமையில் ஒன்று சேர்ந்தது. 1920 மார்ச் 10 அன்று, தனது அஹிம்சை ஒத்துழையாமை இயக்கத்தை அறிக்கையிட்டார். இவர் ஆங்கிலேயரின் வேலைகள், நீதிமன்றம், பள்ளிகள், கல்லூரிகள் நிகழ்ச்சிகள், பொருட்களைப் புறக்கணிக்க விரிவான செயல்முறைகளை வரையறுத்தார். ஆக்கபூர்வமான செயல் முறைகளான சுதேசியை மேம்படச் செய்தல், தீண்டாமையை நீக்குதல், இந்து முஸ்லிம் ஒற்றுமையை வளர்த்தல் ஆகியவை அடங்கும்.

சி.ஆர் தாஸ் மோதிலால் நேரு ஆகியோர் தங்களது ஆலோசனைக்குழுக்களுக்குள் சுவராஜ்ய கட்சி என்ற பெயரில் இந்த முறையை முறியடிக்க திட்டம் வகுத்தார்கள். ஆனால் மூன்று ஆண்டிற்குள் தோல்வியடைந்தது. புரட்சிகரமான செயல்கள் 1922இல் வலுப்பெற்று 1934 வரை விட்டு விட்டு நிகழ்ந்தன. குறிப்பிடத்தக்க புரட்சிக்காரர்களான பகத்சிங், சந்திர சேகர் ஆஜாத், ராஜ்குரு, ஷிக்தேவ், பிஸ்மில் அஷ்பக்குல்லா இன்னும் பலரின் பெயர்கள் அடங்கும். அங்கு புரட்சிகர பொதுவுடைமைக் கொள்கையினரான எம்.என்.ராய், தங்கே, முஜபர் போன்றவர்கள் இருந்தனர். சில பொதுவுடைமைக் கொள்கையினருக்கு மிரட் கூட்டு சதித்திட்ட வழக்கில் நீண்ட கால தண்டனை வழங்கப்பட்டது.

1919இல் சைமன் கமிஷன் அமைக்கப்பட்டு, இந்தியாவின் அரசியல் சூழ்நிலையை ஆராய்வதற்காக அனுப்பப்பட்டது. அஹிம்சையை எதிர்நோக்க வேண்டிய இக்குழு ஆனால் கசப்பான எதிர்ப்பு போராட்டத்தை சென்ற இடத்தில் எல்லாம் எதிர்நோக்கியது இக்குழுவில் ஒரு இந்தியர் கூட இடம் பெறவில்லை. லாலா லஜபதிராய் லாகூரில் அமைதியான முறையில் போராட்டத்தை முன்னின்று நடத்திய பொழுது, லத்திகளால் அடிப்பட்ட காயங்களினால் இறந்துவிட்டார். 1928இல் இந்தியாவின் அரசியலமைப்பு விவரத் தொகுப்புகள் நேரு அறிக்கை என வரையறுக்கப்பட்டன. 1929இல் லாகூர் காங்கிரஸ் கமிட்டியில் முழு விடுதலை (பூரண சுய ராஜ்யம்) என்ற இலக்கைத் தழுவி 1930 ஜனவரி 26 அன்று சுதந்திர நாளாகக் கொண்டாடப்பட்டது. காந்திஜி தண்டியாத்திரை எனப்புகழ் பெற்ற உப்பு சத்தியா கிரகத்தை 1930 ஏப்ரல் 6இல் மேற்கொண்டார். சட்ட மறுப்பு இயக்கம் 1934 வரை நடந்தது, இதற்கிடையில்





அங்கு வட்ட மேஜை மாநாடுகளும் நடந்தன. ஆனால் இந்த இயக்கம் நிறுத்தி வைக்கப்பட வேண்டியதாயிற்று. காந்திஜி, அக்டோபர் 1934இல் காங்கிரசை விட்டு வெளியேறினார். காந்திஜி பின் தங்கிய வகுப்பினர் மற்றும் தீண்டாமையினரை ஹரிஜனங்கள் என அழைத்தார். ஹரிஜன சேவாக சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.

### 5.6.4 சுதந்திர இந்தியாவின் சாதனைகள்

1935இல் இந்திய அரசு சட்டம் கொண்டுவரப்பட்டது. இது அனைத்து இந்திய கூட்டமைப்பாக பரிணாமித்தது. மாகாண சுயாட்சி அறிமுகப்படுத்தப்பட்டது. 14 சதவிதம் மக்கள் மட்டும் வாக்களிக்க முடிந்தது. தனி வாக்காளர் தொகுதிகள் முஸ்லிம்கள், சீக்கியர்கள், இந்திய கிறிஸ்தவர்கள் ஆங்கிலோ-இந்தியர்கள், ஐரோப்பியர்கள், மற்றவர்களிடையே வழங்கப்பட்டது. சட்டம் ஒற்றுமையைத் தோற்றுவிப்பதில் ஆர்வமூட்டாமல், பிரிவினையையும் வகுப்புவாதத்தையும் ஊக்கப்படுத்தியது. காங்கிரஸ் இந்த சட்டத்தை கண்டித்தது. அதனால் இது தேர்தலில் பங்கு பெற முடிவு செய்தது. 1937இல் தேர்தல்கள் நடை பெற்றன. காங்கிரஸ் அமைச்சர்கள், 11 மாகாணங்களை 7 மாகாணங்களாக ஒருங்கமைந்தார்கள். இது மக்களுக்கு பல வகைகளில் நிம்மதியைக் கொடுத்தது. சமதர்மக்கருத்துகள், காங்கிரசின் இரு உள்ளமைப்பிலும் மற்றும் வெளியிலும் வளர்ந்தன. குறிப்பிடத்தக்க காங்கிரஸ் தலைவர்கள் நேரு மற்றும் போஸ்சும் சமதர்மக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டனர். ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை, பிரிவினை வாதத்திற்கு வழி தூண்டியது. ஆங்கிலேய ஆட்சியாளர்கள், ஒரு இனத்தினின்று மற்றொரு இனத்தை எதிர்க்க ஆரம்பித்தனர். அவர்கள் முஸ்லிம்களை சமாதனப்படுத்தி சிறுபான்மை உரிமைகளை கேட்க அவர்களை இணங்கச் செய்து நாட்டுப்பற்றைக் கட்டுப்படுத்த முயன்றார்கள். வகுப்புவாத தொகுதிகள், அதே இலக்கான பிரித்தாள்வது, தேச ஒற்றுமையை குலைப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டிருந்தனர். வகுப்பு வாதத்தின் விளைவாக இரட்டை ஆட்சி கோட்பாடு, 1938இல் பரிணாமித்தது மற்றும் 1940ல் ஜின்னாவால் கொண்டுவரப்பட்டது. முஸ்லிம் அல்லாத வகுப்பினர் ஒரு பொழுதும் இத்தகைய பரிமாணங்களை முஸ்லிம் வகுப்பினராக ஏற்றுக் கொள்ளவில்லை. இது பிந்தைய எதிர்ச் செயலுக்கு சிறிது குறைவாகவே இருந்தது. 1933இல் இந்து மகாசபாவின் கூட்டத் தொடர் பனாரசில் நடந்தது.

சுவாமிதயானந்தாவால் தோற்றுவிக்கப்பட்ட ஆர்ய சமாஜம், சமாஜின் ஆதரவைக் கொண்ட சுத்தி இயக்கங்கள் இந்து வகுப்பினை வலிமைப்படுத்துவதற்கும் தூய்மைப்படுத்துவதற்கும் முக்கியமான இயக்கங்களாக இருந்தன. முனைவர் ஹெட்ஜ் வார், ராஷ்டிரிய ஸ்வயம் சேவச் சங்கை (R.S.S) தோற்றுவித்தார். இது இந்து மக்களைத் தட்டியெழுப்பி ஒன்றுபடுத்தி, மற்றும் தேசபற்றினை மனதில் வாங்கச் செய்தனர். ஷகா உத்திகள் இந்த நோக்கத்திற்காக கையாளப்பட்டன. 1939இல் இரண்டாம் உலகப்போர் தொடங்கிய பொழுது காங்கிரஸ் முழு சுதந்திரத்திற்கு வேண்டுகோள் விடுத்தது. 1942இல் கிரிப்ஸ் குழு போரின் முடிவில் இந்தியாவுக்கு சுயராஜ்ய தகுதியைக் கொடுத்தது. 1942இல், காந்திஜி மற்றும் காங்கிரசால், வெள்ளையனே வெளியேறு இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. இக்காலத்தில் ஜெய பிரகாஷ் நாராயணின் தலைமையின் கீழ் இருந்த இயக்கமும் வலிமையானதாக இருந்தது.

வன்மை அஹிம்சை ஆகிய இரு இயக்கங்களும் தோல்வியடைந்தன. ஆனால் ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு விரைவாக வெளியேற வேண்டும் என உணர்ந்தார்கள். 1943இல் சுபாஷ் சந்திரபோஷ், ராஷ் பிகாரி போஸ் இந்திய சுதந்திர லீக், அஜாத் ஹிந்தப்பாஸ் என அழைக்கப்பட்ட இந்திய தேசிய படையையும், சீங்கப்பூரில் நிறுவினர். ஜப்பானியர்களின் உதவியுடன், இந்திய தேசியப்படை இந்திய எல்லையை அடைந்து கொஹிமா வைக்கைப்பற்றியது. ஆனால் அதற்கு நேர்மாறாக ஜப்பான் ஆங்கிலேயப் படையால்

தோற்கடிக்கப்பட்டது. சுபாஷ் சந்திரபோஸ் 1945இல் ஆகஸ்டில் ஆகாய விபத்தில் கொல்லப்பட்டார் என அறிவிக்கப்பட்ட பொழுது, இந்திய தேசீய படையும் சிதறுண்டது. போர் முடிவடைந்த பின், இந்தியாவில் தேர்தல்கள், 1946ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடைபெற்றன. காங்கிரஸ் பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற்றது.

1946 மார்ச்சில் அமைச்சரவை தூதுக்குழு இந்தியர்களுக்கு அதிகாரத்தை மாற்றுவதை துரிதப்படுத்த வந்தது. மே 16 அன்று இதனுடைய சிபாரிசுகளை வெளியிட்டது. அங்கு காங்கிரசுக்கும் முஸ்லீம் லீக்குக்கும் இடையே கருத்து வேறுபாடு இருந்தது. இந்த நிகழ்வுகளில் வைஸ்ராய் நேருவின் கிழ் ஒரு இடைக்கால அரசை ஏற்படுத்த காங்கிரசை அழைத்தது. முஸ்லீம் லீக் சீற்றங் கொண்டது. இதன் விளைவாக வகுப்புக் கலவரம் ஏற்பட்டு, மிகுதியான குருதி சிந்தப்பட்டது. முஸ்லீம் லீக் ஒத்துழைக்கவில்லை அவர்களுடைய முஸ்லீம் மக்களுக்கு தனி நாடாக வேண்டும் என்று பாகிஸ்தான் அழுத்தமாகக் கோரியது. ஆங்கிலேய பிரதம மந்திரி அட்லி பிப்ரவரியில் அதிகாரத்தை மாற்றும் திட்டம், 1948, ஜுனில் என அறிவித்தார். மௌண்ட் பேட்டன் பிரபு, வைஸ்ராய் ஆக, இந்தியாவிற்கு மார்ச்சில் இதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அனுப்பப்பட்டார். இடர்ப்பாடுகளின் காரணமாக காங்கிரஸ் குறிப்பாக பரவலாக உள்ள பிரிவினைவாத கொல்லுதல் மற்றும் லீக் மற்றும் ஜின்னாவின் சமரசத்திற்கு உடன்படாத மனப்பான்மை இந்தியாவை பிரிப்பதற்கு உடன்பட வேண்டியதாக இருந்தது. பிரிவினைக்குப் பிறகு 1947, ஆகஸ்ட்டு 15இல் இந்தியா விடுதலையானது எதிர்பாராத நடு நிசியில் (14, 15மற்றும் 15 ஆகஸ்ட்டு) அதிகார மாற்றம் நிகழ்ந்தது.

## இப்பகுதிக்கான கேள்விகள் 5.2

1. எந்த முறையில், பிரத்தியேகமாக தயாரித்த கல் பரப்பின் மீது அச்சடிக்கப்படும் எழுத்துகளை எவ்வாறு அழைக்கப்பட்டன?
2. ஆனந்த மாதாவை எழுதியவர் யார்?
3. வேதத்திற்கு திரும்பி செல் எனும் வாசகத்தை அளித்தது யார்?
4. ஜோதி பூலே எப்பொழுது சத்ய ஷோடக் சமாஜை தொடங்கினார்?

## நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- ஐரோப்பாவில் அச்சகங்களைக்கண்டு பிடித்தல், மறுமலர்ச்சி, சீர்திருத்தம் போன்ற நிகழ்வுகள், கற்றலை பரவலாக்கியது. இவை மக்களை கேள்விகளைக் கேட்கக் கூடிய உறுதிபாட்டை உற்சாகப்படுத்தியது.
- மேற்கத்திய நாடுகளுடன் இந்தியாவின் தொடர்பு ஏராளமான சமய மற்றும் சமூக சீர்திருத்தங்களுக்கு சமூக தீமைகளான சதி முறை, குழந்தைத் திருமணம், விதவைத் திருமணத்திற்கு மறுப்பு, எழுத்தறிவின்மை, பெண்சிசுக்கொலை சாதி முறைகள் சவால் விட்டன.
- சிறந்த வேத அறிஞர், 1875இல் ஆர்ய சமாஜத்தை தோற்றுவித்த சுவாமி தயானந்த சரஸ்வதி, தீண்டாமை, பல கடவுள் வழிபாடு, சிலை வழிபாடு ஆகியவற்றை எதிர்த்து போராடினார் பெண்களுக்கு சம அந்தஸ்துக்காக வாதாடினார்.

- 1798இல் கல் அச்சுக்கலை கண்டுபிடிப்பு, ஒரு மைல் கல், ஏனென்றால் இது இந்தியர்கள் பெரிய நகரங்களில் அச்சடிக்கும் அச்சகங்கள் செய்தித்தாள், இதழ்கள் ஆகியவற்றைத் தொடங்க உதவியது. இதுவும் நவீன இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கு வழி வகுத்தது.

## பயிற்சிக்கான கேள்விகள்

1. ஐரோப்பாவின் மறுமலர்ச்சி மற்றும் இயக்கம் இயக்கம் ஆகியவற்றின் இந்திய தாக்கம் பற்றி விவரி?
2. சீர்திருத்த இயக்கத்தில் ஆர்ய சமாஜின் பங்கை ஆராய்க.
3. கல்வித்துறையில் தயானந்த சரஸ்வதியின் பங்களிப்பு என்ன?
4. கல் அச்சுக்கலை என்றால் என்ன? இந்திய மொழிகளின் வளர்ச்சியில் இது எவ்வாறு உதவியாக இருந்தது?
5. இந்தியர்களை விழிப்பூட்டுதலில் இராஜாராம் மோகன் ராயின் பங்கு பற்றி ஆராய்க
6. இந்திய விடுதலைப் போர் பற்றி ஒரு கட்டுரை வரைக.

## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 5.1

1. இங்கிலாந்து
2. மைசூரைச் சார்ந்த திப்பு சுல்தான்
3. 3 பிரிவுகள்

### கேள்விகளுக்கான பதில்கள் 5.2

1. கல் அச்சுக்கலை
2. பங்கின் சந்திரா
3. சுவாமி தயானந்த்
4. 1873

# அலகு - III

# மொழிகள் மற்றும் இலக்கியங்கள்


6. இந்திய மொழிகள் மற்றும் இலக்கியங்கள் பாகம் - 1

7. இந்திய மொழிகள் மற்றும் இலக்கியங்கள் பாகம் - 2

# 6

# இந்திய மொழிகள் மற்றும் இலக்கியங்கள் பாகம் - 1

சாகா்வும் சமீரும் விடுமுறைக்காக அந்தமான் நிகோபார் தீவுகளுக்குச் சென்றனா். அவா்கள் அங்கு கடலில் விளையாடி பல தீவுகளை பார்த்து நல்ல சந்தோஷமான நேரத்தை கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் சில பிரச்சனைகளையும் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. அவா்கள் உள்ளூா் மக்கள் பேசிக் கொண்டிருந்த மொழியை புரிந்து கொள்ள முடியவில்லை. இதன் விளைவாக அவா்கள் நிறைய விஷயங்களை இழந்தார்கள். பழங்குடி மக்கள், அவர்களைப் பற்றி சொல்லியிருக்கக் கூடும். இதிலிருந்து மொழியின் முக்கியத்துவத்தை நீங்கள் புரிந்து கொள்ளலாம். மொழி ஒரு ஊடகம், இதன் மூலம் நாம் நமது எண்ணங்களை வெளிப்படுத்துகிறோம். அதே சமயம் இலக்கியம் என்பது கண்ணாடி, அது கருத்துகளையும் தத்துவத்தையும் பிரதிபலிக்கிறது. இவை நமது சமுதாயத்தை ஆளுகின்றன. இதனால், ஒரு குறிப்பிட்ட பண்பாடும் அதனுடைய மரபு பற்றியும் அறிவதற்கு நாம் மொழியின் பரிணாம வளா்ச்சி, பல்வேறு படிவங்களான இலக்கியம், செய்யுள், நாடகம், சமய, சமயமல்லாத எழுத்துகளை புரிந்திருக்க வேண்டும். இந்தப் பாடம் வெவ்வேறு மொழிகள் இந்தியாவின் கலப்பு கலாச்சார பாரம்பரியத்தின் சிறப்பு அம்சங்களை உருவாக்குவதில் அவற்றின் பங்களிப்பை வெளிப்படுத்துகின்றன.

## நோக்கங்கள்

நீங்கள் இந்தப் பாடத்தைப் படித்த பிறகு உங்களால்

- இந்தியாவின் வளமான இலக்கிய பாரம்பரியத்தை ஆராய
- இந்தியாவின் வெவ்வேறு மொழிகள், இலக்கியங்கள் பற்றிய விழிப்புணா்வை ஏற்படுத்த
- இந்தியாவின் பல்வேறு வகையான மொழிகள் இலக்கியங்களைப் பட்டியலிட
- இந்தியாவில் மொழிகள், இலக்கியங்களுக்கிடையே வேற்றுமை, மறை பொருளாக உள்ள ஒற்றுமை பாராட்ட
- உலக இலக்கியத்திற்கு இந்தியாவின் முக்கிய பங்களிப்பை அங்கீகாரம் அளிக்க முடியும்.





## 6.1 இந்திய மொழிகள் சமஸ்கிருதத்தின் பங்கு

மனித இனம் எழுத்துப் படிவங்களைக் கண்டு பிடித்ததிலிருந்து எழுத்துகள், பண்பாடு, வாழ்க்கை முறை, சமுதாயம், ஒரே காலத்திய சமுதாயத்தின் அரசியல் ஆகியவை பிரதிபலித்தன. இந்த செயல்முறையில் ஒவ்வொரு பண்பாடும் அதனுடைய மொழியில் பரிணாம வளர்ச்சியுற்றது. மேலும் பெரிய இலக்கிய படைப்பை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டது. இந்த இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட நாகரிகம், நமக்கு ஒவ்வொரு மொழியின் பரிணாம வளர்ச்சியும் பண்பாடுப் பற்றி நமக்கு நூற்றாண்டு காலங்களாக புலப்படுத்துகிறது.

சமஸ்கிருதம், பல இந்திய மொழிகளின் தாயாகும். வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள் தர்ம சூத்திரங்கள் ஆகியவை எல்லாம் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டன. அங்கு சமய சார்பற்ற வட்டார இலக்கியங்களும் இருந்தன. கடந்த காலத்தில் உருவாக்கப்பட்ட மொழிகள் இலக்கியங்களை படிக்கும் பொழுது நமது நாகரிகத்தை நன்கு புரிந்து கொள்ளவும் நமது பண்பாட்டில் உள்ள வேறுபாடுகள் செழிப்பை பாராட்ட முடியும். மொழிகள் அக்காலத்தில் வளர்ச்சியடைந்த தால் தான் இவை எல்லாமே சாத்தியமாகிறது.

சமஸ்கிருதம் நமது நாட்டின் மிகப்பழமையான மொழியாகும். இது நமது இந்திய அரசியலமைப்பில் பட்டியலிடப்பட்ட 22 மொழிகளில் ஒன்றாகும். சமஸ்கிருதத்தில் உள்ள இலக்கியம் பெரியது மிகப் பழமையான எண்ணங்களை உள்ளடக்கிய ரிக் வேதம், மனித இனத்தின் பழமையான இலக்கிய பாரம்பரியத்தை கொண்ட ஜென்ட் அவஸ்தா உடனும் தொடங்குகிறது. 18ஆம் நூற்றாண்டில் மொழியியலை அறிவியல் பூர்வமாக படிப்பதற்கு அது தூண்டுதலாக இருந்தது. சிறந்த இலக்கண வல்லுநரான பாணினி சமஸ்கிருதம் அதனுடைய எழுத்தின் அமைப்பு பற்றி தனது நிகரில்லாத இலக்கண விளக்கமான அஷ்த்யாயியில் பகுத்தாய்ந்துள்ளார். புத்த சமஸ்கிருத இலக்கியம் வளமான இலக்கியமான மஹாயான மரபுக்குழு, ஹினயான மரபுக் குழுவும் அடங்கும். மாகாவாஸ்து, ஹீனயான மரபுக் குழுவின் முக்கியமான நூல். இவை கதைகளின் சேமிப்பு இடங்களாகும். அதே சமயம் மஹாயானத்தின் மிகப் புனிதமான நூலான 'லலிதவிஸ்தாரா' அஸ்வகோசாரின் புத்த சரிதத்திற்கு தகவல்களைக் கொடுத்தது.

சமஸ்கிருதம் என்ற மொழி வட்டாரத் தடைகள், எல்லைகளுக்கு அப்பாற்பட்டவையாக இருந்திருக்கலாம். வடக்கிலிருந்து தெற்கு, கிழக்கிலிருந்து மேற்கு, இந்தியாவின் எந்த பகுதியும் இந்த மொழிக்கு பங்களிக்கவில்லை அல்லது இந்த மொழியால் பாதிக்கப்படவும் இல்லை. கல்ஹனரிவின் ராஜதரங்கிணி, காஷ்மீர் அரசர்களைப் பற்றி தகவல் தொகுப்புகளை விளக்கமாக கொடுக்கிறது. அப்படியிருக்க நாம் பிரிதிவிராஜின் பெருமையை ஜோனாராஜாவுடன் பகிர்ந்து கொள்கிறோம். காளிதாசரின் எழுத்துகள் சமஸ்கிருத எழுத்துகளின் சேமிப்பு கிடங்கிற்கு அழகைக் கூட்டியது.

மற்ற சிறந்த இலக்கிய நூல்களான காளிதாசின் அபிஞ்சனம் சகுந்தலம் மேகதூத் சுத்திரகாவின் மிரிச்ச கடிகா, பாஷாவின் ஸ்வப்ன வாசவதத்தம், ஸ்ரீஷர்ஷாவின் 'ரத்னாவளி' இந்திய இலக்கியத்தின் பொற்காலத்தை குறிப்பிடுவதில் இவை அடங்குகின்றன. சாணக்கியாவின் 'அர்த்த சாஸ்திரம்' வத்சாயனாவின் 'காமசூத்திரம்' சில புகழ்பெற்ற நூல்களாகும்.

## இப்பகுதிக்கான கேள்விகள் 6.1

1. இந்தியாவின் மிக முக்கியமான பழமையான மொழியின் பெயரைக் கூறு?
2. மனித இனத்தின் மிகப்பழமையான இலக்கிய பாரம்பரியம் எது?

## 6.2 வேதங்கள்

வேதங்கள் என்பன, இந்தியாவின் தெரியப்பட்ட முற்கால இலக்கியமாகும். வேதங்கள் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டன. ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றுமொரு தலைமுறையினருக்கு வாய் மொழியாக கொடுக்கப்பட்டன. இந்நாள் வரை வேதங்களை பாதுகாப்பது, நமது சாதனைகளில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். வேதங்கள் சொற்பமாக இருக்கும் பொழுது எழுத்துக்கலை இல்லாத பொழுது முழுமையடையாத எழுது பொருட்கள் இருந்த பொழுது, இந்த மாதிரி இலக்கியச் செல்வங்களை உலக வரலாற்றில் வைப்பது எப்போதும் நிகழ்ந்திராத ஒன்றாகும்.

'வேதம்' என்ற சொல்லுக்கு உண்மையாகவே 'அறிவு' என்று பொருள். இந்து கலாச்சாரத்தில் வேதங்கள் ஆதி அந்தம் இல்லாத தெய்வீக வெளிப்பாடுகள் என கருதப்படுகிறது. அவை முழு உலகத்தையும் வாசுதேவ குடும்பம் என ஒரே மனித குடும்பமாக பாவிக்கிறது. வேதங்கள் நான்கு வகைப்படும்.

அதாவது ரிக்வேதம், யஜிர் வேதம், சாம வேதம் அதர்வண வேதம் ஆகியன. ஒவ்வொரு வேதமும். பிராமணர்கள், உபநிடதங்கள், ஆரண்யங்களைக் கொண்டிருந்தது. ரிக்வேதம், சாம வேதம் யஜிர்வேதங்களின் கூட்டினைவை. 'டிராஜி' என தெரியப்பட்டது. பிற்காலத்தில் அதர்வா வேதத்தையும் இந்தக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

### ரிக்வேதம்

வேதங்களில் மிகப் பழமையானது ரிக்வேதமாகும். இது வேத சமஸ்கிருதத்தின் 1028 சமயப் பாடல்களின் தொகுப்பாகும். இவற்றில் பல இயற்கையைப் பற்றிய அழகான வர்ணிப்புகளாகும். வழிபாட்டு வாசகங்கள் பெரும்பாலும் உலகின் செழுமையைக் கோருவதாக இருந்தது. இத்தகைய ஒப்புவிக்கும் மந்திரங்கள், வேத ரிஷிகளின் கண்டம் கடந்து செல்கின்ற நிலையின் இயற்கையான வெளிப்பாடு என நம்பப்படுகிறது. வசிஷ்தா, கௌதமா, கிரிட்ட சமதா, வமதேவா, விஷ்மா மித்ரா மற்றும் ஆர்த்தி ஆகியோர் சில பிரபலமான ரிஷிகளாவர். ரிக் வேத காலத்தில் இந்திரா, அக்னி, வருண், ருத்ரா ஆதித்யா. வாயு, அதிதி, அஸ்வினி இரட்டையர்கள் குறிப்பிடத்தக்க கடவுள்களாவர். விடியலின் கடவுளினியான உஷா பேச்சின் கடவுளினியான வக், பூமியின் கடவுளினியான பிரிதிவி ஆகியோர் குறிப்பிடத்தக்க சில கடவுளினிகளாவர். பெரும்பாலான சமயப் பாடல்கள், உண்மை, நேர்மை, அர்ப்பணிப்பு, தியாகம், பொறுமை, பண்பாடு ஆகிய உயர்ந்த விழுமங்கள் பிரபஞ்சத்தில் அங்கிகரிக்கப்பட்டதை குறிப்பிடுகிறது. சமய பாடல்கள் உலகத்தின் செழுமை உயர்ந்த கலாச்சாரத்தைக் கொண்ட சமுதாயத்தின் வளர்ச்சிக்காகவும் பாடப்பட்டன. சமயத்துடன் ஒன்று சேர்ந்த ரிக்வேதம் நமக்கு பண்டை இந்தியாவில் சமூக, அரசியல் பொருளாதார நிலைகளை பற்றி கூறுகிறது.

### யஜீர் வேதம்

யஜீர் என்பதன் பொருள் 'தியாகம்' அல்லது வழிபடுதல் என்பதாகும். இந்த வேதம் பெரும்பாலும் சடங்குகள், வெவ்வேறு பலிகளின் மந்திரங்களைச் சார்ந்தவையாகும். இது

யஜ்னா பலியை செயல் புரிய வழிகளை அளிக்கிறது. இது கவிதை, உரைநடை என இரண்டையும் வழங்குகிறது. சடங்குகளின் மீதான ஆய்வு நூலாக இருந்ததால் நான்கு வேதங்களை விட மிகவும் பிரபலமானது. இந்த வேதம் தான் யஜீர் வேதத்தில் 2 பெரிய பிரிவுகள் அதாவது ஷிக்லா மற்றும் கிருஷ்ண யஜீர் வேதம் அதாவது வஜசன்னேயி சம்ஹிதை மற்றும் தைத்ரியா சம்ஹிதை இருந்தன. இப்புத்தகங்கள், இந்தியாவின் அன்றைய காலத்தின் சமூக சமய நிலைகளை பிரதிபலிக்கின்றன.

## சாம வேதம்

சாமா என்பது இன்னிசை அல்லது பாடல்கள் எனப்படும். இந்த வேதம் 16000 ராகங்கள் மற்றும் ராகினிகள் அல்லது இன்னிசைக் குறிப்புக்களை கொண்டிருக்கிறது. மொத்த 1875 அடங்கிய கவிதைகளில் 75 மட்டும் மூல கவிதைகளாகும். மற்றவை ரிக் வேதத்திலிருந்து எடுத்தவையாகும். சாம வேதம் ரிக் வேதத்தின் மந்திரங்களை ஒப்புவித்தலில் ராகங்களை கட்டளையிடுகிறது. இந்த மந்திரங்களின் (சாமன்) புத்தகம் என அழைக்கப்படலாம். இந்த புத்தகம் இக்காலத்திய இந்திய இன்னிசையின் வளர்ச்சிக்கு சான்றாக உள்ளது.

## அதர்வன வேதம்

அதர்வன வேதம் பிரம்ம வேதம் எனவும் அழைக்கப்படுகிறது. இது 99 வியாதிகளுக்கான சிகிச்சை முறைகளைக் கொண்டுள்ளது. அதர்வா மற்றும் அங்கிராஸ் என அழைக்கப்பட்ட 2 ரிஷிகள் இந்த வேதத்தின் மூலங்கள் என கண்டறியப்பட்டது. ஏராளமான விழுமங்களைக் கொண்ட அதர்வ வேதம், முந்தைய கால நாகரிகத்தின் சமய கருத்துகளை அடையாளம் காட்டுகிறது. இது பைப்பாலதா, சௌ நாகா என்ற இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இப்புத்தகம் பிந்தைய வேத காலத்தின் குடும்ப, சமூக, அரசியல் வாழ்க்கையைப் பற்றி விளக்கமான தகவல்களைக் கொடுக்கிறது.

வேதங்களைப் புரிந்து கொள்ள வேதங்காஸ் அல்லது வேதங்களின் பெருங்கிளைகளை கற்றுக்கொள்வது மிக அவசியமானது. இந்த வேதங்களின் இணைப்புகளான கல்வி (ஷிக்ஷா) இலக்கணம் (வியாக்கரனா) சடங்கு (கல்பா) சொற்களின் தோற்றம் பற்றிய ஆய்வு (நிருக்தா) மெட்ரிக் அளவைகள் (சண்டா) மற்றும் வான சாஸ்திரம் (ஜியோடிஷா) ஆகியவற்றை வழங்குகிறது. நன்மை பயக்கக் கூடிய இலக்கியம், இத்தகைய பாடங்களைச் சுற்றி வளர்ந்தது. இது சுத்ரா பாணியில் போதனைகள் வடிவத்தில் எழுதப்பட்டது. போதனை எளிதாக இருந்ததால் சுத்ரா என அழைக்கப்பட்டது. பாணினியின் இலக்கணமான அஷ்டதியாயி அந்நாள்களில் இலக்கண விதிகள், சமுதாயம், பொருளாதாரம் மற்றும் கலாசாரத்தின் மீதும் ஒளியை வீசச் செய்தது.

## பிராமணங்களும் ஆரண்யங்களும்

வேதங்களுக்குப் பிறகு, பிராமணங்கள் என அழைக்கப்பட்ட ஏராளமான நூல்கள் வளர்ச்சியடைந்தன. இத்தகைய புத்தகங்கள் வேத சடங்குகள் தகவல்கள் மற்றும் பலியிடும், அறிவியலுடன் விளக்க உரைகளையும் கொடுத்தது. பிராமணாவின் பிந்தைய பகுதிகள் ஆரண்யங்கள் என அழைக்கப்பட்டன. அதே சமயம் இறுதிப் பகுதியான ஆரண்யங்கள், தத்துவ நூல்கள் என பெயரிடப்பட்ட உபநிடதங்கள் இவை கடைசி நிலையான பிராமண இலக்கியத்தைச் சார்ந்தவையாகும். நான்கு வேதங்களில் ஒவ்வொரு வேதமும், அவர்களுடைய சொந்த புத்தகத்தைக் கொண்டிருந்தது. ரிக் வேதம், கௌஷிடகி மற்றும் அய்ட்ரேயா வைக் கொண்டிருந்தது. டைட்டேரியா, கிருஷ்ண யஜீர் வேதத்தைச் சார்ந்தது மற்றும் ஷத்பத், பஞ்சவிஷ் மற்றும் ஜெய்மனியா அதர்வா வேதத்தைச் சார்ந்தது. இவைகளின் மூலம், நாம் மக்களின் சமூக, அரசியல், சமய வாழ்க்கையைப் பற்றி விளக்கமான தகவல்களைப் பெறுகிறோம்.

ஆரண்யங்கள், ஆன்மா, பிறப்பு இறப்பு மற்றும் வாழ்க்கை ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டவைப் பற்றி கூறுகிறது. இவை வனப் பிரஸ்தாவிலுள்ள ஆண்கள், அதாவது முனிகள் மற்றும் காட்டினுள் வசிக்கும் குடியேற்றங்களால் படிக்கப்பட்டு கற்றுக்கொடுக்கப்பட்டது.

இத்தகைய எல்லா நூல்களும் சமஸ்கிருதத்தில் இருந்தன. தொடக்கத்தில் அவை வாய் மொழியில் கை மாறப்பட்டது வெகு நாட்களுக்குப் பின்பு எழுத்து வடிவத்தில் கொடுக்கப்பட்டது.

எழுதப்பட்ட வேதங்களின் ஆயுட்காலம் மற்றும் நேரத்தையும் தீர்மானிப்பது மிகவும் கடினம். மேக்ஸ் முல்லர் ரிக்வேதம் கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முன்பே தொகுக்கப்பட்டது என கூறிகிறார். அதே சமயம் லோகமான்யாவின் கூற்றுப்படி, இது கி.மு. 6000 முன்பே தோன்றினது என கூறுகிறார்.

**!;ருதயீ மற;றும; !ஸமயீருதயீக;கும; ,டையே உள;ள வேறுபாடுகள; :**

ஸ்ருதி, ஸ்மிருதி இரண்டும் நூல்களின் வகைகளை பிரதிநிதிகளாக அவை இந்து மரபினுள் சட்ட ஒழுங்கை தோற்றுவிக்க பயன்படுத்தப்பட்டன. ஸ்ருதி முழுவதுமாக தெய்வீக மூலத்தை கொண்டது மற்றும் குறிப்பிட்ட சட்டத்தின் கோட்பாடுகளை கொள்ளவில்லை. தெய்வீக மூலமாக இருப்பதினால் கவிதைக்குப்பின் கவிதையாக இல்லாமல் முழுவதுமாக பாதுகாக்கப்பட்டது. ஸ்ருதியுடன் ஒப்புவித்தல் மற்றும் இதனுடைய தெய்வீக சார்ந்தவைகளை பாதுகாத்தாலும் புரிதல் வாய் மொழி மரபுகளை விளக்குதல் ஆகியவை ஸ்மிருதியில் காணப்பட்டது.

## இப்பகுதிக்கான கேள்விகள் 6.2

1. வேதம் என்பதன் பொருள் என்ன?
2. நான்கு வேதங்களின் பெயர்களைக் கூறு?
3. யஜீர் என்பதன் பொருள் என்ன? அந்த சமயங்கள் என்ன தகவல்களை நமக்கு கொடுக்கிறது?
4. சாம வேதாவிலிருந்து எத்தனை இன்னிசை ராகங்கள் தொடங்கின?

## 6.3 உபநிடதங்கள்

உபநிடதம் என்ற சொல், உபா (அருகில்) விலிருந்து மற்றும் நிஷத் (கீழே உட்காருவதற்கு) அதாவது கீழே அருகில் உட்காருதல், மாணவ குழுக்கள் குருவுக்கு அருகில் அமர்ந்து, குரு - சிஷ்ய பரம்பரை அல்லது மரபுகளை அவரிடம் கற்றுக் கொண்டனர்.

உபநிடதங்கள் இந்தியர்களின் எண்ணங்களின் உச்சநிலையையும் வேதங்களின் இறுதி பாகங்களையும் குறிக்கின்றன. உபநிடதங்கள், வேதங்களின் சாரம் மற்றும் தத்துவத்தின் இறுதியான பிரச்சனைகளை கடினமாக விவாதிப்பது ஆகியவற்றை மாணவர்களுக்கு முடிவில் கற்றுக் கொடுக்கப்பட்டது. அதனால் தான் அவற்றை வேதங்களின் இறுதி என்று அழைக்கப்படுகிறது. வேதங்கள் வழிபாடுகளின் வெளிப்பாடுகளுடன் தொடங்கி, பின்பு மெதுவாக வெளிப்பாடு அடையாத அறிவுக்கு மாற்றப்படுகிறது.

அங்கு 200க்கும் மேலான தெரிந்த உபநிடதங்கள் இருந்தன. அதில் முகிடா என்ற ஒன்று 108 உபநிடதங்களின் பட்டியலைக் கொடுக்கின்றன. இந்த நம்பர் மாலையிலுள்ள புனிதமான பாசிகள் அல்லது இந்து ஜெப மாலைக்கு நிகராக இருக்கிறது.

உபநிடதங்கள் நமது இலக்கிய கொடைகளில் முக்கிய படிவமானது. அவை, உலகத்தின் தொடக்கம் வாழ்க்கை, இறப்பு, பொருட்கள், ஆன்மீக உலகம், இயற்கையின் அறிவு பலபிற கேள்விகள் ஆராயப்பட்டன. முந்தைய உபநிடதங்களான, பிரிகடரன்யகா சுக்லா யஜீர் வேதத்தைச் சார்ந்தது, சன்ட்யோகா, சாமா வேதத்தைச் சார்ந்தது. அயிட்டரேயா, கேனா, சதா உபரிதம் ஆகியவை சில முக்கியமான உபநிடதங்களாகும். பிற முக்கியமான உபநிடதங்கள் சிலவற்றை சொந்தமாக முயற்சி செய்து கண்டுபிடிக்கவும் அவற்றை படிக்கவும் நீங்கள் உங்கள் முன் திறந்திருக்கின்ற முழு இந்திய தத்துவத்தின் புதிய உலகை காண்பீர்கள். உபநிடதங்களின் மீது நிறைய புத்தகங்கள் விற்பனையாகின்றன. சிறிய கதைகளுடன் தொடங்கவும், அவற்றின் மேல் ஆர்வம் கொள்ளவும், பின்பு எந்த ஒரு முழு உபநிடதங்களையும் படிக்கவும் முடியும்.

### இப்பகுதிக்கான கேள்விகள் 6.3

1. உபநிடதம் என்பதின் பொருள் என்ன?
2. சில உபநிடதங்களின் பெயரைக் கூறு?

## 6.4 இராமாயணமும் மகாபாரதமும்



இராமாயணமும் மகாபாரதமும் சிறந்த காப்பியங்களாகும். வால்மீகியின் இராமாயணம் அசலான இராமாயணம். இது ஆதிகாவ்யா என அழைக்கப்பட்டது. மகரிஷி வால்மீகியை 'ஆதிகவி' என தெரியப்படுகிறது. இராமாயணம் குறைபாடற்ற சமுதாயத்தின் படத்தை முன்வைக்கிறது. மற்ற காவியமான மகாபாரதம், வேதவியாசரால் எழுதப்பட்டது. உண்மையாகவே இது சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டது மற்றும் 8800 செய்யுள்கள் அடங்கியுள்ளன இது ஜெயா அல்லது வெற்றியைப் பொருத்து திரட்டப்பட்டது. இவை 24000க்கு உயர்த்தப்பட்டு முந்தைய கால வேத பழங்குடியினரில் ஒரு பழங்குடியினரான 'பரதா' என பெயரிட்டப்பட்டது. இறுதியான தொகுத்தல் ஒரு லட்சம் கவிதைகளைக் கொண்டு வந்தது. இவை மகாபாரதம் அல்லது 'சதசாகரசம்ஹிதை' என அழைக்கப்பட்டன. இது கௌரவர்களுக்கும் மற்றும் பாண்டவர்களுக்கும் இடையேயான முரண்பாட்டை, விளக்குகிற, வர்ணிக்கிற அறிவுரைகளை அடங்கியது. இராமாயணமும் மகாபாரதமும் பல்வேறு மொழிகளில் அளித்துள்ளார்கள். புகழ் பெற்ற பகவத் கீதையை மகாபாரதம் உள்ளடக்கி உள்ளது. இவை தெய்வீக அறிவின் சாரத்தை கொண்டுள்ளது இது உண்மையாகவே உலகத்திரு நல்லேடு ஆகும். இது ஒரு பழமையான திருமறை நூலாக இருந்தாலும் இதனுடைய அடிப்படை போதனைகள் இன்றைய நாளிலும் பயன்பாட்டில் உள்ளது.

பகவத் கீதையில் கிருஷ்ணன், அர்ஜீனனிடம், போர் வீரன் மற்றும் இளவரசனின் கடமைகள் வேதாந்த தத்துவத்தின் கருத்துகளையும் உதாரணங்களுடனும் இணையான சம்பவங்களுடனும் விளக்கிக் கூறுகிறார். இது கீதையை, இந்து தத்துவத்திற்கு சுருக்கமான ஆனால் பொழிப்பான சமயகுருவின் பகுதி சார்ந்த கருத்துகள் வாழ்க்கைக்கு வழி காட்டியாக உருவாக்கியது. நவீன காலங்களில், சுவாமி விவேகானந்தர், பாலகங்காதர திலகர், மகாத்மா

காந்தி மற்றும் பலர் இந்திய விடுதலை இயக்கத்தை ஆர்வமூட்ட உதவுவதற்கு இந்த புத்தகத்தைப் பயன்படுத்தினர். இது மனித செயல்பாடுகளின் ஆக்கபூர்வமான தன்மையைப் பற்றி பேசியுள்ளதால், பகவத் கீதை முதன்மையாக உள்ளது. இது கடவுளுக்கு, மனிதனுக்கு எந்த பலனையும் எதிர் நோக்காமல் செய்வதையும் பற்றி பேசியுள்ளது. கீதை உலகின் பெரும் பாலான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்ற விஷயத்தை நீங்கள் பாராட்டுவீர்கள்.

### இப்பகுதிக்கான கேள்விகள் 6.4

1. சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட 2 பழமையான காப்பியங்களின் பெயர்களைக் கூறுக?
2. இராமாயணத்தையும் மற்றும் மகாபாரதத்தையும் எழுதியவர்கள் யார்?
3. பகவத் கீதையில் அர்ஜீனனுக்கு கிருஷ்ணன் எதை விவரிக்கிறார்?

## 6.5 புராணங்கள்

இந்துக்களின் புனிதமான நூல்களில் புராணங்கள் நிகரில்லாத இடத்தைப் பெற்றிருக்கின்றன. முக்கியத்துவம் கொடுப்பதில் அவை வேதங்கள் மற்றும் காப்பியங்களுக்கு அடுத்த படியாக உள்ளன. அங்கு 18 புராணங்கள் மற்றும் அதே எண்ணிக்கையில் உபபுராணங்களும் இருந்தன என்று சொல்லப்படுகிறது. பிரம்மா, பகவத், பத்மா, விஷ்ணு, வாயு, அக்னி மட்சயா மற்றும் கருடா ஆகியவை சில பிரபலமான புராணங்களாகும். அவற்றின் தொடக்கம், புத்த மதம் முக்கியத்துவம் பெற்றுக் கொண்டிருந்த காலம் மற்றும் பிராமண கலாசாரத்திற்கு முதன்மையான எதிரியாக இருந்த காலத்தை விட பின்நோக்கி இருந்தது என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புராணங்கள், புராண மரபியல் நூல்களாகும். இவை, சமய மற்றும் ஆன்மீக செய்திகளை சிறு கதைகள் மற்றும் விலங்குகளை முக்கிய பாத்திரமாகக் கொண்ட நீதிக் கதைகள் மூலம் பிரச்சாரம் செய்கின்றன. அவை மக்களின் சமய வாழ்க்கையின் வளர்ச்சியில் வலிமையான செல்வாக்கைப் பெற்றிருந்தன.

புராணங்கள், காப்பியங்களின் வழியை பின்பற்றியன. முந்தைய புராணங்கள், குப்தர்கள் காலத்தில் தொகுக்கப்பட்டன. அவைகள் கற்பனைக் கதைகள், கதைகள், புாரணக் கதைகள் மற்றும் சமயச் சொற்பொழிவுகள் முழுவதும், சாதாரண மக்களின் கல்வியை பற்றி கூறுகின்றன. இத்தகைய புராணங்கள் முக்கிய நிலவியல், வரலாற்று தகவல்கள் மற்றும் படைப்புக்களின் புதிர்கள், இன்பப்பொழுது போக்குகள், வம்ச பரம்பரை ஆகியவை பற்றி கூறுகின்றன. இந்தக்காலம் பல்வேறு ஸ்மிருதிகளின் தொகுப்பு அல்லது சட்ட புத்தகங்கள் செய்யுள்களில் எழுதப்பட்டதையும் கண்டது. ஸ்மிருதியின் மீது விளக்க உரைகளை எழுதும் கட்டம், குப்தர்களின் காலத்திற்கு பிறகு தொடங்கியது. சமஸ்கிருத அகராதி எழுத்தர் அமரசிம்ஹா புராணங்கள் 5 தலைப்புகளான

1.சார்கம் (படைப்பு)

2. பிரங்டி சார்கா (2வது படைப்பு)

3. வெம்சா (பரம்பரை)

4. மன்வந்தரா (மனு காலங்கள்) மற்றும்

5. வம்சானுகரித்தா (வம்ச வரலாறு)

ஆகியவற்றை விவரிக்க வேண்டும் என அறிக்கையிடுகிறார்.

### இப்பகுதிக்கான கேள்விகள் 6.5

1. எத்தனை புராணங்கள் இருந்தன?
2. புராணங்களின் தனிச்சிறப்புக்களின் பெயர்கள் சிலவற்றைக் கூறு?

## 6.6 பாலி, பிராகிருத, சமஸ்கிருத மொழிகளில் புத்த சமய சமண சமய இலக்கியங்கள்

புத்த சமண சமய புத்தகங்கள் வரலாற்று மனிதர்கள் அல்லது நிகழ்வுகளை தொடர்பு படுத்துகிறது. முந்தைய கால புத்தமத நூல்கள் பாலி மொழியில் எழுதப்பட்டன. இம் மொழிகள் மகதா மற்றும் தெற்கு பீஹாரில் பேசப்பட்டன. புத்த சமய நூல்களை சமயம் சாாந்த மற்றும் சமயம் சாராத என இரு வகையாகப் பிரிக்கலாம்.

சமயம் சார்ந்த இலக்கியத்தை திரிபிடகங்கள் அதாவது மூன்று கூடைகள் - வினய பிடகம், சுத்த பிடகா மற்றும் அபிதாம பிடகத்தினால் சிறப்பான பிரதி நிதியாக செயல்பட்டன. வினய பிடகம், தினசரி வாழ்க்கையில் நியதிகள் கட்டுப்பாடுகளை கையாளுகின்றன. சுத்த பிடகம் ஒழுக்க முறைகள் மீது உடைரயாடல்கள் மற்றும் விளக்கப் பேருரைகள் கொண்டுள்ளது மற்றும் தர்மத்தை கையாளுகிறது. அதே சமயம் அபிதாம பிடகம், மெய்ப் பொருள் துறையை கையாளுகிறது. இதில் அறிவியல் உளவியல் அறிவின் விதிமுறைகள் மெய்ப்பொருள் துறை பற்றிய பிரச்சனைகள் அடங்கும்.

சமய சார்பற்ற இலக்கியம் ஜடகாவில் பிரதி நிதித்வம் அளிக்கப்பட்டது. ஜடகாக்கள் புத்தரின் முன் பிறவி பிறப்பைப்பைப் பற்றிய மிகவும் ஆர்வமான கதைகளாகும். கடைசியாக இவர் கௌதமராக பிறக்கும் முன்பே, புத்தர், 550 பிறப்புகளைக் கடந்து, தர்மத்தை அனு சரித்தார் என்றும், பல விஷயங்களில் விலங்குகளின் வடிவாகக் கூட இருந்தார் என நம்பப்படுகிறது. ஒவ்வொரு பிறப்புக் கதையும் ஜடகா என அழைக்கப்படுகிறது. ஜடகாக்கள் கி.மு. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.மு 2ஆம் நூற்றாண்டு வரை சமூக, பொருளாதாரத்தின் மீது விலை மதிக்க முடியாத சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. அவை புத்தரின் காலத்தில் அரசியல் நிகழ்வுகளுடன் மற்ற துணை நிகழ்வுகளும் இருந்தன.

சமண நூல்கள் பிராகிருத மொழியில் அச்சிடப்பட்டு இறுதியாக கி.பி. 6ஆம் நூற்றாண்டில் குஜராத்திலுள்ள வல்லபியில் தொகுக்கப்பட்டது. முக்கியமான நூல்கள் அங்காக்கள், உபங்காக்கள், பிரகி மாக்கள் சொடப் சுத்திரங்கள் மால சூத்திரங்கள் போன்றவையாகும்.

சமண அறிஞர்களிடையே முக்கியமானவர்கள் ஹரி பத்ரா சூரி (கி.பி. 8ஆம் நூற்றாண்டு) மற்றும் ஹேமச்சந்திர சூரி (கி.பி-12-ஆம் நூற்றாண்டு) ஆகியோர் குறிப்பிடப்பட்டவர்கள். சமண மதம் கவிதை, தத்துவம் மற்றும் இலக்கணங்களைக் கொண்ட வளமான இலக்கியம் வளருவதற்கு உதவியது. இத்தகைய நூல்கள் பல சொற்பொழிவுகள் அல்லது இசையின் சிறு பகுதிகளைக் கொண்டு உள்ளன. இவை அரசியல் வரலாற்றை கிழக்கு உத்திரபிரதேசம் மற்றும் பீகாரில் மறு உருவாக்குவதற்கு நமக்கு உதவின. சமண புத்தகங்கள் வாணிகம் செய்வதற்கு வணிகர்களை தொடர்புபடுத்துகின்றன.





பழமையான இந்திய இலக்கியத்தை 2 வகையான இடங்களில் அமைக்க முடியும்.

(அ) சமய மற்றும் சமயமல்லாத அல்லது மதச்சார்பற்ற சமய இலக்கியம் நான்கு வேதங்களைக் கொண்டது.

- ரிக்வேதம் - வேதங்களில் பழமையான வேதம் 1028 சமயப் பாடல்களைக் கொண்டு, சுக்தா அல்லது நன்றாக கூறினாய் என அழைக்கப்படுகிறது.
- சாம வேதம் சமயப் பாடல்களைக் கொண்டது. இவற்றை சிறப்பான வகுப் பிலிருந்து வந்த குருமார்களால், சோமா பலிகளின் பொழுது இதைப்பாடப் பட்டது.
- யஜீர் வேதம் - சமயப் பாடல்களைக் கொண்டது அவை சாதாரணப் பலியிடும் பொழுது ஒப்புவிக்கப்பட்டது.

(ஆ) பிராமணங்கள் - வேதங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. அவை, விழுமங்கள் மற்றும் விரும்பிய பலனைப் பெற வேண்டி அளிக்கும் பலிகள்

(இ) ஆரண்யங்கள் - பிராமணங்களின் முடிவடைகின்ற பகுதிகளாகும்

(ஈ) உபநிடதங்கள் - குருவின் அருகில் அமர்ந்து கற்றுக் கொள்ளதலை குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ) இராமாயணம் மகாபாரதம் போன்ற காப்பியங்கள்

(ஊ) புத்த மத இலக்கியம்

(எ) சமண இலக்கியம்

## இப்பகுதிக்கான கேள்விகள் 6.6

1. முந்தைய புத்த மத, சமண மத இலக்கியங்கள் எந்த மொழியில் எழுதப்பட்டன?
2. திரிபீடகங்களின் பெயரைக் கூறு?
3. ஜடகா கதைகள் நமக்கு எதைப் பற்றி கூறுகின்றன?
4. சில சமண அறிஞர்களின் பெயரைக் கூறு?

## 6.7 பிற சமஸ்கிருத இலக்கியம்

நாம் வெவ்வேறு அறிவியல், சட்டம், மருத்துவம் மற்றும் இலக்கணங்களை பற்றிய புத்தகங்களை வைத்திருக்கின்றோம். இந்த வகையைச் சார்ந்த ‘தர்ம சூத்திரங்கள்’ மற்றும் ஸ்மிரிதிகன், ஒன்றாக “தர்ம சாஸ்திரங்கள்” என அழைக்கப்படுகின்றன. தர்ம சூத்திரங்கள் கி.மு. 500 மற்றும் கி.மு. 200க்கும் இடையே தொகுக்கப்பட்டது. அவை பல்வேறு சாதியினருக்கும் அரசர்கள் அதிகாரிகளுக்குமான கடமைகளை வலியுறுத்துகிறது. சொத்துகள் வாங்குவது, விற்பது, பெற்றுக்கொள்வது அவை நிர்ணயித்த விதிகளின் படியாகும். திடீர் தாக்குதல், கொலை மற்றும் கலப்படத்திற்கான குற்றங்களுக்கு தண்டனைகளும் மக்களுக்கு நிர்ணயிக்கப்பட்டது. மனு ஸ்மிரிதி சமுதாயத்தில் ஆண், பெண்ணின் பங்கு அவர்களுடைய நடத்தை முறைபற்றியும் ஒவ்வொருவரின் உறவுகள் பற்றியும் நமக்குக் கூறுகின்றன.

மௌரியர்கள் காலத்திலிருந்து கௌடில்யாவின் அர்த்த சாஸ்திரம் முக்கியமான ஆய்வு நூலாக இருக்கிறது. இது அந்த வேளையில் சமுதாய, பொருளதாரத்தின் நிலையை பிரதி பலிக்கிறது, அறிவு சார்ந்த பொருட்களை பண்டைய இந்திய அரசியல், பொருளாதாரத்தைப் பற்றி பயில வழிவகுக்கிறது.

பாஷா, சூத்ரகா, காளிதாசர், பாணபட்டர் ஆகியோரின் நூல்கள் குப்தர்கள் மற்றும் ஷர்ஷாவின் காலத்தில் வடக்கு மற்றும் மத்திய இந்தியாவின் சமூக, பண்பாட்டு வாழ்க்கையின் கண நேரக்காட்சியுடன் நமக்கு வழங்கியது. குப்தர்களின் காலமும், பாணினி, பதஞ்சலி ஆகியோரின் நூல்களை அடிப்படையாகக் கொண்ட சமஸ்கிருத இலக்கணத்தின் வளர்ச்சியைக் கண்டது.

### குப்தர் காலத்திய புகழ் பெற்ற சமஸ்கிருத எழுத்தாளர்கள்

குப்தர்கள் காலம் இந்தியாவின் பண்பாட்டின் பொற்காலம் மற்றும் ஒரு மிகச் சிறந்த மிக மேன்மையான காலமாகும். குப்த அரசர்கள் தரமான சமஸ்கிருத இலக்கியத்தை ஆதரித்தனர். அவர்கள், சமஸ்கிருத வல்லுநர்கள் கவிஞர்களுக்கு தாராளமாக உதவினார்கள். இது சமஸ்கிருத மொழியை வளமாக்கியது. சமஸ்கிருத மொழி, நல்ல பண்பாட்டினை உடைய மற்றும் கற்றறிந்த மக்களின் மொழியாக மாறியது. பல சிறந்த புலவர்கள் நாடக ஆசிரியர்கள் அறிஞர்கள் இக்காலத்தில் தோன்றினார்கள் என்றால் அது மிகையாகாது.

சமஸ்கிருத மொழியில் நூல்கள் மிக உன்னதமான நிலையை அடைந்தன.

1. புலவர் காளிதாசர் பல அழகான கவிதைகளையும் நாடகங்களையும் எழுதியுள்ளார். இவருடைய சமஸ்கிருத நூல்கள் இலக்கியத்தின் மாணிக்கங்கள் என கருதப்படுகின்றன. இவர் உணர்ச்சிக்கு உட்பட்ட நாடகங்கள் மற்றும் கவிதைகளை எழுதினார்.

   இவருடைய அற்புதமான திறமைகள் இவருடைய கவிதைகளான மேகதூதம், ரிது சம்பாரா, குமார சம்பவம், ரகு வம்சம் ஆகியவற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அபிஜன் சாகுந்தலம், விக்ரமோர்வசியம் மாளவிகாக்னிமித்ரம் ஆகியவை இவருடைய நாடகங்களாகும்.
2. விசாகதத்தர்: இக்காலத்திய மற்றுமொரு சிறந்த நாடக எழுத்தாளர் விசாகதத்தர் ஆவார். அவர் முத்ராக்ஷா மற்றும் தேவ சந்திர குப்தம் என்ற 2 வரலாற்று நாடகங்களை எழுதினார்.
3. ஷீத்ரகர் : இவர் மன எழுச்சியை ஊட்டுகிற மிரிச்சா கடிதம் அல்லது பொம்மை வண்டி என்ற நாடகத்தை எழுதினார். இது அந்தக் காலத்தின் சமூக பண்பாட்டு நிலைகளின் சிறந்த மூலமாக இருக்கிறது.
4. ஹரி சேனா : குப்தர் காலத்தில் சிறந்த புலவர்கள் நாடக எழுத்தாளர்களிடையே ஹரிசேனாவும் ஒருவராவர். இவர் சமுத்திர குப்தா வின் துணிச்சலைப் புகழ்ந்து கவிதைகள் எழுதியுள்ளார். இதை அலகாபாத்திலுள்ள கல் தூணில் பொறிக்கப் பட்டிருக்கிறது.
5. பாஷர்: இவர் 13 நாடகங்களை எழுதியுள்ளார். இவை பரவலாகக் காணப்படுகிற நம்பிக்கைகளும் பண்பாடும் சகாப்தத்தின் வாழ்க்கைப் பாணியையும் எதிரொலிக்கின்றன.

குஷாண அரசர்கள் சமஸ்கிருத அறிஞர்களை ஆதரித்தார்கள். அஷ்வ கோஷா, புத்தரின் வாழ்க்கை வரலாறான புத்த சரித்திரத்தை எழுதினார். இவர் சமஸ்கிருத கவிதைக்கு சிறந்த உதாரணமான ‘சௌந்தரநந்தா வையும்’ எழுதினார்.

இந்தியா, கணிதம், வானவியல், சோதிடவியல், விவசாயம், நிலவியல் முதலிய பாடப் பொருள்களின் மீது சிறந்த இலக்கிய நூல்களை உருவாக்கியது.

சாரகரால் மருத்துவத்தின் மீதும் சுஸ்ருதாவால் அறுவை சிகிச்சையின் மீதும் புத்தகங்கள் எழுதப்பட்டன. மாதவா நோயியல் மீது ஒரு புத்தகத்தை எழுதினார். வராகிமிகிரர் மற்றும்

ஆர்யபட்டாவினால் வானவியல், லக்தா சாரியாவினால், சோதிடவியல் மீது எழுதப்பட்ட புத்தகங்கள் மேம்பாட்டை அடைந்தது. வராகமிகிரரின் பிரிவாத் சம்ஹிதா, ஆர்யபாட்டியா, வேதாங்க ஜியோடிசாவுடன் போட்டியிட அங்கு ஒருவரும் இல்லை.

பிந்தைய இடைக்காலத்தில் வட இந்தியாவிலுள்ள காஷ்மீர், சமஸ்கிருத இலக்கியத்தில் எழுச்சியை கண்டது. சோம தேவாவின் கதாசரித - சாகர் மற்றும் காதானுடைய ராஜதரங்கணி ஆகியவை. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இது காஷ்மீர் அரசர்களைப் பற்றி உயிரோட்டமான குறிப்புகளைத் தருகிறது. இக்காலத்தில் ஜெய்தேவின் 'கீத் கோவிந்தா' சமஸ்கிருத இலக்கியத்தில் நேர்த்தியான கவிதையாகும். இது தவிர கலை மற்றும் கட்டடக்கலை, சிற்பக்கலை, படிமவியல் மற்றும் தொடர்பான துறைகள் மீது ஏராளமான நூல்கள் இருந்தன.

### இப்பகுதிக்கான கேள்விகள் 6.7

1. தர்ம சாஸ்திரங்களின் பாடப் பொருள் என்ன?
2. ராஜ தரங்கனியை எழுதியவர் யார்?
3. காளிதாசரால் எழுதப்பட்ட புகழ்பெற்ற நாடகத்தின் பெயர் கூறு?
4. ஜெய் தேவ்வால் எழுதப்பட்ட நூலின் பெயரைக் கூறு?
5. மருத்துவம் பற்றி எழுதிய புத்தகத்தின் எழுத்தாளர் பெயரை கூறு?

## 6.8 தெலுங்கு, கன்னட, மலையாள இலக்கியங்கள்

திராவிடர்களின் நான்கு மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் தங்களுடைய சொந்த இலக்கியத்தை வளர்ச்சியுறச் செய்தன. இத்தகைய மொழிகளில், மிகப் பழமையானது தமிழ் மொழியாகும். தமிழில் மிகப் பழமையான இலக்கியமான சங்க இலக்கியத்தை தமிழ் மொழியில் எழுதியுள்ளனர்.

### தெலுங்கு இலக்கியம்

விஜய நகர காலம், தெலுங்கு இலக்கியத்தின் பொற்காலமாகும். புக்காரின் அரசவைப் புலவரான சோமநாதா, உத்ரஹரி வம்சம் என்ற தலைப்பில் கவிதை வடிவிலான நூலை உருவாக்கினார். விஜய நகர பேரரசர்களில் மிகச்சிறந்தவரான கிருஷ்ண தேவராயர் மேன்மையான ஒரு புலவராவார். இவருடைய நூலான அமுக்தமால்யதா தெலுங்கு இலக்கியத்தில் தலை சிறந்த பிரபந்தமாக கருதப்படுகிறது. அஷ்டதிக் கஜாக்கள் என பிரபலமான எட்டு தெலுங்கு இலக்கிய அறிவாளிகள் இவருடைய அவையை அலங்கரித்தனர். இவர்களிடையே மனுச் சரித்திராவை எழுதிய 'அல்லாசாணிபெத்தன்னா மிகவும் சிறப்பு வாய்ந்தவர். இவர் ஆந்திரா 'கவிதாபிட மகா' என அழைக்கப்படுகிறார். பாரி ஜாதபகரனம்-ஐ எழுதிய நந்தி திம்மன்னா, மடயாகரி மல்லன்னா, துர்ஜதி, ஆயாளு ராஜீ, ராம பத்ரகவி, பிங்கலி சுரானா, ராம ராஜ புஷானா, தெனாலிராம கிருஷ்ணா ஆகியோர் இந்த குழுவைச் சார்ந்த ஏழு புலவர்களாவர்.

சிவன் கடவுளின் பக்தரான துர் ஜாதி காளஹட்டீஸ்வரா மகட்மாயம் மற்றும் காளஹட்டீஸ்வரா சடகம் என்று அழைக்கப்படுகிற சிறப்பான 2 கவிதை நூல்களை கொடுத்துள்ளார். பிங்காலி சுரானா, ராகவ பாண்டவியம், களப்புரோனோதயம் ஆகிய 2 நூல்களைத் தொகுத்துள்ளார். முந்தைய நூலில் இராமாயணம், மகாபாரத்தை கூறுகின்ற அதே வேளையில் இவர் இலக்கிய சாதனை புரிய முயன்றார். அரசவை விகடகவியான தெனாலி

ராமகிருஷ்ணா, கிருஷ்ண தேவராயர் அரசவையின் ஒரு முக்கியமான உறுப்பினராவார். அந்நாளைய உயர்வான மனிதர்கள் மீது இவர் வைத்த அனுபவமிக்க ஹாஸ்யங்கள் இன்றும் மிக்க மகிழ்வுடன் விவரமாக எடுத்துச் செல்லப் படுகின்றன. ராமகிருஷ்ணா எழுதின 'பாண்டு ரங்க மகத் மாயம்' தெலுங்கு இலக்கியத்தில் ஒரு சிறந்த கவிதை நூலாகக் கருதப்படுகிறது. வாசு சரித்திரத்தை எழுதியவர் 'ராமராஜ பூஷணா' ஆவார். இவர் பட்டு மூர்த்தி என்றும் அழைக்கப்பட்டார். நரசபூப்லியம், ஹரிச்சந்திர நலோபாக்கியானம் ஆகியவை இவருடைய மற்ற நூல்களில் அடங்கும். இது ராகவ பாண்டவியத்தின் மாதிரியைக் கொண்ட கவிதை நூலாகும். நளா, ஹிரிச்சந்திராவின் கதைகளில் ஒருவர் இதைப் படிக்க முடியும். அவந்தியின் அரசனான ராஜசேகரனின் போர்கள் மற்றும் காதலைப் பற்றி கூறுகின்ற மடயகரி மல்லம்மாவின் நூலான ராஜசேகர சரித்ரா ஒரு பிரபந்தமாகும். ராமபூதயம் சகல கதா சாரா சங்ரஷம் ஆகிய இரு நூல்களின் 'ஆசிரியர்' ஆயான ராஜி ராம பக்தர் ஆவார்.

## கன்னட இலக்கியம்

விஜய நகர அரசர்கள் தெலுங்கு தவிர கன்னடம், சமஸ்கிருத எழுத்தாளர்களுக்கும் தங்களுடைய ஆதரவை அளித்தார்கள். பல சமண அறிஞர்கள் கன்னட இலக்கிய வளர்ச்சிக்கு பங்களித்தார்கள். 15 ஆவது தீர்த்தங்கராவின் மீது, மாதவர் 'தர்ம நாத புரா'ணத்தை எழுதினார். மற்றுமொரு சமண அறிஞர் உரிட்ட விலாசா, 'தர்மபரிக்ஷி' என்ற நூலை எழுதினார். வேதாந்த தேசி காவினால் எழுதப்பட்ட 'யாதவ பூதயம்' மாதவாச்சார்யாவினால் எழுதப்பட்ட 'பரசாராஸ்மிருதி வியாக்யா' அந்நாளைய சமஸ்கிருத நூல்களில் அடங்கும்.

கி.பி. 10 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு, கன்னட இலக்கியம் முழுவதுமாக வளர்ச்சியடைந்தது. முந்தைய இலக்கிய நூல் எனத் தெரியப்பட்ட கவிராஜ்மங் ராட்டிர கூட அரசனான, நிருபதுங்கா அமோக வர்ஷாரால் எழுதப்பட்டதாகும். கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் கன்னடத்தின் தந்தை என அழைக்கப்பட்ட 'பாம்பா' ஆதிபுராணா மற்றும் 'விக்ரமா் ஜீவா விஜயா' என்ற சிறந்த கவிதை நூல்களை எழுதினார். பாம்பா, சாளுக்கிய அரிகேசரி, அரசவையில் இருந்தார். பாம்பா தனது கவிதை திறன்களான விவரிக்கும் அழகு, கதாபாத்திரங்களைச் சித்தரித்தல் மற்றும் ராசாவை முன்னேற்றுதல் ஆகியவற்றில் நிகரற்றவர். ராஸ்டிரகூட கிருஷ்ணா III ஆட்சியின் பொழுது பொன்னா மற்றும் ரன்னா ஆகிய மற்ற புலவர்கள் வாழ்ந்தனர். பொன்னா, 'சாந்திபுராணம்' என்ற காவியத்தை எழுதினார் ரன்னா 'அஜிதநாத புரணோ'வை எழுதினார். பாம்பா, பொன்னா, ரன்னா மூவரும் சேர்ந்து 'ரத்னாத்ரியா' (மூன்று மாணிக்கங்கள்) என்ற பட்டத்தைப் பெற்றனர்.

13-ஆம் நூற்றாண்டில், கன்னட இலக்கியத்தில் புதிய சாதனைகள் அடையப் பெற்றன. ஹரிஷ்வரா, ஹரிச்சந்திர காவ்யா மற்றும் சோமநாத சரிதாவை எழுதினார். அதே சமயத்தில் பந்துவர்மா, ஹரிவம்ஷபூதயா மற்றும் ஜீவ சம்போதனாவை எழுதினார். பிந்தைய ஹொய்சலா ஆட்சியாளர்களின் ஆதரவின் கீழ் பல்வேறு இலக்கிய நூல்கள் உருவாக்கப்பட்டன. ரூத்ர பட்டா 'ஜெகன் மாதவிஜயா' எனற நூலை எழுதினார். அண்டாயாவின் 'மதன விஜயா' அல்லது கபிகார காவர், சமஸ்கிருத சொற்கள் கலக்காத முழுமையான தனித்தன்மை வாய்ந்த கன்னட நூலாகும். மல்லிகார் ஜீனாவின் கன்னடத்தின் முதல் தொகுப்பான சுக்திசுதர்னாவர் மற்றும் கேசிர்ஜாவின் இலக்கண நூலான 'ஷப்த மானிடர்பனா' ஆகிய 2 தரமான நூல்கள் கன்னட மொழியில் உள்ளன.

14-ஆம் நூற்றாண்டு, 16-ஆம் நூற்றாண்டுகளின் இடைப் பட்ட காலத்தில் கன்னட இலக்கியம், விஜய நகர அரசர்களின் ஆதரவின் கீழ், பெருமளவில் வளர்ச்சியடைந்தது. எல்லா சமயத்தைச் சார்ந்த புலவர்கள் இதற்கு முக்கிய பங்களித்தனர். குனுரா வியாசா, 'பாரதா' வை எழுதினார் மற்றும் நரஹரி, 'தாரவி ராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு கன்னட மொழியில் தொகுத்த, முதல் ராம கதையாகும்'.





17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த, லக்ஷமிஷா ஜெய்மினி பாரதாவை எழுதி மற்றும் கமதா கரிகுட்டாவனா - சரிதா (கர்நாடகாவின் இளவேனிற் காலத்திய மாமரங்கள் அடர்ந்த சோலை) என்ற பட்டத்தைப் பெற்றார்.

மக்களின் புலவர் எனப் புகழடைந்த 'சர்வஜ்னா' இக்காலத்தின் மற்றுமொரு சிறப்பு மிக்க புலவராவர். இவருடைய மணி மொழியான திரிபாதி(மூன்று வரிகளில்) தொகுப்புகள், அறிவையும் தர்மத்தையும் மூலமாகக் கொண்டவையாகும். ஹொன்னாமா கன்னடத்தின் முதல் சிறப்பான பெண் புலவராக இருப்பதால் சிறப்பு குறிப்புகளை கொடுக்கலாம். இவருடைய 'ஹடிபடேயா தர்மா' (பக்தி பூர்வமான மனைவியின் கடமை) தர்மத்தைப் பற்றி ஆழமாக ஆயும் நூலாகும்.

### மலையாள இலக்கியம்

கேரளா மற்றும் அதோடு இணைந்துள்ள பகுதிகளிலும் மலையாளம் பேசும் மொழியாக உள்ளது. சுமாராக கி.பி.11ம் நூற்றாண்டில் மலையாள மொழி தோன்றியது. 15ஆம் நூற்றாண்டின் அண்மையில் மலையாளம் சுயேச்சையான மொழியான அங்கீகரிக்கப்பட்டது.

அர்த்த சாஸ்திரா மற்றும் கொகா சந்தீசன் ஆகிய இரண்டு சிறந்த புத்தகங்களின் மீது எழுதப்பட்ட விளக்குவுரை 'பாஷா கௌடில்யா' வாகும். ராமர பணிக்கரு மற்றும் ராமானுஜன் எழுத்தச்சனும் மலையாள இலக்கியத்தின் பிரபலமான எழுத்தாளர்களாவர். மொழிகளுடன் ஒப்பிடுகையில் மலையாளம் சக்தி வாய்ந்த போதனா மொழியானது. இப்பொழுது பெரிய அளவிளான இதழ்கள், செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகள் மலையாளத்தில் வெளியிடப்படுகின்றன. மக்கள் இதை தங்கள் சொந்த மொழியில் படித்து, எழுதும் பொழுது, அவர்கள் பெரிதும் மகிழ்கிறார்கள். ஏனென்றால் மொழி அவர்களுடைய பண்பாட்டின் ஒரு பகுதியாக இருந்தது. அவர்களது சமூக வாழ்க்கையிலும் இழையோடியது. அவர்களது உள்ளக்கிளர்ச்சிகளை, சொந்த மொழியிலேயே உணர முடிகிறது.

## 6.9 சங்க இலக்கியங்கள்

கிறிஸ்துவ சகாப்தத்தின் தொடக்கத்திலிருந்து தமிழ் எழுதப்பட்ட மொழியாக தெரிந்திருந்தது. கிறிஸ்துவ சகாப்தத்தின் முந்தைய நான்கு நூற்றாண்டுகளில் பெரும்பாலான சங்க இலக்கியம் உருவாக்கப்பட்டதில் எந்த வித ஆச்சரியமும் இல்லை. இருந்தாலும் இவை கி.பி.600இல் இறுதியாகத் தொகுக்கப்பட்டன. இத்தகைய மன்றங்களில் இருந்த அரசர்கள் மற்றும் முதன்மை அதிகாரிகளால் ஆதரிக்கப்பட்ட புலவர்கள் சங்கம் இலக்கியத்தை 3 லிருந்து 4 ஆம் நூற்றாண்டுகளில் உருவாக்கினர். புலவர்கள், கவிஞர்கள் எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், தென்னிந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து மதுரைக்குச் சென்றனர். இந்த மாதிரியான கூட்டங்கள் சங்கம் என அழைக்கப்பட்டன. இங்கு உருவான இலக்கியம் 'சங்கம் இலக்கியம்' என அழைக்கப்பட்டது. தமிழ் முனிவர்களின் பங்களிப்பு திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார். இவை பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சங்க இலக்கியம் வெவ்வேறு புலவர்களால் தொகுக்கப்பட்ட பெரிய மற்றும் சிறிய கவிதைகள் ஏராளமான கதாநாயகர்கள் மற்றும் கதாநாயகிகளை புகழ்ந்து பாடிய கவிதைகளாகும். அவைகள் இயற்கையாகவே மதசார்பற்றவையும் நல்லதரமானவையுமாகும். இம்மாதிரி மூன்று சங்க கூட்டங்கள் நடந்தன. முதல் சங்கத்தில் திரட்டப்பட்டவை தொலைந்துவிட்டன. இரண்டாவது சங்கத்தில் கிட்டத்தட்ட 2000 கவிதைகள் திரட்டப்பட்டன.



குறிப்புகள்

சுமார் 30000 வரிசைகளைக் கொண்ட கவிதைகளை 8 தொகுப்பு நூல்களாக வரிசைப்படுத்தியதை ‘எட்டுத் தொகை’ என அழைக்கப்படுகிறது. அங்கு 2 முதன்மை குழுக்கள் பதினெண் கீழ் கணக்கு பத்துப்பாட்டு (பத்துபாட்டுகள்) பொதுவாக முந்தையது பிந்தியதை விட பழமையானது என ஊகிக்கப்படுகிறது. வெகுவான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என கருதப்படுகிறது. திருவள்ளுவரின் திருக்குறள் 3 பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பாகம் காப்பியங்களையும் இரண்டாவது பாகம் அரசியல் மூன்றாவது பாகம் அன்பைப் பற்றியதாகும்.

சங்க இலக்கியங்களைத் தவிர, தொல்காப்பியம் என அழைக்கப்படுகிற புத்தகம் நம்மிடம் உள்ளது. இவை இலக்கணம் மற்றும் கவிதைகளைப் பற்றியதாகும். கூடவே சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை என்ற இரட்டைக் காப்பியங்கள் உள்ளன. இந்த இரண்டும் கி.பி. 2ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6ம் நூற்றாண்டு வரை தமிழகத்தின் சமூக, பொருளாதார வாழ்க்கைப் பற்றி விவரிக்கின்றன. முதலாவது, ஒளிருகின்ற தமிழ் இலக்கியத்தின் மாணிக்கம் என கருதப்படுகிறது மற்றும் காதல் கதையைப் பற்றியது. இரண்டாவது காப்பியம் மதுரை தானிய வணிகரால் எழுதப்பட்டது.

கி.பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.12ஆம் நூற்றாண்டு வரை நாயன்மார்கள் (சைவ சமயத்தை புகழ்ந்து பாடிய புனிதர்கள்) மற்றும் ஆழ்வார்களால் எழுதப்பட்ட தமிழ் பக்தி கவிதைகள் சிறந்த பக்தி இயக்கத்தை பறை சாற்றி, இவை இந்திய துணைக் கண்டத்தை முழுமையாக சூழ்ந்து கொண்டன. இந்தக் காலத்தில் கம்பராமாயணம் பெரியபுராணம் எழுதிய தமிழ் இலக்கிய முதல் தர இரு எழுத்தாளர்கள் இக்காலத்தில் இருந்தனர்.

## நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- பாரம்பரியம் என்பது முழுமையான அறிவார்ந்த பொக்கிஷம். அது ஒரு தலைமுறை யிலிருந்து மற்ற தலைமுறையினருக்கு செல்வது
- சமஸ்கிருதம் இந்தியாவின் பழமையான மொழியாகும்
- ரிக்வேதம் பழமையான மனித இனத்தின் வளமான இலக்கிய பாரம்பரியம்.
- உபநிடதங்கள் உலகின் சிறந்த தத்துவ வாதிகளை வசப்படுத்தியுள்ளது.
- நமது காப்பியங்களான இராமாயணம் மற்றும் மகாபாரதம் இன்றும் நமது நாட்டின் சமூக பண்பின் அடிப்படை கூறுகளில் ஆதிக்கம் செலுத்துகிறது.
- புராணங்கள் மக்களுக்கு வழி காட்டும் ஒளியை வழங்குகின்றன.
- ஜைன மதம், நல்ல நடத்தை, ஒழுக்க முறை ஆகியவற்றை வலியுறுத்தி அஹிம்சை உண்மை மற்றும் துறவறத்தை போதிக்கிறது. ஜடகா கதைகள் அக்காலத்திய மக்களின் எண்ணங்கள், வாழ்க்கை ஆகியன பற்றி அறியக் கூடிய விலை மதிப்பற்ற மூலங்களாகும்.
- சட்டம், அரசியல், அறிவியல், மருத்துவம், அறுவை சிகிச்சை, உயிரியல், வேதியல் சிற்பக்கலை ஆகியவைப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் இருக்கின்றன.
- தமிழ் இலக்கியம் சங்கம இலக்கியத்தைப் போல புகழ்பெற்றது.

## பயிற்சிக்கான கேள்விகள்

1. சமஸ்கிருதம் பல இந்திய மொழிகளின் பிறப்பிடம் - விவரி
2. உபநிடதங்களின் முக்கியத்துவத்தை விவாதி
3. புத்த மத, ஜைன மத இலக்கியங்களை பட்டியலிடுக நீர் ஈடுபாடு கொண்ட புத்தகங்களைப் பற்றி எழுது
4. கீழ் கண்டவற்றின் மீது சிறு குறிப்பு வரைக
   i. சங்க இலக்கியம்
   ii. வேதங்கள்
5. இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலையின் பின்னணியில் உள்ள கதை யாது?
6. தாரவியின் ராமாயணத்தின் நிகரில்லாத சிறப்பம்சம் என்ன?

## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 6.1

1. சமஸ்கிருதம்
2. ரிக் வேதம்

### கேள்விகளுக்கான பதில்கள் 6.2

1. அறிவு
2. ரிக்வேதம், யஜிர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம்
3. இதன் பொருள் பலி, வழிபாடு, அந்த சமயத்தில் இந்தியாவின் சமூக, சமய நிலைகள்
4. பதினாராயிரம்

### கேள்விகளுக்கான பதில்கள் 6.3

1. உபநிடதத்தின் பொருள், குழுவின் அருகில் அமர்
2. அயிட்டாரியா, கேனா, கதா, பிரிஹடரன் யாகா, சண்டோக்யா
3. கிருஷ்ணன் போர்ப்படை வீரனாகி அர்ஜினனிடம் கடமைகளை உதாரணங்களுடனும் ஒப்புடைமைகளுடனும் விளக்கிக் கூறுகிறார்.

### கேள்விகளுக்கான பதில்கள் 6.4

1. இராமாயணம் மகாபாரதம்
2. வால்மீகி, வேதவியாசர்





## கேள்விகளுக்கான பதில்கள் 6.5

1. அங்கு 18 புராணங்கள் 18 உபபுராணங்கள் இருந்தன.
2. புராணங்கள், படைப்புகளின் புதிர்கள், வம்சவளியின் இன்பப் பொழுது போக்கைப் பற்றி கூறுகின்றன.

## கேள்விகளுக்கான பதில்கள் 6.6

1. பாலி மொழியும் பிராகிருத மொழியும்
2. வினய பிடகம், சுத்த பிடகம், அபிதாமபிடகம்
3. புத்தர் முற்பிறவிகளில் தர்மத்தை கையாண்டார்
4. ஹரி பத்ரா சூரி (கி.பி. 8ஆம் நூற்றாண்டு) ஹேம சந்திர சூரி (கி.பி. 12 ஆம் நூற்றாண்டு) 2 முக்கியமான ஜைன வல்லுநர்கள் ஆவர்.

## கேள்விகளுக்கான பதில்கள் 6.7

1. சட்டம்
2. கல்கன்
3. அபிக்யான சாகுந்தலம்
4. கீத கோவிந்தம்
5. சரக்

# 7

# இந்திய மொழிகள் மற்றும் இலக்கியங்கள் பாகம் - II

எந்த ஒரு பண்பாட்டின் செழிப்பினைக் காணவும், மதிக்கவும் முடியும். ஆனால் அதுவே ஒரு மொழிக்கும் இலக்கியத்திற்கும் வரும் பொழுது அதனைப் படிக்கவும், கேட்கவும் வேண்டும். இந்தப் பண்பாட்டுக் கூற்றை நாம் மதித்து பெருமை கொள்ளவேண்டும். அக்காலத்தில் எழுதிய பல புத்தகங்களை படிக்கும் பொழுது, அந்தக் காலத்தில் நடந்த பலவற்றை நாம் புரிந்துகொள்ளலாம் என்பதை நாம் கண்டிப்பாக சுட்டிக்காட்ட வேண்டும். இவை, இன்னும் பல புத்தகங்களைப் படிக்கும் பொழுது நம்மைச் சுற்றி இன்று என்ன நடக்கிறது என்பதில் மிகவும் பரிச்சயம் அடைகிறோம். இந்த பாடத்தில், நவீன காலத்தில் இந்திய மொழிகள் பற்றியும் இலக்கியத்தின் வளர்ச்சி பற்றியும் கற்கலாம். கிருஸ்தவ மத போதகர்கள், ஆரம்பக் காலத்து அகராதிகளையும் நவீன கால இந்திய மொழிகளின் இலக்கணத்தையும் உருவாக்கியதில் அவர்களின் பங்கு நவீன இந்திய இலக்கியங்கள் வளர்வதற்கு உதவின. மேலும் இயக்கத்தின் பங்கு, தேசியவாதம் நவீன இந்திய இலக்கியத்தின் முன்னேற்றத்திற்கு அளித்த பங்கினையும் தெரிந்து கொள்வோம்.

## நோக்கங்கள்

இந்தப் பாடத்தைப் படித்த பிறகு உங்களால்

- நவீன காலத்திய இந்திய மொழிகளின் வளர்ச்சியைக் கண்டறிதல்
- இந்திய சமுதாயத்தில், சமூக பண்பாட்டிற்கு இடையே உள்ள மாறுதல்கள், பல்வேறு இந்திய மொழிகளின் இலக்கியம் என்பதை ஆராய்தல்
- இந்திய மொழிகள் அதன் இலக்கியத்திலும் ஒற்றுமை, வேற்றுமைகளை தெளிவுபடுத்தல்
- இந்திய மொழிகளின் பங்களிப்பு மற்றும் இந்திய சமுதாய இலக்கியத்தின் மறுமலர்ச்சி என்பதை ஆராய்ந்து அறியமுடியும்.

## 7.1 வடக்கிந்திய மொழிகளும் இலக்கியமும்

எவ்வாறு இந்தியாவில் மத்திய கால ஆரம்பத்திலிருந்தே மொழிகள் மெல்ல மெல்ல வளர்ச்சி அடைந்தன என்பதை ஏற்கனவே பார்த்தோம். சில பகுதிகளில் பழைய அபபிரம்ஷா

புதிய தோற்றத்திலும் அல்லது படிப்படியாக மற்ற வடிவங்களில் உள்ளது. இத்தகைய மொழிகள் இரண்டு நிலைகளில் பரிணாம வளர்ச்சி அடைந்தது. பேசப்பட்ட, எழுதப்பட்ட மொழி 'பிராமி' என்ற எழுத்து வடிவம் அசோகர் காலத்தில் பெரிய மாற்றத்திற்கு உள்ளானது. அசோகர் காலத்தில் மொழியின் எழுத்துத் தொகுதிகள் சமநிலையற்ற அளவுகளில் இருந்தன. ஆனால் ஹர்சரின் காலத்தில் அதே எழுத்து தொகுதிகள் ஒரே மாதிரியான அளவிலும் ஒழுங்கான வடிவத்திலும் இருந்தன. அது மட்டுமின்றி பயிர் விளைவிக்கும் 'கை' யின் படத்தை எடுத்துக் காட்டுகிறது.

தற்போதுள்ள இந்திய மொழிகளில் உருதைத்தவிர மற்ற எல்லா மொழிகளும் பழைய பிராமி எழுத்துகளின் மூலமாகும் என்று ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. நீண்ட மற்றும் நிதானமான செயல்முறைப்படிகள் அவற்றுக்கு இந்த வடிவத்தைக் கொடுத்துள்ளன. குஜராத்தி, ஹந்தி, பஞ்சாபி எழுத்துகளை ஒப்பிடும் பொழுது, நாம் எளிதில் இந்த மாற்றத்தைப் புரிந்து கொள்ளலாம். தற்போது இந்தியாவில் இருநூறு மொழிகள் அல்லது கிளை மொழிகள் பேசும் மொழிகளாக உள்ளன. சில மொழிகள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. அதே சமயம் மற்ற மொழிகள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் பேசப்படுகின்றன. எல்லாவற்றையும் விட, இரு பத்திரண்டு மொழிகள் மட்டும் நமது அரசியல் அமைப்பில் இடம் பெற்றுள்ளன.

ஏராளமான மக்கள், ஹிந்தியை வெவ்வேறு ஒலி வடிவத்தில் பேசினார்கள். அவை 'யிர்ஜபாஷா' அவதி (அஷத் வட்டாரத்தில் பேசப்பட்டது) போஜ்புரி, மகதி, மைதிலி (மிதிலாவைச் சுற்றியுள்ள பகுதிகளில் பேசப்பட்டது) ராஜஸ்தானி, 'கடிபோலி' (டெல்லியைச் சுற்றிய வட்டாரங்களில் பேசப்பட்டது) ஆகியவை இவற்றில் அடங்கும். ராஜஸ்தானி மறறுமொரு வேறுபாடுடைய அல்லது ஹிந்தியின் கிளை மொழியாகும். சிறந்த கவிஞர்களால் வெகுகாலமாக இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த வகைப்படுத்தலை உருவாக்கினார்கள். இவ்வாறாக சூத்திரர்களாலும் 'பிகாரி' யாலும் பயன்படுத்தப்பட்ட மொழியை "பிரஜ பாஷா" எனப் பெயரிட்டனர். அதை துளசிதாஸ் ராமச்சந்திர மனஸில் பயன்படுத்தியதை 'அவதி' என்று அழைக்கப்பட்டது, 'வித்யாபதி' என்பவர் பயன்படுத்திய மொழியை 'மைதிலி' என குறிப்பிடப்பட்டது. ஆனால் நமக்குத் தெரியும் இன்றைய நாளில் ஹிந்தியை மட்டும் 'கடிபோலி' என்று அழைக்கப்படுகிறது. பதின்மூன்றாம் நூற்றாண்டில், குஷ்ரூ தன்னுடைய தொகுத்தலில் 'கடிபோலி' யைப் பயன்படுத்தினாலும் இலக்கியத்தில் இதனுடைய அதிகளவான பயன்பாடு பதின்மூன்றாம் நூற்றாண்டில் தான் ஆரம்பமானது. இது உருதுவின் சில செல்வாக்கை காண்பிக்கிறது.

## 7.2 பாரசீகமும் உருதுவும்

நான்காம் நூற்றாண்டின் இறுதியில் உருது தனித்தியங்குகிற மொழியாக வளர்ந்தது. துருக்கியர்கள் மங்கோலியர்களின் இந்திய வருகை, அரேபிய, பாரசீக மொழிகள் அறிமுகமாயின. பாரசீக மொழி பல நூற்றாண்டுகளாக அரசவை மொழியாக இருந்தது. உருது என்ற ஹந்தி, பாரசீகத்திற்கும் உள்ள தொடர்பால் உருது என்ற மொழி தோன்றியது. டெல்லியை (1192) கைப்பற்றிய பின்பு, துருக்கிய மக்கள் இந்த வட்டாரத்தில் குடியேறினார்கள். குடியேறினவர்களும் படைவீரர் குடியிருப்பு வளாகத்தில் உள்ள இராணுவ வீரர்களும் சாதாரண மக்களுடன் கொண்ட தொடர்பால் உருது தோன்றியது. முதன் முதலில் இது ஒரு கிளை மொழியாகத்தான் இருந்தது. ஆனால் எழுத்தாளர்கள் பாரசீக எழுத்து வடிவத்தை பயன்படுத்தும் பொழுது, இது மெதுவாக, முறையான மொழியின் எல்லா சிறப்பம்சங்களையும் பெற்றது. இன்னும் இதற்கு தூண்டுதலாக அமைந்தது பாமினி அரசுகளான அகமத்நகர், கோல்

கொண்டா, பிஜப்பூர் பீரார் ஆகியவை இந்த மொழியை பயன்படுத்தியது. இங்குதான் இவற்றைக் கூட 'தட்சினி' அல்லது 'டக்கானி' (தென்னிந்திய) என்று அழைக்கப்பட்டது. நாளடைவில் இது டில்லி மக்களிடையே மிகவும் பிரபலமடைந்தது.

பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலேயே உருது மிகவும் பிரபலமடைந்தது. பிற்காலத்தில் மொகலாய அரசர்களின் அறிக்கைகளை மக்கள் உருது மொழியில் எழுதினர். படிப்படியாக இலக்கியம், செய்யுள் பாடங்கள் இரண்டுமே உருதுவில் தொகுத்ததால் இது நல்ல தகுதியைப் பெற்றது. கடைசி முகலாய பேரரசர் பகதூர்ஷா கவிதையை உருதுவில் எழுதினார். அவருடைய சில ஈரடிச் செய்யுள்கள் ஹிந்தி உருது பேசும் பகுதியில் மிகவும் பிரபலமாயின.

உருதுவிற்கு பெருமையான இடத்தை ஏராளமான கவிஞர்களால் எழுதப்பட்ட நேர்த்தியான கவிதைகள் பின் வரும் தலைமுறையினருக்காக கொடுக்கப்பட்டது. ஆரம்பகாலத்தில் குஸ்ரூ(1253-1325) என்பவர் உருது கவிஞராக ஊகிக்கப்பட்டார். சுல்தான் பால்பனும் அவருடைய சந்ததியான நைசா முடின்அலியாவின் காலத்திலிருந்தே அவர் கவிதைகள் எழுத ஆரம்பித்தார். இவர் தொன்னூற்றி ஒன்பது நூல்களின் தனித்தனி ஆய்வுப் பொருள்களையும் மற்றும் ஏராளமான பக்திகளையும் கொண்ட செய்யுள்களைத் தொகுத்துள்ளார் என கூறப்படுகிறது. "லைலா - மஜ்னு "அல்னா - இ - சிக்கந்தரி ஆகிய முக்கியமான கட்டுரைகள் இவரால் தொகுக்கப்பட்டு அலாவுதீன் கில்ஜிக்கு அர்ப்பணிக்கப்பட்டது. அவர்களில் கலிப்சக், இக்பால் ஆகியவர்கள் பிரபலமான கவிஞர்கள் ஆவர். இக்பாலின் உருது செய்யுள், பாங் - ஜ - தாரா என்ற செய்யுள் அவரால் திரட்டப்பட்ட தொகுப்புகளில் காணலாம். இவருடைய "சாரேஜஹான் சே அச்சா ஹிந்துஸ்தான் ஹமாரா என்ற கவிதை இந்தியாவில் பல தேசிய நிகழ்ச்சிகளில் பாடப்பட்டுள்ளது. இந்தியாவில் இந்த இசையில்லாமல் எந்த ஒரு இராணுவ அனிவகுப்பும் முழுமையடைந்தது என்று கூறமுடியாது. இந்தியாவில் டில்லி போன்ற பெரிய நகரங்களில் பிரபலமான கவிஞர்கள் காலிப், மாம், புல்லிஷா, லாரிஸ்ஷா இவர்களைத் தவிர பல கவிஞர்களால் எழுதப்பட்ட 'நஜம்ஸ்' அல்லது கஜல்களை பல்வேறு நிகழ்ச்சிகளில் பாடுவதற்காக பிரபலமான பாடகர்களை வரவழைத்தார்கள். ஆகையால் நமது வளமான மொழி இலக்கிய பண்பாட்டை இந்நாள்வரை நாம் எவ்வாறு தொடர்கிறோம் என்பதை உங்களால் கற்பனை செய்ய இயலும். இது நமது வாழ்வை வளப்படுத்தியது மக்கள் கூட்டங்கூடி ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ள கூடிய மையமாக அமைந்தது.

மிகச்சிறந்த உரைநடை எழுத்தாளர்களுள் 'பசனா-ஜ-ஆஜாத்' தை எழுதின 'பண்டிட் ரத்தன் நாத் சாகர்' போன்றோரை மக்கள் பெரிதும் விரும்பினார்கள். ஆரம்ப காலத்திலேயே இந்தி இலக்கியத்தில் அனுபமுள்ள 'முன்ஷி பிரேம் சந்த்' என்பவர் உருதுவில் எழுதினார். உருது நமக்கு 'நசம்' என்று அழைக்கப்பட்ட கவிதையில் புது வடிவத்தை கொடுத்தன. லக்னோவைச் சார்ந்த நவாப்புகளால் கருத்தரங்குகள் நிகழ்த்தி, உருதை ஆதரித்தனர். மெதுவாக பிரபலமடைந்தது. பாகிஸ்தான் உருதை அரசு மொழியாக ஏற்றுக் கொண்டது.

**முகலாயா; காலத;தயீல; ,லக;கயீயத;தயீன; வளா;ச;சயீ**

முகலாயர் காலத்தில் இலக்கியத்துறை ஏராளாமான அளவில் முன்னேறியது. பாபரும் ஹீமாயுனும் இலக்கியத்தில் பற்றுமிக்கவர்களாக இருந்தனர். பாபர் அவரே ஒரு சிறந்த பாரசீகக் கவிஞர். அவர் எழுதிய 'துசுக்-இ-பாபுரி' என்ற புத்தகம், துருக்கிய இலக்கியத்தில் நன் மதிப்பைப் பெற்றுள்ளது. ஹீமாயுன் இந்த ஆய்வுக் கட்டுரையை அரேபிய மொழியில் மொழி பெயர்த்தார். அவரும் கற்றலில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். எனவே அவர் ஒரு பெரிய நூலகத்தை ஏற்படுத்தினார். அவருடைய காலத்தில் எழுதப்பட்ட நூல்களுள் 'ஹீமாயுன் நாமா' முதன்மையானது. அக்பர் கற்றலில் மிகுந்த விருப்பம் கொண்டவர்.

அவருடைய காலத்தில் ‘அக்பா நாமா’ சூர் சாகர், ‘ராம் சரித்த மணஸ்’ ஆகிய குறிப்பிடத்தக்க நூல்கள் எழுதப்பட்டன. அதே காலத்தில் மாலிக் முகமது ஜெயசிஸ் பத்மாவதி, கேஷவாலின் ராம் சந்திரிகா ஆகிய நூல்களும் எழுதப்பட்டன. ஜஹாங்கீர் இலக்கியத்தைப் பெரிதும் ஆதரித்தார். பல அறிஞர்கள் அவருடைய அவையை அலங்கரித்தனர். அவரும் திறமை மிக்க அறிஞர், தன்னுடைய வாழ்க்கை சரித்திரத்தையும் எழுதியுள்ளார். ஷாஜஹானுடைய காலத்தில் ‘அப்துல் ஹமித் லகோரி’ என்றழைக்கப்பட்ட பிரபலமான அறிஞர் இருந்தார். அவர் ‘பட்ஷா நாமா’ என்ற நூலை எழுதினார். இலக்கிய செயல்பாடுகள், ஔரங்கசீப் காலத்தில் இலக்கிய வளர்ச்சி மிகவும் பாதிப்புக்கு உள்ளானது. முகலாய மன்னரின் கடைசி நாட்களில் உருது இலக்கியங்கள் வளர்ச்சியடையத் தொடங்கின. இந்த பெருமை சர் சையத் அகமத் கான், மிர்சா காலிப்பையே சாரும். ‘சர்சையத் அகமத் கானின் மொழி மிகவும் எளிதாகவும், மெச்சத்தக்கதாகவும் இருந்தது. அவருடைய மொழித் தொகுப்புகள் புகழ் பெற்ற அவருடைய காலத்தைச் சார்ந்த “மிர்சா - காலில்” என்ற உருது எழுத்தாளரை ஊக்குவித்தது. உருது கவிதைகளை எழுச்சியூட்டுவதில் அவரது பங்களிப்பு முக்கியமானதாகும். மேலும் சில எழுத்தாளர்களும், உருது கவிதையில் ஆர்வம் கொண்டு உருது இலக்கியத்தை செழுமையடைச் செய்தார்கள். மௌல்வி அட்லப் ஹசைன் அலி, அக்பர் அலகாபடி முனைவர் முகமது இக்பால் ஆகியவை சில புகழ் பெற்ற பெயர்களாகும்.

பாரசீக மொழி அரசவை மொழியாக இருந்ததினால் அதிக பட்சமான இலக்கியங்கள் இந்த காலத்தில் பாரசீக மொழியில் எழுதப்பட்டது. ‘அமிர் குஸ்ரூ’, ‘அமிர்ஹசன் டிகெல்வி’ ஆகியோர் நேர்த்திமிக்க கவிதைகள் எழுதினார். வரலாற்று ஆசிரியர்கள் மின்ஹஸ் - அஸ் - சிராஜ், ‘ஜியாபரணி’ இபின்பட்டுட்டா போன்றவர்கள் அந்நாள்களில் இந்தியாவிற்கு வந்து அரசர்கள் முக்கியமான அரசியல் நிகழ்ச்சிகள் அதனைச் சார்ந்த நிகழ்வுகளை பற்றிய அறிக்கைகளை இந்த மொழியில் எழுதினர். மத்திய காலத்தில் பாரசீக மொழி அரசவை மொழியாக விளங்கியது. பல வரலாற்றுக் குறிப்புகள் நிர்வாகக் குறிப்பு, கையேடுகள், தொடர்பு இலக்கியங்கள் இந்த மொழியில் நமக்குக் கிடைத்துள்ளன. முகலாய அரசர்கள் கல்வி, இலக்கியத்தின் பெரிய ஆதரவாளர்கள். பாபர் தன்னுடைய டுசக் (சுய சரிதையை) துருக்கி மொழியில் எழுதினார். ஆனால் அவரது பேரன் அக்பர் அதை பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார். அக்பர் பல அறிஞர்களை ஆதரித்தார். அவர் மகா பாரத்தை பாரசீக மொழியில் மொழிபெயர்த்துள்ளார். ஜஹாங்கீர் சுய சரிதை (டுசக் - ஜ - ஜஹாங்கிரி) பாரசீக மொழியில் உள்ளது. இது ஒரு ஆபூர்வமான இலக்கியப் படைப்பாகும். நூர்ஜஹான் ஒரு திறமை வாய்ந்த பெண் கவிஞர். ஏராளமான பாரசீக இலக்கியங்கள், அரசவைக் குழுவினரால் உருவாக்கப்பட்டது. ‘அபுல் பாசலின்’ ‘அக்பர் நாமா’, ‘அயினி அக்பரி’ இலக்கியத்தின் ஒரு சிறந்த படைப்பாகும். இதிலிருந்து நாம் அக்பர், அவரது காலத்தைப் பற்றின தகவல்களை அறியலாம். ஃபய்சி ஓர் அற்புதமான பாரசீக கவிதையை எழுதியுள்ளார். முகலாயர்களின் காலத்தில் (இன்ஷா) சேகரிக்கப்பட்ட கடிதத் தொகுப்புகள் நமக்குக் கிடைத்துள்ளன. மேலும் வரலாற்றை நோக்குங்கால், அவைகள் வெவ்வேறு பாணியில் அமைந்துள்ள எழுத்துகளைப் புலப்படுத்துகிறது. மற்றுமொரு உரைநடை, வரலாற்று எழுத்தாளர் ‘சந்திரா பான்’ என்பவர் ஷாஜஹான் காலத்தை சார்ந்தவர். இதைப் போன்றே “டப்கட் - ஜ - ஆலம்கிரி என்ற நூல் ஔரங்கசீப் பைப்பற்றி கூறுகிறது. மற்றுமொரு எழுத்தாளர் ‘படாமி’ அக்பருடைய காலத்தைச் சார்ந்தவர். இருபதாம் நூற்றாண்டில், இக்பால் நல்ல பாரசீக கவிதைகளை எழுதினார். இப்பொழுது இவை எல்லாமே இந்திய பண்பாடு பண்பாட்டின் பகுதியாக உள்ளது.

இவர்களில் கபீர், துளசிதாஸ், சூர்தாஸ், ரஹீம் ஆகியோர் இந்தக் காலத்தைச் சார்ந்த குறிப்பிடத்தக்க இந்து கவிஞர்கள் ஆவர். கபீரின் தோகாக்கள் இன்றும் புகழ் பெற்றதாக உள்ளது. அதே சமயம் துளசிதாஸின் ராமசரிதை இந்துக்களின் புனித நூலாக உள்ளது. அக்பருடைய காலத்தில் எழுதப்பட்ட பிஹாரியின் "சட்சை" மிகவும் சிறப்பு வாய்ந்தாகும். கேசவ் மிஷ்ரா எழுதின "அலங்கார ஷெக்காரா'வை அக்பரது அரசவையில் முன்னிலைப் படுத்தப்பட்டது. இது ஒரு சிறந்த எழுத்துப் பாணியில் அமைந்த சமஸ்கிருத நூலாகும். அக்பரும் சமஸ்கிருத நூல்களான பகவத் கீதை, உபநிடதங்களை பாரசீக மொழியில் பெயர்த்தார்.

## இப்பகுதிக்கான கேள்விகள் 7.1

1. ஹிந்தி மொழியின் பல்வேறு வடிவங்கள் எவை?
2. ராம் சரித மனசிற்காக, துளசிதாஸ் எந்த மொழியைப் பயன்படுத்தினார்?
3. எவ்வாறு உருது மொழி இந்தியாவிற்கு பயன்பாட்டு மொழியாக வந்தது?
4. எந்த நாட்டில் உருது அரசு மொழியாக உள்ளது?
5. தக்காணத்தில் உருது மொழியை எப்படி அழைக்கப்பட்டது?

## 7.3 ஹிந்தி இலக்கியம்

இந்த காலத்தில் வட்டார மொழிகளான ஹிந்தி, பெங்காலி, அஸ்ஸாமி, ஒரியா, மராத்திய குஜராத்தி முதலியவை அபரிதமான வளர்ச்சி அடைந்தன. 14-ஆம் நூற்றாண்டில் தென் இந்தியாவில் மலையாளம் தனிப்பட்ட மொழியாக உருவெடுத்தது. இந்த எல்லா மொழிகளின் வளர்ச்சியின் முடிவு, சமஸ்கிருத மொழி வீழ்ச்சி அடைந்து, இந்த மொழிகளின் மூலமாகத் தான் அரசு நிர்வாகம் செய்யப்பட்டது. பக்தி இயக்கத்தின் தோற்றம், வட்டார மொழிகளைப் பயன்படுத்திய பல்வேறு புனிதர்கள், இம் மொழிகளின் வளர்ச்சி முன்னேற்றத்திற்காக உதவினர். நாம் ஏற்கனவே பல்வேறு கிளை மொழிகள் வடக்கு, மேற்கிந்தியாவில் வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை குறிப்பிட்டுள்ளோம். ஹிந்தி மொழியில் 'பிரிதிவிராஜ் ராசோ' தான் முதல் நூலாக கருதப்படுகிறது. இதே மாதிரி போலியான சில 'ரசோக்கள்' எழுதப்பட்டன. மொழியின் பயன்பாட்டு பகுதிகள் விரிவானதால் மொழியும் மாறிக் கொண்டே இருந்தது. புதிய வார்த்தை புதிய சூழ்நிலைகளை விளக்குவதற்கு புதிய சொல் தொடரை உருவாக்கியோ அல்லது அதன் செல்வாக்கு உள்ள பகுதியிலிருந்து எடுக்கப்பட்டது. ஹிந்தி இலக்கியம் இலக்கிய நயம் வாய்ந்த சமஸ்கிருத நூல்களை வழிகாட்டியாகவும், "பரத்தாசின் நாட்டிய சாஸ்திராஞ வை ஹிந்தி எழுத்தார்கள் மனதில் இருத்திக் கொண்டனர். 12ஆம் மற்றும் 13ஆம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவில் ஒரு இயக்கம் தோன்றியது. அது தான் பக்தி இயக்கம் என்று அழைக்கப்பட்டது. இதனுடைய செல்வாக்கு வடக்கே சேரும் போது ஹிந்தியில் தொகுக்கப்பட்ட உரைநடையையும் செய்யுளையும் பாதித்தது. இயற்கையாகவே செய்யுள் இப்பொழுது மிகுந்த அளவில் பக்தியுள்ளதாக மாறியுள்ளது. சில கவிஞர்களைப் போல துளசிதாஸ் எழுதிய செய்யுள், அந்த வட்டார மொழியில் மட்டுமே, அதே சமயம் மற்றவர்கள் கபீரைப் போல் ஒவ்வொரு இடத்திலிருந்தும் மாறிமாறிச் சென்று பாரசீக, உருது கொள்கைகளைச் சேர்த்தனர். துளசிதாஸ் 'ராமசரித மனசை', வால்மீகியின் ராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதினார். அதோடு மரபு வழிப்பட்ட பழக்க கூறுகளை அடிப்படையாக வைத்து, சூழ்நிலைகளை மாற்றி, சில புதிய காட்சிகளை சேர்த்தார். உதாரணமாக, வால்மீகியின் தழுவலில் சீதாவை நாடு கடத்துதல் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் இதை துளசிதாஸின் தொகுப்பில் குறிப்பிடப்படவில்லை. துளசிதாஸ் தன்னுடைய கதாநாயகனை தெய்வப் பிறவியாக கொண்டார், அதே சமயம் வால்மீகி மனிதனாக கருதினார்.

7ஆம், 8ஆம் நூற்றாண்டு 14ஆம் நூற்றாண்டுகளில் ‘அப்பிரம்சா’ நிலையிலிருந்து ஹிந்தி படிப்படியாக வளர்ச்சி அடைந்தது. இதை ‘வீரகதா கலா’ என்ற கதாபாத்திரமாக, அதாவது வீரமிக்க கவிதைகளின் காலம் அல்லது ‘ஆடிகலா’ (முந்தைய காலத்தில்) வாக சித்தரிக்கப்பட்டது. இதை இராஜபுத்திர அரசர்கள் ஆதரித்தனர். ஏனென்றால் இது பெண்களிடம் மரியாதை காட்டும் ஆண்களின் பண்பு கவிதைகளை சிறப்பிக்கிறது. இந்த காலத்தில் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள் கபீரும் துளசிதாசும் ஆவர். நவீன காலத்தில் ‘கடி’ என்ற ‘கிளை மொழி’ மிகவும் பிரசித்தி பெற்றது வெவ்வேறு வகையான இலக்கியங்கள் சமஸ்கிருத மொழியில் தயாரிக்கப்பட்டன.

இதே போன்று சூர்தாஸ் தன்னுடைய சூர்சாகரில் கிருஷ்ணனை ஒரு குழந்தையாக மனம் போன போக்கில் சிறு குறும்புகள் செய்யும் வாலிபனாகவும் கோபியர்களுடன் களியாட்டத்தில் ஈடுபடும் வாலிபனாக கூறுகிறார். இந்த கவிஞர்கள் ஆழமான கருத்துப் பதிவுகளை கேட்பவர்களின் மனதில் பதித்திருக்கிறார்கள். ஒரு வேளை திருவிழாக்களில் ராமரையும் கிருஷ்ணரையும் தொடர்பு படுத்திக் காணும் பொழுது அவர்களின் கருத்து மிகவும் பிரபலமடைவது. அந்தப் பாராட்டுகள் இந்த கவிஞர்களைச் சென்றடைகின்றன. இடைக்காலத்தில் அவர்களின் தழுவல்கள், கவிஞர்களுக்கு மட்டும் ஒரு தெய்வீக ஊக்கமாக இல்லாமல், ஒவியர்களுக்கும் ஊக்கமாக அமைந்தது, அவர்கள் மீராபாய்க்கு தெய்வீகமாக ஊக்கமளிதத்தால், மீராபாய் ராஜஸ்தானி மொழியில் பாடினார். ‘ரக்ஷன்’ முகமதியராக இருந்தாலும் கிருஷ்ணாவைப் பற்றி புகழ்ந்து பாடியிருக்கிறார். நந்த தாசர் என்பவர் ஒரு முக்கியமான பக்தி இயக்கத்தின் கவிஞராவார். ரஹிம், பூஷன் இருவருமே ஒரே வகுப்பிலிருந்து பிரிந்தவர்கள். அவர்கள் கருதி பார்க்கக் கூடிய பொருள் ஆழமான பக்தியைக் கொண்டதல்ல, ஆனால் ஆன்மீகத் தன்மை கொண்டது. 7ஆம் நூற்றாண்டில் பிகாரி என்பவர் ‘சாட்சை’ என்ற நூலை எழுதினார். இது நமக்கு அன்பினைப் பற்றி ஒரு சிற்றனுபவத்தை (ஷரிங்கர்) அன்பையும் பல ராசாக்களின் சீரிய தரிசனத்தை கொடுக்கிறது.

மேலே குறிப்பிட்ட எல்லா ஹிந்தி கவிஞர்களில் கபீரைத் தவிர அவர்களுடைய உணர்ச்சி பாங்குகளை அவர்களின் உள்ளார்ந்த உள்ளுணர்வுகளைத் திருப்தி படுத்துவதாக வெளிப்படுத்தியுள்ளனர். கபீர் சமூக வழக்கங்களைக் கொண்ட சமயத்தை நம்பவில்லை. அவர் வடிவில்லாத கடவுளின் மீது பக்தி கொண்டவர். கடவுளின் நாமத்தை உச்சரிப்பதுவே ஆரம்பமும் முடிவும் ஆகும். ஆரம்ப காலத்தில் என்றும் இல்லாதவாறு, இந்த எல்லா கவிஞர்களும் வட இந்திய சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தினர். உரைநடைகளை விட கவிதைகளை நினைவில் வைப்பது எளிதாக இருந்ததால் அவர்கள் மிகப்பெரிய அளவில் பிரபலமானார்கள்.

கடைசி நூற்றி ஐம்பது ஆண்டுகளாக பல எழுத்தாளர்கள் வட்டார மொழிகளிலும் ஆங்கிலத்திலும் எழுதி, அவர்களது பங்களிப்பை நவீன இந்திய இலக்கியத்தின் வளர்ச்சிக்குக் கொடுத்தனர். வங்காள எழுத்தாளர்களில் ஒருவரான இரவீந்திரநாத் தாகூர் தான் முதல் இந்திய நோபல் பரிசினை இலக்கியத்திற்காக (கீதாஞ்சலி) 1913 ஆம் ஆண்டு பெற்றார்.

ஆயினும் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் ஹிந்தி உரைநடை அதனுடைய சொந்தமானது. ‘பரடென்டு ஹரிச்சந்திரா’ முந்தைய நாளின் எழுத்தாளர், நாடகங்களை ஹிந்தியில் தயாரித்தார். அவை அடிப்படையாகவே சமஸ்கிருத, பிற மொழிகளிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவையாகும். ஆனால் அவர் ஒரு யுக்தியை கையாண்டார். மகாவீர் பிரசாத் திஷவேதி என்ற மற்றமொரு எழுத்தாளர் சமஸ்கிருத மொழியில் மொழி பெயர்த்தலை அல்லது தழுவல்களை எழுதினார். ‘பன்கிம் சந்திரா சட்டர்ஜி’ (1838 - 1894) தனது நீண்ட கதைகளை ‘பங்களா’ மொழியில் எழுதினார். அவை ஹிந்தியில் மொழி பெயர்க்கப்பட்டு மிகவும் பிரபலமானது. வந்தே மாதரம் நமது தேசிய கீதம் அவரது ‘ஆனந்த் மாத்’ என்ற

கதையிலிருந்து எடுத்தெழுப்பட்ட ஒரு பகுதியாகும். சுவாமிதயானந்த சரஸ்வதியின் பங்களிப்பு இந்திக்கு என்றும் மறுக்க முடியாது. உண்மையாகவே அவர் ஒரு குஜராத்தி சமஸ்கிருத மொழியில் அறிஞராக இருந்தாலும் இந்தியை இந்தியா முழுவதற்கும், பொதுவான மொழியாக்க வேண்டும் என வாதாடினார். அவர் பத்திரிகைகளுக்கு சமய, சமூக சீர்த்திருத்தங்களை பற்றி கட்டுரைகள் எழுதி, இந்திக்கு தனது பங்கை அளித்தார். இந்தியில் எழுதப்பட்ட "சத்யார்த்த பிரகாஷ்" என்ற நூல் மிக முக்கியமானது. இந்தி இலக்கியத்தை வளமுறச் செய்தவர்களின் பெயர்களில் "முன்ஷி பிரேம் சந்த்ஞ என்பவர் உருதிலிருந்து இந்திக்கு மாறினவர். அவரது "சூர்ய காந்தி திரிபாதிஞ 'நிராலா' நல்ல அங்கீகாரம் பெற்றது. ஏனென்றால் சமுதாயத்தில் பழைய சம்பிரதாயங்களில் நம்பிக்கை கொண்டவர்களிடம் கேள்விகள் கேட்டார். பெண்களின் பிரச்சனைகளை வெளியுலகிற்கு கொண்டு வந்த "மகாதேவி வர்மாஞ தான் இந்தியில் முதல் எழுத்தாளராவர். "மைதிலிஹரன் குப்த" மற்றுமொரு முக்கியமான பெயராகும், "ஜெய்ஷங்கர் பிரசாஷ்" அற்புதமான நாடகங்களை எழுதினார்.

## நவீன காலத்தில் ஹிந்தி மொழியின் வளர்ச்சி

**ஹிந்தி மொழி:** 18ஆம் நூற்றாண்டின் முடிவில் தான் நவீன காலத்திய மொழியின் வளர்ச்சி அடைய ஆரம்பித்தது. இக்காலத்தில் உள்ள முக்கிய எழுத்தாளர்கள் 'சதாசுக்லால்' 'இன்ஷல்லாகான்' ஆகியோர் ஆவர். பார்டென்டு அரிச்சந்திராவும் இந்தி மொழியை வலுப்படுத்தினார். அதேபோல், 'ராஜா லக்ஷ்மண்சிப்' என்பவர் சகுந்தலாவை இந்தியில் மொழி பெயர்த்தார். உருது அலுவலகப் பணிக்கு பயன்படுத்தியபோது, இந்தி தொடர்ந்து பாதகமான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டது.

**ஹிந்தி இலக்கியம்:** ஹிந்தி இலக்கியத்தில், 'பர்டென்டு ஹரிஷ் சந்திரா', "மஹாவீர பிரசாத் திவேதி", ராமசசந்திர சுக்லா, சியாம் சுந்தர் தா ஆகியோர் உரைநடை எழுத்தாளர்களில் முக்கியமானவர்கள். "ஜெய் சங்கர் பிரசாத்", மைதிலி சரண் குப்தா, சுமித்ரநந்தன் பட், சூர்ய சார்ள் திரிபாதி, நிராலா, "மகாதேவி வர்மா", ராம்திர் சிங்கின் திங்க்கர் மற்றும் ஹரிபன்ஸ் ராயின் பச்சன் ஆகியோர் இந்தி கவிதைகளின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு அளித்துள்ளனர். அதேபோல் பிரேம் சந்த் "விரிந்தாவன் லால் வர்மா", எலச் சந்திர ஜோஷி பல நீண்ட கதைகளை எழுதி, ஹிந்தி இலக்கியத்தை வளப்படுத்தினர்.

மேலே குறிப்பிட்டுள்ள எழுத்தாளர்களை நோக்கும் பொழுது, அனைவரும் ஒரு காரணத்திற் காகவே எழுதியுள்ளார் என காண்கிறோம். சுவாமி தயானந்த இந்து சமுதாயத்தை சீர்திருத்தம் செய்யவும், மூடப்பழக்கங்கள், சமுதாய கேடுகளிலிருந்து விடுவிப்பதற்காகவும் எழுதினார். முன்ஷி பிரேம் சந்த் ஏழை மக்களின் பரிதாபநிலை, சமுதாயத் தின் கவனத்திற்கு கொண்டு வர முயற்சி செய்தார். "பத்ம விபூஷன்" (இரண்டாவது உயர்ந்த மனித விருது) விருது பெற்ற 'மகா தேவி வர்மா' சமுதாயத்தில் பெண்களின் நிலையை வெளிப்படுத்தியுள்ளார். 'நிராலா' நவீன இந்தியாவை விழிப்பூட்டுவதில் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

## இப்பகுதிக்கான கேள்விகள் 7.2

1. நாட்டிய ஷாஸ்தராவை எழுதியவர் யார்?
2. வால்மிகி மற்றும் துளசிதாசின் இராமாயணத்தில் இராமன் கதாபாத்திரத்தின் வேறுபாடு யாது?
3. சூர் சாகரில், கிருஷ்ணாவின் வித்தியாசமான பங்கு எவ்வாறு இருந்தது?
4. எந்த புத்தகத்திலிருந்து நமது தேசிய கீதம் எடுக்கப்பட்டது?
5. ஏன் ஹிந்தி எழுத்தாளர்கள் ஒரு காரணத்திற்காகவே எழுதியுள்ளனர் என்பதை உணர்கிறோம்?

## 7.4 வங்காள, அஸ்ஸாமிய, ஒரிய இலக்கியங்கள்

ஹிந்திக்குப் பிறகு தனிச்சிறப்பு கொண்ட இலக்கியம் பெங்காலில் வளர்ச்சியடைந்தது. கல்கத்தாவிற்கு அருகில் செரம்பூர் என்னுமிடத்தில் 1800 ஆம் ஆண்டு 'பாப்டிஸ்ட் மிஷன் அச்சகம்' ஏற்படுத்தப்பட்டது. கிழக்கிந்திய கம்பெனி, இதே ஆண்டு 'போர்ட் வில்லியம்' கல்லூரியை ஏற்படுத்தினர். இது இந்திய சட்டம், பழக்க வழக்கங்கள், சமயம், மொழி, இலக்கியங்களை கம்பெனியின் இந்திய பணியாட்களுக்கு அவர்கள் திறமையாக வேலை செய்வதற்காக பயிற்சி அளித்தது.

பக்தி இயக்கத்தின் வளர்ச்சியும் சைதன்யாவின் இறைவனை துதிக்கும் பாடல்களும், பெங்காலி மொழியின் வளர்ச்சிக்கும், ஊக்கப்படுத்துவதாக இருந்தது. மங்கள காவியா என்ற வரிசைப்படுத்தி கூறப்பட்ட கவிதைகளும் இந்த காலத்தில் மிகவும் பிரபலமடைந்தன. அவர்கள் "சண்டி" போன்ற பெண் தெய்வங்களை வணங்குதல் பற்றி பிரச்சாரம் செய்தனர் புராண கடவுள்களான சிவா, விஷ்ணு போன்றவர்களை வீட்டிற்குரிய தெய்வங்களாக மாற்றினார்.

இது சம்மந்தமாக பெங்காலி இலக்கணம், ஆங்கில - பெங்காலி அகராதியை வெளியிட்டு, உரையாடல்களையும், கதைகளையும் எழுதிய வில்லியம்கோ என்பவரால் முக்கிய சிறப்பம்சங்கள் அடையப்பட்டு உள்ளது. குறிப்பாக ஒரு இலக்கியத்தின் வளர்ச்சிக்கு. இலக்கணமும், அகராதியும் மிகவும் முக்கியமானவையாகும். அவை, அவர்களுக்கு சரியான வாக்கியங்களை உருவாக்குவதற்கும் ஏற்ற பொருத்தமான வார்த்தைகளை சூழ்நிலை, கருத்திற்கு ஏற்ப கண்டுபிடிக்கவும், இந்த இலக்கண அகராதிகள் வழிகாட்டியாய் உதவின. ஆனால் மத போதகர்களால் நடத்தப்பட்ட அச்சகங்களின் நோக்கம் கிருஸ்தவ நம்பிக்கையை மக்களிடம் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று இருந்தது. ஆனால் உள்ளூர் மக்களின் அச்சகங்கள் கிருஸ்துவம் அல்லாத இலக்கியங்களை வளரச்செய்ய உதவின. ஏராளமான சிற்றேடுகள் சிறிய, பெரிய புத்தகங்களும் பத்திரிக்கைகளும் தயாரிக்கப்பட்டன. இருந்தாலும் கல்வி இந்த வேளையில் மெதுவாகப் பரவியது. ஆனால் 1835 ஆம் ஆண்டிற்கு பிறகு, மெக்காலே கீழ்திசை நாடுகளுடன் நடந்த போரில் வென்றவுடன் அது வேகமாக பரவியது. 1854இல் சர் சார்லஸ் வுட் கமிட்டி இந்தியாவிற்கு வந்தது. 1857இல் கல்கத்தா, மெட்ராஸ் மும்பை ஆகிய இடங்களில் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. கூடவே பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் பாடப் புத்தகங்களும், இலக்கியங்களும் உருவாக்கப்பட்டன, இருந்தாலும் ராஜா ராம் மோகன்ராய் பெங்காலியில் எழுதினார். தவிர ஆங்கிலம், பெங்காலி இலக்கியத்திற்கு தூண்டுகோலாக அமைந்தது. ஈஷ்வர் சந்திரா வித்யாசாகர் (1820-91) "அக்ஷை குமார் தத்தா (1820-86) ஆகிய இருவரும் இந்த ஆரம்ப காலத்திய எழுத்தாளர்கள் ஆவார். இவர்களுடன், பன்கிட் சந்திரா சட்டர்ஜி (1834-94), சரத் சந்திரா சட்டர்ஜி (1876-1938) ரா.சி.தத்தா குறிப்பிடத்தக்க வரலாற்று ஆசிரியர் உரைநடை எழுத்தாளர். அனைவரும் பெங்காலி இலக்கியத்தை உருவாக்குவதற்கு பங்களித்துள்ளனர். ஆனால் இந்தியா முழுவதிலும் மிகவும் செல்வாக்கு பெற்ற முக்கியமான பெயர் தான் 'ரவிந்திரநாத் தாகூர்' (1861-1841) நீண்ட கதைகள், நாடகம், சிறு கதைகள் இலக்கியத்தின் குறை நிறைகளை ஆயும் கலை, பாட்டு மட்டும் கட்டுரைகள் எல்லாமே அவர் பேனாவிலிருந்து ஊற்றாக வந்தது. அவர் தனது "கீதாஞ்சலி" க்காக 1913 ஆம் ஆண்டு நோபல் பரிசை வென்றார்.

இருந்தாலும் மேற்கத்திய கருத்துகளின் செல்வாக்கு வங்காளத்திலும் பின்பு இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் ஊடுருவியது என்ற சில விஷயங்கள் குறிப்பிடத்தக்கது. 1800 ஆம் ஆண்டு வரை ஏராளமான இலக்கியம் படைக்கப்பட்டு, பின்பு சமயம் அல்லது பெருந்தன்மை மிக்க இலக்கியத்தின் வரம்புக்குள் இருந்தது. மேற்கத்தியரின் செல்வாக்கு எழுத்தாளர்களால்

சாதாரண மனிதனுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. பாடங்கள் சாதாரணமானதாக இருந்தன. சில சமய இலக்கியங்களும் தயாரிக்கப்பட்டன. ஆனால் இது புதிதாக எதுவும் சொல்லப்படவில்லை.

19 ஆம் நூற்றாண்டின் இறுதி மற்றும் 20 ஆம் நூற்றாண்டின் முதல் பாதி வருடங்கள், புதிய பாடங்கள், தேச பக்தி ஆகியவற்றை கண்டது. இந்த புதிய போக்கில் இரண்டு விஷயங்கள் காணப்பட்டன. முதலாவது பழைய வரலாற்றின் மேல் கொண்ட பற்று, பண்பாடு ஆங்கிலேயர்களின் சுரண்டல் பற்றிய கூறுகளில் விழிப்புணர்வு, இரண்டாவது எக்காள ஒலி, இந்தியர்களை விழிப்புற செய்து, அந்நியர்களை விரட்டுவதற்காக, இரண்டுமே நயம்படபேசி நம்ப வைப்பது அல்லது படைக்குழுவினால் விரட்டுவது, இந்த புதிய போக்கை சுப்பிரமணி பாரதியார் தமிழிலும் மற்றும் "குவாசி நசருல் இஸ்லாம்ஞ பெங்காலிலும் வெளிப்படுத்தியுள்ளனர். இந்த இரண்டு எழுத்தாளர்களின் பங்களிப்பு, நாட்டுப்பற்று மென்னுணர்ச்சி ஆகியவை படிப்பவர்களிடம் ஏராளமாக இருந்தது. அவர்களின் கவிதைகள் இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டன.

அஸ்லாமியர்கள், பெங்காலியைப் போல அஸ்ஸாமியர்களும் பக்தி இயக்கத்திற்கு உடன் பட்டனர். அஸ்ஸாமில் வைணவத்தை அறிமுகப்படுத்திய ஷங்கர் தேவா, அஸ்ஸாமி கவிதைகளின் வளர்ச்சிக்கு உதவினார். புராணங்கள் கூட அஸ்ஸாமிய மொழியல் மொழி பெயர்க்கப்பட்டது.

முந்தைய அஸ்ஸாமிய இலக்கியம் புரன்ஜி (அவை காலவரிசை) களைக் கொண்டது. சங்கர் தேவ் விட்டுச் சென்ற பல பக்திப் பாடல்களை மக்கள் மிகுந்த பேரானந்தத்துடன் பாடினார்கள். ஆனால் 1827 ஆம் ஆண்டிற்கு பின் அஸ்ஸாமிய இலக்கியங்களை உருவாக்குவதில் தான் தங்களுடைய நாட்டத்தை காண்பித்தார்கள். 'லட்சுமிநாத் பெஸ்பரூவர்', 'பத்ம நாப கோஹைன் பருவா' ஆகிய இரண்டு பெயர்களை மறக்க இயலாது. ஓரிசாவில் போற்றத்தக்க இரண்டு பெயர்களான 'பக்கீர் மோஷன் சேனாபதி', 'ராதா நாத் ராய்' ஒரியா இலக்கியத்தின் வரலாற்றில் இவர்களுடைய எழுத்துகள் அதிகமானவர்களின் கவனத்தை பெற தகுதியானது.

உபேந்திர பன்ஜாவின் (1670-1720) இரு நூல்கள் மிகவும் முக்கியமானவை, அவை ஒரியா இலக்கியத்தை புதிய காலத்திற்கு நடத்திச் சென்றன. ஓரிசாவில் 'சாரலதா சாவின்' நூல்களை ஒரிய இலக்கியத்தின் முதல் நூல் என கணிக்கப்படுகிறது.

## இப்பகுதிக்கான கேள்விகள் 7.3

1. எங்கே எப்பொழுது பாப்டிஸ்ட் அச்சகம் ஏற்படுத்தப்பட்டது?
2. எப்பொழுது "உட்ஸ் குழு" இந்தியாவிற்கு வந்தது?
3. மூன்று பல்கலைக் கழகங்கள் எங்கே எப்பொழுது தொடங்கப்பட்டது?
4. 1913இல் எந்தப் பணிக்காக ரவிந்திரநாத் தாகூருக்கு நோபல் பரிசு கிடைத்து?
5. அஸ்ஸாமி கவிதையின் வளர்ச்சிக்கு எவ்வாறு "ஷான் கரட்வா" உதவினார்?

## 7.5 பஞ்சாபி, ராஜஸ்தானி இலக்கிங்கள்

பஞ்சாபி என்பது பல்வேறு வடிவங்களைக் கொண்ட ஒரு மொழி. இதை இரண்டு மொழி எழுத்து படிவத்தில் "குருமுகியிலும் பாரசீகத்திலும் எழுதப்பட்டுள்ளது. 9 ஆம் நூற்றாண்டின் இறுதி வரை "ஆதி கிரந்தம்ஞ என்ற சீக்கியர்களின் புனித நூலுக்கு வரம்பு கொடுக்கப்பட்டது. கிரந்தியர்களைக் குறைந்த அளவிலான மக்கள் மட்டும் அந்த எழுத்துப் படிவத்தைக் கற்க



குறிப்புகள்

முயற்சித்தார்கள். குருதுவாராவில் புனித கிரந்தை உச்சரித்தார்கள்.இருந்தாலும் மொழியில் இலக்கியத்தின் குறைபாடு இல்லை. குருநானக் தான் பஞ்சாபி மொழியின் முதல் கவிஞராவார். சில சம காலத்திய கவிஞர்கள், பெரும்பாலும் சூபி, முனிவர்கள் இந்த மொழியில் தான் வழக்கமாகப் பாடுவார்கள். இந்த சூபி முனிவர்கள் ஒரு வேளை கவிதை எழுதுவதாக இருந்தால் பாரசீக எழுத்து வடிவத்தை உபயோகித்தார்கள். இந்த பெயர் பட்டியலில் முதலாவதாக உள்ளவர் "பரித்ஞ. இவருடைய கவிதைகள் "ஆதி கிரந்தில் இடம் பெற்றுள்ளன. ஆதி கிரந்தத்தில் அடுத்த 4 குருக்களின் கவிதைகளும் அடங்கியுள்ளன. இந்த எல்லா இலக்கியமும், 15 ஆம் 16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். பிற்காலத்தில் குருக்களில் 9 ஆவது குரு, குருதேஜ் பகதூரின் கவிதைகளும் ஆதி கிரந்ததிற்கு பங்களித்துள்ளன. 10ஆம் குரு, குரு கோபிந் சிங், பிஹாரில் உள்ள பாட்னாவில் கல்வி கற்றார். அங்கு அவர் பாரசீக மற்றும் சமஸ்கிருத மொழிகளைக் கற்றார். அவர் பஞ்சாபி மொழியில் இரண்டு "சவையா்ஞ யை தொகுத்துள்ளார். ஆனால் இவை ஆதி கிரந்தத்தின் ஒரு பகுதியாக அமையவில்லை.

ஆனால் இது ஹீர் ரன்ஜ்கா "சகி", "பண்ணு", "சோனி", "மகிவால்", ஆகியோரின் காதல் கதைகளாகும். இவை முந்தைய நாள்களிலேயே இந்த மொழிக்கு ஆய்வுப் பொருளை கொடுத்துள்ளன. "புரன் பகத்" என்ற கதை கூட சில கவிஞர் களின் கருணையைப் பெற்றது. சில தெரிந்த, சில தெரியாத கவிஞர்களால் எழுதப்பட்ட அற்புதமான கவிதைகள் நம்மிடையே வந்துள்ளன. இந்த பாடல்களை கடந்த 2 அல்லது 3 நூற்றாண்டுகளாக உள்ளூர் பாடர்களால் பாடப்படுகிறது. பல கவிதை கதைகள், உள்ளூர் கவிஞர்களால் தொகுக்கப்பட்டுள்ளது. இந்த நாடோடிக் கதைகள் பத்திரப் படுத்தப்பட்டுள்ளன. "வாரிஸ்சா வுடைய "ஹீர்ஞ தான் மிகவும் முக்கியமானது. முந்தைய நூல்களில் அது மிகவும் பிரபலமானது. இது ஒரு சிறப்பம்சமாக பஞ்சாபி கவிதையில் உள்ளது. இதே போன்றுதான் "புல்லிஷா" என்ற சூபி முனிவரும் பிரபலமடைந்தார். அவர் ஏராளாமான பாட்டுக்களைவிட்டு சென்றிருக்கிறார். இவருடைய தொகுப்புகளில் மிகவும் பிரபலமான ஒன்றை "கபி" என்று அழைக்கப்படுகிறது. இது தரமான இசை வடிவத்தில் பாடப்பட்டது. மக்களால் பெரும் ஆர்வத்துடன் இந்த "கபிஸ்" பாடப்பட்டது.

20ஆம் நூற்றாண்டில் பஞ்சாபி மொழி தனது சொந்த நிலைக்கு வந்தது. "பாய்விர்சிங்" என்பவர் "ராணா சுரத் சிங்" என்ற காவியத்தை தொகுத்து உள்ளார். புரன்சிங், Dr. மோகன் சிங் ஆகியவர்கள் சிறந்த பரிச்சயமான எழுத்தாளர்கள். கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், நீண்ட கதைகள், நிறை குறைகளை ஆராயும் கலை, மற்ற எழுத்து வடிவங்கள் எல்லாமே பஞ்சாபி இலக்கியக் காட்சிகளை அலங்கரித்தன.

ஹிந்தியின் கிளை மொழியாகிய ராஜஸ்தானி அதனுடைய உண்மையான பாகத்தில் செயல்பட்டது. கவிஞர்கள் (இடம்விட்டு இடம் பயணம் செய்கிற புலவர்கள்) ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு சென்று பொழுபோக்குகள், கதையில் வரும் கதாநாயகர்களை வாழும் படி செய்தல், காதல் பற்றிய கதையை உள்ளடக்கமாகக் கொண்ட பாட்டு அல்லது கவிதையிலிருந்து, "க்னல்டோட்ஞ, ராஜஸ்தானின் வீர திர கதைகள், வரலாற்றுப் பதிவேடுகள் மற்றும் பண்டைக் காலத்தைச் சார்ந்த கட்டிடம் அல்லது பொருட்களை சேகரித்தார்கள். ஆனால் மீரா பாயின் பக்தி பாடல்கள் மொழியின் வரலாறு மற்றும் பக்தி இசையும் பெருமை வாய்ந்த இடத்தைப் பிடித்துள்ளன. மீராபாய் இறைவன் மீது (கடவுள் கிருஷ்ணா) கொண்ட காதல், சில சமயம் தீவிரமாகி, வரம்பு கடந்து இந்த சாதாரணமான உலகை பாடுபவரின் நாடாக மாற்றுகிறது.

பக்தி இயக்கத்தின் முன்னேற்றம் ஹிந்தி, குஜாரத்தி, மராத்தி, கன்னடா, தமிழ், தெலுங்கு போன்ற வட்டார மொழிகள் எழுச்சி பெறுவதற்கு வழி காட்டியது.





## 7.6 குஜராத்தி இலக்கியம்

14ஆம் மற்றும் 15ஆம் நூற்றாண்டுகளில் முந்தைய குஜராத்தி இலக்கியம் கிடைக்கக் கூடிய பக்தி பாடல்களாக இருந்தது. இன்று வரை குஜராத்தி மிகவும் பிரபலமான பழங்கால பாரம்பரியத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதைப் பொறுத்த வரை ''நர்சி மேத்தாவின்'' பெயர் தான் முதன் முதலாக உள்ளது. குஜராத்தி மக்கள் தங்களுடைய கிராமிய நடனத்தில் பக்தி பாடல் களையும் இணைத்து அவர்களின் சமய நெறிகளை அடிக்கடி கொண்டாட்டங்களில் வெளிப்படுத்தினார்கள். ''நர்மதின்'' கவிதை குஜராத்தி இலக்கியத்திற்கு ஒரு தூண்டுதலாக அமைந்தது. ''கோவர்தன ராம்'' என்பவரால் எழுதப்பட்ட ''சரஸ்வதி சந்திரா'' என்ற கதை தரமானதாகவும் மற்ற எழுத்தாளர்களுக்கு ஒரு தூண்டு கோலாகவும் அமைந்தது. ஆனால் அதை மறக்க முடியாத பெயர் என்னவென்றால் அநேகமாக கே.ம.முனிஷி தான். அவர் ஒரு கதை எழுதுபவர், கட்டுரை எழுதுபவர், வரலாற்று ஆசிரியர். அவர் ஏராளமான வரலாற்று கதைகளை விட்டுச் சென்றுள்ளார். இந்த புத்தகங்களில் தனது திறமையை வெளிப்படுத்துவதற்காக உண்மை நிகழ்ச்சியுடன் கட்டுக் கதைகளை சேர்க்கிறார். இவருடைய கதைகளில் ஒரு உன்னதமான கதைதான் ''பிரிதிவி வல்லபா'' என்பது. ''நரசி மேத்தா'' வைப் பற்றி சிறப்பாக குறிப்பிடுகையில் அவரது பாடல்கள் கிருஷ்ணாவைப் போற்றியதால் மட்டும் அவர் புகழடையவில்லை. ஆனால் அவரால் குஜராத்தி மொழி தான் மிகவும் பிரபலமானது.

## 7.7 சிந்தி இலக்கியம்

சிந்து என்பது சூபிக்களின் முக்கியமான மையங்களில் ஒன்று. சூபிக்கள், கன் காசை பல்வேறு இடங்களில் ஏற்படுத்தினார்கள். சுபி பாடகர்கள் தங்களுடைய பக்தி பாடல்களினால், சுபி மொழியைப் பிரபலப்படுத்தினார்கள். சிந்தி இலக்கியத்தை உருவாக்கியதற்கான பாராட்டு மிர்சாகலிஷ், திவான் கௌரமால் ஆகியவர்களைச் சாரும்.

## 7.8 மராத்தி இலக்கியம்

மகாராட்டிரா ஒரு பீடபூமியால் சூழப்பட்டு அங்கே ஏராளமான உள்ளூர் கிளை மொழிகள் பயன்படுத்தப்பட்டன. இத்தகைய கிளை மொழியிலிருந்து மராத்திய மொழி வளர்ந்தது. போர்ச்சுக்கீசிய மத போதகர்கள் விவிலியத்தைப் போதிப்பதற்காக மராத்திய மொழியை பயன்படுத்த தொடங்கினர்கள்.

முந்தைய மராத்திய கவிதைகளும் உரைநடைகளும் பதிமூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த நானேஷ்வர் முனிவரால் எழுதப்பட்டன. அவர் பகவத் கீதையைப் பற்றிய நீண்ட கருத்துரையை எழுதியுள்ளார். அவர் தான் மஹாராட்டிரத்தில் 'கிர்டன்' பாரம்பரியத்தை தொடங்கினார். இவரை நாம் - தேவ் (1270 - 1350) கோரா, சேனா, ஜனாபால் ஆகியவர்களால் தொடரப்பட்டது. இவர்கள் அனைவரும் மராத்திய மொழியைப் பாடி பிரபல மாக்கினர். இன்றும் இவருடைய பாடல்கள் வெர்கரி யாத்திரிகர்களால், அவர்கள் பந்தர்பூர் யாத்திரைக்கு செல்லும் போது பாடப்படுகின்றன. ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகள் கழித்து, ஏக்நாத் (1533 - 99) என்பவர் மஹாராட்டித்திற்கு வந்தார். அவர் இராமாயணத்துக்கும் பகவத் புராணங்களுக்கு கருத்துரை எழுதினார். இவருடைய பாடல்கள் மகாராட்டிரம் முழுவதும் மிகவும் புகழ்பெற்றன,

பிறகு துக்காராம் ( 1598 - 1650) வந்தார். இவர்தான், பக்தி கவிஞர்களுள் சிறந்தவர் என கருதப்படுகிறார். சிவாஜியின் குரு ராமதாஸ் ( 1608 - 81) என்பவர் தான், துதிப் பாடல்கள் எழுதியவர்களில் கடைசியானவர். இவர் ராமனின் பக்தர், அவர் சிவாஜிக்கு ஊக்கமளித்தார். மராத்திய மொழியின் தீடீர் வளர்ச்சி 19ஆம் நூற்றாண்டின் முடிவில் காணப்பட்டது. தேசீய

இயக்கம், மராத்தி உரைநடையை புகழ் பெற்றதாகவும் ஆக்கியது. பாலகங்காதர திலகர் ( 1857 - 1920) அவருடைய பத்திரிகையான 'கேசரி' யை மராத்தியில் தொடங்கினார். இது மராத்தியின் வளர்ச்சிக்கு உதவியது. ஆனால் கேசவ் சூட், வி.சி. சிப்லுன்கர் ஆகியோரின் பங்கு குறைந்தது அல்ல. ஹரி நாராயன் அப்ட், அங்கர் கார் முதலானோர் எழுதிய கதைகள் மிகவும் பிரபலமாயின. இந்த அனைத்து உரைநடை எழுத்தாளர்களும் மராத்திய இலக்கிய வளர்ச்சிக்கு பெரிதும் பங்களித்தனர். எழுச்சியூட்டக் கூடிய கவிதைகளை 'எச்.ஜி. சங்கோக்கர்' என்ற பெயரை அவர் எழுதிய எழுச்சியூட்டும் கவிதைகளால் "ஞாபகப்படுத்துகின்றன. மேலும் எம். ஜி. ரானடே, கே.டி. டெலாங், ஜி.டி. மதோங்கர் (கவிஞர் மற்றும் கதை ஆசிரியர்) ஆகியவர்களும் முக்கியத்துவத்திற்கு குறைந்தவர்கள் அல்ல.

## 7.9 காஷ்மீரி இலக்கியம்

'கல்கனா' ராஜதரங்கினியை சமஸ்கிருத மொழியில் எழுதியபொழுது, காஷ்மீர் இலக்கியம் முக்கியத்துவம் பெற்றது. ஆனால் இது மேனிலை மக்களின் மொழியாக இருந்தது. காஷ்மீரி, உள்ளூர் மக்களுக்கு கிளை மொழியாக இருந்தது. இங்கும் பக்தி இயக்கம் தன்னுடைய பங்கை வெளிப்படுத்தியது. அநேகமாக 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த "லால் டெட்" என்பவர் தான் காஷ்மீர் மொழியில் முதன் முதலாகப் பாடியவர். அவர் ஒரு சைவ சமய மெய்ஞானி. இந்தபகுதியில் இஸ்லாம் பரவிய பின்பு, சுபிக்களின் தாக்கமும் வெளிப்பட்டது. 'கபா கட்டுன், மஜிர், ஜின்டாகஷல், நூர்தின்' ஆகியோரும் 'நுண்ட்ரிஷி' அக்தர் மொய்துடின் சுபிகுலாம் முகமது, தினா நாத் நஷம் என்பவர்களும் பக்தி கவிதைகளை காஷ்மீரி மொழியில் எழுதினார்கள். இவர்கள் காஷ்மீரி இலக்கியத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் பங்களித்தனர்.

19ஆம் நூற்றாண்டின் இறுதிவரை மேற்கத்தியரின் செல்வாக்கு காஷ்மீரை அடையவில்லை. 1864 இல் முதல் சீக்கியப் போருக்குப்பின், ஜம்முவைச் சேர்ந்த டோக்ராக்கள் அங்கு ஆட்சியாளர்களாக மாறினார்கள். டோக்ராக்கள் காஷ்மீரியை விட 'டோக்ரி' மொழியின் மீது மிகுந்த ஆர்வம் காட்டினர். அங்கு பள்ளி அல்லது பயிற்று வித்தலும் அரிதாக இருந்தது, அங்கு பரவலாக வறுமையான மற்றும் பின்தங்கிய பொருளாதாரமாக இருந்தது. இவையெல்லாம் காஷ்மீரில் நல்ல இலக்கியம் தோன்றுவதற்கு பற்றாக்குறையாக இருந்தது.

நவீன கால இந்திய மொழிகளின் வரிசையில் அதிகமான மொழிகள் இருந்தாலும், இந்திய அரசியலைமைப்பில் மொத்தம் 15 மொழிகளே தேசீய மொழிகளாக இருந்தன. அவை அஸ்ஸாமி, பெங்காலி, குஜராத்தி, இந்தி, காஷ்மீரி, மராத்தி, ஒரியா, பஞ்சாபி, சமஸ்கிருதம், சிந்து, உருது, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் இத்துடன் அவை நேப்பாளி, மணிப்புரி, கொங்கணி ஆகிய மூன்று மொழிகள் இப்பொழுது அந்த வரிசையில் சேர்க்கப்பட்டுள்ளன.

### இப்பகுதிக்கான கேள்விகள் 7.4

1. எந்த இந்திய மொழியை குருமுகி மற்றும் பாரசீக எழுத்து வடிவத்தில் எழுதப்பட்டது?
2. பஞ்சாபின் இரண்டு காதல் கதைகளின் பெயர்களை மட்டும் கூறுக?
3. புல்லிஷாவின் தொகுப்புக்களில் பிரபலமானது எது?
4. கோவர்த்தனராமின் கதையின் பெயரைக் கூறுக?
5. 13ஆம் நூற்றாண்டில் கிரிடன் சம்பிரதாயத்தை மஹாராட்டித்தில் தொடங்கியவர் யார்?
6. எந்தெந்த காரணங்களினால் காஷ்மீரி இலக்கியம் ஒரு நல்ல இலக்கியமாக்கப் படவில்லை?

## 7.10 கிறிஸ்தவ போதகர்களின் பங்கு

ஐரோப்பியர்கள் இந்தியாவிற்கு வருகை தந்ததால், பல்வேறு மொழிகளான ஆங்கிலம், பிரெஞ்சு, டச்சு, போர்ச்சுக்கீசிய மொழிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. பல புதிய சொற்களை அதன் சொல் தொகுதியில் சேர்த்ததால், இவை இந்திய மொழிகளை மிகப் பெரிய செல்வாக்கை பெறச் செய்தன.

கிருஸ்துவ மத போதகர்களின், இந்திய இலக்கியத்தின் முன்னேற்றத்திற்கான பங்களிப்பில் தனிச்சிறப்பு குறையாமல் இருந்தது. முதன் முதலில் அவர்கள் அகராதிகளையும் இலக்கணத்தையும் பல உள்ளூர் மொழிகளில் வெளியிட்டனர். அவர்களால் எழுதப்பட்ட புத்தகம் ஐரோப்பாவிலிருந்து புதிதாக வந்து சேர்ந்த மதகுருமார்களைப் பற்றியதாகும். இந்த புத்தகங்கள் உள்ளூர் எழுத்தாளர்களுக்கு எவ்வளவு தூரம் உதவினதோ, அதே போன்று கிறிஸ்தவ போதர்களுக்கும் உதவியது. சரியான சொற்களை கண்டுபிடிக்க அல்லது ஒரு வேளை, சொல், இலக்கணத்தை பொருத்து சரியா என்பதை பார்க்கவும் அவர்கள் எளிதாக அகராதியை புரட்டினார்கள்.

இரண்டாவது நிகழ்வு என்னவென்றால் கல்லில் செதுக்கப்பட்ட எழுத்து அச்சகங்களின் பங்காகும். இவை 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டன. வெளிநாட்டவர்கள் இந்த அச்சகத்தை, இலக்கியத்தை உள்ளூர் மொழியில் அச்சடிப் பதற்காவும், புதிதாக வந்தவர்கள் அல்லது மதம் மாறினவர்களும் பயன்படுவதற்காகவும் ஏற்படுத்தினார்கள். ஆகையால் இலக்கிய வளர்ச்சிக்கு, அச்சகத்தின் பங்கை புறக்கணிக்க முடியாது. மூன்றாவது நிகழ்வு என்னவென்றால் பள்ளிகள், கல்லூரிகள் மதபோதகர்களால் ஏற்படுத்தப்பட்டன. இங்கு ஆங்கிலத்தை தவிர மத போதகர்கள் உள்ளூர் போதகர்கள் மொழியையும் கற்பித்தனர். ஒருவேளை அவர்களுடைய நோக்கம் கிறிஸ்தவ சமயத்தை பரப்புவதாக இருக்கலாம். ஆனால் யாரெல்லாம் அவர்களுடைய இலக்கியத்தைப் பயில விருப்பப்பட்டார்களோ, அவர்களையும் நன்கு கற்றுத் தேர்ந்த ஒரு பிரிவினராக உருவாக்கினார்கள். அதனால் இந்திய மொழிகளின் வரலாறு பறறியும் இலக்கியத்தைப் பற்றி எழுதும் பொழுது, மத போதகர்களின் பங்கை புறக்கணிக்க இயலாது.

### இந்தியாவில் உள்ள முக்கியமாக ஆங்கில இலக்கிய எழுத்தாளர்கள்

இந்தியாவில் ஏராளமான ஆங்கில இலக்கிய எழுத்தாளர்கள் இருந்தனர். 1835-ம் ஆண்டிற்கு பிறகு, ஆங்கிலம் போதனா மொழியாக மாறின. பிறகு, இந்தியர்கள் எழுதும் பணியை ஆங்கிலத்தில் ஆரம்பித்தனர். பல இந்திய எழுத்தாளர்கள் அவர்களுடைய இலக்கியத்தை ஆங்கில மொழியில் தொகுத்தனர். சிலர் அவர்களுடைய ஆர்வத்தினை கவிதைத் துறையிலும் அதே சமயம் வேறு சிலர், அவர்களின் மிகுதியான ஆர்வத்தை உரைநடை எழுதுவதிலும் காட்டினார்கள். மைக்கேல், மது சுதன் தட்டா, தாராடட்தா, சரோஜினி நாயுடு இரவீந்திர நாத் தாகூர், ஆகியோர் ஆங்கில கவிதைத் துறைக்கு மிகவும் முக்கிய பங்களித்தனர். "சுரேந்திர நாத் பானர்ஜிகு பிரோஸ் மேத்தா மற்றும் "ஜவஹர்லால் நேரு, ஆங்கில உரைநடையில் அதிக ஆர்வம் காட்டினர்.

## நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- ஹிந்தி ஏராளமான மக்களால் பேசப்பட்டது.
- மொகலாயர்கள் காலத்தில் உருதும் பாரசீக மொழியும் பிரபலமாயின. துருக்கிய குடியிருப்புகளாலும் உள்ளூர் மக்களுக்குமிடையே இருந்த பேச்சுத் தொடர்பால், உருது மொழி உருவானது. ''அபுல் பாசல்ஞ , 'சந்திராபான்', படாயுனி ஆகியோர், முகலாயர் காலத்தில் புகழ் பெற்ற எழுத்தாளர்கள் ஆவர்.
- ஹிந்தி இலக்கியம் மிகச் சிறப்புடைய சமஸ்கிருதத்தை வழிக்காட்டியாக கொண்டது. பக்திக் கவிதைகள் ஹிந்தி இலக்கியத்தில் ஒரு மைல்கல் ஆகும். கபீர், துளசிதாஸ் சூர்தாஸ் போன்றவர்கள் இந்தி இலக்கியத்திற்கு வழிகாட்டும் ஒளியாகத் திகழ்ந்தனர்.
- 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஹிந்தி உரைநடை புழக்கத்திற்கு வந்தது.
- ஹிந்தி இலக்கியத்திற்கு பிறகு, பெங்காலி செல்வாக்குப் பெற்ற இலக்கியமாகும். பெங்காலி இலக்கியத்தை உருவாக்குவதில் ரவீந்தர நாத் தாகூர், பன்கிம் சந்திரா சட்டர்ஜி, ஷரத் சந்திரா சட்டர்ஜி ஆகியோர் பங்களித்தனர். அஸ்ஸாமிய இலக்கியம் புரான்ஜிக்களை உள்ளடக்கியது. அதே போல் தான் ஒரியா மொழியிலும் உள்ளது.
- 19ஆம் நூற்றாண்டின் இறுதி வரை, குருமுகி மொழி ஆதி கிரந்தத்தின் வரையறைக்குள் இருந்தது. இது ஹீர் ரன்ஜா வின் காதல் கதைகள். இவை இந்த மொழிக்கு ஒரு ஆய்வுப் பொருளைத் தந்தது. ராஜஸ்தானி மொழி, இலக்கியத்திற்கு மீராபாயின் பக்திப்பாடலே மரியாதைக்குரிய இடத்தை கொடுத்தது.
- நாளடைவில் குஜராத்தி, சிந்தி, மராத்தி, காஷ்மீரி மொழிகளும் அவர்களுடைய இலக்கியத்தை முன்னேறச் செய்தன.
- பல இந்திய எழுத்தாளர்கள் அவர்களுடைய எழுத்துகளை ஆங்கிலத்திலேயே தொகுத்தார்கள்.

## பயிற்சிக்கான கேள்விகள்

1. இந்தியாவில் கிறிஸ்துவ மத போதகர்களின் பங்களிப்பு என்ன?
2. ஹிந்தி மொழியின் முன்னேற்றத்தை சுருக்கமாக விவரி?
3. மத்திய கால இந்தியாவில் பாரசீக மொழயின் பங்கு என்ன?
4. இந்திய சமுதாயத்தை உருவாக்குவதில் இந்திய மொழிகளின் இலக்கியத்தின் பங்களிப்பை கண்டறிக.





## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 7.1

1. பிரஜ்பாஷா, அவதி, போஜ்புரி, ராஜஸ்தானி, கடிபோலி.
2. அவதி
3. துருக்கி குடியிருப்புகள், உள்ளூர் வாசிகளிடம் கொண்ட தொடர்பால் உருதுமொழி பிறந்தது.
4. பாகிஸ்தான்
5. தக்ஷினி அல்லது டெக்கானி (தெற்கு)

### கேள்விகளுக்கான பதில்கள் 7.2

1. பாரத
2. துளசிதாஸ் இராமனைக் கடவுளாக வருணிக்கிறார். வால்மீகி அவரை மனிதனாக வருணிக்கிறார்.
3. மனம் போன போக்கில் சிறுகுறும்புகள் செய்யும் இளைஞனாக, கோபியர்களுடன் களியாட்டத்தில் ஈடுபடும் வாலிபனாக கிருஷ்ணனைக் கூறுகிறார்.
4. ஆனந்த் மத்
5. சுவாமி தயானந்த் இந்து சமுதாயத்தை சீர் திருத்த எழுதினார். முன்ஷி பிரேம் சந்த் எழைகளின் பரிதாபகரமான வாழ்வைப் பற்றி எழுதினார். வர்மா பெண்களின் இடர்பாடான நிலையைப் பற்றி எழுதியுள்ளார்.

### கேள்விகளுக்கான பதில்கள் 7.3

1. 1800இல் கல்கத்தா அருகில் உள்ள சீரம்பூர்
2. 1854
3. 1857 ஆம் ஆண்டு கல்கத்தா, மெட்ராஸ், பாம்பே
4. கீதாஞ்சலி
5. அவர் அஸ்ஸாமில் வைஷ்ணவத்தை அறிமுகப்படுத்தினார்.

### கேள்விகளுக்கான பதில்கள் 7.4

1. பஞ்சாபி
2. ஹிர் , ரன்ஞ்சா , சோஹனி , மரியால், சசி, பன்னு
3. க.்.பி
4. சரஸ்வதி சந்திரா
5. ஞானேஸ்வர் முனிவர்
6. வறுமை. பொருளாதாரப் பின்னடைவு, டோக்ரியின் பயன்பாடு

# அலகு - IV

## சமயமும் தத்துவமும்


8. பண்டைய இந்தியாவில் சமயமும் தத்துவமும்

9. இடைக்கால இந்தியாவில் சமயமும் தத்துவமும்

10. நவீன காலத்தின் சமய சீர்திருத்த இயக்கங்கள்

# 8

# பண்டைய இந்தியாவில் சமயமும் தத்துவமும்

நவம்பர், டிசம்பர் மாதங்கள் ஆரம்பத்திலேயே கடைத்தெருக்களை புத்தம் புது நாள்காட்டிகள் (Calendars) அலங்கரிக்கத் தொடங்கிவிடுகின்றன. எண்களும் எழுத்துகளும் பல வண்ணங்களில் பளிச்சிடுகின்றன. சில நாள்காட்டிகளில் அழகிய ஓவியங்கள் காணப்படுகின்றன. நாள்காட்டிகளில் பல்வேறு விடுமுறைகளைப் பற்றிய விவரங்களும் வெளியிடப்படுகின்றன. நீங்களும் ஆர்வத்துடன் அந்த நாள்களை கணக்கிட்டு இன்புறுகிறீர்கள். சமயம் சார்ந்த திருவிழாக்கள், பண்டிகைகள் தேசிய விழாக்கள் என பாரத நாட்டில் விழாக்கள் பலதரப்பட்டவை. இவ்விழாக் கொண்டாட்டங்களில் சாலை ஊர்வலங்கள், தேரோட்டம் பல்சுவை உணவு வகைகள், தின்பண்டங்கள் பரிசுப் பொருட்கள் மற்றவருக்கு வழங்குதல், வாழ்த்துகள் தெரிவித்தல், வாழ்த்து, அட்டைகள் அனுப்புதல் (தற்காலத்தில் மின்னஞ்சல் மூலம் வாழ்த்து அனுப்புதல்) என நாடு முழுவதும் விழாக்கோலம் பூண்டிருப்பதைக் காணலாம். ஆம், பாரதநாடு மக்கள் மகிழ்வுடன் உணர்வு பூர்வாக வாழ உகந்த நாடாகும். தொன்றுதொட்டு சமயங்களும் சமயக்கோட்பாடுகளும் மக்களின் வாழ்வியல் மாற்றங்களில் இன்றியமையாத பங்கு வகித்துவந்துள்ளன. மக்களது முன்னேற்றத்தில் காலமாற்றங்களுக்கிணங்க சமயங்கள் எவ்வாறு வளர்ந்துள்ளன என்பதை அறிய வேண்டும். சமயக் கோட்பாடுகள் சமயங்கள் இரண்டும் ஒன்டொன்று பின்னிப்பிணைந்தே வளர்ந்துள்ளன. எனவே மக்களின் சிந்தனையும், வாழ்வியலும் அவற்றை சார்ந்தே வளர்ந்துள்ளன. இப்பாடத்தில் பண்டைய கால சமயம், சமயம் சார்ந்த கோட்பாடுகள், தத்துவங்கள் பற்றி ஆராய்வோம்.

## நோக்கங்கள்

இந்த பாடத்தை படித்த பிறகு, உங்களால்

- சமயம் என்பதன் பொருளை விவரிக்க
- பண்டைய இந்தியாவில் பல்வேறு சமய இலக்கியங்களின் சிறப்பியல்புகளைக் கண்டறிய
- வேத தத்துவங்களின் ஆறு மரபுக் குழுக்களின் கருத்துக்களை விவரிக்க
- சார்வகா தனிமரபுக்குழுவினால் பங்கெடுக்கப்பட்ட செயல்முறைகளை ஆராய
- ஜைன சமயத்தின் உண்மைக் கோட்பாடுகளை விவரிக்க
- புத்த தத்துவங்களின் பங்களிப்பை ஆராய முடியும்.

## 8.1 சமயம்

சமயம் அறிவியலின் ஆன்மா ஒழுக்க நெறி, அறிவியல் சமயத்தின் அடிப்படையில் அமைகின்றது. பழங்காலம் தொட்டு சமயம் இந்திய மக்களின் வாழ்வில் ஒரு முக்கிய அங்கமாக விளங்கியுள்ளது. சமயத்தை சார்ந்தவர்கள் மூலம் பல்வேறு வடிவங்கள் பெற்று வந்துள்ளது. சமயம் பற்றியக் கருத்துகள் எண்ணங்கள் பின்பற்றிய முறைகள் பிரிவினருக்கேற்ப மாறுபட்டு வெவ்வேறு சமயங்களாகவே மாற்றத் தொடங்கின. சமயங்கள் இந்தியாவில் நிலையான கோட்பாடுகளுடன் இல்லாமல் உட்பிரிவுகளின் ஆதிக்கத்திற் கிணங்க மாறுபட்டே வந்துள்ளன.

> இந்தியாவின் அனைத்து வேதாந்தங்களும் என்றும் எப்பொழும் எங்கும் உண்மை, சத்தியத்தை நோக்கிச் செல்லும் வகையிலேயே அமைந்துள்ளன. அணுகுமுறை தர்க்க சாஸ்திரம் வேறுபட்டிருந்தாலும் நோக்கம் ஒன்றே சத்தியத்தை நோக்கி பயணித்தால். சகிப்புத்தன்மை, உலகப் பொதுவுடைமை ஆகிய கருத்துகளை கற்றுத்தரும்.
>
> "ஒரு சமயத்தை சார்ந்தவன் என்பதில் நான் பெருமை அடைகிறேன். நாங்கள் பூரணச் சகிப்புத்தன்மையுடன் இவ்வுலகத்து அனைத்து சமயங்களின் கோட்பாடுகளின் உண்மைகளையும் மதிக்கிறோம்".
>
> 1893 ஆம் ஆண்டு சிகாகோ நகரில் நடைபெற்ற உலக சமயப்பேரவையில் சுவாமி விவேகானந்தர் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து.

இந்தியாவில் ஆன்மீகம் சமயம் சார்ந்த பரம்பரை பழக்க வழக்கங்களும் அக்கால வேதாந்தக் கருத்துக்களும் வேரூன்றியிருந்தது. அக்கால வாழ்வுக்கும் வாழ்க்கைப் போராட்டத்தைப் பற்றிய சிந்தனைகளுக்கே சமயமும் ஆன்மீகமும் உதவின. இந்திய "ஞானிகள் ரிஷிகள் அல்லது ஜியர்கள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் புலன்களையும் மனதையும் அடக்கும் யோக முறைகளை வளர்த்தார்கள். இதன் மூலமாக மனதின் மனசாட்சியில் ஆழமாக சென்று, மனித மனத்தின் இயல்பையும் பிரபஞ்சத்தின் இயல்பையும் கண்டுபிடிக்கமுடிந்தது.

மனிதனின் பண்பு என்பது அவனுடைய உடல் அல்லது மனம் அல்ல, இவை எப்பொழுதும் மாறிக் கொண்டே இருக்கும். அழியக் கூடியது, ஆனால் ஆன்மா, அழிவற்றது, பரிசுத்தமானது என "ஞானிகள் கண்டறிந்தனர். அவற்றை 'ஆத்மா' என்று அழைத்தனர்.

மனிதனின் அறிவு வளர்ச்சிக்கும் இன்பத்திற்கும் சக்திக்கும் ஆத்மா தான் மூல காரணம். ஓவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கும் ஆத்மா பரமாத்மாவாகிய இறைவனின் பகுதியே அதுவே பிரம்மம். அந்த பிரம்மத்தை அடைவதே வாழ்வியல் தத்துவம். பந்த பாசங்களால் ஏற்படும் உணர்வுகள் அனைத்திற்கும் அழியக் கூடிய உடலே காரணம் என்ற இயற்கை நியதியை உணர வேண்டும். ஆத்மா அழிவதில்லை. இந்த உண்மையை உணராததால் தான் இப்பிறவியல் ஏற்படும் துன்பங்களைக் கண்டு வருந்துகிறோம். ஆத்மாவுக்கும் பரமாத்மாவிற்கும் இடையே உள்ள தூய உணர்வை புரிந்து கொண்டால் பிறவி எடுத்துள்ள இவ்வுடலுக்கு ஏற்படும் இன்ப துன்பங்களிலிருந்து விடுபட்டு என்றும் அழியாத பரிபூரண அமைதியும் ஆன்மசுகமும் பெற்று மோட்ச நிலையை அடையலாம்.

பண்டைய இந்தியாவின் சமயங்கள் இந்த மோட்ச நிலை அடைவதற்கான நெறிகளை போதிக்கும் கருவிகளாக இருந்தன.

எனவே வேதாந்தங்கள் உண்மை நிலை பற்றியும் சமயங்கள் அந்நிலையை அடைவதற்கு உகந்த நெறிகளைப் பற்றியும் போதித்தன. வேதங்களும் தத்துவங்களும் ஒரு மாயத் தோற்ற இலக்கினைக் காட்ட சமயம் அதை முற்றுமாக அடைய வழிவகை செய்தன. வேதாந்தமும்,



தத்துவங்களும், மதக் கோட்பாடுகளும், சமயங்களும் அதை நடைமுறைப்படுத்த வழிகோலுவதாகவும் அமைந்தன. எனவே பண்டைய இந்தியாவில் தத்துவமும் சமயமும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்றன.

> நமது மனங்களை பிரகாசமடையச் செய்யும் செய்திகளையே கேட்போமாக, எங்கும் பரவியுள்ள தெய்வீகத்தை மட்டுமே காண்போமாக. சர்வ வல்லமை பொருந்திய இறைவனின் சந்நிதி நம்முள் உள்ளது. நமது மனமும் உடலின் செய்கைகளும் அந்த சர்வ வல்லமை பொருந்திய இறைவனுக்கு பணி செய்வதிலேயே இருக்கக் கூடுகிறது - இவற்றின் மூலம் முடிவில்லாத அமைதி நிலையை அடைவோமாக (ரிக்வேதம் 1-89 என் படி)

## 8.2 முந்திய வேத காலமும் வேத காலத்திய சமயமும்

வரலாற்று சிறப்பு மிக்க இப்பகுதிகளில் நடத்தப்பட்ட அகழ்வாரய்ச்சிகளிலிருந்தும், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படியும், வேத காலத்திலும் அதற்கு முன்பும் ஆண் பெண் உறவு தெய்வீகமாக மதிக்கப்பட்டதோடல்லாமல் அதுவே பிறப்பின் உண்மை என்று உணர்ந்திருந்தனர். இயற்கையின் சக்தியாக காணப்பட்ட, சூரிய சந்திரன் ஆகியவற்றை வழிப்பட்டனர் என தோன்றுகிறது. ஆரிய வம்சத்தின் வரலாற்றுக் குறிப்புகளும் இதை உறுதி செய்கின்றன. ஆரியர்களின் சமயம் சார்ந்த நம்பிக்கைகளும் வழிபாட்டுமுறைகளும் “ரிக்கு வேதத்திலிருந்து அறியப்படுகின்றன. இந்திரன், வருணன், சகுனி, சூரியன், ருத்ரன் ஆகிய பல தெய்வங்களை அவர்கள் வணங்கினார்கள். பலியிடுதல், உணவு, தண்ணீர் முதலியவற்றை அக்கினியிலிடுவதன் மூலம் தெய்வ வழிபாடு நடைபெற்றது. சாம வேதம், யஜீர் வேதத்தைச் சேர்ந்தவர்கள் வழிபாட்டு முறைகளையும் ஆகம விதிகளையும் விவரித்தனர். அதர்வன வேதம் ஆத்மாவும் அதைப் பற்றியவைகளிலும் நம்பிக்கை கொண்டதாக இருந்தது. வேத காலத்தில் தெய்வ நெறிகளிலும் செயல்பாடுகளிலும் தெளிவான கருத்துகள் நிலவில்லை. பல தெய்வ வழிபாடு பற்றி குழப்பம் ஏற்பட்டதால் ஒரு தெய்வம் பல பெயர்களில் கொண்டாடும் முறை ஏற்பட்டது.

வேத இலக்கியங்களைச் சேர்ந்த ஆரண்யகா, உபநிடதம் போன்றவற்றில் முற்போக்குக் கருத்துகள் தோன்றின. பண்டைய சீர்திருத்தவாதிகள், மதத்தலைவர்கள் பின்பற்றிய பல இயற்கைக்கு அப்பாற்பட்ட கருத்துகள் உபநிடதங்களில் காணப்படுகின்றன. சிலர் பரம்பரை வழிமுறைகளையும் வேறு சிலர் புரட்சி வழிமுறைகளையும் பின்பற்றினர்.

- இந்தியாவில் கடந்த காலத்திலிருந்து நிகழ்காலம் வரை வாழ்க்கையின் அடிப்படை பிரச்சனைகள், கருத்துகள் பற்றிய சண்டைகள் காணப்பட்டன. நாளடைவில் வாழ்க்கை பற்றிய சிந்தனைகளில் உறுதியான நிலைப்பாடு துவங்க ஆரம்பித்தது - உண்மை, சத்தியம் இவற்றுக்கான தேடலும் வாழ்வியலுக்கு ஆதாரமாக சத்தியமான வாழ்க்கை அதனால் கிடைக்கும் சுதந்திரம், ஞானம் பற்றிய அறிவு மேலாங்கத் தொடங்கியது. உணர்வுகளை அடக்குதல், ஒழுக்க நெறிமுறைகளை பின்பற்றி சீரிய வாழ்க்கை வாழ்தல் போன்றவை தத்துவார்த்தமாக மட்டுமில்லாமல் நடைமுறை வாழ்விலும் விரும்பப்பட்டன.
- தத்துவ ஆய்வுகளும் ஒழுக்கமும் ஆன்மீக மார்க்கமும் ஒருங்கிணைந்து இந்திய பண்பாடு மேற்கத்திய பண்பாட்டினின்று மாறு படத்துவங்கியது.
- பழமையான பாரததேசத்தின் ஆன்மீக வளர்ச்சி வெறும் பக்தி மார்க்கமாக மட்டுமின்றி மனித நேய வளர்ச்சிக்கும் உலக சமாதானத்திற்கு வழிகோறும் பாலமாக மாற்றத் துவங்கியது.

✦ நேரடியாக, சுயமாக அனுபவரீதியாக அறிந்து உணரப்பட்டதே. இந்திய தத்துவ நெறிகள், உண்மையான தத்துவ ஞானிகள் தங்கள் வாழ்வின் செயல்பாடுகளின் மூலம் இதனை இந்தியாவில் நிருப்பித்துள்ளனர்.

## 8.3 மரபு வழிப்படாத சமய இயக்கங்கள்

முதல் மில்லியன் ஆண்டில் மத்திய காலத்திய சமய இயக்கங்கள், மகாவீரருடனும் புத்தருடனும் இணைந்திருந்தன. அதே காலத்தில் மற்ற சமயங்களும் இருந்தன. இவை வேதகாலக் கோட்பாடுகளுடன் மாறுபட்ட போதனைகளைக் கொண்டிருந்தன. வேதங்களின் தோற்றம், புனிதத்துவத்திற்கு முரணானவையாக இருந்தன. இப்பிரிவினர் சத்ரிய குலத்தை சேர்ந்த குருக்களாக இருந்தனர். புத்தமும் சமணமும் துவக்கத்தில் நாத்திக கருத்துடையவையாக இருந்தன. நாளடைவில் கர்மா அதன் பலன், மறுபிறப்பு போன்றவற்றில் புத்தமதம் நம்பிக்கை கொண்ட தோடல்லாமல் துன்பத்திற்கு காரணமே முற்பிறப்பின் ஆசைகள் என்று போதித்தன. புத்த மதக் கூற்றுகள் பல கர்ம வினைகளின் கொள்கைகளை அங்கீகரித்தன. இவை உபநிடதங்களில் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றன.

## 8.4 ஆத்திகச் சார்புடைய சமயங்கள்

கடவுள் மறுப்புக் கொள்கை அடிப்படையில் மதங்கள் தோன்றிய அதே கால கட்டத்தில் கடவுள் ஏற்பு மதங்களும் பரவ ஆரம்பித்தன. இவை வேத காலக் கடவுள்களை வழிபடவில்லை. பண்டைய நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்ட கடவுள்களை வணங்கினர். வேதகாலத்திற்கும் முன்பும் பின்பும் நாட்டுப் புறங்களின் வழிபாட்டு முறைகளே வளர தூண்டு கோலாயிருந்தது பக்தி மார்க்கம். இதன் மூலம் உருவானவையே வைணவம், சைவம் சக்தி வழிபாடு. இவை ஆசாரமான பிராமணப்பிரிவு உருவாக காரணமாயமைந்தது. இவையே காலப் போக்கில் புத்த சமயத்தின் தோற்றத்திற்கு வழிவகுத்தன.

## 8.5 நாட்டுப்புற வழிபாட்டுப் பிரிவுகள்

பழமையான சமய நம்பிக்கைகளில் மிகமுக்கியமான அரக்கர், நாகம், மரபு தேவதைகளின் வழிபாடு ஆகியன அமைந்திருந்தன. இவற்றில் 'பக்தி' ஒரு முக்கியமான பங்கு வகித்தது. மக்களிடையே ஏற்பட்ட இவ்வகையான வழிபாட்டிற்கு சான்றுகளாக ஏராளமான இலக்கியமும் தொல்பொருள் ஆராய்ச்சிகளும் உள்ளன.

**வாசுதேவ , கிருஷ்ண வழிபாடு:** பாணினியின் அஷ்டபதியில் காணப்படும் ஒரு சூத்திரத்தில் கிருஷ்ணனின் வழிபாடு பற்றி குறிப்பு உள்ளது. சாங்கோத்யா உபநிஷத்திற்கும் தேவகி மைந்தன் கிருஷ்ணைப் பற்றி கோர ஆங்கிசேர் என்ற முனிவரின் சீடனால் குறிக்கப்பட்டுள்ளது. பாகவதர்கள் என்ற குறிப்பிட்ட மரபினர் பெருமளவில் கிருஷ்ணனை தங்களது ஆத்ம இறைவனாக வணங்கியுள்ளனர். சாங்கோயா உபநிடமும், தேவகியின் மகனும், சூரியனை வணங்கும் "ஞானியான கோரா அங்கிராசாவின் மாணவறுமான கிருஷ்ணாவைப் பற்றி பேசுகிறது. முதலில் பாகவதர்கள் என்று அழைக்கப்பட்ட பெரும்பாலான மக்கள் வாசுதேவ கிருஷ்ணனை தங்களது ஆத்ம இறைவனாக வணங்கினர். வாசுதேவ - பாகவதப் பிரிவு தொடர்ந்து வளர்ந்து வந்து வேத காலத்து விஷ்ணுக் கடவுளையும் (சூரிய வம்சத்தைச் சார்ந்த) நாராயணன் (கோள்களைச் சார்ந்த கடவுள்) போன்ற தெய்வங்களின் வழிபாட்டையும் தன்னகத்தே இணைத்துக் கொண்டன. குப்தர் காலத்தில் வைணமே முக்கிய சமயமரபாக விளங்கியுள்ளது. வேத காலத்திய விஷ்ணுவையும் அவரது அவதாரங்களையும் கொண்ட பக்தி மார்க்கமே பெரிதும் காணப்பட்டது.

## 8.6 தென்னிந்தியாவில் வைணவ இயக்கங்கள்

குப்தர்களின் காலத்தில் இருந்து, கி.பி. 13ஆவது நூற்றாண்டின் முதல் பத்தாண்டு வரை. வைஷ்ணவ இயக்கத்தின் வரலாறு தென்இந்தியாவுடன் சார்ந்திருந்தது. வைணவப் புலவர்களும், முனிவர்களும், ஆழ்வார்கள் (விஷ்ணு பக்தியில் மூழ்கியவர்கள்) என்றழைக் கப்பட்டனர். அவர்களின் பாடல்கள் பிரபந்தங்கள் என்று அழைக்கப்பட்டன.

## 8.7 சைவ சமயம்

வைணவத்தைப் போலல்லாது சைவம் மிக முந்தைய காலத்தைச் சார்ந்த ஒன்றாக விளங்கியது. தோல் ஆடைகளை அணிந்து இரும்பாலான கேடையங்களையும் தண்டங்களையும் தரித்த சிவபெருமானை வழிபட்ட சிவா பாகவதர்களைப் பற்றி பாணனி தம் நூலில் குறிப்பிடுகிறார்.

**தென்னாட்டில் சைவ சமயம்:** தென்னாட்டில் சைவ சமயம் 63 நாயன்மார்களின் செயல்களால் சைவ சமயம் தழைத்து ஓங்கியது. சிவஸ்தலங்களில் உணர்ச்சி பூர்வமாக நாயன்மார்கள் பாடிய பாடல்கள் தேவாரத் தோத்திரம் எனவும், திராவிட வேதம் எனவும் அழைக்கப்பட்டன. அனைத்து சாதியினரையும் கொண்ட நாயன்மார்கள் இருந்தனர். பிறகு கொள்கை அடிப்படையில் சைவ சமயம் ஆக மந்தம், சுத்த, வீர சைவ மரபினராக பிரிந்தனர்.

> அறிவியலுக்கு அப்பாற்பட்ட ஆனால் இயற்கையில் காணக் கூடியவற்றைப் பற்றி எளிதில் புரியும் வண்ணம் எடுத்துரைக்கும் மாண்பு சிறந்த தத்துவமாக ஏற்றுக் கொள்ளப்படும். அவ்வழியில் வரும் சமயம் அறிவியல் கூற்றுகளுடன் ஓன்றியமைந்ததால் அந்த சமயமே உலகளவில் பின்பற்றப்படும் அதற்கு குறிப்பிட்ட வரையறை தர்க்கங்கள் இருத்தலாகாது.
>
> வாழ்வியல் தத்துவங்களை அறிவியல் பூர்வமாக உணர அவை ஒன்றுக் கொன்று எதிர்மறையாக இல்லாமல் தொடர்ந்து உலகளவில் அனைவராலும் பின்பற்றத்தக்க வையாக இருக்க வேண்டும்.
>
> அறிவியல் என்பது ஒரளவிற்கு அறிவு பூர்வமாக இருப்பது வாழ்வியல் தத்துவங்களை முழுமையான அறிவுத்திறனைக் கொடுப்பவை. அறிவியலுக்கு அப்பாற்பட்டவை நாம் அறியாதவை. ஆன்மீகம், இறைவன், நம்மனிதன் நிலை போன்றவை இதிலடங்கும்.
>
> - ஹர்பர்ட் ஸ்பென்சர்

## 8.8 சிறுபான்மையினர் சமய இயக்கம்

பெண்மையின் வழிபாடும் (சக்தி வழிபாடு) சூரியனை வழிபடுதல் பிராமண சமுகத்தில் அதிக முக்கியத்துவம் பெறவில்லை. பெண் தெய்வங்களின் மகிமை வேதகாலத்திற்கு முன்பு மறைத்து வைக்கப்பட்டிருந்தது. வேத காலத்தில் பெண் தெய்வங்கள் தாயாகவும், சக்தியாகவும், வரங்களை தரும் தேவியாகவும் போற்றப்பட்டன. இருப்பினும் மிகச்சரியான குறிப்புகள் நாளடைவில் தான் வெளி உலகுக்குத் தெரியவந்தன. வேத, புராண காலங்களில் சூரியனும் அதனுடன் சம்பந்தப்பட்ட கோள்களைப் பற்றிய கருத்துக்களே பெரிதும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஈரானின் கிழக்கு பகுதியில் தோன்றிய (சாகத்விபி) என்று சூரிய வம்ச பண்பாடு கிறிஸ்துவ மதம் தோன்றிய ஆரம்ப துவக்கத்தில் வட இந்தியப் பகுதிகளில் காணப்பட்டது. இருப்பினும் இறைவன் இறைவழிபாட்டு முறைகள் சமயங்களின் மையக் கூறுகளாக பிற்காலங்களில் தான் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

### இப்பகுதிக்கான கேள்விகள் 8.1

1. வேத கால இயக்கத்தின் எந்தப் பிரிவுகளில் முற்போக்கு சிந்தனையை ஆழ்ந்து சிந்திக்க கூடியவை எது?
2. புத்த மதத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடு எது?
3. புத்த மதம், சமண மதத்தை பிரபலமடையச் செய்த குறிப்பிட்ட சமயக் குழுவின் பெயரைக் கூறுக?
4. எவ்வாறு வேத காலம் பெண்களின் கொள்கையை மதித்தது?
5. சைவ இயக்கங்களின் பல்வேறு பகுதிகள் யாவை?

## 8.9 வேத கால தத்துவம்

இயற்கை வழிபாடுகள் மூலம் இயற்கையின் பல்வேறு நிலைகளை கடவுள்களாக உருவகித்து வணங்குதலே வேத கால சமயங்களின் நோக்கமாக இருந்துள்ளது. வேத காலத்தினிறுதியில் தான் இறைவன் ஆன்மா, பிரம்மத்தின் தத்துவம் போன்ற கோட்பாடுகள் பரவ ஆரம்பித்தன. வேத காலத்தில் இந்த மரபுகளே பிற்காலத்தில் "சததர்சனம்" என்ற ஆறு வகை தத்துவப் பிரிவுகளை உருவாக்கின. பண்டைக்காலந்தொட்டு இந்த ஆறு பிரிவுகளே அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டன. இந்தியத்தத்துவ வரலாற்றின் அந்த ஆறு பிரிவுகளை இனி காண்போம்.

### சாம்க்ய தத்துவம்

புருஷா எனப்படும் ஆண் தன்மையையும் பிரக்ருதி எனப்படும் பெண் தன்மையையும் உள்ளடக்கியது. சாங்க்யத்துவம், பிரக்ருதி, புருஷா என்பது தனித்துவம் உடையது; முழுமையானது. புருஷம் என்பது ஆத்மா அது அழிவற்றது. பிரக்ருதி எண்ணம் செயல் மாற்றங்களுக்கு உள்ளாவது. இந்த பிரபஞ்சம் உருவாக புருஷமும் பிரக்ருதியுமே காரணம் என்பது சாங்க்ய தத்துவத்தின் கோட்பாடு பிரபஞ்சத்தை உருவாக்கியது. புருஷா, பிரக்ருதி இருவருக்குமுள்ள உறவு என சாம்க்ய தத்துவம் கூறுகிறது. சாம்க்ய சூத்திரத்தை எழுதின கபிலா என்பவர் இந்த தத்துவத்தை பரிசிலனை செய்தார்.

### யோகா

யோகம் என்பது இரு வேறு சக்திகளின் இணைத்தலைக் குறிக்கும். பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரத்தில் கிறிஸ்து பிறப்புக்கு 200 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது என நம்பப்படுகிறது. மனதை ஒரு நிலைப்படுத்துவதின் மூலம் மாற்றங்களுக்கும், சஞ்சலங்களுக்கும் ஏற்படும் பிரக்ருதியிலிருந்து புருஷ சக்தி வெளிக் கொணரமுடியும் என அறியப்பட்டது. யோக சக்தி மனம், உடல் மற்றும் புலன்களை அடக்கும் தன்மையை உள்ளடக்கியதாகும். முக்தியாகவும் பிறவி கொடுமையிலிருந்து விடுதலை பெறவும் யோகம் உதவியது. யமா எனப்படும் அயக்கட்டுப்பாடு நியமா எனப்படும். விதிகளை அனுசரித்தல் ஆசனங்கள் செய்தல், பிரணாயம் எனப்படும் மூச்சு பயிற்சிகள், ப்ரத்யாகாரா எனப்படும் ஒரு புள்ளியில் ஒரு நிலைப்படுத்துதல் தர்னா என்று மனதை கட்டுப்படுத்துதல், தியானம் செய்தல் மற்றும் சமாதி மூலம் தன்னையே கரைத்து மனத்தையும் உடலையும் ஒன்றோடொன்று பொருந்துதல் இவையாகவும் யோக சூத்திரங்களாகும். யோக சக்தி இறைவன் என்ற சக்தி இருப்பதையும், அவனை அடைய தகுந்த வழி காட்டும் குரு தேவை என்பதையும் உறுதிப்படுத்துகிறது.





## நியாயா

காரணக்காரிய தொடர்புடைய எண்ணங்கள் நியாயா எனக் கருதப்பட்டன. இருக்கும் பொருளை அதன் நிலையையும் மற்றும் உருவத்தையும் கொண்டு அறிவது நியாயம் எனப்பட்டது. உதாரணமாக பாம்பு என்ற பொருளை பாம்பாக மட்டும், கோப்பை என்பதனை கோப்பையாக மட்டும் கருதுவது நியாயம் எனப்பட்டது. உலகைப் படைத்தல், காத்தல், அழித்தல் பணியை இறைவன் செய்வதை நியாயா தத்துவம் ஏற்றுக் கொள்கிறது. கௌதமர் நியாய சூத்திரத்தின் ஆசான் என சொல்லப்படுகிறது.

## வைஷேஷிகா

பிரபஞ்சத்தின் உண்மையும் நோக்கங்களும் உணரக்கூடிய தத்துவமே வைஷேஷிகா என ஏற்றுக் கொள்ளப்பட்டது. இத்தத்துவத்தின் பிரிவுகள் பொருட்கள் உட்பொருட்கள், செயல், புத்தி கூர்மை, தனித்தன்மை, இயற்கையிலமைந்த குணங்கள் எனப்பட்டன. வைஷேஷிகப் பிரிவினர் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகியவைகளை ஐந்து மூலங்களாக எண்ணினர். கடவுள் தான் அனைத்திற்கும் மூலமும் வழிகாட்டியும் ஆவார் என அவர்கள் நம்புகிறார்கள். செய்யும் நல்வினை தீவினைகளுக்கேற்ப ஜீவராசிகள் ஆசிர்வதிக்கப்படுகின்றன அல்லது தண்டிக்கப்படுகின்றன என்ற கர்ம வினையின் தன்மை இப்பிரிவினரின் நிலைப்பாடாக இருந்தது. படைத்தலும், அழித்தலும் இறைவனின் எண்ணச் சுழற்சியின் படி நடப்பதாக இப்பிரிவினர் கருதினர்.

சமயமும் தத்துவமும் பற்றி பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும் நூல்களும் எழுதப்பட்டிருந் தாலும் கிறித்துவுக்குப்பின் ஆறாம் நூற்றாண்டில் பிரஷாஸ்டபாதா எழுதிய நூலே தலை சிறந்தாகும்.

சித்தாந்தம் அணுவும் மூலக் கூறுகளும் அறிவியல் பூர்வமாக இணைத்து இப்பிரபஞ்சம் உருவானது என்பதை முன்னிருத்திச் சென்றனர் சைஷேஷிக சித்தாந்தப்பிரிவினர்.

## மீமாம்சம்

வேத காலத்தில் ஸம்ஹிதைகளும் (சமயச் சடங்கின் மூல நூல்கள்) பிராமணங்களை பற்றிய கருத்துகள், செயல்பாடுகள் மீமாம்சத்தில் அடங்கும் மீமாம்சத்தின் படி வேத சாஸ்திரங்கள் பூரணமானவை. அதில் குறிப்பிட்டுள்ள கடமைகளை செய்வதே சமயக் கோட்பாடு ஆகும். இது நியாய வைஷேஷிக மரபில் காணப்படும் தத்துவங்களையும் வேதாந்தங்களையும் உள்ளடக்கியது. இதன் முக்கிய நூல் கிறித்து பிறப்புக்குமுன் முந்நூறு ஆண்டுகளுக்கு முந்தி எழுதின கைமினியின் சூத்திரமாகும். சாபர்சுவாமி மற்றும் குமாரிலா பட்டா ஆகியவர்கள் இந்த தத்துவத்துடன் ஐக்கியமானவர்களாவர்.

ஜெய்மினி தத்துவத்தின் மூலக்கூறு “தர்மம்” தன் சுய கர்மங்களின் தன்மைக்கேற்ப பலன்கள் அமையும் அதுவே உண்மையான தத்துவம். இந்த தத்துவம் வேதத்தில் சடங்கு பகுதிகளுக்கு முக்கியத்துவம் அளித்தது.

## வேதாந்தம்

வேதத்தின் முடிவுப் பகுதி உபநிடதம். இதன் தத்துவத்தைப் பற்றியது வேதாந்தம். உபநிஷதம், பிரம்ம சூத்திரம் மற்றும் பகவத் கீதைக்கு சங்கராச் சாரியார் விளக்கஉரைகள் எழுதியுள்ளார். சங்கராச்சாரியாரின் தத்துவப் பேருரைகள் அல்லது தத்துவ கருத்துகள் அத்வைத வேதாந்தப் பிரிவைச் சேர்ந்தவை. அத்வைதம் என்றால் ஒரே கடவுள் அதுவே, பிரம்மம் அதுவே உண்மை.

வேதாந்த தத்துவத்தின் படி பிரம்மமே சத்தியமானது உலகம் மாயையானது. உலக வாழ்வு அநித்தியமானது பிரம்மமே நித்தியமான உண்மைதன்மையுள்ள பேரறிவு''ஞானம். அந்த பிரம்மத்தின் கூறுகளே மனிதம் என்று சங்கராச்சியார் நம்புகிறார். அந்த பிரம்மத்தை சென்றடைவதே மனித வாழ்வின் எல்லை. அறிவே எல்லா பொருட்களாய் இருப்பதின் முக்கியத்துவம் அதாவது ராமானுஜர் மற்றுமொரு சிறந்த அத்வைத அறிஞர் ஆவார்.

தத்துவ மரபுக் குழுக்களில், மனித மனம் அடையக் கூடிய தத்துவங்களைப் போதிக்கும், வேதாந்த தத்துவம் என்று அறியப்படுகிற தத்துவமே உச்சகட்டமாய் அமைகிறது.

மனித மனம் இந்த வேதாந்த தத்துவத்தை உணர வேண்டும். சுய கௌவரம், கர்வம், அகந்தை போன்றவற்றிலிருந்து விடுபடுதலே உயர்ந்த வேதாந்த தத்துவம். இது தத்துவ சாஸ்திரங்களின் வரலாற்றில் ஒரு தனியிடம் பெறுகிறது.

வேதாந்தம் - தத்துவம் மட்டுமல்ல அதுவே சமயமும் ஆகும். உன்னதமான சத்தியத்தையும் பல தத்துவ ''ஞானிகளின் கண்டு பிடிப்புகளையும் உள்ளடக்கியது வேதாந்த தத்துவம் என்று பல்வேறு நாடுகளின் தத்துவர்கள், தத்துவ ''ஞானிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பல்வேறு மதங்கள் பல்வேறு சாலைகளைப் போல அவைகளின் நோக்கம் ஒன்று தான் என வேதாந்த தத்துவம் கூறுகிறது.

வாழ்வியல் உண்மை தத்துவங்களை உபநிஷங்களில் காணலாம். வேதங்களே அறிவின் நிறைவான ஊற்று.

## 8.10 சார்வாகா மரபுக் குழு

பகுத்தறியும் உணர்வும் நுட்பமான கூரிய அறிவுமே ஒவ்வொரு செயலையும் தீர்மானிக்கிறது. மனம் தவறு செய்யத் தூண்டினாலும் அறிவுத்திறம் நம்மை எச்சரிக்கிறது. அந்த நுட்பமான அறிவின் துணை கொண்டு நற்செயல் புரிய வேதாந்தம் உதவும். யோகா, தியானம், வழிபாடு இவை மூலமாக ஆன்மிக அறிவு பெறமுடியும் - அந்த அறிவு ஆழ்மனதை கட்டுப்படுத்தும் போது தூய ஞானம் ஆனந்தம் கிடைக்கும். சார்வாக மரபின் நிறுவனர் பிரகஸ்பதிமுனிவர் என ஊகிக்கப்படுகிறது. பிருகதாரண்யக உபநிஷதத்திலும் வேதத்திலும் இவர் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. ஆகையால் தத்துவ அறிவு வளர்ச்சியில் இது தான் முந்தையது என கருதப்படுகிறது. இது அறிவு என்பது நான்கு மூலக்கூறுகளை உள்ளடக்கிய சாஸ்திரம், இறப்புக்குப்பின் அது மறைந்து விடுகிறது. சர்வாகா தத்துவம், பொருள் சார்ந்த தத்துவத்தை உரைக்கின்றது. இதை லோகயாதா தத்துவம் அதாவது பெருவாரியான மக்களின் தத்துவம் என அறியப்படுகிறது.

சார்வாகாரைப் பொருத்தவரை மறு உலகம் கிடையாது. இறப்பு மனித வாழ்வின் இறுதி. இன்பம் துய்த்தலே வாழ்வின் நோக்கம். கடவுள், மனம், சொர்க்கம் இவை அனுமானிக்க இயலாதவையாகையால் சார்க்கவாகர்கள் அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. உணர்வு பூர்வமாக அறிய முடியாத ஆகாசம் தவிர மீதி நான்கு நிலம், நீர், நெருப்பு, காற்று சக்திகளை மட்டுமே ஏற்றுக் கொள்கின்றனர். ஏனவே உலகம் இந்த நான்கு அனுக்கூறுகளால் மட்டும் ஆனது.

## 8.11 சமண தத்துவம்

சார்வாகர்களைப் போலவே ஜைனர்களும் வேத சாஸ்திரங்களை ஏற்க மறுத்தனர். ஆனால் ஆன்மா என்ற ஒன்று உள்ளதை ஏற்றுக் கொண்டனர். நன்னடத்தை, நல்லறிவு எண்ணங்கள் மூலம் மனதைக் கட்டுப்படுத்தினால் துன்பங்கள் துயரங்களிலிருந்து தப்பிவிடலாம் என்று பழமையான சாத்திரங்களை ஏற்றுக்கொண்டனர். சமண தத்துவம் தீர்த்தங்கரா ரிஷபதேவா

என்பவரால் முதன் முதலில் பரிசீலிக்கப்பட்டது. ரிஷபதேவாவுடன், அஜீத் நாத், அரிஸ்டனேமி ஆகியோரின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜைன தர்ஷனாவை நிறுவியவர்கள் 24 தீர்த்தங்களாவர். ஜைன தத்துவத்தின் மூலமே 'ஆதிநாத்' என்று முதல் தீர்த்தங்கரா உணர்ந்தார். 24 ஆவது தீர்க்கங்களும் கடைசி தீர்த்தங்கருமான வர்தமான், மஹாவீரர், சமண மதத்திற்கு மகிச் சிறந்த தூண்டுதலை அளித்தார். கி.மு. 599-இல் பிறந்தார் மஹாவீரர். தனது முப்பாவது வயதில் உலக வாழ்க்கையைவிட்டு, கடினமான துறவற வாழ்க்கையை, உண்மையான "ஞானம் பெறுவதற்கு மேற்கொண்டார். "ஞானம் பெற்றபின், இவர் மஹாவீரர் என அழைக்கப்பட்டார். பிரம்ம சரியத்தில் தீவிர நம்பிக்கை கொண்டார்.

### சமண மதத்தின் உண்மைக் கோட்பாடு அடிப்படைக் கூறுகளின் ஏழு வகைகள்

சமணர்கள், உலகியல், இயற்கை, இயற்கைக்கும் அப்பாற்பட்ட சக்திகளை ஏழு அடிப்படை மூலக் கூறுகள் மூலம் அறியலாம். அவை ஜீவா, அஜீவா, அஸ்டிகாயா, பந்தா, சம்வாரா, நிர்ஜனா மோட்சம் ஆகியன. பொருள்கள் மனித உடலைப்போல் அவைகள் தன்னை மறைத்து வாழ்வதை 'அஸ்டிகாயா' என்கிறோம். அனாஸ்டியாக்கள் என்பது காலத்தை போன்றது. அதற்கு உடல் இல்லை. பொருட்கள் தரத்தை அடிப்படையாகக் கொண்டவை. பொருட்களின் குணத்தை நாம் காண்பதை 'தர்மாஸ்' என்று தெரியப்படுகிறது. பொருட்கள் அல்லது வஸ்துகள் குணங்களைக் கொண்டுள்ளன என ஜைனர்கள் நம்புகிறார்கள். காலமாறு படுதலுடன் இந்தக் குணங்களும் மாறுபடுகின்றன. அவர்களின் கூற்றுப்படி, ஒவ்வொரு உயிரிலும் மாற்றத்திற்கு உட்படாத நித்தியமான குணங்கள் உள்ளன. இவை இல்லாமல் ஓர் உயிர் இயங்கமுடியாது ஆகையால், அவை எல்லா வற்றிலும் எப்பொழுதும் உள்ளன. உதாரணமாக மனசாட்சி (சேடனா) தான் ஆன்மாவின் உயிர்நாடி ஆசை, சந்தோஷம், துன்பம் ஆகியவை மாறக்கூடிய குணங்களாகும்.

### இப்பகுதிக்கான கேள்விகள் 8.2

1. எவ்வளவு ஷதா தர்சனா மரபுக்குழுக்கள் இயங்குகிறது?
2. சாங்கியா தத்துவத்தை தோற்றுவித்தவரின் பெயரைக் கூறுக?
3. யோகா சனத்தின் ஆதிகுரு யார்?
4. நியாயா சூத்திரங்களின் ஆசிரியர் என்று சொல்லப்படுகிறவர் யார்?
5. வேதங்களே நிறைவான அழிவற்ற "ஞானக் களஞ்சியங்கள் என்று எந்த தத்துவநெறி குறிப்பிடுகிறது?
6. உபநிஷதத்தின் தத்துவம் என்ன?
7. ஞானம் நான்கு மூலக் கூறுகளாலானது அவை இறப்புக்குப்பின் பயனற்று விடுவன என்று குறிப்பிடும் பிரிவு எது?
8. ஜெயின் தர்சனம் எத்தனை தீர்த்தங்கரர்களைக் கொண்டது?
9. மகாவீரர் எப்போது பிறந்தார்?
10. 'வர்த்தமான மகாவீரர்' என்றழைக்கப்பட்ட தீர்த்தங்கரர் யார்?
11. சமண தத்துவத்தின் ஏழு அடிப்படைக் கூறுகளைக் பெயரிடுக?

## 8.12 புத்த சமயத்தின் கொள்கைகள்-கௌதம புத்தர்

நேபாளத்தில் கபிலவாஸ்து என்ற குன்றின் அடிவாரத்தில் உள்ள லும்பினி என்ற கிராமத்தில் 563 (கி.மு) பிறந்த கௌதம புத்தரே புத்த சமயத்தினைத் தோற்றுவித்தவர்.

சித்தார்த்தர் என்பது இவரது குழந்தை பருவப் பெயராகும். பிறந்த சில நாள்கள் ஆன சித்தார்த்தர் குழந்தையாக இருக்கும் போதே தாயார் மாயா தேவி இறந்து விட்டார். பதினாறு வயதிலேயே சித்தார்த்தருக்கும் யசோதரா என்ற அழகான இளவரசிக்கும் திருமணம் நடந்தது. திருமணமான ஒராண்டிலேயே ஒரு ஆண் மகன் பெற்று ராகுல் என்று பெயரிட்டனர். தனது இருபத்தி ஒன்பதாவது வயதிலேயே இல்லற வாழ்விலிருந்து விலக, கௌதம புத்தர் உலகத்தில் பரவிக்கிடக்கும் தொடர்ந்த மரணத்துயரங்களிலிருந்தும், நோய்களினால் ஏற்படும் துன்பங்களிலிருந்தும், வறுமைப்பிணியிலிருந்தும் உலக மக்களைக் காப்பாற்றுவதற்கான வழியைத் தேடி அலைந்தார். காடுகளில் ஆறு ஆண்டு தவம் புரிந்தார். பின்பு பீகார் மாநிலத்திலுள்ள புத்தகயா என்ற இடத்தில் உள்ள போதி மரத்தடியிலிருந்து தவம் புரிந்தார். இவ்விடத்தில் அவருக்கு "ஞானம் ஏற்பட்டு 'புத்தர்' என்றழைக்கப்பட்டார். அங்கிருந்து பல இடங்களுக்கு பயணம் செய்து தனது கொள்கைகளைப் பரப்பி உலக இன்பங்களிலிருந்து உண்மையான விடுதலை பெறுவதற்கான வழியை போதித்தார். தனது 80 ஆவது வயதில் புத்தர் இறந்தார்.

உபாலி, ஆனந்தா, மகாகஷ்யப்ர் ஆகிய மூவரும் கௌதமரின் பிரதான சீடர்களாவர். இவர்கள் புத்தமதக் கொள்கைகள் பரவ பேருதவி புரிந்தனர். புத்தரின் மரணத்திற்குப் பிறகு 'ராஜகிருஹம்' என்ற அமைப்பை ஏற்படுத்தி அதில் 'உபாலி' 'விநய பிடகம்' (கொள்கை கோட்பாடுகள்) என்ற நூலை விளக்கினார். ஆனந்தர் சுத்த பிடாகா (புத்தரின் பொன் மொழிகள் தத்துவங்கள், தர்மங்கள்) என்ற நூலை இயற்றினார். சில காலங்கள் சென்ற பின் அபிதம்ம பிடாகா என்ற புத்தரின் கொள்கைகளும் புத்தமதத்தத்துவங்களும் பரவ ஆரம்பித்தன.

## புத்த மதத்தின் சிறப்பியல்புகள்

புத்தர் மக்கள் எளிதாக பின்பற்றுவதற்காக வாழ்வின் சாதாரண கொள்ளைகளையும் தர்ம முறைகளையும் எடுத்துரைத்தார். உலகம் துன்பங்கள் நிறைந்தது என்று கருதினார். இந்த துன்பமயமான உலகிலிருந்து விடுதலை பெறுதலே மனிதனின் கடமை. வேதங்கள் போன்ற மரபு சமய நூல்களின் மீதுள்ள கண்மூடித்தனமான நம்பிக்கைகளை அறவே கண்டித்தார். புத்தரின் போதனைகள் நடைமுறைக்கு உகந்தது. மன அமைதியைப் பெறுவதற்கு பொருள் சார்ந்த உலகினின்று விடுபடுவதற்கு உத்திகளை வகுக்கிறது.

நான்கு புனிதமான உண்மைகளை உணர்ந்து கொள்ளல், புத்தரால் உணரப்பட்ட "ஞானம் கீழ்க்காணும் நான்கு புனிதமான உண்மைகளில் பிரதிபலிக்கிறது.

**(அ) மனித வாழ்வில் துன்பங்கள் உள்ளன:** புத்தர் மனிதர்கள் நோய், வலி, பிணி, மூப்பு, சாக்காடு ஆகியவற்றால் துன்படுவதைக் கண்ட போது, மனித வாழ்க்கை கட்டாயமாக துன்பமானது என்பதை முடிவு செய்தார். பிறப்பு உடன் துன்பமும் உண்டு. இன்பத்திலிருந்து பிரிவது துன்பமயமானது. நமது தீவிர ஆசைகள் முழுமை அடையாத பொழுது வலியைத் தருகின்றன. புலன்களின் இன்பம் தொலையும் போதும் வேதனை ஏற்படுகிறது எனவே உலக வாழ்வு துயரமானது.

**(ஆ) துன்பத்திற்கு காரணம் உள்ளது:** இரண்டாவது புனிதமான உண்மை, துன்பத்தின் காரணத்தோடு தொடர்புடையது. பிறப்பு, இறப்பு சுழற்சிக்கு ஆசைதான் காரணம் ஆகையால் ஆசையே துன்பத்திற்கு அடிப்படை காரணமாகும்.

**(இ) துன்பத்தை நிறுத்த வழி:** மூன்றாவது புனித உரிமை சொல்வதாவது. கட்டுக் கடங்காத ஆர்வம், ஆசை வாழ்க்கையில் பற்று ஆகியவை மொத்தமாக அழியும் போது துன்பம் நீங்குகிறது. இந்த உண்மை முடிவில் துன்பத்தை தரும்போது, இவை மனித வாழ்க்கையில் துன்பத்திற்கு காரணமாகின்றன. இது அகந்தை (அகம் அல்லது அகங்காரம், மமதை) பந்தபாசம். பொறாமை, சந்தேகம், துன்பம் ஆகியவை அழிவதற்கு தூண்டு கோலாய் உள்ளன. ஆசையில் இருந்து விடுபட்ட மனம், துன்பம், பந்த பாசமற்ற நிலையே மனதின் நிலையாகும். இந்த முழுமையான அமைதியே மோட்சத்தை அடைய வைக்கிறது.





**(ஈ) விடுதலையின் வழி:** நான்காவது புனித உண்மை விடுதலைக்கான பாதைக்கு எடுத்துச் செல்கிறது. துவக்கத்தில் புத்தமத தத்துவங்கள் எதிர்மறை எண்ணங்களுடன் துவங்கினாலும் இறுதியில் நம்பிக்கைக்கு வழி காட்டுகிறது. தொடர்ந்து துயரங்கள் வாழ்வில் ஏற்பட்டாலும், இறுதியில் இதுவும் முடிவுடையும் எண்வகை மார்க்கங்கள் மூலம் ஒருவர் மோட்சத்தை அடையலாம் என்று புத்தர் கருத்துகளை கூறியுள்ளார்.

புத்தர் எட்டு நன்னெறிகளை கடைப்பிடித்து "நிர்வாணம்" என்ற பேரின்ப நிலையைக் காட்டுகிறார்.

1. **நல்நோக்கு:** அறியாமையை அகற்றினால் ஒருவன் நோக்கினை அடையலாம். அறியாமை உண்மை நிலைக்கும் தன்னுடைய மன நிலைக்கும் இடையே வேறுபாட்டை கருத்தைக் கொண்ட உணர்வை உருவாக்கிவிடும். சரியான புரிதல் இல்லாததாலேயே அழியக் கூடிய பொருளுக்கும் அழிவற்ற பொருட்களுக்கும் இடையேயான வேறுபாடை மனிதன் காண்பது இல்லை. ஆகையால் உலகிலுள்ள பொருட்கள் மீதும் உலகியல் பார்வையையும் நல்ல நோக்கத்துடன் பார்த்தால் உண்மையான தோற்றம் புரிந்து விடும்.
2. **நல்ல மன உறுதி:** நல்ல உறுதியான தன்னம்பிக்கை இருந்தால் மற்றவர்களை மனதாலும் செயலாலும் துன்புறுத்தும் எண்ணம் தோன்றாது. தியாகம், இரக்கம் உயிர்களிடத்தில் கருணை அதில் அடங்கும்.
3. **நற்பேச்சு (நல்வாக்கு):** மனிதன் நல்ல தீர்மானத்தால் தன்னுடைய பேச்சை கட்டுப்படுத்தவேண்டும். இதன் பொருள் தவறான அல்லது மற்றவர் மனம் புண் படத்தக்க வார்த்தைகளைப் பேசுவது தவிர்க்கப்படவேண்டும்.
4. **நன்னடத்தை:** உயிரினங்களுக்கு துன்பம் தரக்கூடிய செயல்களைத் தவிர்த்தல், களவாடுதல், அளவுக்கதிமாக புசித்தல், செயற்கையான அலங்காரப் பொருட்களை, நகைகளை பயன்படுத்துதல், சுகமளிக்கும் உறைவிடம், பொன்னின் மேல்பற்று இவைகளிடமிருந்த விலகியிருத்தல் வேண்டும்.
5. **நல்வாழ்க்கைமுறை:** நியாயமான முறையில் தனது வாழ்க்கைக்கும் தேவைகளுக் கான பொருட்களை ஈட்டுதல், தவறான நெறிகளிலோ, ஊழல் மூலமாகவோ, களவுமுறையிலோ பொருளீட்டுவது முறையல்ல.
6. **நன்முயற்சி:** தீய எண்ணங்கள், உணர்வுகள், கருத்துகள் முதலியவை தவிர்க்கப்பட வேண்டும். சுய கட்டுப்பாடு, புலன்களால் உணரப்படும் இன்பத்திற்கு இடம் கொடா திருத்தல் அல்லது தவிர்த்தல் கேடு விளைவிக்கக் கூடிய நினைவுகளை அகற்றி நல்ல நினைவுகளை விதைத்தல் ஆகியவை அடங்கும்.
7. **நல்ல மனநிலை:** இதன் பொருள் மனம், உடல், நினைவு அதன் உண்மை நிலமையிலிருக்கு செய்தல், தீய நினைவுகள் மனதை அடைந்தால் மனம் தன் உண்மை நிலையை இழந்து அலையத் துவங்கும். செயல்கள் தீய எண்ணங்களின் படி நிகழும் போது ஒருவன் துன்பத்தை அனுபவிக்கக் கூடும். ஒழுங்காக மற்றும் சரியாக அவனால் தன்னுடைய கவனத்தை செலுத்த முடியும். ஒருவன் தனது சரியான கவனத்தினால் மோட்சத்தை அடையமுடியும்.
8. **நல்கவனக்குவிப்பு:** மேற்கூறிய ஏழு நன்னெறிகளையும் ஒருவன் பின்பற்றினால் மனம் ஒரு நிலைப்படும். சாந்தமடையும் அப்போது தியானம் தவம் செய்யும் போது நீர்வாணமாகிய பேரின்ப நிலையை அடையமுடியும்.

சார்வாகப் பிரிவைத்தவிர ஆன்மாவை உணருவது தான் இந்தியாவிலுள்ள எல்லா தத்துவங்களின் பொதுவான நோக்கமாக உள்ளது.

பிரெஞ்சு தத்துவ ஞானி "விக்டர் கோசின்ஸ்" தத்துவத்தின் முழு வரலாற்றை சிறந்த முறையில் சுருக்கமாக இந்தியா கொண்டுள்ளது என்று கூறுகிறார். கவனமாக கீழை நாடுகளின் இலக்கியம், தத்துவம் சார்ந்த நினைவுச் சின்னங்களை உற்று நோக்கினால் ஐரோப்பாவில் மெல்லப்பரவி வரும் பல தத்துவக் கோட்பாடுகள் ஆழ்ந்த உண்மை நிறைந்தவை. ஐரோப்பிய அறிஞர்கள் கண்டறியத்தவறிய அல்லது தவறாக கண்டறியப்பட்ட பல ஆழ்ந்த தத்துவ உண்மைகள் இந்திய நாட்டில் புலப்படுகின்றன. மனித நாகரிகத்தின் தொட்டிலாக விளங்கும் உயர்ந்த வாழ்வியல் தத்துவங்கள் பொதிந்துள்ள நாடாகிய பாரத்தை முழந்தாளிட்டு வணங்குவோம். புத்த மதத்தைப் பற்றி மேலும் அறிய விரும்புவீர்கள் என எண்ணுகிறேன். பீஹாரிலுள்ள புத்தகயாவிற்கு செல்வோம். பழமையான இந்த பாதையில் நடைபயிலுங்கள் மகாபோதி மரத்தடியில் - ஆன்மீகச் சிந்தனையுடன் வாழ்வியல் உண்மை வெளிப்பட்ட இவ்விடத்தில் நிற்போம். புத்தர் இந்த புத்தகயாவில் "ஞானம் பெற்ற ஏழு வாரங்கள் தங்கியிருந்தாக வரலாறு கூறுகிறது.

இங்கு போதிமரத்தின் மேல் தன் கண்களைப் பதித்தப்படி நின்ற நிலையில் தவம் செய்யும் கௌதம புத்தரின் அனிமேஷ லோசனம் எனப்படும் தூண் உள்ளது. புத்தகயாவில் உள்ள விஷ்ணு பாதக் கோவிலுக்குச் சென்று பிண்டதானம் செய்வதை இந்துக்கள் மாபெரும் பேறாகக் கருதின்றனர். அப்படிச் செய்வது இவ்வுலகிலிருந்து உயிர் துறந்து சென்றவர்களுக்கு சாந்தியும் ஆறுதலும் அளிக்கும் என்று நம்புகின்றனர் .

சீனத் துறவி பாஹியான், ராஜகிருகம் சென்று அங்கேயே தங்கியிருந்து புத்தர் இறந்த 900 ஆண்டுகளுக்குப்பின் எழுதிய குறிப்புகளைக் காணலாம். புத்தர் அன்று ஆற்றிய சொற்பொழிவுகளைக் கேட்க இயலவில்லையே என்று புலம்பியிருக்கிறார். புத்தரைப் பற்றிய நிகழ்வுகள் அனைத்தும் ராஜ்கீரில் காணப்படுகின்றன. புத்தர் இந்த குகையில் தங்கியிருந்த பொழுதுதான் முதன் முதலில் தனது உணவை இரந்து உண்டார் என்பதை கற்பனை செய்து பாருங்கள். இங்குதான் மௌரிய மன்னன் பிம்பிசாரன் புத்தமத்தை தழுவினான். புத்தரைக் கொல்ல தேவதத்தன் ஏவிய மதம் பிடித்தயானை பற்றிய குறிப்பு இங்குள்ளது. புத்தரின் மதப் பிரச்சாரயாத்திரை யாஜ்கிர் பகுதியிலிருந்து துவங்கியது. சப்தம் குகையில் தான் முதல் பௌத்த மகாசபை கூட்டப்பட்டு புத்தரின் எழுதப்படாத தத்துவங்கள் கல்லில் பொறிக்கப்பட்டன. துறவிகள் மடம் முதலில் ராஜகிருகத்தில் அமைக்கப்பட்டு பின்பு கல்வி, மதம் சார்ந்த நிலையங்கள் ஆகியன நிறுவப்பட்டன.

கட்டடக்கலை பற்றிய பாடங்களில் நாளந்தா பல்கலைக் கழகம் பற்றி படிப்பீர்கள். அது கி.மு. 5 ம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. உலகின் மிகப்பழமையான பல்கலைக்கழகமாகும் இது. புத்தர் அறிவு வளர்ச்சியை மிக விரும்பியதால் துறவிக்கும் கல்வியாளர்களுக்கும் இங்கு உரைகள் நிகழ்ததப்பட்டன. நாளந்தா பல்கலைக் கழகம் குப்தர்காலத்தில் மிக உன்னதமான துறவிகள் புகலிடமாகவும், கலைக் கூடமாகவும் விளங்கியது.

## இப்பகுதிக்கான கேள்விகள் 8.3

1. கௌதம புத்தரின் பிள்ளைப் பருவ பெயர் என்ன?
2. கௌதம புத்தர் எங்கு தியானம் செய்தார்?
3. கௌதம புத்தர் எங்கு ஞானம் பெற்றார்?
4. சுத்த பிடாகம் எவற்றை அடக்கி உள்ளது?
5. வினயபிடாகாவை ஒப்புவித்தது யார்?
6. கௌதம புத்தரின் நான்கு புனிதமான உண்மைகள் எவை?
7. ஆன்மீக உணருதல் பற்றிய விஷயத்தில் மாறுபட்டக் கருத்துக் கொண்ட இந்திய தத்துவப்பிரிவு எது?

## நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- சமயங்களின் தோற்றம் வேத காலத்திற்கு முன்பிருந்த சமுதாயத்திலிருந்து தோன்றியது.
- சமயங்களின் முன்னேற்றம் பண்பாட்டின் அடிப்படையில் வளர்ந்தது. பழைய மரபுகளையொற்றி தொடர்ந்து முன்னேறியது.
- வேத காலத்தில் தோன்றிய தத்துவக் கொள்கைகள் பண்டைய மரபுகளில் உறுதியான நிலைப்பாடு கொண்டு விளங்கின.
- புருஷம், பாக்ருதி முறையே தனது சக்திகள், தனக்கப்பாற்பட்ட சக்திகள் பற்றிய உண்மை, சாம்க்ய தத்துவக் கோட்பாடுகளில் காணப்படுகிறது.
- தன்னைப்பற்றி அறிய நல்ல செயல்முறைக் கோட்பாடு யோகாவாகும்
- தர்க்க வாதங்களுக்கான உத்திகளை நியாயா எடுத்துரைத்தது.
- பிரபஞ்சம் உருவான மூலக்கூறுகளின் உண்மைப்பற்றி எடுத்துரைப்பது வைஷேஷி
- வேத நூல்களின் ஆராய்ச்சி மீமாம்சம் எனப்பட்டது.
- சார்வாக்கிசம், சமணம், புத்த மதம் போன்றவை பண்டைய மரபுகளைச் சார்ந்தவைகளல்ல
- சார்வாகம் உலகியல் இன்பம் பற்றிய தத்துவங்கடைங்கியது. கண்ணுக்குப் புலப்படாத எதையும் இப்பிரிவினர் ஏற்றுக் கொள்ளவில்லை
- சமண தத்துவம் உலகியல் உடலில் இருந்து ஜீவன் முக்தி பெறுவதை அடிப்படையாகக் கொண்டது.
- புத்தர் தனது ஞானத்தை 4 புனித உண்மைகளில் பிரதி பலித்தார்.

  1. மனத வாழ்வில் துன்பமே
  2. இத் துன்பத்திற்கு காரணங்கள் உண்டு
  3. இத் துனபங்களுக்கு முடிவும் உண்டு
  4. அதுவே துயரத்தை முடிவுக்குக் கொண்டுவரும்.

- புத்தர் எண் வழி கொள்கைகளை விடுதலைக்காக வழி வகுத்தார். அவை

  1. நன்னோக்கு
  2. நன்மன உறுதிப்பாடு
  3. நல்வாக்கு
  4. நன்னடத்தை
  5. நல் வாழ்க்கை முறை
  6. நன்முயற்சி
  7. நன்மன நிலை
  8. நன் மனக்குவிப்பு

## பயிற்சிக்கான கேள்விகள்

1. பண்டைய இந்தியாவின் மதங்களின் இயக்கக் கோட்பாடுகள் பற்றி எழுதுக?
2. இந்திய சமய இயக்கத்தில் சார்வாகப் பிரிவின் பங்கு பற்றி குறிப்பு வரைக?
3. மற்ற மதத்தத்துவ நெறிகளிலிருந்து சார்வாகப் பிரிவு எவ்வாறு மாறுபட்டு விளங்கியது?
4. எவ்வாறு ஷடா தர்ஷனா பழமை மரபு முறையின் வகைகளில் உள்ளது என்பதை விளக்குக?
5. புத்த தத்துவம், ஒரு நல்ல மனிதனாக ஆவதற்கு எவ்வாறு பங்களிக்கிறது?
6. மீமாம்சத தத்துவம், அடிப்படையாக வேத திருமறைகளின் பகுத்தாய்வு என்று எவ்வாறு கூறுவாய்?

## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 8.1

1. ஆரண்யகம், உபநிடதம்
2. கர்ம சாத்திரம்
3. வைணவம், சைவம், சக்தியிசம்
4. தெய்வீகதாய் பேரளவின் கடவுளின் சக்தி, சக்திமயக் கடவுள் (சக்தி)
5. ஆகமந்தங்கள், சுத்த சைவம் வீர சைவம்

### கேள்விகளுக்கான பதில்கள் 8.2

1. ஆறு
2. சாங்கிய சூத்திரங்கள் எழுதிய கபிலன்
3. பதஞ்சலியின் யோக சூத்திரம்
4. கௌதமர்
5. மீமாம்சப் பிரிவு
6. வேதாந்தம், வேதங்களின் முடிவுப்பகுதி
7. சார்வாகா பிரிவு
8. 24
9. 599 B.C
10. 24 வது கடைசி தீர்த்தங்கரர்
11. ஜீவன், அஜீவன். அஸ்திகாயா, பந்தா, சாம்பவரா நிர்ஜனா, மோக்ஷா

### கேள்விகளுக்கான பதில்கள் 8.3

1. சித்தார்த்தா
2. பீஹார் மாநிலத்தில் புத்தகயாவிலுள்ள போதி மரத்தடியில்
3. புத்தகயா, பீஹாா
4. புத்தரின் சொற்பொழிவுகள், கோட்பாடுகள் அறிவியல்
5. உபாலி
6. மனித வாழ்வின் துன்பம் உண்டு
   துன்பத்திற்கு காரணம் உண்டு
   துன்பத்திற்கு முடிவு உண்டு
   விடுதலைக்கு வழி
7. சார்வாகப் பிரிவு

# 9

# இடைக்கால இந்தியாவில் சமயமும் தத்துவமும்

ஒவ்வொரு மாதமும் நகரத்தில் உள்ள ஏதோ ஒரு கலையரங்கத்தில் சுபி சாதுக்கள், பக்தி சாதுக்களின் பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன. இந்நிகழ்ச்சியின் பெருமையை அதை ரசிக்க வரும் மக்கள் வருகையின் எண்ணிக்கையை வைத்து அறிந்து கொள்ளலாம். அவை, அரசு, பெரிய தொழில் துறை வீடுகள், தனி மனிதர்களாலும் கூட ஆதரிக்கப்பட்டது. சூபி சாதுக்கள், பக்தி சாதுக்களின் பாடல்கள் போதனைகள் இன்றும் கூட பயனுடையதாக இருக்கின்றன. இடைக்கால இந்தியா சூபி மற்றும் பக்தி இயக்கங்களின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் கண்டது என்பது உங்களுக்கு தெரியுமா. இந்த இரண்டு இயக்கங்களும் முஸ்லீம்கள், இந்துக்களிடையே புதிய சமய வெளிப்பாட்டை கொண்டு வந்தன. மெஞ்ஞானிகளான சூபிக்கள் இஸ்லாமியத்தின் விடுதலைக்காக அழைக்கப்பட்டார்கள். அவர்கள் உலக அன்பை அடிப்படையாகக் கொண்ட சமத்துவ சமுதாயத்தை வலியுறுத்தினர். பக்தி துறவிகள் இறைவனை அடைவதற்குரிய வழிகளான சமய உணர்வு அல்லது பக்தியை அறிமுகப்படுத்தி இந்து சமயத்தை மாற்றினர். அவர்களைப் பொருத்த வரையில் சாதி எந்த அர்த்தமும் இல்லாதது எல்லா மக்களும் சமமாகவே கருதப்பட்டனர். சூபி துறவிகளும் பக்தி துறவிகளும், முஸ்லீம்களையும், இந்துக்களையும் ஒன்றிணைப்பதில் பெரும் பங்கு வகித்தனர். மக்களின் உள்ளூர் மொழியைப் பயன்படுத்துவதன் மூலம் சாதாரண மக்களுக்கு எளிதானதாகவும் பொருளுள்ளதாகவும் இருந்தது.

## நோக்கங்கள்

இந்தப் பாடத்தைப் படித்த பிறகு உங்களால்

- இடைக்கால இந்தியாவில் சூபிசம், பக்தி இயக்கங்களின் எழுச்சிக்கான காரணங்களைப் புரிந்து கொள்ள
- சுபி இயக்கத்தின் வளர்ச்சியைக் கண்டறிய
- சுபிக்களின் முக்கிய அடையாளம் காண
- சுபிசத்தின் முக்கிய கோட்பாட்டுக் கூறுகளை விவரிக்க
- பக்தி துறவிகளான சந்த்கபீர், குருநானக் ஆகியோரின் தத்துவத்தை விவரிக்க
- சீக்கிய மதத்தின் எழுச்சியை பற்றி விவரிக்க
- வைஷ்ணவ துறவிகளின் கருத்துக் கோட்பாடுகளை விவரிக்க
- வெவ்வேறு கூறுகளைக் கொண்ட இந்திய பண்பாட்டு வளர்ச்சியில் சூபி, பக்தி துறவிகளின் பங்களிப்பை அங்கிகரிக்க முடியும்.

## 9.1 சூபி இயக்கம்

### இஸ்லாமிய எழுச்சியின் பின்னணி

இஸ்லாமிய மதம் இறைத் தூதர் முகமதுவினால் தோற்றுவிக்கப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். இஸ்லாமிய மதம், தனக்குள் கொண்டிருக்கிற பல சமயங்கள் ஆன்மீக இயக்கங்களை கண்டது. இத்தகைய இயக்கங்கள் குரானை மொழி பெயர்த்தலை மையமாகக் கொண்டிருந்தன. சன்னிகள், ஷியாக்கள் இரண்டு முக்கிய வகுப்பு பிரிவுகள் இஸ்லாமியத்தில் இருந்தன. நம் நாட்டில் 2 வகுப்பு பிரிவுகள் உள்ளன. ஆனால் மற்ற பல நாடுகளான ஈரான், ஈராக், பாகிஸ்தான் முதலிய நாடுகளில் இந்த இரண்டு பிரிவுகளில் ஒன்றை மட்டும் தழுவுபவர்களை நீங்கள் காணலாம்.

சன்னிகளிடையே, நான்கு முதன்மையான இஸ்லாமிய சட்ட மரபுக்குழு இருந்தது. இவை குரான், ஹடிஸ் (தீர்க்கதரிசியின் நீதி உரைகளும் செயல்களும்) இவைகளில் 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த, ஹனபி மரபுக் குழுவை பிந்தைய நாளில் இந்தியாவிற்கு வந்த கிழக்கந்திய துருக்கியர்களால் தழுவப்பட்டது.

பரம்பரை சடங்குகளில் நம்பிக்கை கொண்ட சன்னி பிரிவுக்கு ஒரே கடவுள் நம்பிக்கை கொண்ட அறிவார்ந்த தத்துவம் அல்லது முடாசிலாஸ். இவர்களுடைய கூற்றுப்படி கடவுள் என்பவர் வெறும் பெயர்தான் மனிதர்களின் தீய செயல்களை அவரால் ஒன்றும் செய்ய இயலாது. ஆண்கள் சுதந்திரமான விருப்பங்களினால் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறார்கள் அவர்களுடைய செயலுக்கு அவர்களே பொறுப்பாகிறார்கள். முடாசிலாக்கள், அஷாரி மரபுக் குழுவால் எதிர்க்கப்பட்டார்கள். அபுல்ஹசன் அஷ்ஹரி (கி.பி. 873-935)யால் தோற்றுவிக்கப்பட்ட அஷரி மரபுக்குழு பரம்பரை சம்பிராதயங்களில் நம்பிக்கையின் கோட்பாடுகளை காத்து, அறிவு சார்ந்த விவாதங்களில் பரிணாம வளர்ச்சியுள்ளது. இந்தக் குழு கடவுள் அறிகிறார், பார்கிறார் மற்றும் பேசுகிறார் என நம்புகிறது. குரான் ஆதி அந்தம் இல்லாதது மற்றும் உருவாக்கப்படாதது. இந்த மரபுக்குழுவின் ஆதரவாளரான அபு ஹமிடல் கசாலி (1058 - 1111 கி.பி) பரம்பரை சடங்குகளில் நம்பிக்கை கொண்டிருக்கிறவர்களுடன் மெய்ஞானிகளை சமரசமாவதில் பாராட்டு பெற்றவர். சிறந்த சமயாளரான அவர் 1095 ல் சூபியின் வாழ்க்கையில் செல்ல ஆரம்பித்தார். இவர் பழமைவாதிகளாலும் சூபிக்களாலும் தீவிரமாக மதிக்கப்பட்டார். அல் - கசாலி என்பவர் பழமை வாத குழுக்களால்லாத மரபுக் குழுவை சொற்களால் தாக்கினார். இவர் ஆக்கப் பூவர்மான அறிவை, பகுத்தறிவினால் பெற முடியாது. ஆனால் அதை வெளிப்படுத்தக் கூடிய செயல்களில் மட்டுமே பெற முடியும் என்று கூறினார். உலிமாக்கள் செய்தது போலவே, சுபிக்களும் அவர்களது விசுவாசத்தை குரானுக்கு செலுத்தினார்கள்.

புதிய கல்விமுறை அரசினால் அமைக்கப்பட்டதால் கசாலியின் கருத்துகள் மிகச் சிறந்ததாக இருந்தன. இது உயர் படிப்பிற்கான கருத்தரங்கு ஆய்வுக் கூடங்கள் (மதராசக்கள்) நிறுவப்பட்டு அங்கு அறிஞர்கள் ஆகாரியின் கருத்துகளுடன் பரிச்சயமானார்கள், பழமை வாதியான சன்னி கருத்துகளின் படி எவ்வாறு அரசை நடத்தவேண்டும் என அவர்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டது. இத்தகைய அறிஞர்கள் உலிமாக்கள் என அழைக்கப்பட்டனர். இடைக்கால இந்தியாவில் உலிமா, அரசியலில் முக்கிய பங்கை வகித்தனர்.

### சூபிகள்

உலிமாவுக்கு எதிரிடையாக சூபிக்கள் இருந்தனர். இறைப்பற்று கொண்ட இவர்கள் அரசியல் சமய வாழ்க்கை சீர் கேடாவதைக் கண்டு அதிர்ச்சியுற்றார்கள். அவர்கள் பொது வாழ்க்கையில் பொருள் வளத்தை பண்பற்ற நிலையில் காட்சிப் படுத்துவதை எதிர்த்தனர் தெய்வ பக்தி

இல்லாத ஆட்சியாளர்களுக்கு பணிவிடை செய்ய உலிமாக்கள் ஆயுத்தமானார்கள். பலர் அரசுடன் எந்தவித செயல்பாடும் இல்லாததினால் ஒய்வு பெற்ற கடும் துறவற வாழ்க்கையை மேற்கொள்ள ஆரம்பித்தனர். சூபி தத்துவம் உலிமாவின் தத்துவங்களிலிருந்து வேறுபடுகிறது. சூபிகள் சுதந்திரமாகச் செயல்படுவதுடன் சுதந்திர கருத்துகளை வலியுறுத்தினர். அவர்கள் சமயத்தின் முறையான வழிபாடு, மாற்றமின்மை வெறித்தனம் ஆகியவற்றிற்கு எதிராக இருந்தனர். சமய திருப்தியை அடைவதற்கு சூபிக்கள் தியானம் செய்வதற்கு முனைந்தார்கள். பக்தி துறவிகளைப் போலவே சூபிக்களும் சமயம் என்பது கடவுளின் அன்பும் மனித இனத்திற்கான சேவை என விளக்கினார்கள். நாளடைவில், சூபிகள் வெவ்வேறு சில்சிலாக்களாகப் (கட்டளைகள்) பிரிந்து ஒவ்வொரு சில்சிலாவும் க்வாஜா அல்லது ஹெயிக் என அழைக்கப்பட்ட தங்களுடைய பீர் (வழிகாட்டி) யை வைத்துக் கொண்டனர். பீர்ரும் அவருடைய சீடர்களும் கான்கஹில் (இறக்கும் நிலையில் உள்ளவர்களைப் பேணும் மருத்துவமனை) வாழ்ந்தனர். பீர் அவருடைய சீடர்களிலிருந்து பின்னுறுமையாளர் அல்லது வாலியை அவருடைய வேலையை செய்வதற்கு நியமித்தார். சூபிகள் மெய்யுணர்வு பரவச நிலையைத் தூண்ட சாமாக்களை (புனித பாடல்களை ஒப்புவித்தல்) நடத்தினார்கள். ஈராக்கிலுள்ள பஸ்ரா, சூபிகளின் செயல்பாடுகளுக்கு மையமாகத் திகழ்ந்தது. சூபி துறவிகள் புதிய சமயத்தை தோற்றுவிக்கவில்லை. ஆனால் இஸ்லாமிய மதத்திற்குள் முற்போக்கான சுதந்திர இயக்கத்திற்கு தயார் செய்து கொண்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. உலிமாக்கள் செய்தது போலவே, சூபிகளும் அவர்களது விசுவாசத்தை செலுத்தினார்கள்.

## இந்தியாவில் சூபியிசம்

இந்தியாவில் சூபியிசத்தின் வருகை 11, 12ம் நூற்றாண்டு என சொல்லப்படுகிறது. தாதாகன்சி பக்ஷ் (அளவில்லாத சொத்துகளை விநியோகம் செய்பவர் என்றழைக்கப்பட்ட) முந்தைய சூபிகளில் குறிப்பிடத்தக்க இந்தியாவில் குடியேறின அல்ஹஜ்வாரி 1089-இல் காலமானார். தொடக்கத்தில் முல்தான், பஞ்சாபி சூபிகளின் முதன்மையான மையங்களாக திகழ்ந்தது. 13-ஆம் 14-ஆம் நூற்றாண்டுகளிடையே சூபிகள் காஷ்மீர், பீஹார், வங்காளம், தக்காணத்திற்கு பரவினார்கள். சூபிசம் இந்தியாவிற்கு வருமுன்பே உறுதியான வடிவமைப்பினைக் கொண்டிருந்தது. இதனுடைய அடிப்படை, நீதி கொள்கைகள், போதனைகள் கட்டளைகள், விரத முறைகள், வழிபாட்டு வாசகங்கள் இறக்கும் நிலையில் உள்ளவர்களைப் பேணும் மருத்துவமனையில் வாழ்வது போன்றவை ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுவிட்டது. சூபிகள் ஆப்கானிஸ்தான் வழியாக அவர்களுடைய தன்னியல்பின் பேரில், இந்தியாவிற்கு வந்தனர். அவர்களது தூய்மையான வாழ்வு, பக்தியூட்டும் அன்பு மனித இனத்திற்கு சேவை ஆகியவற்றை வலியுறுத்தியது. அவர்களை புகழ் மிக்கவர்களாக இந்திய சமுதாயத்தில் ஒரு பெருமையான இடத்தை ஈட்டிக் கொடுத்தது.

அபுல் பாசல், அயினி - இ- அக்பரியை எழுதும் பொழுது சூபிகளின் 14 சில் சிலாக்களை பற்றி கூறுகிறார். இருந்தாலும் சில முக்கியமான சில்சிலாக்களின் சுருக்கமான வர்ணனையைப் பார்க்கலாம். இத்தகையை சில்சிலாக்கள் பா-ஷாரா மற்றும் பி-ஷாரா என 2 வகைகளாகப் பிரிக்கப்பட்டன. பா - ஷாராஜ்கள் இஸ்லாமிய சட்டம் (ஷாரியா), நமாஸ், ரோசா போன்ற அதிகாரப்பூர்வமான ஆணைகளை பின்பற்றியது. அவர்களில் முக்கியமானவர்கள் சிஸ்டி, சுஹரவார்டி, பிர்தௌசி, காடிரி நக்ஷ் பந்தி ஆகிய சில்சிலாக்கர்களாகும். பிஷாரா சில்சிலாக்கள் ஷாரிலாவிற்கு கட்டுபடவில்லை.

## சிஷ்டி சில்சியா

சிஷ்டி ஆடர், க்வாஜா சிஷ்டி (ஹிரட்டுக்கு அருகில்) என்றழைக்கப்படுகிற கிராமத்தில் தோற்றுவிக்கப்பட்டது. சிஷ்டி சில்சா கிட்டத்தட்ட 1192 ல் இந்தியாவிற்கு வந்த க்வாஜா முயினுதின் சிஷ்டி (1142 இல் பிறந்த) யால் இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்டது. அவர் ஆஜ்மிரை தனது போதனைகளின் முக்கிய மையமாக செய்தார். அவர் மனித இனத்திற்கு சேவை செய்தலே, சிறந்த பக்தி என்றும், ஆகையால் அவர் பின் தங்கினவரிடையே வேலை செய்தலையும் நம்பினார். 1236 இல் ஆஜ்மீரில் அவர் இறந்து விட்டார். முகலாயர் காலத்தில் ஆஜ்மீர் முதல் தரயாத்திரை மையமாக ஆனது. ஏனென்றால் பேரரசர்கள் தவறாது ஷேக்கினுடைய சமாதியை பார்வையிட்டார்கள். இன்றைய நாளில் கூட மில்லியன் கணக்கான முஸ்லிம்கள், இந்துக்கள் தங்களுடைய விருப்பங்கள் நிறைவேற, இவருடைய தர்காவைப் பார்வையிடுவதிலிருந்து இவருடைய புகழ் விரிவானதிற்கான உண்மையைக் காணமுடிகிறது. இவருடைய சீடர்களில் நாகூரைச் சார்ந்த ஷேக் ஹிமிதுடின், குத்புதின் பக்தியார் காகி ஆகியோர் இருந்தனர். முதலில் குறிப்பிடப்பட்டவர் ஏழை விவசாயியைப் போல நிலத்தை உழுது, இலதுமிவின் கிராம தானத்தை உதறி மறுத்து விட்டார். கான்காகின் குத்புதின் பக்தியார் காசியையும் சமுதாயத்தின் எல்லா படி நிலையில் இருப்பவர்களாலும் பார்வையிடப்பட்டது. சுல்தான் இலதுமிஷ் குதுப்மினரை, இந்த புனிதருக்காக அர்பணித்தார். அஜோதனை (பாகிஸ்தானில் உள்ளபட்டன்) சார்ந்த ஷேக் பரிடுடின், சிஷ்டி சில் சிலாவை நவீன ஹரியானாவிலும் பஞ்சாப்பிலும் பிரபலப்படுத்தினார். அன்பும் பரந்த மனப்பான்மையும் என்ற வாயிலை எல்லோருக்கும் திறந்து வைத்தார். 'பாபா பரித்' என்று அழைக்கப்பட்ட இவர் முஸ்லீம்கள், இந்துக்கள் ஆகிய இருவராலும் மதிக்கப்பட்டார். பஞ்சாபி மொழியில் எழுதப்பட்ட இவரது சமய பாடல்கள் ஆதுகிரந்தத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

பாபா பரிதாவின் மிக்க புகழ் பெற்ற சீடரான சேக் நைஜாமுதீன் அவுலியா (1238- 1325) டெல்லியை, சில் சிலாவின் முக்கிய மையமாக்குவதற்கு பொறுப்பானவராக இருந்தார். அவர் 1259இல் டெல்லிக்கு வந்தார் டெல்லியில் 60 ஆண்டு காலத்தில், ஏழு சுல்தான்களின் ஆட்சியைக் கண்டிருக்கிறார். இவர் ஆட்சியாளர்கள் பிரபுக்களின் தோழமையினின்று விட்டு விலகி அரசிடமிருந்து விடுபட்டு தனிமையாக இருப்பதை தேர்ந்தெடுத்தார். அவருக்கு துறத்தல் என்பதன் பொருள், ஏழைகளுக்கு உணவு உடைகளை வழங்குவதாகும். இவருடைய சீடர்களில் 'அமிர்குஸ்ரு' குறிப்பிடத்தக்க எழுத்தாளர் ஆவார்.

நாசீருதின் சிராக் - இ - தில்லி (டெல்லியின் விளக்கு) என்று புகழப்பட்ட ஷேக் நசுருதின் முகமது மற்றுமொரு புகழ் பெற்ற சிஷ்டி புனிதர் ஆவார். 1356இல் அவரது இறப்பை தொடர்ந்து ஆன்மீக பின்னுரிமையாளர்கள் இல்லாததால் சிஷ்டி சில்லாவின் சீடர்கள், கிழக்கிந்தியாவையும் தென்னிந்தியாவையும் நோக்கிச் சென்றார்கள்.

## சுஹரவார்டி சில்சிலா

இந்த சில்சிலாவை, ஷேக் ஷிகாபுதின் சுப்ரவார்தியால் தோற்றுவிக்கப்பட்டது. இது இந்தியாவில் ஷேக் பகுதின் சக்காரியாவால் (1182 - 1262) ஏற்படுத்தப்பட்டது. இவர் முல்டானில் அமைந்த முதன்மையான கன்காவை ஆட்சியாளர்கள். அரசு மேல்நிலை அலுவலர்கள் செல்வந்த வணிகர்களால் பார்வையிடப்பட்டது. ஷேக் பகுதின் ஜக்காரியா வெளிப்படையாக இல்துமிஷின் பக்கம் சேர்ந்து கபச்சாவை எதிர்த்து. அவரிடமிருந்து 'ஷேக்கல் இஸ்லாம்' (இஸ்லாமியத்தின் தலைவர்) என்ற பட்டத்தை பெற்றார். சிஷ்டி புனிதர்களைப் போலவே, சுஹ்ரவாடிகள் அரசுடன் நெருங்கிய தொடர்பை பராமரித்தனர். அவர்கள் பரிசுகள் ஜாகிர்கள் மதசார்புத் துறையைச் சார்ந்த அரசு பதவிகளை ஏற்றுக் கொண்டனர்.

சுக்ரவாடி சில்சிலா, பஞ்சாப், சிந்துவில் வலிமையாக அமைக்கப்பட்டது. இந்த இரண்டு சில்சிலாக்கள் தவிர, அங்கு பிர்தௌசி சில்சிலா ஷட்டாரி சில்சிலா காடிரி சில்சிலா, நக்ஷ்பந்தி சில்சிலா போன்ற மற்ற சில்சிலாக்களும் இருந்தன.



குறிப்புகள்

## 9.2 சுபி இயக்கத்தின் முக்கியத்துவம்

சுபி இயக்கம், இந்திய சமுதாயத்திற்கு விலை மதிக்க முடியாத பங்களிப்பை கொடுத்துள்ளது. பக்தி புனிதர்கள் இந்து மதத்திலுள்ள தடைகளை தகர்ப்பதில் ஈடுபட்டார்கள். அவர்களைப் போலவே சுபி சாதுக்களும் இஸ்லாமியத்தில் புதிய சுதந்திரமான கருத்துகளை புகுத்தினார்கள். 15ஆம் நூற்றாண்டின் முந்தைய பகுதியும் சுபிக்களின் கருத்துப் பரிமாற்றங்களும், அதிகமாக விடுதலை இயக்கங்களுக்கு அடித்தளமிட்டன. சந்த கபீரும் குரு நானக்கும், உலக அன்பை அடிப்படையாகக் கொண்டு சமயப் பிரிவுணர்ச்சி இல்லாமல் போதித்தனர்கள். சூபிகள், இபின் - ஐ - அராபியால் (1165 - 1240) ஊக்கப் படுத்தப்பட்ட வஹதத் - உல் - வாஜிட் (ஒற்றுமையாக இருத்தல்) என்ற கோட்பாட்டை நம்பினர். அவர் எல்லா உயிர்களும் முக்கியமான ஒன்று எனக் கருதினார். பல்வேறு சமயங்கள் ஒரே தன்மையைக் கொண்டிருந்தன. இந்தக் கோட்பாடு இந்தியாவில் புகழைப் பெற்றது. அங்கு சூபிகள், இந்திய யோகிகள் ஆகியோருக்குமிடையேயும் ஏராளமான கருத்துப் பரிமாற்றங்கள் இருந்தன. மேலும் ஹதாயோகாவின் ஆய்வு நூலான அமிர்தா குண்டா அரேபிய, பாரசீக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது.

சமுதாயத்தில் சூபிகளின் குறிப்பிடத்தக்க பங்களிப்பு ஏழ்மையான நலிவடைந்த பிரிவு மக்களுக்கு பணிபுரிதலே ஆகும். சுல்தான், உலிமா மக்களின் அன்றாட பிரச்சனைகளிலிருந்து அடிக்கடி விலகி இருந்தனர். அதே சமயம் சுபி புனிதர்கள், சாதாரண மக்களுடன் நெருங்கிய தொடர்பை பராமரித்தனர். ஏழைகளுக்கும் தேவைப்படுவோருக்கும் சமயம் அல்லது சாதிமுறையை பொருட்படுத்தாமல் பரிசுகளை விநியோகம் செய்வதில் நிஜாமுதீன் அலுவியா புகழ் பெற்றிருந்தார். கான்காவிற்கு வருகின்ற ஒவ்வோரு பார்வையாளரைப் பற்றி கேட்கும் வரை இவர் ஓய்ந்ததில்லை என சொல்லப்படுகிறது. சூபிகளின் கூற்றுப்படி மனித இனத்திற்கு பணி செய்வதே, கடவுளுக்கு அர்பணிக்ககூடிய ஆழ்ந்த பக்தியாகும். அவர்கள் இந்துக்கள், முஸ்லீம்களை சமமாக நடத்தினார்கள். அமிர்குஸ்ரு “சமயத்தில் இந்து என்னைப் போல இல்லாவிட்டாலும், அவன் நான் செய்கிறதை அவன் அதிலேயே நம்பிக்கை கொள்கிறான் என கூறினார்.

சுபி இயக்கம், சமத்துவம், சகோதரத்வத்தை ஆர்வமுட்டியது. சமத்துவத்தை தொலைவிலுள்ள சுபிக்கள், உலிமாவை விட மதித்தார்கள் என இஸ்லாமிய மதம் வலியுறுத்துகிறது. சுபிக்களின் கோட்பாடுகள் பழமை வாதிகளால் கண்டிக்கப்பட்டது. சுபிக்களும் உலிமாவை கண்டித்தார்கள். அவர்கள் உலிமாக்கள் உலக சபலங்களுக்கு இணங்கி மற்றும் குரானின் உண்மையான ஜனநாயக, சமத்துவ கொள்கையினின்று விலகிச் சென்று கொண்டிருந்தார்கள் என நம்பினர். இந்தப் போர் பழமைவாதிகள் விடுதலை விரும்பிகளுக்கும் இடையே 16, 17 மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளிலும் தொடர்ந்தது. சுபி புனிதர்கள், சமூக சீர்த்திருத்தங்களையும் கொண்டு வர முயற்சித்தார்கள்.

பக்தி புனிதர்களைப் போலவே, சுபி புனிதர்கள் வளமான வட்டார இயக்கியங்களின் வளர்ச்சிக்கு பங்களித்தார்கள். உள்ளூர் மொழியிலேயே எழுவதற்கு தேர்ந்தெடுத்த பெரும்பாலான சுபி புனிதர்கள் கவிஞராவர்கள். பாபா பரித் சமயம் சார்ந்தவைகளை எழுதுவதற்கு பஞ்சாபி மொழியை பயன்படுத்த சிபாரிசு செய்தார். இவருக்கு முன்பே ஹிண்டாவியில் ஷேக் ஹமிதுடின் எழுதி விட்டார். இவருடைய முந்தைய ஹிண்டாவி மொழி பெயர்ப்பான பாரசீக ஆன்மீக பொருளைக் கொண்ட கவிதைகள் மிகச் சிறந்த எடுத்துக்

காட்டுகளாகும். டெகானி ஹிந்தியின் முதல் எழுத்தாளர் சையத் ஜெசுடாரஸ் ஆவார். இவர் மறை மெய்ம்மையை விளக்குவதற்கு பாரசீகத்தை விட ஹிந்தி, கருத்துக்களை வெளிப்படுத்துகிறது. ஏராளமான சுபி நூல்களும் வங்காள மொழியில் எழுதப்பட்டன.

இக்காலத்திய மிகவும் குறிப்பிடத்தக்க எழுத்தாளர் நிஜாமுதீன் அவுலியாவின் ஆதரவாளரான அமிர் குஸ்ரு ( 1252 - 1325) என்பவராவார். குஸ்ரு இந்தியனாக இருப்பதற்கு பெருமை கொள்கிறார். இந்துஸ்தானின் வரலாறு மற்றும் பண்பாட்டை தன்னுடைய மரபின் ஒரு பகுதியாக நோக்கினார், அவர் கவிதைகளை ஹிந்தியில் (ஹிண்டாவி) எழுதினார் மற்றும் பாரசீக யாப்புகளை ஹிந்தியில் பயன்படுத்தினார். இவர் சபக் - இ - ஹிந்தி என அழைக்கப்பட்ட புதிய பாணியை உருவாக்கினார். 15-ம் நூற்றாண்டுகளில் ஹிந்தி ஒரு முழு வடிவத்தை பெறத் தொடங்கியது. கபீர் போன்ற பக்தி புனிதர்களால் பயன்படுத்தப்பட்டது.

### இப்பகுதிக்கான கேள்விகள் 9.1

1. உலிமாக்கன் என அழைக்கப்பட்டவர் யார்?
2. கலாம் என்பதன் பொருள் என்ன?
3. தாதா கங்சு பக்ஷ என அழைக்கப்பட்டவர் யார்?
4. அய்னி - ஐ - அக்பரி எத்தனை சில்சிலாக்களைப் பற்றி கூறுகிறது?
5. கவாஜா முயினுதினின் கிஷ்டி கன்கா எங்கு அமைந்துள்ளது?
6. இஸ்லாமிய சட்டத்தின் மறுபெயர் என்ன?
7. சிராக்- இ - தில்லி ( தில்லியிள் ஒளி விளக்கு) என்று அழைக்கப்படுபவர் யார்?

## 9.3 பக்தி இயக்கம்

தமிழ்நாட்டில் பக்தி இயக்கத்தின் முன்னேற்றம் 7-ம் மற்றும் 12-ம் நூற்றாண்டுகளுக்கும் இடையே ஏற்பட்டது. இது நாயன்மார்கள் (சிவ பக்தர்கள்) மற்றும் ஆழ்வார்களின் (விஷ்ணு பக்தர்கள்) உணர்ச்சி மிக்க கவிதைகளில் பிரதிபலித்தது. இத்தகைய புனிதர்கள் சமயத்தை அன்பில்லாத வழிபாடு என்று எண்ணாமல் வழிபடுபவர்களுக்கும் வழிபடப்படுபவர்களுக்கும் இடையே இது அன்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு அன்புப் பிணைப்பு என நோக்கினர். தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய உள்ளூர் மொழிகளில் எழுதினதால் பல மக்களை சென்றடைய முடிந்தது.

நாளடைவில் தெற்கத்திய கருத்துக்கள் வடக்கை நோக்கி நகர்ந்தன. ஆனால் இது ஒரு மெதுவான செயல்முறையாகும். இன்று வரை எண்ணங்களின் ஊர்தியாக இருந்த சமஸ்கிருதத்திற்கு ஒரு புதிய வடிவம் கொடுக்கப்பட்டது.

ஆகையால், 9ம் நூற்றாண்டைச் சார்ந்த பாகவத புராணம் பழைய புராண வடிவத்தில் எழுதப்படவில்லை என்பதை நாம் காணலாம். இந்நூல் கிருஷ்ணரின் குழந்தைப் பருவம் மற்றும் இளமை பருவத்தையும் மையங் கொண்டிருப்பதால் கிருஷ்ணரின் அருஞ்செயல்களை ஆழ்ந்த தத்துவத்தை சாதாரணமாக உணர்த்த இந்த நூல் பயன்படுகிறது. இந்த நூல் வைஷ்ணவ இயக்க வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. பக்தி இயக்கத்தின் உள்ளடக்கிய ஒரு பகுதியாக ஆனது.

பக்தி கருத்தியல் பரப்புவதில் உள்ளூர் மொழிகளின் பயன்பாடு ஒரு சக்தி வாய்ந்த முறையாகும். பக்தி முனிவர்கள் தங்களுடைய கவிதைகளை உள்ளூர் மொழியிலேயே தொகுத்தனர். ஏராளமான பார்வையாளர்கள் புரிந்து கொள்ளத்தக்க வகையில் அவர்கள்



சமஸ்கிருத மொழியையும் மொழி பெயர்த்தனர். இவ்வாறாக, ஞான தேவா எழுத்துக்களை மராத்தியிலும், கபீர், சூர்தாஸ் மற்றும் துளசிதாசின் எழுத்துக்களை ஹிந்தியிலும் சங்கரதேவா பிரபலமடைந்தது. அஸ்ஸாமியத்திலும் சைதன்யா மற்றும் சந்திதாஸ் வங்காள மொழியில் அவர்களுடைய செய்திகளைப் பரப்புவதிலும், மீராபாய் ஹிந்தி மற்றும் ராஜஸ்தானியிலும் இருந்ததை நாம் காணலாம். இதனுடன் காஷ்மீரி, தெலுங்கு, கன்னடம், ஒரியா, மலையாளம், மைதிலி மற்றும் குஜராத்தி ஆகிய மொழிகளில் பக்தி கவிதைகள் தொகுக்கப்பட்டன.

பக்தி புனிதர்கள் மோட்சத்தை எல்லோராலும் அடைய முடியும் என நம்பினார்கள். அவர்கள் கடவுளின் முன்னிலையில் சாதி சமயக் கோட்பாடு அல்லது சமயத்தில் எவ்வித வேறுபாடும் கொள்ளவில்லை. அவர்களே வெவ்வேறு பின்னணியிலிருந்து வந்தவர்கள். பழமைவாத பிராமண குடும்பத்தை சார்ந்த இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களும் ராமானந்தரின் சீடர்களில் அடங்குவர். இவருடைய சீடர் கபீர் ஒரு நெசவாளர். குருநானக் கிராமிய கணக்கரின் மகனாவார். நாம்தேவ் ஒரு தையற்காரர், புனிதர்கள் சமத்துவத்தை வலியுறுத்தினார்கள், சாதிமுறையை பொருட்படுத்தவில்லை மற்றும் நிறுவனம் சார்ந்த சமயத்தை கண்டித்தனர். புனிதர்கள் தங்களை முற்றிலும் சமயக் கருத்துக்களுக்கு மட்டும் உட்படுத்திக் கொள்ளவில்லை. அவர்கள் சமூக சீர்திருத்தங்களையும் ஆதரித்தார்கள். அவர்கள் சதி மற்றும் பெண் சிசுக்கொலையை எதிர்த்தனர். பெண்கள் கீர்த்தனங்களில் சேருவதற்கு ஊக்கமளிக்கப்பட்டது. மீராபாய் மற்றும் லல்லா (காஷ்மீரின்) கவிதைகளை தொகுத்தார், அவைகள் இன்றும் புகழ் பெற்று வருகிறது.

சமய பிரிவுணர்ச்சியில்லாத பக்தி புனிதர்களிடையே முதன்மையான பங்களிப்பு கபீர் மற்றும் குருநானக்கால் அளிக்கப்பட்டது. அவர்களுடைய கருத்துக்கள் இந்து மற்றும் இஸ்லாமிய மரபுகளினின்று எடுக்கப்பட்டு மற்றும் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே உள்ள இடைவெளியை இணைப்பதாகும். நாம் இதை விரிவாக அவற்றைப் பற்றி படிக்கலாம்.

**கபீர் (1440 - 1518)** ஒரு பிராமணனால் கைவிடப்பட்ட ஒரு விதவையின் மகன் என சொல்லப்படுகிறது. ஒரு முஸ்லீம் நெசவாளர் வீட்டில் வளர்ந்தார். கடவுளை அடைய தானாகவே அனுபவிக்ககூடிய பக்தி அல்லது சமய அர்ப்பணம் என கபீர் நம்பினார். படைப்பவர் ஒருவரே என நம்பினார். இவருடைய கடவுளை ராமா, ஹரி, கோவிந்தா, அல்லா, ரஹீம், குதா முதலிய பலபெயர்களில் அழைக்கப்பட்டார். முஸ்லிம்கள் அவரை சுபி என்றும், இந்துக்கள் அவரை ராமா பக்தா எனவும் மற்றும் சீக்கியர்கள் அவருடைய பாடல்களை “ஆதி கிரந்தில்ஞ சேர்ந்துக் கொண்டனர். கபீருக்கு சமயத்தின் வெளிப்படையான அம்சங்கள் அர்த்தமற்றவையாகும். இவருடைய நம்பிக்கைகள் மற்றும் கருத்துக்கள் இவரால் தொகுக்கப்பட்ட தோகாக்களில் (சக்தி) பிரதிபலித்தன. ஒரு கல்லை (சிலை) வழிபடும் பொழுது ஒருவர் கடவுளை அடையமுடியும் பிறகு அவன் ஒரு மலையை வழிபாடு செய்வதற்கு விருப்பப்பட்டவனாகிறான் என இவருடைய தோகாக்களில் ஒரு தோகா கூறுகிறது. இது ஒரு மாவரைக்கும் கல்லை வழிபடுவது சிறந்தது. ஏனென்றால் அது வயிற்றையாவது நிரைக்கும்.

கபீர் சமயத்தில் எளிமையை வலியுறுத்தினார் மற்றும் பக்தி ஒன்றே இறைவனை அடைவதற்கு சுலபமான வழி என்று கூறினார். இவர் முந்தைய காரணங்கள் இல்லாமல் பரவலாகக் காணப்படுகிற சமய நம்பிக்கைகளை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். இவருக்கு ஒரு மனிதன் கடின வேலையில்லாமல் வெற்றியை அடைய முடியாது. இவர் கடமைகளை ஒதுக்கித்தள்ளுவதை விட செயல்படுத்துவது ஈடானது என்பதை ஆதரித்தார். கபீரின் நம்பிக்கையான கடவுளின் ஒற்றுமை இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களை இவருடைய சீடர்களாக முன்னேற்றியது.

கபீரின் கருத்துக்கள் சமயத்திற்கு தடை செய்யவில்லை. இவர் சமுதாயத்தின் குறுகிய எண்ணங்களை மாற்ற முயற்சித்தார். இவருடைய கவிதைகள் ஆற்றல் மிக்கதாக மற்றும்

நெறிப்படுத்துவதாக இருந்தது. இதை சுலபமாகப் புரிந்துகொள்ள முடிந்தது. இவற்றில் பெரும்பான்மையானவை நாம் தினசரி பேசும்மொழியில் கடந்து சென்றவையாகும்.

**குருநானக்** மற்றுமொரு நான்கனா மரபுக்குழுவின் ஆதரவாளர் குருநானக் (1469 - 1539) ஆவார். இவர் தால்வண்டியில் (நக்கனா சாகிப்) பிறந்தார். இவர் இளவயதிலிருந்தே கற்றலின் ஆன்மீக வாழ்வை நோக்கிச் சென்றார். ஏழைகளுக்கும் தேவைகளை வேண்டுவோருக்கும் உதவியாக இருந்தார். இவருடைய சீடர்கள் தங்களை சீக்கியர் என அழைத்துக் கொண்டனர். (தகவல் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டது சமஸ்கிருத சிஸ்யா, சீடர் அல்லது பாலிசிக்கா).

குருநானக்கின் தனிப்பண்பு, சமாதானம் ஆகியவற்றை இணைத்தது. குருநானக்கின் நோக்கம், நடைமுறை-யிலிருக்கிற லஞ்சத்தையும் சமுதாயத்தை இழிவு படுத்துகிற பழக்கங்களை நீக்குவதாகும். இவர் சமத்துவ கொள்கையுடைய சமூக வரிசையை ஏற்படுத்துவதற்காக, ஒரு புதிய வழியைக் காட்டினார். கபீரைப் போலவே குருநானக்கும் சமய குருவாக இருந்தது போலவே சமூக சீர்திருத்தவாதியாகவும் இருந்தார். இவர் பெண்கள் நிலையின் வளர்ச்சிக்கு அழைப்பு விடுத்தார். அவர் அரசர்களுக்கு குழந்தை பெற்றுக் கொடுக்கிற பெண்கள், தீயவைகளைப் பேசுதல் கூடாது எனக் கூறினார். இவருடைய வானி (வார்த்தைகள்) மற்ற சீக்கிய குருக்களுடன் சேர்த்து, சீக்கியர்களின் புனித புத்தகமான குரு கிரந்த் சாகிப் தொகுக்கப்பட்டது.

## வைணவம்

கபீர், நாமதேவ், குருநானக் போன்ற புனிதர்கள் பக்தியை நிரன்கர் வடிவம் கொண்ட கடவுள் என போதித்தனர். இக்காலத்தில் பக்தியை அடிப்படையாகக் கொண்ட மற்றுமொரு சாகர் வடிவம் கொண்ட இயக்கமும் வளர்ச்சி அடைந்தது. வைணவத் இயக்கம் என அழைக்கப்பட்ட இந்த இயக்கம் ராமரையும் கிருஷ்ணனையும் விஷ்ணு கடவுளின் அவதாரங்களாகக் கொண்டு வழிபடுதலை மையமாகக் கொண்டு இயங்கினார்கள். சூர்தாஸ், மீராபாய், துளசிதாஸ், சைதன்யா ஆகியோர் இதனுடைய முக்கிய ஆதரவாளர்களாவர். அவர்கள் மோட்சதத்திற்கான வழியை கவிதை பாடல், நடனம், கீர்த்தனங்கள் போன்ற ஊடகங்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சூர்தாஸ் (1483 - 1563) புகழ் பெற்ற ஆசிரியரான வல்லபாச்சாரியாவின் சீடராவார். கிருஷ்ணாவை மையமாக வைத்துப் பாடிய இவர் ஒரு பார்வையற்ற கவிஞர். இவருடைய 'சூர்சாகர்' கிருஷ்ணனின் குழந்தைப் பருவம், கனிவான அன்பு, மகிழ்வுடன் கூடிய இளமைப்பருவத்தை விவரிக்கிறது.

கிருஷ்ணாவின் மீதுள்ள அன்பையும் மீராபாயின் (1503 - 73) பாடல்கள் வெளிப் படுத்துகின்றன. இளம் வயதிலேயே விதவையான இவள் தன்னுடைய இறைவனுடன் ஆன்மீக திருமணத்தில் நம்பிக்கை கொண்டாள். அவளுடைய கவிதைகள் அவர்களுடைய சொந்த தனித்திறமை வாய்ந்ததாக இருந்தது, இன்றும் பிரபலமாக உள்ளது.

சைதன்யாவின் முயற்சியால் வைணவ இயக்கம் (1484 - 1533) கிழக்கில் பரவினது. சைதன்யா கிருஷ்ணனை விஷ்ணுவின் அவதாரம் மட்டுமில்லை, ஆனால் ஒரு உயர்ந்த வடிவத்தைக் கொண்ட கடவுள் என கருதினார். கிருஷ்ணனின் மீதான பக்தியை, சங்கீர்த்தனங்கள் (பக்தர்களால் பாடப்படும் சமயப் பாடல்கள்) மூலமாக வீடுகளில் கோவில்களில், தெரு ஊர்வலங்களில் வெளிப்படுத்தப்பட்டன. மற்ற புனிதர்களைப் போலவே, சைதன்யாவும் சாதி எதுவும் பொருட்படுத்தாமல், எல்லோரையும் ஒரே கூரையின் கீழ் வர வரவேற்க விருப்பம் கொண்டார். இவ்வாறாக புனிதர்கள் சமத்துவ உணர்வுகளை மக்களிடையே வளர்ச்சியடைச் செய்தார்கள.

இராமர் வழிபாட்டை ராமானந்தா (1400 - 1470) போன்ற புனிதர்களால் பிரபலமானது. அவர் ராமரை முதன்மையான கடவுளாக கருதினார். பெண்களும் ஒதுக்கி வைக்கப்பட்டவர்களும் வரவேற்கப் பட்டார்கள், மிகவும் புகழ் பெற்ற இராம பக்தர் இராமசரித்ரமனசை எழுதின துளிசிதாஸ் (1532 - 1623) ஆவார்.

வைஷ்ணவ புனிதர்கள், பரந்த இந்து சமய கருத்துக்களுக்குள், அவர்களுடைய தத்துவத்தை வளர்ச்சியடையச் செய்தார்கள். அவர்கள் சமயச் சீர்திருத்தங்கள், மனிதர் களுக்கிடையே அன்பு ஆகியவற்றை வரவேற்றனர். அவர்களுடைய தத்துவம் மொத்தத்தில் மனித்தன்மை கொண்டது.

## 9.4 பக்தி இயக்கங்கள் சூபி இயக்கங்களின் முக்கியத்துவம்

பக்தி இயக்கம், ஒரு சமூக சமய இயக்கம், அது சமயவெறி, சமூக இறுக்கங்களை எதிர்த்தது என்பதை நீங்கள் உணர்வீர்கள் . இது நல்ல நடத்தை, தூய எண்ணங்களை வலியுறுத்தியது, சமுதாயம் தூய்மை கெட்டு இருந்த காலத்தில் பக்தி புனிதர்கள், புதிய வாழ்க்கையை ஆற்றலை உட்புகுத்தினார்கள். அவர்கள் புதிய நம்பிக்கையுணர்ச்சியை எழுப்பினார்கள், சமூக சமய விழுமங்களின் விளக் கங்களை மாற்றியமைக்க முயற்சித்தார்கள். கபீர், குரு நானக் போன்ற புனிதர்கள், சமத்துவக் கொள்கைகளின் வரிசையுடன் சமுதாயத்தை மறு ஒழுங்கமைக்க கட்டாயப் படுத்தினார்கள். சமூக சமத்துவத்திற்கு அவர்களுடைய வேண்டுகோள், பல நலிந்த மக்களை ஈர்த்தது. கபீர், குருநானக்கிற்கு, புதிய சமயத்தை தோற்றுவிக்கக்கூடிய விருப்பம் இல்லாவிட்டாலும், ஆனால் அவர்களுடைய இறப்பினைத் தொடர்ந்து, அவர்களுடைய ஆதராவாளர்கள், கபீர் பந்திகள் சீக்கியர்கள் என்ற முறையில் ஒன்றாக இணைந்தனர்.

பக்தி, சூபி புனிதர்களின் முக்கியத்துவம் அவர்கள் உருவாக்கின புதிய சூழ்நிலையில் இருந்தது. இவை இந்தியாவின் சமூக, சமய, அரசியல் வாழ்க்கையை பிந்தைய நூற்றாண்டுகளில் கூட பாதிப்பது தொடர்ந்தது. அக்பரின் தாராளமான கருத்துகள், இந்த சூழ்நிலையின் உருவாக்கம் தான் இந்த சூழ்நிலையில் தான் அக்பர் பிறந்து வளர்க்கப்பட்டார். குருநானக்கின் போதனைகள் ஒருதலைமுறையிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்கு கடந்து சென்றன. இதன் விளைவாக தனிப்பட்ட மொழி குருமுகி எழுத்து வடிவமும் குருகிரந்த சாகிப் என்ற சமய புத்தகத்துடன் தனிப்பட்ட சமயக்குழுவும் வளர்ச்சியடைந்தது. மகாராஜா ரஞ்சித்சிங்கின் தலைமையில் சீக்கியர்கள் அச்சமூட்டுகிற அரசியல் வலிமையை, வட இந்தியாவின் அரசியலில் வளர்த்தார்கள்.

பக்தி சூபி புனிதர்களின் பரிமாற்றம் இந்திய சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது. சுபி கோட்பாடான வஹதத் - அல் - உ ஜீட் (ஒற்றுமையாக இருத்தல்) இந்து உபநிடதங்களிலுள்ள தனிச்சிறப்புக்களைப் போலவே உள்ளது. பல சூபி கவிஞர்கள், பாரசீக கவிதைகளின் கோட்பாடுகளை விளக்குவதற்கு ஹிந்தி சொற்களை பயன்படுத்த முன்னுரிமை கொடுத்தார்கள். இவ்வாறாக மாலிக் முகம்நியத் ஜெய்சி போன்ற சூபி கவிஞர்கள் ஹிந்தியில் நூல்களை தொகுத்தார்கள். கிருஷ்ணா, ராதா, கோபி, ஜமுனா, கங்கா முதலிய பெயர்களை இலக்கியத்தில் பயன்படுத்துவது மிகவும் சாதாரணமாக ஆனது. மிர் அப்துல் வாஹித் என்ற குறிப்பிடத்தக்க சூபி ஹக்கைக் - இ- ஹிந்தி என்ற இஸ்லாமிய சொற்களை விவரிப்பதற்கு சரி நிகரான ஆய்வு நூலை எழுதினார். பிந்தைய காலங்களில் இந்த பரிமாற்றம் தொடரப்பட்டு, அக்பரும் ஜஹாங்கீரும் தாராள கொள்கையை பின்பற்றினர்.

பக்தி துறவிகளின் பிரபலமான செய்யுள்கள், பாடல்களும் இன்னிசை மறுமலர்ச்சியின் முன்னோடியாக திகழ்ந்தன. புதிய இன்னிசை தொகுப்புகள் கீர்த்தனைகளை குழுவாகப் பாடுவதற்காக எழுதப்பட்டன. இன்றும் கூட மீராபாயின் பஜனைகளும் துளசிதாசின் ‘சோபிஸ்டுகள்’ வழிபாட்டுக் கூட்டங்களில் ஒப்புவிக்கப்படுகின்றன.

குறிப்புகள்

## இப்பகுதிக்கான கேள்விகள் 9.2

1. வைஷ்ணவத் இயக்கத்தின் எந்த நூல் வைஷ்ணவை இயக்க வரலாற்றில் திருப்பு முனையாக ஆனது?
2. ஆதி கிரந்தம் எந்த சமயத்தின் புனித நூல்?
3. எவ்வாறு கபீரும் மற்றும் குருநானக்கும் மக்களிடையே மிகவும் புகழ் பெற்றவர்களாக ஆனார்கள்?
4. பெண்கள் அரசர்களுக்கு குழந்தை பெற்றுத்தரும் பெண்கள் இழிவான சொற்களைப் பேசக்கூடாது சொன்னவர் யார்?
5. சூர் சாகரை எழுதினவர் யார்?

**இடைக்கால இந்தியாவில் தத்துவம்:** முக்கியமான சமய இயக்கங்கள் மெய்ஞானிகளால் கொண்டுவரப்பட்டது. அவர்கள், சமய கருத்துகள், நம்பிக்கைகளுக்கு பங்களித் தார்கள். வல்லபாச்சார்யா, ராமானுஜா, நிம்பாரக்கா போன்ற பக்தி துறவிகள், புதிய தத்துவ எண்ணங்களை கொண்டு வந்தார்கள். இவைகளின் தொடக்கம், சங்கராச்சாரியாவின் அத்வைதா (இரட்டையல்லாத) தத்துவமாகும்.

**ராமானுஜாச்சாரியாவின் வஷிஸ்டாவைதம்:** விஷிஸ்டாவைத்தின் பொருள் மாற்றி யமைக்கப்பட்ட ஒரே கடவுள் வழிபாடு. இந்த தத்துவத்தின் படி இறுதியான உண்மை பிரம்மன் (கடவுள்), இயல்பு, ஆன்மா ஆகியவை அவனுடைய நிலைகளாகும்.

**ஸ்ரீகண்ட சார்யாவின் சிவத்வைதா:** இத்தத்துவத்தின் கூற்றுப்படி ஷக்தியுடன் கூடி இருக்கிற இறுதியான பிரம்மன் தான் ஷிவன். ஷிவன் இந்த உலகத்தில், இதற்கு அப்பாற்பட்ட உலகிலும் உள்ளவனாய் இருக்கிறார்.

**மாதவாச் சாரியாவின் தன்வதா:** திவைதாவின் அடிப்படை பொருள் இரு பகுப்புக் கொள்கை. இவை இரட்டை கொள்கையல்லாத, சங்காரச்சாரியாவின் ஒரே கடவுள் கொள்கைகளுக்கு எதிராக இருந்தது. இவர் உலகம் என்பது மாயை அல்ல (மாயா) ஆனால் உண்மை வெவ்வேறு நிலைகளில் நிறைந்துள்ளது.

**நிம்பாரக்காவின் திவைதாத் வைதம்:** திவைத்தாத் வைதம் என்பது இரு பகுப்பை கொண்ட ஒரே கடவுளின் நிலை. இந்த தத்துவத்தின் படி கடவுள் தன்னை உலகமாக ஆன்மாவாக மாற்றிக்கொள்கிறார். இந்த உலகமும் ஆன்மாவும் கடவுளினின்று (பிரம்மன்) வேறுபட்டது. கடவுளின் அனுக்கிரகத்தின் படிதான் ஜீவிக்க முடியும். அவை வேறுபட்டாலும் ஒன்றையொன்று சார்ந்தவைகளாகும்.

**வல்லபாச்சாரியாவின் சுத்தவைதா:** வல்லபாச்சாரியா, வேதாந்த சூத்ரா மீதும் பகவத் கீதையின் மீதும் விளக்கங்களை எழுதியுள்ளார். இவரை பொறுத்தவரை ஸ்ரீகிருஷ்ணராயிருந்த பிரம்மன் தன்னை ஆன்மாக்களாக பண்பின் நிலைகளாக வெளிப்படையாகத் தோன்றினார். கடவுளும் ஆன்மாவும் வெவ்வேறானவை அல்ல. ஆனால் ஒன்றுதான் இருபகுப்புக் கொள்கை அல்லாதவற்றிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இவரது தத்துவத்தை புஷ்டிமார்க்கம் (கருணையின் வழி), அந்த மரபுக்குழுவை 'ருக்ர சம்பரதாயா' என அழைக்கப்பட்டது.

## நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- பக்தி இயக்கங்கள் சூபி இயக்கங்கள் இந்து சமய, இஸ்லாமிய சமயங்களுக்குள்ளான விடுதலை இயக்கங்கள், மனித இனத்துக்கும் கடவுளுக்கும் இடையே உள்ள ஒரு புதிய உறவை குறியிட்டுக் காட்டுகிறது.
- உலக அன்பு மனிதனின் சகோதரத்துவமும் ஆகியவை சுபி இயக்கத்தின் அறிவுரையாகும்.
- சூபிக்கள், இந்துக்களின் எண்ணங்களுடன் கருத்து உறவுமுறையை ஏற்படுத்தக் கூடியவர்களாக இருந்தார்கள். ஏனென்றால் ஒற்றுமையுடன் இருப்பது என்ற கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டார்கள்.
- பக்தி இயக்கம், தெற்கே நாயன்மார்களிடையேயும் ஆழ்வார்களிடையேயும் ஆழ்ந்த பக்தியை அடிப்படையாகக் கொண்ட புதிய முறையான கடவுள் வழிபாட்டை வலியுறுத்தினது.
- பக்தி புனிதர்கள் ‘நிர்குன், சகுனங் நம்பிக்கையாளர்களாக பிரிக்கப்பட்டனர்.
- நிர்குன் நம்பிக்கையாளர்கள் போலில்லாமல் சகுன் நம்பிக்கை-யாளர்கள், கடவுளை ராமர் அல்லது கிருஷ்ணனின் முழு வடிவத்தில் கண்டனர்.
- பக்தி, சுபி புனிதர்கள், இடைக்கால இந்திய சமுதாயத்திற்கு வரம்பில்லாத அடித் தளத்தை கிடத்தி, வட்டார இலக்கியத்தையும் உள்ளூர் மொழிகளையும் பெரும்பாலான அளவில் வளர்ச்சியடையச் செய்து விலைமதிக்க முடியாத பங்களிப்பை கொடுத்தார்கள்.

## பயிற்சிக்கான கேள்விகள்

1. இஸ்லாமிய மதத்தில் எவ்வாறு சூபி இயக்கம் முன்னேறியது?
2. எவ்வாறு நீங்கள் சிஷ்டி சில்சிலாவுடன் சுப்ரவார்டி சில்சிலாவை வேறுபடுத்துவீர்கள்?
3. பக்தி முனிவர்கள் சுபி சாதுக்கள் ஒரு நாணயத்துடன் இருமுகங்கள் விவரி?
4. குருநானக்கும் கபீருக்கும் இடையே இருந்த ஒற்றுமைகள் யாவை?
5. இந்தியாவின் வைஷ்ணவைத் இயக்கத்தின் மீது ஒரு சிறிய பத்தி எழுதுக?

## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 9.1

1. பழமைவாத சன்னி கருத்துகளுடன் அறிஞர்கள்
2. இஸ்லாமிய சமயத்தின் பழமைவாத கோட்பாடு
3. அல் - ஹஜ்வாரி
4. பதினான்கு
5. ஷாரியா
6. ஆஜ்மீர்
7. ஷேக் நாசிருதின் மஹ்மூத்

### கேள்விகளுக்கான பதில்கள் 9.2

1. பாகவத புராணம்
2. சீக்கிய சமயம்
3. இந்து முஸ்லீம் பாரம்பரியத்திலிருந்து இத்தகைய கருத்துகள் எடுக்கப்பட்டன.
4. குருநானக்
5. சூர்தாஸ்

# 10

# நவீன காலத்தின் சமய சீர்திருத்த இயக்கங்கள்

நாம் இன்று அதிர்ஷ்டமான மக்களாக இருக்கிறோம். நம் முன்னோர்கள் எதிர்கொண்ட பல, பிற மாற்றமுடியாதவைகளினின்றும், குறிப்பாக அந்நிய ஆதிக்கத்தினின்று விடுதலையாகி இருக்கின்றோம். 19ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில், இந்திய சமுதாயம், சாதி முறை நிரம்பப் பெற்ற சிதைவுற்ற, மாற்ற இயலாததாக இருந்தது. இது மனித உணர்ச்சிகள் அல்லது விழுமங்களை கொண்டிராத குறிப்பிட்ட பழக்கங்களை பின்பற்றியது. ஆனால் இன்றும் அந்த பழக்கங்கள் சமயத்தின் பெயரால் பின்பற்றப்பட்டுகின்றன. ஆகையால், சமுதாயத்தில் ஒரு மாற்றம் தேவைப்பட்டது. ஆகிலேயர்கள் இந்தியாவிற்கு வந்த பொழுது ஆங்கில மொழியிலும் குறிப்பிட்ட நவீன கருத்துகளையும் அறிமுகப்படுத்தினார்கள். இத்தகைய கருத்துகள் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், சமூக, பொருளாதார ஜனநாயகம் நீதி போன்றவை ஏராளமான தாக்கங்களை இந்திய சமுதாயத்தில் ஏற்படுத்தின. எனினும் நமது நாட்டில் அறிவுத் தெளிவுள்ள சீர்த்திருத்தவாதிகளான ராஜாராம் மோகன்ராய், ஈஷ்வர் சந்திரா வித்யா சாகர், தாயனந்த சரஸ்வதி, மேலும் பலர், சமுதாயத்தில் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்ததால், மேற்கத்திய சவால்களை நம்மால் எதிர்கொள்ள முடிந்தது.

## நோக்கங்கள்

நீங்கள் இந்தப் பாடத்தைப் படித்த, பின்பு உங்களால்

- சமய, சமூக சீர்திருத்த இயக்கங்களின் சில பொதுவான பண்புகளைக் கண்டறிய
- சமய சீர்திருத்தங்களை கொணருதலில் ராஜாராம் மோகன்ராம், அவருடைய பிரம்ம சமாஜத்தின் பங்கை விவரிக்க
- பிரார்த்தனை சமாஜ என்பது சமயத்திற்காக சமூக சீர்திருத்தங்களுக்காக பணியாற்றிய நிறுவனம் என்பதை அங்கீகரிக்க
- சமூக, சமய சீர்திருத்தங்களுக்கு ஆர்ய சமாஜின் கருத்துத் தொகுதி, அதன் பங்களிப்பாளர்களைப் பற்றி விவரிக்க
- 19-ஆம், நூற்றாண்டில் இந்தியாவின் எழுச்சியில் ராமகிருஷ்ணா மிஷினின் பங்களிப்பு பற்றி ஆராய



- பண்டைய இந்திய சமுதாயத்தின் வளர்ச்சியில், தியாசோபிக்கல் சொசைட்டியின் முயற்சிகளை பாராட்ட
- முஸ்லீம்களிடையே, பண்பாடு, கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பாக அலிகார் இயக்கத்தின் பங்களிப்பை விவாதிக்க மற்றும்
- சீக்கியர்களாலும் பார்சிகளாலும் அவர்களுடைய சமுதாயத்தை அறிவு தெளிவுள்ளதாக செய்வதற்கு, எடுக்கப்பட்ட சீர்திருத்தங்களை ஆராய முடியும்.

## 10.1 சமூக, சமய சீர்திருத்த இயக்கங்களின் பொதுவான பண்புகள்

பிந்தைய 19-ஆம் நூற்றாண்டிலிருந்து, ஏராளமான ஐரோப்பிய, இந்திய அறிஞர்கள் பண்டைய இந்தியாவின் வரலாறு, தத்துவம், அறிவியல், சமயம், இலக்கியங்களைப் படிக்கத்துவங்கினார்கள். இந்தியாவின் கடந்த கால பெருமையைப்பற்றிய அறிவு வளர்ந்தது. இந்திய மக்களுக்கு அவர்களுடைய நாகரிகத்தின் பெருமை உணர்ச்சியை கொடுத்தது. இது சீர்திருத்தவாதிகளுக்கும், அவர்களுடைய சமூக, சமய சீர்திருத்தங்களில் அவர்களுடைய எல்லா வகையான மனித நேயம் இல்லாத பழக்கங்கள், மூட நம்பிக்கை முதலியவற்றை எதிர்ப்பதற்கு உதவியது.

அவர்கள் சமய நம்பிக்கைகளுடன் இணையத் தொடங்கியதால், பெரும்பாலான சமூக சீர்திருத்த இயக்கங்கள், சமய பண்புகளைக் கொண்டதாக ஆயின.

இத்தகைய சமூக சமய சீர்திருத்த இயக்கங்கள் இந்திய மக்களின் எல்லா வகுப்பினரிடையே தோன்றியது.

அவர்கள், சாதிகள் தீண்டாமை, பர்தாமுறை, சதி, குழந்தைத் திருமணம், சமூக சமத்துவமின்மை எழுத்தறிவின்மை ஆகியவற்றை ஒழிக்க பாடுபட்டனர்.

இவர்களில் சில சீர்திருத்தவாதிகள், நேரடியாக அல்லது மறைமுகமாக ஆங்கிலேய அதிகாரிகளால் ஆதரிக்கப்பட்டனர். சில சீர்திருத்தவாதிகளும், ஆங்கிலேய அரசால் உருவாக்கப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகள், கட்டுபாட்டு விதிகளை ஆதரித்தார்கள்.

## 10.2 இராஜாராம் மோகன்ராயும், பிரம்மசமாஜமும்

இன்று, ஆண்களும், பெண்களும் சில குறிப்பிட்ட உரிமைகளையும் சுதந்திரத்தையும் அனுபவிக்கிறார்கள். ஆனால் இவை அயராது உழைத்த, குறிப்பிட்ட சீர்திருத்தவாதிகளால் நமக்கு கொடுக்கப்பட்டது. இக்காலத்திய சிறந்த சீர்திருத்தவாதிகளிடையே ராஜாராம் மோகன்ராய், குறிப்பிடப்படுவதற்கு உரியவராக திகழ்கிறார். இவர் கிழக்கு, மேற்கின் நேர்த்தியான இணைப்பை கொடுத்தார். சிறந்த இலக்கிய திறமைகள் கொண்ட மனிதர். இந்திய பண்பாட்டில் மிகச் சிறந்து விளங்கியவர். இவர் கிருஸ்தவம், இஸ்லாமியத்தை ஆராய, இவற்றை கற்றுக் கொள்ள தனிப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டார். இந்தியாவில் சமய ஒப்புதலுடன் நிகழ்ந்து கொண்டிருந்த பழக்கங்களைக் கண்டு வேதனையடைந்தார். மேலும் உருவ வழிபாடு, பலியிடுவதற்கான சடங்குகள், அர்த்தமில்லாத சடங்குகளிலிருந்து இந்து சமயத்தை விடுபட வைப்பதை தன்மனதில் வயப்படுத்திக் கொண்டிருந்தார். இந்த பழக்கங்களை உற்சாகப் படுத்திய மதகுருமார்களை வன்மையாக கண்டித்தார். இவர் இந்துக்களின் பண்டைய புத்தகங்கள், ஒரே கடவுள் அல்லது ஒரே கடவுளை வழிபடுதல் என்ற கொள்கையை போதிப்பது என தீர்மானித்தார். சமய சீர்திருத்தங் களில் இவருடைய சிறந்த சாதனை 1828இல் பிரம்ம சமாஜத்தை துவங்கியது ஆகும். பிரம்ம சமாஜம், சமய

சீர்திருத்திங்களின் ஒரு முக்கிய நிறுவனமாகும். இது உருவ வழிபாட்டை அனுமதிக்கவில்லை சமய சீர்த்திருத்தங்களின் ஒரு முக்கிய அமைப்பாகும். இது உருவ வழிபாட்டை அனுமதிக்கவில்லை. அர்த்தமற்ற சடங்குகள் சமய சடங்குகளை ஒதுக்கி தள்ளியது. சமாஜமும், அதனுடைய உறுப்பினர்கள் எந்த ஒரு சமயத்தையும் கண்டனம் செய்வதை அனுமதிக்கவில்லை. எல்லா மதத்தின் அடிப்படை ஒற்றுமையை வலியுறுத்தியது. மனிதன் உண்மை, நற்குணத்தை தழுவவேண்டும். பொய்மையையும், மூட நம்பிக்கைகளை விட்டுவிட வேண்டும் என்பதை ராஜாராம் மோகன் ராய் நம்பினார்.

இராஜாராம் மோகன் ராய் சமய சீர்திருத்தவாதி மட்டுமில்லை. ஆனால் சமூக சீர்திருத்தவாதியும் ஆவார். 1929இல் சதியை ஒழித்தது இவரது மிகச் சிறந்த சாதனையாகும். இந்துப் பெண்களின் மிகத் தாழ்ந்த அவல நிலைதான் சதி பழக்கத்திற்கு காரணம் என உணர்ந்தார். ஆகையால் இவர் பெண்களின் உரிமைக்காக மன உறுதி கொண்ட காவலனாக பணிபுரிய ஆரம்பித்தார், இந்த சதி பழக்கத்தை நிறுத்தவதற்கு பல ஆண்டுகள் கடுமையாக உழைத்தார். 1818 ஆம் ஆண்டின் முற்பகுதியில் சதியைப் பற்றிய பொது மக்களின் கருத்தை தூண்டிவிட புறப்பட்டார். ஒரு புறம் இந்து சமயத்தின் அங்கீகாரம் பெற்ற பண்டைய புனித நூல்களிலிருந்து சிறந்த மேற்கோள்களைக் காட்டினார். மறுபுறம் காரணம், மனித நேயம் மக்களின் இரக்கத்திற்கு முறையிட்டார். இவர் விதவைகளின் உறவினர்கள், அவர்கள் சுயபலியிடும் பழக்கத்தை கைவிட வேண்டி வற்புறுத்த அகோர நிலையிலிருந்த கல்கத்தாவிற்கு சென்றார். சதியை எதிர்த்து இவருடைய பிரச்சாரம், பழமை விரும்பிகளான இந்துக்களிடமிருந்து எதிர்ப்பு கிளம்பியது. அவர்களால் வன்மையாக கண்டிக்கப்பட்டார்.

இராஜாராம் மோகன் ராய், இந்திய சமுதாயத்தின் நடைமுறையிலிருந்த சாதிமுறையை தீவிரமாக எதிர்த்தார். அளவிட முடியாத ஒரு மனிதாபிமானியாக ஜனநாயகவாதியாக, சாதி முறையை எதிர்த்து எழுதினார் மற்றும் பேசினார். மற்றுமொரு கவலை கொள்ளக்கூடிய செயல்பாடு, இந்து சமயவியலாகும். வேதங்கள் உபநிடதங்களின் படிப்பு, ஒரே கடவுள் வழிபாடு தான் உண்மையான இந்து நம்பிக்கை என்பதற்கு அடிப்படை காரணங்களை அவருக்கு கொடுத்தது. இதனால் இவர் பல கடவுள் நம்பிக்கையையும், சிலை வழிபாட்டையும் கண்டித்தார். வெறுமனே பண்படாத, மிகுந்த அறியாமையான மூடநம்பிக்கைகளின் வேத சமயத்தை தூய்மைபடுத்த கடுமையாக முயற்சித்தார். எல்லா சமயத்திற்கும், எல்லா மனித இனத்திற்கும் ஒரே கடவுள் என வெளிப்படையாகத் தெரிவித்தார். இவர் வங்காளத்திலும் ஆங்கிலத்திலும் எழுதினார். இவர் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்துவதில் ஆர்வம் மிக்கவராக இருந்தார். பாரசீக மொழியிலும், இவர் மிகுந்த தேர்ச்சி பெற்றவர். இவருடைய சில விடுதலை, அறிவார்ந்த கருத்துகள் பாரசீக மொழியில், முந்தைய எழுத்துகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இவர், பலதார மணம் (ஒரு மனிதன், ஒரு மனைவிக்கும் மேலாக நிறைய பேரை வைத்து கொள்வது) குழந்தை திருமணம் ஆகியவற்றை ஒழிப்பதை ஆதரித்தார். இவர் பெண்கள் கல்வி கற்பதற்கும் சொத்துக்கள் பெற்றுக் கொள்ளவும் உரிமை கொடுக்கப்பட வேண்டும் என்று விரும்பினார். அவர் பெண்களை அடக்கி ஆளுதல், ஆண்களுக்கு பெண்கள், அறிவில் அல்லது ஒழுக்க உணர்வில் தாழ்ந்தவர்கள் என்று நிலவி வரும் கருத்துகளையும் வன்மையாகக் கண்டித்தார். விதவை மறுமண உரிமைகளுக்கு ஆதரவு அளித்தார்.

தன்னுடைய கருத்துகளை செயல்படுத்த, இராஜாராம் மோகன்ராய், 1828 இல் பிரம்ம சபாவை நிறுவினார். இது பிறகு பிரம்ம சமாஜ் என அழைக்கப்பட்டது. பிரம்ம சமாஜத்தில் ஜாதி, மதம், இனம், தேசம், சமயம் என்று எதையும் பொருட்படுத்தாமல் எல்லோரும் அனுமதிக்கப்பட்டனர். இது மனித பாரம்பரியத்தை வலியுறுத்தியது, சிலை வழிபாட்டை எதிர்த்தது மற்றும் சமூகத் தீமைகளான சதி, பர்தா முறையை வன்மையாக கண்டித்தது. ஒரு தனிப்பட்ட சமய பிரிவு என குறிப்பிடவில்லை ஆனால் யார் ஒரே கடவுள் மீது நம்பிக்கை வைத்துள்ளார்களோ, அவர்கள்

ஒன்று கூடி வழிபடும் ஒரு இடமாகும். உருவங்கள் அனுமதிக்கப்படவில்லை. பலியிடுதல், காணிக்கை கொடுத்தலும் அனுமதிக்கப்படவில்லை.

துவாராக நாத் தாகூரின் மகன், பிரம்ம சமாஜ் நிறுவன உறுப்பினர்ஆவார். தேபேந்திர நாத் தாகூர் (1817 - 1905) ராஜா ராம் மோகன் ராய்க்கு பிறகு பிரம்ம சமாஜயத்தின் தலைவரானர். இவர் சாமஜில் புதிய வாழ்க்கையை தொடங்கி, ராஜாராம் மோகன்ராயின் கருத்துகளை பிரச்சாரம் செய்தார். தாகூரிடமிருந்து கேஷப் சந்திரா சென் (1838 - 1884) சமாஜின் தலைமைப் பொறுப்பை பெற்றுக் கொண்டார். பிரம்ம சமாஜ், தனிநபர் சுதந்திரம், தேச ஒற்றுமை, ஒத்துழைப்பு எல்லா சமூக நிறுவனங்களை உறவுகளை ஜனநாயகப்படுத்துதல் ஆகிய கொள்கைகளில் முன் நின்றது. இவ்வாறாக, இது தேசிய விழிப்பை வெளிப்படுத்துவதில் ஒருங்கமைக்கப்பட்ட ஊடகமாக விளங்கியது. இந்திய மக்களுக்கு ஒரு புதிய சகாப்தத்தை தோற்றுவித்தது, இருந்தாலும், உள்நாட்டு பூசல்களால், பிரம்ம சமாஜ் பலவீனமடைந்தது இதனுடைய செல்வாக்கு நகரத்து கல்வி கற்ற குழுக்களிடம் மட்டும் இருந்தது. ஆனால் இது தனது தாக்கத்தை வங்காளத்தின் அறிவு சார்ந்த சமூக மற்றும் அரசியல் வாழ்க்கையின் மீது ஏற்படுத்தியது.

## 10.3 பிரார்த்தன சமாஜமும் ராணடேயும்

1876-இல் முனைவர் ஆத்ம ராம் பாண்டுரங் (1825 - 1898) பாம்பேயில் அறிவு சார்ந்த வழிபாடும் சமூக சீர்திருத்தமும் என்ற நோக்கத்துடன் பிரர்த்தன சபா ஏற்படுத்தினார். சமாஜின் இரண்டு சிறந்த உறுப்பினர்கள் ஸ்ரீ.ஆர்.சி. பந்தர்கள், ஜஸ்டிஸ் மகாதேவ் கோவின் ராணடே ஆவார். அவர்கள் கலப்பு சாதி, சம்பந்தி போஜனம், கலப்புத் திருமணம், விதவைத் திருமணம் ஆகியவற்றுக்காகவும் ஏராளமான பெண்கள் நலிவடைந்த மக்களின் சமூக சீர்திருத்தங்களுக்காகவும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர்.

மகாதேவ் கோவிந்த ராணடே (1842 - 1901) தன்னுடைய வாழ்க்கை முழுவதையும் பிரார்த்தன சமாஜிக்கு அர்ப் பணித்தார். இவர், விதவை மறுமண அசோசியேசன் (1861), தக்காண கல்வி சொசைட்டி ஆகியவற்றினை நிறுவினவராவார். இவர் பூனா சர்வ ஜினிக் சபாவையும் ஏற்படுத்தினார். இராணடேவுக்கு சமூக சீர்திருத்தத்திலிருந்து சமய சீர்த்திருத்தத்தை பிரிக்க முடியாததாக இருந்தது. அவரும், சமய கருத்துகள் இறுக்கமாக இருந்தால் சமூக பொருளாதார அரசியல் கட்டங்களில் எவ்வித வெற்றியும் கிடையாது என நம்பினார். மேற்கு இந்தியாவில் எம்.ஜி.இராணடே சமூக சீர்திருத்தத்திற்கும் கலாச்சார மறுமலர்ச்சிக்கும் தலைமை வகித்தார்.

சமூக சேவையில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு இராணடேயின் சிறந்த நற்செய்தி யாதெனில், ஏராளமானவர்களை நாம் கட்டளையிட முடியாது, ஆனால் குற்றம் சுமத்தப்பட்டவனின் ஊக்கம், பக்தியில் ஒருமை, சுய பலிக்கு ஆயத்தமாகுதல், உண்மையான வேலையாட்களின் காரணங்களுக்காக நாம் கட்டளையிடலாம்.

பிரார்த்தன சமாஜ், பிரம்ம சமாஜின் கருத்துகளில் வலிமையாக ஈடுபடுத்தப்பட்டாலும், இது மாற்ற முடியாத சிலை வழிபாடு சாதி முறையிலிருந்து நிச்சயமான இடைவெளி ஆகியவற்றை வற்புறுத்தவில்லை. இது மனித ஆன்மாவின் கூடுவிட்டு கூடுபாய்தல், கடவுளின் அவதாரம், வேதங்களே அடிப்படை ஆகிய கோட்பாடுகளில் நம்பிக்கைக் கொண்டிருந்தது.

## 10.4 டிரோசியோவும் வங்காள இளைஞர் இயக்கமும்

ஹென்றி லுயி விவியன் டெரோசியோ கல்கத்தாவிலுள்ள இந்து கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார். அவர் கைக்கடிகாரங்களை விற்பதற்காக, ஸ்காட்லாந்திலிருந்து வந்திருந்தார். பின்பு

வங்காளத்தில் நவீன கல்வியைப் பரப்புவதை தன்னுடைய வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டார். வங்காள இளைஞர் இயக்கத்தை ஆரம்பித்தார்.

டீரோசியோ, மாற்றத்தை விரும்பாத கருத்துகளை அவரது போதனைகள் வாயிலாகவும், இலக்கியம், தத்துவம், வரலாறு கலந்துரையாடலுக்காக, ஒரு குருவையும் ஏற்பாடு செய்தார். இவர் தன்னுடைய ஆதரவாளர்கள் மற்றும் மாணவர்களை கேள்விகள் கேட்க தூண்டினார். டீரோசியோ மற்றும் டெர்சியன்ஸ் மற்றும் யங்பெங்கால் என அழைக்கப்பட்ட அவரது ஆதரவாளர்கள், சீற்றம் கொண்ட தேசபக்தர்களாக இருந்தார்கள். அவர்கள் பிரெஞ்சு புரட்சியின் (கி.பி. 1789) இலட்சியங்கள் மற்றும் இங்கிலாந்தின் பரந்த எண்ணங்களை சிந்தையில் கொண்டனர். டீரோசியோ தனது 22 வது வயதில் காலராவினால் மரணமடைந்தார்.

டீரோசியோவின் திடீர் மரணத்திற்கு பின்பு கூட இளைய வங்காள இயக்கம் தொடர்ந்தது. இந்தக் குழுவின் உறுப்பினர்கள், தலைமையை இழந்திருந்தாலும் தீவிரவாத கருத்துகளைக் கற்றுக் கொடுத்தல், பத்திரிகைகள் மூலம் தொடர்ந்து போதித்தார்கள்.

### ஈஷ்வர் சந்திர வித்யா சாகர்

வங்காளத்தில் மற்றுமொரு முதல் தரமான சீர்திருத்த வாதி ஈஷ்வர் சந்திர வித்யா சாகர் (1820 -1891) ஆவார். ஆழ்ந்த அறிவு கொண்ட சிறந்த அறிஞரான இவர், பெண்களின் சமஉரிமைகளுக்காக தன்னை அர்ப்பணிந்தார். விதவை மறுமணத்திற்கு இருந்த தடைகள், இவரது உள்ளார்ந்த முயற்சியால், 1856இல் சட்டத்தின் மூலம் நீக்கப்பட்டது. இவர், பெண் கல்வியை உயர்ந்துவதற்கு ஏராளமான பள்ளிகளை பெண்களுக்காக அமைத்து உதவினார். வித்யா சாகர், சமய விவாதங்களில் வெகுவாக தன்னை உட்படுத்திக் கொள்ளவில்லை. இருந்தாலும் இவர் சீர்திருத்தங்களை மதத்தின் பெயரால் யார் எதிர்க்கிறார்களோ அவர்களை எதிர்த்தார்.

## 10.5 மேற்கிந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் சீர்திருத்த இயக்கங்களின் பரவுதல்

வங்காளத்திற்குப் பிறகு, சீர்திருத்த இயக்கம் பரவிய, மிக முக்கியமான வட்டாரம் மேற்கு இந்தியாவாகும். பாம்பேயில் சீர்திருத்தவாதிகளில் முதலாவது சீர்திருத்தவாதி பால் சாஷ்த்ரி ஜம்பேகர் ஆவார். இவர் பிராமணிசத்தை கண்டித்தார், பிரபலமான இந்து மதத்தை சீர்திருத்தம் செய்ய முற்பட்டார்.

1849-ல் பூனா, சதாரா ஆகிய இடங்களிலும் மஹாராஷ்டிராவின் பிற நகரங்களிலும் பர்மஹன்ச மண்டலி நிறுவப்பட்டது. இதனுடைய ஆதரவாளர்கள் ஒரே கடவுளின் மீது நம்பிக்கை கொண்டிருந் தார்கள். அவர்கள் சாதி முறையை எதிர்த்தார்கள். இதனுடைய கூட்டங்களில் மக்கள் தாழ்ந்த வகுப்பைச் சார்ந்த மக்கள் சமைத்த உணவை உண்டனர். பெண்கல்வியை ஆதரித்தார்கள். விதவைத்திருமணத்தை ஆதரித்தார்கள். மகாதேவ் ராணடே, அரசியல், பொருளாதாரத் துறைகளில் சமூக சீர்திருத்தம் இல்லாமல் எந்த ஒரு வளர்ச்சியை சாத்தியமாகாது என நம்பினார். இவர் இந்து - முஸ்லீம் ஒற்றுமையின் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆவார்.

கோபால் ஹரி தேஷ்முக் லோக ஹிட்வாரி, ஜோதிபா என பிரபலமான ஜோதிராவ் கோவிந்தராவ் பூலே ஆகியோர் மேற்கிந்தியாவின் மற்ற சீர்திருத்தவாதிகளாவர். அவர்கள் பெண்கள், நலிவடைந்த மக்கள் முன்னேற்றத்திற்காக உழைத்தனர். 1857-இல் பூனாவில் ஜோதிபா அவரது மனைவியுடன் சேர்ந்து, பெண்கள் பள்ளியைத் தொடங்கினார். அவர், நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கும் ஒரு பள்ளியைத் திறந்தார். மஹாராஷ்டிராவில்,

ஜோதிபா பூலேயும் விதவைத் திருமணத்தின் முன்னோடியாவார். இவர் பிராமண ஆதிக்கத்தை எதிர்த்தார் மக்கள் கூட்டத்தை ஒன்று சேர்த்து செயல்படத்தூண்டினார். இவர் கிராம மக்களுக்காகவும் கிராம மேம்பாட்டிற்காகவும், வேலை செய்து தீவிர ஆதரவாளானார். ஜேனிபாவிற்கு நலிவடைந்தோரின் நிமித்தம், அவருடைய சேவைக்காக 'மகாத்மா' என்ற பட்டம் கொடுக்கப்பட்டது. 1873இல் தன்னுடைய இயக்கத்திற்கு ஊக்கம் கொடுத்து, அதை பிரபலமாக்க அவர் சத்ய - சோதக் என்ற அமைப்பை நிறுவினார்.

நாட்டின் தெற்குப்பகுதியில் கந்துகுரி வீரேசலிங்கம் (1848 - 1919) ஆந்திராவில் விதவை மறுமணத்தையும் பெண்கல்வியையும் ஆதரித்து இயக்கத்தின் முன்னோடியானார். 1864-இல், மதராசில் நிறுவப்பட்ட வேத சமாஜம் சாதி வேற்றுமைகளை ஒதுக்கியது. விதவை மறுமணம் பெண் கல்வி வளர்ச்சியை ஆதரித்தது. இந்து சமயத்தினுடைய மூட நம்பிக்கைகள், சமய சடங்குகளை கண்டித்து. ஒரே கடவுள் நம்பிக்கையை பிரச்சாரம் செய்தது. செம்பட்டி, ஸ்ரீதரலு நாயுடு, வேத சமாஜத்தின் மிகப்பிரபலமான தலைவராவார். இவர் வேத சமாஜத்தின் புத்தகங்களை தமிழிலும் தெலுங்கிலும் மொழி பெயர்த்தார்.

பின்தங்கிய வகுப்பினர், நலிவடைந்த பிரிவினர் என்று அழைக்கப்பட்ட மக்களின் சம உரிமை முன்னேற்றத்திற்காக, குறிப்பிடத்தக்க முக்கியமான இயக்கம் ஸ்ரீநாராயண குருவால் (1854 - 1928) கேரளாவில் தொடங்கப்பட்டது. 1903இல் சமூக சீர்திருத்த வேலையை செய்வதற்கு ஸ்ரீநாராயண தர்ம பரிபாலன யோகத்தை நிறுவினார். ஸ்ரீநாராயண குரு, சாதி, சமயத்தை அடிப்படையாகக் கொண்ட வேற்றுமைகள் பொருளற்ற எனக் கருதினா. ஒரே சாதி, ஒரே சமயம் எல்லாருக்கும் ஒரே கடவுள் என்ற கருத்துகளைப் பரப்பினார்.

### இப்பகுதிக்கான கேள்விகள் 10.1

1. பிரம்ம சமாஜத்தை ஏதுவாயிருந்த சூழ்நிலைகளை அறிக்கையீடு?
2. பிரம்ம சமாஜயத்தின் கொள்கைகள் யாவை?
3. எவ்வாறு பிரார்த்தன சமாஜ், சமூக வேற்றுமைகளை குறைப்பதில் உதவி செய்தது?
4. எம்.ஜி ரண்டே என்பவர் யார்?

## 10.6 சுவாமி தயானந்த சரஸ்வதியும் (1824-1883) ஆர்ய சமாஜமும்

இந்தியாவில் குஜராத்திலிருந்து சமய சீர்திருத்த இயக்கத் தின் முக்கிய பிரதி நிதியான மூல் சங்கரின் அடிப்படை பங்களிப்பாகும். பின்பு, இவர் தயானந்த் சரஸ்வதி (1824-1883) என அழைக்கப்பட்டார். 1875இல் இவர் ஆர்ய சமாஜத்தை நிறுவினார்.

வட இந்தியாவில் மிகவும் செல்வாக்கான சமய, சமூக சீர்திருத்த இயக்கம், தயானந்த் சரஸ்வதியால் தொடங்கப்பட்டது. இவர் எல்லா அறிவுகளையும் கொண்ட வேதங்கள், கடவுளால் மனிதனுக்கு வழங்கப்பட்டது. நவீன அறிவியல்களின் தேவைகளும் அவற்றில் காணக்கூடும் என உறுதி பூண்டார். இவர் சிலை வழிபாடு, சடங்குகள், புரோகிதம் குறிப்பாக, மேலோங்கி காணப்படுகிற சாதி பழக்கங்கள் பிராமணர்களால் போதிக்கப்பட்ட இந்து சமயம் ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தார். இவர் மேற்கத்திய அறிவியல் படிப்பை ஆதரித்தார். இவர் நாடு முழுவதும் பயணம் செய்த பின்பு 1875இல் பாம்பேயில் இந்தக் கொள்கைகளுடன் ஆர்ய சமாஜத்தை நிறுவினார்.

'சத்யார்த்த பிரகாஷ்' என்பது இவருடைய முக்கியமான புத்தகமாகும். இவர் தனது கருத்துகளையும் போதனைகளையும் இந்தி எழுத்துகளினால் போதித்தது, வட இந்தியாவைச்

சார்ந்த மக்களால் எளிதாக உணர்ந்து கொள்ள முடிந்தது. ஆர்ய சமாஜிகள் குழந்தை திருமணங்களை எதிர்த்தனர். விதவைகள் மறுமணத்தை ஆதரித்தனர். இது, பஞ்சாப், உத்திரப்பிரதேசம், ராஜஸ்தான், குஜராத்திலும் துரிதமாக வளர்ச்சியடைந்தது.

வடஇந்தியா முழுவதும் கல்வி பரவுதலுக்காக ஒன்றோடொன்று தொடர்பான பள்ளிகளும் கல்லூரிகளும் பெண்களுக்காகவும் ஆண்களுக்காகவும் தோற்றுவிக்கப்பட்டன. லாகூரைச் சார்ந்த தயானந்த ஆங்கிலோ வேத பள்ளி, இம்மாதிரியான நிறுவனங்களுக்காக அமைக்கப்பட்ட மாதிரி வடிவங்களான இவைகள் விரைவிலேயே, பஞ்சாபின் முதன்மையான கல்லூரியாக வளர்ச்சியடைந்தது. தகவல் வழிகாட்டு குறிப்புகள், நவீன முறையில் ஹிந்தி ஆங்கிலம் மூலமாக வழங்கப்பட்டன. லாலா ஹன்ஸ்ராஜ் என்பவர் இந்த துறையில் தலை சிறந்த பங்கை வகித்தார். 1902-இல் சுவாமி ஷாரதானந்தா, ஹரித்வாருக்கு அருகில் கல்வியைப் பற்றின மரபு கருத்துகளை பிரச்சாரம் செய்வதற்கு குருகுலத்தை தொடங்கினார். இது பண்டைய ஆஸ்ரமங்களின் மாதிரியில் அமைக்கப்பட்டது.

ஆர்ய சமாஜம் இந்திய மக்களிடையே சுய மரியாதை, சுய தற்சார்பு ஆகிய உணர்வுகளை ஆழமாக பதிய வைக்க முயற்சித்தது. இது தேசப்பற்றை வளர்த்தது. அதே சமயத்தில், இந்துக்கள் மற்ற சமயத்திற்கு மாறுவதை தடுப்பது இதனுடைய முக்கியமான நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. இது, மற்ற சமயங்களான இஸ்லாம் கிறிஸ்துவ சமயத்திற்கு மாறின இந்தக்களுக்காக 'சுத்தி இயக்கம்' என்றழைக்கப்பட்ட தூய்மைப்படுத்தும் சடங்கின் விதிமுறைகளையும் உண்டாக்கியது.

## 10.7 சுவாமி விவேகானந்தாவும் இராம கிருஷ்ணா மிஷனும்

சுடதார் சட்டோ பாத்யாயா (1836 - 86) என்பவர் ஒரு பிராமணகுரு, பின்பு இவர் ராமகிருஷ்ண பரமஹம்சா என அழைக்கப்பட்டார். இவருடைய கல்வி, தொடக்க நிலையை கூடதாண்டவில்லை. தத்துவத்திலும் மற்றும் சாஸ்திரங்களிலும் முறையான கல்வியும் இவரிடம் இல்லை. இவர் தன்னுடைய வாழ்க்கையை கடவுளுக்கு அர்ப்பணித்தார். இவர் பல பாதைகள் இறைவனிடம் செல்வதற்கு உள்ளன. மனிதனுக்கு செய்யும் பணி இறைவனுக்கு செய்யும் பணியாகும். ஏனென்றால் மனிதன் இறைவனின் பண்புருவாக இருந்தார். இதனால் இவருடைய போதனைகளில் சமயப்பிரிவுணர்ச்சிக்கு இடமே இல்லை. இவர் மனிதாபிமானத்தில் தெய்வீகத் தன்மை, மனித இனத்தின் சேவை ஆகியன மோட்சத்தை அடைவதற்கு வழிவகுக்கும் என உணர்ந்தார்.

சுவாமி விவேகானந்தா என்று பின்பு அழைக்கப்பட்ட நரேந்திர நாத் தத்தா (1863 - 1902) தனது குருவான ராமகிருஷ்ணரின் நற்செய்தியை உலகெங்கும் சிறப்பாக அமெரிக்கா ஐரோப்பாவிற்கு எடுத்துச் சென்றார். சுவாமி விவேகானந்தா இராம கிருஷ்ண பரமஹம்சரின் ஆழ்ந்த பக்தியுள்ள மாணவனாவார்.

விவேகானந்தர் இந்தியாவின் ஆன்மிக பாரம்பரியத்தைப் பற்றி பெருமிதம் அடைகிறார். ஆனால், இவர் ஒரு தனி மனித, அல்லது ஒரு நாடு, அவனுடைய அல்லது அதனுடைய, மற்ற சமூகக் குழுக்களிடமிருந்து பிரிந்து வாழ முடியாது என நம்பினார். இவர் சாதிமுறை, மாற்ற முடியாத சடங்குகள், நூற்றாண்டு காலமான பழைய மூடநம்பிக்கைகளை கண்டித்தார். சுதந்திரம், சுதந்திரமான எண்ணங்கள் மற்றும் சமத்துவம் ஆகிய கருத்துகளை ஆதரித்தார்.

விவேகானந்தர், தனது உள்மனதிலிருந்தே நிச்சயமாக ஒரு தேச பற்றுடையவர். இவர் இந்திய பண்பாட்டின் பரிணாம வளர்ச்சியில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். தனது பண்பாட்டில் அவளுக்கு எல்லா சாத்தியமான வழிகளிலும் முன்னேறிச் செல்வதற்கு பணி செய்ய மீண்டும் வலுப்பெற தீவரமான ஊக்கம் கொடுத்தார்.

சுவாமி விவேகானந்தா, இராமகிருஷ்ணரின் போதனைகள் மீதான எல்லா சமயத்தின் ஒரே இணக்கத்தை வலியுறுத்தினார். இவர் பகுத்துணரவல்ல வேதாந்த தத்துவ முறையை மேம்படுத்தினார்.

விவேகானந்தாவின் சமூக தத்தவத்தின் முதன்மையான அம்சம் இவரது, மக்களின் முன்னேற்றத்தின் மீது வற்புறுத்துவதாகும். ஏழைகளுக்கும் நலிவடைந்த மக்களுக்கும் பணி செய்தலே இவரது சமயமாக இருந்தது. இந்தப் பணியை நடத்திட இவர் 1897இல் இராமகிருஷ்ணா மிஷனை நிறுவினார். இந்த மிஷன், நாட்டின் இயற்கை சீற்றங்களான பஞ்சம், வெள்ளம், கொள்ளை நோய்களின் பொழுது சமூக சேவையை வழங்குவதில் இன்று வரை முக்கிய பங்கை வகிக்கிறது. பல பள்ளிகள், மருத்துவ நிலையங்கள், அனாதை இல்லங்கள் இவற்றினால் நடத்தப்படுகின்றன.

1893-இல், அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள சிகாகோவில் உலக சமய பாராளுமன்றத்தில் (சமயங்களின் பார்லிமெண்ட்) பங்கேற்றார். இவர் வேதாந்தம் என்பது இந்துக்களுக்கு மட்டுமல்ல எல்லோரின் சமயம் என வாதாடினார். அங்கு நிகழ்த்திய இவரது உரை, மற்ற நாட்டு மக்களின் மனதில் உணர்வை கொடுத்தன. இவ்வாறாக இந்திய பண்பாட்டின் பெருமை உலகின் கண்களில் உயர்த்துவதற்கு உதவியது. இவருடைய மிஷன் முக்கியமாக சமயப் பண்பை கொண்டதாக இருந்தாலும் இவர் தேசிய வாழ்வில், எல்லா அம்சங்களின் வளர்ச்சியில் மிகுதியான ஆர்வம் கொண்டிருந்தார். இவர் பரிதாபமான, ஏழ்மை நிலையிலிருக்கும் மக்கள் மீது தன்னுடைய அக்கறையை வெளிப்படுத்தினார். மக்களை ஒதுக்கி வைத்தல் என்பது பாவம் என்றார். இவர் வெளிப்படையாகவே இது நமது பெருந்துயர் நம் எல்லோரின் இழிவு நிலைக்கு நாம் தான் பொறுப்பு என அறிக்கையிட்டார். இந்த நோக்கத்திற்காக மிகுந்த ஆர்வமுள்ள ஒரு குழு வேலையாட்கள் இராமகிருஷ்ணா மிஷன் மூலம் பயிற்சியளிக்கப் பட்டார்கள். இவ்வாறாக விவேகானந்தா சமூக நலம், சமூக சேவையை வலியுறுத்தினார்.

## இப்பகுதிக்கான கேள்விகள் 10.2

1. ஆர்ய சமாஜத்தை நிறுவினவர் யார்?
2. முதல் தயானந்த் ஆ'கிலோ வேத கல்லூரி எங்கு ஏற்படுத்தப்பட்டது?
3. காதர் சட்டோ பாத்யாவின் கூற்றப்படி எவ்வாறு நீ மோட்சத்தை அடைவாய்?
4. சுவாமி விவேகானந்தரின் உண்மை பெயர் என்ன?
5. சுவாமி விவேகானந்தாவின் கூற்றுப்படி எது சிறந்த சமயமாக இருந்தது?

## 10.8 அன்னிபெசன்ட் அம்மையாரும், பிரும்மஞான சபையும் (தியோ சோபிகல் சொசைட்டி)

நவீன இந்தியாவின், சமயம், சமுதாயம், பண்பாட்டின் வரலாற்றில் தியோசோபிகல் சொசைட்டி முக்கியமான பெரும்பங்கை வகித்துள்ளது. இது, 1875இல் அமெரிக்காவில், ரஷ்ய ஆன்மீகவாதியான மேடம் ஹச்.பி பிளவெட்ஸ்கி, அமெரிக்க கர்னல் ஹச்.எஸ். ஆல்காட்டால் நிறுவப்பட்டது. பண்டைய சமயத்தை பற்றின படிப்பு, தத்துவங்கள் அறிவியலை மேம்படுத்துவது, தெய்வீக சக்திகள் இல்லாத மனிதனிடம் வளர்பது, மனிதனின் உலக சகோதரவத்தை அமைப்பது போன்றவை இதனுடைய குறிக்கோளாகும்.

1879இல் இந்த சங்கம், இந்தியாவில் துவக்கப்பட்டது. இதனுடைய தலைமையகம் சென்னைக்கு அருகில் அடையாறில் 1886-ல் அமைக்கப்பட்டது. 1893-ல் இதனுடைய செல்வாக்கு இந்திய விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்த அன்னிபெசன்ட் தலைமையில் பரவியது. பண்டைய சமயங்களான, இந்து சமயம் ஜொராஸ்டிரியனிசம், புத்த சமயம் மீண்டும் வலுப்பெற சக்தி பெறுவதை ஆதரித்தார்கள். அவர்கள் ஆன்மாவின் கூடுவிட்டு கூடுபாயுதலை அங்கீகரித்தார்கள். அவர்களும் மனிதனின் உலக சகோதரத்வத்தை போதித்தார்கள். அவர்கள் கற்றறிந்த இந்தியர்களுக்கு அவர்களது சொந்த நாட்டிலேயே பெருமித உணர்ச்சியை புகுத்துவதற்கு உதவியது. அன்னி பெசண்ட்டின் இயக்கம், இந்திய சமயங்களை, தத்துவ மரபுகளை பெருமிதம் அடையச் செய்த மேற்கத்தியர்களால் வழி நடத்தப்பட்டு ஆதரிக்கப்பட்ட இயக்கமாகும். இது இந்தியர்களை அவர்களது தன்னம்பிக்கையை திரும்ப பெற உதவினது.

கல்வித்துறையில் அன்னிபெசண்ட்டின் செயலபாடுகள் மிகவும் குறிப்பிடத் தக்கவையாக இருந்தன. இவள் பனாரசில் சென்ட்ரல் இந்து கல்லூரியை நிறுவினார். பின்பு இவற்றை இவள் மதன் மோகன் மாளவியாவிற்கு கொடுத்துவிட்டார். இவர், அந்த கல்லூரியை, பனாரஸ் இந்து பல்கலைக்கழகமாக வளர்ச்சியடையச் செய்தார். பிரும்மஞான (தியோ சோபிக்கல்) இயக்கம், அன்னிபெசன்ட் தலைமையின் கீழ் இந்தியர்களை விழிப்புணரச் செய்தது குறிப்பிடத்தக்கதாகும். இவர் இந்தியர்களின் தேச உணர்வை வளர்ச்சியடையச் செய்வதில் சிறந்த பங்கை பங்களித்துள்ளார். அடையாரிலுள்ள பிரும்மஞான சங்கத்தின் (தியோ சோபிக்கல் சொசைட்டியின்) தலைமையகம் அரிதான சமஸ்கிருத புத்தங்களுடன் அறிவின் மையமாக இன்றளவும் செயல்படுகிறது.

இச்சங்கம், தீண்டாமைக்கு எதிராக சண்டையிட்டது. பெண்களின் முன்னேற்றத்தை ஆதரித்தது. அன்னிபெசண்ட், இந்திய சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு தன்னுடைய முழு வாழ்க்கையை அர்ப்பணித்தார். அவர் தன்னுடைய இலட்சியத்தை இந்தியனின் வேலை, முதலாவதாக, மீண்டும் வலுப்பெறுதல், பலப்படுத்துதல், பண்டைய சமயங்களை முன்னேற்றுதல், புதிய சுயமரியாதை கடந்த காலத்திய பெருமை, எதிர்காலத்தில் நம்பிக்கை, தவிர்க்க இயலாத விளைவுகள், தேசபற்று வாழ்வில் ஒரு சிறந்த அலை, தேசத்தின் மறுகட்டமைப்பின் தொடக்கம் என சொற்களால் வர்ணிக்கிறார்.

அன்னிபெசண்ட்டின் பல சாதனைகளில் ஒரு சாதனை, சென்ட்ரல் இந்து பள்ளியை ஏற்படுத்தியதாகும். அன்னிபெசண்ட் இந்தியாவை தனது நிரந்தர வீடாக்கினார். இந்திய அரசியலில் முதன்மையாகப் பங்கேற்றார். இந்தியாவின் தேவைகளாக, மற்றவர்களிடையே தேசிய உணர்வை வளர்ப்பதும் இந்திய கருத்துகளின் மீது கல்வி நிறுவப்பட்டது வளமுற்றது, மேற்கின் எண்ணங்கள் மற்றும் பண்பாட்டினால் ஆதிக்கம் செலுத்தப்படவில்லை. இவள் இந்தியர்களுக்கு எப்பொழுதும் தன்னாட்சியை ஆதரித்தார் 1916இல் தன்னாட்சியின் செய்தியைப் பரப்புவதற்கு ஹோம்ரூல் லீக்கை ஏற்படுத்தினார்.

தியோ சோபிக்கல் சொசைட்டியின் நிலைகள் இந்தியா முழுவதும் திறக்கப்பட்டன. இதனுடைய இதழ் 'தியோசோபிஸ்ட்' பெரிய அளவில் விற்பனையானது. சொசைட்டி, சமூக சமய சீர்திருத்தத்தில் குறிப்பாக தென் இந்தியாவில் உதவிக்கரம் கொடுத்தது. பெரும்பாலான வேலைகள் இதனால் செய்து முடிக்கப்பட்டன, அன்னி பெசண்டால் செல்வாக்குடையதானது.

### இப்பகுதிக்கான கேள்விகள் 10.3

1. தியோ சோபிக்கல் சொசைட்டி எங்கு நிறுவப்பட்டது?
2. தியோ சோபிக்கல் சொசைட்டியை நிறுவினவர் யார்?
3. தியோ சோபிக்கல் சொசைட்டியின் தலைமையகம் இந்தியாவில் எங்குள்ளது?
4. 1916 ல் ஹோம்ரூல் லீக்கை ஏற்படுத்தியவர் யார்?

## 10.9 சையத் அகமத் கானும் அலிகார் இயக்கமும்

நீங்கள் இந்து சமயத்திற்குள் இருந்த சீர்திருத்தங்கள் அதனுடைய பழக்கங்கள் சமூக நிறுவனங்களைப் பற்றி, இப்போது தான் படித்திருப்பீர்கள். இதே போன்ற சீர்திருத்த இயக்கம் இஸ்லாமிய சமயத்திலும் குடி கொண்டிருந்தது. முஸ்லீம் மேற்குடி பிரிவின், மேற்கத்திய கல்வி கலாச்சாரத்துடன் தொடர்பை தவிர்ப்பதற்கு மன விருப்பம் கொண்டிருந்தார்கள். 1857ஆம் ஆண்டு புரட்சிக்குப் பின் சமய சீர்திருத்தத்தின் நவீன கருத்துகள் தோன்றத் தொடங்கின. 1863-இல், நவாப் அப்துல் லத்தீப் (1828 -1893) ஆல் கல்கத்தாவில் நிறுவப்பட்ட முகமதன் இலக்கிய சொசைட்டியினால் தொடங்கப்பட்டது. இது சமய, சமூக, அரசியல் கேள்விகளை நவீன கருத்துக்களை முன்னிட்டு கலந்துரையாடலை வளர்ச்சியடையச் செய்தது. மேல்நிலை பிரிவினர், இடைநிலைப் பிரிவினர் முஸ்லீம்களை மேற்கத்திய கல்வியை தழுவ ஆர்வமுட்டப்பட்டனர். இது முஸ்லீம் ஒற்றுமையிலும் பெரும் பங்கு வகித்தது. முஸ்லீம் மக்கள் கூட்டமும், கடவுளுக்கு பணிதல் மட்டுமின்றி, புனிதர்களை போற்றி வணங்குதலையும் உற்சாகப்படுத்துவது என்று போதித்த சிஷ்டி சூபிக்களால் நடத்தப்பட்ட இயக்களினால் ஈர்க்கப்பட்டது, டெல்லியில், ஷா வாலி உல்லாவுடன் தோழமை கொண்ட மற்றுமொரு இயக்கம், பழமை மரபுகளைச் சாராத சமய பழக்கங்களை எதிர்த்தது. ஷியா பிரிவும் ஓரே கடவுள் நம்பிக்கையும் மறு வலிமையடைந்தன. லக்னோவில் தத்துவ கற்ற பாரம்பரியமான பீரங்கிமஹால், புதிய கல்வி பாடத்திட்டத்திற்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டது. 18, 19ஆம் நூற்றாண்டுகளில் இந்தியா முழுவதும் பிரச்சாரம் செய்யப்பட்டது. வங்காளத்தைச் சார்ந்த ஷரிபுல்லா, பனரசி வங்காள இயக்கத்தின் தலைவராக இருந்தார். இந்த இயக்கம் உழவர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்காகவும், முஸ்லீம் களிடையே சாதிமுறையை எதிர்த்தும் குரல் கொடுத்தது.

உத்தரப் பிரதேசத்திலுள்ள ராய் பரேலியைச் சார்ந்த சையத் அகமத்கான் மிகவும் குறிப்பிடத்தக்க முஸ்லீம் சீர்திருத்தவாதியாவார். இவர் வீழ்ச்சியடைந்து கொண்டிருந்த நெசவு நகரங்களான அலகாபாத், பாட்னா வைச் சார்ந்த முஸ்லீம் கைவினை கலைஞர்களை கவர்ந்து சமூக பிளவு ஏற்பட்ட பொழுது சாதாரண மக்களுக்கு அவர்களது கௌரவத்தை, அடையாளத்தை, பொதுவான நம்பிக்கையின் மூலம், தனது பேச்சைக் கேட்போரை கண்டறிந்தார். இவர் முஸ்லீம்கள் தாங்களே ஆங்கிலேய ஆட்சியின் மாற்றப்பட்ட சூழ்நிலைக்கு தங்களை பழக்கப்படுத்தி கொள்ளாவிட்டால், கௌரவம், வளமைகள், எல்லா புதிய வாய்ப்புகளையும் இழக்க நேரிடும் என உணர்ந்தார். இவர் நவீன அறிவியல் எண்ணங்களினால் ஈர்க்கப்பட்டு, தனது வாழ்நாள் முழுவதும் இதை சமரசப் படுத்துவதற்கு பணியாற்றினார். இவர் குரானை அறிவார்ந்த அறிவியலை முன்னிட்டு விளக்கினார். இவர் நிறை குறைகளை திறனாய்வு செய்யும் அணுகுமுறை சுதந்திரமான எண்ணங்களை மேம்படுத்த மக்களை துரித படுத்தினார். இவரும், மதவெறி, குறுகிய மனப்பான்மை ஒதுக்கித்தள்ளும் பண்பு போன்றவற்றிக்கு எதிர்த்து எச்சரித்தார். இவர் மக்களை தாராளமனமும் சகிப்புத்தன்மையும் உள்ளவர்களாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார்.

1883இல், நாம் (இந்துக்கள் மற்றும் முஸ்லீம்கள்) இருவரும் நிச்சயமில்லாத இந்தியாவில் வாழ்கிறோம். கங்கை, யமுனை நதிகளின் புனித நீரை அருந்துகின்றோம். நாம் இருவரும் இந்திய மண்ணிலிருந்து பெறப்பட்ட பொருட்களை உண்ணுகிறோம், நாம் ஒரு தேசம். நமது தேசத்தின் முன்னேற்றம், நலம் நாம் இருவரும் நமது ஒற்றுமை ஒருவருக்கொருவர் இரக்கப்படுதல் அன்பு ஆகியவற்றின் மீது சார்ந்துள்ளோம். அப்படியிருக்க ஒருவருக்கோருவரிடையே ஒத்துவராமை, வளைந்து கொடுக்காத தன்மை பகைமை உணர்வு, நம்மை நிச்சியமாக அழித்துவிடும் எனக் கூறினார்.

சையத் அகமத்கான், பிரிந்திருப்பது முஸ்லீம் வகுப்பிற்கு தீங்கு விளைவிக்கும். அதைத் தடுப்பதற்கு வெளி உலகின் முன்னேற்றமடைந்த பண்பாட்டு சக்திகளுடன் இணைப்பை ஏற்படுத்த, இவர் தன்னுடைய பணியைச் செய்தார். இவர்கள் தங்களது உண்மையான எதிரியாக யாரை நினைத்தார்களோ, அந்த ஆங்கிலேய ஆட்சியாளர்கள் முஸ்லீம்களின் மீதிருந்த பகைமை உணர்ச்சியை நீக்குவதற்கு கடினமாக உழைத்தார்.

இவர், முஸ்லீம்களின் சமய சமூக வாழ்க்கை, நவீன மேற்கத்திய அறிவியல் அறிவு, பண்பாட்டின் உதவியுடன் தான் முன்னேற்ற முடியும் என உணர்ந்தார். ஆகவே, நவீன கல்வியை உயர்த்துவது தான் முதல் பொறுப்பாக இருந்தது. ஒரு அதிகாரியாக பல இடங்களில் பள்ளிகளை நிறுவினார். இவருக்கு உருதுவில் மொழி பெயர்க்கப்பட்ட பல மேற்கத்திய புத்தகங்கள் கிடைத்தன. இவர் அலிகார்கில் 1875இல் முகமதன் ஆங்கிலோ ஓரியண்ட்டல் கல்லூரியை தொடங்கினார். இது, மேற்கத்திய அறிவியல்கள், பண்பாட்டை பரப்புவதின் மையமாக இருந்தது என குறிப்பிடப்பட்டுள்ளது. பின்பு இந்த கல்லூரி ஆங்கிலோ முஸ்லீம் பல்கலைக் கழகமாக வளர்ந்தது.

சையத் அகமத் கானால் தொடங்கப்பட்ட மிதவாத சமூக, பண்பாட்டு இயக்கம், அலிகாரில் தொடங்கியதால் முஸ்லீம்களிடையே ‘அலிகார் இயக்கம்’ என அழைக்கப்பட்டது. ஆங்கிலோ - ஓரியண்ட்டல் கல்வி இந்த இயக்கத்தின் மையமாக விளங்கியது. இது, முஸ்லீம்களிடையே நவீன கல்வியை இஸ்லாமியத்துடன் இருந்த இணைப்பை பலவீனமாக்காமல், ஆதரிப்பதை நோக்கமாக கொண்டிருந்தது. இது எல்லா இந்திய முஸ்லீம்களுக்கான மைய கல்வி நிறுவனமாக ஆனது.

முஸ்லீம்கள் மீண்டும் புத்துயிர் பெறுவதில் அலிகார் இயக்கத்தின் பொறுப்பு மிகுதியாக இருந்தது. இது நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் சிதறி இருக்கின்ற முஸ்லீம் மக்களுக்காக முதன்மையான கருத்துகளை வழங்கியது. இது அவர்களுக்கு பொதுவான கருத்துகுவியல்கள், பொதுவான மொழியான உருதை கொடுத்தது, ஒரு முஸ்லீம் அச்சடிக்கும் அச்சகம் உருது மொழியில் தொகுப்பதற்காக வளர்ச்சியடைந்தது.

சையத் முகமதுவின் முயற்சிகள், சமூக கட்டத்திற்கும் பரவலாக்கப்பட்டது. இவர் சமூக சீர் திருத்தத்திற்காக உழைத்தார். இவர், பெண்கள் கல்வி கற்றுக் கொள்வதை விரும்பினார் பர்தாவை நீக்குவதை ஆதரித்தார். பலதார மணத்தை (பல பெண்களை மணந்து கொள்ளுதல்) எதிர்த்தார்.

1899இல் மிர்சா குலாம் அஹமத், அமேதியா இயக்கத்தை நிறுவினார். இந்த இயக்கத்தின் கீழ் நவீன கல்வியை வழங்க, ஏராளமான பள்ளிகளும் கல்லூரிகளும் நாடு முழுவதும் திறக்கப்பட்டன. சமய துறையில், இந்த இயக்கத்தின் ஆதரவாளர்கள் இஸ்லாமியத்தின் உலகளாவிய மனிதாபிமான பண்புகளை வலியுறுத்தினர். அவர்கள் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே ஒற்றுமையை ஆதரித்தனர்.

நவீன இந்தியாவின் சிறந்த கவிஞர்களில் ஒருவரான முகமது இக்பாலும் (1876 - 1938) தனது கவிதைகளின் மூலம், முஸ்லீம், இந்து இளய தலைமுறையினர் மீது தத்துவ சமய

எண்ணப்போக்குகளில் செல்வாக்கை செலுத்தினார். இவர், கருத்து வளங்களை தழுவுதல், உலகை மாற்றிய மைக்க உதவும் என துரிதப்படுத்தினார். இவர் அடிப்படையிலேயே ஒரு மனிதாபி மானியாவார்.

## 10.10 பார்சிகளுக் கிடையே சீர்திருத்த இயக்கங்கள்

19ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் மும்பையில் பார்சிகளுக்கிடையே சமய சீர்திருத்த இயக்கம் ஆரம்பமானது. 1851-இல் நௌரோஜி பர்டோன்ஜி, தாதாபாய் நௌரோஜி, எஸ்.எஸ். பெங்காலி, பிறரால் ரெஹுமை மஸ்டயாசன் சபா அல்லது சமய சீர்திருத்த அசோசியேசன் நிறுவப்பட்டது. அவர்கள் பார்சிகளுக்கிடையே சமூக, சமய சீர்திருத்த நோக்கத்திற்காக, ‘ரஸ்ட்கோப்டர்’ என்ற ஒரு இதழைத் தொடங்கினார். அவர்களும் கல்வி, குறிப்பாக பெண்களி டையே பரப்புவதில் பெரும்பங்கை வகித்தனர். அவர்கள் சமயத்துறையில் பாதுகாக்கப்பட வேண்டிய பழமைவாதிகளை எதிர்த்து நடவடிக்கைகளை மேற்கொண்டனர். நவீன பார்சி சமூக வழக்கங்கள், கல்வி, பெண்களின் திருமணம், பொதுவாக பெண்களின் சமூக நிலை சம்பந்தமாக தொடங்கினார். நாளடைவில் பார்சியர்கள், இந்திய சமுதாயத்தில் மிகவும் மேற்கத்திய பிரிவினராக ஆனார்கள்.

## 10.11 சீக்கியர்களிடையே சமயசீர்திருத்தம்

19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமிர்தசரசில், கல்சா கல்லூரி தொடங்கியபொழுது சீக்கியர்களிடையே சமய சீர்திருத்தம் தொடங்கியது. சிங்சிபாசின் (1870) முயற்சிகள், ஆங்கிலேயரின் ஆதரவுடன் கல்சா கல்லூரி அமிர்தசரசில் 1892 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்த கல்லூரியின் பள்ளிகளின் ஒரே மாதிரியான முயற்சிகளின் விளைவாக குருமுகி, சீக்கிய கற்றல், பஞ்சாபி இலக்கியம் மொத்தத்தில் வளர்ச்சி அடைந்தன.

1920 ஆம் ஆண்டுக்குப் பிறகு பஞ்சாபில் அகாலி இயக்கத்தின் எழுச்சியின் பொழுது, சிக்கின் உத்வேகம் உந்தப் பெற்றது. மத குருமார்கள் அல்லது மகன்ஸ் தங்களுடைய சொந்த சொத்தாக கையாளப்பட்டு வந்த குருத்துவாரா அல்லது சீக்கியர்களின் புனிதமான நினைவு சின்னங்களை வைக்கும் பேழையின் மேலாண்மையை உயர்த்துவது தான் அகாலிகளின் முக்கியமான நோக்கமாக இருந்தது. 1925இல் ஒரு சட்டம் இயற்றப்பட்டு அவை குருத்துவாராவை மேலாண்மை செய்யும் உரிமையை ஷிரோமணி குருத்துவரா பிரபந்தக் கமிட்டிக்கு கொடுத்தது.

## 10.12 சீர்திருத்த இயக்கத்தின் தாக்கம்

ஆங்கிலேயர்கள், சமுதாயத்தின் வைதீக மேற்பிரிவைச் சார்ந்த மக்களை சாந்தப் படுத்த விரும்பினார்கள். இதன் விளைவாக, முக்கியமான இரண்டு சட்டங்கள் இயற்றப்பட்டன. சில சட்ட நடவடிக்கைகள் பெண்களின் அந்தஸ்தை உயர்த்த அறிமுகப்படுத்தப்பட்டன. உதாரணமாக சதி, சட்டத்திற்கு புறம்பானது (1829) என அறிவிக்கப்பட்டது. சிசுக்கொலை சட்டத்திற்கு புறம்பான 1856-இல் இயற்றப்பட்ட சட்டத்தால் விதவை மறுமணம் அனுமதிக்கப்பட்டது. 1860-இல் இயற்றப்பட்ட சட்டத்தால் பெண்களின் திருமண வயது 10க்கு உயர்த்தப்பட்டது.

1872ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டம் கலப்பு சாதி கலப்பு இன திருமணங்களை அனுமதித்தது. 1891-இல் இயற்றப்பட்ட மற்றுமொரு சட்டம் குழந்தை திருமணத்தை தடை செய்வதை நோக்கமாக கொண்டிருந்தது. குழந்தை திருமணத்தை தடை செய்ய சாரதா சட்டம், 1929 இல் இயற்றப்பட்டது, இதன் படி, 14 வயதுக்கு குறைந்த ஆணும் திருமணம் செய்து

கொள்ள முடியாது. 20-ஆம் நூற்றாண்டில் குறிப்பாக 1919 ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்திய தேசிய இயக்கம், சமூக சீர்திருத்தத்தின் முதன்மை பிரச்சாரியாக ஆனது. படிப்படியாக, சீர்திருத்தவாதிகள், மக்களுக்கு சென்றடைவதற்கு இந்திய மொழியிலேயே பிரச்சாரம் செய்வதற்கு உதவியை நாடினார்கள். அவர்களால் நாவல்கள், நாடகங்கள், சிறு கதைகள், கவிதை, அச்சகங்கள் பயன்படுத்தப்பட்டன 1930இல் திரைப்படங்களும் அவர்களுடைய கருத்துகளைப் பரப்பின.

ஏராளமான தனி மனிதர்கள், சீர்திருத்த சமுதாயங்கள், சமய நிறுவனங்கள், பெண்களிடையே கல்வியைப் பரப்ப, இளம் குழந்தைகளின் திருமணத்தை தடை செய்ய, பெண்களை பர்தா முறையிலிருந்து வெளியில் கொண்டு வர, ஒரே தாரத்தை கட்டாயப் படுத்த சராசரி வகுப்பைச் சார்ந்த பெண்கள் தொழில் செய்ய அல்லது பொது வேலை வாய்ப்பு இவற்றிற்காக கடுமையாக உழைத்தனர். இத்தகைய முயற்சிகளினால் நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் பெண்கள் ஊக்கமான, முக்கிய பங்கை வகித்தார்கள். இதன் விளைவாக, பல மூடநம்பிக்கைகள் மறைந்தன பல அவர்களது வழியிலேயே சென்றுவிட்டன. இப்பொழுது அயல் நாட்டிற்கு பயணம் செய்வது இனி மேல் பாவம் இல்லை.

## இப்பகுதிக்கான கேள்விகள் 10.4

1. முகமதன் ஆங்கிலோ - ஓர்யண்ட்டல் கல்லூரியை தொடங்கியவர் யார்?
2. அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகம் எங்கு அமைந்துள்ளது?
3. முஸ்லீம் பெண்களுக்கான, சையத் அஹமத் கானின் கருத்துகள் யாவை?
4. எங்கு முகமதன் இலக்கிய சொசைட்டி ஏற்படுத்தப்பட்டது?
5. எதாவது மூன்று பிரபலமான பார்சிய சமூக - சமய சீர்திருத்தவாதிகள் பெயரைக் கொடு?

## நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின் தாக்கம் ஏராளமான சமூக, சீர்திருத்தங் களுக்கு வழி காட்டியது.
- ராஜாராம் மோகன்ராய், இந்தியாவை விழிப்புணரச் செய்வதில், நவீன கல்வியை பரப்புதல், அறிவியல், தொழில்நுட்பம், பல சமூக தீமைகளை எதிர்த்து விடாது தொடர்ந்த போராட்டங்களினால் அவர் முக்கிய பாராட்டுக்குரியவராகக் கருதப்படுகிறார்.
- ஆர்.ஜி பண்டார்கரும் எம்.ஜி ராணடேயும் மஹாராஷ்டிராவில் சமய சீர்திருத்தங்களை பிரார்த்தன சமாஜ் மூலமாக கலப்பு சாதி திருமணம் செய்தல், மத குருமார்களின் ஆதிகத்திலிருந்து விடுதலை, ஏராளமான பெண்களின் முன்னேற்றம் பற்றி பிரச்சாரம் செய்வதின் மூலம் அவர்கள் தங்கள் வேலையைச் செய்தனர்.
- சுவாமி தயானந்த சரஸ்வதி, ஆர்ய சமாஜத்தை நிறுவினார் தனி மனிதர்கள் வேதங்களை விளக்குவதற்கும் மதகுருமார்களின் கொடுமையிலிருந்து விடுவித்துக் கொள்ளவும், அவர்களது உரிமைக்காகவும் வாதாடினார். இவை எல்லாவற்றையும் தவிர நிறுவனம், தீண்டாமை வளைந்து கொடுக்காத சாதிமுறை ஆகியவற்றை எதிர்த்து நவீன கல்வியை மேம்படுத்த கடினமாக உழைத்தது.



குறிப்புகள்

- சிறந்த மனிதாபியான சுவாமி விவேகானந்தா ராம கிருஷ்ண மிஷன் மூலம் சமய குறுகிய எண்ணங்களை கண்டித்தார். தன்னியல்பான சிந்தனைகளை ஆதரித்தார், ஏழைகளுக்குப் பணி செய்வதை வலியுறுத்தினார்.
- அன்னிபெசண்டின் வழி காட்டுதலின் கீழ், தியோ சோபிக்கல் சொசைட்டி, பண்டைய இந்திய சமயங்களின் படிப்பு, தத்துவங்கள், கொள்கைகளை மேம்படையச் செய்தது.
- முஸ்லீம்களிடையே, சையத் அஹமத் கானால், நவீன கல்வியைத் தழுவ முஸ்லீம்களை ஊக்குவித்தல், பல தாரத்தை விட்டொழிதல், பர்தாமுறை, மத சகிப்பான்மையை எதிர்த்து பேசுதல், அறியாமை, விவேகமின்மை ஆகிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## பயிற்சிக்கான கேள்விகள்

1. இந்தியாவில் சமூக சீர்திருத்தத்தில் இராஜாராம் மோகன் ராயின் பங்கு என்ன?
2. பிரார்த்தன சமாஜ், சமய, சமூக சீர்திருத்தங்களையும் செய்து கொண்டிருந்தது என்பதை எவ்வாறு உன்னால் கூற முடியும்?
3. வேதங்களில் ஆர்ய சமாஜின் நம்பிக்கையை எவ்வாறு நியாயப்படுத்துவாய்?
4. 19ஆம் நூற்றாண்டில், இந்திய விழிப்புணர்வில் எவ்வாறு ராமகிருஷ்ணமிஷன் உதவினது?
5. முஸ்லீம் இனத்தின் தீமைகளை அகற்றுவதில் சையத் அஹமத் கானின் முயற்சிகளை விவாதி?
6. இந்திய சமுதாயத்தின் முன்னேற்றத்தில் தியோசோபிக்கல் சொசைட்டியின் பங்கை மறக்க முடியாது - விவரி.
7. சீக்கிய சீர்திருத்தவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களைப் பற்றி சிறு குறிப்பு வரைக.

## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 10.1

1 சமுதாயத்தில் சதி, பர்தாமுறை, சாதி முறை போன்ற வழக்கங்கள் காணப்படுகின்றன.
2. உருவ வழிபாட்டை எதிர்த்தல். பலிகள் இல்லை, காணிக்கைகள் இல்லை, சதி, பர்தா கண்டிப்பது, மனித கௌரவம்.
3. கலப்பு சாதி திருமணம் செய்வது, கலப்பு ஜாதி, சமபந்தி விருந்து, விதவை மறுமணம், ஏராளமான பெண்கள் நலிவடைந்த பிரிவினரின் முன்னேற்றம்.
4. பிரார்த்தன சமாஜ் கருத்துகளின் வலிமையான ஆதரவாளர்.

### கேள்விகளுக்கான பதில்கள் 10.2

1. தாயனந்த சரஸ்வதியால் ஆர்ய சமாஜ நிறுவப்பட்டது.
2. 1886 இல் லாகூரில்
3. மனித இன சேவை, மோட்சத்திற்கு.
4. நரேந்திர நாத் தத்தா
5. ஏழைகளுக்கும் நலிந்தவர்களுக்கும் பணி செய்தல்





## கேள்விகளுக்கான பதில்கள் 10.3

1. யு. எஸ். ஏ
2. ஹச். பி. பாளவட்ஸ்கி "ரஷ்யக்காரர் கர்னல் ஹச்.எஸ் ஆல்காட்" அமெரிக்கா
3. சென்னைக்கு அருகில் அடையாறு
4. திருமதி. அன்னி பெசன்ட்

## கேள்விகளுக்கான பதில்கள் 10.4

1. சையத் அஹமத்கான்
2. அலிகார்
3. பர்தா முறையை நீக்குதல் பெண்களுக்கான கல்வி
4. 1863 இல் கல்கத்தாவில்
5. தாதாபாய் நௌரோஜி, எஸ். எஸ் பெங்காலி நௌரோஜி பர்டோங்கி

# அலகு - V

# ஓவியம், செயல்பாட்டுக் கலைகள், கட்டடக் கலை

*11. இந்திய ஓவியங்கள்*

*12. செயல்பாட்டுக் கலைகள்:*

*இசை, நடனம், நாடகம்*

*13. இந்திய கட்டடக் கலை*

# 11

# இந்திய ஓவியங்கள்

நீங்கள் சந்தை அல்லது அருங்காட்சியத்திற்கு சென்றால் பல வண்ண ஓவியங்கள், சுவரில் தொங்கக் கூடிய ஓவியங்கள் அல்லது களிமண்ணால் செய்யப்பட்ட ஓவியங்களைக் காண்பீர்கள். இத்தகையை ஓவியங்களின் பிறப்பிடம், நமது பண்டைய காலம் தான் என்பது உங்களுக்குத் தெரியுமா. அவை அன்றைய கால மக்களின் வாழ்க்கை, அவர்களின் பழக்க வழக்கங்களை சித்தரிக்கின்றன. அவை அரசர்கள், அரசிகள் எவ்வாறு உடையணிந்தனர். அரச சபையில் அவையினர் எவ்வாறு அமர்ந்தனர் என்பதையும் காட்டுகின்றன. முந்தைய காலத்திருந்தே மதசார்பற்ற சமயம் சார்ந்த என இரு ஓவியங்கள் முக்கியமான கலைத்திறனை வெளிப்படுத்தி நடைமுறைப்படுத்தியதை இலக்கிய ஆவணங்கள் ஓவியக் கலையாக கொண்டிருந்தன. மனிதன் வாழுவதற்கு அடிப்படை தேவைகளின் உணர்ச்சியை வெளிப்படுத்தக் கூடிய ஓவியங்கள் வெவ்வேறு படிவங்களில் வரலாற்றுக்கு முந்திய காலத்திருந்தே வரையப்பட்டன. ஓவியக்கலை என்பது ஒரு படிவம் அதனுடன் நீங்கள் எதோ ஒர் வழியில் அல்லது மற்ற வழிகளில் அதை பழக்கப்படுத்திக் கொண்டீர்கள். இந்திய ஓவியங்கள் வெவ்வேறு மரபுத் தொகுப்புகளின் வெளிப்பாடுகள், அதனுடைய வளர்ச்சி தொடருகின்ற செயல்முறைகளாகும். இருந்தாலும் புதிய பாணிகளைத் தவழும் போது இந்திய ஓவியங்கள் அதனுடைய நிகரற்ற அம்சங்களை பராமரித்துக் கொண்டிருந்தது. நவீன இந்திய ஓவியங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து வளமான மரபு வழியில் பெறப்பட்ட நவீன பரவலான எண்ணங்கள் மற்றும் கருத்துகளின் பிரதிபலிப்பாகும்.

## நோக்கங்கள்

இந்த பாடத்தைப் படித்த பிறகு உங்களால்

- வரலாற்றுக் காலத்தின் முந்தைய காலத்திலிருந்து ஓவியத்தின் பிறப்பிடத்தை ஆராய
- மத்திய காலத்தில் ஓவியத்தின் வளர்ச்சியை விவரிக்க
- இந்தியாவில் ஓவியங்களுக்கு முகலாய மன்னர்களின் பங்களிப்பை அங்கிகரிக்க
- தெளிவான வேறுபாடு உடைய ராஜஸ்தானி, பஹாரி மரபுக் குழுவின் ஓவியங்கள் தோன்றியதை ஆராய
- உள்ளூர் ஓவிய மையங்களான காங்கரா குலு மற்றும் பசோலியின் வளர்ச்சியை மதிப்பிட

- இந்திய ஓவியக் கலைக்கு இராஜா ரவிவர்மாவின் பங்களிப்பை பாராட்ட
- வங்காள மரபுகலைப் பள்ளியினை தோற்றுவிப்பதற்காக அபிந்திரநாத் தாகூரினால் எடுக்கப்பட்ட முயற்சிகளை மதிப்பிட
- வளர்ந்த கலைஞர்களான பிரான்சிஸ் நியுட்டன் சௌசா குழுவின் சிறப்பான பங்கை பாராட்ட
- கிராமியக் கலை வடிவங்களான மிதிலா ஓவியம், கலம் கரி ஓவியம், வார்லி ஓவியம் மறறும் கலிகட் ஓவியம் இதனுடன் இந்திய ஓவியத் துறையில் ஏராளமான புதிய பரிமாணங்களின் பங்களிப்பை அங்கீகரிக்க முடியும்.

## 11.1 பண்டைய காலம் : தொடக்கம்

பழங்காலத்திலிருந்தே ஓவியம் ஓர் கலையாக வளர்ச்சியுற்றிருந்தது என்பதற்கு சான்றாக குகைகள் இலக்கிய மூலங்களிலிருந்து எஞ்சிய பகுதிகள் கண்டு பிடிக்கப்பட்டன. இந்தியாவின் கலை, ஓவியத்தின் வரலாறு மத்திய பிரதேசத்திலுள்ள பிம்பெட்கா குகைகளில் முந்தைய வரலாற்று மலை ஓவியத்துடன் தொடங்குகிறது. அங்கு விலங்குகளின் வரை படங்கள் ஓவியங்கள் உள்ளன. மஹாராட்டிராவில் உள்ள நரசிங்கார்க் என்ற குகை ஓவியங்கள், புள்ளிமான்களின் தோல்களை உலர விடப்பட்டுள்ளதைக் காண்பிக்கின்றது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஓவியங்கள் வரை படங்கள் ஹாரப்பா நாகரிகத்தின் முத்திரைகளில் தோன்றின.

பிராமண, புத்த இலக்கியங்கள் பல்வேறு வகையான ஓவியங்கள் உத்திகள் உதாரணமாக ‘லெபியா சிட்ராஸ்’,’லேகா சிட்ராஸ்’ ‘துலி சிட்ராஸ்’ போன்றவைகளை எடுத்துரைக்கின்றன. முதலாவது கிராமியக் கலையின் சித்தரிப்பு இரண்டாவது கோடு வரைதல் துணிகளில் ஓவியம் வரைதல், மூன்றாவது தரையில் ஓவியம் வரைதல்.

புத்த நூலான விநய பிடகா (4 -3 ஆம் நூற்றாண்டு) பல அரச கட்டிடங்களில் வரையப்பட்ட உருவங்களின் ஓவியங்களை வர்ணிக்கின்றன. முத்தாராட்சசா (5ஆம் நூற்றாண்டு) என்ற நாடகம் ஏராளமான ஓவியங்கள் அல்லது படாஸ்களை குறிப்பிடுகிறது. கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் வாத்சாயனாவால் எழுதப்பட்ட அழகுணர்வு - காம சூத்திராவில் 64 வகை கலைகளை குறிப்பட்டு இவை அறிவியல் கொள்கைகளின் அடிப்படையில் உள்ளன என்று கூறுகிறார். விஷ்ணு தர்மோத்ரா புராணம் (கி.பி.7ஆம் நூற்றாண்டு) சித்ர சூத்ரா என்று அழைக்கப்பட்ட ஓவியத்தின் ஒரு பகுதியைக் கொண்டிருந்தது. இவை ஆறு அங்கங்களாக உருவங்களின் வகைபாடுகள் பரிணாமம், காமம், நிறங்களின் வர்ணனை முதலியவற்றை விவரிக்கின்றது. இவ்வாறாக, முந்தைய வரலாற்றுக் காலத்திலிருந்தே தொல்பொருள் ஆராய்ச்சி இலக்கியம், ஓவியங்களின் வளர்ச்சிக்கு சான்றளிக்கின்றன. குப்தர்களின் ஓவியக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு, அஜந்தாவிலுள்ள ஓவியங்களான விலங்குகள் பறவைகள், மரங்கள், பூக்கள், மனித உருவங்கள், ஜடகாவிலிருந்து கதைகள் அவர்களுடைய பாடப்பொருளாகும்.

மூரல் ஓவியங்கள் மலைகளின் மேற்பகுதி பக்கவாட்டில் வரையப்பட்டன. குகை எண் 9 பித்த பிட்சுகள் ஸ்தூபியை நோக்கி செல்லுதலை சித்தரிக்கின்றன. குகை எண் 10இல் ஜடகா கதைகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. ஆனால் குப்தர்கள் காலமான கி.பி. 5 - 6 ஆம் நூற்றாண்டுகளில் சிறந்த ஓவியங்கள் தீட்டப்பட்டன. முரல் ஓவியங்கள் புத்தரின் வாழ்க்கை மற்றும் ஜடகா கதைகளில் சமயம் சார்ந்த காட்சிகளை சித்தரிக்கின்றன. ஆனால் நாம் சமய சார்பற்ற காட்சிகளையும் வைத்திருக்கிறோம். இங்கு நாம் இந்தியர்கள் வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் காண்கிறோம். நாம் இளவரசிகளை அவர்களுடைய அரண்மனையில்,

பெண்களை அவர்களுடைய அறைகளில், கூலிகளை தோலில் அவர்களது சுமையுடன், பிச்சைக்காரர்கள், உழவர்கள், துறவிகள் இவர்களுடன் பல விலங்கினங்கள், பறவைகள் இந்தியாவின் பூக்களையும் காண்கிறோம்.

### ஓவியத்தில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள்

பல்வேறு பொருட்கள், பல வகை ஓவியங்களுக்காக பயன்படுத்தப்பட்டன. சித்ரசலாஸ் (கலைக்காட்சிச் கூடம்), சில்ப சாஸ்த்ரா (கலை உத்திகளை கொண்ட ஆய்வுக் கட்டுரை) இலக்கிய மூலங்களில் குறிப்பிடுகின்றன. இருந்தாலும் முதன்மையான நிறங்களான வெளிறிய சிவப்பு (தட்டுராகா) விவிட் சிவப்பு (குங்குமம் அல்லது செந்தூரம்) வெளிறிய பழுப்பு கலந்த மஞ்சள் நிறம் (ஹரிதலா) அடர் கரு நீலம் (நீலம்) கருமை நிறத்திற்கு விளக்கின்மையும் (கஜாலா) வெள்ளை நிறத்திற்கு (சுண்ணாம்புக் கட்டியையும்) (கடி மிட்டி) களிமண் (ஜெருமதி), பச்சை நிறத்தையும் பயன்படுத்தினர். எல்லா நிறங்களும் உள்ளூரிலேயே கிடைத்தது. கருநீலம் மட்டும் பாகிஸ்தானிலிருந்து பெறப்பட்டது. வர்ண கலவைகள் உதாரணமாக சாம்பல் நிறம் மிக அரிதாக உபயோகப் படுத்தப்பட்டது. வர்ணங்களின் உபயோகம், மையக் கருத்துகள் மற்றும் உள்ளூர் தட்ப வெப்பநிலையினால் தீர்மானிக்கப்பட்டது.

6 ஆம் மற்றும் 9 ஆம் நூற்றாண்டுகளில் வடக்கே பாக்கிலுள்ள புத்தகுகைகள், தெற்கே தக்காணத்தின் பல்வேறு இடங்களிலும் எஞ்சியிருந்த புத்த ஓவியங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இந்த ஓவியங்களின் ஆய்வுப் பொருள் சமயம் சார்ந்தவை. ஆனால் அவற்றின் உட்கருத்து சமய சார்ப்பற்றதாகவோ பெருந்தன்மை வாய்ந்தாகவோ நாகரிகமானதாகவோ இல்லை. இத்தகைய ஓவியங்கள் சிறு பகுதியே மிஞ்சியிருந்தது. ஆனாலும் அவைகள் உலகின் கடவுளர்கள் கடவுளிகள், பாதி பெண் தெய்வங்கள் தெய்வீக வளமான பல்வேறு வகையான தாவரங்கள் விலங்குகள், களியாட்டம், அன்பு, கருணை வசீகரம் போன்ற தெய்வீகப் பண்புகளை சித்தரிக்கின்றன. இவற்றின் சான்றுகளை, பாதாமிலுள்ள (கர்நாடகம்) மூன்றாவது குகை, காஞ்சிபுரத்திலுள்ள கோவில்கள், சித்தன்ன வாசலிலுள்ள (தமிழ்நாடு) சமணர்களின் குகைகள், கைலாச எல்லோரவிலுள்ள (8 மற்றும் 9ஆம் நூற்றாண்டுகள்) சமண குகைகளில் காணலாம். பெருங்காப்பியம் புராணங்களின் மையக் கருத்துக்கள், பல தென்னிந்திய கோவில்கள் மற்றும் தஞ்சாவூரிலுள்ள பிரகதீஸ்வரர் கோயில் ஆகியவற்றின் சுவர் ஓவியங்களில் அலங்கரிக்கப்பட்டுள்ளன. வடக்கே பாக், அஜந்தா பாதாபி இவற்றில் தக்காணம் தரமான மரபிற்கு மிகச் சிறந்ததாக இருந்ததால், சித்தன்ன வாசல், காஞ்சிபுரம் மலையாடிபட்டி திருநலைப் புரத்தின் தெற்கே அதனுடைய ஊடுறுவலின் எல்லையைக் காட்டுகிறது. சித்தன்ன வாசல் ஓவியங்கள் (ஜைன சித்தார்கள் வாழும் இடம்) ஜைன ஆய்வுப் பொருள்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. அதே சமயம், மற்ற மூன்றும் சைவ அல்லது வைஷ்ணவ கருப் பொருள், உள்ளுயிர்ப்பைக் கொண்டிருந்தது. சமய சார்பற்ற மரபைச் சார்ந்த ஓவியங்களாக இருந்த போதிலும், ஓவியத்தின் மையப் பொருள் மத்திய கால செல்வாக்கின் தாக்கத்தை காட்டுகிறது. அதாவது சரிந்த, வெற்றிடம் ஒரு பக்கம் கோண வடிவத்தைப் போன்ற கோடுகளின் மாதரிகள் மற்ற பக்கங்களிலும் உள்ளன.

## 11.2 இடைக்கால இந்தியாவின் கலை

டெல்லி சுல்தான்கள் காலத்தில், அரச அரண்மனைகள், அரச சயன அறைகள், மசூதிகள் மூரல் ஓவியத்தை அறிக்கையிடுகின்றன. இவை முக்கியமாக பூக்கள், இலைகள், தாவரங்களை சித்தரிக்கின்றன. இல்துமிஷின் காலத்தில் (1210 - 1236) ஓவியங்களைப் பற்றின தகவல்கள் நமக்கு கிடைத்துள்ளன. அலாவுதின் கில்ஜி காலத்தில் (1296 - 1316) மூரல்





ஓவியங்கள் நுட்பமான ஓவியங்கள் (கைப் பிரதிகளின் விளக்கங்கள்) துணிகளில் வரைந்த ஓவியங்கள் ஆகியன நமக்குக் கிடைத்துள்ளன. டெல்லி சுல்தான்கன் காலத்தில் இந்திய ஓவியங்களில் பாரசீக அரேபிய ஓவியங்களின் செல்வாக்கு இருந்ததை நாம் காண்கிறோம். பாரசீக அரேபியர்களின் வருகையை, ஈரான் அரேபிய உலகின் சிறந்த முஸ்லீம்களின் எடுத்துக்காட்டு கைப்பிரதிகள் நமக்கு சான்றாக உள்ளன.

இந்தக் காலத்தில் நமக்கு மற்ற மாநிலங்களின் வட்டாரங்களிலிருந்து ஓவியங்கள் கிடைத்துள்ளன. குவாலியர் அரசர் மான்சிங் தோமரின் அரண்மனையை அலங்கரிக்கின்ற ஓவியங்கள் பாபர் அக்பர் இருவரையும் கவர்ந்தன. கி.பி. 14 - 15 ஆம் நூற்றாண்டுகளில் நுட்பமான ஓவியங்கள் குஜராத், ராஜஸ்தான் மத்திய வடக்கு, கிழக்கு இந்தியாவில் சமண வணிகர்களின் ஆதாவில் ஒரு சக்தி வாய்ந்த இயக்கமாகத் தோன்றியது. மத்திய பிரதேசத்தில் மாண்டு கிழக்கு உத்திரப் பிரதேசத்தில் ஜான்பூர் மற்றும் கிழக்கிந்தி யாவில் வங்காளம் போன்ற இடங்கள் சிறந்த ஓவியங்களின் எடுத்துக்காட்டுகளைக் கொண்ட கைப்பிரதிகளின் சிறந்த மையங்களாகும்.

கி.பி. 9ஆம் - 10ஆம் நூற்றாண்டுகளில் நுணக்கமான ஓவியங்கள் என்றழைக்கப்பட்ட ஒரு வகை ஓவியங்கள் கிழக்கிந்தியாவில் பாலா இராச்சியங்களான வங்காளம், பீஹாரிலும் ஓரிசாவிலும் வளர்ச்சியடைந்தன. அழியக் கூடிய பொருட்களிலிருந்து பெயருக்கு ஏற்றாற்போல் மிகச் சிறிய நுணுக்கமாக செய்யப்பட்டது. இந்த வகையில் புத்த, சமண, இந்து மத கையெழுத்துப் பிரதிகள் பனை ஓலைகளில் விளக்கப்பட்டுள்ளன. அவை மிக நுட்பமான அளவில் ஆனால் அஜந்தா ஓவியத்தை ஒத்திருந்தது. கோவில்கள் மடாலயங்களுக்கு நன்கொடை வழங்கிய வியாபாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க இவை தயாரிக்கப்பட்டன.

13ஆம் நூற்றாண்டிலிருந்து, வட இந்தியாவில் டெல்லி சுல்தான்கள், பாரசீக அவையின் பண்பாட்டின் முக்கிய அம்சங்களை தங்களுடன் கொண்டு வந்தனர். 15ஆம் மற்றும் 16ஆம் நூற்றாண்டுகள், பாரசீக செல்வாக்கு கையெழுத்துப் பிரதிகளில் எடுத்துக்காட்டி, மாள்வா, வங்காளம், டெல்லி, ஜான்பூர், குஜராத் மற்றும் தக்காணத்தில் தயாரிக்கப்பட்டது. 16ஆம் நூற்றாண்டில் இந்திய ஓவியர்கள் பெர்சிய மரபைச் சார்ந்த ஓவியர்களுடன் கொண்ட தொடர்பு, இரண்டு பாணிகளின் இணைப்பிற்கு சான்று பகரும் நூல்கள் உருவாகின. முந்தைய டெல்லி சுல்தான்களின் காலத்தில் மேற்கு இந்தியாவில் ஜைன சமூகத்தினரால் ஓவியக்கலைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பு கொடுக்கப்பட்டது. எடுத்துக்காட்டுகளைக் கொண்ட கையெழுத்துப் பிரதிகளான ஜைன சமய நூல்கள் கோவில் நூலகத்திற்கு வெகுமதியாக கொடுக்கப்பட்டது. இந்த கையெழுத்துப் பிரதிகள், தீர்த்தங்கர்களின் வாழ்க்கையையும், செயல்களையும் சித்தரிக்கின்றன. பாட புத்தக எடுத்துக்காட்டு கலை, மொகலாயர்களிடம் ஒரு புதிய கவனத்தை ஈர்த்தது. அக்பரும் அவருடைய வாரிசுகளும் ஓவியம் மற்றும் சிற்றின்பம் ஆகிய எடுத்துக்காட்டு களுக்கு புரட்சிகரமான மாற்றங்களை கொண்டுவந்தனர். இந்த காலத்திலிருந்து புத்தகத்தில் மிளரச் செய்தல் அல்லது தனிப்பட்ட நுட்பமான ஓவியங்கள் சுவர் ஓவியங்களாக மாற்றப்பட்டது கலையின் மிக சிறப்பான படிவமாகும். பேரரசர் அக்பர் காஷ்மீரிலிருந்தும் குஜராத்திலிருந்தும் வந்த ஓவியர்களை ஆதரித்தார். ஹீமாயூன் இரண்டு பாரசீக ஓவியர்களை தன்னுடைய அவைக்கு வரவழைத்தார். முதன் முறையாக, ஓவியர்களின் பெயர்கள் கல்வெட்டுக்களில் பதிக்கப்பட்டன. அப்ட் - அஸ் - சமாத்தசவந்த் பசவன் ஆகியோர் இக் காலத்திய சிறந்த ஓவியர்களாவர். பாபர் நாமாவிலும் அக்பர் நாமாவிலும் அழகான விளக்கப்படங்கள் காணப்பட்டன. சில ஆண்டுகளுக்குள் பாரசீக, இந்தியப் பாணியின் இணைப்பு ஒருங்கிணைக்கப்பட்ட திறன்மிக்க பாணியாக வெளிப்பட்டது தனிப்பட்ட பாணியாக மொகலாய ஓவியம் வளர்ச்சியடைந்தது. 1562 லிருந்து 1577 க்குள் கிட்டதட்ட 1400 ஆடை ஓவியங்கள்,

புதிய பாணியை எடுத்துக்காட்டுவது போன்று தயாரிக்கப்பட்டு, அவை அரச கலைக்கூடத்தில் வைக்கப்பட்டன. அக்பரும் உருவப்படங்களை உருவாக்குவதற்கு ஊக்கமளித்தார்.

சிறந்த ஓவியரும் கலைத்துறையில் சிறந்தவருமான ஜஹாங்கீர் காலத்தில் ஓவியக்கலை மிக உன்னதமான நிலையில் அடைந்தது. ஓவியர்கள் ஒளிர்வு மிக்கமயில் நீலம், சிவப்பு வர்ணங்களை உபயோகிக்க தொடங்கினார்கள். ஓவியத்திற்கு மூன்று பரிமாண விளைவுகளை கொடுக்க முடிந்தது. ஜஹாங்கிரின் காலத்தில் மன்சூர், பிஷன்தாஸ் மனோகர் ஆகியோர் ஆற்றல் மிக்க ஓவியர்களாவர். மன்சூர் ஒரு தலை சிறந்த அபுல்ஹசன் என்ற ஓவியரின் உருவப்படத்தை வரைந்தார் பறவைகள் விலங்குகள் வரைவதில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தார். ஷாஜஹான் மிக நேர்த்தியான கட்டிடக் கலையில் ஆர்வம் உள்ளவராக இருந்தாலும், அவருடைய மூத்த மகன் தாராஷிகோ தன்னுடைய தாத்தாவைப் போல ஓவியத்தை ஆதரித்தார். அவர் தனது ஓவியத்தை இயற்கை கூறுகளான தாவரங்களை விலங்கினங்களை சொல்லோவியமாக வர்ணிப்பதற்கு முன்னுரிமை கொடுத்தார். இருந்தாலும் அவுரங்கசீப்பின் காலத்தில் ஓவியத்திற்கு அரசின் ஆதரவு பின் வாங்கப்பட்டது. நாட்டின் பல்வேறு திசைகளில் வெவ்வேறு இடங்களுக்கு ஓவியர்கள் செல்லும் படியாக ஆனது. இது இராஜஸ்தானில் ஓவியக்கலை வளர்ச்சி அடைவதற்கு உதவியது. குறிப்பிடத்தக்க ஓவியப்பள்ளிகளான ராஜ்ஸ்தானி பஹாரி மரபுக்குழு பள்ளிகள், பஞ்சாப் குன்றுகளில் தோன்றுவதற்கு வழிவகுத்தது. இத்தகைய வேலைப்பாடுகள் ஒரு சிறிய இடத்தின் மேல் வரையப்பட்டது. இவற்றை மிகச் சிறிய ஓவியம் என அழைக்கப்பட்டது. பெருங்காப்பியங்கள், புராணங்கள், கட்டுக்கதைகளிலிருந்த மையக் கருத்துகள் வரையப்பட்டுள்ளன மற்ற மையக் கருத்துகள் பிரம்சா (காலங்கள்) ராகமாலா (காதிற்கினிய) ஆகியவற்றிலிருந்து வரையப்பட்டன. உள்ளூர் மையங்களான காவ்ரா, குலு, பகோலி, குலர், சம்பா கர்வால், பிலாஸ்பூர், ஜம்முவில் மிகச்சிறய ஓவியங்களும் வளர்ச்சியடைந்தன.

15ஆம் மற்றும் 16ஆம் நூற்றாண்டுகளில் தோன்றின பக்தி இயக்கங்களும், வைஷ்ணவ சமயத்தின் மையக்கருத்தைக் கொண்ட விளக்கப்பட்ட புத்தகங்களை ஈர்த்தது. முந்தைய மொகலாயர் காலத்தில் கோவில் சுவர்களில் வரையப்பட்ட முரல் ஓவியங்கள் இந்தியாவின் வடக்கு பகுதிகளில் முக்கியத்துவம் பெற்றது.

## 11.3 நவீன காலத்திய கலை

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் 19ஆம் நூற்றாண்டின் ஓவியங்களில் பாதி மேற்கத்திய உள்ளூர் பாணியைக் கொண்டிருந்தது. இவைகள் ஆங்கிலேயக் குடியிருப்புக்களாலும் பார்வையாளர்களாலும் ஆதரிக்கப்பட்டது. மெதுவாக உட்கருத்துகள் இந்திய சமூக வாழ்க்கை, புகழ் பெற்ற பண்டிகைகள், முகலாய நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றிலிருந்து எடுக்கப்பட்டது. இவை எவ்வித முன்னேற்பாடின்றி முகலாய பரம்பரை பழக்கங்களில் பிரதிபலித்தன. இக்காலத்தில் ஷேக் - ஜியா - டட் - டின்னின் பறவைகள் பற்றிய படங்கள், லேடி இம்ப் பேஷக் காகவும் குலாம் அலிகானின் சொல்லோவியம், வில்லியம் பிரேசர் கர்னல்ஸ்கின்னருக்காகவும் வரைந்த சில சிறப்பு மிக்க ஓவியங்கள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

19ஆம் நூற்றாண்டின் பிந்தைய காலத்தில் ஐரோப்பிய மாதிரியில் கலைப் பள்ளிகள் இந்தியாவின் முக்கிய நகரங்களான கல்கத்தா, முப்பை மற்றும் சென்னையில் தோற்றுவிக்கப்பட்டன. அந்நாளில் திருவாங்கூரின் இராஜா ரவிவர்மாவின் புராணம் மற்றும் சமூக மையக் கருத்துகளையும் சித்தரிக்கின்ற எண்ணெய் ஓவியங்கள் மிகவும் பிரபலமாயின.

ரவீந்திரநாத்தாகூர், அபிந்திரநாத்தாகூர், E.B. ஹேவல் ஆனந்த கேடிஷ் குமார சாமி ஆகியோர், வங்காள கலைப்பள்ளியின் தோற்றத்திற்கு முக்கிய பங்கு வகித்தனர். சாந்தி நிகேதனில், வங்காளப் பள்ளி பூரண வளர்ச்சி அடைந்ததால், அங்கு ரபிந்திரநாத்தாகூர் கலாபவனை ஏற்படுத்தினார். நந்தலால் போஸ், பினோத் பிஹாரி முகர்ஜி ராம்கின்கர் பாஜி போன்ற திறமையான ஓவியர்கள் மிகவும் விருப்பப்படுகின்ற ஓவியர்களுக்கு பயிற்சி அளித்தனர். நந்தலால் அடிக்கடி இந்திய கிராமிய கலை, ஜப்பானிய ஓவியங்களிலிருந்தும் ஊக்கம் பெற்றார். அதே சமயம் பினோத் பிஹாரி முகர்ஜி கீழை நாட்டுபாரம்பரியத்தில் ஆழ்ந்த ஆர்வம் உள்ளவராக இருந்தார். ஜமினிராய், இக்காலத்தில் மற்றுமொரு சிறந்த ஓவியர், ஓரிசாவின் பட்டா ஓவியத்திலிருந்தும், வங்காளத்தின் கலிகாட் ஓவியத்திலிருந்தும் ஊக்கத்தை பெற்றார். அமரிதா ஷெர்கில் என்ற ஒரு சிறந்த ஓவியர், பாரீஸிலும் புடாபெஸ்டிலும் கல்வி பெற்றார். சீக்கிய தந்தைக்கும் ஹங்கேரிய தாய்க்கும் பிறந்த இளமேதை என்று கருதப்படுகிற இவள், இந்திய மையக் கருத்துகளை, சிறப்பாக இந்திய பெண்களையும் உழவர்களையும் பகட்டான நிறங்களில் ஓவியமாக வரைந்தாள். இவள் மிக இளவயதிலேயே இறந்தாலும், வளமான இந்திய ஓவியங்களை கொடைகளாக விட்டுச் சென்றுள்ளார்.

படிப்படியாக, ஆங்கிலம் கற்ற நகரத்து நடுத்தர மக்களின் எண்ணங்களில் சில அழமான மாறுதல்கள் ஏற்பட்ட பொழுது இவைகள் ஓவியர்களின் உணர்ச்சி வெளிப்பாடாக பிரதி பலிக்கத் தொடங்கியது. ஆங்கிலேய ஆட்சியைப் பற்றின விழிப்புணர்வு அதிகமானது. தேசப்பற்றின் இலட்சியங்கள் தேச அடையாளத்திற்கான விருப்பம் ஆகியவை படைப்பிற்கு வழி காட்டியது. இவை முந்தைய கலை பாரம்பரியத்திலிருந்து மாறுபட்டது.

1943-இல், இரண்டாவது உலகப் போரின் பொழுது கல்கத்தா ஓவியர்கள், பரிடோஷ்சென், நிரோதா மஜீம்தா பிரதோஷ் தாஸ்குப்தா ஆகியோர் அடங்கிய குழுவால் வழிநடத்தப்பட்டு, இந்திய மக்களின் வாழ்க்கையை புதிய காட்சிபடமாகவும், புதுமையான உத்திகளை சித்தரித்துள்ளனர்.

மற்றுமொரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியானது, 1948-இல் மும்பையில் பிரான்சிஸ் நீயூட்டன் சௌசா தலைமையில் உருவாகப்பட்ட ஓவியர்களின் வளர்ச்சிக்குழுவாகும். அந்த குழுவில் S.H. ராசா, M.F. ஹிசைன், K.M. அரா, S.K. பக்ரே H.A. கோட் ஆகியவர்களும் அடங்குவர். இந்த குழு வங்காளப் பள்ளியிலிருந்து விடுபட்டு, சுதந்திர இந்தியாவில் ஆற்றல் மிக்க நவீன கலையை அடையாளமாகக் கொண்டனர்.

1970இல் ஓவியர்கள் தங்களுடைய சுற்றுப்புற சூழ்நிலையை சிரத்தையுடன் ஆராயத் தொடங்கினர். தினமும் ஆபத்தான, வறுமை ஊழலுடன் நாட்டின் அரசியல் சிக்கலுடன் ஆபத்தான பின் விளைவுகளைக் கொண்ட ஜாதி கல வரத்துடன் நகரப் பிரச்சனைகள் அல்லது அவர்களது வேலைகளின் மையக்கருத்தாக அமைந்தது.

தேபி பிரசாத் ராய் சௌத்ரி K.C.J. பணிக்கர் ஆகியோரின் தலைமையில் சுதந்திரத்திற்கு முன் தோற்றுவிக்கப்பட்ட மதராஸ் கலைப் பள்ளி, ஒரு முக்கியமான கலைமையமாகும் புதிய தலைமுறையினரான நவீன ஓவியர்களை செல்வாக்கு பெறச் செய்தது.

டைப் மேத்தா, சதிஷ்குஜ்ரால், கிரிஷன் கண்ணா மன்ஜிட் பாவா, மு.மு.சுப்பிரமணியன் ராம்குமாரி, அஞ்சொலி எலா மேனோன், அக்பர் படாம்சி, ஜட்டின்தாஸ், ஜகாங்கீர் சபவாலா A.ராமச்சந்திரன் போன்ற சில ஓவியர்கள் தங்களை நவீன இந்திய ஓவியர்கள் என முத்திரை பதித்துக் கொண்டனர்.

இந்தியாவில் கலை, இசை முதலியவற்றை மேம்படுத்த இரண்டு அரசு நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. தேசிய நவீனகலை கலைக்கூடம், மிகப் பெரிய அளவிலான நவீன கலையை, ஒரே கூரையின் கீழ் சேமித்துள்ளது. இரண்டாவது, லலித்கலா அகாடமி, இவை எல்லா துறைகளிலும் உள்ள ஓவியர்களை அங்கீகரித்து ஆதரவு அளிக்கிறது.

## இப்பகுதிக்கான கேள்விகள் 11.1

கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளி

1. மத்திய பிரதேசத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பிரபலமான இடம் எது?
2. பண்டைய இந்தியாவில் பிராமண இலக்கியங்களிலும் புத்த இலக்கியங்களிலும் காணப்பட்ட மூன்று ஓவியங்கள் எவை?
3. பொதுவாக ‘துளி சித்ரா’ ஓவியங்கள் எங்கு வரையப்பட்டது?
4. அஜந்தா குகை ஓவியத்தின் மையக் கருத்து என்ன?
5. 6-ஆம் மற்றும் 9-ஆம் நூற்றாண்டுகளில் புத்த ஓவியங்கள் கண்டு பிடிக்கப்பட்ட இரண்டு இடங்களின் பெயர்களைக் கூறுக?
6. மிக நுணுக்கமான ஓவியம் என்றால் என்ன?
7. மத்திய காலத்தில் ஓவியர்களுக்கு அரச ஆதரவை பின் வாங்கியவர் யார்?
8. ஆங்கிலம் கற்ற நகரத்து கலைஞர்களது ஓவியத்தின் மையக் கருத்துகள் என்ன?
9. இந்தியாவில் கலை, இசையை மேம்படுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்ட இரண்டு அரசு நிறுவனங்களின் பெயரைக் கூறு?
10. எந்த மாநிலம் பாட்டா ஓவியத்திற்கு புகழ் பெற்றது?
11. சாந்திநிகேதனில், ரவீந்திரநாத் தாகூரினால் ஏற்படுத்தப்பட்ட நிறுவனத்தின் பெயரைக் கூறுக?
12. திருவாங் கூரைச் சார்ந்த ராஜா ரவிவர்மா ஏன் பிரபலமானார்?

## 11.4 அலங்கரிப்பு கலை

இந்திய மக்களின் கலையுணர்வு வெளிப்பாடுகள், கடினமான துணிகள் அல்லது காகிதத்தில் வரைவதில் மட்டும் நின்று விடவில்லை. கிராமப்புறங்களில் கூட வீட்டுச் சுவர்களை அலங்கரிக்கும் ஓவியங்கள் சாதாரணமான காட்சியாகும். நற்குறி சந்தர்பங்கள், பூஜைகள் நடத்தும் பொழுது, தரையில் ரங்கோலி அல்லது அலங்கார வடிவமைப்பது போன்ற வடிவமைப்பு பாணிகள், ஒரு தலைமுறையினிடமிருந்தது மற்றொரு தலைமுறையினருக்கு கொடுக்கப்பட்டது. இந்த வடிவமைப்புகளை வடக்கில் ரங்கோலி, வங்காளத்தில் அல்பனா, உத்ராஞ்சலில் அய்ப்பன், கர்நாடகாவில் ரங்கவள்ளி, தமிழ்நாட்டில் கோலம் என்பது மத்திய பிரதேசத்தில் மண்டன என்றும் அழைக்கப்படுகிறது. இத்தகைய ஓவியங்களுக்காக வழக்கமாக அரிசி மாவைத்தான் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் நிறப்பொடிகள் அல்லது பூக்களின் இதழ்களும் இவற்றை மேலும் நிறமடையச் செய்ய பயன்படுத்தப்படுகிறது.

வீடுகளின் சுவர்களை குடிசைகளை அலங்கரிப்பதும் பழைய மரபாகும். கீழ்கண்ட சில கிராமியக்கலைகள் இந்த வகைக்கு எடுத்துகாட்டுகளாகும்.

## 11.5 மிதிலை ஓவியம்

மிதிலை ஓவியம், பீகாரிலுள்ள மிதிலை வட்டாரத்தைச் சார்ந்த மதுபானி எனப்பட்ட மரபுக்கலையாகும். இவை கிராமிய பெண்களால் காய்கறி நிறத்துடன் சுட்டகளிமண்ணை மாட்டு சாணத்துடன் சேர்த்து காகிதம் போன்று பயன்படுத்தி மூன்று பரிமாண உருவங்களை கருப்பு நிறக்கோடுகளை கொண்டு தயாரிக்கப்பட்டவையாகும். இத்தகைய படங்களும் கதைகளின் சிறப்பு அம்சமான சீதாவின் நாடு கடத்தல், ராம லக்ஷமணனின் வன வாழ்க்கை

அல்லது லக்ஷ்மி கணேசன் அனுமான், இந்து புராணங்களில் இருக்கும் உருவங்களையும் சித்தரிக்கின்றது. இவற்றைத் தவிர விண்ணுலகம் சார்ந்த சூரியன், சந்திரனை பெண்களும் வரைந்தனர். துளசி என்ற புனிதமான தாவரமும் இத்தகைய ஓவியங்களில் காணப்படுகிறது. அவை அரசவை காட்சிகள் திருமணத்தையும் சமூக நிகழ்வுகளையும் காட்டுகின்றன. மதுபானி வரைபடங்களில், படங்கள் மிகவும் கருத்தாக்கத்தை கொண்டுள்ளது. முதலாவதாக ஓவியர் முதலில் மனதில் நினைத்து அதன் பிறகு தன்னுடைய எண்ணங்களை வரைகிறார். உருவங்களைத் துல்லியமாக விவரிக்க அங்கு எவ்வித பாசங்கு இல்லை. அவைகள் கோடுகளிலும், நிறங்களிலும் உருவங்களாக காட்சி அளிக்கின்றன புனித சடங்குகள் அல்லது வீடுகளின் திருவிழாக்களுக்காகவும், காலம் சார்ந்த பண்டிகைகள் அல்லது வாழ்க்கைச் சக்கரத்தின் சிறப்பான நிகழ்வுகள் பற்றி வரையப்பட்டுள்ளன. தாவரம், விலங்கு, பறவைகளின் சிக்கலான கலைப்படைப்பின் முக்கிய கருத்துக்களும் ஜியோமதி வடிவமைப்புடன் இடைவெளியை முழுமையாக்கி காணப்படுகிறது. சில நிகழ்வுகளில் தாய்மார்கள் இந்த கலைப்பொருட்களை அவர்கள் மகள்களின் திருமணப் பரிசாக கொடுப்பதற்கு முன்னேற்றப்படாக செய்வது ஒரு சிறப்பான பயிற்சியாகும். இத்தகைய ஓவியங்களும் திருமண நல்வாழ்க்கையை வழி நடத்துதல் பற்றி அறிவுரையைக் கூறுகின்றன. அங்கும் பொருட்களின் மையக் கருத்துகள் உபயோகப்படுத்தும் நிறங்களிலும் பல்வேறு வேறுபாடுகள் இருந்தன. ஓவியத்தில் பயன்படுத்தியுள்ள நிறத்தைக் கொண்டு அந்த ஓவியம் எந்த சமூகத்தைச் சார்ந்தது என ஒருவர் அடையாளம் கண்டு கொள்ளலாம். மேல் வகுப்பைச் சார்ந்த பெரும் செல்வந்தர்களால் உருவாக்கப்பட்ட ஓவியங்கள் வண்ணங்களைக் கொண்டதாகவும். அதே சமயம் கீழ்வகுப்பைச் சார்ந்தவர்கள் சிவப்பு, கருப்பு நிறக்கோடுகளை பயன்படுத்தியதாக இருந்தது. ஆனால் ஓவியங்களின் உத்திகள், கிராமத்துப் பெண்களால் பத்திரமாக, சிரத்தையுடன் காப்பாற்றப்பட்டு, மகளுக்கு தாயினால் கொடுக்கப்படுகிறது.

இந்நாளில் மதுபானிகலை, அலங்கார பரிசுப் பொருட்களாகவும், வாழ்த்து அட்டைகளாகவும் மற்றும் உள்ளூர் பெண்களுக்கு வருமானம் தரக் கூடியதாகவும் ஆனது.

## 11.6 கலம்கரி ஓவியம்

கலம்கரி என்ற சொல்லுக்கு மெய்யானஅர்த்தம் கலத்தால் (பேனாவால்) வரையப்பட்ட ஓவியம் ஆகும். இந்தக்கலை ஒரு தலைமுறையினிடமிருந்து மற்ற தலைமுறையினருக்கு செல்லும் பொழுது மேம்படுத்தப்பட்டது. இத்தகைய ஓவியங்கள் ஆந்திரப்பிரதேசத்தில் உருவாக்கப்பட்டது. இது கையால் வரையப்பட்டு, காய்கறி சாயங்களை துணியில் பூசி மரக்கட்டையில் வைத்து அச்சிடப்பட்டது. காய்கறி சாயங்கள், கலம்கரி வேலையில் நிறத்திற்காக பயன்படுத்தப்பட்டது. சிறிய இடமான ஸ்ரீ காளஹஸ்தி கலம்கரி கலைக்கு ஒரு சிறந்த மையமாகத் திகழ்கிறது. இந்த வேலைப்பாடு ஆந்திராவிலுள்ள மசூலிப்பட்டினத்திலும் காணப்படுகிறது. இந்தக்கலை பெரும் பாலும் வர்ணம் பூசப்பட்ட துணிச்சுருள்கள், கோவிலின் உள்பகுதியை, அலங்கரிப்பது சம்பந்தமாக, 15ஆம் நூற்றாண்டில் விஜய நகர ஆட்சியாளர்களின் ஆதரவில் இவைகள் வளர்ந்தது. கருத்துகள், இராமாயணம், மகாபாரதம், இந்து சமய புராணங்களிலிருந்து தழுவப்பட்டன. தந்தையிடமிருந்து மகனுக்கு இந்தக் கலை ஒரு தொடர்ச்சியான கொடையாகும். ஓவியத்தின் மையக் கருத்தை முடிவு செய்த பின்பு, ஒவ்வொரு காட்சிகளாக வரையப்பட்டது. ஒவ்வொரு காட்சியும் மலர் அலங்கரிப்பு மாதிரியால் சூழப்பட்டு இருந்தன. இத்தகைய ஓவியங்கள் துணியின் மேல் வரையப்படுகிறது. அவை மிகவும் உறுதியான அளவில் நெகிழும் தன்மை மையக் கருத்துப்படி உருவாக்கப்பட்டது. கோவில்களுக்காக உருவாக்கப்பட்ட பெண் தெய்வங்களின் உருவங்கள் ஆடம்பரமாக அழகுபடுத்தப்பட்டன. கோல் கொண்டாவில் முஸ்லீம் ஆட்சியாளர்களை முன்னிட்டு மசூலிப்பட்டினம்





கலம்கரி பெருமளவில் பாரசீக கலைப்படைப்புகளாலும் மாதிரிகளாலும் வளமடையச் செய்தது. எல்லைக்கோடுகள், முதன்மையான அம்சங்கள், கைகளை உபயோகப்படுத்தி மரக்கட்டையில் செதுக்கப்பட்டன. பின்னர் இறுதி விளக்கங்கள் பேனாவை உபயோகப்படுத்தி செய்யப்பட்டன. இந்த ஓவியங்கள் துணி மணிகள் மெத்தை விரிப்புகளிலும் திரைச் சீலைகளிலும் ஆரம்பிக்கப்பட்டன. ஓவியர்கள் மூங்கில் அல்லது பனை ஓலை குச்சியின் முனையை ஒன்று சேர்த்து மற்ற முனையை தூரிகை அல்லது பேனாவாக பயன்படுத்தினர்.

கலம்கரி சாயங்கள், தாவரவேர்கள் இவைகளுடன் இரும்புத் தாதுக்கள், ஈயம், செம்பு, அலுமினியம் முதலியவற்றிலிருந்து சாயங்களை பிழிந்தெடுப்பதினால் கிடைக்க பெறுகின்றது.

## ஓரிசாவின் பட்டசித்ரா

காளிகத்து பேட்ஸ் போன்று மற்றுமொரு வகையான பேட்டுகள் ஒரிசா மாநிலத்தில் காணப்படுகிறது. ஓரிசா பட்ட சித்ராக்கள் பெரும்பாலும் துணிகளில் மிக விளக்கமாகவும் மற்றும் அதிக வண்ணங்களாகவும் மற்றும் பெரும்பாலானவை இந்து கடவுளர் மற்றும் கடவுளினிகளைப் பற்றிய கதைகளை சித்தரிப்பவைகளாக உள்ளது.

## ∴ பேட் ஓவியங்கள்

பேட் என்பது ஒரு வகையான சுழல் ஓவியம். இந்த ஓவியங்கள் உள்ளூர் பெண் தெய்வங்களை பாரம்பரிய பாடகர்களுடன், ஓரிடத்திலிருந்து மற்றுமொரு இடத்திற்கு எடுத்துச் செல்லும் பொழுது அவர்கள் சுருள் ஓவியத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள மையக் கருத்தை விவரித்தார்கள். பெரும்பாலும் பில்வாரா மாவட்டத்தில் காணப்படுகிற இந்தவகையான ஓவியர்கள் ராஜஸ்தானில் மிகவும் புகழ் பெற்றவையாகும். கதாநாயகர்களின் வீரதீரச் செயல்கள், உழவனின் அன்றாட வாழ்க்கை, கிராமத்து வாழ்க்கை விலங்குகள், பறவைகள், பூக்கள் ஓரிடத்தில் வாழும் அனைத்து விலங்கினங்கள் ஆகியவற்றை பேட் ஓவியங்கள் சித்தரிக்கின்றன. இத்தகைய ஓவியங்கள், பகட்டான வண்ணங்கள் நுண்ணிய வண்ணங்களை பயன்படுத்தி உருவாக்கப்பட்டன. ஓவியத்தின் எல்லைப்புறக் கோடுகள் முதலில் கருப்பு வண்ணத்தில் வரையப்பட்டு, பின்னர் வண்ணங்களால் நிரப்பப்பட்டது. பேட் ஓவியங்களின் முக்கியமான மைக்கருத்துகள் பெண் தெய்வங்கள் அவர்களைப் பற்றிய கட்டுக் கதைகள், முன்னாள் மகாராஜாக்களின் கதைகள் ஆகியவற்றை சித்தரிக்கின்றன. பேட் ஓவியங்களின் ஒப்பற்ற அம்சங்களாக அழுத்தமான கோடுகள் முழுத் தொகுதிகளையும் பகுதிகளில் அடக்கிய இருபரிமாண உருவங்களாகும்.

சுமாராக, பேட் ஓவியங்கள் 700 ஆண்டுகள் பழமையானது. இது ராஜஸ்தானிலிருந்தது 35 கி.மீ தொலைவிலுள்ள ஷாபூரா என்ற இடத்தில் தொடங்கியது என சொல்லப்படுகிறது. தொடர்ச்சியான அரசு ஆதரவு, இக்கலைக்கு ஆற்றல் மிக்க தூண்டுதலை கொடுத்து. இவைகள் தலைமுறைகளுக்கும் தொடர்ந்து வாழ்வதுடன் வளமடையவும் செய்தன.

## கோண்டு கலை

சிறந்த நடை பாணி எளிதில் புரிந்து கொள்ள முடியாத கலை வேலைப் பாடுகளையும், இந்தியாவில் சாந்தனர்களால் உருவாக்கப்பட்டது. கோதாவரி படுகையைச் சார்ந்த சாந்தனர்களைவிட மிகப் பழமையானவர்களான கோண்டு இனத்தைச் சார்ந்தவர்கள்,



கற்பனைச் செறி வாய்ந்தவைகளைப் படைத்தார்கள்.

**பட்டீக் அச்சு**

எல்லா நாட்டுப்புறக் கலைகள் கைவினைத் தொழில்கள் முழுவதும் இந்திய பிறப்பிடத்தை கொண்டவை அல்ல. சில கைவினைத் தொழில்கள் உத்திகள் பட்டீக் போன்ற கீழை நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. ஆனால் இவை இப்பொழுது இந்திய மயமாக்கப்பட்டு இந்திய பட்டீக் இப்பொழுது முழு வளர்ச்சியடைந்த, பெருமளவில் புகழ்பெற்ற விலையுயர்ந்த கலையாக உள்ளது.

### இப்பகுதிக்கான கேள்விகள் 11.2

கீழ்க்காணும் வினாக்களுக்கு பதில் தருக.

1. கீழ்க்காணும் அலங்கரிக்கப்பட்ட கலையுடன் அதன் தொடக்க மாநிலத்துடன் பொருத்துக.

| அ | ஆ |
|---|---|
| ரங்கோலி | தமிழ்நாடு |
| அல்பனா | மத்திய பிரதேசம் |
| அய்பன் | வட இந்தியா |
| ரங்கா வள்ளி | வங்காளம் |
| கொல்லம் | உத்ரரீசல் |
| மன்தனா | கர்நாடகம் |

2. இளம் பெண்களுக்கு எந்த ஓவியங்களின் மூலம் அறிவுரை வழங்கப்பட்டது?
3. எவ்வாறு கலம்கரி ஓவியங்களின் வேலை முடிந்தது?
4. கலம்கரி ஓவியத்தின் சிறப்பு என்ன?
5. கலம்கரி கலைக்கு மிகவும் புகழ் பெற்ற இடம் எது?

## 11.7 வார்லி ஓவியம்

மகாராஷ்டிராவின் தூரமான பழங்குடி வட்டாரத்தில் ஒரு சிறிய இனம் தங்கியிருந்த பகுதியிலிருந்து வார்லி ஓவியம் தனது பெயரைப் பெறுகிறது. இவை 'கோண்டு' 'கேர்ல்' இனத்தவர்களின், வீடுகள்' கடவுளை வணங்கும் இடங்களின் தரைகள், சுவர்களை அலங்கரிக்கும் ஓவியங்களாகும். மரங்கள், பறவைகள், ஆண்கள், பெண்களின் உதவி ஒரு கூட்டிணைவின் மொத்த படைப்பு இந்த வார்லி ஓவியத்தில் உள்ளது. மங்களகரமான கொண்டாடத்தின் பொழுது இத்தகைய ஓவியங்கள் பெண்களால் தங்களது வழக்கமான வேலையாக செய்யப்பட்டது. சமய தகவல் கூறுகள் எளிதான உள்ளூர் பொருட்களான வெள்ளை நிறமுடைய அரிசிப்பசை உள்ளூர் காய்கறிப் பசையை, முரணான வேறுபாடு கொண்ட பின் பகுதியில், ஜியோமிதி மாதிரிகளான சதுரங்கள், முக்கோணங்கள் வட்டங்களுடன் பெருவரியாக செய்யப்பட்டது. புள்ளிகள், வளைந்த கோடுகள் இத்தகைய தொகுதிகளின் அலகுகளாகும். தாவரங்கள், விலங்குகள், மக்களின் அன்றாட வாழ்க்கையும் ஓவியத்தின் ஒரு பகுதியாகும். ஓவியங்களை தகவல் கூறுகளை ஒன்றன்பின் ஒன்றாக சுழற்சி முறையில் சேர்த்து விரிவாக்கப்பட்டன. நயத்துடன் கூடிய வார்லி வகையின் வாழ்க்கையை அழகாக சாதாரண உருவங்களில் கைப்பற்றப் பட்டுள்ளது. வார்லி ஓவியங்கள் சமய

அடையாளங்களை பயன்படுத்தாது இது ஒரு மிகுந்த சமய சார்பற்ற கலைப்படிவமாக, மற்ற பழங்குடி இனத்தவரின் கலைப்படிவமாக இல்லாமல் இருந்தது.

## 11.8 கலிகட் ஓவியம்

கலிகட் ஓவியம் தனது பெயரை கொல்கத்தாவிலுள்ள கலிகட் என்ற இடத்தின் பிறப்பிடத்திலிருந்து துவங்கியது. கொல்கத்தாவில் காளி கோவிலுக்கு அருகில் கலிகட் என்ற கடைத்தெரு உள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முந்தைய காலத்தில் பட்டுவா ஓவியர்கள் வங்காளத்திலிருந்து வந்து கலிகட் என்னுமிடத்தில் கடவுளர் கடவுளினிகளை உருவங்களைச் செய்வதற்காக குடியேறினார்கள். இத்தகைய ஓவியங்கள் தெளிவான பின்னனியில் பகட்டான தண்ணீர் வண்ணங்களைப் பயன்படுத்தின காகிதம் கோடு வரைபடங்களைக் கொண்டிருந்தது. காளி, லக்ஷ்மி, கிருஷ்ணா, கணேசா, சிவா, பிற கடவுளர்கள் கடவுளினிகள் ஆகியோரின் உருவங்கள் படத்தின் மையக் கூறுகளாகும். இந்த செயல் முறையில், ஓவியர்கள், நிகரற்ற புதிய வடிவ வெளிப்பாடுகள், விளக்கமான வர்ணனை பெரிய அளவில், வங்காள மக்களின் சமூக வாழ்க்கையை தகவல் கூறுகளாக கொடுத்தார்கள். இதே வகையைப் போல ஓரிசாவிலும் பட்டா ஓவியங்களைக் காணலாம். இந்த ஓவியங்களின் அடிப்படை படிவங்கள் 19ஆம் நூற்றாண்டில் காலனியாக இருந்த வங்காள பண்பாட்டிலிருந்து தோன்றியன.

இதனுடைய அங்காடி வளர்ச்சியடைந்ததால் ஓவியர்கள் இந்து தெய்வங்களை வழக்கமாக சித்தரிக்கக்கூடிய வேலையிலிருந்து தங்களை விடுவித்து உலகெங்கிலும் ஒரே சமயத்தில் நடக்கக்கூடிய சமூக நிகழ்வுகளை தங்களுடைய ஓவியங்களில் ஆய்வு செய்யத் தொடங்கினர். புகைப்பட அறிமுகம் மேற்கத்திய பாணியில் நடிப்பியல்பான செயல்பாடுகள், வங்காளத்தில் ஆங்கிலேயே காலனி ஆதிக்கம், நிர்வாக முறை ஆகியவற்றின் விளைவால் பாபு பண்பாட்டின் எழுச்சி ஆகியவற்றிலிருந்து குறிப்பிடத்தக்க பாணிகள் தூண்டுதலைப் பெற்றன. கல்கத்தாவின் ஒப்பற்ற வாழ்க்கைப் பாணியான 'நவிமயா ரிச்சோ' ஒன்றுக்கொன்று வேறுபட்ட தாக்கத்திற்கு உட்பட்டதும், இந்த ஓவியங்களை செல்வாக்கு அடைய செய்தன. இத்தகைய எல்லா ஊக்கங்கள், புதிய கற்பனையை வங்காள இலக்கியத்தின் மையநிலை, அரங்கம் மற்றும் காட்சிக் கலைகள் ஆகியவற்றை இந்த காலத்தில் ஈடுபடுத்திக் கொண்டன. கலிகட் ஓவியங்கள் பண்பாடு, அழகியல் சார்ந்த மனப்போக்கை தெள்ளத் தெளிய எடுத்துக்காட்டும் சிறந்த கண்ணாடியாக ஆயின. முன்பு இருந்த இந்து தெய்வங்கள் மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு, ஓவியர்கள் செயல்திறனுக்கு உட்பபட்டவரின் உருவங்கள் அவையோர்கள், நடிகைகள், கதாநாயகிகள் பகட்டான போக்குடையவர்கள், இறுமாப்பு கொண்ட தந்திஸ்கள் பிரகாசிக்கின்ற ஆடைகள், சிகை அலங்காரங்கள், புகை பிடிக்கும் குழல்கள், சிதார் வாசிப்பது போன்றவைகளை படைத்தார்கள். வங்காளத்திலிருந்து வந்த கலிகட் ஓவியங்கள் முதல் கலை வேலைப்பாடு என அடிக்கடி அணுகப்பட்டது.

## 11.9 இந்திய கைவினைப் பொருட்களின் ஓவியங்கள்

இந்தியா அழகிய கைவினைப் பொருட்களின் அறிவுப் பூர்வமான ஒரு கருவூலமாகும். தினசரி வாழ்க்கையில் சாதாரண பொருட்கள் மென்மையான மாதிரியில் கைத்திறனால் செய்யப்பட்டு இந்திய கைவினை கலைஞர்களின் வெளிப்பாடுகளை உருவாக்கின. இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாநிலமும், பெருமையான சில ஒப்பற்ற படைப்புகள் அந்த வட்டாரங்களுக்கு தனிச் சிறப்பை கொடுக்கின்றன. ஏம்பிராய்டரி சால்வைகள், கம்பளங்கள் நம்தார் பட்டுகள்' வாதுமைமர மரச் சாமான்கள் ஆகியவை உதாரணங்களாகும். ராஜஸ்தான் வண்ணங்களைக்

கொண்ட மென்துகில்கள், விலையுயர்ந்த கற்கள் மாணிக்கங்களில் செய்த ஆபரணங்கள், நீல நிற ஒளி மிக்க மட்பாண்டங்கள் மினாக்கரி வேலைப்பாடுகளுக்கு புகழ்பெற்றவை. ஆந்திரப்பிரதேசம், பித்ரி வேலைப்பாடு, போச்சப்பள்ளி புடவைகளுக்கும் புகழ் பெற்றவை. அதே சமயம் தமிழ்நாடு வெண்கல சிற்பக்கலைக்கும் காஞ்சிபுரம் பட்டுபுடவைகளுக்கும் பெயர் பெற்றது. மைசூர் பட்டு, சந்தனமரம் ஆகிய பொருட்களுக்கும் கேரளா, தந்தம் செதுக்கும் வேலை நூக்கமர மரச் சாமான்களுக்கும் பெயர் பெற்றது. மத்திய பிரதேசத்தின் சன்டேரி, கோசா பட்டு, லக்னோவின் சிக்கன வேலைப்பாடு, பனாரசின் சித்திரப்பூ வேலை செய்யப்பட்ட துணிகள், பட்டுப்புடவைகள், அஸ்ஸாமின் பிரம்பிலான மரச் சாமான்கள் பொருட்கள், வங்காளத்தின் பங்க்கூரா கடின மட்பாண்டங்களின் மாதிரிகள் கைத்தறி வகைகள் ஆகியவை ஒப்பற்ற பாரம்பரிய அலங்கரிப்பு கலைகளும் கைத்திறன்களும் ஆகும். இவை உண்மையிலேயே நவீன இந்தியாவின் மரபுகளைக் கொண்டுள்ளது. இத்தகைய கலைகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்து ஏராளமான கைவினைகலைஞர்களுக்கு வேலையை கொடுத்து, அவர்கள் அதை அடுத்த தலைமுறையினருக்கும் கொண்டு சென்றார்கள். இவ்வாறாக இந்திய கைவினை கலைஞர்கள் தங்களுடைய மந்திர தொடுதலினால் உலோகத் துண்டு மரம் அல்லது தந்தம் இவற்றை எவ்வாறு கலைப் பொருட்களாக மாற்ற முடியும் என்பதை நீங்கள் காணலாம்.

## இப்பகுதிக்கான கேள்விகள் 11.3

1. வார்லி ஓவியத்தை நீ எங்கு காண்கிறாய்?
2. எந்தப் பழங்குடியினர் வாரி ஓவியத்தில் புகழ் பெற்றவர்கள்?
3. வாரி ஓவியத்தின் சிறப்பு என்ன?
4. காஷ்மீர் மாநிலத்தின் கலை, கைத்திறன்களின் சில நிகரற்ற படைப்புகள் யாவை?

## நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- முந்தைய வரலாற்றுக் காலத்தை இந்தியாவின் முற்பட்ட கால, ஓவிய படைப்பின் மாதிரியிலிருந்து கண்டறியலாம்.
- பல்வேறு வகைகளான ஓவியங்கள், அவர்களின் உத்திகள், பிராமண, மத புத்தமத இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன.
- மேற்கு தக்காணத்திலுள்ள புத்த கல்வெட்டு குகைகளான அஜந்தா, சுவர் ஓவியங்களுக்கு மிகவும் புகழ் பெற்றது.
- மொகலாயர்கள் இந்திய ஓவியங்களுடன் பாரசீக மரபையும் இணைத்து ஓவியத்தில் ஒரு புதிய சகாப்தத்தை தொடங்கினார்கள்.
- இராஜஸ்தானி ஓவியங்களும் பஹாரி மரபு ஓவியங்கள், இந்திய ஓவியங்களின் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை கொடுத்தன.
- 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்திய மையக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு பாதி மேற்கத்திய பாணியில் ஓவியம் உள்ளடக்கப்பட்டது.
- இந்திய பெரும்பான்மை நகரங்களான கல்கத்தா, மும்பை, சென்னை ஆகிய

இடங்களில் ஐரோப்பிய மாதிரியில் கலைப்பள்ளியை தோற்றுவித்தது குறிப்பாக வங்காளப் பள்ளியின் தோற்றம் ஆகியவை, நவீன காலத்தில் இந்திய ஓவியத்தின் மற்றுமொரு மைல் கல்லாகும்.

- வளர்ந்த ஓவியர்களான பிரான்சிஸ் நீயூட்டன் சௌசா, எஸ்.ஹச்.ராசா, எம்.எப். ஹீசைன் ஆகியோர் வங்காள கலைப் பள்ளியிலிருந்து விடுபட்டு சுதந்திர இந்தியாவின் நவீன தன் வயப்படுத்துகிற கலைக்கு பிரதி நிதிகளாயினர்.
- பல்வேறு கிராமியக் கலைகளான மிதிலா ஓவியங்கள் (மதுபாணி) கலம்கரி ஓவியம், வார்லி ஓவியம், கலிகாட் ஓவியம், இந்திய ஒவியத்திற்கு புதிய பரிமாணங்களை சேர்த்து ஒரு புதிய உச்ச நிலையைக் கொடுத்தது.

## பயிற்சிக்கான கேள்விகள்

1. மத்திய காலத்தில் ஓவியக்கலையின் வளர்ச்சி பற்றி எவ்வாறு விவரிப்பாய்?
2. மதுபாணி கலைப்படிவத்தை பற்றி வரையறு? மதுபாணி ஓவியத்தில் எவ்வாறு வரைபடங்கள் மிக மையக் கருத்தாக உள்ளது?
3. கலம் கரி ஓவியங்களை மிதிலா, ஓவியத்துடன் வேற்றுமை படுத்துக?
4. வங்காள பண்பாட்டின் பல்வேறு படிவங்கள் கலிகட் ஓவியத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன. விவரி?
5. இந்திய ஓவியர்கள் தங்களுடைய மந்திரதொடுதலினால் மிகச்சிறிய உலோகம் மரத்துண்டு அல்லது தந்தம் இவற்றை கலைப் பொருட்களாக மாற்றுகின்றனர் விவரி?
5. ஓவியக்கலைக்கு முகலாயர்களின் பங்களிப்பு என்ன?
6. சிறு குறிப்பு வரைக: (i) கலம்கரி கலை, (ii) பஹாரி கலை, (iii) கலிகட் கலை

## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 11.1

1. பிம் பெக்டா
2. லெப்யா சிட்ராஸ், லேகா சிட்ராஸ், துளி சிட்ராஸ்
3. இது தரையின் மீது செய்யப்பட்டது.
4. அவைகள், ஜடகா கதைகள், புத்த மத மையக் கருத்திலிருந்தும் காட்சிகள் சித்தரிக்கின்றன.
5. வடக்கே பாக், படாமி (கர்நாடகம்) தெற்கு
6. பெருங்காப்பியங்கள், புராணங்கள், கட்டுக்கதைகள் காலங்கள், ரோகமாலா (இன்னிசை பாடல்கள்) ஆகியவற்றின் மையக் கருத்துகள் சிறிய பகுதியின் மேல் வரையப்பட்டன.
7. ஔரங்கசீப்
8. (அ) ஆங்கிலேய ஆட்சியின் தீய வழிகள்
   (ஆ) நேலியனிலிசத்தின் கருத்துகள்
   (இ) தேசிய அடையாளத்திற்கான விருப்பம்.

9. (அ) நவீன தேசிய கலைக் காட்சிக்கூடம்

   (ஆ) லலித கலா அகாடமி

10. ஒரிசா மாநிலம்

11. கலா பவன்

12. நவீன இந்தியாவில் புராணங்கள், சமூக மையக் கருத்துகளை எண்ணெய் ஓவியங்கள் சித்தரிப்பது மிகவும் பிரபலமடைந்தது.

## கேள்விகளுக்கான பதில்கள் 11.2

1.

| | |
|---|---|
| ரங்கோலி | வட இந்தியா |
| அல்பனா | வங்காளம் |
| அய்ப்பன் | உத்ராஞ்சல் |
| ரங்க வள்ளி | கர்நாடகம் |
| கொல்லம் | தமிழ்நாடு |
| மென்டனா | மத்திய பிரதேசம் |

2. மிதிலா ஓவியங்கள்

3. இது காய்கறிகளுக்கு நிறம் கொடுக்க உதவுகிறது.

4. இவைகள் இந்து சமய புராணங்களின் ஒவ்வொரு காட்சிகளும் வரையப்பட்டுள்ளன. இது முழுவதும் மேலிருந்து கீழ் வரையிலும் மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

5. ஸ்ரீகாளஹஸ்தி

## கேள்விகளுக்கான பதில்கள் 11.3

1. இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலம்

2. கோண்ட் கோல் இனத்தவர்கள்

3. இது ஜியோ மெட்ரிக் மாதிரிக்கு உதவுகிறது ஒவ்வொரு பாடங்களாக சுருள்முறையில் சேர்க்கப்பட்டன.

4. எம்பிராயிடரி சால்வைகள், கம்பளங்கள், நம் தார்பட்டுக்கள் வாதுமை மர, மரச் சாமான்கள்.

# 12

# செயல்பாட்டுக்கலைகள் : இசை, நடனம், நாடகம்

நம் இந்திய நாட்டில், இசை, நடனம், நாடகம் கிராமிய அல்லது பொம்மலாட்டம் போன்ற ஏராளமான கலைகள் இருந்தன. யாரேனும் ‘தோல்’ இசைக் கருவியை இசைக்கும் பொழுது, அங்கு இசையின் ஒலி, நாம் உடனே அது என்னவென்று காண ஓடுகிறோம். நல்லது நமது நாட்டின் வட பகுதியில் ஒவ்வொரு ஆண்டும், ஜனவரி 13ஆம் தேதியன்று நடக்கக் கூடிய “லோரி” பண்டிகை மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் பாடி ஆடிக் கொண்டிருப்பர். இத்தகைய நடனங்கள் ‘பாங்க்கரா’ கிதா என்றும் பஞ்சாபில் அழைக்கப்பட்டது. இத்தகைய பாடல்கள் நமது வாழ்க்கையின் வெவ்வேறு நிலைகளை சித்தரிக்கின்றன. அவை, முந்தைய கிராமிய மக்களின் சமூக, சமய வழக்கங்களையும் பழக்கங்களையும் பிரதிபலித்தன. ஆனால் அவை நவீன பண்பாட்டின் ஒரு பகுதியாகவும் உள்ளன. எந்த ஒரு பள்ளி விழாவும், இவைகள் இல்லாமல் முழுமையடைவதில்லை. அவைகள் நூற்றாண்டு காலமாக, விவசாய இனத்திற்கு செழிப்பு அதாவது வளம் சார்ந்த நிலம், கால் நடைகள், குழந்தை பிறப்பு மற்றும் குழந்தைகளின் வாழ்வு ஆகிய எல்லா வளங்களையும் பெறுவதற்காக வளமான சடங்குகளுடன் கொண்டாடியிருக்கலாம். அங்கு கொண்டாட்டங்களுக்கான, பல காரணங்கள் இருந்தன, ஆனால் அவைகளை பட்டியலிடுவது கடினம். நீங்கள் ஏன், இத்தகைய செயல்பாடு களை பட்டியலிடக் கூடாது? மற்றும் இந்த செயல்பாடுகளை மக்கள், எவ்வாறு, ஏன் கொண்டாடினார்கள் என்பதை கண்டுபிடிக்கவும், நீங்கள் இந்தச் செயல்பாடுகளை ஆர்வமாக காணமுடியும். ஆனால் உங்களால் இதற்கு ஒரு முடிவு வைக்க இயலாது. ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா? ஏனென்றால் நமது நாட்டில், இசை, நடனம், நாடகத்தின் எண்ணிக்கையின் அளவு மிகப் பெரியதாக உள்ளதால் உங்களால் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள இயலாது.

இந்தியா, வளமான பண்பாடு, பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு நாடு. நமது நாகரிகம் தொடங்கினதிலிருந்து இசை, நடனம், நாடகம் ஆகியவை நமது பண்பாட்டின் முழுமையான அம்சமாக இருந்தன. தொடக்கத்தில், இத்தகைய கலைப்படிவங்கள் சமய மற்றும் சமூக சீர்திருத்தங்களை பிரச்சாரம் செய்யும் ஊடகமாக பயன்பட்டது. இசையும் நடனமும் புகழைப் பெறுவதற்காக இதனுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டன. வேத காலத்திலிருந்து மத்திய காலம் வரைக்கும், மக்களுக்கு கல்வியறிவை ஊட்ட, செயல்பாட்டுக்கலைகள் முக்கிய மூலமாக இருந்தன. வேதங்கள், வேத மந்திரங்களை உச்சரிப்பதற்கு, சுருக்கமான ஒழுங்குமுறைகளை விதிந்திருக்கின்றன பல்வேறு சமயப் பாடல்கள் பாடக்கூடிய தொனியும் ‘உச்சரிப்பின்

அழுத்தமும்' கூட நிர்ணயிருக்கப்பட்டுள்ளன. கல்வி, சமூக சீர்திருத்தங்களை விட சிறப்பான செயல்பாட்டுக் கலைகள் மூலமாக அளிக்கப்படுகிறது. விரைவில் இத்தகைய செயல்பாட்டுக் கலைகள், உலகெங்கிலும் மக்களின் பொழுது போக்கு ஊடகமாக மாறின.

## நோக்கங்கள்

நீங்கள் இப்பாடத்தை படித்த பிறகு, உங்களால்

- செயல்பாட்டுக் கலைகளின் குறிக்கோள்கள் நோக்கங்கள், அதனுடைய பல்வேறு நிலைகளின் வளர்ச்சியை விளக்க
- பண்டைய காலத்திலும், மத்திய காலத்திலும், செயல்பாட்டுக்கலைகளின் பயன்பாடு பற்றி விவரிக்க
- இசைக்கு சூபிகளின் பக்தி புனிதர்களின் பங்களிப்பை அங்கீகரிக்க
- இந்துஸ்தானி பாரம்பரிய இசையையும், கர்நாடக இசையையும் வேறுபடுத்திக் காட்ட
- இந்திய பண்பாட்டில் முதல்தரமான நடனங்கள், நாட்டுபுற பாடல்கள், நாட்டுப்புற நடனங்களின் பங்களிப்பை பாராட்ட
- இந்தியாவில், பல்வேறு கட்டங்களின் மூலம் நாடகத்தின் வளர்ச்சியை விவரிக்க, நாட்டுப்புற அரங்கத்தின் பங்களிப்பை அங்கீகரிக்க
- மனிதனின் ஆளுமைப் பண்பில் 3 கலைப்படிவங்களின் முக்கியத்துவத்தை ஆராய் மற்றும்
- இசை, நடனம், நாடகத்தின் காட்சி தொகுப்புகளை கூறுபடுத்தி ஆராய முடியும்.

## 12.1 செயல்பாட்டுக் கலைகளின் கோட்பாடு

கலை என்பது என்ன? "கலை என்பது மனித மனதின் எல்லாவிதமான சிறப்பியல்புகளையும் அழகுற வெளிப்படுத்துவதாகும்". இத்தகைய சிறப்பியல்புகள், அதாவது, மனிதனின் வேறுபட்ட உணர்ச்சிகள் 'ராஸ்' என அழைக்கிறோம். ஹந்தியில் 'ரஸ்' என்பது உண்மையாகவே 'சர்க்கரை பழச்சாறு' என பொருள்படும். இது ஆனந்தத்தின் உச்சகட்ட திருப்தியைக் குறிக்கின்றது. மனிதனின் உணர்ச்சிகளை 9 வகையாக துணை தலைப்புகள் அல்லது 'நவரசங்களாக' வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவைகளாவன:

| | | |
|---|---|---|
| 1. | ஹாஸ்யம் | நகைத்தல் |
| 2. | பயணக் | தீய சிருங்காரம் - அழகு |
| 3. | ருத்ரா | வீரம் |
| 4. | கருண் | கருணாரசம் (அ) சோகரசம் |
| 5. | விர் | துணிவு |
| 6. | அப்ஹம் | ஆச்சரியப்படுதல் |
| 7. | விபட்சா | உன்னதமான பெருமிதம் |
| 8. | ஷர்ந்தி | அமைதி |
| 9. | ஸ்ரீங்கார் | தனக்குத்தானே அலங்கரித்துக் கொள்வது. |





கலை, மனிதனின் உணர்ச்சிகள், மனிதர்களின் மனச் சங்கடத்தை பல்வேறு கலைப்படிவங்களின் மூலம் தன்னிச்சையாக வெளிப்படுவதை பிரதிபலிக்கிறது. இவ்வாறாக அறிவார்ந்த மனது, கலைத்திறனுடைய வரிகளுடன் இணைந்து, கலைக்கு பிறப்பைக் கொடுக்கிறது. உணர்ச்சிவெளிப்பாடுகள், பாடுதல், நடன மாடுதல், படம் வரைதல், வர்ணம் பூசுதல், நடித்தல், சிற்பம் செதுக்குதல் போன்ற உணர்ச்சி வெளிப்பாடுகள் பல்வேறு பாணிகளில் பிரதிபலித்தன. இவற்றில் சில நேரடி செயல்பாடுகளின் மூலமும் சில பார்வை கலைகள் மூலமும் வெளிப்படுத்தப்பட்டன. மேலோட்டமான மாதிரிப்படம் வரைதல், வர்ணம் பூசுதல், சிற்பம் செதுக்குதல் போன்றவைகள் காணக்கூடிய கலைகளாகும். பாடுதல், நடனமாடுதல், நடித்தல், செயல்பாட்டுக்கலையின் பண்புகளாகும். ஆண்டாண்டு காலமாக, இசை இந்தியாவின் மிகவும் புகழ்பெற்ற கலை படிவமாகும். அவைகளாவன, ச,ரி,க,ம,ப,த,நி ஆகிய ஏழு ஸ்வங்களாகும்.

இந்திய இசையின், பண்டைய மரபினை சாமவேதத்தில் ஸ்லோகங்களை பாடல்களாக கொண்டுள்ளதை அடையாளம் காட்டுகிறது. வேத சமய பாடல்களை வரையறுக்கப்பட்ட ‘தொனி’ மற்றும் சொல் அழித்தத்துடன் பாடுவது இன்றும் சமய சடங்குகளில் ஒரு பகுதியாக உள்ளது. முந்தைய செயல்பாட்டுக்கலையுடன் பிரத்தியேகமாக கையாளப்பட்டிருப்பது, கி,மு இரண்டாம் நூற்றாண்டுக்கும் கி.பி 2ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தொகுக்கப்பட்ட இசையில் 6 அத்தியாயங்களைக் கொண்ட பரதாவின் நாட்டிய சாஸ்த்தாவாகும். கி.பி 8ஆம் 9ஆம் நூற்றாண்டின் மத்தியில் தொகுக்கப்பட்ட மற்றுமொரு முதன்மையான நூல் மடங்காவின் ‘பிரிஹதேசி’ யாகும். இந்நூலில், ராகங்கள் முதலில் பெயரிடப்பட்டு, பெரிய அளவில் விவாதிக்கப்பட்டன. 13ஆம் நூற்றாண்டில், சரங்கதேவாவினால் எழுதப்பட்ட ‘ சங்கீத்ரத்னாகரா’ 264 ராகங்களை குறிப்பிடப்பட்டுள்ளது. வெகு காலத்திற்கு முன்பே, வேறு வேறு வகையான நரம்பிசைக் கருவிகள் துணை இசைக்கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டன. பண்டைய நூல்களில் புல்லாங்குழல்கள், முரசுகள், வீணை ஜாலரா போன்றவற்றின் குறிப்புரைகள் உருவாக்கப்பட்டிருந்தது. சமுத்திரகுப்தா, தாராவின் ‘போரா’ அரசன், கல்யாணாவின் ‘சோமேஸ்வரா’ அரசன் போன்றவர்கள் இசையை ஆதரித்தனர். குப்த மன்னரான சமுத்திர குப்தாவும் திறமைமிக்க பாடகராவார். இவருடைய சில நாணயங்களில் இவர் வீணை வாசிப்பது போன்று காட்டுகின்றது. இசையும், கோவில்களில் கடவுளர் கடவுளிளிகளை வழிபடுதலுடன் தொடர்பு கொண்டுள்ளது. 12ஆம் நூற்றாண்டில், ஓரிசாவைச் சார்ந்த ஜெயதேவா, மிகச் சிறந்த ராககாவ்யா, கீதா கோவிந்தாவை உருவாக்கினார். ஓவ்வொரு பாடலும் ஒரே ராகத்தில் அமைக்கப்பட்டது. ராதா மற்றும் கிருஷ்ணாவின் காதலின் ஆய்வுப் பொருள் மீது தொகுக்கப்பட்டது. அபிநாவா குப்தாவின் அபிநவா பராதி இசையைப் பற்றின பயனள்ள தகவலை வழங்குகிறது. சுமஸ்கிருத நூல்களில் காணப்படுவதற்கு இணையாக தமிழ் இசையில் ஏராளமான கருத்துகளும் கோட்பாடுகளும் உள்ளன. சைவ நாயன்மார்கள் வைணவ ஆழ்வார்களும் திருப்பாடல்களை இன்னிசையாக அமைத்தனர்.

இதே போன்று, இடைக்காலத்தில் சூபியும் பக்தி புனிதர்களும் இசையை ஊக்குவித்தார்கள். சூபி கான்காக்களில், கவாலிகள் பாடப்பட்டன கீர்த்தனை பஜனைகள், பக்தி புனிதர்களுடன் பிரபலமாயின. கபீர், மீராபாய், சூர்தாசா, சந்திதாசா, துளசி தாசா, வித்யா பதி ஆகிய பெயர்கள் சமய இசைகளுடன் நெருக்கமான தொடர்பு கொண்டவைகளாகும். அமிர் குஸ்ருவைப் போன்ற சிறந்த அறிஞர்கள் இசையின் வளர்ச்சிக்கு சமமான பங்களிப்பை கொடுத்தார்கள். மாள்வாவின் புகழ் பெற்ற ஆட்சியாளர் பஸ்பஹதூர் அவருடைய மனைவி ரூப்மதி, புதிய ராகங்களை அறிமுகப்படுத்தினார்கள். 17ஆம் நூற்றாண்டில், இப்ராஹிம் அடில்ஷாவினால் எழுதப்பட்ட ‘கிதாபே நவரஸ்’ இன்று கடவுள்கள் முஸ்லீம் புனிதர்களைப் பற்றி புகழ்ந்து பாடிய தொகுப்பாகும். அக்பரின் மிகப் புகழ்பெற்ற பாடகர் ‘தான்சேன்’ அங்கு எல்லா வகையான

பாடகர்கள் இருந்தாலும் கூட, அங்கு ஒருவரும் இவருக்கு ஈடாக இல்லை. அக்பருடைய காலத்தில், பைஜீ பாவ்ராவும் பிரபலமான ஒரு பாடகர் ஆவார். பண்டைய இடைக்காலத்திய ஆட்சியாளர்களால் இத்தகைய கலைஞர்களுக்கு கொடுக்கபட்ட ஆதரவு மரபுகள் அழியாமல் இருக்க துணை புரிந்தது. சொல்லப்போனால், முகலாய ஆட்சியாளர்கள் இசையின் சிறந்த ஆதரவாளர்கள் லேன்பூலின் கூற்றுப்படி, "பாபரே இசை" ஆர்வம் கொண்டவர். இவர் கவாலிஸ், காயல் முதலிய சில பிரபலமான இசை பாணிகளை முன்னேற்றியிருக்கக் கூடும். ஹீமாயுன் இந்திய நூல்களில் இசையின் மீது விளக்கங்களை சொல்லியிருக்க கூடும். அக்பர் பாடல்களை தொகுத்து பாடகர்களை உற்சாகப்படுத்தினார். சுவாமி ஹரிதாஸ் அவரது சீடர்கள், பல்வேறு ராகங்களில் பலபாட்டுகளை தொகுத்தார்கள். புகழ் பெற்ற 'ராகமாலா'வை எழுதின புந்தாரிகாவிட்டல்' ஒரு சிறந்த இசை ஞானியாவார். இந்துஸ்தானி இசையும், மீராபாய், துளசிதாஸ், சூர்தாசால் பாடப்பட்ட பகுதி பாடல்களால் வளமானது.

## இப்பகுதிக்கான கேள்விகள் 12.1

கீழ்கண்ட வினாக்களுக்கு விடை தருக

1. செயல் பாட்டுக்கலைகளின் பல்வேறு படிவங்கள் யாவை?
2. பொழுது போக்கு ஓய்வு நேரத்தை இன்பமாக போக்குவது தவிர, செயல்பாட்டுக் கலை மற்ற எந்த தாக்கத்தை ஏற்படுத்துகிறது?
3. செயல்பாட்டுக் கலையுடன் பிரத்தியேகமாக கையாளுகின்ற முந்தைய நூல் எது?
4. கி.பி 8ஆம் மற்றும் 9ஆம் நூற்றாண்டின் மத்தியில் தொகுக்கப்பட்ட செயல்பாட்டுக்கலை நூலின் பெயர் என்ன?
5. எந்த நூலில் முதலில் ராகங்கள் பெயரிடப்பட்டு, பெரிய அளவில் விவாதிக்கப்பட்டது?
6. சங்கீத ரத்னா கராவில் எத்தனை ராகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன?
7. ஜெய தேவாவின் கீத கோவிந்தாவில் என்ன கருத்து உள்ளது?
8. இசைக்கு திருமறைப்பாடல்களை அமைத்த இரு தமிழ் புலவர்களின் பெயரை கூறு?
9. கீதாபே நவரஸ்சை எழுதியவர் யார்?
10. மாள்வாவின் ஆட்சியாளரான பஸ்பஹதூர், அவரது மனைவி ரூப்மதி இசைக்கு என்ன பங்களித்தார்கள்?

## 12.2 இந்திய பாரம்பரிய இசையின் பிரிவுகள்

இடைக்காலத்தின் பொழுது, இந்திய பாரம்பரிய இசை, இரு பெரும் மரபுகளை அடிப்படையாக்கொண்டிருந்தது. இந்துஸ்தானிய பாரம்பரிய இசை வட இந்தியாவிலும் தென்னிந்தியாவில் கர்நாடக இசையும் காணப்பட்டது.

### இந்துஸ்தானி பாரம்பரிய இசை

டெல்லி சுல்தானியர்களின் காலத்திற்கு பிறகு, இந்துஸ்தானிய பாரம்பரிய இசை வளர ஆரம்பித்தது. அமிர்குஸ்ரு (கி.பி1255 - 1325) இசை செயல்பாட்டை, குறிப்பிட்ட கருவிகளுடன் பழக்க ஊக்குவித்தார். இவர், சிதார் தபலா ஆகியவற்றைக் கண்டுபிடித்தவர் என நம்பப்படுகிறது. புதிய ராகங்களை அறிமுகப்படுத்தியவர் எனவும் நம்பப்படுகிறது. பெரும்பாலான இந்துஸ்தானிய பாடகர்கள் தான் சேனுக்கு முன் முன்னோர் வழியில் தோன்றினவராவர். த்ருபட், தமர், தும்ரி, காயல் தாபா ஆகியவை பல்வேறு இந்துஸ்தானிய இசைப் பாணிகளாகும், தான் சேனின் இசை மந்திர சக்தியைக் கொண்டது என

சொல்லப்படுகிறது. அவர் தன்னுடைய சக்தி வாய்ந்த மேகராகத்தினால், யமுனாவில் எழும்புகின்ற அலைகளை நிறுத்த முடியும் அவரால் மழையை பெய்விக்க முடியும். இந்தியாவின் எல்லா பகுதிகளிலும் இவருடைய இன்னிசை பாடல்கள் மிகுந்த ஆர்வத்துடன் இப்பொழுதும் பாடப்படுகிறது. அக்பருடைய ஆதரவைப் பெற்ற சில அரசவைப் பாடகர்கள் பைஜி பாவ்ரா, சூர்தாஸ் முதலியவர்கள் ஆவர்.

பஹர், பைரவி, சிந்து பைரவி, பீட்பலசி தர்பாரி, தேஷ், ஹம்சத்வனி, ஜெய் ஜெயந்தி, மேகமல்ஹர், தோடி, யமன, பிலு, சியாம் கல்யாண், காம்போதி ஆகியவை மிகவும் பிரபலமான ராகங்களாகும்.

இந்தியா, வளமான வெவ்வேறு வகைகளில் பலவித இன்னிசை கருவிகளையும் கொண்டுள்ளது. நரம்பிசைக்கருவிகளிடையே, சிதார், சரோத், சந்த்தூர் சரங்கி போன்றவை மிகவும் சிறப்பு வாய்ந்தவைகளாகும். பக்கவாஜ், தபலா, மிருதங்கம் இது போலவே, புல்லாங்குழல், ஷெனாய், நாதஸ்வரம் ஆகியவை முதன்மையான இசைக்கருவிகளாகும்.

இந்துஸ்தானி பாரம்பரிய இசைப் பாடல்கள் வழக்கமாக, காரணாவுக்கு அல்லது குறிப்பிட்ட இசையின் பாணிக்கு தொடர்புடையவர்களாக இருந்தன. காரணாக்கள், பாடகர்களின் பரம்பரை இணைப்புகளை குறிக்கிறது. இவை பாணியின் உச்சத்தை, மற்றவைகளிலிருந்து அவற்றை வேறுபடுத்திக் காட்டுகின்றன, காரணாக்கள், குரு சிஷ்ய பரம்பராவில் செயல்படுகிறது, அதாவது சீடர்கள் குறிப்பிட்ட குருவிடம் கற்றுக் கொள்ளுதல், அவரது இசை அறிவு பாணியை மாற்றிக் கொள்வது போன்றவை அதே காரணாவை சேர்ந்தவையாகும். குவாலியர் காரணா, கிரானாகாரணா ஜெய்ப்பூர் காரணா ஆகியவை சில புகழ்பெற்ற காரணாக்களாகும்.

பக்திபாடல்களான கீர்த்தனைகள், பஜன், ராகங்கள் ஆதி கிரந்தத்தில் அடங்கியுள்ளன. முஹரம் காலத்தில், மஜ்லியல் பாடுவதும், இந்திய இசையில் உன்னதமான இடத்தை பெறுகிறது. இதனுடன், நாட்டுப்புற பாடல்களும் வளமான பாரம்பரியத்தை காட்டுகின்றன.

## 12.3 கர்நாடக இசை

கர்நாடக இசையின் தொகுப்புகள் கி.பி 1700, 1850 வரை வாழ்ந்த மொத்தமாக மூன்று தொகுப்பாளர்களை சார்ந்து இருந்தது. அவர்கள், ஷியாம் சாஸ்திரி, தியாகராஜர், முத்துஸ்வாமி தீட்சிதர் ஆவர். புரந்தரதாசர் மற்றுமொரு சிறந்த கர்நாடக இசை தொகுப்பாளராக இருந்தார். தியாகராஜாவை, புனிதர், கலைஞர் என இரு நிலையில் மதிக்கப்பட்டார். கர்நாடக இசையின் சாரத்தை எடுத்துக் காட்டுபவராகவும் இருந்தார். ‘கீர்தி’ என அழைக்கப்பட்ட முதன்மையான தொகுப்புகள் இயற்கையிலேயே பக்தி பண்பைக் கொண்டவைகளாகும். மூன்று சிறந்த பாடகர்கள் புதிய படிவங்களுடன் ஆராய்ச்சி செய்தார்கள். மஹா வைத்யநாத் அய்யர், (1844-1893) பட்டணம் சுப்ரமணி அய்யர் (1854-1902) ராம்நாடு ஸ்ரீனிவாச அய்யங்கார் ஆகியோர் இக்காலத்திய குறிப்பிடத்தக்க பாடகர்கள் ஆவர். புல்லாங்குழல், வீணை, நாதஸ்வரம், மிருதங்கம், கடம் போன்றவை கர்நாடக இசையின் தொடர்பு கொண்ட கருவிகளாகும்.

இந்துஸ்தானி இசைக்கும் கர்நாடக இசைக்குமிடையே வேறுபாடுகளைக் கொண்ட அம்சங்கள் இருந்தும் கூட, ஒருவர் ஒற்றுமைகளைக் காண முடியும். உதாரணமாக, கர்நாடக ‘அல்பனா’ ஹிந்துஸ்தானி பாரம்பரியத்தில் அலாப் ஆகவும் கர்நாடகத்திலுள்ள தில்லானா, ஹிந்துஸ்தானில் தாரனாவாகவும் ஒத்திருக்கின்றன. இரண்டும் தலா அல்லது தாளத்தை மீது வலிமையாக கூறுகின்றன.

## 12.4 நவீன இந்திய இசை

ஆங்கிலே ஆட்சியின்போது, மேற்கத்திய இசையும் வளர்ந்தது. இந்தியர்கள், இந்திய இசையின் விருப்பத்திற்கு ஏற்ப வயலின் மற்றும் கிளாரினெட் போன்ற சில கருவிகளை ஏற்றுக் கொண்டார்கள். மேடையில் வாத்திய இசைக் குழுவினரின் படைப்பு ஒரு புது வளர்ச்சியாகியுள்ளது. ஓலிப்பேழைகளின் பயன்பாடு வாய்மொழி வழியாக, சுருதி மற்றும் ராகங்களை அனுப்புவது மாற்றியமைக்கப்பட்டது. முன்பு, செயல்பாடுகள் தனிச்சலுக்கைகள் கொண்ட ஒரு சிலருக்கு மட்டும் உட்படுத்தப்பட்டது. இப்பொழுது பொது மக்களுக்கும் அனுமதி கொடுக்கப்பட்டு, ஆயிரக்கணக்கான இசைப் பிரியர்கள் நாடு முழுவதும் காணப்படுகிறார்கள். வெகு நாட்களாகவே இசை அறிவு, குரு-சிஷ்யன் முறையே சார்ந்திருந்தது. ஆனால் நிறுவனங்கள் கற்றுக் கொடுத்தலின் மூலமாக இசையை வழங்கலாம்.

### பாடகர்கள்

அமீர்குஸ்ரு, சதரவ் ஆதாரங்கா, மியான்தான்சேன், கோபால் நாயக், சுவாமி ஹரிதாஸ், பண்டிட் வி.டி பாலுஸ்கர் பண்டிட் வி.என். பட்காண்டே, தியாகராஜர் முத்து சுவாமி தீட்சிதர், பண்டிட் லும்கார், நாத்தாக்கர், பண்டிட் வனைக்ராவ் பட்வர்தன், உஸ்தத் சண்ட்கான், உஸ்தத் படே குலாம் அலிகான், உஸ்தத் பையஜ்கான், உத்தத் நிசர் ஹிசைன்கான், உஸ்தத் அமீர்கான், பண்டிட் பீம்சென் ஜோஷி, பண்டிட் குமார் காந்தர்வ, சேகரிபாய் கேர்கள் மற்றும் ஸ்ரீமதி கங்கு பாய் ஹங்கல் ஆகிய எல்லோரும் பாடகர்களாவர். இசைக் கருவி இசைப்பவர்களிடையே, பாபா அலாவுதின்கான், உஸ்தத் அலா ராக்கான் உஸ்தத் ஜாகிர் உசேன் ஆகியோர் புகழ் பெற்ற பாடகர்களாவர்.

## 12.5 நாட்டுப்புற இசை

பாரம்பரிய இசையைத் தவிர, வளமான மரபு வழி சார்ந்த நாட்டுப்புறம் அல்லது பிரபலமான இசையையும் இந்தியா கொண்டிருக்கிறது. இந்த இசை ஒட்டுமொத்த மக்களின் உணர்ச்சிகளின் பிரதிநிதித்வமாக உள்ளது. சாதாரண பாடல்கள், வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வையும் குறிப்பதற்கு தொகுக்கப்பட்டுள்ளது. அவர்கள் பண்டிகைகளாகவோ, புதிய பருவங்களின் வருகையாகவோ, திருமணம் அல்லது குழந்தை பிறப்பாகவோ இருக்கலாம். ராஜஸ்தானி நாட்டுப்புறபாடல்களான மண்ட் மற்றும் வங்காளத்தின் பாட்டியாலி இந்தியா முழுவதும் மிகவும் புகழ் பெற்றது. ஹரியானாவின் புகழ் பெற்ற நாட்டுப்புற பாடல் ராஜனியாகும்.

நாட்டுப்புறப் பாடல்கள், சிறப்பான கருத்துகளையும் மற்றும் நல்ல செய்திகளையும் கொண்டுள்ளன. அவை வரலாற்று நிகழ்வுகள் மற்றும் முக்கியமான சடங்குகளை அடிக்கடி வர்ணிக்கின்றன. காஷ்மீரின் குல்ராஜ், வழக்கமான நாடோடிக் கதை, மற்றும் கதை நிகழ்ச்சியான மத்திய பிரதேசத்தின் பாண்டியானி, இசையாக பாடப்பட்டது. முஸ்லீம்கள் சோஜீக்வானி அல்லது துக்கத்திற்குரிய பாடல்களை முகரத்தன்று பாடுகிறார்கள். கிறிஸ்மஸ் ஆனந்தப் பாடல்களை சேர்ந்திசைப் பாடல்களை, குழுக்களாக, பண்டிகை காலங்களில் பாடப்படுகிறது.

### இப்பகுதிக்கான கேள்விகள் 12.2

1. இந்திய பாரம்பரிய இசையின் இரண்டு பிரிவுகள் யாவை?
2. இந்துஸ்தானி இசையின் பல்வேறு பாணிகள் யாவை?
3. இந்துஸ்தானி பாரம்பரிய இசையில் காரனா என்பது என்ன?

4. இந்தியாவின் புகழ்பெற்ற சில இசை காரனாவின் பெயரைக் கூறு?
5. கர்நாடக இசையில் கிரிதி என்பது என்ன?
6. இந்தியாவின் கர்நாடக இசை தொகுப்பாளர்கள் சிலரின் பெயரைக் கூறு?
7. கர்நாடக இசைக்கு இணையாகிற சில முக்கியமான கருவிகள் எவை?
8. ஹிந்துஸ்தானி மற்றும் கர்நாடக இசையின் ஒரே மாதிரியான அம்சங்கள் யாவை?

## 12.6 இந்தியாவின் நடனங்கள்

ரிக்வேதம், நடனம் (நிர்தி) மற்றும் நடனமாடுபவர்களை (நிர்து) மற்றும் சிறப்பான உதயத்தை (உசாஸ்) நடனமாடுபவரின் ஒளிமயம் என குறிப்பிடுகிறது. பிராமணங்களில் ஜைமினியா மற்றும் கௌசி டாக்கி நடனம் மற்றும் இசை ஒன்றாக குறிப்பிடப்பட்டுள்ளது. காப்பியங்கள் முழுவதிலும், பூலோகத்தில் நடன மாடுவது மற்றும் சொர்க்கத்தில் நடனமாடுவதையும் பற்றின குறிப்புகள் காண்பபடுகின்றன.

இசையைப் போலவே, இந்திய நடனங்களும் வளமையான பாரம்பரிய மரபுகள் வளர்ச்சி அடைந்துள்ளன. இதை கதையாக கூறும் பொழுது, சிறந்த வலிமையான வெளிப்பாடுகள் மற்றும் உணர்ச்சிகளை ஏற்படுத்துகிறது.

இந்தியாவில், நடனக்கலை, ஹாரப்பா கலாச்சாரத்திற்கு பின்பு காணப்பட்டது. நடமாடும் பெண்ணின் வெண்கலச்சிலை, ஹாரப்பாவில் சில பெண்கள் நடன மாடினர் என்பதற்கு சான்றுகள் உள்ளன.

இந்திய பண்பாட்டு மரபுகளில் நடனச் செயல்பாடுகள், சமய கருத்துகளுக்கு அடையாள வெளிப்பாடுகளை கொடுப்பதற்கும், சிவ கடவுளின் உருவம், நடராஜா போன்ற பிரபஞ்ச சுழலில் உருவாக்குதல் மற்றும் அழித்தலை குறிக்கின்றன. பிரபலமான சிவாவின் உருவச்சிலை நடராஜா வடிவத்தில் இருப்பது, இந்திய மக்கள் மீது இருந்த நடன படிவத்தின் புகழை தெளிவாகக் காட்டுகிறது. ஒரு கோவிலில் கூட குறைந்த பட்சமாக, நாட்டின் தென்பகுதியில் கூட நடனமாடுபவர்கள் சிலைகளின் பல்வேறு வடிவங்களை காட்டுவதில்லை. உண்மையாகவே. பாரம்பரிய நடன வடிவங்களான கதக்களி, பரதநாட்டியம், கதக், மனிப்புரி, குச்சிபுடி, ஓடிசி ஆகியவை, நமது பண்பாட்டு பாரம்பரியத்தின் முக்கியமான அம்சங்களாகும்.

நடனம் எந்தக் காலத்தில் தொடங்கியது என்பதைக் கூறுவது மிகவும் கடினமானது. ஆனால் நடனம் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்கான ஒரு முயற்சி என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. படிப்படியாக, நடனங்கள் நாட்டுப்புறம் மற்றும் பாரம்பரியம் என இரு வகையாகப் பிரிந்தது. பாரம்பரிய படிவத்தை கொண்ட நடனம், கோவில்கள் மற்றும் அரச அவையில் நிகழ்த்தப்பட்டது. கோவில்களில் நடனங்கள் சமய நோக்கங்களை கொண்டிருந்தன. நேர்மாறாக அரசவையில் இது முழுமையாக பொழுது போக்கிற்காக பயன்படுத்தப்பட்டது. இந்த இரு விஷயங்களில், கலைஞர்கள் கலைப்படிவத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டார்கள். இது கடவுளை வழிபடுதலை விட குறைந்தது கிடையாது. தென்னிந்தியாவில் பரத நாட்டியம் மற்றும் மோகினி யாட்டம், கோவில்களின் சடங்குகளில் முக்கிய அம்சமாக திகழ்வது யக்ஷகானா ஆகும். கேரளாவில், கதக்களி வடிவமைப்பை கொண்ட யக்ஷகானா, ராமாயணம் மகாபாரத கதைகளை நமக்கு கூறுகிறது. அதே சமயம் கதக் மற்றும் மணிப்புரி, பெரும்பாலும் கிருஷ்ணா மற்றும் அவனுடைய லீலா (மனக்கிளர்ச்சியூட்டுதல்)வின் தொடர்பான கதைகளைக் கூறுகிறது. ஓடிசி செயல்பாடு, ஜகநாத கடவுளை வழிபடுதலின் தொடர்பாக இருந்தது. கிருஷ்ண லீலா மற்றும் சிவன் கடவுளை தொடர்புபடுத்துகிற கதையாக இருந்தாலும், கதக்கின் கருத்தாகத்தான் இருந்தது. இந்த நடனம், மத்திய காலத்தில்,



குறிப்புகள்

அரசவையில் செயல்படுத்தப்பட்டது. காதல் சார்ந்த உணர்ச்சி மிக்க சைகைகள் தும்ரி மற்றும் கஜலில் அடங்கியிருந்தது. அவை, அரசர்களுக்காக, பக்கவாத்தியக்காரர்களுடன் செயல்படுத்தப்பட்டதை இந்த அம்சம் பிரதிபலிக்கிறது. மணிப்புரி நடனமும் சமய நோக்கங்களுடன் செயல்படுத்தப்பட்டது. நாட்டுப்புற நடனங்கள் சாதாரண மக்களின் வாழ்க்கையிலிருந்து பரிணமித்தது மற்றும் ஒருங்கிணைந்து செயல்பட்டது. அஸ்ஸாமில் பெரும்பாலான அறுவடைக்காலத்தை 'பிகு' மூலம் கொண்டாடுகிறார்கள். இதே போன்று குஜராத்தின் கார்பா, பஞ்சாபின் பாங்கரா மற்றும் கீதா, மிசோரத்தின் மூங்கில் நடனம், மஹாராஷ்டிராவின் கோலி என்ற மீனவனின் நடனம், காஷ்மீரின் துமால் மற்றும் வங்காளத்தின் 'சௌ' ஆகியவை செயல்பாட்டு கலைகளின் நிகரில்லாத உதாரணங்களாகும். அது மக்களுக்கு மகிழ்ச்சி மற்றும் துக்கத்தின் உணர்வினை கொடுத்தது.

இந்தக்கலை படிவத்தின் பகுப்பாய்வு முறையை பொறுத்தவரை, பரதாவின் நாட்டிய சாஸ்திரம்முக்கியமான தகவல் மூலமாகும் மற்றும் அடிப்படையாக நாடகத்துடன் கையாளப்படுகிறது. பரதா நடனத்தை மற்றும் அதனுடைய பல்வேறு அங்கங்களை (பெருங்கிளைகள்) விரிவாக விவாதித்தார். முகபாவங்கள் உடலசைவுகள், ஹஸ்தமுத்ராக்கள், மற்றும் காலடி ஓசை, ஆகிய எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து அதாவது நிரிட்டா(பாட சஞ்ச்சலன்), நிரிட்டிய (அங்க சஞ்ச்சலன்) மற்றும் நாட்டியா (அபிநயம்) ஆகிய மூன்று பரந்த வகைகளில் கொண்டுவரப்பட்டது. ஆண் மற்றும் பெண் இருவரும் நடனத்தில் மிகுதியான ஆர்வம் கொண்டிருந்தனர். ஆனால் பொதுவாக பெண் நடனக்காரர்கள் சமுதாயத்தில் இழிவாக பார்க்கப்பட்டனர். இருந்தபோதிலும், சிறந்த இசைஞானிகள் மற்றும் பலவேறு சமய மற்றும் சீர்திருத்த இயக்கங்களின் முயற்சிகள் காரணமாக மக்கள், பெண் செயல்பாட்டுக்காரர்களை மரியாதையுடன் நடத்த தொடங்கினார்கள்.

இடைக்காலத்தில், கதக் நடன படிவம், முஸ்லிம் ஆட்சியாளர்களால் வளர்ச்சியடைந்தது. நாம் பெரும்பாலான முகலாய ஆட்சியாளர்களின் அரசவையில் அவுரங்க சீப்பைத்தவிர, இத்தகைய செயல்பாடுகளைப்பற்றி கேட்டிருக்கிறோம். தென் இந்தியாவில் கோவில்கள், அரசவை மற்றும் கட்டிடத்தின் மற்ற பகுதிகள் முக்கியமான மேடையை எல்லா நடனக்காரர்களுக்கு வழங்கின. நவரசங்கள், ராமர், கிருஷ்ணா, கணேஷ், துர்காவின் புராணமரபியில் கதைகள், நடன வடிவத்தில் நடிக்கப்பட்டன. வடக்கில் வாஜித் அலிஷா போன்ற சில ஆட்சியாளர்கள் இசை மற்றும் நடனத்தின் சிறந்த ஆதராவளர்களாக இருந்தனர். இங்கு லக்னோ காரணா அல்லது நடனப் பள்ளிக்கான விதை விதைக்கப்பட்டது. பண்டிட் பிர்ஜி மஹாராஜ் போன்ற நவீன கால நடனக்காரர்கள் லக்னோ நடனப் பள்ளியிலிருந்து வந்தவர்கள். இடைக்காலத்தில், தெற்கில் பண்டைய சமஸ்கிருத நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட விதிகளுடன் இறுக்கமான நிலையில் இருந்தது. இது தென்னிந்திய வட்டாரங்களில் கற்றலின் மையமாக ஆனது நடனத்தின் நிறுவனமாக வளர்ச்சியுற்றது.

நவீன காலத்தில், தென் இந்திய பாரம்பரிய நடனங்கள் நீர்த்தாமரை போல, அதிக எண்ணிக்கையில் சென்று கொண்டிருப்பதை நாம் காண முடிகிறது. அவை குச்சுப்பிடி, பரத நாட்டியம், மோகினி ஆட்டம், கதக்களி ஆகும். கிழக்கு பகுதியில் 'ஓடிசி' நடனம் மிகப் பெரிய அளவில் வளர்ந்தது.

பாரம்பரிய நடனப் படிவங்களுடன் நாட்டுப்புற நடனமும் செழிப்புற்றது. பெரும்பாலான வட்டாரங்களில் உள்ளூர் நடன படிவம் மிகவும் பிரபலமானது. மணிப்புரி நடனம், சாந்தல் நடனம், ரவிந்திரநாத்தின் நடனம், நாடகம், சௌ, ராஸ், கிடா, பாங்க்ரா, கார்பா ஆகியவை இந்தியாவில் வளர்ச்சியுற்ற சில நாட்டுப்புற நடனங்களாகும், அவைகள் பிரபலமானவை, அதே சமயத்தில் பெரிதளவில் மதி நுட்பம் மற்றும் புதுமைகளைக் கொண்டுள்ளது. கிட்டத்தட்ட நம் நாட்டின் ஒவ்வொரு வட்டாரமும் அவர்களுடைய சொந்த வளமான நாட்டுப்புற நடனங்களை

முன்னேற்றியுள்ளது. அஸ்ஸாமின் பிகு நடனம், லடாக்கின் மாஸ்க நடனம், மேகாலயாவின் வாங்களா நடனம், சீக்கிம்மின் பூட்டியா அல்லது லெப்ச்சா நடனம் ஆகியவை உதாரணங்களாகும். இதே போன்று போர் நடனங்கள் என அழைக்கப்படுகிற சில நடனங்களில் உத்ராஞ்சலின் சோலியா, கேரளாவின் களரி பைட்டு, மணிப்பூரின் தங்டப் ஆகிய மிகச் சிறந்தவைகளை கொண்டுள்ளோம்.

இப்பொழுது, நம் நாட்டில் எல்லா மூன்று கலைப்படிவங்கள் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றன. இன்னிசை நிறுவனங்கள் தொடங்கப்பட்டு, பலருக்கும் நல்ல வாய்ப்புகளை கொடுக்கின்றன. பள்ளிகள், கல்லூரிகளில் இன்னிசைத்துறைகள் உள்ளன. கைரகாரிலுள்ள இந்திரகலா விஷ்வா வித்யாலயம் ஒரு இன்னிசை பல்கலைக்கழகமாகும். தெற்கில், காந்தர்வ மகாவித்யாலயா, கதக்கேந்திரா மற்றும் பல நிறுவனங்கள் இசையை அவர்களது சொந்த வழியில் பிரச்சாரம் செய்கிறார்கள். இசை மாநாடுகள் பைதக்குகள் விரிவுரை செய்து காட்டல் ஆகியவை இசையை இந்தியாவின் எல்லா மூலை முடுக்குகளிலும் பரப்பிக் கொண்டிருக்கின்றன. ஸ்பிக்-மகே, இந்திய பன்னாட்டு கிராமிய பண்பாட்டு மையங்கள் போன்றவை, கலைஞர்கள் மற்றும் நவீன தலைமுறையினருக்கு நெருங்கிய தொடர்பு இணைப்பை கொணருவதற்கு கடினமாக உழைத்தன என்றால் அது மிகையாகாது.

வெளிநாட்டுப் பாடகர்களும் வளர்ச்சியுற்றனர். மற்றும் ரவிஷங்கர், உஸ்தத் அலி, அக்பர் கான், அலாரக்ஷா முதலியவர்களால் தொடங்கப்பட்ட பல்வேறு இசை நிறுவனங்கள் வெளிநாட்டவர்களுக்கான, கௌரவமான கற்றல் மையங்களாகும். பல வெளிநாட்டு பல்கலைக்கழகங்களும், மாணவர்களுக்கு கால படிவ பட்டங்கள் மற்றும் பட்டயச் சான்றிதழ் களை வழங்கும் வசதிகளைப் பெற்றிருந்தன. உலகு எங்கிலும் உள்ள இந்திய கலைஞர்கள் செயல்பாட்டிற்கு மற்றும் பல்வேறு விழாக்கள் மற்றும் அவ்வப்போது நடைபெறுகிற விழாக்களில் பங்கு பெற அழைக்கப்பட்டார்கள்.

## நவீன இந்தியாவின் புகழ் பெற்ற நடனக்காரர்கள்

**கதக்:** பண்டிட், பிர்ஜிமஹாரஜெ, பண்டிட் ஷாம்பு மகராஜ், சிதாராதேவி, பண்டிட் கோபி கிருஷ்ணா, பண்டிட் லச்சுமஹாராஜ்

**பரத நாட்டியம்:** சரோஜா வைத்யநாதன், பத்மா சுப்ரமணியம், கீதா சந்திரன்.

**ஓடிசி:** கேளுசரண் மகா பத்ரா, சன்ஜீகா பனி கிரஹி, கிரண் சேகல், மாதவி முட்கல்.

**குச்சிபுடி:** ஸ்வப்பன சுந்திரி, சத்ய நாராயண சர்மா, ராஜாரெட்டி, ராதா ரெட்டி, சோனால் மான்சிங்

**இசைக் கலைஞர்கள்:** பரதா, மட்டங்காமுனி, பண்டிட் சரவ்க தேவா, பண்டிட் சோமநாத், பண்டிட் அபோ பாலா.

பண்டிட் வியனகட் மக்தி, பண்டிட் ராம மாத்யா, எஸ்.எம். தாகூர் ஆச்சார்யா, கே.சி.டி. பிரஹஸ்பதி.

கடந்த பத்தாண்டுகளில், நடனம் மற்றும் அதை செயல்படுத்துவர்களின் மதிப்பு மாறியுள்ளது. இளவயதினர், தங்களுடைய தனிப்பட்ட தகுதிகளை வளம்படுத்துவதற்காக, நடனக் கலையை பயிலத் தொடங்கி உள்ளனர். சில பள்ளிகள் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள், தனித்துறைகளை, நடனத்தில் பயிற்சி கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. பத்மஸ்ரீ மற்றும் பத்மபூஷன் விருதுகளை, பல புகழ்பெற்ற பாரம்பரிய நடனக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு சிறப்பிக்கப்படுகிறார்கள்.

வரலாற்றின் வெவ்வேறு காலங்களில் முழுவதும் நடனமாடும் பெண்ணின் உருவச்சிலை சிந்துவெளி நாகரிகத்திலிருந்து, இன்று வரை இந்திய மக்கள், தங்களுடைய மகிழ்ச்சி மற்றும்

துக்கத்தை பல்வேறு கலை படிவங்கள் மூலம் பாட்டுப்பாடியும் நடனமாடியும் வெளிப்படுத்தினார்கள். இந்தக் கலைப்படிவம் அவர்களுடைய அன்பு, வெறுப்பு விருப்பங்கள் மற்றும் வாழ்வதற்கு அவர்களுடைய போராட்டம், ஆகியவை இறுதியாக நமது பண்பாடு வளமடைய வழி வகுத்துள்ளன.

## இப்பகுதிக்கான கேள்விகள் 12.3

1. சிவன் கடவுளின் நடராஜா உருவத்தில் எது அடையாளமிட்டது?
2. நடனத்தின் இரு படிவங்கள் யாவை?
3. கீழ்கண்டவற்றை பொருத்துக

| நாட்டுப்புற கலை படிவம் | | மாநிலம் |
|---|---|---|
| பிகு | - | வங்காளம் |
| கார்பா | - | மிசோரம் |
| பாங்க்ரா மற்றும் கீதா | - | மஹாராஷ்டிரா |
| மூங்கில் நடனம் | - | காஷ்மீர் |
| கோலி | - | பஞ்சாப் |
| துமால் | - | குஜராத் |
| சூ | - | அஸ்ஸாம் |

4. நடனத்தின் மூன்று பரந்த வகைகள் யாவை?
5. புகழ் பெற்ற இரண்டு கதக் நடனக்காரர்களின் பெயரைக் கூறு?
6. மிகவும் புகழ் பெற்ற பரத நாட்டிய நடனக்காரர்கள் சிலரின் பெயரைக் கூறு?

## 12.7 நாடகம்

தாய் நாட்டிற்குரிய மரபு மற்றும் நவீன ஆராய்ச்சி, இந்திய நாடகத்தின் தோன்றலை வேதங்களுக்கு அடையாளம் காட்டுகிறது. ராமாயணத்தில், பெண்கள் நாடகக் குழுவினரைப் பற்றி கேள்விபடும் பொழுது கௌடில்யாரின் அர்த்த சாஸ்திரத்தில், பாடகர்கள், நாட்டியக் காரர்கள் மற்றும் நாடகக் காட்சிகளை குறிப்பிடுகின்றது.

நாடகம் என்பது செயல்பாட்டுக்கலை, இவை பழங்காலத்திலிருந்தே பழக்கப்படுத்திக் கொண்டிருக்கிறது. குழந்தையின் விளையாட்டிலிருந்து, நாடகம் மலர முடியும். குழந்தை, நடக்கிறது மற்றவரைப்போல நடித்துக்காட்டுகிறது மற்றும் நையாண்டி செய்கிறது இது நிச்சியமாக நாடகத்தின் துவக்கமாகும்.

முந்தைய காலத்திலிருந்தே, கடவுளர்கள், பெண் தெய்வங்கள் மற்றும் சாத்தான்களின் சண்டைகளைப் பற்றின புராணக்கதைகள் தெரியப்படுகிறது. பரதா, நாட்ய ஹாஸ்டிராவை எழுதினார் மற்றும் அசுர பரஜயா மற்றும் அமரித் மந்தன் என்ற நாடகங்களை உருவாக்கினார்கள். நாடகம் மற்றும் பிற செயல்பாட்டுக்கலைத் துறையில் எழுதப்பட்ட நூல்களில், நாட்டிய சாஸ்திரம் ஒரு சிறந்த நூலாகும்.

அடுத்த முக்கியத்துவம் பெற்ற வரலாற்றின் ஒரு பகுதி, பாஷா, உதயனா, ராமாயணம், மகாபாரதம் ஸ்வப்பனா வசபத்தா ஆகிய கதைகளை அடிப்படையாக கொண்டு எழுதிய நாடகங்கள் அவருடைய தலைசிறந்த படைப்புகளாகும். கி.மு 2ஆம் நூற்றாண்டில், பதஞ்சலியின் மஹாபாஷ்யா நாடகத்தின் பல்வேறு பண்பு கூறுகளான அதாவது நடிகர்கள் இசை மேடை, ராசா ஆகியவற்றின் செயல்பாடுகளை ‘கம்சவதா’ மற்றும் பலிபந்தா என அழைக்கப்பட்டது.

பரதா நாடகத்தைப் பற்றி குறிப்பிடுகையில் நட் (ஆண்கலைஞர்கள்) மற்றும் 'நடி' (பெண் கலைஞர்கள்) இசை, நடனம், இன்னிசைக் கருவிகள், வசனங்கள் கருத்துகள் மேடை ஆகியவற்றை குறிப்பிட்டுள்ளது. இவ்வாறாக, பரதாவின் காலத்தில் நடனம், சிறந்த முழுமையான நிலையை அடைந்தது. பரதாவைப் பொறுத்தவரை, நாடகம் என்பது ஒரு தகவல் தொடர்பு ஊடகமாகும். இவரும் அரண் போன்ற சில கோட்பாடுகளை நாடகத்திற்காக தொடங்கினார். 'ஷைலூஸ்' என்ற ஒரு இனம் நாடக தொழில் கம்பெனிகளைக் கொண்டிருந்தது. வீரமான கதைகளை பாட்டாகப்பாடுவது மிகவும் பிரபலமானது. இதன விளைவாக குஷிலாவாஸ்கள் என அழைக்கப்பட்ட பாட்டுப் பாடுதலை தொழிலாகக் கொண்ட மக்கள் அங்கு வாழ்ந்தனர்.

புத்தர், மஹாவீரர் ஆகியோர் காலத்தில் நாடகம், அவர்கள் ஒவ்வொருவரின் சமயக் கொள்கைகளை தொடர்புபடுத்தக்கூடிய ஊடகமாக இருந்தது. மக்களுக்கு போதிக்கவும் கற்றுக் கொடுக்கவும், குறு நாடகங்களும் நீண்ட நாடகங்களும் நடிக்கப்பட்டன. நாடகத்தின் மீது ஆர்வத்தை அதிகப்படுத்த இசையும் நடனமும் பெரும் பங்கு வகிக்கின்றன.

பண்டைய காலத்தில் 10ஆம் நூற்றாண்டு வரை 'சமஸ்கிருதம்' கற்றவர்களின் மொழியாக இருந்தது. ஆகையால் நாடகங்கள் பெரும்பாலும் இந்த மொழியில்தான் செயல்பட்டன. இருந்தாலும் கீழ் வகுப்பைச் சார்ந்த மற்றும் பெண் கதாபாத்திரங்களை பிரகிருத மொழியில் பேச வைத்தனர். கௌடில்யாவின் அர்த்த சாஸ்திரம், வத்சாயனாவின் காம சூத்திரா, காளிதாசாவின் அபிஜ்னம் சாகுந்தலம், ஆகியவை சமஸ்கிருத்தில் எழுதப்பட்டன. மற்றும் அந்நாளில் இவைகள் குறிப்பிடத்தக்க நாடகங்களாக இருந்தன. மற்றுமொறு புகழ்பெற்ற நாடக ஆசிரியரான 'பாசா' 13 நாடகங்களை எழுதியுள்ளார். 14ஆம் நூற்றாண்டின் எதோ ஒரு சமயத்தில் வாழ்ந்த வித்யா பதி ஒரு முக்கியமான நாடக ஆசிரியராவார். இவர் ஹிந்தி மற்றும் பிற வட்டார மொழிகளை பாடல்கள் வடிவத்தில் அறிமுகப்படுத்தினார். இக்காலத்தில் உமாபதி மிஷ்ரா மற்றும் சாரதா தனயாவும் நாடகத்தை வளர்ச்சியடைச் செய்வதில் மிகவும் உறுதுணையாக இருந்தனர்.

இந்த நாடகச் சூழலில் பாரம்பரிய நாடகம், சிக்கலான கருத்துகள் மற்றும் நாடகத்தின் பண்புக்கூறுகளால் எளிதில் கண்டுணராத நுட்பமான வேறுபாடுகள் மற்றும் நாடக அரங்கம் ஆகிய 2 வகைகள் வளர்ச்சியடைந்தன. இது தன்னியல்பு மற்றும் முன்னேற்பாடு இல்லாத நிலையைக் கொண்டதாக இருந்தது. நாட்டுப்புற அரங்கத்தில் உள்ளூர் கிளை மொழிகள் பயன்படுத்தப்பட்டன பல்வேறு மாகாணங்களில் பலவகை நாட்டுப்புற அரங்கங்கள் வளர்ச்சி அடைந்தன. இசை, நடன துணைக் கருவிகளுடன் நடிப்பது, பிரபலமான பழக்கமாகும். வெவ்வேறு மாகாணங்களில் நாட்டுப்புற அரங்கு அமைப்புகளுக்கு பல பெயர்கள் கொடுக்கப்பட்டன. அவைகளாவன:

1. வங்காளம் - ஜட்ரா, கீர்தானிய நாடகம்
2. பீஹார் - பிதேஷியா
3. ராஜஸ்தான் - ராஸ், ஜிபார், தோலாமரு
4. உத்திரபிரதேசம் - ராஸ், நௌதங்கி, ஸ்வாங், பாண்ட்
5. குஜராத் - பாவாயி
6. மஹாராஷ்டிரா - லாரிடி, தமாஷா
7. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, கதகளி, யக்ஷகானா.

காளிதாசர் குப்தர் காலத்தைச் சார்ந்தவர் என்ற உண்மைக்கு குண்டலேஷ்வர் தையம் என்ற நாடகம் சான்றளிக்கிறது.

தோல், கர்தல், மஞ்சிரா, கஞ்சிரா போன்ற கருவிகள் நாட்டுப்புற அரங்கத்தில் பயன் படுத்தப்பட்டன.

மத்திய காலம், இசையிலும் நடனத்திலும் மிக செழிப்புற்றிருந்தது ஆனால் அரங்கம் முக்கியத்துவத்தை பெறவில்லை. வாஜித் அடில்ஷா கலையின் சிறந்த ஆதரவாளர் மற்றும் நடனத்தின் முக்கிய ஆதரவாளரும் ஆவார். இவர் கலைஞர்களை அரங்கத்தில் பங்கு பெற ஊக்கப்படுத்தி ஆதரவு கொடுத்தார். தென்னிந்திய வட்டாரங்களில் கிளை மொழிகளின் பயன்பாட்டுடன் நாட்டுப்புற அரங்கம் மிகவும் பிரபலமாக இருந்தது.

நாட்டில் ஆங்கிலேயரின் வருகை, சமுதாயத்தின் சூழ்நிலையை மாற்றியது 18ம் நூற்றாண்டில், கல்கத்தாவில் ஓர் அரங்கம் ஒரு ஆங்கிலேயரால் ஏற்படுத்தப்பட்டது. 'ஹோரசிம் லெபிதேவ் ' என்ற பெயர் கொண்ட ரஷ்யக்காரர், வங்காள அரங்கத்தை நிறுவினார். இது இந்தியாவில் நவீன இந்திய அரங்கத்தின் ஆரம்பத்தை குறிக்கிறது. சிறப்பாக ஷேக்ஸ் பியரால் எழுதப்பட்ட ஆங்கிலேய நாடகம், இந்திய நாடகத்தை ஆதிக்கம் செலுத்தியது. கற்றறிந்த இந்தியர்களால் பரிணமித்த மேடைகள், மரபு சார்ந்த திறந்த வெளி அரங்கங்களிலிருந்து வேறுபட்டன. இப்போதைய மேடைகள் சுழலும் தீரைச் சீலைகள் மற்றும் காட்சிகளை மாற்றுவதாகவும் இருக்கிறது. பாம்பேயில் நிறுவப்பட்ட பார்சி கம்பெனி, வியாபார நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டது என்பதை காட்டியது. நாடகங்கள், சோகம், நகைச்சுவை மற்றும் நகர வாழ்வின் சிக்கல்களையும் சித்தரிக்க ஆரம்பித்தது. நாடகங்கள் இப்பொழுது பல்வேறு வட்டார மொழிகளில் எழுதப்படுகின்றன. நாட்டுப்புற அரங்குங்களான ஜத்ரா, நௌதங்கி, கயல் (ராஜஸ்தானி நாட்டுப்புறம்) மற்றும் நாச்சுவும் ஒன்றையடுத்து ஒன்றாக வளர்ச்சியடைந்தன. செயல்பாட்டுக்கலையில் செல்வாக்கை செலுத்திய மற்றுமொரு அம்சம், நாடோடி படிவத்திலிருந்து பாரம்பரிய படிவத்தை தழுவியதாகும். வெவ்வேறு துறைகளின் வல்லவர்கள் அவரவர்களின் கலையை மக்களுக்கு பணி செய்ய ஒரு ஊடகமாக்கிக் கொண்டார்கள். ஆகையால் மக்களைச் சென்றடைவதற்காக, பிரபலமான நாட்டுப்புற கலையைத் தழுவினார்கள். நாடகம் எழுதுவதிலும் அதே போன்ற சூழ்நிலை எழுந்தது. இடைக் காலத்தில் புகழ் பெற்ற 'வித்யா சுந்தர்' என்ற நாடகம், சிறந்த கவிஞரான ஜெய தேவாவினால் எழுதப்பட்ட உயர்தகைமையுடைய நூல், ஜத்ராவினால் செல்வாக்கடைந்தது, சிறந்த புலவர் ஜெய தேவாவினால் எழுதப்பட்ட உன்னதமான நூல் கீதகோவிந்தம், கீர்தானிய நாடகத்தில் கிருஷ்ணன் மற்றும் ஜட்ரா பாணியில் கதைகளை உருவாக்கியுள்ளது.

தற்பொழுது, நாடகத்துறையில், ஏராளமான பரிசோதனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேற்கத்திய செல்வாக்குகள், ஷம்புமித்ரா, பீசல் அல்காசி, பாதல் சர்க்கார், விஜய தென்டுல்கர், மற்றும் பிற நூல்களில் தெளிவாகத் தெரிகிறது. தற்பொழுது பல்வேறு வகையான நாடகங்கள் செழித்துக் கொண்டிருக்கின்றன மற்றும்

அவற்றில் சில:

(அ) மேடை அரங்கம்

(ஆ) வானொலி அரங்கம்

(இ) நுக்கார் அல்லது வீதி நாடகங்கள்

(ஈ) ஓரங்க நாடகம் (ஒரு மனிதன் காட்சி)

(உ) இன்னிசை அரங்கம்

(ஊ) குறு நாடகங்கள்

(எ) ஒரு செயல் நாடகம்

நடனம் மற்றும் நாடகத்திற்கான பொருளடக்கம் மற்றும் ஆய்வுப் பொருளுக்கு நாம் ஆக்கத்திறன் கொண்ட இலக்கிய நூல்களை ஆராய வேண்டும். 13-ஆம் நூற்றாண்டில் மிக முக்கியமான இலக்கிய நிகழ்வு ஜெய தேவாவின் கீதா கோவிந்தாவை தொகுத்தது. இது நடனம் மற்றும் நாடகத்தை மட்டும் ஆதிக்கத்தை செலுத்தவில்லை. ஆனால் வர்ணம்

பூசுதலிலும் ஆதிக்கத்தை செலுத்தியது. கிழக்கிலிருந்து மணிப்பூர் மற்றும் அஸ்ஸாம், மேற்கிலிருந்து குஜராத்திற்கு, வடக்கே மதுரா மற்றும் விருந்தாவனிலிருந்து, தெற்கே தமிழ்நாடு மற்றும் கேரளாவிற்கு நடனம் மற்றும் நாடகத்தின் படிவங்கள் மீது இதனுடைய சிறந்த தாக்கத்தை இந்தியா முழுவதும் காணலாம். நாடு முழுவதும் கீதா கோவிந்தாவின் மீது ஏராளமான ஆய்வுக்கட்டுரைகள் காணப்பட்டன. நடனம் அல்லது நாடகத்திற்குரிய அடிப்படை இலக்கிய நூல் பல வட்டார நடிப்பியல்பு மரபுகளில் பயன்படுத்தப்பட்டன. இக்காலத்தில் வைஷ்ணவ மதத்தின் பரவல், பல்வேறு படிவங்களின் வளர்ச்சிக்கு மேலும் தூண்டின.

## 12.8 சில முக்கிய நாடகங்கள் மற்றும் அவற்றின் எழுத்தாளர்கள்

நாடகம் என்பது ஒரு கலைப்படிவம், இதற்கு ஒரு பெரியவரலாறு இந்தியாவில் உண்டு, ஆனால் இதனுடைய பகுப்பாய்வு முறை மற்றும் இலக்கணம் சார்ந்த படிப்பை நாட்டிய சாஸ்திராவினால் கொடுக்கப்பட்டது. இந்த நூலில், இசை மற்றும் நாடகம், நாடகத்தின் இன்றியமையாத பகுதிகள் என குறிப்பிடப்பட்டுள்ளது. காளிதாஸ், பாணபட்டர் மற்றும் பாஷாவினால் எழுதப்பட்ட ராமாயணம், மகாபாரதம் மற்றும் நாடகங்கள், இசை, நடனம் நாடகத்தின் மூன்று கலைப் படிவங்களின் கூட்டிணைவுக்கு உதாரணங்களாகும். சில பிரபலமான நாடகங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன

| வ.எண் | பெயர் | எழுத்தாளர் |
|---|---|---|
| 1. | மேகதூதம் | காளிதாசர் |
| 2. | அபிஷ்னம் சாகுந்தலம் | காளிதாசர் |
| 3. | பத்மாவது | மதுசூதன் |
| 4. | ஹர்ஷ சரிதம் | பாணபட்டர் |
| 5. | நீல் தேவி | பாரதெண்டு |
| 6. | சத்யஹரிஷ சந்திரா | பாரதெண்டு |
| 7. | அந்தா நக்ரி | பாரதெண்டு |
| 8. | சந்திர வால் | ஜெய் ஷங்கர் பிரசாத் |
| 9. | அஜாதஷத்ரு | ஜெய் ஷங்கர் பிரசாத் |
| 10. | ராஜ்யஸ்ரீ | ஜெய் ஷங்கர் பிரசாத் |
| 11. | சந்திர குப்தா | ஜெய் ஷங்கர் பிரசாத் |
| 12. | பிரயா ஷிட் | ஜெய் ஷங்கர் பிரசாத் |
| 13. | கருணாலயா | ஜெய் ஷங்கர் பிரசாத் |
| 14. | பாரதென்டு | ஜெய் ஷங்கர் பிரசாத் |

### இப்பகுதிக்கான கேள்விகள் 12.4

1. நாடகத்தின் தொடக்க படிவங்களாக இருந்தவை யாவை?
2. பரதாவின் இரண்டு நாடகங்களின் பெயரைக் கூறு?
3. பரதாவின் கூற்றுப்படி சரியான தொடர்பு சாதனம் எது?

4. நாடகத்தை தொழிலாகக் கொண்டிருந்த இனம் எது?
5. குஷிலாவாக்கள் என்பவர் யார்?
6. இந்நாட்களில் எந்தெந்த வகையான நாடகங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன?
7. காளிதாசரின் ஏதேனும் இரண்டு நாடகங்களின் பெயரைக் கூறு?
8. பத்மாவதி என்னும் நாடகத்தை எழுதியவர் யார்?
9. ஜெய்ஷங்கர் பிரசாத்தின் 2 நாடகங்களின் பெயரைக் கூறு?

## 12.9 செயல்பாட்டுக்கலையின் தற்போதைய காட்சித் தொகுப்பு

தற்பொழுது, நாட்டில் நடனம், இசை, நாடகம் ஆகிய மூன்று கலைப் படிவங்கள் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றன. கந்தர்வா மஹா வித்யாலயா மற்றும் பிரயாகு சங்கீத சமிஜி ஆகிய பல்வேறு இசை நிறுவனங்கள் 50 ஆண்டுகளுக்கு மேலாக, இசை மற்றும் நாடகத்தில் பயிற்சி வழங்குகின்றன. இந்தியாவில் ஏராளமான பள்ளிகள் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் (இத்தகைய கலைப் படிவங்களை) ஒரு பகுதியாக சேர்த்துள்ளனர். கைரகாரைச் சார்ந்த 'இந்திர கலா சங்கீத விஷ்வ வித்யாலயா' ஒரு இசை பல்கலைக் கழகமாகும். கதக் கேந்திரா, தேசீய நாடகப்பள்ளி, பாரதிய கலாகேந்திரா மற்றும் பல நிறுவனங்கள் அவர்களுடைய வழிகளில் இசையை பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இசை மாநாடுகள், பைதக்ஸ், விரிவுரை, செயல் விளக்கம் ஆகியவற்றை நடத்தப்பட்டு மற்றும் பாடகர்கள், இசை அறிஞர்கள், இசை ஆசிரியர்கள் இசைத் திறனாய்வாளர்கள் இசை நடனத்தை பிரபலமாக்குவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். ஸ்பிக்- மகே, சங்கீத நாடக அகாடமிகள் போன்றவைகளும், இந்திய இசை, நடனம் பற்றிய நாடகத்தை தேசிய அளவில் மற்றும் பன்னாட்டு அளவில் பாதுகாக்க மேம்படுத்தவும் பிரபலமாக்கவும் கடுமையாக உழைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

பன்னாட்டு அளவில், பாடகர்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்துள்ளனர். பண்டிட் ரவிஷங்கர், உஸ்தத் அலி அக்பர் கான் மற்றும் உஸ்தத் அல்லா ராகாகான் ஆகியோரால் தொடங்கப்பட்ட பல்வேறு இசை நிறுவனங்கள் வெளி நாட்டவருக்கு இசையை கற்றுக் கொடுத்தன. பல வெளிநாட்டில் பல்கலைக் கழகங்கள், இந்திய செயல்பாட்டுக் கலைகளின் துறைகளைக் கொண்டுள்ளன, அவர்கள் பட்டங்கள், பட்டயச் சான்றிதழ்களை மாணவர் களுக்கு வழங்குகின்றனர். உலகமெங்கிலும் இந்திய கலைஞர்களை, நடத்துவதற்கும் பல்வேறு விழாக்களில் பங்கு பெறுவதற்கும் அழைக்கப்படுகிறார்கள். கலாச்சார உறவின் தேசீயக் குழு, மனித வள மேம்பாட்டு அமைச்சகம், மானியங்கள், உதவித்தொகை திட்ட ஆய்வுக்கான மானியம் ஆகியவற்றை கீர்த்தியான கலைஞர்கள் மற்றும் இளம் கலைஞர்களுக்கும் வழங்கி மற்றும் இந்திய இசை, நடனம் நாடகத்துறையில் பரிமாறக் கூடிய நிகழ்வுகளை ஏற்பாடு செய்து தொடர்ந்து இத்தகைய கலைப்படிவங்களைப் பிரச்சாரம் செய்கின்றன.

## 12.10 மனித ஆளுமையின் வளர்ச்சியும் கலைப்படிவங்களும்

இத்தகைய கலைகளுடன் மனிதனின் தொடர்பு அவர்களை நல்ல மனித இனமாக்கச் செய்கிறது. மற்றும் இசை, நடனம், நாடகம் இயற்கையாகவே அவர்களது ஆன்மாவை உயர்த்தச் செய்கிறது. இன்பகரமான சூழ்நிலையை உருவாக்குகிறது. இத்தகைய கலைப்படிவத்தை பற்றிய அறிவும், பயிற்சிகளும் ஒருவரது ஆளுமைப் பண்பை வளர்ப்பதில் உதவுகிறது. இத்தகைய கலை படிவங்களில் ஈடுபட்டவர்கள், தடுமாற்றமில்லாத மற்றும் மன அமைதி, சுய கட்டுப்பாடு, எல்லோரையும் நேசித்தல் ஆகியவற்றை பெற முடியும்.

அவர்களுடைய செய்கைகள், அவர்களை தன்னம்பிக்கை உடையவர்களாக, எல்லா சூழ்நிலைக்கு தக்கவாறு தங்களை மாற்றியமைத்துக் கொள்ளக்கூடிய மன நிலையை கொண்டவர்களாகச் செய்கிறது. இசை, நடனம் நாடகத்தின் ஆன்மா, எதிர்மறை உணர்வுகளை அழித்து, பிறர் மீது அன்பு, அக்கறை செலுத்த நமக்கு போதிக்கிறது.

## இப்பகுதிக்கான கேள்விகள் 12.5

கீழ்கண்ட வினாக்களுக்கு விடை தருக

1. மூன்று செயல்பாட்டு படிவங்களை பிரச்சாரம் செய்கின்ற இந்திய தேசிய அரசு அமைச்சகத்தின் பெயரைக் கூறுக?
2. செயல்பாட்டுக் கலையை வளர்ச்சியடையச் செய்வதில் இந்திய அரசு முகமையின் பெயரைக் கூறுக?
3. கீர்த்தியான கலைஞர்களை அரசு எவ்வாறு முன்னேற்றுகிறது?
4. செயல்பாட்டுக் கலைகள் எவ்வாறு நமக்கு உதவுகின்றன?

## நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- இசை, நடனம், நாடகம் என்ற 3 கலைப் படிவங்கள், இந்திய கலாச்சாரத்தில் உள்ளடங்கிய கூறுகளாக இருந்து கொண்டிருந்தது.
- நாட்டிய ஷாஸ்திரானின் எழுத்தளரான பரதாவிற்கு, நாடகத்துறையில் அவரது பங்களிப்பிற்காக நாம் மிகுந்த கடன்பட்டுள்ளோம்.
- நாட்டில் பல வருடங்களாக அரசியல் கலவரம் இருந்தும், இந்த கலை படிவங்களின் செல்வாக்கு குறையவில்லை.
- மக்கள் மற்றும் நிபுணர்கள் இருவரும் முனைப்பான முயற்சி, ஆர்வம், கலைப்படிவத்தின் பாரம்பரியத்தை திரும்பப் பெறுவதற்காக எடுத்தார்கள்.
- இந்தியாவில் செயல்பாட்டுக் கலைகள், மேற்கத்திய தாக்கத்தினால், குறிப்பிடத்தக்க அளவுக்கு செல்வாக்குற்றது.
- இப்பொழுதும் கூட, இக்கலைகளின் படிவங்களின் அந்தஸ்து, நாட்டிலும், வெளி நாட்டிலும் அதிகரித்துள்ளது.

## பயிற்சிக்கான கேள்விகள்

1. இந்தியாவில் எது செயல்பாட்டுக் கலையின் குறிக்கோளாகவும் நோக்கமாகவும் இருந்தது?
2. இந்தியாவில் செயல்பாட்டுக் கலையின் வளர்ச்சியினை அடையாளம் காண்க?
3. நவீன இந்திய இசையில் அறிமுகப்படுத்தப்பட்ட மாறுதல்களை விளக்குக?
4. நாட்டுப்புற பாடல்களின் முக்கியத்வம் என்ன?
5. பாரம்பரிய நடனத்தின் முக்கியத்துவம் என்ன? இந்தியாவில் சில பாரம்பரிய நடன படிவங்களின் பெயர்களைக் கூறுக?
6. ஆங்கிலேயரின் வருகையுடன், நாடகம் பெரிய அளவில் மாற்றத்திற்கு உள்ளானது - விவரி.

7. இந்தியாவில், செயல்பாட்டுக் கலையை வளர்ப்பதற்கு சிறந்த சாத்தியமுள்ளது - விவரி.

## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 12.1

1. நடனம், நாடகம், இசை
2. இதுவும் மக்கள் கூட்டத்திற்கு கல்வியறிவின் ஒரு மூலமாகும்.
3. பரதனின் நாட்டிய சாஸ்திரம் - இது கி.மு.2ஆம் நூற்றாண்டுக்கும், கி.பி.2ஆம் நூற்றாண்டுக்கு மிடையே தொகுக்கப்பட்ட சாத்தியமாயிருந்தது.
4. மட்டங்காசின் பிரிஹத்தேசி
5. பிரிஹத்தேசியின் புத்தகங்கள்
6. 264 ராகங்கள்
7. ராதா மற்றும் கிருஷ்ணனின் காதல்
8. சைவ நாயனார்கள் வைஷ்ணவ ஆழ்வார்கள்
9. இரண்டாம் இப்ராஹீம் அடில்ஷா
10. அவர்கள் புதிய ராகங்களை அறிமுகப்படுத்தினார்கள்.

### கேள்விகளுக்கான பதில்கள் 12.2

1. (அ) வட இந்தியாவின் இந்துஸ்தானிய பாரம்பரிய இசை
   (ஆ) தென்னிந்தியாவின் கர்நாடக இசை
2. துருபதி, தம்மர், தும்ரி, கயல் தாபா
3. அவைகள் குரு-ஹிக்ஷா பரம்பராவின் குறிப்பிட்ட இன்னிசை பாணியாகும்.
4. ஜெய்ப்பூர் கரணா, கிரானா காரனா, குவாலியர் காரணா
5. முக்கியமான தொகுப்பு
6. (அ) ஷியாம சாஸ்திரி (ஆ) தியாகராஜா
   (இ) முத்துசுவாமி (ஈ) புரந்தரதாசர்
7. புல்லாங்குழல், வீணை, நாதஸ்வரம், மிருதங்கம், கடம்.
8. (அ) கர்நாடக அலப்பனா, இந்துஸ்தானி இசையிலுள்ள அலப்புக்கு ஒத்தது.
   (ஆ) கர்நாட்டிக்கிலுள்ள தில்லானா, இந்துஸ்தானி இசையான தாரணாவுடன் ஒத்திருக்கிறது.
   (இ) இரண்டும் தலா அல்லது தானம் மீது அழுத்தத்தை கொடுக்கிறது.
9. (அ) மண்ட் - ராஜஸ்தான் (ஆ) பட்டியாலி - வங்காளம்
10. இத்தகைய எளிமையான பாடல்கள், வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வையும் குறிப்பதற்காக தொகுக்கப்பட்டது.

### கேள்விகளுக்கான பதில்கள் 12.3

1. பிரபஞ்சத்தின் சுழற்சியான படைத்தல், அழித்தல்
2. பாரம்பரிய படிவ நடனமும் நாட்டுப்புற நடனங்களும்
3. பிகு அஸ்ஸாம்
   கார்பா குஜராத்
   பாங்க்ரா மற்றும் கிதா பஞ்சாப்
   முங்கில் நடனம் மிசோரம்
   கோலி மஹாராஷ்டிரா(மீனவர்களின் நடனம்)

துமால் காஷ்மீர்

சௌ வங்காளம்

4. (அ) நிரிட்டா (பாட சஞ்ச்சலன்) (ஆ) நிரிட்யா (அங்கா சஞ்சலன்)
   (இ) நாட்யா (அபிநயா)
5. பண்டிட் பிர்ஜி மகாராஜ், பண்டிட் சம்பு மகாராஜ் சிதாராதேவி, பண்டிட் கோபி கிருஷ்ணா மற்றும் லச்சு மஹாராஜ்
6. (அ) கீதா சந்தரன் (ஆ) முனைவர் பத்மா சுப்ரமணியம்
   (இ) திருமதி சரோஜா வைத்ய நாதன்.

## கேள்விகளுக்கான பதில்கள் 12.4

1. குழந்தை நடித்து காட்டுகிறது, பிறரைப் போல நடித்து காட்டுகிறது, நையாண்டி செய்கிறது.
2. அசுரா பரஜயா, அம்ரித் மந்தீதன்
3. நாடகம்
4. ஷைலூாஷ்
5. தொழிற் பாடகர்கள், வீரகதைகளை நாடகமாகப் பாடுகிறார்கள்.
6. (அ) மேடை அரங்கம் (ஆ) வானொலி அரங்கம்
   (இ) நுக்கர் அல்லது வீதி நாடகங்கள் (ஈ) மோனோ நாடகம் (ஒரு மனித காட்சி)
   (உ) இன்னிசை அரங்கம் (ஊ) சிறு நாடகம்
   (எ) ஓரங்க நாடகம்
7. (அ) அபிஜ்னம் சகுந்தலம் (ஆ) விக்ரமோர் வசியம்
   (இ) மாளவிகாக்கினி மித்ரம்
8. மது சூதன்
9. அ) அஜாத சத்ரு (ஆ) சந்திர குப்தா
   (இ) பிரயாஷ்சிட் (ஈ) ராஜ்யஸ்ரீ
   (உ) கருணாலயா

## கேள்விகளுக்கான பதில்கள் 12.5

1. மனித வள மேம்பாட்டு அமைச்சகம்
2. இந்தியக் குழுவின் கலாச்சார உறவுகள்
3. மானியங்கள், உதவித் தொகைகள் மற்றும் திட்ட ஆய்வுக்கான மானியம் ஆகியவற்றை கொடுத்து, பரிமாறக் கூடிய நிகழ்வுகளை ஏற்பாடு செய்தும்.
4. செயல்பாட்டுக்கலை, நமக்கு சமநிலை மனது, சுயகட்டுப்பாடு எல்லோருக்கும் அன்பை கொடுக்கிறது. தன்னம்பிக்கையை வளர்க்கிறது. எல்லா சூழ்நிலைகளிலும் தங்களை மாற்றிக்கொள்ளும் திறமையையும் கொடுக்கிறது.

# 13

# இந்திய கட்டடக்கலை

குறைந்தது 4500 ஆண்டுகளாக நீடித்த நாகரிகம், சில சமயங்களில் நம்முடைய வாழ்விலும் சமுதாயத்திலும் இதனுடைய தாக்கத்தை விட்டுள்ளது என்பது மிக முக்கியமானதாகும். யுனேஸ்கோ, 830 உலக பாரம்பரிய இடங்களை பட்டியலிட்டது, அதில் 26 இந்தியாவில் உள்ளன என்பதை கற்பனை செய்து பாருங்கள். இது மற்ற ஆறு நாடுகளை விட குறைவானது. உருவாக்கப்பட்ட நுண்ணறிவு பண்டைய நிலத்தின் மீதான கடின உழைப்பு, மக்கள், இயற்கையால் அளிக்கப்பட்டுள்ள நன்கொடைகளை எளிதில் புரிந்து கொள்ள முடியாத சான்றுகளாக இல்லை. இது பிம்பெட்காவின் முந்தைய வரலாற்றுக் கற்பாறைகளை ஒரு மூலையிலும் அல்லது எண்ணற்ற அரண்மனைகள், மசூதிகள் கோவில்கள், குருதுவாராக்கள், ஆலயங்கள் அல்லது சமாதிகள், தூண்கள் மற்றொரு பக்கமும் உள்ளன.

டெல்லி, ஆக்ரா, ஜெய்ப்பூர், மும்பை, கல்கத்தா முதலிய நகரங்களின் வழியாகச் செல்லும் பொழுது நீங்கள் பல அழகான கட்டிடங்களைப் பார்க்கலாம். சில நினைவுச் சின்னங்கள், அரண்மனைகள், கோவில்கள், ஆலயங்கள், மசூதிகள், ஞாபகச் சின்னங்களாகும் அவற்றில் பல, கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே அஸ்திவாரத்தைக் கொண்டிருந்தது. பல கிறிஸ்துவின் வருகைக்கு அப்புறமாக இருந்தன. பல தலைமுறையினர், கம்பீரமான, மேன்மையான கட்டிடக்கலையின் ஒரு பகுதியாக இருந்துள்ளனர், இவை கடந்த காலத்தில் நமதாயிருந்தவைகள், நமக்கு கடந்த கால பெருமையை ஞாபகப்படுத்துகிறது. இது கலை, கட்டிடக்கலை, படிவங்கள் இந்திய பண்பாட்டில் ஒரு முக்கியமான பகுதியாக இருந்தது. இன்றைய நாளில், கட்டடக்கலையில் பல குறிப்பிடத்தக்க கலை மற்றும் கட்டிடக் கலை வளர்ச்சியை இந்திய வரலாற்றுக் காலம் முழுவதும் இன்று நாம் காண்கிறோம். முந்தைய குறிப்பிடத்தக்க இந்திய கட்டடக்கலையின் சான்றாக, நிகரற்ற நகர திட்டத்தைக் கொண்ட ஹாரப்பா நாகரிகமாகும். இந்த நாகரிகத்திற்கு முந்தின காலத்தில் கட்டடிக்கலைப் பாணிகள் இந்து, புத்த மற்றும் சமணமாக பிரிக்கப்பட்டிருந்தது. இடைக்காலம், பாரசீகத்துக்குரிய தாய் நாட்டிற்குரிய பாணிகளை கொண்ட கட்டிடக்கலையைக் கண்டது. அதற்கு பிறகு, காலனி ஆதிக்கம், மேற்கத்திய கட்டிடக்கலை பாணியின் செல்வாக்கை கொண்டு வந்தது. ஆகையால் இந்திய கட்டிடக்கலை, தாய் நாட்டுப்பணிகளின் தொகுப்பு வெளிப்புற செல்வாக்குகள் ஆகிய பண்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

## நோக்கங்கள்

நீங்கள் இந்தப் பாடத்தை படித்த பிறகு, உங்களால்

- முதன்மையான சிறப்பியல்புகள், இந்தியக் கட்டிடக்கலையின் வெவ்வேறு பணிகள் பலவகை காலங்களின் சிற்பங்களை அடையாளம் காண
- ஆண்டுக்கணக்கான இந்திய கட்டிடக் கலையின் பரிணாம வளர்ச்சியைத் தேடி
- இந்திய கடட்டக் கலையின் வளர்ச்சிக்கு புத்த சமயம், சமண சமயத்தின் பங்களிப்பை அங்கீகரிக்க
- இந்தியாவின் கோவில் கட்டிடக் கலையை வளமாக்குவதில் குப்தர்கள், பல்லவர்கள், சோழர்களின் பங்களிப்பை பாராட்டி
- இடைக்காலத்தில், வெவ்வேறு செல்வாக்குகள் கட்டிடக்கலை அடையாளங்களைக் குறிப்பிடுவதை அடையாளம் காண் மற்றும்
- காலனி ஆதிகத்தின் கீழ், முக்கியமான கட்டிடக்கலை தொடர்பான பாணியை குறிப்பிடமுடியும்.

## 13.1 இந்திய கட்டடக் கலையின் தோற்றமும் முன்னோக்கமும்

கட்டடக்கலை என்பது நவீன நிகழ்வு அல்ல, இது முந்தைய குகை மனிதன் தன்னுடைய குடியிருப்பை வாழ்வதற்காக கட்ட தொடங்கும் போதே தொடங்கியது. மனிதன், அடர்ந்த காடுகளைச் சூழ்ந்த இயற்கையான இருப்பிடத்திலிருந்து வெளியேறியவுடன், முதன் முதல் தன்னுடைய இருப்பிடத்தை உருவாக்கவும், சொந்த இடத்தை குறிக்கவும் ஆரம்பித்தான். கலைத்திறனோடு கூடிய வலிமையுடன், மனிதன், சிறந்த, பெரிய குடியிருப்பைத் தேடுவதில் விழிப்புணர்வுடனும் இவன் அழகுணர்வின் இயற்கூறுகளுடனும், கண்ணுக்கு மகிழ்ச்சியாக இருக்கிற குடியிருப்பை, கட்டத் தொடங்கினான். ஆகையால், தேவைகள், கற்பனை, கட்டுபவர்களின் வலிமை வேலையாட்களின் திறமை ஆகியவற்றை ஒன்றாகக் கொண்ட கடட்டக்கலை தோன்றியது.

கட்டடக்கலை சார்ந்த படிவங்கள் கட்டமைப்பின் முழு விபரம் கட்டடக்கலை, உள்ளூர், வட்டார பண்பாட்டு மரபுகள், சமூக தேவைகள், பொருளாதார வளர்ச்சி வெவ்வேறு காலத்திய சமயப் பழக்கங்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்தது. இதனால் கட்டிடக்கலை பற்றின படிப்பு, பண்பாட்டு வேற்றுமைகளை வெளிப்படுத்துகின்றன. இந்தியாவின் வளமான மரபினைப் புரிந்து கொள்ள உதவுகிறது.

இந்திய கட்டிடக்கலை, நாட்டின் வெவ்வேறு காலகட்டங்களில், வெவ்வேறு வட்டாரங்களில் பரிணமித்தது, இதைத்தவிர, வரலாற்றுக்கு முந்திய, வரலாற்று காலங்களில், இயற்கையான வெளிப்படையான பரிணாம வளர்ச்சி, பல சிறந்த, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முன்னேற்றங்களினால், இந்திய கட்டடக்கலையின் பரிணாம வளர்ச்சி பொதுவாக பாதிப்புக்குள்ளானது. இயற்கையாகவே, இந்த துணைக் கண்டத்தில் சிறந்த பேரரசுகள் வம்சங்கள் தோன்றுவதும், மறைவதும் ஒவ்வொரு வரும் அவர்களுடைய வழியில் இந்தியக்கட்டடக்கலையின் பரிணாம வளர்ச்சியை உருவகப்படுத்துவதில் தங்களுடைய செல்வாக்கை செலுத்தினார்கள். வெளியுலக செல்வாக்குகளும், இந்திய கட்டடக்கலையின் அம்சத்தை இதே போன்று நாட்டின் வெவ்வேறு வட்டாரங்களிலும் உருவகித்தது. நாம் இந்திய கட்டடக்கலையின் பரிணாம வளர்ச்சியின் செயல்முறைகளை நோக்கலாம்.

## 13.2 ஹாரப்பாவின் காலம்

சிந்து சமவெளி நாகரிகத்தின் பகுதிகளான ஹாரப்பாவில், மொகஞ்சதாரோவில், மேலும் பல இடங்களில் செய்த அகழ்வாய்வுகள், சிறந்த நகர திட்டம், பொறியியல் திறன்களுடன் மிகுந்த நவீன நகர நாகரிகத்தை வெளிப்படுத்துக்கிறது. ஆர்யர்களின் வருகைக்கு முன்பே, நல்ல திட்டமிடப்பட்ட சாலைகள், வீடுகளுடன் கூடிய வடிகால்வாய் முறைகள், நவநாகரிகமான பரிணாம வளர்ச்சியுற்ற பண்பாடு இந்தியாவில் இருந்தது. சிந்து சமவெளி நாகரிகத்தின் இடங்களை, ஆங்கிலேயர்களால் ஏற்படுத்தப்பட்ட இந்திய தொல்பொருள் ஆய்வினால் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

ஹாரப்பா மக்கள், முக்கியமாக 3 வகையான கட்டிடங்களை-குடியிருக்கும் வீடுகள், தூண்களைக் கொண்ட கூடங்கள், பொதுக்குளியலறைகள் முதலானவற்றைக் கட்டினார்கள்.

### ஹாரப்பாவின் எஞ்சியிருந்த பகுதிகளின் சிறப்புக்கூறுகள்

1. கி.மு 3000 ஆண்டுகளுக்கு முன்பே, குடியேற்றங்களைப் பற்றிய தடயங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.
2. சிந்து நதிக்கரையின் ஓரத்தில் சில முக்கியமான குடியேற்றங்கள், குறிப்பாக நீரைக் கொடுக்ககூடிய வளைவுகள், தயாரிப்புகள், வேறு பொருட்களுக்கு சுலபமான போக்குவரத்து வசதி, பாதுகாப்புக்காக இயற்கையாக அமைந்துள்ள தடுப்பு சுவர்கள் ஆகியவை அகழ்ந்தெடுக்கப்பட்டன.
3. எல்லா இடங்களும் சுற்று சுவரைக்கொண்ட நகரங்களாக இருந்தன, மக்களுக்கு அது பாதுகாப்பைக் கொடுத்தது.
4. தெருக்கள் ஒன்றையொன்று செங்கோணத்தில் சந்தித்தன.
5. சிந்து சமவெளி மக்கள் தரமான சுட்ட செங்கற்களை, கட்டடம் கட்டுவதற்காகப் பயன்படுத்தினர்.
6. பெரிய பரிமாணங்களைக் கொண்ட, பொதுக் கட்டடங்கள், நிர்வாக அல்லது வாணிக மையங்கள், தூண்களைக் கொண்ட முற்றம், மேற்கூறையில்லாத கட்டிடங் களைக் கொண்ட முற்றங்களே சான்றளிக்கின்றன. கோவில்களைப்பற்றிய சான்று எதுவும் இல்லை.
7. தானியங்களை சேமித்து வைப்பதற்காக தானியக் கிடங்குகளைக் கொண்ட பொது கட்டடங்கள் பயன்படுத்தப்பட்டன. ஒழுங்குமுறையில் தானியங்களை ஒன்று சேர்த்தல், பொது விநியோகமுறை ஆகியன நடைமுறையில் இருந்தன.
8. பெரிய கட்டடங்களுடன், சிறிய ஒரே அறையைக் கொண்ட கட்டடங்கள், வேலை செய்யும் தொழிலாளர்களுக்கான குடியிருப்பு பகுதிகள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன.
9. ஹாரப்பா மக்கள், சிறந்த பொறியாளர்கள் என்பதற்கு மொகஞ்சதாரோவில் கண்டு பிடிக்கப்பட்ட பொதுக்குளம் சான்றாக உள்ளது. பொதுக்குளியல் குளம் என்றழைக்கப் பட்டதை, இன்றுவரை பயன்பாட்டில் உள்ளது. நீர்கசிவோ அல்லது சிறு கீரலோ அந்த கட்டமைப்பில் இல்லை. பொது குளியல் இடம், சடங்குடன் கூடிய குளியல், இந்தப்பண்பாட்டின் தூய்மையைக் காட்டுகிறது, பெரும்பாலான வீடுகளில் தனிப்பட்ட கிணறுகளும் குளியல் அறைகளும் இருந்தது குறிப்பிடத் தக்க அம்சங்களாகும்.

10. கிழக்குப் பகுதியின் சில இடங்களில் முதன்மையான கோட்டைப் பகுதி (சிட்டாடல்) தானியக் களஞ்சியம் அடங்கிய பொதுக் கட்டடங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. இது ஒரு வகை அரசியல் அதிகாரங்கள் இந்த நகரங்களை ஆண்டதற்கான சாட்சிகளாய் ஒருவேளை இருக்கலாம்.
11. அரண்காப்பு மதில்களைக் கொண்டு, சுவர்களால் சுற்றியமைக்கப்பட்ட நகரங்களும், எதிரிகளின் தாக்குதலைப்பற்றிய பயம் இருந்திருக்கலாம் என சான்றளிக்கின்றன.
12. குஜராத்திலுள்ள, லோத்தால், எஞ்சியிருந்த கப்பல் பழுது பார்க்கக்கூடிய இடத்தை கொண்டிருந்தது, அக்காலத்தில் கடல்வழி வாணிகம் செழிந்திருந்தது என்பதை நிருபிக்கின்றது.

மற்றுமொரு குறிப்பிடத்தக்க அம்சம் நகரத்தின் குடியிருப்பு பகுதிகளில் காணப்படுகிற நன்கு திட்டமிட்ட கழிவு நீர் வெளியேற்றப்படும் முறையாகும். வீட்டிலிருந்து கழிவு நீர் சிறிய குழாய்கள், முக்கியமான வீதிகளின் இருபக்கமுள்ள பெரிய கழிவு நீர் குழாய்களுடன் இணைக்கப்பட்டன. கழிவு நீர்க்குழாய்கள் மூடப்பட்டிருந்தன, சுத்தம் செய்யும் நோக்கத்திற்காக, எளிதில் திறக்கக்கூடிய மூடிகள் வழங்கப்பட்டன. குடியிருக்கும் வீடுகளின் திட்டங்களும் கருத்தார்த்தம் கொண்டவைகளாக இருந்தன. படிகள் இரண்டு அடுக்கு மாடிகளைக் கொண்ட வீடுகள் இருந்தன என்பதை சான்றளிக்கின்றன. தூசுக்கள், வீட்டிற்குள் நுழைவதை தடுக்க பக்கவாட்டு சந்துகளில் கதவுகள் இருந்தன.

ஹாரப்பா கட்டடக்கலையின் மிகவும் முக்கியமான அம்சங்கள், அவர்களுடைய நேர்த்தியான நகர திட்டமைப்பு திறன்கள், நகரங்கள், வடிவ இயல் மாதிரி அல்லது குறுக்கு நெடுக்கமாக கட்டப்பட்டுள்ளன, சாலைகள் ஒன்றையொன்று செங்கோணத்தில் சந்திக்கின்றன, சிந்து சமவெளி குடியேற்றங்கள், ஆற்றின் கரையோரத்தில் அமைந்துள்ளதால், அடிக்கடி அவை வெள்ளப்பெருக்கினால் அழிந்து விடுகின்றன. இந்த பேரிடரிலும் சிந்து சமவெளி மக்கள், அதே இடத்தில் புதிய குடியிருப்புகளைக் கட்டினார்கள். இம்மாதிரியான ஒவ்வொரு அடுக்கடுக்காக குடியேற்றங்கள், கட்டடங்கள் அகழ்ந்தாய்வின் பொழுது காணப்பட்டன. சிந்து சமவெளி நாகரிகத்தின் இறுதியான அழிவு சுமாராக கி.மு 2ஆவது மில்லினியத்தில் நடந்தது இன்றைக்கு பெரும்புதிராக உள்ளது.

முழு கட்டமைப்பு மிக்க வலிமையுடையதாகச் செய்வதன் நோக்கத்திற்காக, பல அடர்த்தியான நன்கு சுட்ட செங்கற்களின் அடுக்குகளில் கனிக்கல் மென்காரையுடன் சேர்த்தனர். குறைந்த பட்சமாக 5000 ஆண்டுகளாக இந்த கட்டிடங்கள் சேதத்திற்குள் ளாயிருந்தும், அவை வெற்றிகரமாக நிலைத்து இருப்பதை அந்தக் கட்டிடத்தின் வலிமையிலிருந்து காணலாம்.

ஹாரப்பா மக்கள், சிற்பம் செதுக்குதல், கைவினைத் தொழில்களில் அறிவு, திறனைக் கொண்டிருந்தார்கள். உலகின் முதல் நடனமாடும் வெண்கல சிலை, மொஹஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்டடுள்ளது. செம்பழுப்பு நிறக்களிமண்ணால் செய்யப்பட்ட, யோகநிலையில் உள்ள ஒரு ஆணின் உருவமும் அகழ்தெடுக்கப்பட்டன. அழகான ஆபரணங்கள், களிமண்ணும், மணலும் சேர்ந்த மிருதுவான கலவையினால் ஆன படத்துடன் எழுத்துகளை கொண்ட முத்திரைகள் கூன் விழுந்த எருதுகள், பசுபதி, ஒற்றை கொம்பு விலங்கு ஆகியவையும் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

அடுத்து வந்த, வேதகால ஆரியர்கள், மரம் மூங்கில், கோரைப்புல் வகைகளினால் கட்டப்பட்ட வீடுகளில் வாழ்ந்தனர். ஆரியர்களின் பண்பாடு பெருமளவில் கிராமப்புறத்தைச் சார்ந்தது. உதாரணமாக ஆர்யர்கள், அரச அரண்மனையை கட்டுவதற்கு அழிந்து போகக்

கூடிய மரத்தைப் பயன்படுத்தினார்கள். இவைகள் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே அழிந்து விட்டது. வேத காலத்திய மிக முக்கியமான அம்சம், நெருப்பினாலான மேடையை உருவாக்குவதாகும். இவை வெகு சீக்கரம் மக்களின் சமூக, சமய வாழ்க்கையில் முக்கியமான ஒருங்கிணைந்த பகுதியாக ஆயின. பல இந்துக்கள் வீட்டிலும் திருமணங்களில் நெருப்பு மேடைகள் இன்றும் முக்கியமான பங்கை வகிக்கின்றது. விரைவிலேயே நெருப்பு மேடைகளுடன் கூடிய முற்றங்கள் மண்டபங்கள், நெருப்பை வழிபடுவதற்காக கட்டப்பட்டது கட்டிடக்கலையின் முக்கியமான அம்சமாகும். மேலும் குருகுலங்கள், துறவி மடங்களைப் பற்றிய குறிப்புக்களை காணலாம். துரதிஷ்டவசமாக, வேத காலத்திய கட்டமைப்பின் எஞ்சிய பகுதிகள் காணப்படவில்லை. அவர்களுடைய வீட்டைக் கட்டுவதற்காக மரத்துடன் செங்கல் கற்களை பயன்படுத்தினது, கட்டிடக்கலை வரலாற்றுக்கு அவர்களது பங்களிப்பாகும்.

கி.மு. 6ஆம் நூற்றாண்டில், இந்தியா தன்னுடைய வரலாற்றின் முக்கியமான கட்டத்திற்குள் நுழைந்தது. சமண மதம், புத்தமதம் என இரண்டு புதிய சமயங்கள் தோன்றின. வேதகால சமயம் கூட மாறுதலுக்கு உள்ளானது. அதே வேளையில் பெரிய அரசுகள் தோன்றின. இவை புதிய வகை கட்டடக்கலையை வழங்கின. அதாவது, மகதம் பேரரசாக விரிவானதிலிருந்து கட்டடக் கலையின் முன்னேற்றத்திற்கு மேலும் வளர்ச்சி பெற்றது.

புத்த சமயம், சமண சமயத்தின் தோன்றல்கள், முந்தைய கட்டிடக் கலையைச் சார்ந்த பாணியை முன்னேற்றுவதில் உதவியது. புத்தரின் எஞ்சியப் பகுதிகள் பாதுகாக்கப்பட்ட இடத்தில், புத்தரின் வாழ்க்கையில் முக்கியமான நிகழ்வுகள் நடந்த இடத்திலும், புத்த சமய தூண்கள் கட்டப்பட்டன. தூண்கள் சிறு தரமான சுட்ட செங்கற்களை கவனமாக சுற்றிலும் வைத்து, உயர்ந்த மண் மேட்டின் மீது கட்டப்பட்டது. ஒன்று அவரது பிறந்த இடமான லும்பினியிலும், இரண்டாவது கயாவில் இவர் “ஞானோதயம் பெற்ற போதி மரத்தின் அடியிலும், மூன்றாவது முதன் முதலில் பிரசங்கத்தை ஆற்றிய சாரநாத்திலும், நான்காவது தனது 80-ஆவது வயதில் ‘மஹா பரி நிவாரணாவை’ அடைந்த குசி நகரிலும்,’ தூண்கள் கட்டப்பட்டுள்ளன.

புத்தரைப் புதைத்த மண் மேடுகள், புத்தரின் வாழ்க்கையில் நடந்த முக்கிய நிகழ்வுகள், நடைபெற்ற இட்ங்கள் ஆகியவை முக்கியமான மைல்கல்லாக கருதப்படுகின்றன. இவை புத்த சமயத்தை சார்ந்த துறவிகள், பெண் துறவிகளின் சங்கமாக மாறியது. மடாலயங்கள் (விகாராங்கள்) போதிக்கும் மையங்கள், கற்றுக் கொடுத்தல் கற்றல் அந்த இடத்தில் உருவானது. மடத் துறவிகள், போதிப்பதற்காகவும், சாதாரண மனிதர்களுடன் உரையாடவும், மக்கள் ஒன்று கூடும் இடங்கள் (விகாரங்கள்) கட்டப்பட்டன.

இக்காலகட்டத்தில் சமயம் கட்டடக் கலையை ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது. புத்த சமயத்தவர் சமண சமயத்தவர்‚ தூண்கள், விகாராக்கள், சைத்யாக்களை கட்டத் தொடங்கும் பொழுது, குப்தரது ஆட்சியில் முதல் கோவில் கட்டும் பணி ஆரம்பமானது.

## இப்பகுதிக்கான கேள்விகள் 13.1

1. இந்திய பண்பாட்டின் பரிணாம வளர்ச்சி என்பதன் பொருள் என்ன?
2. ஹரப்பாக்கள் அவர்களது நாகரிகத்தை எவ்வாறு காப்பாற்றினார்கள்?
3. ஹரப்பாக்களின் பொறியியல் திறன்கள் எவ்வாறு சான்றளித்தன?
4. புத்தரின் எஞ்சிய பகுதிகள் எங்கு புதைக்கப்பட்டன?

5. புத்தரின் சிலைகள் எங்கு காணப்பட்டன?
6. இந்தியாவில் முதல் கோவில் எப்பொழுது கட்டப்பட்டது?
7. தூண்கள், விகாரங்கள், சைத்யாக்கள் என்பதன் பொருள் என்ன?
8. கப்பல் பழுதுபார்க்கும் இடம் எங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டது?

## 13.3 வரலாற்றுக்கு முந்தைய காலம்

இந்திய கட்டடக் கலையின் முக்கியமான கட்டம், மௌரிய காலத்துடன் தொடங்கியது. மௌரியர்களின் பொருள் வளம், புதிய சமயத்தின் உணர்வு, எல்லா துறைகளிலும் சாதனைகளை நடத்திச் சென்றது. மௌரிய அரசவையைப் பார்வையிட்ட செல்யூகஸ் நிகேடரின், கிரேக்க தூதுவரான மெகஸ்தனிஸ் சந்திரகுப்த மௌரியரின் அரண்மனையை உன்னதமான கட்டிடக்கலை சார்ந்த சாதனை என வர்ணித்துள்ளார், இது மரத்தால் செதுக்கப்பட்ட ஒரு பெரிய அரண்மனையாகும்.


சாஞ்சியில் உள்ள புத்த சமய சின்னம்

மௌரியர் காலத்தில் (கிமு 322-182 ) குறிப்பாக அசோகரின் கீழ், கட்டடக்கலை சிறந்த முன்னேற்றத்தைக் கண்டது. மௌரிய கலையும், கட்டடக்கலையும், பாரசீகர்கள் மற்றும் கிரேக்கர்களின் செல்வாக்கை சித்தரித்தன. அசோகரின் ஆட்சி காலத்தில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட தூண்கள் நிறுவப்பட்டு, அவற்றின் மேல் 'தம்மா'வின் கொள்கைகள் செதுக்கப்பட்டன. உச்சியில் விலங்கு உருவம் அலங்கரிக்க, நன்கு மெருகேற்றப்பட்ட தூண்கள் மிக நிகரற்றது குறிப்பிடத்தக்கது. சாரநாத்தின் கல்தூண்கள், இந்திய குடியரசின் சின்னமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு தூணும் 50 டன்கள் எடையும் 50 அடி உயரமும் கொண்டது ஆகும்.



சாஞ்சி, சாரநாத் ஸ்துாபிகள், மௌரிய கட்டிடக் கலையின் சாதனைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். ஜடகா கதைகளிலிருந்து அழகான சிற்பக் காட்சிகளை சாஞ்சி தூண்கள் நுழை வாயிலில் சித்தரிக்கின்ற மாதிரிக் கூறுகளால், கலைஞர்களின் திறனும் அழகுணர்வும் புலனாகும்.

கிரேக்க, இந்தியக்கலைகளின் இணைப்பு, காந்தாரக் கலையின் வளர்ச்சிக்கு வித்திட்டது. பின்பு இவை வளர்ச்சி அடைந்தன. மற்ற மரபுக்குழுக்களான கலையும் கட்டிடக்கலையும் இந்தியக் கலைக்குரிய மதுரா மற்றும் அமராவதி மரபுக் குழுக்களாகும். குறிப்பாக கி.பி முதலாம் நூற்றாண்டுக்குப் பிறகு, குஷாணர்களின் செல்வாக்கின் கீழ் ஏராளமான புத்த சிலைகள், இத்தகைய குழுக்களின் கைவினைஞர்களால் கட்டப்பட்டன. காந்தார மரபுக்குழு கலையின் கீழ் உண்மையான புத்தரை நேரில் காண்பது போன்று அமைக்கப்பட்ட புத்தர் மற்றும் போதி சத்வர்களின் சிலைகள் தோற்றத்தில் கிரேக்க கடவுள்களை ஒத்திருந்தாலும் கூட, கருத்துகள், உணர்வுகள், ஆய்வு மூலங்கள் ஆகியவை இந்தியர்களுடையதாக இருந்தது.





குறிப்புகள்

மனிதனுக்கு அழகை வழங்குவதற்காக, விலைமதிப்பற்ற ஆபரணங்கள், ஆடைத்தொகுதிகள் வழங்கப்பட்டன. சிற்பங்கள், கல், பழுப்புநிறகளிமண், சிமெண்ட் போன்ற பொருட்கள் களிமண்ணில் சிற்பங்கள் செதுக்கப்பட்டு இருந்தன.

மதுரா பிரிவினரின் உருவங்கள் புள்ளிகள் கொண்ட சிவப்பு கற்களால் ஆனவை. அவை ஆன்மிகத்தன்மை கொண்டவையாக இருந்தன. புத்தருடன், சமண தெய்வங்களின் சிற்பங்களையும் இங்கு நாம் காண்கிறோம்.



ஆந்திராவைச் சார்ந்த சாதவாகனர்கள் ஆதரவின் கீழ் அமராவதி மரபுக்குழு வளர்ச்சியடைந்தது. கீழ் கோதாவரி வட்டாரத்தில், அமராவதியில் ஒரு சிறந்த ஸ்தூபி கட்டப்பட்டது. ஸ்தூபிகளின் சுவர்கள், பதக்க உருவங்களுடன் கூடிய மரச்சட்டம், மேடான சித்திரங்களுடன் அலங்கரிக்கப்பட்டது. புத்த சமய கட்டிடக்கலைக்கு மற்றுமொரு புகழ் பெற்ற இடம் நாகார்ஜின கொண்டா ஆகும்.

குப்தர் காலம், உயர்ந்து நிற்கின்ற கோவில்களின் கட்டமைப்பு தொடங்கினதைக் குறிக்கின்றது. கோவிலில் வழிபாட்டுப்பேழை அல்லது கருவறையில் தெய்வத்தின் உருவம் வைக்கப்பட்டுள்ள தியோகாரில் உள்ள (ஜான்சி மாவட்டம்) கோயில் உதாரணமாகும். பித்ரிகானிலுள்ள(கான்பூர் மாவட்டம்) மற்றுமொரு கோவில் இக்காலத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## குகை கட்டடக்கலை

இந்திய கட்டடக் கலையில் குகை கட்டடக்கலையின் வளர்ச்சி, இந்திய கட்டடக் கலையின் வரலாற்றில் மற்றுமொரு தன்னிகரற்ற முக்கியமான கட்டத்தைக் குறிப்பதாகும். கி.பி 2ஆம் நூற்றாண்டு கி.பி.10 நூற்றாண்டுக்கும் இடையே, ஆயிரத்திற்கும் மேற்பட்ட குகைகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன, அவற்றினிடையே மஹாராஷ்டிராவைச் சார்ந்த அஜந்தா, எல்லோரா குகைகள் ஒரிசாவைச் சார்ந்த உதயகிரி குகைகள், புத்த விகாராங்கள் சைத்தியாக்களுடன் மண்டபங்கள், இந்து கடவுளர், பெண் தெய்வங்களைக் கொண்ட கோவில்களைக் கொண்டுள்ளது.



மகாபலிபுரத்திலுள்ள நினைவு சின்னம்

## குடைவரை கோவில்கள்

கோவில்கள், பெரும்பாறைகளினால் கட்டப்பட்டன, முந்தைய கிறிஸ்தவ சகாப்தத்தில் மேற்கு தக்காணத்தில் முந்தைய கல்வெட்டுக் கோவில்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. உயர்ந்த முற்றங்கள் அலங்கரிக்கப்பட்ட சுவர்களுடன், கார்லேயிலுள்ள சைத்யா, கல்வெட்டுக் கட்டிடக்கலைக்கு குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டாகும். எல்லோராவில் இராட்டிர கூடர்களால் கட்டப்பட்ட கைலாசநாத கோவில், பல்லவர்களால் மஹாபலிபுரத்தில் கட்டப்பட்ட ரத கோவில்கள், குடைவரை கோவில்களுக்கு எடுத்துக் காட்டுகளாகும்.

அழகான சிற்பங்களுடன் அலங்கரித்த கலை கட்டுமானப்பணி ஆதரவாளர்களை இத்தகைய கோவில்களின் உறுதியான, நிரந்தரமான பாறைகள் பெரும்பாலும் ஈர்த்தன.



குறிப்புகள்

## தன்னிகரற்ற கோவில்கள்



குப்தர் காலத்தில் கோவில் கட்டும் பணிகள் தொடங்கின, பிற்காலத்திலும் வளர்ச்சியுற தொடர்ந்தன. தென்னிந்தியாவில், பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், ஹொய்சலாக்கள் பிந்தைய விஜய நகர ஆட்சியாளர்கள் கோவில்கள் கட்டுவதில் சிறந்தவர்களாவர், பல்லவ ஆட்சியாளர்கள், மகாலிபுரத்தில் கடற்கரை கோவிலைக் கட்டினர். பல்லவர்கள், காஞ்சிபுரத்தில் கைசாலநாத கோவில் வைகுந்தப்பெருமாள் கோவில், போன்ற கட்டமைப்புக் கோவில்களைக் கட்டினர். தஞ்சாவூரில் சோழர்கள் கட்டிய கோவில்களில் பிரகதீஸ்வரர் கோவில் மிகவும் புகழ் பெற்றதாக உள்ளது. சோழர்கள், தென்னினந்தியாவின் திராவிட பாணி என்று அழைக்கப்பட்ட விமானங்கள் ஷிக்காரா உயர்ந்த சுவர்கள் உயர்ந்த கோபுரத்தைக் கொண்ட நுழைவாயிலுடன் முடிவடைகின்ற இயல்பான பாணியை கோவில் கட்டடக்கலையால் வளர்ச்சியுறச் செய்தனர். கல்செதுக்குதலில் உச்ச நிலையை அடைந்த மேலூரிலுள்ள ஹலிபிட்டில் உன்னதமான கோவில்கள் கட்டப்பட்டன.

வடக்கு இந்தியாவிலும் கிழக்கு இந்தியாவிலும் உன்னதமான கோவில்களும் கட்டப்பட்டன. அவர்களால் நகரா பாணி பின்பற்றப்பட்டது என குறிப்பிடப்படுகிறது. அவற்றுள் பெரும்பாலானவை, ஷிகாராக்கள் (சுருள் கூரைகள்) கருவறை (புனிதமான இடம்) மண்டபம் (தூண்களைக் கொண்ட முற்றம்) முதலியவற்றைக் கொண்டது.

ஒரிஸ்ஸாவில் கங்கா ஆட்சியாளர்களால் கட்டப்பட்ட லிங்கராஜா கோவில், புவனேசுவரில் உள்ள முத்தேஸ்வரா கோவில் பூரியிலுள்ள ஜகநாத கோவில் போன்ற அழகான கலையம்சம் கொண்ட கோவில்களாகும்.



13-ஆம் நூற்றாண்டில், கிழக்கு கங்காவின் ஆட்சியாளரான நரசிம்ம தேவாவினால் கோனார்க்கில் சூரிய கோவில் கட்டப்பட்டது. இந்த கோவில் சூரியனுக்கு (சூரிய கடவுள்) அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இதை 12 சக்கரங்களைக் கொண்ட ரதம் போன்று வடிவமைக்கப் பட்டுள்ளது.

10-ஆம் மற்றும் 11ஆம் நூற்றாண்டின் இடையே மத்திய பிரதேசத்திலுள்ள, பன்டேல் கண்டு வட்டாரத்தில், சண்டேலா ஆட்சியாளர்களால் பல பாகங்களைக் கொண்ட கோவில் கஜீரஹோவில் கட்டப்பட்டது. அவற்றில் மிக முக்கியமானது கண்டாரியா மகாதேவ் கோவிலாகும்.

ராஜஸ்தானிலுள்ள மவுண்ட் அபுவின் தில்வாரா கோவில் ஜெயின் தீர்த்தங்கரர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டதாகும். இவை, சுத்தமான வெள்ளை சலவைக் கற்களால் கட்டப்பட்டவை. பேரழகு வாய்ந்த சிறபங்களுடன் அலங்கரிக்கப்பட்டிவ. இவை, சோலாங்கி ஆட்சியாளர்களின் ஆதரவினால் கட்டப்பட்டன.

பிற முக்கிய கோவில்களான குஜராத்திலுள்ள சோமநாத கோவில், பனாரசிலுள்ள விஸ்வநாதகோவில், மதுராவிலுள்ள கோவிந்தாகோவில், குவஹத்தியிலுள்ள கமக்யா கோவில், காஷ்மீரிலுள்ள சங்கராச்சாரியா கோவில் கொல்கத்தாவில் காலிகட்டிலுள்ள காளி கோவில் ஆகியவை இந்திய துணை கண்டத்தின் கோவில் கட்டும் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

## இப்பகுதிக்கான கேள்விகள் 13.2

1. சந்திரகுப்தரின் அரண்மனையை, மெகஸ்தனிஸ் எவ்வாறு வர்ணித்தார்?
2. மௌரிய சிற்பக் கலையின் சாதனையைக் காட்டுகிற இரண்டு தூண்களின் பெயரைக் கூறுக?
3. அசோகரின் ஆட்சி காலத்தில் தம்மாவின் போதனைகள் எங்கு பொறிக்கப்பட்டிருந்தன?
4. முந்தைய வரலாற்று காலத்தில் கட்டடக்கலை மரபுக் குழுவின் பெயர்கள் சிலவற்றைக் கூறுக?
5. உதயகிரி குகைகள் எங்குள்ளன?
6. எல்லோராவின் கைலாச நாதர் கோவிலைக் கட்டியவர் யார்?
7. மாமல்லபுரத்தில் ரதக் கோவில்களைக் கட்டியவர் யார்?
8. திராவிடபாணி கட்டடக்கலை என்றால் என்ன?
9. தஞ்சாவூரில், சோழ மன்னரால் கட்டப்பட்ட கோவிலின் பெயரைக் கூறுக?
10. 'நாகராபாணி' கட்டடக்கலையை வரையறு?
11. கோனார்க்கில் சூரிய கோவிலை கட்டியவர் யார்?
12. ராஜஸ்தானிலுள்ள மவுண்ட் அபுவில் உள்ள புகழ் பெற்ற கோவிலின் பெயரைக் கூறுக?

## 13.4 மத்திய கால கட்டடக் கலை

### டெல்லி சுல்தானியர்



13-ஆம் நூற்றாண்டில், துருக்கியர்களின் வருகை, கட்டடக் கலையின் புதிய உத்திகளான. பாரசீக அரேபியா, மத்திய ஆசிய கட்டடக்கலைப் பாணிகளைக் கொண்டு வந்தது. மாட விதானங்கள், வில் வளைவுகள், தூண்கள் இத்தகைய கட்டடங்களின் பொறியியல் அம்சங்களாகும். இத்தகைய அம்சங்களுடன் மண்ணின் தோன்றலான கட்டடக் கலையின் அம்சங்களும் ஒன்றினைந்து ஆட்சியாளர்களால் கட்டப்பட்ட அரண்மனைகள், மசூதிகள், சமாதிகள் கட்டடக்கலையின் புதிய பரிணாமத்தைப் பெற்றன. ஏற்கனவே கட்டடங்களைக் கட்டிய மிகவும் திறமையான இந்திய உள்ளூர் கைவினைஞர்களின் உழைப்பை டெல்லி துருக்கிய ஆட்சியாளர்கள் பயன்படுத்தி கொண்டதால் இது நேர்ந்தது. இந்தக் கட்டடங்களில் இஸ்லாமிய கட்டமைப்பின் எளிமையான, முழுமையான சிற்பங்கள், வடிவமைப்புகள், அவர்களின் சொந்த மண்ணின் தோன்றலான கட்டமைப்புகளுடன் இருப்பதை நாம் காணலாம். இக்காலத்தில், டெல்லி சுல்தானியர் கட்டடக் கலையில் அவர்களுடைய எல்லா வடிவமைப்பிலும் மத்திய வழியை பின்பற்றினர்.

இக்காலத்திய முந்தைய கட்டடங்கள், டெல்லியிலுள்ள குவாத்துல் இஸ்லாம் மசூதி, குதுப்மினார் ஆகியவையாகும், பிந்தினது 70 மீட்டர் உயரம் கொண்ட கோபுரமாகும். இது 5 அடுக்குகளைக் கொண்ட சாய்ந்த கோபுரமாகும். அழகாக செதுக்கப்பட்டிருக்கின்ற எழுத்துக்கள் மசூதியிலும் மற்றும் கோபுரத்தின் மேலும் உள்ளன. பிறகு மற்ற கட்டடங்கள் சுல்தான்களினால் கட்டப்பட்டன. அலாவுதின் கில்ஜி, குவட், உல்-இஸ்லாம் மசூதியை விரிவு படுத்தினார், மசூதியை அடைக்கும் ஒரு நுழைவாயிலைக் கட்டினார். 'அலகி தர்வாஜ்' என


குறிப்புகள்

அழைக்கப்படுகிற இந்த நுழைவாயில், இன்னும் கூட மிகுந்த அழகான கட்டடக்கலை சார்ந்த வடிவமைப்புடன் உள்ளது. இதனுடைய அழகை முதன்மையாக்குவதற்கு அலங்கரிப்பு மூலப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. இவர், நீர்ம விசை கட்டமைப்பு கொண்ட 'ஹௌஜ்காஸ்'ஐ டெல்லியில் கட்டினார். முகமது துக்ளக், பெரோஸா துக்ளக் சமாதியும் துக்ளக்காபாத் துறைமுகமும் ஆகியவை சில உதாரணங்களாகும். அவர்களுடைய கட்டிடங்கள் அழகாக இல்லாவிட்டாலும், மிகப் பெரியதாகவும் பாராட்டுக்குரியதாகவும் இருந்தது. ஆப்கானிய ஆட்சியின் பொழுது, டெல்லியில் இப்ராஹிம் லோடியின் சமாதி, சசாரமில் ஷெர்ஷாவின் மசூதியும் கட்டப்பட்டன. இக்காலத்திய கட்டிடக்கலை எவ்வாறு தாய் நாட்டிற்குரிய கலைகள் கட்டிடம் கட்டுபவர்களால் தழுவப்பட்டு பயன்படுத்தப்பட்டன என்பதைக் காட்டுகின்றன. இந்தக் காலங்களில் துருக்கியர்கள் இந்தியாவில் குடியேறும் செயல்களில் ஈடுபட்டிருந்தனர். ஆட்சியாளர்கள் வடக்கிலிருந்து தீடீர் படையெடுப்புகளுடன் மங்கோலியர்களால் அச்சுறுத்தப்பட்டனர். இதனால் தான் இக்காலத்திய கட்டிடங்கள் வலிமையான எளிதில் இடிந்து விழாதபடி பயனுடையதாக உள்ளது.

## வட்டார அரசுகள்

வட்டார அரசுகளான வங்காளம், குஜராத், தக்காணம் ஆகியவற்றை தோற்றுவித்ததுடன், அவர்கள் பாணியில் அழகான கடட்டங்களும் கட்டப்பட்டன. ஜீம்மா மஸ்ஜித், சயத் மசூதி, அகமதாபாத்திலுள்ள அசையும் கோபுரங்கள் ஆகியவை இந்த கட்டடக்கலையின் சில எடுத்துக் காட்டுகளாகும். மாண்டுவில் (மத்திய இந்தியா) ஜீம்மா மஸ்ஜித், ஹின் போலா மஹால் ஜஹஜ் மகால் ஆகியவை கட்டப்பட்டன. தக்காணத்தில், சுல்தான்கள் செங்குத்தாக கட்டடங்களைக் கட்டினார்கள். குல்பர்காவிலுள்ள ஜீம்மா மஸ்ஜித், பீடாரிலுள்ள முகமது கவனின் மதராஸா, பிஜப்பூரிலுள்ள இப்ராஹிம் ரௌஸா, கோல் கொம்பாஸ் கோட்டை, கோல்கொண்டா கோட்டை ஆகியவை இப்போதைய புகழ்பெற்ற கட்டடங்களாகும். உலகிலேயே கோல் கொம்பாஸ் மிகப்பெரிய மாட விதானத்தைக் கொண்டுள்ளது. இத்தகைய எல்லா கட்டடங்களும், வட இந்தியாவின் கட்டடங்களிலிருந்து வடிவமைப்பிலும், பாணியிலும் வேறுபடுகின்றன. வங்காளத்தில் வட்டார கட்டடக்கலையின் சில குறிப்பிடத்தக்க அம்சங்களான பல நீண்ட சதுர கட்டமைப்புகள் வினோதமான பாணியில் கட்டப்பட்ட கூரைகளைப்போல அடினா மசூதி, பாண்டுவாவில் உள்ள ஜலாலுதின் மசூதி, கில்தர்வாசா கௌரில் உள்ள தந்திப்பாரா மசூதிகள் இருந்தன. ஜான்பூரில், ஷார்சி ஆட்சியாளர்களால் கட்டப்பட்ட அடாலா 'மசூதி' மிகப் பேருருவான மறைப்புத்திரை மாடவிதானின் மேற்பரப்பை மறைத்துக் கொண்டிருந்தபொழுது, மாள்வாவிலுள்ள ஹொஷங் ஷாவின் மசூதி முழுவதும் சலவைக்கற்களாலும் மசூதியின் உட்புறம் மஞ்சள் மற்றும் கருப்புநிற சலவைக்கற்களைக் கொண்டும் கைவினைஞர்களால் அழகுபடுத்தப்பட்டது. இக்காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட விஜய நகர அரசின் ஆட்சியாளர்களும் பல அழகான கட்டடங்களையும் கோவில்களையும் கட்டிய சாதனைகள் அவர்களையே சாரும். சீர்குலைந்த பகுதிகள் எஞ்சியிருந்தாலும் ஹம்பியிலுள்ள வித்தல சாமி கோவில், ஹசாரா கோவில்கள் மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

## பாமினி

பாமினி சுல்தான்கள், பெர்சியா, சிரியா, துருக்கி தென்னிந்திய கோவில் பாணிகளிலிருந்து பெற்றுக்கொண்டனர். குல்பர்காவிலுள்ள ஜீம்மா மஸ்ஜித் மிகவும் பிரபலமானது. இந்த மசூதியின் முற்றம் ஏராளமான மாடவிதானங்களால் சூழப்பட்டுள்ளது, இந்தியாவிலேயே இது ஒன்று தான் மூடின முற்றத்தைக் கொண்டது.

## முகலாயர்கள்



முகலாயர்களின் வருகை, கட்டடக்கலையில் ஒரு புதிய சகாப்தத்தைக் கொண்டு வந்தது. முந்தைய நாளில் தொடங்கிய பாணியின் கூட்டிணைவு இக்காலத்தில் உச்சநிலையை அடைந்தது. முகலாய கட்டடக்கலைப்பாணி, அக்பரது ஆட்சியில் தொடங்கியது இந்த ஆட்சியின் முதல் கட்டுமானம், டெல்லியிலுள்ள ஹீமாயுனின் சமாதியாகும். இந்த நேர்த்தியான கட்டுமானத்தில் சிவப்பு கற்கள் பயன்படுத்தப்பட்டன. இது முக்கிய நுழைவாயிலை கொண்டிருந்தது. தோட்டத்தின் இடைப்பட்ட பகுதியில் சமாதி அமைக்கப்பட்டுள்ளது. பலர் இந்த தாஜ்மகாலின் முன்னோடி என கருதுகின்றனர். அக்பர், ஆக்ரா, பதேபூர்சிக்ரி ஆகிய இடங்களில் கோட்டைகளைக் கட்டினார். புலந்தர்வாசா, சிறப்பான முகலாயப் பேரரசின் கம்பீரத்தை பிரதிபலிக்கிறது. இந்த கட்டடம், அக்பர் குஜராத்தின் மீது கொண்ட வெற்றியைத் தொடர்ந்து கட்டப்பட்டது. புலந்தர்வாசாவின் வளைவு 41 மீட்டர் உயரம் கொண்டது, உலகிலேயே பாராட்டத்தக்க நுழைவாயிலாகவும் உள்ளது. சலீம் சிஷ்டியின் சமாதி ஜோதாபாயின் அரண்மனை, இபதத்கானா, பீர் பாலின் வீடு, பதேபூர் சிக்ரியிலுள்ள பிற கட்டடங்கள், பாரசீக இந்திய மூலக் கூறுகளின் கூட்டிணைவை பிரதிபலிக்கின்றன. ஜகாங்கீரின் ஆட்சிக் காலத்தில் ஆக்ராவிற்கு அருகிலுள்ள சிக்கன்தராவில், கம்பீரமான கல்லரை மாடம் கட்டப்பட்டது. இவர் இடிமத்-உத்தௌலாவின் சமாதி, முழுவதையும் சலவைக்கற்களினால் கட்டினார். முகலாயர்களிடையே, ஷாஜகான் ஒரு சிறந்த கட்டட பிரியராவார். இவர் சலவைக்கற்களை அதிகளவில் பயன்படுத்தினார். உள் அலங்கரிப்பு வேலைப்பாடுகள் (பியடராடியுரோ என அழைக்கப்பட்டது) அழகான வளைவுகள் ஸ்தூபிகள் இவருடைய கட்டிடங்களின் அம்சங்களாகும். டெல்லி செங்கோட்டை மற்றும் ஜீம்மா மஸ்ஜித் எல்லாவற்றிற்கும் மேலாக தாஜ்மஹால் ஆகிய கட்டிடங்கள் ஷாஜஹானால் கட்டப்பட்டவையாகும். ஷாஜஹானின் மனைவியின் சமாதியான ‘தாஜ்மஹால்’ சலவைக்கற்களால் கட்டப்பட்டது. மற்றும் முகலாயர் காலத்தில் வளர்ச்சியடைந்த கட்டிடக்கலை சார்ந்த அம்சங்களை பிரதிபலிக்கிறது. இது, மத்திய மாடவிதானம், நான்கு எழில்மிகு தூண்கள், நுழைவாயில் உள் அலங்கரிப்பு வேலை, முதன்மையான கட்டிடத்தை சுற்றி தோட்டங்களைக் கொண்டிருக்கிறது. பிந்தைய காலங்களில், முகலாய கட்டடக் கலைப்பாணி, கட்டடங்களின் மீது வலிமையான செல்வாக்கை கொண்டிருந்தன. கட்டடங்களின் முற்றங்கள், தூண்கள், பண்டைய இந்திய பாணியின் வலிமையான செல்வாக்கை காட்டின கட்டடக் கலையில் முதன் முதலாக, யானைகள், சிங்கங்கள், மயில்கள் பிற பறவைகள் உயிருடன் இருப்பது போன்ற பாணியில் ஆதாரவளையங்களில் செதுக்கப்பட்டன.

அடுத்து வந்த ஆங்கிலேயர், 200 ஆண்டுகளாக ஆட்சி செய்தனர் அவர்களுடைய கட்டடங்களில் ஆதிக்க பாணி கட்டடக் கலையை விருப்புரிமைக் கொடையாக விட்டு சென்றுள்ளனர்.

## பதேபூர் சிக்ரியில் அக்பரால் கட்டப்பட்ட நினைவுச் சின்னங்கள்

முகலாய கட்டடக்கலை, அக்பருடைய ஆட்சி காலத்தில் தொடங்கியது. இவர் பல முக்கிய கட்டடங்களை செங்குத்தாகக் கட்டினார். அக்பரின் ஆட்சி காலத்தில் முதன்மைச் சிறப்புடைய சாதனை ஆக்ராவிலிருந்து 40 கி.மிட்டர் தொலைவில் புதிய தலை நகர் நகரமான பதேபூர் சிக்ரியை கட்டினதாகும், பதேபூர் சிக்ரி பொலிவான கற்களால் ஆனது. புலந்தர்வாஜாலின்

வில்வளைவு, உலகிலே மிகவும் பாராட்டத்தக்க நுழைவு வாயிலாகும். சலீம் சிஷ்டி புனிதரின் சமாதி அதனுடைய அழகில் மிகு நேர்த்தியானதவையாகும் ஜோதாபாயின் அரண்மனை பண்டைய இந்திய கட்டிடக் கலையின் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். பாரசீகப்பாணி செல்வாக்குடன் ஜீம்மா மஸ்ஜித் கட்டப்பட்டது. திவரி-ஆம், திவானி-காஸ் அவர்களுடைய திட்டமிடுதலிலும் அலங்கரித்தலிலும் புகழ் பெற்றது. இபடட்கானாவும் பஞ்ச மஹாலிலும் மற்றுமொரு குறிப்பிடத்தக்க கட்டடங்களாகும். பஞ்ச மஹால், 5 அடுக்குகளைக் கொண்ட கூம்பு வடிவ கோபுரமாகும். இது புத்தவிகாராவின் மாதிரியாக கட்டப்பட்டுள்ளது.

1526லிருந்த, சமாதி கட்டுமானத்திற்கு, முகலாய கட்டடக்கலை, பல்வேறு பரிமாணங்களை முழுமையாகக் கொடுத்தது. இவை உயர்ந்த மேடையில் கட்டப்பட்டன அலங்கார நீருற்றுகளைக் கொண்ட தோட்ட'களினால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளன. பதேபூர் சிக்ரியிலுள்ள மசூதி, புகழ்பெற்ற எடுத்துக்காட்டாகும். அரச சமாதிகளுடன் 290,470 அடி அளவு கொண்ட மூன்று மாட விதானங்களாகும்.

அக்பரின் மற்றுமொரு சிறந்த சமாதி, சிக்கந்தராவில் (கி.பி 1593-1613) உள்ளது. ஷாஜகானால் கட்டப்பட்ட அதிசயங்களில் ஒன்று என கருதப்படுகிறது. இது 18 அடி உயரம் 313 அடி சதுரத்தில் அமைந்த மேடையின் மீது சலவைக் கற்களால் கட்டப்பட்ட அரச சமாதியாகும். ஒவ்வொரு மூலையும் 133 அடி உயரம் கொண்ட தூண்களால் அடையாளமிடப்பட்டுள்ளது. மத்தியிலுள்ள மாடவிதானம், 80 அடி உயரம், 58 அடி சுற்றளவில் இருந்தது, சலவைக்கல், விலை மதிக்கக் கூடிய கற்களான ஜேஸ்ப்பருடனும் சிவப்புக் கல்லுடனும் பரப்பப்பட்டிருந்தது. இது ஜமுனா நதியின் கரையில் மத்தியில் சலவைக் கல்லாலான மேல் தளங்கள், நீருற்றுகள், பக்கவாட்டில் சைப்ரஸ் மரங்களால் சூழப்பட்டிருந்தது. முகலாயப் பேரரசின் அரசியல் வீழ்ச்சியுடன் முகலாய கட்டடக்கலை வீழ்ச்சியடைந்தது.

சமாதிகளையும் பிற கட்டிடங்களையும் சுற்றி, அழகான தோட்டங்கள் வளர்ச்சியுற்றன. முகலாயர் காலத்தில் தன்னிகரற்ற கட்டிடக்கலை சார்ந்த வளர்ச்சியாகும். லாகூர் காஷ்மீரில் காஷ்மீர் தோட்டங்கள், ஜகாங்கீர், ஷாஜகான் ஆகியோரால் முறையே வளர்ச்சி அடையப்பட்டது முகலாயர்கள், இந்தியாவில் பண்பாடு, கட்டிடக்கலை சார்ந்தவையை ஊக்கப்படுத்தினார்கள்.

### இப்பகுதிக்கான கேள்விகள் 13.3

1. துருக்கியர்களின் கட்டடக்கலை பாணி எது?
2. சுல்தானியர் காலத்தில் கட்டப்பட்ட சமாதிகள், மசூதிகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக?
3. உலகிலேயே மிகப் பெரிய மாட விதானம் எது?
4. உள் அலங்கரிப்பு வேலைப்பாடு என்பது என்ன?
5. எந்தக்கட்டிடம் முகலாயப் பேரரசின் கம்பீரத்தை பிரதிபலிக்கின்றது?

## 13.5 காலனி ஆட்சியின் கட்டடக்கலையும் நவீன காலமும்

காலனி ஆதிக்கத்தை அலுவல கட்டிடங்களில் காண முடியும். கி.பி 16-ஆம் நூற்றாண்டில் வரத்தொடங்கிய ஐரோப்பியர்கள் பல தேவாலயங்களையும் பிற கட்டிடங்களையும் கட்டினார்கள். போர்ச்சுக்கீசியர்கள், கோவாவில் பல தேவாலயங்களைக் கட்டினார்கள். இவற்றில் பசிலிக்கா பாம் ஜீசஸ், புனித பிரான்சிஸ் தேவாலயம் ஆகியவை மிகுந்த

புகழ்பெற்றவையாகும். ஆங்கிலேயர்களும், நிர்வாக கட்டடங்களையும், குடியிருப்பு கட்டிடங்களையும் கட்டினார்கள். இவை அவர்களுடைய ஏகாதிபத்திய பெருமையயை பிரதிபலிக்கின்றன. சில கிரேக்க, ரோமர்களின் செல்வாக்கை, கல்தூண்களின் வரிசை அல்லது தூண்களைக் கொண்ட கட்டடத்தில் கூர்ந்து கவனிக்க முடியும். டெல்லியில் நாடாளு மன்றம் கன்னாட் இடம் ஆகியவை நல்ல உதாரணங்களாகும். சிற்பிலுட்யன்ஸ், முன்னர் வைசிராயின் குடியிருப்பாக இருந்த ராஷ்டிரபதிபவனை வடிவமைத்தார். இது மணற்கல்லால் கட்டப்பட்டது் ராஜஸ்தானிலிருந்து விதானங்கள் மற்றும் ஜல்லி வடிவமைப்புகளைக் கொண்டுள்ளது. ஆங்கிலேய இந்தியாவின் முன்னாள் தலைநகரான கல்கத்தாவிலுள்ள, விக்டோரியா மெமோரியல் சலவைக்ககல்லால் ஆன மிகப் பெரிய மாளிகையாகும். இப்பொழுது ஏகாதிபத்திய கலைப் பொருட்கள் முழுவதிற்கும், அருங்காட்சியக வீடாக உள்ளது. கல்கத்தாவில் ஆங்கிலேயர் காலத்தில், அரசு அலுவலர்கள் தலைமுறையாக வேலை செய்த எழுத்தாளர்களின் கட்டடம் சுதந்திரம் அடைந்த பின்னும், இன்று வரை வங்காளத்தின் நிர்வாக மையமாக உள்ளது. சில ஜெர்மானிய கோதிக் இனத்தவரின் கலைக்கூறுகளை கல்கத்தாவிலுள்ள புனித பவுல் கத்தீட்ரல், தேவாலய கட்டடங்களில் காணலாம். மும்பையில் விக்டோரியா இருப்பூர்தி நிலையம் உள்ளதைப்போல ஆங்கிலேயர்களும், பாராட்டத்தக்க பெரிய இருப்பூர்தி நிலையங்களை விட்டுச் சென்றார்கள். 1947இல் சுதந்திரத்திற்குப் பின், அதே காலத்தைச் சார்ந்த பாணிகளில் கட்டடங்கள் இன்று உள்ளன. பிரான்சு நாட்டின் சிற்பியான கோர்பூசியரால் வடிவமைக்கப்பட்ட கட்டடங்கள் சண்டிகரில் உள்ளன. டெல்லியில் ஆஸ்திரிய சிற்பி ஸ்டெயின் வடிவமைத்த இந்திய சர்வதேச மையத்தில் மாநாடுகள் உலகமெங்கும் உள்ள முதன்மையான அறிவு சார்ந்த மக்களால் நடத்தப்பட்டன. சமீப காலமாக இந்தியா வாழ்விடமையம் அறிவார்ந்த செயல்பாடுகளின் மையமாக ஆனது.

கடந்த சில பத்தாண்டுகளாக பல திறமையான இந்திய சிற்பிகள் இருந்தார்கள். சிலர் டெல்லியில் உள்ள திட்டமிடல் மற்றும் கட்டடக்கலை பள்ளி போன்ற முதன்மையான கட்டடக்கலை பள்ளியில் பயிற்சி எடுத்தவர்கள். 'ராஜ்ரேவல், சார்லஸ் கொரியா போன்ற சிற்பிகள் இந்த புதிய தலைமுறைக்கு பிரதி நிதித்வம் அளிக்கிறார்கள். ராஜ்ரேவல், எஸ்.சி.ஓ.பி.ஈ என்ற கட்டடங்களின் தொகுதியையும் டெல்லியிலுள்ள ஜவஹர் வியாப்பா பவனையும் வடிவமைத்தார். இவர் தாய் நாட்டுப் பொருட்களான மணற்கற்களை கட்டிட வேலைக்கு பயன்படுத்துவதில் மிகுந்த பெருமை கொள்கிறார். மேலும் படிகளுடன் ரோமானிய நகரத்தின் திறந்த பகுதியை ஒன்று சேர்த்தார். இதற்கு முக்கியமான எடுத்துக் காட்டு டெல்லியிலுள்ள சி.ஐ.ஈ.டி கட்டிடமாகும். மும்பையில் உள்ள சார்லஸ் கொரியா, டெல்லியிலுள்ள கனாட் இடத்தின் எல்.ஐ.சி கட்டிடத்தின் பொறுப்பாளர் ஆவார். ஒளியைப் பிரதிபலிக்க மற்றும் உயரப் பறக்கக் கூடிய உணர்வினை உருவாக்க இவர் கண்ணாடியிலான முகப்புக்களை பயன்படுத்தினார்.

கடந்த பத்து ஆண்டுகளில் உள்ளூர் கட்டடக் கலையின், கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் எல்லா மாநகர நகரங்களில் பயன்பாட்டுடன் உயர்ந்த நிலையான திட்டமிடல் மற்றும் கட்டிடக கலை உணர்வை தோற்றுவித்தன.

## இப்பகுதிக்கான கேள்விகள் 13.4

1. போர்ச்சுக்கீசியரால் கோவாவில் கட்டப்பட்ட மிகவும் புகழ் பெற்ற தேவாலயங்கள் எவை?
2. இராஷ்டிரபதி பவனை வடிவமைத்த சிற்பியின் பெயர் என்ன?
3. இந்தியாவில், ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்களில் எந்த கட்டிடக்கலை பாணியை உற்று நோக்க முடியும்?

4. இன்றைய நாளில் கல்கத்தாவிலுள்ள, விக்டோரியா மெமோரியல் கட்டடத்தில் என்ன அடங்கியுள்ளது?
5. சண்டிகர் நகரத்தை வடிவமைத்தவர் யார்?
6. டெல்லியின் இந்திய சர்வதேச மையத்தை வடிவமைத்த சிற்பியின் பெயர் என்ன?
7. நவீன இந்தியாவின் சில புகழ் பெற்ற சிற்பிகளின் பெயரைக் கூறுக?

## 13.6 இந்தியாவின் சிறு பட்டினங்களும் நகரங்களும்

குறிப்புகள்

இந்தப் பாடத்தில் இந்தியாவின் பண்டைய மத்திய கால, நவீன கால, கட்டடக் கலையைப் பற்றி நீங்கள் படித்துள்ளீர்கள். இதற்கு முந்திய பகுதியில் டெல்லியில் திட்டமிடல் மற்றும் கட்டிடக்கலையைப் பற்றி படித்திருப்பீர்கள். ‘திட்டமிடல்’ கட்டடக்கலையுடன் சேரும் என்பதை நீங்கள் காணலாம். உண்மையாகவே இந்த திட்டமிடல் என்பது நகர திட்டமிடல் இவை நகர வளர்ச்சியுடன் இணைந்துள்ளன என்பது உங்களுக்குத் தெரியுமா? நாம் கட்டடக் கலையைப்பற்றி நினைக்கும் பொழுது அல்லது பேசும் பொழுது நகர திட்டமிடல் அல்லது நகர வளர்ச்சியின் தொடர்பான கருத்துகளை நாம் நினைத்தல் வேண்டும். இந்தப் பகுதியில் நாம் இந்தியாவின் சிறு பட்டினங்கள் அல்லது நகரங்களின் வளர்ச்சியும் முன்னேற்றமும் பற்றி கற்றுக் கொள்ளலாம். நிச்சயமாக இது ஒரு ஆர்வமான கதையாகும். இந்தியாவில் சம காலத்தைச் சார்ந்த சென்னை, மும்பை, கொல்கத்தா, டெல்லி ஆகிய முக்கிய நகரங்களைப் பற்றிய விரிவான தகவல்களை அறிய நாமும் சில மணி நேரத்தை செலவிடுவோம். நாம் இத்தகைய நகரங்களின் தொடக்கம், அவற்றின் முக்கிய கட்டமைப்புகள் கட்டடங்கள் ஆகியவைப்பற்றி காணுவோம்.

ஹாரப்பன் நாகரிகம் (சில வரலாற்று ஆசிரியர்களால் சிந்து-சரஸ்வதி நாகரிகம் என அழைக்கப்பட்ட) தொடங்கினதிலிருந்து, இந்தியா நகர திட்டமிடல் பற்றிய நீண்ட கால வரலாற்றைக் கொண்டிருந்தது. இவை கி.மு2350க்கு பின்பு கண்டறியப்பட்டது. அறியும் பொழுது மிக ஆச்சரியப்படுவீர்கள். இரண்டு நகரங்களான ஹரப்பா, மொகஞ்சதாரோ, பெரிய அளவிலான வடிநீர்க் குழாய்கள் முறை, தெருக்கள் ஒன்றோடொன்று செங்கோணத்தில் சந்தித்தன, கோட்டைப்பகுதி (சிட்டாடல்) உயரமான பகுதியில் கட்டப்பட்டது. கீழ்ப்பகுதியில் சாதாரண மக்கள் வாழ்ந்தனர் என்பதையெல்லாம் நீங்கள் ஏற்கனவே படித்துள்ளீர்கள். ராஜஸ்தானிலுள்ள காளிபங்கன், கட்சத்திலுள்ள சுர்கோடா இதே போன்ற நகர கட்டமைப்பைக் கொண்டுள்ளது. கி.மு 600லிருந்து இரு ஆரியர் மற்றும் திராவிட நாகரிகத்துடன் இணைந்துள்ள பல சிறு பட்டினங்கள் மற்றும் நகரங்களான ராஜ்கிர், வாரணாசி, அயோத்யா, அஸ்தினாபுரி, உஜ்ஜைன், சரஸ்வதி, கபிலவஸ்து கௌசாம்பி ஆகியவைத் தவிர பலமற்ற நகரங்களும் ஆகும். நாமும் மௌரியர் காலத்தில் ஜனப்தாக்கள் என அழைக்கப்படுகிற பல நகரங்கள் (சிறிய நகரங்கள்) மஹாஜனப் பதாக்கள் (பெரிய நகரங்கள்) அறிந்து வந்துள்ளோம்.

இந்தியாவுக்கு, முஸ்லீம்களின் வருகை, சூழ்நிலையை மாற்றிவிட்டது. நகரங்களில் இஸ்லாமிய செல்வாக்கு சான்றாக ஆனது. மசூதிகள், கோட்டைகள், அரண்மனைகளிலும் நகரத்து காட்சிகள் குறிக்கப்பட்டிருந்தன. அபுல் பாசலின் கூற்றுப்படி கி.பி.1594இல் 2877 நகரங்கள் இருந்தன. இது கஸப்ஸ் என்று அழைக்கப்பட்ட பல பெரிய கிராமங்கள், சிறிய நகரங்களாக மாற்றப்பட்டது தான் விரைவிலேயே இந்த கஸ்பாக்கள், ஆக்ராவில், தோல் தொழில, சலவைக்கல் கைத்தொழில் வேலையை சிறப்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட கைவினைஞர்களாலும் கைத்தொழில் வல்லுனர்களாலும் எடுத்துக் கொள்ளப்பட்டன. சிந்து, பருத்தி நெசவாலைகள், பட்டு முதலியவற்றில் சிறந்து விளங்கிய பொழுது, குஜராத் தங்கம் பட்டு நூல்களில் பின்னும் கலை, பூ வேலைப்பாடுடைய துணிகள் செய்யப்பட்டு அடிக்கடி மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

பிந்தைய 16ஆம் நூற்றாண்டின் பொழுது ஐரோப்பியர்கள் கடல் வழியாக இந்தியாவிற்கு வந்ததினால், கோவாவில் பனாஜி(1510) மகாராஷ்டிராவில் பம்பாய் (1532) மச்சிலிப் பட்டிணம் (1605) நாகப்பட்டினம் (1655) தெற்கில் மெட்ராஸ்(1639) கிழக்கில் கல்கத்தா (1690) போன்ற புதிய துறைமுகப்பட்டினங்கள் தொடங்கப்பட்டன. ஆங்கிலேயர்களால் இந்த புதிய துறைமுகப்பட்டினங்கள் வளர்ச்சியடைந்தன, ஏனென்றால் இங்கிலாந்து உலகின் தொழிற்சாலை பொருளாதாரத்தில் முதன்மை நாடாக இருந்தது. அதே சமயம் இந்தியா, கனிமப் பொருட்களை இங்கிலாந்துக்கு வழங்கும் முதன்மையான விற்பனையாளராக இருந்தது. கூடவே பொருட்களை வாங்கக் கூடிய முதன்மை நுகர்வோராகவும் இருந்தது. 1853ம் ஆண்டிற்கு பிறகு, ஆங்கிலேயர்களால் நாட்டின் உள்பகுதியிலிருந்து துறைமுகப் பட்டணங்களுக்கு பொருட்களை எடுத்துச் செல்ல அல்லது கனிமப் பொருட்களை விற்பனை செய்ய அல்லது தயாரித்த பொருட்களை பெற்றிட, இருப்புப் பாதைகள் போடப்பட்டன. 1905இல் கிட்டத்தட்ட, ஆங்கிலேயரின் பொருளாதார அரசியல் ராணுவ பணிக்காக, 28,000 மைல் நீளத்திற்கு ரயில் தண்டவாளங்கள் போடப்பட்டன. தகவல் தொடர்பு நோக்கத்திற்கு தேவையாயிருந்த, தபால், தந்தி நிலையங்களும் நிறுவப்பட்டன.

20-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், பம்பாய் (இப்பொழுது மும்பை), கல்கத்தா (இப்பொழுது கொல்கத்தா) மற்றும் மெட்ராஸ் (இப்பொழுது சென்னை) ஆகியவை நிர்வாகம், வணிகம், தொழிற்சாலை முதலியவற்றுக்கு பெயர் பெற்ற முக்கிய நகரங்களாக ஆயின. கல்கத்தாவிலுள்ள டல்ஹொசி சதுக்கம், மெட்ராசிலுள்ள புனித ஜார்ஜ் கோட்டை, டெல்லியிலுள்ள கண்ணட் இடம், கடற்கரைகளான மெரினா, டிரைவ் இன் பாம்பே, ஐரோப்பியர்களின் இங்கிலாந்து வீட்டை "ஞாபகப்படுத்துகிறது. ஆனால் அவர்களும் குளிர்ச்சியான சூழ்நிலையில் தங்களுடைய சொந்த வீடான ஐரோப்பாவிற்கு திரும்பிச் செல்ல விரும்பினார்கள். ஆகையால் இந்தியாவின் வெயில் பாதங்களின் வேகத்தை தனிப்பதற்காக, பெரிய நகரங்களுக்கு அருகில் அதாவது, வடக்கில், மிசௌரி, சிம்லா நைனிடால், கிழக்கில், டாாஜிலிங் ஷில்லாங் தெற்கில் நீலகிரி கொடைக்கானல் போன்ற மலை வாழிடங்கள் வளர்ச்சியுற்றன.

நகரங்களில், புதிய குடியிருப்பு பகுதிகளான சிவில் வாரியம், ராணுவ முகாம்கள் வந்தன. சாதாரண மக்களின் பகுதியை நிர்வாகம் செய்யும் அதிகாரிகள் வசிக்கும் பகுதியை சிவில் வாரியம் என அழைக்கப்பட்டது. அதே சமயம் ஆங்கிலேய ராணுவ அதிகாரிகள் வசிக்கும் இடத்தை இராணுவ முகாம்கள் என குறிப்பிடப்பட்டது. இன்றைய நாளில் கூட, இந்த இரண்டு பகுதிகளும், உயர்ந்தோர் குழாம், நிர்வாகம், ராணுவம் முந்தைய நாட்களில் இருந்தது போலவே குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பொழுது நாம், இந்தியாவின் நான்கு மாநகரங்களான சென்னை, கொல்கத்தா, மும்பை டெல்லி நிச்சயமாக உங்களுக்கு இந்த நகரங்களைத் தெரியும்.

## இப்பகுதிக்கான கேள்விகள் 13.5

1. பண்டைய காலத்தில் இந்தியாவில் தோன்றிய 5 நகரங்களின் பெயரைக் கூறுக?
2. ஆங்கிலேயர்களால் அமைக்கப்பட்ட 5 துறைமுகப்பட்டினங்களின் பெயர்களைக் கூறுக.
3. ஆங்கிலேயர்களால் முன்னேற்றப்பட்ட 5 மலைவாழிடங்களின் பெயர்களைக் கூறுக.
4. சிவில் வாரியத்தில் வசித்தவர் யார்?
5. இராணுவ முகாம் என்றால் என்ன?

## 13.6.1 சென்னை



முன்பு மெட்ராஸ் என அழைக்கப்பட்ட சென்னை தமிழ்நாடு அரசின் தலை நகரம், இந்தியாவின் நான்கு மாநகர நகரங்களில் ஒன்றாகும். இந்நகரம் புனித ஜார்ஜ் கோட்டையுடன், சிறு நகரங்கள் கிராமங்கள் உள்ளடங்கியதாகும். 11-ஆம் நூற்றாண்டில் இந்நகரம் ஆங்கிலேய ஆதிக்க இந்தியாவில் தெற்கு பிராந்தியத்தின் மேலாண்மை இடமாக மெட்ராஸ் பிரசிடென்சி ஆனது. 1947-இல் சுதந்திரத்திற்கு பின், இந்நகரம் மெட்ராஸ் அரசின் தலைநகரானது. மற்றும் 1968-இல் தமிழ்நாடு என மறு பெயர் இடப்பட்டது. இது தமிழ் இந்து பண்பாட்டினை திரும்பப் பெற்று, நிகரற்ற அந்நிய செல்வாக்கையும் இந்திய பண்பாட்டினையும் இணைத்து வழங்கிடக் கூடியதாக இருந்தது. ஆங்கிலேயரின் செல்வாக்கினை சென்னையில் பல்வேறு முனைப்பான தேவாலயங்கள் கட்டடங்கள், இரு பக்கங்களிலும் மரங்களைக் கொண்ட விரிவான சாலைகள் சான்றளிக்கின்றன.

1892இல் கட்டப்படட உயர்நீதிமன்ற கட்டிடம் உலகிலேயே இலண்டன் நீதிமன்றத்திற்கு அடுத்ததாக பெரிய நாட்பட்ட ஜீடிசியல் கட்டடம் என சொல்லப்படுகிறது. புனித ஜார்ஜ் கோட்டையின் தனித்துவம், இதனுடைய அலங்கரிக்கப்பட்ட மாட விதானம், நடைக்கூடம் ஆகியவை புதிய கட்டடக் கலையை நினைவூட்டுகிற தரக்குறியீடுகளாகும்.

ஆங்கிலேய ஆதிக்கத்தின் பொழுது வட அமெரிக்காவிலுள்ள கிரேட் ஏரிகளிலிருந்து ஏராளமான பனிப்பானங்கள் குளிர்பதனப் படுத்துவதற்காக இந்தியாவிற்கு கப்பல் மூலம் அனுப்புவதற்கு ‘ஐஸ்ஹவுஸ்’ பயன்படுத்தப்பட்டது.




ஜெர்மானிய கலை நயத்துடன் கூடிய வளைவுகள், அழகான வண்ணக் கண்ணாடி ஜன்னல்களைக் கொண்ட புனித ஜாண் தேவாலயம் இந்த சமயத்தில் உருவான மற்றுமொரு அழகான கட்டமைப்பு. இது கிறிஸ்தவக் கோவிலின் நடுக்கூடம், கோவில் தூண்களுக்கு இடையில் இருக்கும் பாதைகள் ஒரு கோபுரம், ஊசிமுனை கொண்ட கோபுரம் ஆகியவற்றை கொண்டிருந்தது சுவர்கள் சிறுதுண்டுக்கற்கள், முரடான குர்லா கற்களாலும் உருவாக்கப்பட்டது. அதே சமயம் பியர்ஸ் வளைவுகள், போர்பந்தர் கற்களினால் ஒப்பனை செய்யப்பட்டு, கூரைகள் தேக்கு மரத்தினால் கட்டப்பட்டு, இங்கிலாந்திலிருந்து தரையில் பதிக்கக் கூடிய ஓடுகள் இறக்குமதி செய்யப்பட்டன.

இன்னும் இக்காலத்தில் கட்டப்பட்ட மற்றுமொரு கட்டமைப்பை பற்றி கூறும் பொழுது, ஜெனரல் தபால் அலுவலகம் குறிப்பிடத்தகுந்தது. சென்னையில் 1872இல் முடிக்கப்பட்ட மிக உயரமான மாடவிதானத்துடன் கூடி பெரிய மைய கூடத்தைக் கொண்டுள்ளது. இது குர்லாவிலிருந்து வந்த மஞ்சள் கற்கள், தரங்கட்ராவிலிருந்து வந்த வெள்ளைக் கற்களால் ஒப்பனை செய்யப்பட்டுள்ளது. இது சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய முக்கியமான இடமாகும். உள்ளே, சலவைக் கற்கலால் ஆன உயர்ந்த மேசைகள், உயரமான முகடுகள் தடையின்றிச் செல்லக்கூடிய படிக்கட்டுகள் ஆகியவை, ஆங்கிலேயரின் ஆடம்பரத்தை செல்வத்தன்மையையும் அதிகாரத்தையும் காட்டுவதற்காக வடிவமைக்கப்பட்டது.

## 13.6.2 கொல்கத்தா

கொல்கத்தாவின் தோற்றம் பற்றியும் வரலாற்றினைப் பற்றியும் அறிந்து கொள்வது ஆர்வமிக்கதாகும். 1911 வரை இது ஆங்கிலேய இந்தியாவின் தலைநகராக இருந்தது என்பது உங்களுக்கு தெரியுமா? 1686இல் ஆங்கிலேயரின் விரிவாக்கத்திட்டத்தின விளைவாக தோற்றுவிக்கப்பட்டது. இந்நகரம் 1756வரை அதாவது சிராஜ்-உத்-தௌலா(வங்காள நவாப்) இந்நகரை தாக்கி, ஆங்கிலேயர்களை இந்த நகரிலிருந்து விரட்டுவதில் முன்னேறிக் கொண்டு இருந்தது. இதை தொடர்ந்து 1757இல் நடந்த பிளாசிப் போரில், இராபர்ட் கிளைவ் நவாபைத் தோற்கடித்து இந்நகரத்தை கைப்பற்றினார்.



1774இல் உச்சநீதிமன்றம் கல்கத்தாவில் தோற்றுவித்ததால், இது நீதியின் இடமாக ஆனது. 1911இல், ஆங்கிலேய இந்தியாவின் தலைநகரம் கல்கத்தாவிலிருந்து டெல்லிக்கு மாற்றப்பட்டது. 2011இல் கல்கத்தா அதிகாரப் பூர்வமான கொல்கத்தா என மறு பெயரிடப்பட்டதை நீங்கள் அறிந்திருக்கலாம். நாம் இப்பொழுது கல்கத்தாவில் இன்று வரை உள்ள புகழ் பெற்ற கட்டமைப்புகளையும் கட்டிடங்களையும் பார்ப்போம்.



ஔராபாலம், ஹீக்ளி நதியின் மேல் அமைந்துள்ளது. இது ஹௌதா நகரத்தை கல்கத்தாவுடன் இணைக்கிறது. இது திருகுமறை தாழ்ப்பாள் எதுவும் பயன்படுத்தாமல் கட்டப்பட்ட தூண்களில் நிற்கிறது. இந்த பாலம் கல்கத்தாவின் முக்கிய அடையாளச் சின்னமாக வளங்குகிறது. இது நிச்சியமாக, உலகிலேயே பரபரப்பான பாலமாக உள்ளது.



வட கல்கத்தாவில் அமைந்துள்ள சலவைக் கற்கலால் ஆன அரண்மனை 1835இல் கட்டப்பட்டது. இது எழில் நலம் மிக்க கலைக் காட்சி கூடமாக விளங்குகிறது. இது கலை சிற்பங்கள், படங்கள், எண்ணெய் ஓவியங்கள் ஆகிய அற்புதமான கலைப்பொருட்களை காட்சிப்படுத்துகிறது. இது ஒரு மிருகக் காட்சி சாலையையும் கொண்டுள்ளது. நீங்கள் பல்வேறு வகையான பறவைகளையும் விலங்குகளையும் அங்கு காணலாம். சொல்லப்போனால் இது அரிதான எளிதில் காண முடியாத பறவை கூட்டங்களைக் கொண்டுள்ளது.



ஹீக்ளி ஆற்றின் கரையோரத்தில், வில்லியம் கோட்டை அமைந்துள்ளது, இது ஆங்கிலேயர்களால் தோற்றுவிக்கப்பட்டது. 1696இல் ராபர்ட் கிளைவ் ஆல் தொடங்கப்பட்டு, 1780இல் இது முடிவடைந்து வில்லியம் கோட்டையை அமைத்ததின் அடிப்படை நோக்கம் படையெடுப்பவர்களின் தாக்கு தலை முறியடிப்பதற்காக ஆகும். கோட்டையைச் சுற்றிலும் துப்புரவு செய்யப்பட்டு, மைதானமாக ஆனது. பல்வேறு பொருட்காட்சிகள், கடைகள் முதலியவை இன்றுவரை இடம் பெற்றுள்ளன.



1921இல் தோற்றுவிக்கப்பட்ட கல்கத்தாவிலுள்ள விக்டோரியா மெமோரியல் கூடம் ஓர் உன்னதமான அருங்காட்சியகமாகும். இது பார்வையாளர்களை கடந்த கால வரலாற்றுக்கு எடுத்துச்செல்கிற ஒரு உன்னதமான இடமாகும். இன்று விக்டோரியா மெமோரியல் கல்கத்தாவில் ஒரு மிகச் சிறந்த கலை அருட் காட்சியகமாகும் இது 64 ஏக்கர் நிலத்தில் கட்டப்பட்ட 184 அடி உயரம் கொண்ட மிகப் பெரிய மாளிகையாகும்.



கல்கத்தாவில் 1864இல் ஏடன் தோட்டத்தின் மட்டைப்பந்துக்குழு இயங்கிக் கொண்டு இருக்கிறது என்பது பற்றி உங்களுக்கு தெரியுமா? இன்று சுமாராக 1,20,000 மக்கள் இருக்கக் கூடிய இடவசதியைக் கொண்டிருக்கிறது. கல்கத்தாவின் ஏடன் தோட்டங்கள் நிச்சியமாக பார்க்க வேண்டிய இடங்களாக உள்ளது.



எழுத்தாளர்களின் கட்டடடத்தின் கட்டடப்பணி, 1690க்கு முன்பாகவே தொடங்கப்பட்டது. இது, கிழக்கு இந்தியக் கம்பெனியில் பணியாற்றிய இளம் எழுத்தாளர்களின் குடியிருப்பு இடங்களாக இருந்ததினால் இந்தப் பெயரை பெற்றது. லெப்டினண்ட கவர்னர் ஆஷ்லி ஏடனின் ஆட்சி காலத்தில் (1877) இந்த கோதிக் கலை வளர்ச்சியடைய தொடங்கியது.

### 13.6.3 மும்பை

மும்பை, இந்தியாவின் மேற்கு கடற்கரை ஓரம் அரேபியக் கடலின் கடற்கரை மீது அமைந்துள்ளது என்பது உங்களுக்கு தெரிந்ததே இது ஒரு தடவை ஏழு தீவுகளின் குழுவாக இருந்தது என்பதை அறியும் பொழுது நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். முந்தைய வரலாற்று காலத்திலிருந்து இதனுடைய இடங்கள் வாழ்விடமாக இருந்திருந்தாலும், 17ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் வருகையின் காலந்தொட்டு இது பம்பாய் என்றானது, இருந்தாலும், இது 19ஆம் நூற்றாண்டில் இது உண்மையாகவே உருப்பெற்றது. இருப்புப்பாதைகளைக் கொண்ட இந்தியாவின் முதல் நகரமாக இருந்தது, கல்கத்தாவுடன் சேர்த்து, இரண்டு இந்திய நகரங்களில் செய்தித்தாள்கள் புழக்கத்தில் வரத் தொடங்கின.



19ஆம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் நகர கட்டடங்கள், பொது கட்டடங்கள், விக்டோரியா கோதிக் பாணியில் உதாரணங்களாக தலைமை செயலகம் (1874) கவுன்சில்ஹால் (1876) எல்பின்ஸ்டன் கல்லூரி (1890) ஆகியவை கட்டப்பட்டன. ஆனால் 1887இன் ரயில்வே கட்டுமானப் பணியான நவீன சத்ரபதி சிவாஜி முதலிடம் ஆகும். மிகவும் போற்றத்தக்க பாணியில் விக்டோரியா முடிவிடம், இது இரயில் நிலையத்தை விட பெரிய தேவாலயமாக காட்சியளிக்கிறது, இது செதுக்கப்பட்ட கல் அலங்கார வளைவுகள் வண்ணம் பூசப்பட்ட ஜன்னல்கள்களையும் நேர்த்தியான சுவர்களையும் அடக்கியுள்ளது.

புகழ்பெற்ற இந்தியா நுழைவாயில், மஞ்சள் கற்களில், இந்தோ-சராசெனின் கட்டிடக் கலைபாணியில், ஜார்ஜ் மன்னன் அவரது மனைவி ராணிமேரியின் இந்திய வருகையை



பெருமைப்படுத்துவதற்காக கட்டப்பட்டது. இது 1924இல் முடிக்கப்பட்டது. 24 லட்சம் செலவில் கட்டப்பட்ட இது அந்நாளில் அதிர்ஷ்டமாக இருந்தது. இது 26 மீட்டர் உயரமுள்ள வளைவு வாயிலைக் கொண்டுள்ளது மற்றும் நான்கு மேடைகள் மஞ்சள் நிற பசால்ட் கற்களில் கரும் சிக்கலான பின்னல் வேளைகளுடன் முடிக்கப்பட்டது.

இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து, வாணிகம் தொழில்சாலைகள் ஆகியவற்றில் மும்பை இந்தியாவின் முதன்மையான இடத்தை தொடர்ந்தது. பங்கு மாற்றுச் சந்தை, வாணிக மையங்கள், பாலிவுட் என அழைக்கப்படுகிற, புகழ் பெற்ற சினிமா தொழில்சாலை, மேற்கத்திய மயமாதல்' நவீன மயமாதல் என உங்களால் அழைக்கப்படுகிற எதுவும் இங்கே உள்ளன என்பது உங்களுக்கு தெரியும். இன்று முக்கியமான தொழிற்சாலைகளான துணி உற்பத்தி செய்யப்படும் தொழில் சாலைகள் பணம், சினிமாவை உருவாக்குதல் ஆகியவற்றுடன் இந்தியாவின் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த பணம் தொடர்பான நகரமாக விளங்குகிறது. உலகிலேயே புகழ்பெற்ற மிகப்பெரிய சினிமா தொழில்சாலையான பாலிவுட், பல இந்தி சினிமாக்களை தயாரித்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்தியாவின் நுழைவாயில் என ஒருமுறை தெரியப்பட்டது. ஆங்கிலேய ஆட்சிக்கு சான்றுகள் இன்றும் மும்பை நகரில் உள்ளன.

## இப்பகுதிக்கான கேள்விகள் 13.6

1. சென்னையில் புகழ்பெற்ற 4 இடங்களின் பெயரைக் கூறுக.
2. கொல்கத்தாவில் புகழ் பெற்ற 4 இடங்களின் பெயரைக் கூறுக.
3. மும்பையில் புகழ் பெற்ற 4 இடங்களின் பெயரைக் கூறுக.

### 13.6.4 டெல்லி



1911இல் டெல்லி ஆங்கிலேய இந்தியாவின் தலைநகரமானது என்பது பற்றி உங்களுக்கு தெரியுமா? அதனால் தான், டெல்லி தனது 100ஆவது வருட நிறைவு விழாவை 2011இல் கொண்டாடியது சான்று பூர்வமான, 1911இல் நவீன நகரமாக இருந்தது இப்பொழுது டெல்லி என்று அழைக்கப்படுகிறது. இருப்பினும் டெல்லியின் வரலாறு அதைவிடப் பழமையானது. அங்கு குறைந்த பட்சமாக இருந்த ஏழு முக்கிய பழைய நகரங்கள் டெல்லியை உருவாக்க ஒன்று சேர்க்கப்பட்டது என நம்பப்படுகிறது. டெல்லியின் முதல் நகரம் பாண்டவ சகோதரர்களில் மூத்த சகோதரனான யுதிஷ்திராவினால், யமுனை நதிக்கரை மீது, இந்திர பிரஸ்தா என்ற பெயரால் தோற்றுவிக்கப்பட்டது என நம்பப்படுகிறது. நிச்சியமாக பாண்டவர்கள், கௌரவர்களின் புராணங்களை, மகாபாரதக் கதையில் நினைவு கூறுவீர்கள்.

நாட்டுப்புற கதைகளின் படி ராஜாதிலுவினால் டெல்லி நிறுவப்பட்டது. கி.பி 2ஆம் நூற்றாண்டில் புவியியல் வல்லுனரான 'டாலமி' தன்னுடைய வரை படத்தில் டெல்லியை 'தைதலா' என குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால் எண்ணற்ற ஹாரப்பா இடங்கள், இப்பொழுது டெல்லியாக உருவகிக்கிறது. இதற்கான சான்றை, நீங்கள் டெல்லியிலுள்ள தேசீய அருங்காட்சியகத்தை பார்வையிட்டால் காணக்கூடும். அந்த சமயத்திலிருந்து, டெல்லி வளர்ச்சியைத் தொடர்ந்து இன்று இது மிகவும் விரிவடைந்து நாட்டில் மட்டுமல்ல ஆனால் முழு உலகத்தில் பெரிய நகரமாக உள்ளது.

ஆர்வமான புராணக்கதை டெல்லியுடன் இணைந்துள்ளது. அசோக மன்னருடைய காலத்தில் வாசுகி என்ற பாம்பு குதுப்பினார் கட்டிடத் தொகுதியிலுள்ள இரும்புத்தூணால், பூமிக்கடியில் தள்ளப்பட்டது. பல ஆண்டுகளுக்குப் பிறகு 'லால் காட்டைச்' சார்ந்த தோமா அரசன் அனங்பால், தன்னுடைய ஆட்சியை டெல்லியில் அமைத்த பொழுது இவன் தூணை வெளியே எடுத்து விட்டு அந்த பாம்பை விடுதலை செய்தான். அந்த சமயத்தில் எந்தஒரு வம்சமும், டெல்லியை நீண்ட நாட்கள் ஆள முடியாது என முன்கூட்டியே கூறப்பட்டது. தோமர்களுக்கு பிறகு மெஹ்ரலிக்கு அருகில் உள்ள லால் காட் பகுதியில் 'கிவிலா ராய் பித்தோரா' என்று அழைக்கப்பட்ட நகரத்தை கட்டின சௌகான்கள் ஆட்சி செய்தனர். இந்த வம்சத்தை சார்ந்த பிரிதிவிராஜ் சௌகான் மெஹ்ரலியிலிருந்து ஆட்சி புரிந்தார்.



அடிமை வம்சம் ஆட்சிக்கு வந்த பொழுது, டெல்லி மறுபடியும் புகழடைந்தது. குத்புதின், புகழ்பெற்ற குதுப்மினாரை கட்டத் தொடங்கினான். இது பின்னர் இல்டமிஷ்ஷால் முடிக்கப்பட்டது.

பின்பு அலாவுதின் கில்ஜி, சுல்தான் ஆனபொழுது சிரி ஆட்சியின் மையமானது சிரிக்கோட்டை இன்றும் நிலைத்திருக்கின்றது. டெல்லியிலுள்ள இந்தப் பகுதியை ஷால்பூர்ஜட் என அழைக்கப்பட்டது. சிரியும் சொல்வதற்கு ஒரு உற்சாகமான கதையை கொண்டுள்ளது. அலாவுதின் கில்ஜியின் ஆட்சி அடிக்கடி மங்கோலியர்களால் அச்சுறுத்தப்பட்டது. இந்நகரத்தில் தங்கியிருந்த சில மங்கோலியர்கள் கிளர்ச்சி செய்தார்கள் அலாவுதீன் கில்ஜி, அவர்களது தலையை வெட்டி அந்தத் தலைகளை நகரத்து சுவர்களின் அடியில் புதைத்துவிட்டான், அப்படித்தான் அந்த இடம் 'சிரி' என அழைக்கப்பட்டது. 'சர்' என்ற சொல்லின் பொருள் 'தலை' என்பது உங்களுக்கு தெரிந்ததே. நாம் இன்று வரை தலைக்கு அந்த சொல்லை பயன்படுத்துகிறோம்.



சில ஆண்டுகளுக்குப்பிறகு, துக்ளக் வம்சம் ஆட்சிக்கு வந்த பொழுது, சுல்தான் கியாசுதின் துக்ளக், துக்ளகாபாத் என்று அழைக்கப்பட்ட நகரத்தைக் கட்டினார், இது வலிமைபடுத்தப்பட்ட நகரமாக வடிவமைக்கப்பட்டது. கியாசுதினின் இறப்பிற்கு பிறகு, முகமது பின்-துக்ளக் டெல்லியின் முந்தைய நகரங்களை ஒரே அலகாக ஒன்று சேர்த்து அதை 'ஜஷன்பனா்' என பெயரிட்டார்.



முகமது பின் துக்ளக்கின் அரசவையில் பணிபுரிந்த 'இபின்பதூதா' இந்த நகரத்தை பற்றி மிக ஆர்வமிக்க விளக்கத்தைக் கொடுத்துள்ளார். இவர் இந்தியாவின் மாநகரம் பெரிய உன்னதமான நகரம், வலிமையுடன் அழகையும் கொண்ட நகரம், இது உலகிலேயே இணையில்லாத சுவரைக் கொண்டுள்ளது இந்தியாவிலலேயே பெரிய நகரமாக உள்ளது.

கீழ்த்திசையிலுள்ள முஸ்லீம் எல்லோருக்கும் ஓரளவுக்கு இது மாதிரி பெரிய நகரமாக வர்ணிக்கிறார்.

துக்ளக் வம்சத்தின் மற்றுமொரு முக்கிய ஆட்சியாளர் பெரேஷ்ஷா ஆவார். இவருடைய ஆட்சி காலத்தில் டெல்லி, ஏராளமான மக்கட் தொகை மற்றும் விஸ்தாரமான பகுதியைக் கொண்டிருந்தது. இவர் 'பிரோஜ்ஷா கோட்லா'வுக்கு அருகில் அமைந்துள்ள பிரோஜாபாத்தை கட்டினார். இருப்பினும் 1398இல் சாமர்கண்டின் அரசரான தைமூர் படைபெயடுப்பு 'ஜகன்பநா' என்ற நகரத்தை உள்ளடக்கி, இதனுடைய பெருமையும் அழிக்கப்பட்டது. தைமூர், தன்னுடன் இந்திய சிற்பிகள், கல்தச்சர்களை, சாமெர்கண்டில் மசூதிகளைக் கட்டுவதற்காக அழைத்து கொண்டு சென்றான். பின்பு வந்த ஆட்சியாளர்கள் தங்களுடைய தலைநகரை ஆக்ராவிற்கு மாற்றி விட்டனர்.

பண்டைய இந்திர பிரஸ்தாவின், சிறு மண குன்றின் மீது 'தீன்பனாவை' மொகலாய ஆட்சியாளரான ஹிமாயூன் கட்டினார். இருப்பினும் டெல்லியின் இழந்த பெருமையை திரும்பவும் வலிமை அடையச் செய்தவர், ஷாஜஹான் இவருடைய பேரன் ஆவார். இவர் 1639இல் செங்கோட்டையை கட்ட ஆரம்பித்தார், மற்றும் அதை 1648ல் கட்டி முடித்தார். 1650இல் புகழ் பெற்ற ஜீம்பா மஸ்ஜித்தை கட்ட ஆரம்பித்தார். ஹாஜஹானுடைய நகரம் 'ஷாஜஹானாபாத்' என அழைக்கப்பட்டது. சிறந்த கவிஞர்களான தார்ட், மிர்டகிமிர், மிர்சா காலிப் முதலியவர்கள் கஜல்களை உருவாக்கினார்கள். கஜல் மொழி அதாவது உருது இக்காலத்தில் மிகவும் சிறந்து விளங்கியது. ஷாஜஹானாபாத் ஈராக்கிலுள்ள பாக்தாத், துருக்கியிலுள்ள கான்ஸ்டான்டிநோபிளை விட மிகவும் அழகானது என நம்பப்படுகிறது. நூற்றாண்டுகளுக்கும் மேலாக நகரத்தை நாதிர்வுாவின் (1739) படைவீரர்களால் கொள்ளையடிக்கப்பட்டு, அழிக்கப்பட்டது. அகமதுஷா அப்தலி (1748) உள்நாட்டிலிருந்து தொடர்ந்த தாக்குதல்கள், நகரத்தை கொள்ளையடிக்கப்பட்டு, அழிக்கப்பட்டன. இவையெல்லாம் நகரத்தை பலவீனமாக்கியது. ஆதனால் எல்லா பிரச்சனைகள் இருந்தாலும், டெல்லி, இன்று வரை ஏராளமானவற்றை கொடுப்பதற்கு இசை, நடனம், நாடகம், வளமான பண்பாட்டு மொழி, இலக்கியத்துடன் வகையான சுவைமிக்க உணவுகளைக் கொண்டுள்ளது.

டெல்லி, குறைந்த பட்சமாக 24 சுபிக்களின் இல்லம், இவைகளில் ஜகன்பநா பகுதியிலிருந்து மிகுந்த புகழ் வாய்ந்தவைகள் 'ஜகன்பானா' பகுதியிலிருந்தாகும். ஆவற்றில் சில

1. குத்புதீன், பக்தியார்காசி, இவருடைய 'கான்ஹா அல்லது டேரா மெஹ்ராலியில்
2. நைநாமுதினிலுள்ள கைசாமுதின் அவுலியாவின் கான்ஹா
3. ஷேக் நாசிருதின் முகமது, இன்று இவரை சிராக்-ஈ-டெல்லி என பிரபலபடுத்தப்படுகிறார்
4. அமீர்குஸ்ரூ, சிறந்த கவிஞரும், மந்திரவாதியும் அறிஞருமாவர்

1707ஆம் ஆண்டிற்குப் பிறகு, மொகலாய அதிகாரம் பலவீனமடைந்து, டெல்லி தன்னுடைய வலிமையை இழந்தது. 1803இல் ஆங்கிலேயர் மராத்தியர்களை தோற்கடித்த பின்பு டெல்லியை கைப்பற்றினார்கள். ஆங்கிலேயர்கள் பல கட்டமைப்புகளைக் கட்டின காஷ்மீர் கேட் சிவில் பிராந்தியர்கள், முக்கியமான மையங்களாயின. 1911இல், ஆங்கிலேயர் தன்னுடைய தலைநகரை டெல்லிக்கு மாற்றினார்கள், புதிய டெல்லி, என அழைக்கப்பட்ட புது முழு நகரத்தைக் கட்டினர். இது மிக கம்பீர நிலையில் உருவாக்கப்பட்டது. நீண்ட கட்டமைப்பை கொண்ட இந்திய வாயில் இப்பொழுது ராஷ்டிரபதி பவனாக இருக்கிற வைஸ்ராய் இல்லம், பாராளுமன்றம், வடக்கு, தெற்கு வட்டாரங்கள் எல்லாமே இந்திய மக்கள் ஆங்கிலேய அரசை மதிக்கச் செய்தன. அவை ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியம், கம்பீரமான அதிகாரத்தை அரச தகுதிகளை காட்டுவதற்கு குறிப்பிடப்பட்டது. இந்த புதிய நகரம் 1932இல் முடிவடைந்தது.

கன்னாட் இடம் நகரத்தின் இன்னும் முக்கிய வாணிகமையமாக உள்ளது. டெல்லி, இந்தியாவின் முக்கிய வாணிக பண்பாட்டு, அரசியல் மையமாக உள்ளது. ஏராளமான கட்டிடங்கள், அழகான பூங்காக்கள், மேம் பாலங்கள், மெட்ரோ, அழகான விமான நிலையம், கல்வி மையங்கள் அருங்காட்சியகங்கள், பெரிய மொத்த வியாபார சந்தைகள், உலகின் எல்லா நாடுகளின் தூதரகங்கள், பெரிய கடைகள், முதன்மையான தொழிற்சாலைகள் முதலியவைகள், இந்நகரத்தை அழகுபடுத்துவதில் பங்களிக்கின்றன. டெல்லியைப் பற்றி குறிப்பிடும் பொழுது தில்லிஹை தில் வாலன்கி (யாருக்கு பெரிய மனது இருக்கிறதோ அவர்களைச் சார்ந்தது டில்லி)

## இப்பகுதிக்கான கேள்விகள் 13.7

1. டெல்லியினுள் உள்ள நகரங்களை அதைக்கட்டிய அரசர்களுடன் பொருத்துக.

| வ.எண் | நகரத்தின் பெயர் | அரசனின் பெயர் |
|---|---|---|
| 1 | இந்திர பிரஸ்தா | பிரிதிவராஜ் சௌகான் |
| 2 | லால் காட் | முகமதுபின் துக்ளக் |
| 3 | மெஹருலி | யுதிஷ்திரா |
| 4 | சிரி | பிரோஷ்-ஷா-துக்ளக் |
| 5 | ஜஹன்பனா | ஹிமாயூன் |
| 6 | துக்லகாபாத் | ஷாஜஹான் |
| 7 | பிரோஷா பாத் | அலாவுதீன் கில்ஜி |
| 8 | தீபனா | அனங்பால் தோமர் |
| 9 | ஷாஜஹானாபாத் | கியாசுதீன் துக்ளக் |

2. ஜகன்பனா பகுதியை சார்ந்த 4 புகழ்பெற்ற சூபி புனிதர்களின் பெயரைக் கூறுக.

## நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- இந்திய கட்டடக் கலை, சிற்பக்கலையின் வரலாறு, சிந்து சமவெளி நாகரிகத்தை விட பழமையானது.
- இந்தியாவின் எந்தப் பகுதியின் பண்பாட்டு வேற்றுமையை புரிந்து கொள்ளக்கூடிய திறவுகோல் கட்டிடக்கலை , ஏனென்றால் இது, வெவ்வேறு காலத்திய பண்பாட்டு மரபுகள் சமய பழக்கங்களினால் செல்வாக்கடையச் செய்தன.
- புத்த மதம் சமண மதம், விகாராக்கள், சைத்யாக்களை கட்டி, முந்திய கட்டிடக்கலைப் பணியின் வளர்ச்சியில் உதவினது.
- குப்தர்கள், பல்லவர்கள், சோழர்கள் காலத்தில் கட்டிடக்கலை செழிப்படைந்தது.
- டெல்லி சுல்தானியர்கள் முகலாயர்கள் தங்களுடன் பாரசீக செல்வாக்கை கொண்டு வந்தனர். இந்தோ-பாரசீக கலைப்பாணியை நாம் சான்றளிக்கிறோம்.
- ஆங்கிலேயர்கள் பிறகாலனி ஆதிக்க அரசுகள் ஐரோப்பாவின் தாக்கத்தை இந்திய கட்டிடக் கலை மீது ஏற்படுத்தியது, அதை தாய் நாட்டிற்குரிய பாணிகளுடன் தொகுத்தது, காலனிப் பாணியையும், கம்பீரமான கட்டிடங்கள் மற்றும் அலுவலகங்களை நாகரிகமாக்க செயல்படுத்தியது.

- ஹாரப்பன் நாகரிகம் தொடங்கினதிலிருந்து இந்தியா, நகர திட்டமிடலில் நீண்ட கால வரலாற்றைக் கொண்டிருந்தது, இவைகளை கி.மு.2350க்கு பிறகிலிருந்து கண்டு கொள்ளலாம்.
- பல்வேறு நகரங்கள் வந்ததிலிருந்து
- 1594இல் அங்கு 2837 நகரங்கள் இருந்தன
- 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், பாம்பே (இப்பொழுது மும்பை) கல்கத்தா (இப்பொழுது கொல்கத்தா) மெட்ராஸ் (இப்பொழுது சென்னை) நிர்வாகம் வணிகம் தொழிற்சாலைகளுக்கு பெயர் பெற்ற முக்கிய நகரங்களாக ஆனது.
- 1911இல் டெல்லி, பிரிட்டிஷ் இந்தியாவின் தலைநகரமானது, இருந்தாலும் டெல்லிக்கு மிகப்பழமையான வரலாறு உண்டு.
- குறைந்த பட்சம் ஏழு முக்கிய பழைய நகரங்கள் இருந்தன. அவைகள் டெல்லியை அமைக்க ஒனறு சேர்ந்தன. இவைகள், நிச்சியமாக, இந்திர பிரஸ்தா, லால்காட், மெஹரல்லி, சிரி, துக்ளக்கா பாத், பிரோஷாபாத், ஷாஜஹானாபாத் ஆகும்.

## பயிற்சிக்கான கேள்விகள்

1. ஹாரப்பன் நாகரிகத்தின் கட்டிடக்கலைப்பாணிகளை விவரிக்க.
2. இந்தியாவில் கோவில் கட்டிடக்கலைக்கு குப்தர்கள், பல்லவர்கள், சோழர்களின் பங்களிப்பை விவரி.
3. கட்டிடக்கலை சிற்பக்கலையின் வெவ்வேறு பாணிகள் இந்தியாவில் எங்கு காணப்பட்டது?
4. புத்தமதம் சமணமதம், இந்தியாவில் கட்டிடக்கலையின் வளர்ச்சியில் பங்களித்தது - விவாதிக்க.
5. டெல்லி சுல்தானியர்கள் ஆட்சிகாலத்தில், நினைவுச் சின்னங்களின் கட்டுமாணப்பணியை எவ்வாறு யூகிப்பாய்?
6. மொகலாயர் காலத்தில் கட்டிடக்கலை இந்திய, பாரசீக மங்கோலிய, முகலாய பாணிகளின் கூட்டிணைவு விவரி.
7. டெல்லியின் கதையைப்பற்றி உனது சொந்த வார்த்தைகளில் விவரமாகக் கூறுக.
8. தில்லி ஹை வாலன்கி-இந்த பழமொழியின் பொருளைக் கண்டு பிடிக்கவும். இந்த தலைப்பின் மீது ஒரு கட்டுரை வரைக. இணையத்தின் மீது நீங்கள் தேடலாம் அல்லது நூலகத் திலிருந்து புத்தகங்களை பெற்றுக் கொள்ளலாம்.

## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 13.1

1. சிறந்த பேரரசுகள், வம்சங்களின் தோற்றம், மறைவு இந்திய துணை கண்டத்தில் இந்திய பண்பாட்டின் வளர்ச்சி அமைப்பில் செல்வாக்கடைந்தன.
2. மொஹஞ்சதாரோவின் இடத்திலுள்ள 'பொதுக்குளம்' அவர்களுடைய பொறியியல் திறமைகளுக்கு சாட்சியளிக்கின்றன.
3. குசிநகரம்
4. லும்பினி, சாரநாத், போதிமரம், குஷிநகரம்.

5. குப்தருடைய காலத்தில்
6. சமய கட்டிடக்கலை சார்ந்த எஞ்சியவை புத்தருடன் தொடர்பானவை
7. லோத்தால் - குஜராத்

## கேள்விகளுக்கான பதில்கள் 13.2

1. மரத்தினால் செதுக்கப்பட்ட ஒரு பெரிய அரண்மனை
2. சாஞ்சி தூண் சாரநாத் தூண்
3. ஒரே கல்லினால் ஆன தூண்களின் மீது
4. (i) காந்தாரக்கலை, (ii) மதுரா மரபுக்குழுமம், (iii) அமராவதி மரபுக்குழுமம்.
5. ஓரிசாவில்
6. ராஷ்டிர கூடர்கள்
7. பல்லவர்கள்
8. விமனா அல்லது ஷிக்காரா, உயரமான சுவர்கள், கோபுரங்களினால் உயர்த்தப் பட்ட நுழைவாயில் ஆகியவற்றை கோவில் கட்டிடக் கலையைச் சார்ந்த பாணியைக் கொண்டிருந்தது.
9. பிரகதீஸ்வரர் கோவில்
10. கோவில்கள், ஷிக்காரர்க்கள்(சுருள் வளைவுகள்) கர்பகிரகம் (புனிதமான இடம்) மண்டபம் (தூண்களைக் கொண்ட முற்றம்) ஆகியவற்றுடன் கட்டப்பட்டது.
11. நரசிம்ம தேவா - 1
12. தில்வாரா கோவில்

## கேள்விகளுக்கான பதில்கள் 13.3

1. மாடவிதானங்கள், வளைவுகள், தூண்கள்.
2. (i) டெல்லியிலுள்ள குவாட்டிபுல் மசூதி
   (ii) குதுப்பினார் - டெல்லியில்
   (iii) முகமது துக்ளக்கின் சமாதி
   (iv) பிரோஷா துக்ளக்கின் சமாதி
   (v) இப்ராஹிம் லோடியின் சமாதி - டெல்லியில்
   (vi) சசாரத்தில் ஷெர்ஷாவின் சமாதி
3. கோல் கொம்பாஸ்
4. மொகலாயர் காலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்களின் உள்வேலை அலங்கரிப்பு
5. புலந்தர்வாஜா

## கேள்விகளுக்கான பதில்கள் 13.4

1. பசிலிகா பாம்ஜிசஸ், புனித பிரான்சிஸ் தேவாலயம்
2. லுட்யன்ஸ்
3. கிரேக்க, ரோமானிய கட்டிடக்கலை பணிகள்.
4. காலனி கலைப்பொருட்களைக் கொண்ட அருட்காட்சியக வீடானது
5. பிரெஞ்சு சிற்பி கார்பூசியர்
6. ஆஸ்திரிய சிற்பி ஸ்டெயின்
7. (i) ராஜ்ரேவல்
   (ii) சார்லஸ் கொரியா

## கேள்விகளுக்கான பதில்கள் 13.5

1. ஹாரப்பா, மொகஞ்சதாரோ, காளிபங்கன், சுர்கோடா, ராஜ்கிர், வாரணாசி, அயோத்யா, அஸ்தினாபுரி, உஜ்ஜைன், சரவஸ்தி கபிலவஸ்து, கௌசாம்பி அல்லது எந்த மற்றவை,கள் இந்தப்பாடத்தில் குறிப்பிடப்படவில்லை.
2. பனாஜி, பாம்பே, மச்சிலிப்பட்டினம், நாகப்பட்டினம், மெட்ராஸ், கல்கத்தா அல்லது ஏதாவது மற்றவை,கள் இவற்றில் ஏதாவது 5 இந்த பாடத்தில் குறிப்பிடப்படவில்லை.
3. மிசௌரி, சிம்லா, நைனிடால், டார்ஜிலிங், ஷில்லாங், நீலகரி, கொடைக்கானல் அல்லது ஏதாவது மற்றவை,கள் இவற்றில் எதாவது 5 இந்தப் பாடத்தில் குறிப்பிடப்படவில்லை.
4. சிவிலியன் அதிகாரிகள்
5. ராணுவ அதிகாரிகள்.

## கேள்விகளுக்கான பதில்கள் 13.6

1. உயர்நீதிமன்ற கட்டடம், பனிவீடு, புனித ஜாண் தேவாலயம், பொது தபால் அலுவலகம் அல்லது ஏதாவது மற்றவை,கள் இந்த பாடத்தில் குறிப்பிடப்படவில்லை.
2. ஹௌராபாலம், சலவைக்கல் அரண்மனை, எழுத்தாளர்களின் கட்டிடம், வில்லியம் கோட்டை, ஏதேன் தோட்டங்கள், விக்டோரியா ஞாபக கூடம், அல்லது ஏதாவது மற்றவை, கள் இவற்றில் ஏதாவது 4 இந்தப் பாடத்தில் குறிப்பிடப்படவில்லை.
3. தலைமைச் செயலகம், கவுன்சில்ஹால், எல்பின்ஸ்டன் கல்லூரி, விக்டோரியா முடிவிடம் (நவீன சத்ரபதி சிவாஜி முடிவிடம்) இந்தியா நுழைவாயில் அல்லது எதாவது மற்றவை,கள், இவற்றில் ஏதாவது 4 இந்த பாடத்தில் குறிப்பிடவில்லை.

## கேள்விகளுக்கான பதில்கள் 13.7

| வ.எண் | நகரத்தின் பெயர் | இதைக்கட்டிய அரசனின் பெயர் |
|---|---|---|
| 1 | இந்திர பிரஸ்தா | யூதிஷ்திரா |
| 2 | லால்காட் | அனங்பால் தோமா |
| 3 | மெஹரல்லி | பிரிதிவிராஜ் சௌகான் |
| 4 | சிரி | அலாவுதீன் கில்ஜி |
| 5 | ஜகன்பனா | முகமது பின் துக்ளக் |
| 6 | துக்லக்கா பாத் | கியாசுதின் துக்ளக் |
| 7 | பிரோசாபாத் | பிரோஷா துக்ளக் |
| 8 | தின்பனா | ஹீமாயுன் |
| 9 | ஹாஜஹானா பாத் | ஹாஜஹான் |

2. குத்புதின் பக்தியார் காகி, நைசாமதின் அவுலியா ஷேக் நசிருதீன் முகமது, அமீர்குஸ்ரு அல்லது மற்றவை,கள் இந்த பாடத்தில் குறிப்பிடப்படவில்லை.

# அலகு - VI

# அறிவியல், தொழில் நுட்பம்

*14. இந்தியாவில் அறிவியல், தொழில் நுட்பம்*

*15. பண்டைய கால இந்திய விஞ்ஞானிகள்*

*16. மத்திய கால இந்தியாவின் அறிவியல், விஞ்ஞானிகள்*

*17. நவீன கால இந்தியாவின் விஞ்ஞானிகள்*

# 14

# இந்தியாவில் அறிவியல், தொழில்நுட்பம்

உலகின் எந்த பிரிவினைச் சார்ந்த மக்களைப் போல, இந்தியர்களும் அறிவியல் கருத்து சார்ந்த பண்புகளைக் கொண்டுள்ளனர். சோதனைகள் கூர்ந்து நோக்குதல் ஆகியவற்றுடன் தெரியாதைப் பற்றித் தெரிந்து கொள்ள விருப்பம் அறிவியல் மனப் பான்மையை ஏற்படுத்தியது. இது, பல வகையான சிக்கலான உண்மைகளை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளன. உண்மைக்குப் பின்பு இருக்கிற புதிர்களை இருக்கும் வளங்களைளக் கொண்டு மனித இனத்தின் முன்னேற்றத்திற்கு தெளிவுபடுத்துவது அறிவியல் அறிஞர்களின் பொறுப்பாக இருந்தது. தொடருகின்ற பக்கங்களில் தொடர்ந்து அறிவு உண்மையைத் தேடுதல், கண்டுபிடிப்புகள், புதியதாக உருவாக்கப்படுதல் இவற்றின் செயல்பாடுகள், ஒவ்வொரு நாளும் இந்தியாவில் வழக்கமாக நடைபெறுகிறது என்பதை பற்றி படிப்பீர்கள்.

## நோக்கங்கள்

இந்த பாடத்தைப் படித்த பிறகு, உங்களால், திறமையாக்

- இந்தியாவின் அறிவியல் வளர்ச்சியைக் கண்டுணர
- பல்வேறு அறிவியல் துறைகளில் இந்தியாவின் பங்களிப்புக் களைப் பற்றி அங்கிகரிக்க
- பல்வேறு ஆற்றல்கள் காரணிகள் அறிவியலின் வளர்ச்சிக்கு எந்த காலத்தில் உதவின என்பதைப் பற்றி ஆராய்
- நவீன இந்திய அரசியல், அதன் அறிவியல் மரபுக்கு இடையில் உள்ள தொடர்பை கவனத்திற்கு கொண்டு வர முடியும்.

## 14.1 பண்டைய கால இந்தியாவில் அறிவியலின் வளர்ச்சி

கணிதவியலை, கணிதம் என்று பொதுவான பெயரால் அழைக்கப்பட்டு எண் கணிதம், வடிவியற் கணிதம், இயற்கணிதம், வானியல், ஜோதிடம் ஆகியவை இவற்றுள் அடங்கியுள்ளன. எண் கணிதத்தை பாட்டின் கணிதா (குழுவில் கணக்கிடுகளை) அங்க்கா கணிதா (எண்கள் கொண்ட கணக்கிடுகளை) என பலவகைப்பட்ட பெயர்களால் அழைக்கப் பட்டது. வடிவியற் கணிதத்தை ரேகா கணிதா (வரி படைப்புகள்), இயற் கணிதத்தை பிஜ கணிதா (விதை ஆய்வு) என்றும் அழைக்கப்படுகிறது. வானியல், ஜோதிடம் “ஜியோதிசா” என்ற பகுதியில் அடங்கியுள்ளன.

இந்தியா, அறிவியல், தொழில் நுட்பத்தில் வளமான மரபைக் கொண்டுள்ளது. அறிவியலின் வளர்ச்சியினால், இயற்கையை எதிர்நோக்கும் நிலையிலிருந்து விடுபடலாம். சமயம், அறிவியல் பண்டைய இந்தியாவில் நெருக்கமாக இயங்கின பண்டைய காலத்தில் அறிவியலின் உட்பிரிவுகளின் வளர்ச்சியைப் பற்றி நாம் காணலாம்.

## வானியல்

வானியல் சிறந்த முன்னேற்றத்தை கொடுத்து, கோள்களின் இயக்கங்களை கூர்ந்து கவனிக்கப்பட்டு, வலியுறுத்தப்பட்டது. வானிவியலில் ‘ஜோடிஸ் வேதங்கா’ என்ற நூல் முறையாக வகைப்படுத்தலை ஏற்படுத்தியது. ஆனால் பிரச்சனைகள் ‘ஆர்யபட்டா’ வினால் (கி.பி. 499) கையாளப்பட்டது. இவருடைய ஆர்யபாட்டியா என்ற சுருக்கமான நூல் 121 கவிதைகளை உள்ளடக்கியது. இது வானவியலின் பொருள் விளக்கங்கள், கோள்களின் உண்மையான நிலையை தீர்மானிக்கக் கூடிய வழி முறைகள், சூரிய, சந்திர இயக்கங்களின் வருணனை சூரிய சந்திர கிரகணங்களின் கணக்கீடுகள் ஆகியவற்றின் பகுதிகளை வெவ்வேறாக கொண்டிருந்தது. பூவி உருண்டை வடிவமானது, தன்னுடைய அச்சில் சுற்றுகிறது புவியின் நிழல் சந்திரன் மீது விழும் பொழுது சந்திர கிரகணம் ஏற்படுகிறது சந்திரன் நிழல் புவியின் மீது விழும் பொழுது சூரிய கிரகணம் ஏற்படுகிறது என்ற காரணத்தை கூறியுள்ளார். வழி வழியாக வந்த மரபுக் கோட்பாடுகள் இந்த நடைமுறைகளை தீய ஆவி உரு கோளத்தை விழுங்கிவிட்டது என முரணான கருத்துகளை விவரித்துள்ளது. இவை எல்லாவற்றையும் கூர்ந்து நோக்குதலை வராகமிகிறரால் பஞ்ச சித்தாந்திகாவில் கருத்து சுருக்க விவரமாக ஐந்து தனிமுறை வானியல் மரபுக் குழுக்களில் விவரிக்கப்பட்டுள்ளது. ஆர்ய பட்டா வேத வானவியலிலிருந்து மாற்றி அறிவியல் நோக்கமாக கொடுத்து, பிந்தைய வானவியல் ஆய்வாளர்களுக்கு இவைகள் வழி காட்டியாக ஆனது. பண்டைய இந்தியாவில் ஜோதிடம் ஜாதகம் கற்கப்பட்டது. ஆர்யபட்டாவின் ஜோதிடத்தி லிருந்து விலகிச் சென்ற குறிப்பிடத்தக்க விதிகள் அறிவியல் ஆய்வுகளைவிட நம்பிக்கைகளின் மீது அதிக அழுத்தத்தை காட்டினது.

## கணிதவியல்

ஹாரப்பாவின் நகரத்திட்டம் மக்கள் அளவீடுகள், வடிவியற் கணிதத்தில் சிறந்த அறிவைப் பெற்றிருந்தார்கள் என காட்டுகிறது. கி.பி. 3 ஆம் நூற்றாண்டுகளில் கணிதவியல் அறிவுத் துறையில் தனிப்பட்ட உட்பகுதியாக வளர்ந்தது. இந்தியக் கணிதவியல் சல்வசூத்திராவிடமிருந்து தோன்றியது என யூகிக்கப்படுகிறது.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் அபஸ்டம்பாவில், குறுங்கோணம், விரிகோணம், செங்கோணம் ஆகிய வடிவியற் கணித செயல்முறையின் ஈடுபாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த அறிவு அரசர்கள் உயிர் பலி கொடுப்பதற்கான அக்னி பலிபிடம் கட்டுவதற்கு உதவியது. குறிமான முறைகள், தசம முறைகள் பூஜ்யத்தின் பயன்பாடு ஆகிய மூன்று முக்கிய பங்களிப்புகள் கணிதவியல் துறையில் இருந்தன. குறிமாணங்கள், எண் குறிகள் அரேபியர்களால் மேற்கே எடுத்துச் செல்லப்பட்டன. இத்தகைய எண் குறியீடுகள் ரோம எண்களை பரிமாற்றம் செய்தது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இந்தியாவில் ‘பூஜ்யம்’ கண்டுபடிக்கப்பட்டது. பிரம்ம குப்தருடைய ‘பிரம்மாஸ் குப்த சித்தாந்தம்’ தான் முதன் முதலான புத்தகம், அதில் பூஜ்யம் என்பது ஒரு எண் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இருந்தாலும் பிரம்மகுப்தா என்பவர் தான் பூஜ்யத்தை கண்டுபிடித்தார் என்று கருதப்படுகியது. அவர் பூஜ்யத்தை மற்ற எண்களுடன் பயன்படுத்துவதற்கு நியதிகளை கொடுத்துள்ளார். ஆர்யபட்டா இயற்கணிதத்தை கண்டு பிடித்து, முக்கோணத்தின் பரப்பளவை ஒருங்கமைத்தும், இவைகள் கோணவியலின் தொடக்கத்திற்கு வழிகாட்டியது.





சூர்ய சித்தாந்தர் என்பது மிகவும் பிரபலமான நூலாகும். கி.பி. 6 ஆம் நூற்றாண்டின் வானவியல் துறையில் மற்றமொரு முன்னோடி நூல், வராகமிகிரரின் 'பிரிஹட் சம்ஹிதா' ஆகும். சந்திரன் புவியைச் சுற்றுவது புவி சூரியனைச் சுற்றுவது பற்றின அவரது கூற்றுக்கு அங்கீகாரம் கண்டறியப்பட்டு பின்பு கண்டு பிடிப்புகள் இதே கூற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்தன. கணிதவியல், வானவியல் இரண்டும் சேர்ந்து காலம் பற்றியும் பிரபஞ்சத்தின் அமைப்பு பற்றியும் ஆய்வு செய்வதில் ஆர்வத்தை தூண்டின. இத்தகைய கண்டு பிடிப்புகள் வானவியல் கணிதவியலின் ஆய்வு, முன்னேற்றத்திற்கு முதன்மைக் கூறாக அமைந்தன.

## மருத்துவம்

முதன் முதலாக, அதர்வ வேதாவில் நோய்கள் நோய் தீர்க்கும் மருந்துகளைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. காய்ச்சல், இருமல், சய ரோகம், வயிற்றுப் போக்கு, நீர்க்கோவை, புண், தொழுநோய், மூளைப் பாதிப்பு ஆகிய நோய்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. பேய், தீய ஆவி ஒருவரின் உடலில் நுழைவது தான் நோய்களுக்கான காரணம் என்று சொல்லப்படுகிறது. மந்திர வாய்ப்பாடுகள், மந்திர சொற்களால் நிரப்பப்படுவதே இதற்கு சிபாரிசு செய்யப்பட்ட பரிகாரங்களாகும்.

கி.மு. 600 லிருந்து அறிவாட்சி அறிவியல் காலம் தொடங்கிற்று. தட்சிலா, வாரணாசி. மருத்துவம், மையங்களாகவும் கற்றல் மையங்களாத் தோன்றின. இந்த துறையில் சாரகாவினால் எழுதப்பட்ட சாரகம்ஹிதா, சுஸ்ருதா எழுதிய சுஸ்ருது சம்ஹிதா ஆகிய முக்கியமான இரண்டு நூல்களாகும். அவர்களுடைய வேலை எவ்வளவு முக்கியமானது என்பது பற்றி சீனா, மத்திய ஆசியா ஆகிய நாடுகள் வரை வெவ்வேறு மொழிகளில் மொழி பெயர்ப்புகளின் மூலம் முக்கியம் அடைந்துள்ளது என்ற தகவல் களிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

செடி, கொடிகள்,குட்டைப் புதர்ச் செடிகள், மருத்துவ காரணங்களுக்காக பயன்படுத்தப்பட்டன என்று சாரகா சம்ஹிதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி. நான்காம் நூற்றாண்டில் அறுவை சிகிச்சை மருத்துவத்தின் உட்பகுதியாக குறிப்பிடப்பட்டுள்ளது. "சுஸ்ருதாஞ இந்த அறிவுத்துறையின் முன்னோடியாக இருந்தார். இவர் அறுவைத்துறையை மேலான நிலையைக் கொண்ட குணமளிக்கும் கலையாக, குறைந்த அளவு குறைபாடுகளைக் கொண்டது என்று கருதினார். இவர் 121 மருத்துவ துணைக்கலங்களை குறிப்பிடுகிறார். இதனுடன் அறுவைச் சிகிச்சை செய்யும் முறை, எலும்பு பொருத்துதல், கண் சதை வளருதலைப் பற்றியும் குறிப்பிடுகிறார். பண்டைய இந்தியாவில் அறுவை சிகிச்சை மருத்துவர்கள், ஓட்டறுவை மருத்துவத்தில் பரிச்சய மானவர்களாக இருந்தனர் (மூக்கு, காதுகள் உதடுகளை பழுது பார்த்தல்) சுஸ்ருதா 720 செடி கொடிகளைப் பற்றி குறிப்பிடுகிறது. செடி கொடிகளின் வேர்கள், மரப்பட்டைகள், பூக்கள், இலைகள் முதலிய எல்லா பகுதிகளும் பயன்படுத்தப்பட்டன. திட்டமிடப்பட்ட உணவைப் பொருத்து தான் மன அழுத்தம் ஏற்படுகிறது. (உதாரணமாக சிறுநீரக கோளாறுகளுக்கு உப்பில்லாத உணவு) பிந்தைய நூற்றாண்டுகளில் சரக்சம்ஹிதா சுங்ருசம்ஹிதா ஆகிய இருவரும் இந்திய மருத்துவ வளர்ச்சியின் முன்னோடிகளாயினர். அறுவை சிகிச்சை முந்தைய மத்திய காலத்தில் பாதிப்புக்கு உட்பட்டாலும் மழிப்புத் தகடைக் கொண்டு பகுதிகளாக வெட்டுதல், பின்பு சவரத் தொழிலாளியின் வேலையாக மாறியது.

## உலோகவியல்

சிந்து சமவெளி அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட சுட்ட களிமண்ணால் செய்யப்பட்ட பளபளக்கும் மட்பாண்டங்கள் வெண்கல பொருட்களும், கலை பொருட்களும் உலோகக் கலையின் வளர்ச்சியைக் குறிக்கின்றன.

வேதகால மக்களின் தானியத்துகள்களை புளிக்க வைத்தல், பழங்கள், தோல்களைப் பதனிடுதல், சாயம் இடும் செயல் முறைகளை அறிந்திருந்தனர்.

முதலாம் நூற்றாண்டில் இரும்பு, செம்பு, வெள்ளி, தங்கம் போன்ற உலோகங்கள், பித்தளை, வெண்கலம் போன்ற கலப்பு உலோகங்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டது. பல பாகங்களைக் கொண்ட குதுப்மினாரின் இரும்புத் தூண் உயர்ந்த ரக கலப்பு உலோகத்தால் செய்யப்பட்டது என்பதைக் குறிக்கிறது. சுண்ணாம்புக் காரம், அமிலங்கள் தயாரிக்கப்பட்டு, மருந்துகள் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டன. இந்த தொழில்நுட்ப அறிவியல், சாயம், நிறங்கள் தயாரிக்கும் கைத்திறன்களுக்கும் பயன்படுத்தப்பட்டது. தொழிற்சாலையில் சாயம் உற்பத்தி செய்தல் மிகவும் பிரபலமாக இருந்தது. அஜந்தா குகை சித்திரங்களில் பூசப்பட்ட வண்ணங்கள் அதனுடைய உயர்ந்த தரத்தை பிரதிபலிக்கின்றன. இத்தகைய ஓவியங்கள் இன்று வரை நிலைத்துள்ளது. இரண்டு மீட்டர் உயரத்தில் வெண்கலத்திலான புத்தரின் உருவகம் சுல்தான் கன்ஜில் (பகல்பூருக்கு அருகில்) கண்டெடுக்கப்பட்டுள்ளது.

## புவியியல்

மனிதனும், இயற்கையும் அடிக்கடி ஒன்றுடன் ஒன்று கொண்ட தொடர்பு, இயற்கை மனிதனை புவியியலைக் கற்றுக் கொள்ள உந்தியது. சீனா மேற்கத்திய நாடுகளின் புவியியலின் இயற்கை அமைப்பைப் பற்றி தெளிவாக இருந்தாலும், புவியியல் அவர்களுடைய நிலை, பிறநாடுகளுடன் உள்ள இடைவெளி ஆகியவற்றைப் பற்றி அறியாதவர்களாக இருந்தனர். கப்பல் கட்டும் தொழிலுக்கு இந்தியர்களும் பங்களித்தனர். பண்டைய காலத்தில், கடல் பயணமும் விமானப் பயணமும் இந்தியர்களுக்கு பரிச்சயமானவை அல்ல, இருந்தாலும் குஜராத்திலுள்ள லோத்தால் என்ற பகுதியில் கப்பல் கட்டுதல் அல்லது பழுது பார்க்கும் இடம் இருப்பது முந்தைய நாட்களில் கடல் வாணிபம் செழிப்புற்று இருந்தது என்பதற்கு சான்று பகர்கிறது. முந்தைய மத்திய காலத்தில் தீர்த்தா, தீர்த்த யாத்திரை என்ற கோட்பாட்டின் வளர்ச்சியினால் திரளான புவியியல் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இறுதியாக அவைகளை புராணங்களின் ஒரு பகுதியாக தொகுக்கப்பட்டன. பல சூழ்நிலைகளில் ஸ்தல புராணமும் தனியாக தொகுக்கப்பட்டது.

## இப்பகுதிக்கான கேள்விகள் 14.1

1. அறிவியல் வளர்ச்சியின் முக்கியத்துவம் என்ன?
2. வானியலில், ஆங்டடாவின் பங்களிப்பு என்ன?
3. அபஸ்தம்பா என்பவர் யார்? கணிதவியலுக்கு அவரின் பங்களிப்பு?
4. பண்டைய இந்தியாவின் கணிதவியல் துறையின் மூன்று பங்களிப்புக்கள் யாவை?
5. பண்டைய இந்தியாவில் செடி கொடிகள், குட்டைச் செடிகள் மருத்துவ நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டன என்று எந்த புத்தகம் குறிப்பிடுகின்றது?
6. சுஸ்ருத சம்ஹிதாவில் எத்தனை அறுவை மருத்துவ துணைக்கலங்களை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன?
7. இந்திய மருத்துவ வளர்ச்சியின் முன்னோடிகளான இரண்டு புத்தகங்களின் பெயரைக் கூறுக?
8. பண்டைய கால இந்தியாவில் எத்தனை மருத்துவ தாவரங்கள், அறுவை மருத்துவர்களுக்கு பரிச்சயமாக இருந்தது?

## 14.2 மத்திய கால இந்தியாவில் அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சிகள்

மத்திய காலத்தில் (11-ஆம் நூற்றாண்டிலிருந்து 18 ஆம் நூற்றாண்டு வரை) ஒருவர், முந்தைய மரபுகளில் ஏற்கனவே முழுமையாக ஈடுபாடு கொண்டிருத்தல், மற்றவர் இஸ்லாமிய, ஐரோப்பிய விளைவுகளினால் ஏற்பட்ட புதிய தாக்கங்கள் இந்தியாவில் அறிவியல், தொழில்நுட்பம் முன்போ அல்லது பின்போ வளர்ச்சி அடைந்தது. கல்வி கற்பிக்கும் நிறுவனங்களாக மக்தாப்புகளும் மதராசர்களும் பயிற்று விக்கக் கூடிய பாடங்களுடன் விளங்கின. இத்தகைய நிறுவனங்கள் அரசர்களின் ஆதரவைப் பெறுவது வழக்கமாக இருந்தது. ஷேக் அப்துல்லா, ஷேக் அசிசுல்லா என இரு சகோதரர்கள் பகுத்தறியக் கூடிய அறிவியல் தேர்ச்சி பெற்று சம்பல் ஆக்ரா ஆகிய இடங்களில் உள்ள மதராசா கல்வி நிறுவனங்களுக்கு தலைமை வகித்தனர். அரேபியா, பாரசீகம் மத்திய ஆசியாவிலிருந்து கற்றலில் தேர்ச்சி பெற்றவர்களை இத்தகைய மதராசாக்களில் கற்பிப்பதற்கு வரவழைக்கப் பட்டனர்.

அரசர்களாலும் மேற்குடி மக்களால், பொருட்கள் செயற் பணிக்கு வேண்டிய துணைக் கருவிகள், அரசுப் பல்பொருள் அங்காடிகளின் விநியோகத்திற்காக ஏராளமான பணிப்பட்டறைகள் நிர்வகிக்கப்பட்டன. பணிப்பட்டறைகள், உற்பத்தி செய்யக் கூடிய முகமைகளாக மட்டும் செயல்படாமல், இயந்திர இயக்கம், தொழில் கல்வி சார்ந்த பயிற்சியையும் இளைஞர்களுக்கு அளிக்கக் கூடிய மையங்களாக திகழ்ந்தன. பணிப்பட்டறைகள், கைவினைஞர்கள், கைத்தொழில் வல்லுநர்களை வெவ்வேறு துறைகளில் நன்கு பயிற்சி பெறச் செய்தது, பிற்காலத்தில் அவர்களே சுயமாக தங்களுக்கு பணிபட்டறையை அமைத்துக் கொண்டார்கள்.

இஸ்லாமிய ஆட்சியாளர்கள், தொடக்கப்பள்ளிகளில் பயிற்றுவிக்கப்படும் பாடங்களை சீர் திருத்த முயற்சித்தார்கள். எண் கணிதம், அளவை நூல், வடிவியற் கணிதம், வானியல், கணக்கியல், பொது நிர்வாகம், வேளாண்மை போன்ற பாடங்கள், தொடக்கக் கல்வியல் சேர்த்துக் கொள்ளப்பட்டன. கல்வியில் சீர்த்திருத்தம் கொண்டு வர ஆட்சியாளர்களால் கடும் முயற்சி எடுக்கப்பட்டாலும், இந்த நாள்களில் அறிவியலில் இது வரை எந்த முன்னேற்றமும் இல்லை. இந்திய பாரம்பரிய அறிவியல் பண்பாடு, மற்ற நாடுகளின் பரவலான அறிவியல் அணுகுமுறை ஆகிய இரண்டுக்கும் இடையே பலவற்றின் கூட்டு இணைப்பை ஏற்படுத்த மற்ற நாடுகளில் முயற்சிகள் எடுக்கப்பட்டன.

### உயிரியல்

13-ஆம் நூற்றாண்டில், ஹம்சதேவா, மிருக- பாசி- சாஸ்திரத்தை தொகுத்தார். இது எப்பொழுதும் சில விலங்குகள், பறவைகளின் வேட்டையாடுதலைப் பற்றி கூறாமல் பொதுவாக அறிவியல் கணக்கை கொடுக்கிறது. மத்திய கால ஆட்சியாளர்கள், போர் வீரர்களாக வேட்டையாடுபவர்களாக இருந்ததால், குதிரைகள், நாய்கள், சிறுத்தை புலிகள் வல்லூறுகளை வைத்துக் கொண்டிருந்தனர். விலங்குகள் வளர்ப்பு பிராணிகளாகவும், காட்டு விலங்குகளாகவும் அவர்களுடைய மேலாண்மையின் கீழ் இருந்தன. அக்பர் வளர்ப்புப் பிராணிகள் யானைகளின், குதிரைகளின் இனப் பெருக்கத்திற்கு மிகுந்த அக்கறை காட்டினார். ஜகாங்கீர் தன்னுடைய துஜீகி- ஐ- ஜகாங்கிரி களைந்தெடுப்பதிலும் இனக்கலப்பிலும் தோன்றின விலங்கினைப் பற்றிய சோதனைகளை தான் கூர்ந்து நோக்கினதை பதிவு செய்துள்ளார். அவர், ஒரே இனத்தைச் சார்ந்த ஒருங்கிணைந்து இனப்பெருக்கம் செய்யக்கூடிய 36 வகை விலங்கினங்களைப் பற்றி விவரித்துள்ளார். இவருடைய அவை ஓவியர்கள், குறிப்பாக மான்சூர் விலங்குகளை நேர்த்தியாக, துல்லியமான ஓவியமாக படைத்து உள்ளனர். அவற்றில்

சில ஏராளமான அருங்காட்சியகத்தில் தனியாரின் திரட்டுதலாக இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இயற்கைவாதியான ஜகாங்கீர், செடி கொடிகளைப் பற்றி கற்று கொள்வதில் ஆர்வம் கொண்டிருந்தார். மலர்களால் தொடுக்கப்பட்ட ஓவியம் 57 செடி கொடிகளை வர்ணிக்கிறது.

## கணிதவியல்

ஏழாம் நூற்றாண்டின் சிறந்த கணிதவியல் வல்லுனரான பிரம்ம குப்தர், பூஜ்யத்தை விடக் குறைந்தது கடன்கள் என்றும், பூஜயத்தை விடப் பெரியது செல்வவளம் என்றும் விவரித்துள்ளார். இவை பண்டைய காலத்தில் பாரதியர்கள் வாணிகச் செயல் முறையில் கணிதவியலின் பயன்பாடு பற்றி அறிந்திருந்தனர்.

முந்தைய மத்திய காலத்தில் ஸ்ரீதராவினால் கணித சாரா, பாஸ்கராவினால் லீலாவதி ஆகிய இரண்டு குறிப்பிடத்தக்க கணிதவியல் நூல்கள் எழுதப்பட்டன. கணித சாரா, பெருக்கல், வகுத்தல், எண்கள், கனச்சதுரம், வர்க்கமூலம் என்றிவ்வாறாக கையாண்டார். கணேஷ் தைவஜ்னர் ஏராளமான விளக்கப் படங்களுடன் கூடிய லீலாவதி என்ற நூலின் மீது புத்திவிலாசினி என்ற கருத்துரை நூலை எழுதினார். 1587-இல் லீலாவதியை ‘பைடி’ என்பவரால் பாரசீக மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. ஷாஜஹானுடைய காலத்தில் அட்டுல்லா என்பவரால் பிஜகணிதம் மொழி பெயர்க்கப்பட்டது. நீல்கந்தா ஜியோதிர்வித் அக்பர் அவையை சேர்ந்தவர். ஏராளமான பாரசீக இயந்திர இயக்கமுறை தொடர்புகளை அறிமுகப்படுத்தி, ‘டஜிக்கை’ தொகுத்துள்ளார். கல்வித்துறையில் மற்ற எல்லா பாடங்களிலும் கணிதவியலை கற்கக் கூடிய பாடமாக அறிமுகப்படுத்தும் படி அக்பர் ஆணையிட்டார். பஹாவுடன் அமுலி, நாசிருதின் டுசி, அரக், அல் - கஷி ஆகியோர் இந்தத் துறைக்கு விலைமதிப்பற்ற பங்களித்துள்ளனர். மாரகா, வானிலை ஆய்வுகூட நிறுவனர், இயக்குநர், நாசிருதின் டுசி என்பவர் அதிகாரியாக அங்கரிக்கப்பட்டார்.

## வேதியியல்

பண்டைய இலக்கியம் தென் இந்தியாவில் பொதுவாக பனை ஓலைகளில் காஷ்மீர் மற்றும் நாட்டின் பிற வட மாநிலங்களில் பூச்ச மரத்தின் பட்டைகளில் எழுதும் காகிதம் அறிமுகமாவுதற்கு முன்பேயிருந்தே பாதுகாக்கப்பட்டு வந்தன. மத்திய காலத்திலேயே காகிதம் உபயோகித்தல் தொடங்கப்பட்டது. காஷ்மீர், சியால்காட், ஜபராபாட, பாட்னா, மூர்ஷிதா பாத், அஹமதா பாத், அவுரங்கா பாத், மைசூர் போன்றவை காகிதம் உற்பத்தி செய்யும் பிரபலமான மையங்களாகும். திப்பு சுல்தான் காலத்தில் தங்கத்தினால் ஆன மேற்பரப்பை கொண்ட சிறப்பான ஒருவகை காகிதம் தயாரிக்கும் தொழில் சாலையை மைசூர் கொண்டிருந்தது. காகிதம் செய்யும் உத்தி, நாடு முழுவதிலும் ஏறக்குறைய ஒரே மாதிரிதான் இருந்தது. பல்வேறு கனிமங்களிலிருந்து, பல்வேறு வகைகளில் தயாரிக்கக் கூடிய காகிதக் கூழ் மட்டும்தான் வேறுபட்டு இருந்தது.

முகலாயர்கள், துப்பாக்கியில் பயன்படுத்தப்படும் வெடி மருந்துகளை தயாரித்தல், துப்பாக்கியில் அதன் பயன்பாடு பற்றின உத்திகளை அறிந்திருந்தனர். இந்திய கைவினைஞர்கள், வெடி மருந்துகலவைகளை பொருத்தமாக்கி முறையாக வெளிப்படுத்துக் கூடிய உத்திகளை கற்றுக் கொண்டனர். அவர்கள், கந்தகம், நிலக்கரி ஆகியவற்றை வெவ்வேறு அளவில் கலந்து, வெவ்வேறு வகை துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தக் கூடிய வெடி மருந்துகளை தயாரிக்கும் முறைகளை அறிந்திருந்தனர். சீற்றத்துடன் தீப்பொறிகளை பல்வேறு நிறங்களை வெளிப்படுத்தி காற்றை கிழித்துக் கொண்டு வெடிப் பொலியுடன் முடிகின்ற முதன்மையான பட்டாசு வகைகள் இதில் அடங்கும். டுசுக்கி - ஐ- பாபா பீரங்கிகளை

உருவாக்குதல் பற்றி அறிக்கை கொடுத்திருக்கிறார். உருக்கப்பட்ட உலோகத்தை வார்ப்பில் ஊற்றப்பட்டு பின்பு குளிர வைக்கப்படுகிறது. வெடி மருந்துகளை தவிர மற்ற உருப்படிகளும் தயாரிக்கப்பட்டன. அய்னி - ஐ - அக்பரி, அக்பரின் வாசனை திரவிய அலுவலகத்தின் விதிமுறைகளைப் பற்றிப் பேசுகிறது. பிரபலமான வாசனைத் திரவியமான ரோஜாக்களின் அத்தரைக் கண்டுபிடித்தமைக்கு நூர்ஹாகனின் அம்மா தான் காரணம். இக்காலத்தில் பளபளப்பான ஒடுகள், பானைகளைப் பற்றியும் இங்கு குறிப்பிடலாம்.

## வானவியல்

வானவியலில் ஏற்கனவே வான சாஸ்திர கருத்துகளைப் பற்றி ஏராளமான விளக்க உரைகள் கொடுக்கப்பட்டுள்ளன. உஜ்ஜையின் வாரணாசி, மதுரா, டெல்லி ஆகிய இடங்கள் முதன்மையான வானிலை ஆய்வுக் கூடங்களாகும். பிரோஷா துகளக், டெல்லியில் கூர்ந்து கண்காணிக்கும் பணிகளை ஏற்படுத்தினார். பிரோஷா பாமினி, ஹக்கிம் ஹீ செயின் ஜியானி சையத் முகமது கசிமி தலைமையில் ஒரு வானிலை ஆய்வுக் கூடத்தை, அவுரங்காபாத்தில் நிறுவினார். சூரிய, சந்திரனுக்குரிய இரண்டு ஆண்டுக் குறிப்புகள் பயன்பாட்டில் இருந்தன.

பிரோஷா துகளக் அவையின் வானியல் ஆய்வாளரான மஹேந்திரா சூரி, யந்த்ராஜா என்று அழைக்கப்படுகிற வானவியல் துணைக்கலத்தை வளர்ச்சியுறச் செய்தார். பரமேஷ்வரா, மஹாபாஸ்காரியா ஆகியவர்கள், பிரபலமான வானியல் குடும்பத்தைச் சார்ந்தவர்கள், பஞ்சாங்கத்தை உருவாக்குபவர்கள். நிலகந்த சோம சுத்வன், ஆர்யப்பட்டாவைப் பற்றி கருத்துரையை உருவாக்கினார். கமலாகர் வானவியலில், இஸ்லாமிய கருத்துகளை கற்றுக் கொண்டார். இவர் இஸ்லாமிய அறிவிலும் நல்ல தேர்ச்சி பெற்றவர். இரண்டாம் ஜெய் சிங், ஜெய்ப்பூர் மகாராஜா, ஐந்து வானியல் ஆய்வுக் கூடங்களை, டெல்லி, உஜ்ஜைனி, வாரனாசி, மதுரா, ஜெய்ப்பூர் ஆகிய இடங்களில் நிறுவினார்.

## மருத்துவம்

பல்வேறு நோய்கள் பற்றின, சிறப்பான ஆய்வுக்கட்டுரைகளை வளரச் செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டன. நோய் கண்டறிதல் தொடர்பாக, நாடித் துடிப்பு, சிறுநீர் பரிசோதனைகள் நடத்தப்பட்டது. சரங்கதாரா ‘சம்ஹிதா’ மருந்துகளுக்கு அபினியை உபயோகிக்க சிபாரிசு செய்கிறது. ராச சிக்கிட்சா முறை உலோக பண்புகளைக் கொண்ட திரளான கனிமங்களுடன் கூடிய முதன்மையான மருந்துகளால் கையாளப்பட்டது. 17 ஆம் நூற்றாண்டில் ‘முகமது முனின்’ என்பவரால் எழுதப்பட்ட டக்யட் - உல் - முமினின் என்ற பாரசீக ஆய்வுக் கட்டுரை மருத்துவர்களின் கருத்துகளை விவாதிக்கிறது.

யுனானி திப் என்ற முக்கியமான மருத்துவமுறை மத்திய கால இந்தியாவில் வளர்ச்சி அடைந்தது. அலி - பின் - ரபன், கிரேக்க மருந்து, இந்திய மருத்துவ அறிவின் முழு தொகுதிகளை, ‘பிர் டௌசு - ஹிக்மட்’ என்ற புத்தகத்தில் சுருக்கி கூறியுள்ளார். யுனானி மருத்துவ முறை சுமாராக 11 ஆம் நூற்றாண்டில் முஸ்லீம்களுடன் இந்தியாவிற்கு வந்து, அதன் வளர்ச்சிக்குரிய சூழ்நிலையை உடனடியாக கண்டு கொண்டது. ஹகிம்தியா முகமது, அரேபிய, பாரசீக மற்றும் ஆயுர்வேத மருத்துவ அறிவுகளை ஒன்று படுத்தி ‘மஜ்னிதியே’ என்ற புத்தகத்தை தொகுத்துள்ளார். பிரோஷா துக்ளக், திபி பிரோஷாஜி என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். அவுரங்கசீப்பிற்கு அர்பணிக்கப்பட்ட ‘டிபி அவுரங்க சீப்’ என்ற புத்தகம் ஆயுர்வேத மூலங்களை அடிப்படையாகக் கொண்டது. நூருதின் முகமது, கிரேக்க மருத்துவத்தைக் கையாளுகின்ற முசலாஜட்டி தாரா ஷிகோஹி என்ற புத்தகம் தாரா ஷிகோவுக்கு அர்பணிக்கப்பட்டுள்ளது.

## விவசாயம்

விவசாயம் செய்யும் முறை ஏறத்தாழ, முந்தைய, அதற்கும் முந்தைய பழங்கால இந்தியாவில் இருந்ததைப் போல, மத்திய காலத்தில் இருந்தது. புதுப் பயிர்கள், மரங்கள், வேளாண் கலை செடி கொடிகளை அறிமுகப்படுத்தல் ஆயினும் சில முக்கியமான மாறுதல்கள் வெளிநாட்டவர்களால் கொண்டு வரப்பட்டது. கோதுமை, அரிசி, வால் - கோதுமை, துவரை வகைகள், எண்ணெய் வித்துகள், பருத்தி, கரும்பு, கரு நீல சாயம் ஆகியவை முதன்மை பயிர்களாகும். மேற்கு தொடர்ச்சி மலைகள், நல்ல தரமான கருப்பு, மிளகு, காஷ்மீர் தன்னுடைய பரம்பரை உற்பத்தியான குங்குமம் மற்றும் பழங்களை தொடர்ந்து விளைவிக்கின்றன. தமிழ் நாட்டிலிருந்து இஞ்சி, இலவங்கப்பட்டை, கேரளாவிலிருந்து ஏலக்காய், சந்தனக்கட்டை, தேங்காய்களின் பிரபலம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. 16 ஆம் மற்றும் 17 ஆம் நூற்றாண்டுகளில் புகையிலை, மிளகாய், உருளைக்கிழங்கு, கொய்யா பழம், சீத்தா பழம், முந்திரி, அன்னாசிப் பழம் போன்ற புதிய தாவரங்கள் இந்தியாவை வாழும் இடமாக செய்தது. மாள்வா, பீகார் போன்ற வட்டாரங்களும், கசகசா செடியிலிருந்து அபினி தயாரிப்பதில் புகழ் பெற்றுள்ளன. செம்மையான தோட்டக்கலை முறைகள் சிறந்த வெற்றியுடன் தழுவப்பட்டன. 16 ஆம் நூற்றாண்டின் மத்திய காலத்தில், ஒட்டு மாமரத்தை முறையாக கோவாவைச் சார்ந்த ஜேசூட்டுகளால் அறிமுகப்படுத்தப்பட்டது.

நீர்ப்பாசனத்துறையில் தொடர்ச்சியாக செயல்படுத்தக்கூடிய வழிமுறைகளான கிணறுகள், நீர் கொள்ளும் கலன்கள், ரகட்ஸ், சராஸ் (தோலினால் செய்யப்பட்ட வாளிகள்) தென்கிலி போன்றவைகளிலிருந்து நுகத்தடியால் பின்னப்பட்ட எருதுவின் உதவியால், தண்ணீர் இறைக்கப்பட்டது. உள் மற்றும் வெளிப்பகுதிகளைச் சார்ந்த ஆக்ரா வட்டாரத்தில், பாரசீக சக்கர வண்டிகள் பயன்படுத்தப்பட்டன. மத்திய காலத்தில் விவசாயத்திற்கு அரசால் திடமான அடித்தளமிட்டு நிலத்தை அளத்தல், தர வாரியாக நிலங்களைப் பிரித்தல் போன்ற முறைகள், ஆட்சியாளர், வேளாண்மை செய்பவர் ஆகிய இருவருக்கும் நல்ல பலனைக் கொடுத்தது.

## இப்பகுதிக்கான கேள்விகள் 14.1

1. மத்திய கால இந்தியாவில் பணிப் பட்டறைகளின் வேலைகள் யாவை?
2. 13-ம் நூற்றாண்டில், மிர்கா - பக்சி - சாஸ்திராவை தொகுத்தது யார்?
3. மாரகா விண்வெளி ஆய்வுக் கூடத்தின் ஸ்தாபகர் இயக்குநர் யார்?
4. லீலாவதியை பாரசீக மொழியில் மொழி பெயர்த்தவர் யார்?
5. எந்த முகலாய மன்னர், கணிதவியலை கற்கும் பாடமாக அறிமுகப்படுத்தியவர்?
6. பேப்பரைக் கண்டறியும் முன்பு, எவ்வாறு இலக்கியம் பாதுகாக்கப்பட்டது?
7. மத்திய காலத்தில், சூடேற்றின உலோக குழம்பினால் வார்க்கப்பட்ட பீரங்கியைப் பற்றி எந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?
8. நூர்ஜகானின் அம்மாவால் கண்டு பிடிக்கப்பட்ட வாசனைத் திரவத்தின் பெயரைக் கூறுக?
9. அய்னி - இ - அக்பரி எதைப் பற்றி கூறுகிறது?
10. ஜெய்ப்பூரைச் சார்ந்த, இரண்டாம் மஹாராஜா சவை ஜெய் சிங்கால், எத்தனை விண்வெளி ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டது? இந்த விண் வெளிக் கூடங்கள் எங்கு அமைந்துள்ளன?
11. யந்த ராஜாவை வளர்ச்சியடைச் செய்தது யார்?

12. யந்த ராஜா என்பது என்ன?
13. மத்திய காலத்தில் முகலாயர்களுடன் எத்தகைய யுனானி மருத்துவ முறை இந்தியாவிற்கு வந்தது?
14. ராச சிகிட்சா எதைப் பற்றி கூறினது?
15. 16 மற்றும் 17 ஆம் நூற்றாண்டில் இந்தியாவை அடைந்த புதிய தாவரங்கள் எவை?

## 14.3 நவீன காலத்தின் அறிவியல், தொழில் நுட்பம்

இந்தியாவின் அறிவியல், தொழில் நுட்பத்தின் முன்னேற்றத்தைப் பற்றி ஆலோசனை செய்வதற்கு முன்பு, அறிவியல், தொழில் நுட்பம் என்பதின் பொருள் என்ன என்பது பற்றி நாம் தெரிந்திருப்பது அவசியம்.

அறிவியலை இயற்பியல் சார்ந்த உலகில் எந்த ஒரு முறையான செயலும் அறிவைப் பெறுவதற்கு நாடுகிறதாக வரையறுக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்பம் உற்பத்திக்கு பயன்படக் கூடிய அறிவை செயல்படுத்துதல் ஆகும். இத்தகைய பொருள் விளக்கங்கள் அறிவியல் தொழில்நுட்பம் இன்றைய உலகில் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டுள்ளது என்பதை தெளிவாக காட்டுகிறது.

இந்தியாவில் தேசிய வளர்ச்சிக்கு அறிவியல், தொழில் நுட்பத்தின் பங்கு, சரியான நேரத்தில் அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்பட்டது. இரண்டாம் ஜந்தாண்டுத் திட்டம், “பொருளாதார வளர்ச்சியை முன்னேறச் செய்ய, மிகமுக்கியமான ஒரே ஒரு காரணி, மக்கள் சமூக இனம், அறிவியல், தொழில் நுட்பங்களை நடைமுறைப்படுத்த தயாராக இருக்கவேண்டும், என்று வலியுறுத்துகிறது. புதிய பகுதிகளில் அறிவியல் தொழில் நுட்பத்தை முன்னேறச் செய்ய தொழில் நுட்பத்துறை ஏற்படுத்தப்பட்டது. இதைப் போலவே, மாநில அளவிலும், மாநில அறிவியல் தொழில் நுட்பகவுன்சில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அறிவியல் செயல்பாடுகளை ஊக்கமூட்டுதல் தேசிய கொள்கையின் ஒரு பகுதியாக இருப்பதால், அரசாங்கம் பல்வேறு ஆராய்ச்சி வளர்ச்சி அடைய திட்டங்களை முன் வைத்தது. இந்த பகுதியில் அறிவியல் அறிவு, நவீன தொழில் நுட்பங்கள் ஏற்படுத்தின தாக்கங்களைப் பற்றின சில முக்கியமான பகுதிகளை எடுத்துக் கொள்வோம்.

### விவசாயம்

30 ஆண்டுகளுக்கு முன்பு 50 மில்லியன் டன்கள் உணவு தானியங்கள் உற்பத்தி செய்த இந்தியா இன்று 135 மில்லியன் டன்கள் எடையுள்ள உணவு தானியங்களை உற்பத்தி செய்யக் கூடிய திறமை பெற்றுள்ளது. ஏனேன்றால், இது முக்கியமாக நவீன அறிவியல் தொழில் நுட்பத்தின் பயன்பாட்டினாலாகும், இத்தகைய பயன்பாடுகள் கலப்பு வகை விதைகளை விவசாயம் செய்வதிலிருந்து, விவசாயத்தில் சக்தி மேலாண்மை, பிந்தைய அறுவடை தொழில் நுட்பம் வரை பரவியிருந்தது. இத்தகைய கடினமுயற்சியில் ‘இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம்’ முதன்மைப் பங்கை வகித்தது. 73 விவசாய, 32 கால்நடை, 8 விவசாய பொறியியல் 1 பால் பண்ணை கல்லூரிகள் மூலமாக இந்திய விவசாயம், ஆராய்ச்சி கழகம் விவசாயிகளின் அறிவியல் கல்விக்காக முதன்மையான பங்கெடுத்தது. விவசாயத்தில் வெவ்வேறு உட்பிரிவுகள், விலங்குகளைக் காத்தல், மீன் வளர்ப்பு, காடு வளர்ப்பு அறிவியல் ஆகியவற்றில் மற்றவர்கள் ஈடுபட்டனர். அதிகமாக உற்பத்தியைக் கொடுக்கக்கூடிய அரிசி, தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பணப்பயிர்கள், தோட்டப் பண்ணைகள் தொடங்குதல் சமூக காடுகளை

வளர்த்தல், வேதியில் செயற்கை உர விவசாயத்திலிருந்து, இயற்கை உர விவசாயத்திற்கு மாறுதல் ஆகியவை, விவசாயம் எதிர் கொண்டிருக்கும் சவால்கள் ஆகும்.

## தொழிற்சாலை

இது, நவீன அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் இந்த தொழிற்சாலைத் துறையில் முந்தைய நாளிலேயே மிக முக்கியமான புரட்சிகரமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவில் அரசாங்கம் நவீன அறிவியல் தொழில் நுட்பங்களை தொழில்சாலை வளர்ச்சிக்கு சீரான முறையில் பயன்படுத்துவதற்கு முயற்சி செய்தது. இரண்டு அரசாங்க நிறுவனங்கள் தொழிற்சாலை ஆராய்ச்சி, அறிவியல் கழகம் (CSIR) பாதுகாப்பு ஆராய்ச்சி, வளர்ச்சி நிறுவனம் (DRDO) சிவில் மற்றும் பாதுகாப்பு நோக்கங்களுக்காக, இவைகளுக்கு இடையில் விசாலமான அளவில் அறிவியல், தொழில்நுட்ப ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

பழமையான வேளாண் இயந்திர சாதனங்கள், வேதியல் பொருட்கள், மருந்து சரக்குகள், பூச்சி கொல்லிகள் போன்ற ஏராளமான உருப்படிகள், அறிவியல், தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சிலின் ஆராய்ச்சி கூடத்திலிருந்து உணவு தொழில் நுட்பம், முடிவு பெற்ற தோல் பொருட்கள், கண்ணாடி, மண்பாண்டங்கள், கலர் தொலைக்காட்சி ஒளி , ஒலி வாங்கும் சாதனம் போன்ற பொருட்கள் தோன்றின. நிலக்கரித் துறையில் ஆராய்ச்சி, நிலக்கரியை மேம்படுத்துதல் நிலக்கரியிலிருந்து மின்சாரம் எடுத்து பயனளிக்கக் கூடிய வகையில் உபயோகப்படுத்துதல் ஆகும். இந்தியாவின் சொந்த தொழில் நுட்பத்தின் ஆற்றல் சிறப்பாக பாதுகாப்பு ஏரியாவிலும் அதிகரித்தது. அது போன்றே ஆற்றல்களுக்கு எடுத்துக்காட்டாக, அண்மைக் காலத்தில் உயர்வான ஆராய்ச்சியான ஏவுகணைகளை தயாரித்து சோதனைகளும் இந்தியாவில் நடத்தப்பட்டது. சில ஏவுகணைகள் மேலும் வளர்ச்சியடைய ஏற்கனவே சோதனைக்குட்படுத்தப்பட்டது.

## அணு சக்தி

அணு ஆற்றலை சமாதான நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டும் என்பது இந்தியாவின் நோக்கமாகும். கடந்த 63 ஆண்டுகளில், 1948இல் அணு சக்தி கமிஷன் தொடங்கி அணு சக்தி தொழில் நுட்பத்துறையில் இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. 1957இல் பாபா அணு சக்தி ஆராய்ச்சி மையம், டிராம்பேயில் தோற்றுவிக்கப்பட்டது. இந்த நாட்டில் இது பெரிய அளவிலான தனிப்பட்ட ஒரு அறிவியல் நிறுவனமாகும். தாராபூர் (மஹாராஷ்ரா) கோட்டா (ராஜஸ்தான்) கல்பாக்கம் (தமிழ்நாடு) நரோரா (உத்திரபிரதேசம்) கக்ராபர் (குஜராத்) ஆகிய இடங்களில் அணு சக்தி நிலையங்கள் ஏற்கனவே தொடங்கப்பட்டுவிட்டன.

இந்திய பொருட்களைக் கொண்டு நவீன தொழில்நுட்பத்தை தழுவி கட்டப்பட்ட அணு உலைகளின் எண்ணிக்கை அதிகரிக்க வழி வகுத்தது. இதன் விளைவு, வெளிநாட்டவரின் உதவியின்றி தானே அணு சக்தி உலைகளைத் திட்டமிட்டப்படி கட்டி இயக்கக் கூடிய அளவிற்கு இன்று இந்தியா சில உலக நாடுகளில் ஒரு நாடாக திகழ்கிறது. அணு சக்தி அறிவியல்கள் தவிர, மின்னணுவியல், மருத்துவம், உயிரியல், வேளாண்மை, உலோகவியல் ஆகிய துறைகளில் ஆராய்ச்சி, முன்னேற்றத்திற்கான வேலைகள் சில அணு சக்தி மையங்களில் நடைபெற்றன.

## விண்வெளி தொழில்நுட்பம்

விண்வெளி தொழில்நுட்பத்தை தேசிய முன்னேற்றத்திற்காக பயன்படுத்துவதில் இந்திய விண்வெளி நிகழ்வுகள், தன்னம்பிக்கை என்ற இலக்கை நோக்கி வழி காட்டப்பட்டது.





விண்வெளி நிகழ்வுகள் சில ஆண்டுகளாக தன்னுடைய சாதனைகளை ஏற்படுத்தியுள்ளன. அவைகள் 1975 இல் செலுத்தப்பட்ட முதல் இந்திய விண்வெளி செயற்கைகோள் ஆர்யப்பட்டா, இரஷ்யாவிலிருந்து பாஸ்கரா I பாஸ்கரா II, இந்திய விஞ்ஞானிகளால் வடிவமைக்கப் பட்ட ரோகிணி செயற்கைகோள், விண்கலமான SLV -3 ஆப்பிள் செயற்கைகோள், ஐரோப்பிய விண்வெளி மையத்தின் ஏரியாள் விண்கலம் மூலம் செலுத்தப்பட்டன. SITE என்ற செயற்கைகோள் மூலம் அடையமுடியாத அளவு கல்வியில் ஏற்படுத்துகின்ற பரிசோதனை 1975இல் நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து இன்சாட் 1-1B, 1983இல் செலுத்தப்பட்டு வானொலி, தொலைக்காட்சி, தொலைத் தொடர்பு, வானிலை ஆய்வு பற்றிய நிகழ்ச்சிகள் விண்ணிலிருந்து மண்ணிற்கு அனுப்பப்படுகின்றன. பத்தாண்டு காலமாக 1985 லிருந்து 1995 வரை விண்வெளி தொழில் நுட்பத்தை தேசிய அளவிலான பயன்பாட்டிற்காக தொலை தொடர்பு ஆராய்வு மேலாண்மை இயற்கை வளங்கள், வானிலை ஆகியவற்றை நோக்கமாக கொண்டு முக்கிய விண்வெளிக் குழு தோற்றுவிக்கப்பட்டது.

## மின் அணுவியல்

விடுதலை அடைந்ததிலிருந்து இந்தியா வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள், தொலைத்தொடர்பு முறைகள், ஒலிப்பரப்பக் கூடிய கருவிகள், ராடார்கள், அணு உலைகள், மின்கட்டுப்பாட்டு முறைகள், நீருக்கடியில் உள்ள அமைப்புகள் போன்ற மின் அணு சாதனங்களை பெரிய அளவில் உற்பத்தி செய்யக் கூடிய திறமையைப் பெற்றிருந்தது. பெரிய அளவிலான உள்ளடக்கிய பகுதிகள் இந்தியாவின் தேவைகளுக்கேற்ப தயாரிக்கப்பட்டன. கடந்த 10 ஆண்டுகளில் மின்னணுப் பொருட்களின் உற்பத்தி 18 சதவீதமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இன்று, உலகின் வெவ்வேறு பகுதிகளுக்கும் கூட நாம் மின்னணுக் கருவிகளை ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறோம். மேலும் திறமையை முன்னேற்ற மற்றும் உற்பத்தியை மேம்படுத்த கணினிகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. முக்கியமான வசதிகள் கொண்ட குறைகடத்தி மட்டுப்படுத்தப்பட்ட குழுமம் (சண்டிகர்) தேசிய கணினி மையம் (மும்பை) தேசிய தகவல் மையம் (நியு டில்லி) மற்றும் ஏராளமான வட்டார கணனி மையங்கள் அண்மையில் நிறுவப்பட்டன.

## மருத்துவமும் சுகாதார அறிவியலும்

மருத்துவத் துறையில் அங்கு பல சாதனைகள் இருந்து கொண்டிருந்தன. பல்வேறு நோய்களைத் தடுப்பதற்கும் சிகிச்சை கொடுப்பதற்கும் முக்கியமான முன்னேற்றங்கள் உருவாக்கப்பட்டன. பெரிய அம்மை முற்றிலும் ஒழிக்கப்பட்டது. எலும்புருக்கி, மலேரியா, யானைக்கால் நோய், கண்ட மாலை புற்றுநோய் போன்ற நோய்களுக்கு சிகிச்சை கணிசமாக முன்னேறியுள்ளது. தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு, ஆராய்ச்சி நடத்தப்படுகிறது. ஆராய்ச்சி யை அடிப்படையாகக் கொண்ட செயல்கள், பராட்டக் கூடிய அளவிற்கு, ஏற்கனவே உயிர் வாழும் வாய்ப்புள்ள கால அளவை நீடித்துள்ளது மற்றும் இறப்பு சதவிகிதம் குறைந்துள்ளது. அதே சமயம், நோய் தடுப்பு செயல்களுக்கான திட்டங்கள், இறப்பு விகிதத்தை கணிசமாக குறைந்துள்ளது. அரசால் நடத்தப்படும் மருத்துவ மனைகள், வைத்திய சாலைகள், ஆராய்ச்சி கழகம், தொடக்க சுகாதார மையங்கள், கிராமப்புற பகுதிகளுக்கு வளமான மருத்துவ வசதிகளை அளித்து வந்தது.

## கடல் ஆய்வு மற்றும் வளர்ச்சி

இந்தியாவிற்கு கடல் வளர்ச்சித் துறையில் கடல் எண்ணெய் ஆய்வு, உணவு விநியோகத்தை அதிகரிக்க மீன் வளங்கள் முதலியவற்றில் அதிக நாட்டம் கொண்டிருந்தது. பிரதமமந்திரியின் பொறுப்பில் கடல் ஆராய்ச்சில் இந்தியாவின் செயல்களை, ஒரு

முகப்படுத்தவும் வழிகாட்டவும் கடல் வளர்ச்சி என்ற இலாகா 1981-இல் தோற்றுவிக்கப்பட்டது. இந்த இலாகா ORV- சாகர் கன்யா FORV- சாகர் சம்படா என இரண்டு கப்பல்களை கொண்டிருந்தது. இவை வேதியல், ரசாயன, உயிரியல், புவியியல், புவியிர்ப்பியல், கடலியியல் சீதோஷ்ண சாஸ்திரங்கள் போன்ற நவீன வசதிகள் இந்த துறைகளில் பணி புரிவதற்காக அமைக்கப்பட்டிருந்தன. கடந்த சில ஆண்டுகளில் சுரங்க கடல் படுக்கைகள் கவேஷ்னா என்ற ஆய்வுக் கப்பலைப் பயன்படுத்தி அண்டார்டிகாவில் தட்ஷின் கங்கோத்ரி என்ற பெயரில் ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்தியது இந்தியாவின் சாதனைகளாகும்.

## பிற பகுதிகள்

மேலே குறிப்பிட்ட முதன்மையான பகுதிகளைத்தவிர, இந்தியா மற்ற பல்வேறு துறைகளிலும் சிறந்த முன்னேற்றம் அடைந்துள்ளது. இவைகள், எண்ணெய் ஆய்வு மற்றும் சுத்திகரிப்பின் சூழல் பாதுகாப்பு மற்றும் சூரிய சக்தி உற்பத்தியில் எண்ணெய், இயற்கை எரிவாயு கமிஷன், தேசிய குழு சூழல் திட்டமும் அடங்கும். கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையை பயன்படுத்தி கங்கை ஆறு மாசு படுதலைக் கட்டுப்படுத்த கங்கை மைய மேலாண்மையுரிமை ஏற்படுத்தப்பட்டது.

## அறிவியல், தொழில் நுட்பத்தின் முன்னேற்றம் பற்றிய மதிப்பீடு

இந்தியாவின் அறிவியல், தொழில்நுட்பத்தின் முன்னேற்றம் மிகவும் குறிப்பிடத்தக்கது என்பது தெளிவாகிறது. பல புது முறைகளினால் உற்பத்தி பொருட்கள், சிறந்த தரமான பொருட்கள் நாட்டில் வளர்ச்சியடைந்துள்ளன. இந்தியா அறிவியல், தொழில்நுட்பத்தில் விண்வெளி ஆராய்ச்சி, அணு சக்தி போன்றவைகளில் எல்லைப்புற பகுதிகளில் துரிதமாக முன்னேற்றத்தை அடைந்துள்ளது. இந் நாளில், இந்தியா நவீன தொழில் நுட்பத்தில் வலிமையான அஸ்திவாரத்தைக் கொண்டுள்ளது. இது, உலகில் மூன்றாவது பெரிய அளவிலான மனிதவள தொழில் நுட்பத்தையும் கொண்டுள்ளது.

அதே சமயம், சில கடுமையான குறைபாடுகளும் இந்த வளர்ச்சியில் இருந்தன. உதாரணமாக, நெசவு, இரும்பு போன்ற அடிப்படை பொருட்களில் இந்தியா வெளிநாட்டு தொழில் நுட்பத்தை இறக்குமதி செய்து கொண்டிருந்தது. தொடர்ந்து வெளிநாட்டு தொழில் நுட்பத்தை இறக்குமதி செய்வது, தேவைக்கு தகுந்த புதிய தொழில் நுட்பத்தை உருவாக்குவதில் நமது திறமையின்மையைக் காட்டுகிறது, இது மற்ற நாடுகளிடம் எதிர்பார்க்கும் நிலையையும் உருவாக்குகிறது. நவீன ஆயுதங்கள் அடிக்கடி மற்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்வது, பெரும்பாலான அளவில் அந்திய தொழில் நுட்பத்தைச் சார்ந்திருப்பது முக்கிய பாதுகாப்புத் துறையிலும் தெளிவாகக் காணப்படுகிறது. புதிய தொழில் நுட்பத்தை உருவாக்குவதில் பலவீனம் தவிர, ஏழை மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதிலும், தொழில் நுட்பத்தை வளர்ச்சி அடையச் செய்வதிலும் இந்தியா பின்தங்கியிருந்தது. உதாரணமாக, இந்தியா ஏழை மக்களின் தேவைகளை அதாவது வீடு இல்லாதவர்களுக்கு, தொழில் நுட்பமுறையில் குறைந்த செலவில் வீடுகள் அமைக்கும் பகுதிகளை இன்னும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டியுள்ளது. அணு ஆராய்ச்சி விண்வெளி ஆராய்ச்சி துறை களின் முன்னேற்றம் பாராட்டக்கூடியது தான். இதனால் ஏழை மக்கள் இந்நாள் வரை எந்த வித உதவியும் அடையவில்லை. நவீன அறிவியல் தொழில் நுட்பத்தினால் நன்மைகள் பெறாவிடினும், இந்திய மக்கள் அனைவரும் சமமாக பலனடைந்துள்ளனர் என்று நாம் கூறலாம்.

## இப்பகுதிக்கான கேள்விகள் 14.3

1. அறிவியல் என்பது என்ன?
2. தொழில் நுட்பத்தை வரையறு?
3. இந்திய அரசாங்கத்தால், அறிவியல், தொழில்நுட்ப இலாக்கா எப்பொழுது ஏற்படுத்தப்பட்டது?
4. அறிவியல், தொழில் நுட்பத்தில் சிவில், பாதுகாப்பு நோக்கத்திற்காக ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும் இரண்டு அரசாங்க நிறுவனங்களின் பெயரைக் குறிப்பிடுக?
5. இந்தியாவில் ஐந்து அணு சக்தி நிலையங்களின் பெயர்களைக் கூறுக?
6. பாபா அணு ஆராய்ச்சி மையம் எங்கு எப்பொழுது ஏற்படுத்தப்பட்டது?
7. இந்தியாவின் முதல் விண்வெளி செயற்கைக்கோள் எது?
8. இன்சாட் IB செயற்கை கோளின் செயல்முறைகள் யாவை?
9. தடைக்காப்பு நிகழ்வுகள் எவ்வாறு பயனளிக்கின்றன?
10. தக்ஷின் கங்கோத்ரி எங்கு அமைந்துள்ளது?
11. பெருங்கடல் வளர்ச்சித் துறையின் செயல்பாட்டுப் பகுதியின் இடப்பகுதி எவ்வளவு?
12. கங்கை ஆற்றின் மாசுபடுதலைக் கட்டுப்படுத்த எந்த நிர்வாகம் செயல்பாடுகிறது?
13. எண்ணெய் வள இட ஆய்வு வாயுக்களை சுத்திகரிக்கக் கூடிய தேசிய உரிமம் பெற்ற இடத்தின் பெயரைக் கூறுக?
14. அயல் நாட்டு தொழில் நுட்பத்தை இறக்குமதி செய்வதின் குறைபாடு என்ன?

## நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- பண்டைய கால இந்தியர்கள், பெருமளவிலாக அறிவியல், தகவல் தொழில் நுட்பத்தில் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.
- வானவியல், கணக்கியல், மருத்துவம், உலோகவியல், வேதியல் ஆகியவற்றில் அவர்களுடைய பங்களிப்பு நவீன விஞ்ஞானிகளிடையே பெறும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
- மத்திய காலத்தில் இந்தியர்கள், அரேபியர்களின் அறிவியல் அறிவுடன் தொடர்பு கொண்டிருந்தனர்.
- துருக்கிய மன்னர்கள், முகலாயர்கள் வெடிமருந்தை அறிமுகப்படுத்தினர்.
- உஜ்ஜையி, வாரனாசி, மதுரா, ஜெய்ப்பூர், டெல்லியில் வானவியல் ஆராய்ச்சிக் கூடங்கள் நிறுவப்பட்டன.
- நவீன இந்தியாவில் அறிவியல் முன்னேற்றத்திற்கு, அரசால் சரியான நேரத்தில் அங்கீகாரம் கொடுக்கப்பட்டு அதை ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப் பட்டது.
- அணு சக்தியை, சமாதான நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டது.
- இந்திய விண்வெளி நிகழ்வுகள் தன்னம்பிக்கை, தேச முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு இயக்கப்பட்டன.

குறிப்புகள்

## பயிற்சிக்கான கேள்விகள்

1. பண்டைய கால இந்திய மக்களின் உலோகவியல் ஆற்றலைப் பற்றி விவாதிக்க?
2. மத்திய காலத்தில் ரசாயணத்துறையின் இரண்டு கண்டுபிடிப்புக்களைப் பற்றி விவரி?
3. இந்தியாவினால் வளர்ச்சி அடைந்த மருத்துவம், உடல் நல சேவைகளைப் பற்றி விவரி?
4. வேளாண்துறையில் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்களின் பயன்பாடு பற்றி கூறுக?
5. நவீன இந்திய அறிவியல் வளர்ச்சியில் அறிவியல் மரபு எவ்வாறு வளமான சொத்தாக செயல்பட்டது?

## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 14.1

1. அறிவியல் முன்னேற்றம் இயற்கையின் மீது நமது எதிர்பார்ப்புகள் அறிவியலின் முன்னேற்றத்தினால் குறைகிறது.
2. அவர் வேத வானவியலில் இருந்து விலகி, அதனுடைய அறிவியல் வெளித்தோற்றத்திற்கு கொடுத்தார்.
3. அபஸ் தம்பா என்பவர், இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த கணக்கியல் வல்லுனராவர். அவர் குறுங்கோணம், விரிகோணம், செங்கோணம் ஆகியவற்றுடன் கூடிய நடைமுறை வடிவியல் கணிதத்தை அறிமுகப்படுத்தினார்.
4. அ. குறியீடு முறை
   ஆ. பின்ன முறை
   இ. பூஜ்யத்தின் பயன்பாடு
5. சாரக் சம்ஹிதா
6. 121 அறுவை சிகிச்சை துணைக் கலன்கள்
7. சாரக சம்ஹிதா, சஷ்டுசம்ஹிதா
8. 760 தாவரங்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 14.2

1. அவர்கள் பொருட்களை உற்பத்தி செய்வதைத் தவிர இளைஞர்களுக்கு தொழில் நுட்பம் தொழில் கல்வி பயிற்சியும் அளிக்கப்பட்டது.
2. ஹம்சதேவா
3. நாசிருதீன்
4. பைஜி
5. அக்பர்
6. தென்னிந்தியாவில் இதை பனை ஓலைகளில் பாதுகாக்கப்பட்டது. காஷ்மீரில் இலக்கியத்தை பூர்ச்சமரத்தின் தடிப்பான பட்டையில் பாதுகாக்கப்பட்டது.
7. துசிகி - இ - பாபரி
8. ரோஜா மலர்களின் பன்னீர்

9. அக்பரின் நறுமண அலுலகத்தின் ஒழுங்குமுறைகள்
10. டெல்லி, உஜ்ஜையினி, வாரனாசி, மதுரா, ஜெய்பூர்
11. மகேந்திரா சூரி, பிரோஷா அவையின் வானவியல் நிபுணராவார்
12. வானவியல் துணைக் கலன்கள்
13. யுனானி திப்
14. இது பிரதானமாக திரளான கனிம மருத்துவங்களுடன் உலோகத் தயாரிப்பில் அடங்கியதை கையாண்டது.
15. புகையிலை, மிளகாய், உருளைக்கிழங்கு, கொய்யா பழம், முந்திரி அன்னாச்சிப்பழம்

## கேள்விகளுக்கான பதில்கள் 14.3

1. இது, பௌதிக உலகினைப் பற்றின எந்த ஒரு முறையான செயலையும் அறிவைப் பெறுவதற்காக வரையறுக்ககூடும்.
2. அறிவியல் அறிவை, உற்பத்திக்காக பயன்படுத்தக் கூடிய செயல்
3. 1971
4. அறிவியல், தொழில் ஆராய்ச்சி கவுன்சில் (ஊளுஐசு) பாதுகாப்பு ஆராய்ச்சி, வளர்ச்சி நிறுவனம்
5. தாராபூர் (மஹாராஷ்டிரா), கோட்டா (இராஜஸ்தான்) கல்பாக்கம் (தமிழ்நாடு) நரோதா (உத்திரப்பிரதேசம்) காக்ரபர் (குஜராத்)
6. 1971 ஆம் ஆண்டு டிராம்பேயில்
7. ஆர்யப்பட்டா
8. இது, வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி, தொலை துார தொடர்பு, வானிலை ஆய்வு சேவைகள்
9. இது குழந்தை இறப்புகளின் எண்ணிக்கை குறைத்தது.
10. அண்டார்டிக்காவில்
11. இது, பௌதிக வேதியல், உயிரியல், நில நால், ஆழியியல் மற்றும் வானிலை ஆகிய துறைகளில் வேலை செய்கிறது.
12. கங்கை மைய அதிகாரி
13. எண்ணெய், இயற்கை எரிவாயு கமிஷன்
14. இது, புது தொழில் நுட்பத்தை உருவாக்குவதில் நமது திறமையின்மையை காட்டுகிறது.

15

# பண்டைய கால இந்திய விஞ்ஞானிகள்

முந்தைய பாடத்தில் நீங்கள் அறிவியல். தொழில்நுட்பத்திற்கும் உள்ள உறவு களைப் பற்றி படித்திருப்பீர்கள். இந்தப் பாடத்தில் பண்டைய இந்திய மருத்துவ அறிவியல், ஆயுர்வேதம், யோகா, வானவியல், ஜோதிடம், கணக்கியல், அறிவியல் துறைகளைப் பற்றிப் படிப்பீர்கள். பல ஆண்டுகளுக்கு முன்பே, அறிவியல் அறிவு பண்டைய இந்தியாவில் பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை அறியும் பொழுது நீங்கள் ஆச்சரியமடைவீர்கள்.

## நோக்கங்கள்

இந்தப்பாடத்தை படித்த பின்பு உங்களால்

- கணக்கியல் அறிவியல் துறைகளில் உலகிற்கு இந்தியாவின் பங்களிப்பை பட்டியலிட
- பண்டைய இந்திய விஞ்ஞானிகளான பௌதாயன், ஆர்யபட்டா, பிரம்மகுப்தா, பாஸ்கரா சார்யா, கனாட், வராகமிகிரா, நாகார்ஜீனா, சுஸ்ருதா, சாரகர், பதஞ்சலி போன்ற அறிஞர்களின் பங்களிப்பை பற்றி விவாதிக்க முடியும்.

## 15.1 கணக்கியலும் வானவியலும்

பண்டைய கால இந்தியாவில் அறிவியலும் கணக்கியலும் நன்கு வளர்ச்சி அடைந்திருந்தது. பண்டைய இந்தியர்கள் கணக்கியலுக்கும், அறிவு பல்வேறு அறிவியல் துறைகளுக்கும் பெரிய அளவில் பங்களித்துள்ளனர். இந்தப் பகுதியில் கணக்கியலின் வளர்ச்சி அவற்றிற்கு அறிஞர்களின் பங்களிப்பு பற்றியும் நீங்கள் படிக்கலாம். நவீன கால பல்வேறு கணக்கியல் கோட்பாடுகள் பண்டைய இந்தியர்களுக்கு தெரியும் என்பதை அறியும் பொழுது, நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். பண்டைய இந்திய கணக்கியல் வல்லுநர்கள், ஆவண மாக்குதலிலும் பரவலாக்குதலிலும் திறமை வாய்ந்தவர்களாக இல்லை. மேலும், நவீன மேற்கத்திய உலகில் அவர்களுடைய ஒத்த நிலையினரின் பங்களிப்புக்கு தகுதியான இடத்தை காணமுடியவில்லை. மேற்கத்திய உலகம், பெரும்பான்மையான உலகத்தை, வெகு காலமாக ஆட்சி செய்தது, இவை அறிவுத்துறையை உள்ளடக்கிய அதிகாரம் அவர்களை எல்லா வழிகளிலும் பிறரைவிட மிஞ்சியிருக்கும் நிலையைக் கோரும் உரிமையை கொடுத்தது. இப்பொழுது நாம் பண்டைய இந்திய கணக்கியல் வல்லுநர்களின் சில பங்களிப்புகளைப் பற்றி பார்ப்போம்.

## 15.1.1 பௌதாயன்

பௌதாயன் என்பவர் பல்வேறு கணக்கியல் கோட்பாடுகளையும், 'பை' யின் மதிப்பையும் முதன் முதலில் கண்டறிந்தவர். விருத்தம் அல்லது வட்டத்தின் சுற்றளவைக் கணக்கிட 'பை' மிகவும் பயனள்ளதாக உள்ளது என்று உங்களுக்குத் தெரியும். பல ஆண்டு களுக்கு முன்பே எழுதப்பட்ட பித்தாகரஸின் விதி ஏற்கனவே பௌதாயனின் 'சுல்வா சூத்திராவில்' கூறப்பட்டுள்ளது.

## 15.1.2 ஆர்யப்பட்டா

ஆர்யப்பட்டா என்பவர் 5 ஆம் நூற்றாண்டின் கணக்கியல் வல்லுநர்ஆவார். வானவியல், ஜோதிடம் இயற்பியல் வல்லுநர். அவர் கணிதத்துறையின் வழிகாட்டியாவார். தனது 23ஆவது வயதில் கணக்கியலின் சுருக்கமான 'ஆர்யபாட்டியம்' என்ற நூலை எழுதினார். புலமை மிக்க இந்த நூலில் நான்கு பிரிவுகள் உள்ளன.

முதல் பிரிவில் பெரிய தசம எண்களை எழுத்து தொகுதியால் குறிப்பிடுவது பற்றி விவரிக்கின்றார். இரண்டாம் பகுதியில் எண்விதி, வடிவியல் திரிகோணமிதி, பிஜ கணிதம் (அல்ஜிப்ரா) போன்ற நவீன கால கணக்கியல் தலைப்பிலிருந்து கடினமான வினாக் களைக் காணலாம். மீதமுள்ள இரண்டு பகுதிகளும் வானவியலைப் பற்றியதாகும்.

ஆர்யப்பட்டா பூஜ்யம் என்பது எண் மட்டும் அல்ல ஆனால் அது ஒரு கோட்பாடும் கூட, பூஜ்யத்தின் கண்டுபிடிப்பு புவிக்கும் நிலாவிற்கும் இடையே உள்ள துராத்தை துல்லியமாக கண்டுபிடிப்பதற்கு இயலக் கூடியதாக இருந்தது. பூஜ்யத்தின் கண்டுபிடிப்பு ஒரு புதிய எதிர்மாற எண்களின் பரிமாணத்திற்கும் வழி வகுத்தது.

ஆர்யப்பட்டாரின் இரண்டு இறுதி பகுதிகளும் வானியலைப் பற்றியது என்பதை நாம் முன்பே கண்டோம். அறிவியல் துறைக்கு குறிப்பாக வானிவியலில் ஆர்யப்பட்டாவின் பங்களிப்பு தெளிவாகிறது. வானவியல் அறிவியல் பண்டைய இந்தியாவில் மிகவும் முன்னேறி இருந்தது. இது 'ககோல்ஷாத்ரா' என்று அழைக்கப்பட்டது. நாளந்தாவில் புகழ்பெற்ற 'காகோல்' என்ற வானியல் ஆய்வுக்கூடத்தில் ஆர்யப்பட்டா படித்தார். வானவியலில் அறிவியல் வளர்ச்சி அடைந்து பற்றி நமது முன்னோர்கள் பெருமை அடைந்தார்கள். சரியான நாள் காட்டிகள், கால நிலை மழை, விதைக்கும் காலம், பயிர் வகைகள், பருவ காலங்களைக் குறிக்கும் தேதிகள் திருவிழாக்கள், கப்பல் போக்குவரத்து, காலக் கணக்கீடு மற்றும் ஜோதிடக்கலையில் ஜாதகக் கணப்பின் பயன்பாடு ஆகியவை, வானியல் வளர்ச்சியின் நோக்கங்களாக இருந்தன. பெருங்கடல்களையும் மற்றும் பாலைவனங்களைக் இரவு நேரங்களில் கடப்பதற்கு வானியல் அறிவு, குறிப்பாக அலைகள், விண்மீன்களைப் பற்றிய அறிவு தேவைப்படுகிறது.

ஆர்யப்பட்டா தன்னுடைய கருத்துக் கோட்பாட்டில் புவி உருண்டையானது, அது தன்னுடைய அச்சில் சுழன்று கொண்டிருக்கிறது என்று கூறுகிறார். பிரபலமான கருத்துகளை ஒரு பொருட்டாக கருதாமல், புவி கோளமானது 'அச்சாலா' (அசைய முடியாதது) என்றும் கூறுகிறார். சூரியன் கிழக்கிலிருந்து மேற்காகத் தோன்றும் அமைப்பு தவறு என்று சில உதாரணங்களைக் கொண்டு விவரிக்கின்றார். உதாரணமாக ஒரு மனிதன் படகில் பிரயாணம் செய்யும் பொழுது கரையில் உள்ள மரங்கள் எதிர் திசையில் நகருவதைப் போன்று தோன்றுகின்றன. மேலும் நிலா கோள்களும் சூரிய வெளிச்சத்தினால் பிரகாசிக்கின்றன என்று சரியாகக் கூறுகிறார். சூரிய சந்திர கிரணகங்கள் ராகு, கேது அல்லது மற்ற தீய சக்தியினால் ஏற்படுவது அல்ல என்று அறிவியல் விளக்கம் கொடுத்தார். இந்தியாவினால் சுற்றுப்பாதைக்கு அனுப்பப்பட்ட முதல் துணைக் கோள்களுக்கு ஆரியப்பட்டா என்று பெயரிடப்பட்டது ஏன் என்று இப்பொழுது உணருகிறீர்களா?

### 15.1.3 பிரம்மகுப்தா

ஏழாம் நூற்றாண்டில் பிரம்மகுப்தா கணதவியலை எட்டாத அளவிற்கு கொண்டு சென்றார். அவருடைய பெருக்கல்முறை இந்நாளில் பயன்படுத்தப்படுகிற அதே இடமதிப்பை பயன்படுத்தினார். அவர் எதிர்மறை எண்களை அறிமுகப்படுத்தி, பூஜ்யத்தின் செயல்முறைகளை கணக்கியலில் சேர்த்தார். அவர் எழுதிய 'பிரமஸபுத சித்தாந்திகா' என்ற நூலின் மூலம் அரேபியர்கள் நமது கணக்கியல் முறையை அறிந்து கொண்டனர்.

### 15.1.4 பாஸ்கரா சார்யா

12-ஆம் நூற்றாண்டில் பாஸ்கரா சார்யா ஒரு வழி காட்டும் ஒளியாக இருந்தார். அவர் கர்நாடகாவில் உள்ள பீஜப்பூர் என்னும் இடத்தில் பிறந்தார். அவருடைய 'சித்தாந்த சிரோமணி' என்ற புத்தகத்தினால் பிரபலமடைந்தார். இது நான்கு பகுதிகளாக பிரிக்கபப்பட்டுள்ளது. லீலாவதி (எண் கணிதம்) பிஜ கணிதம் (குறி கணக்கியல்) கோளத்யாயா (கோளவியல்) கிரக கணிதம் (கோள்களைப் பற்றின கணக்கியல்) சக்கரவத முறை அல்லது சுழற்சி முறையை குறி கணக்கியல் சமன் தொடரை தீர்ப்பதற்காக பாஸ்கரா அறிமுகப்படுத்தினார். 6ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிறகு ஐரோப்பிய கணக்கியல் வல்லுநர்களால் மறு ஆய்வு செய்யப்பட்டு அவர்களால் எதிர்மறையான சுழற்சி என பெயரிடப்பட்டது. 19ஆம் நூற்றாண்டில் ஜேம்ஸ் டெய்லர் என்ற ஆங்கிலேயர் லீலாவதியை மொழி பெயர்த்து உலகிற்கு இந்த சிறந்த நூலை தெரியப்படுத்தினார்.

### 15.1.5 மஹா வீராச்சார்யா

ஜைன இலக்கியத்தில் கணக்கியலைப் பற்றி தெளிவான விளக்கங்கள் உள்ளன (500 கிமு - 100 கிமு) சமண குருக்கள் இருபடிச் சமன்பாடுகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பதை அறிந்திருந்தனர். அவர்கள் பின்னங்கள் இயற்கணித சமன்பாடுகள், தொடர்வரிசை, கணங்களின் தேற்றம், மடக்கைகள் மற்றும் அடுக்குக் குறியீடுகளையும் ஆர்வமிக்க முறையில் வர்ணித்துள்ளனர். கி.பி. 85.ல் சமண குரு மஹா வீராச் சாரியா எழுதின 'கணித சாரா' சங்ரஹர் என்ற இன்றைய கணக்கியலை அடிப்படையாகக் கொண்ட முதல் புத்தமாகும். இன்றைய முறையான மிகச்சிறிய மடங்கு எண்களும் இவரால் வர்ணிக்கப்பட்டன. அதுவே ஜான்னேப்பியர் உலகத்திற்கு அறிமுகப்படுத்துவதற்கு வெகு காலத்திற்கு முன்பே இந்தியர்களுக்கு தெரிந்திருந்தது.

### இப்பகுதிக்கான கேள்விகள் 15.1

1. கணக்கியல் துறையில் பௌதாயனின் இரண்டு பங்களிப்புகளைக் கூறுக?
2. பூஜ்ஜியத்தை கண்டுபிடித்தவர் யார்?
3. பிரம்மஸ்புத சித்தாந்திகாவின் முக்கியத்துவம் என்ன?
4. கீழக்காணும் நூல்களை அவைகளின் எழுத்தாளர்களுடன் ஒப்பிடுக

| | நூலின் பெயர் | | எழுத்தாளரின் பெயர் |
|---|---|---|---|
| (i) | சுல்வ சூத்திரா | (a) | ஆர்யபட்டா |
| (ii) | ஆர்ய பாட்டியா | (b) | மஹாவீரா சார்யா |
| (iii) | பிரம்ஸ்பூடா சித்தாந்திகா | (c) | பௌதாயன் |
| (iv) | சித்தாந்த சிரோமணி | (d) | பிரமகுப்தா |
| (v) | கணித சார சங்ரகா | (e) | பாஸ்கரா சார்யா |

## 15.2 அறிவியல்

பண்டைய இந்தியர்கள், கணக்கியலைப் போலவே அறிவியல் அறிவுக்கும் பங்களித்தனர். இப்பொழுது நாம் பண்டைய இந்திய விஞ்ஞானிகளின் பங்களிப்பை கற்கலாம்.

### 15.2.1 கனாட்

கனாட் என்பவர் ஆறு இந்தியத் தத்துவங்களில் ஒன்றான வைஷேஷிகா மரபினைச் சார்ந்தவர். இவருடைய இயற்பெயர் 'அலுக்யா'. இவர் சிறுவயதாயிருக்கும் போதே கண்ணுக்குப் புலப்படாத 'கனா' என்றழைக்கப்படுகிற சிறு கூறுகளின் மீது மிகவும் நாட்டம் கொண்டிருந்தால் இவர் 'கனாட்' என்ற பெயர் பெற்றார். அவருடைய அணு கோட்பாடு எந்த ஒரு நவீன அணு கோட்பாட்டிற்கு பொருத்தமாக முடியும். கனாட்டின் கூற்றுப்படி பொருள் சார்ந்த உலகம் அணுக்களினால் ஆனது. இதை எந்த ஒரு மனித உறுப்புகளிலும் காணமுடியாது. இவைகளை மேலும் சிறுபாகங்களாகப் பிரிக்க முடியாது. இவ்வாறு அவைகளை பகுக்க முடியாது மற்றும் அழியாது. நவீன அணுகோட்பாடு என்ன கூறுகிறது என்பதை ஒரு வேளை நீங்களும் தெரிந்து இருக்கலாம்.

### 15.2.2 வராகமிகிரா

பண்டைய கால இந்தியாவில் மற்றுமொரு பிரபலமான விஞ்ஞானி வராகமிகிரர் ஆவார். இவர் குப்தர் காலத்தில் வாழ்ந்தார். வராகமிகிரா நீர்வள இயல், நில பண்பியல் உயரின வாழ்க்கை ஆய்தல் ஆகிய துறைகளில் பெரும்பங்கு வகித்துள்ளார். கரையான்களும் தாவரங்களும், பூமிக்கடியில் நீர் உள்ளது என்பதை எடுத்துக்காட்டும் குறிகாட்டிகளாக உள்ளன என்று உரிமைகோரிய முதல் விஞ்ஞானி இவர்தான். அவர் தண்ணீர் இருப்பதை காட்டும்' ஆறு விலங்கினங்கள், முப்பது தாவரங்களின் பட்டியல்களை தொகுத்தார். கரையான்கள் மரத்தை அழித்து விடுகிறது என்ற முக்கியமான செய்தியை கொடுத்திருக்கிறார். அதாவது அவை நீரின் மேல் பகுதியின் உட் சென்று பாம்பிஸ் என்ற தங்களுடைய வீடுகளை ஈரமாக வைக்க நீரை கொண்டு வருகின்றன. மற்றுமொரு உலக அறிவியலை ஈர்க்கக் கூடிய தேற்றமானது பிரஹத் சம்ஹிதாவில் வராகமிகிரானல் கொடுக்கப்பட்ட 'புவி அதிர்வு' மேகத் தேற்றமாகும். 32 அத்தியாங்களைக் கொண்ட சம்ஹிதா, பூகம்பத்தின் அறிகுறிகளுக்காகவே அர்பணிக்கப்பட்டுள்ளது. அவர் கோள்களின் செல்வாக்கு கடலுக்கடியில் நடைபெறக்கூடிய செயல்பாடுகள் நிலத்திற்கடியில் உள்ள நீர், வழக்கத்திற்கு மாறாக உருவாகும் மேகம் விலங்குகளின் இயற்கைக்கு மாறான நடத்தைகள் ஆகியவைகளை பூகம்பத்திற்கு தொடர்பு செய்ய முயற்சித்தார்.

வராகமிகிரா ஜியோடிசம் அல்லது ஜோதிடக் கலைத்துறைக்கு அளித்த பங்களிப்பு குறிப்பிடத்தக்கவையாகும். பண்டைய இந்தியாவில் ஜோதிடக் கலைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. வேகத்துடனே ஆரம்பமான ஜியோடிஷ் என்பதற்கு 'அறிவியலின் ஒளி' என்பது பொருள். இதை அறிவியல் பூர்வமாக ஆர்யப்பட்டாவிலும் வராகமிகிரரால் முறையாக்கப்பட்டது. ஆர்யப்பட்டா தன்னுடைய நூலான ஆர்யபாட்டியத்தின் நான்கு பகுதிகளில் இரண்டு பகுதிகளை வானவியலுக்கு அர்பணித்துள்ளார். இவை தான் சோதிடக் கலைக்கு அடிப்படையாகும். விக்கிரமாதித்யனின் அவையைச் சார்ந்த ஒன்பது நவரத்தினங்கள், அதாவது ஒன்பது அறிஞர்களில் வராகமிகிரரும் ஒருவராவர். வராகமிகிரரின் கணிப்புகள் மிகவும் சரியாக இருந்ததால் விக்ரமாதித்யா அவருக்கு 'வரகா' என்ற பட்டத்தை வழங்கினார்.

குறிப்புகள்

### 15.2.3 நாகார்ஜுனர்

நாகார்ஜுனர் என்பவர் 10ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். மேற்கத்திய உலகைச் சார்ந்த இரசவாதிகளை போல, அடிப்படை மூலக் கூறுகளை தங்கமாக மாற்றுவது தான் இவரது சோதனையின் முக்கிய குறிக்கோளாகும். இவர் தனது குறிக்கோளில் வெற்றியடை யாவிடினும், தங்கத்தை போன்று ஒளிரக்கூடிய மூலக்கூற்றை உருவாக்குவதில் வெற்றி கண்டார். இது நாள் வரை இந்த தொழில் நுட்பம், போலியான ஆபரணங்களை செய்வதற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. 'ராசரட்ன காரா' என்ற இவரது ஆய்வு நூலில் தங்கம், வெள்ளி, தகரம், செம்பு போன்ற உலோகங்களை பிரித்தெடுப்பது பற்றி விரிவாக கூறப்பட்டுள்ளது.

### இப்பகுதிக்கான கேள்விகள் 15.1

1. கனாட் என்பவர் யார்? அவர் எவ்வாறு இந்தப் பெயரைப் பெற்றார்?
2. பிரஹத் சம்ஹிதாவை எழுதினவர் யார்?
3. நாகார்ஜினா வாழ்க்கையில் எதை சாதிக்க விரும்பினார்?
4. நாகார்ஜினாவின் ஆய்வு நூல் ராசா ரத்ன காராவின் பாடப் பொருள் என்ன?

## 15.3 பண்டைய இந்தியாவின் மருத்துவ அறிவியல் (ஆயுர்வேதமும் யோகாவும்)

பண்டைய இந்தியாவில் மருத்துவ அறிவியல் அறிவு மிகவும் முன்னேற்றமடைந்திருந்தது என்பது பற்றி படித்துள்ளீர்கள். அதே காலத்திலேயே மருத்துவ அறிவியலும் முன்னேற்றம் அடைந்திருந்தது. ஆயுர் வேதம் என்பது, பண்டைய இந்தியாவின் பழங்குடியினரின் முன்னேற்றமடைந்த மருத்துவ முறையாகும். ஆயுர்வேதம் என்பதன் சரியான பொருள், நல்ல சுகாதாரமான அறிவியலும் நீண்ட ஆயுளும் ஆகும். இந்த பண்டைய இந்திய மருத்துவமுறை நோய்களின் சிகிச்சைக்கு உதவுவது மட்டுமில்லாமல், நோய்களுக்கான காரணங்களும் அறிகுறிகளைக் கண்டுபிடிக்கவும் உதவுகிறது. இது ஆரோக்கியமானவர்களுக்கும் நோயுற்றவர்களுக்கும் ஒரு வழி காட்டியாக உள்ளது. இது ஆரோக்கியம் என்பது மூன்று தோஷங்களில் சமநிலையாக உள்ளது. நோய் என்ற தொல்லையும் இந்த மூன்று தோஷங்களில் உள்ளன. மூலிகை மருத்துவத்துடன் நோய்க்கு சிகிச்சை அளிக்கும் பொழுது, நோய்க்கான மூல வேரை முழுவதுமாக அப்புறப்படுத்துதல் தான் இதனுடைய குறிக்கோளாகும். ஆயுர்வேதாவின் முக்கியமான நோக்கம் ஆரோக்கியமும் நீண்ட வாழ்வும், இது நமது புவியின் பழமையான மருத்துவமுறையாகும். அட்ரேய சம்ஹிதா என்ற ஆயுர்வேத ஆய்வு நூல், உலகின் மிகப் பழமையான மருத்துவபுத்தகமாகும். 'சரக்' என்பவரை ஆயுர் வேத மருத்துவத்தின் தந்தை சுஸ்ருதா என்பவரை அறுவை சிகிச்சையின் தந்தை எனவும் அழைக்கப்பட்டனர். சுஸ்ருதா, சரக், மாதவா வக்பட்டா ஜீவக் ஆகியோர் குறிப்பிடத்தக்க ஆயுர்வேத மருத்துவர்களாவர். மேற்கத்திய உலகில், ஆயுர் வேத மருத்துவம் அண்மைக் காலத்தில் மிகவும் பிரபலமடைந்திருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்களா? எனென்றால் இதனுடைய பல நன்மைகள் மேற்கத்திய தாக்கத்தை கொண்ட 'அலோபதி' என்று அழைக்கப்படுகிற நவீன மருத்துமுறையாகும்.

### 15.3.1 சுஸ்ருதா

சுஸ்ருதா என்பவர் அறுவை சிகிச்சை துறையின் முன்னோடி ஆவார். அவர், அறுவை சிகிச்சை என்பது குணமளிக்கும் கலைகளில் மிக உன்னதமான ஒன்று, மிகக் குறைந்த அளவு

குறைபாட்டை உடையது என்று கருதினார். இவர் மனிதனின் உடற்கூறுப்பற்றி, இறந்த ஒரு சடலத்தின் உதவியினால் கற்றார். சுஸ்ருதா சம்ஹிதாவில் 26 வகை காய்ச்சல், எட்டு வகையான மஞ்சள் காமாலை, இருபது வகையான சிறுநீரக கோளாறுகள் போன்ற 100 க்கு மேற்பட்ட நோய்களைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. 760 க்கும் மேற்பட்ட தாவரங்கள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளன. வேர்கள், மரப்பட்டை சாறு, குங்கிலியம், பூக்கள் முதலிய எல்லா பாகங்களும் பயன்படுத்தப்பட்டன. இலவங்கப் பட்டை, எள், மிளகு, ஏலக்காய், இஞ்சி ஆகியவை இன்றும் வீட்டு நிவராணிகளாய் உள்ளன.

சுஸ்ருதா சம்ஹிதாவில் விளக்கமான படிப்பிற்காக இறந்த சடலத்தினை தேர்ந்தெடுத்தல், பாதுகாப்பு பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது. வயதானவரின் சடலம் அல்லது நோயுற்று இறந்தவரின் சடலத்தை, படிப்பிற்கு என்று கருதப்படவில்லை. அந்த சடலத்தினை சரியாக சுத்தம் செய்து, மரப்பட்டையில் பாதுகாக்கப்பட்டது. அப்புறம் இதை ஒரு கூண்டிற்குள் வைத்து பத்திரமாக ஆற்றின் ஒரு புறம் மறைத்து வைக்கப்பட்டது. ஆற்றின் மின்சக்தி அதை மிருதுவாக்கியது. ஏழு நாட்களுக்குப் பிறகு அதை ஆற்றிலிருந்து நீக்கப்பட்டது. அப்புறம் இதை புல்லின் வேர்கள் முடி, மூங்கிலால் ஆன தூரிகை கொண்டு சுத்தம் செய்யப்பட்டது. இதைச் செய்து முடித்த பின்பு உடலின் உட்புற மற்றும் வெளிப்புற பகுதிகள் தெளிவாக காணப்பட்டது.

சுஸ்ருதாவின் மிகச் சிறந்த பங்களிப்பு பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை, கண் மருத்துவ அறுவை சிகிச்சை (கண்ணில் புரையை நீக்குதல்) துறைகளாகும். முந்தைய நாள்களில் மூக்கை, காதை அறுப்பது சாதாரண தண்டனையாக இருந்தது. போரில் கை அல்லது காலை இழத்தல், இவற்றை முன்பிருந்த நிலைக்கு கொண்டு வருதல் என்பது மிகுந்த ஆச்சர்யத்தை அளிக்கிறது. சுஸ்ருதா சம்ஹிதாவில் இந்த சிகிச்சை நடவடிக்கையைப் பற்றி படிப்படியாக துல்லியமாக விவரிக்கப்பட்டுள்ளது. சுஸ்ருதாவால் கையாளப்பட்ட பழைய நிலைகள், நவீன அறுவை சிகிச்சை மருத்துவர்கள், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சையை அதே போன்ற படிநிலைகளை கையாளப்படுவது ஆச்சிரியத்திற்குரியது. 101 செயற்கருவிகள் அறுவை சிகிச்சையில் பயன்படுத்தியதாக, சுஸ்ருதா சம்ஹிதாவும் விளக்கம் கொடுக்கிறது. கருப்பையிலிருந்து கருவை எடுத்தல், சேதமான மலக் குடலை சீர் செய்வது, சிறுநீர்ப்பையிலிருந்து கல்லை அப்புறப்படுத்துவது முதலிய சில இக்கட்டான அறுவை சிகிச்சைகள் நடத்தப்பட்டன. இது ஆச்சரியத்தையும் ஆர்வத்தையும் எழுப்பவில்லையா?

### 15.3.2 சாரகர்

பண்டைய இந்தியாவில் மருத்துவ அறிவியலின் தந்தை என சாரகர் கருதினர். அவர் கனிஷ்கரது அவையில் ராஜ வைத்தியராக இருந்தார். அவர் எழுதின 'சாரக சம்ஹிதா' என்ற மருத்துவ நூல் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்த புத்தகத்தில் ஏராளமான நோய்களைப் பற்றிய விளக்கங்கள், நோய்களுக்கான காரணங்கள், அதற்கான சிகிச்சை முறைகளும் விவரிக்கப்பட்டுள்ளன. இவர் தான் முதன் முதலில் ஜீரணம், ஜீவத்துவ பரிணாமம், அறிவியல் மருத்துவத்திற்கு முக்கியமானவை என்று கூறினார். சாரக் சம்ஹிதாவில் சாதரணமாக நோய்க்கு சிகிச்சை அளிப்பதை விட்டுவிட்டு நோய்க்கான காரணங்களுக்கு அழுத்தம் கொடுப்பதை வலியுறுத்துகிறது. சாரகாவும் பிறப்பியலின் அடிப்படைகளை தெரிந்திருந்தார். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்தியாவில் மருத்துவ அறிவியல் வளர்ச்சியுற்று இருந்தது என்பதை உங்களால் கண்டுபிடிக்க முடியுமா?

### 15.3.3 யோகாவும் பதஞ்சலியும்

ஆயுர்வேதத்தின் கிளை அறிவியலான யோகா அறிவியல் பண்டைய இந்தியாவில் உடலுக்கும் மனத்திற்கும் மருந்து இல்லாமல் குணப்படுத்தக் கூடிய அளவிற்கு

வளர்ச்சியடைந்திருந்தது. 'யோகா' என்ற சொல் சமஸ்கிருத நூல் 'யோக்ட்ரா'விலிருந்து எடுக்கப்பட்டது. இதனுடைய சரியான பொருள் வெளியுலக காட்சிகளிலிருந்து நீங்கி மனதை உட்படுத்துவது மற்ற அறிவியல்களைப் போல இதனுடைய வேர்கள் வேதங்களில் உள்ளன. இது 'சித்தா' வை வரையறுக்கிறது. அதாவது எண்ணங்கள், மனக் கிளர்ச்சிகள், ஆசைகளை களைந்து மனதின் சமநிலையை அடைதலாகும். இது மன இயக்கத்தின் வேகத்தை ஒரு நிலைப்படுத்தி உணர்வுகளை புனிதமாக உணர உயர்த்துதல். யோகா என்பது உடலையும் மனத்தையும் பொறுத்தது சரீர யோகாஹத் யோகா என்று அழைக்கப்படுகிறது. பொதுவாக இது நோய் நீக்குவதை, உடலை முன்பிருந்த ஆரோக்கிய நிலைக்கு கொண்டு வருவதையும் நோக்கமாக கொண்டுள்ளது. ராஜயோகா என்பது மனயோகாவாகும். இதனுடைய இலக்கு சுயமாக உணருதல், அடிமைத்தனத்திலிருந்து விடுதலை ஆகியவற்றை உடல், மன, உணர்வுகள், ஆன்மீக சமநிலை ஆகியன அடைவதாகும்.

யோகாவை, ஒரு "ஞானியிடமிருந்து மற்றொரு "ஞானிக்கு வாய்மொழி மூலம் கொடுக்கப்பட்டது. இந்த மிகச்சிறந்த அறிவியலை முறையாக கொடுத்த பெருமை பதஞ்சலியையே சாரும். பதஞ்சலியின் யோக சூத்திரத்தில் 'அம்' என்பதை கடவுளின் சின்னம் என்று பேசப்படுகிறது. அவர் 'அம்' என்பது பிரபஞ்சம் சம்பந்தமான ஒலி என்றும் தொடர்ச்சியாக ஆகாசத்தில் ஒளியால் விளங்குகின்றது போல தோன்றுகிறது. இது தவிர, யோக சூத்ரா, பதஞ்சலியும் ஒரு நூலை மருத்துவத்தைப் பற்றியும், பாணினியின் 'மகாபாஷ்யா' என்ற இலக்கண நூலையும் ஆராய்ந்தார்.

## இப்பகுதிக்கான கேள்விகள் 15.3

1. ஆயுர்வேதம் என்பது என்ன?
2. மருத்துவத்தில் பழங்கால புத்தகம்.
3. சுஸ்ருதா சம்ஹிதா என்ற நூல்.
4. பண்டைய இந்தியாவின் மருத்துவ அறிவியலின் தந்தை __________ இவர் எழுதிய புத்தகம் __________ என்று அழைக்கப்படுகிறது.
5. யோகா என்பதன் பொருள் என்ன?

## நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- பண்டைய இந்தியாவில் அறிவியல், கணக்கியல் வெகுவாக முன்னேறி இருந்தது.
- பௌதாயன், ஆர்யப்பட்டா, பிரம்மகுப்தா, பாஸ்கரா சார்யா, மஹாவீரா சார்யா ஆகிய சில புகழ் பெற்ற பண்டைய இந்திய கணக்கியல் வல்லுநர்களாவர்.
- சில புகழ் பெற்ற விஞ்ஞானிகள் கனாட், வாரகமிகிரா, நாகார்ஜினா ஆவர்
- பண்டைய இந்தியாவில் மருத்துவ அறிவியலும் வெகுவாக வளர்ச்சியுற்றது.
- பண்டைய இந்தியாவில், ஆயுர்வேதம் என்ற பழமையான மருத்துவமுறை வளர்ச்சியுற்றது. ஆயுர்வேதம் என்ற சொல்லுக்கு நல்ல ஆரோக்கியமான நீண்ட ஆயுளுக்கான அறிவியல் என்ற பொருள்.
- பண்டைய இந்தியாவில் சாரகர் ஆயுர்வேதத்தின் தந்தை என அழைக்கப்பட்டார் சுஸ்ருதா அறுவை சிகிச்சையின் தந்தை என அழைக்கப்பட்டார்.

- சுஸ்ருதாவின் மிகச் சிறந்த பங்களிப்பு, ரினோ பிளாஸ்டிக் (பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை) கண் அறுவை சிகிச்சை (புரை நீக்குதல்) ஆகிய துறைகளில் இருந்தது.
- மருத்துவத்தில் சாரகா் எழுதின 'சாரக சம்ஹிதா' என்ற புத்தகம் குறிப்பிடத்தக்கது.
- மருந்து இல்லாமல், உடல் சம்பந்தமான, மனம் சம்பந்தமான நோய்களை குணப்படுத்தக் கூடிய ஆயுா் வேதத்தின் கிளை அறிவியலான யோகா அறிவியல் பண்டைய கால இந்தியாவில் வளா்ச்சியுற்றது.
- பதஞ்சலி என்ற முதல் அறிஞா், தன்னுடைய யோக சூத்திரத்தில் சிறந்த அறிவியல் முறையை வழங்கியிருக்கிறாா்.

## பயிற்சிக்கான கேள்விகள்

1. வானியல் அறிவியல் துறையில் ஆா்ய பட்டாவினால் வழங்கப்பட்ட கோட்பாடுகள் யாவை?
2. பாஸ்கரா சாா்யாவின் 'சித்தாந்த சிரோமணி' எதை கையாளுகிறது?
3. எண் கணிதத்தின் முதல் புத்தகத்தின் பெயரைக் கூறு இதை யாா் எழுதினாா்? இது கையாளுகின்ற சில தலைப்புகளை கூறு?
4. அறிவியல் அறிவுக்கு வராகமிகராவின் பங்களிப்பு பற்றி விவாதி.
5. போலி அணிகலன்களை உருவாக்குவதில் நாகாா்ஜுனாவின் பங்களிப்பு என்ன?
6. பண்டைய இந்திய மருத்துவ அறிவியல் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.
7. கீழ்கண்டவற்றை விவரி

   அ. சுஸ்ருதா சம்ஹிதாவின் இறந்த உடலை தோ்ந்தெடுத்தல் மற்றும் பாதுகாக்கும் முறைகள்

   ஆ. ஹத யோகா, ராஜயோகம்

   இ. சாராகாவின் மூன்று தோஷா கோட்பாடு

   ஈ. யோகாவிற்கு சம்பந்தமான சிட்டாவின் பொதுக் கருத்து

## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 15.1

1. ை. 'பை' யின் மதிப்பை கணக்கிட்ட முதல் கணிதவியல் வல்லுனா்

   ை. தேற்றத்தின் நிருபணம் இப்பொழுது பித்தகோரஸ் தேற்றம் என அழைக்கப்படுகிறது.
2. ஆா்யபட்டா
3. அரேபியா்கள் நமது கணிதவியல் முறைகளை இந்த புத்தகத்தின் மூலம் அறிந்து கொண்டனா்

| | நூலின் பெயா் | எழுத்தாளரின் பெயா் |
|---|---|---|
| (i) | சுல்வா சூத்திரா | (c) பௌதாயன் |
| (ii) | ஆா்ய பாட்டியம் | (a) ஆா்யபட்டா |
| (iii) | பிரம்ஸ்பூட்டா சித்தாந்திகா | (d) பிரமகுப்தா |
| (iv) | சித்தாந்த சிரோமணி | (e) பாஸ்கரா சாா்யா |
| (v) | கணித சாரா சங்ரகா | (b) மஹாவீரா சாா்யா |

## கேள்விகளுக்கான பதில்கள் 15.2

1. ஆறாம் நூற்றாண்டில், வைஷேசிகா தனிமுறை மரபுக்குழு விஞ்ஞானி சிறு குழந்தையாக இருக்கும் பொழுதே ‘கானா’ என்றழைக்கப்பட்ட மிகத் துல்லியமான துணக்குகளில் மிகுந்த நாட்டம் கொண்டவராக இருந்தால் அவர் ‘கானாட்’ என பெயரிடப்பட்டது.
2. வராகமிகிரா
3. அடிப்படைக் கூறுகளை தங்கமாக மாற்றுதல்
4. புதிய உத்தி முறைகளை தங்கம் வெள்ளி தகரம் செம்பு போன்ற உலோகங்களிலிருந்து பிரித்தெடுக்க பளபளப்பான தங்கத்தை போன்ற கூறு ஒன்றை உருவாக்கினார்.

## கேள்விகளுக்கான பதில்கள் 15.3

1. நல்ல ஆரோக்கியம் நீண்ட ஆயுளுக்கான அறிவியல், பழங்கால முறையிலான மருந்து, பண்டைய இந்தியாவில் வளர்ச்சியுற்று இருந்தது.
2. அட்ரேயா சம்ஹிதா
3. அறுவை சிகிச்சை
4. சாரகர், சாரக சம்ஹிதா
5. மனதை ஆன்மாவுடன் இணைத்து பின்பு அதை பொருள் சார்ந்த உலகினின்று விடுவித்தல்.

## செயல்பாடு

அ. வேத கால கணக்கியல் பற்றி கேள்விப் பட்டிருக்கிறீர்களா? இந்நாட்களில் பள்ளி நிலையில் பிரபலமாகிக் கொண்டு வருகிறது. அதை கண்டறிந்து ஒரு கட்டுரை அதனைப் பற்றி எழுதுக.

ஆ. ஆயுர் வேதத்துக்கும் அலோபதிக்கும் உள்ள வேற்றுமைகளைக் கண்டறி. ஆயுர் வேதத்தின் புகழ் மேற்கத்திய நாடுகளிலும் கூட அதிகரிப்பதன் காரணங்களைப் பற்றி ஒரு அறிக்கை எழுதுக.

இப்பொழுது மிகவும் பிரபலமாகியுள்ள யோகா என்பது மற்றொரு முறையில் குணப் படுத்தக்கூடியது. இதனைப் பற்றி அதிகம்படி யோகாவில் எட்டு நிலைகளைப் பற்றி கண்டறிந்து (அஷ்ட மார்கம்) அறிக்கை எழுதுக.

# 16

# மத்திய கால இந்தியாவின் அறிவியல், விஞ்ஞானிகள்

பண்டைய காலத்தின் விஞ்ஞானிகளைப் பற்றி படித்தீருப்பீர்கள். மத்திய காலத்தில் அறிவியல், தொழில்நுட்பம், இரண்டு பகுதிகளாக இந்தியாவில் வளர்ச்சியடைந்தது. ஒன்று முந்தைய பாரம்பரியத்தைப் பற்றியது. பட்டயப் படிப்பு, மற்றொன்று இஸ்லாமிய ஐரோப்பிய தாக்கத்தினால் ஏற்பட்ட புதிய விளைவுகளாகும். நாம் இத்தகைய வளர்ச்சிகளைப் பற்றி இந்த பாடத்தில் விரிவாக படிப்போம்.

## நோக்கங்கள்

இந்தப் பாடத்தை படித்த பிறகு, உங்களால்

- மத்திய காலத்தில் கல்வி நடைமுறைகளின் தோற்றம் பற்றி விவாதிக்க
- மத்திய காலத்தில் அறிவியல், தொழில் நுட்பத்தின் வளர்ச்சியைப் பற்றி ஆராய
- அறிவியல், தொழில் நுட்பத் துறையின் புகழ் பெற்ற அறிஞர்களின் பெயர்கள், அவர்கள் இந்தக் காலத்தில் எழுதிய நூல்களின் பெயர்களை பட்டியலிட முடியும்.

## 16.1 இடைக்காலத்தில் அறிவியல்

இடைக்கால இந்தியா முஸ்லீம்களின் வருகையைப் சுட்டிக் காட்டுகிறது என்பது உங்களுக்கு தெரிந்ததே. இக்காலத்தில் பாரம்பரிய பழங்குடி மரபு சார்ந்த கற்றல் ஏற்கனவே வளர்ச்சி குன்றியிருந்தது. அரேபிய நாடுகளில் கல்விமுறைகள் பரவலாக இந்த காலங்களில் தழுவப்பட்டது. இதன் விளைவாக மக்தப்புகள் மதராசாகக்கள் தோன்றுவிக்கப்பட்டன. இத்தகைய நிறுவனங்கள் அரசின் ஆதரவை வழக்கமாகப் பெற்றன. பல்வேறு இடங்களில் மதராசாக்கள் வரிசையாக திறக்கப்பட்டு பாடத்திட்டம் பின்பற்றப்பட்டது. பகுத்துரைவல்ல அறிவியலின் நிபுணர்களான இரு சகோதரர்கள் ஷேக் அப்துல்லா, அஜிசுல்லா ஆகியோர் சம்பல் பகுதியிலும் ஆக்ராவிலும் உள்ள மதராசாவிற்கு தலைமை ஏற்றனர். நாட்டில் திறமையானவர்களைத் தவிர அரேபியா, பாரசீகம், மத்திய ஆசியாவிலிருந்து கற்றறிந்த மனிதர்களையும் மதராசாவின் கல்வித்துறைக்கு பொறுப்பேற்க அழைக்கப்பட்டனர்.

முஸ்லீம் ஆட்சியாளர்கள், தொடக்கப்பள்ளிகளின் கலைத்திட்டத்தை சீர்திருத்தம் செய்ய முயன்றார்கள் என்பது உங்களுக்குத் தெரிந்தே. சில முக்கியமான கணிதவியல், அளவையியல், வடிவியல், வானவியல், கணக்கியல், பொது நிர்வாகம் வேளாண்மை போன்ற

பாடங்கள் தொடக்க கல்வியில் போதனா பாடங்களாக சேர்க்கப்பட்டன. கல்வித்துறையில் சிறப்பான முயற்சிகள் ஆட்சியாளர்களால் எடுக்கப்பட்டாலும், அறிவியலில் சிறந்த முன்னேற்றம் செய்ய இயலவில்லை. இந்திய பாரம்பரிய அறிவியல் பண்பாடுக்கும் மற்ற நாடுகளின் அறிவியலுக்கும் இடையே உள்ள தொகுப்புகளை கண்டறிய முயற்சிகள் எடுக்கப்பட்டன. இக்காலத்தில் பல்வேறு துறைகளில் என்ன வளர்ச்சிகள் இடம் பெற்றன என்பதை இப்பொழுது நாம் காண்போம்.

கார்கனாஸ் என்று அழைக்கப்பட்ட பெரிய பணிப்பட்டறைகள், பண்டக சாலைகள் உயர்குடி மக்களின் வீட்டு நிர்வாகத்துக்கும், அரசுத்துறைகளுக்கும் பல்பொருட்களை விநியோகம் செய்வதை நிர்வகித்தது. இந்த கார்கனாஸ்கள் உற்பத்தி செய்யக்கூடிய முகமைகளாக மட்டுமில்லாமல், இளைஞர்களுக்கு, தொழில்நுணுக்கம் தொழில் சார்ந்த பயிற்சியை அளிக்கும் மையமாக செயல்பட்டது. கார்கனாஸ்கள் கலைத் தொழிலாளர்களை கைவினைத் தொழிலாளர்களை பல்வேறு துறைகளில் நன்கு பயிற்சி பெறச் செய்ததினால் அவர்கள் பின்பு தாங்களாகவே சொந்தமாக அதற்கான கார்கனாஸ்களை நிறுவினர்.

## 16.1.1 கணிதவியல்

இந்த காலத்தில் கணிதவியல் துறையில் பல்வேறு நூல்கள் தயாரிக்கப்பட்டன. நரசிம்மதைவஜ்னாவின் மகனான நாராயண பண்டிட் தன்னுடைய 'கணித காமுதி' பிஜ கணித வடம்சா என்ற கணிதவியல் நூல்களினால் பிரபலமாகத் தெரியப்படுகிறார். குஜராத்தில் கங்காதரா என்பவர் லீலாவதி வியாக்யா என்ற நூலை எழுதினார். இவை திரிகோணமிதியின் நிலைகளான சைன், கோ சைன் டேன்ஜட் மற்றும் கோடா ஜெண்டுக்கு விதிகளைக் கொடுத்த பிரபலமான ஆய்வுக் கட்டுரைகளாகும். நீல கந்த சோம சுட்டுவன் தயாரித்த டன்ரசம் கிரஹாவும் திரிகோணமிதியின் பணிகள் பற்றின விதிகளையும் உள்ளடக்கியது.

கணேசா தைவஜ்னா என்பவர் ஏராளமான விளக்கங்களைக் கொண்ட 'புத்திவிலாசினி' என்ற விளக்க உரையான லீலாவதி புத்தகத்தை தயாரித்தார். வல்கலா குடும்பத்தைச் சார்ந்த கிருஷ்ணா நவன்குரா என்ற ஆய்வுக்கட்டுரையை இரண்டாவது பாஸ்கராவின் பிஜ கணிதத்தையும் உறுதியற்ற சமன்பாடுகளான முதலாம், இரண்டாம் நிலையினை விரிவுபடுத்தும் விதிகளை கொணர்ந்தார். நீலகந்த ஜியோடிர்விடா டஜிக்கை தொகுத்து. ஏராளமான பாரசீக தொழில்நுட்ப சொற்களை அறிமுகப்படுத்தினார். அக்பரின் கட்டளைப்படி பைசி, பாஸ்கராவின் பிஜ கணிதத்தை மொழி பெயர்துள்ளார். அக்பர் கல்வி முறையில் மற்ற எல்லாப் பாடங்களுடன் கணிதவியலையும் படிக்கக் கூடிய பாடமாக்க கட்டடளையிட்டார். நாசிருதின் - அட் - டுசி என்பவர் மற்றுமொரு கணிதவியல் மேதையாவார்.

## 16.1.2 உயிரியல்

இதேபோல் உயிரியல் துறையிலும் மேம்பாடுகள் இருந்தன. ஹம்சதேவா 13ஆம் நூற்றாண்டில் 'மிருக பக்சி சாஸ்தரா' என்ற தலைப்பைக் கொண்ட உயிரியல் நூலைத் தொகுத்தார். இது எப்பொழுதும் சில விலங்குகளை பறவைகளை வேட்டையாடுதலை பற்றின தகவலை மட்டும் அறிவியல் பூர்வமாகக் கொடுக்காமல் பொதுவான தகவலைக் கொடுக்கிறது. சிறந்த வீரர்களும் வேட்டைக்காரர்களுமான முஸ்லீம் அரசர்கள் வேட்டையாடுவதற்காக குதிரைகள் நாய்கள் சிறுத்தைகள், வல்லாறு போன்ற விலங்கினத் தொகுப்புக்களை வளர்த்தார்கள். விலங்கினங்களை வீட்டு விலங்குகள், வனவிலங்குகள் என இரு பிரிவுகளாக வர்ணிக்கப்பட்டது. பாபர், அக்பர் இருவருமே தங்களுடைய அரசியலிலும் போர்களிலும் மும்மரமாக இருந்தாலும், நூல்களைப் படிப்பதற்கு அவர்களுக்கு நேரம் கிடைத்தது. அக்பர் யானைகள், குதிரைகள் போன்ற வீட்டு விலங்கினங்களின் இனப்பெருக்கத்தில் மிகுந்த



ஆர்வம் கொண்டிருந்தார். ஜஹாங்கீர் தன்னுடைய தாரிக் - ஐ - ஜஹாங்கிரி என்ற நூலில் இனபெருக்கம் இனக்கலப்பினம் பற்றிய தனது கூர்ந்து நோக்கல்களையும், சோதனைகளையும் பதிவு செய்துள்ளார். அவர் ஒரே இனத்தைச் சார்ந்த 36 விலங்கினங்களைப் பற்றி விவரித்துள்ளார். இவருடைய அவையைச் சார்ந்த சிறந்த ஓவியரான, மான்சூர் விலங்குகளை அற்புதமாக, துல்லியமான ஓவியங்களாக வடித்துள்ளார். இவற்றில் சில இன்று வரை பல்வேறு அருங்காட்சியம், தனியார் திரட்டுதலில் பாதுகாக்கப்படுகின்றன. இயற்கைவாதியான ஜஹாங்கீரும் தாவரங்களைப் பற்றின படிப்பில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். இவருடைய அவை ஓவியர்கள் 57 தாவரங்களையும் மலர்களையும் கொண்டு வேலைப்பாடு செய்தவையாக வரைந்துள்ளனர்.

### 16.1.3 வேதியியல்

காகிதத்தை பயன்படுத்த தொடங்கியது இந்த மத்திய காலத்தில் தான் என்பது உங்களுக்கு தெரியுமா? வேதியியலின் முக்கியமான பயன்பாடு காகிதம் தயாரித்தலாகும். காஷ்மீர், சியால் காட், ஜபரா - பாத், பாட்னா, மூர்ஷிதாபாத், அஹமதாபாத், அவுரங்காபாத் ஆகியவை மைசூர் ஆகியவை காகிதம் தயாரிக்கும் மையங்களாக பிரபலமடைந்தன. வெவ்வேறு வகையில் காகிதக் கூழ் தயாரித்தாலும் காகிதம் தயாரிக்கும் உத்திகள் நாடு முழுவதும் ஒரே மாதிரியாக தான் இருந்தது.

முகலாயர்கள் துப்பாக்கியில் பயன்படுத்தப்படும் வெடிமருந்து தயாரிப்பதன் உத்தியை அறிந்திருந்தனர், துப்பாக்கி சூடுதலில் அதனுடைய பயன் வேதியியலில் மற்றுமொரு பயன்பாடாகும். இந்தியக் கைவினைஞர்கள், வெடிகளில் பயன்படுத்தப்படும். பொருட்கள் பொருத்தமான கலவையுடன் வெளிப்படுத்தக்கூடிய உத்திகளை கற்றனர். சுக்ராகார்யாவிற்கு கொடுக்கப்பட்ட 'சுக்ரநிதி' என்ற நூல், துப்பாக்கி வெடி மருந்தை வெடி உப்பு பல்வேறு அளவுகளில் பயன்படுத்தி தயாரித்து பல வகை துப்பாக்கிகளில் பயன்படுத்துவது பற்றி விவரிக்கிறது. முதன்மையான வகையைச் சார்ந்த வகைகள் என்பது வானத்தைக் கிழித்து நெருப்பு பொறிகளை உருவாக்கி, பல வண்ணக் கலர்களுடன் பிரகாசமாக சுடர்விட்டு முடிவில் பலத்த வெடியுடன் வெடிக்கக் கூடிய வான வேடிக்கைகளில் அடங்கும். அய்னி - ஐ - அக்பரி என்ற நூல் அக்பரின் வாசனைத் திரவிய அலுவலகத்தின் ஒழுங்கு முறைகளைப் பற்றி கூறுகிறது. ரோஜாக்களின் அத்தர் (வாசனைத் திரவியம்) ஒரு புகழ் பெற்ற வாசனை திரவியம். இது நூர்ஜஹானால் கண்டுபிடிக்கப்பட்டது என சொல்லப்படுகிறது.

## இப்பகுதிக்கான கேள்விகள் 16.1

1. மத்திய காலத்தில் தொடக்கப்பள்ளிகளில் என்ன பாடங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன?
2. இப்பாடமான ___________ அக்பரினால் கட்டாயப் பாடமாக தொடக்க நிலைக்கு கட்டளையிடப்பட்டது?
3. கார்கனாசின் இரண்டு பணிகள் யாவை?
4. கீழ்க்கண்ட அறிஞர்களை அவர்களுடைய நூல்களுடன் ஒன்று சேர்

| அறிஞரின் பெயர் | நூலின் பெயர் |
|---|---|
| (a) நாராயண பண்டிட் | (i) புத்த விலாசினி |
| (b) கங்காதரா | (ii) மிருக-பச்சி-சாஸ்த்ரா |
| (c) கணேசதைவன் ஜா | (iii) கணித காமுதி |
| (d) ஹம்சதேவா | (iv) லீலாவதி வியாக்யா |

(e) ஜஹாங்கீர் (v) டஜிக்

(f) சுக்ரா கார்யா (vi) டுசுக்கி - ஐ - ஜஹாங்கிரி

(g) நீல கந்த ஜியோடி விதா (vii) சுக்ரநிதி

5. மத்திய கால இந்தியாவில் காகிதம் உற்பத்தி செய்த நான்கு இடங்களின் பெயர்களைக் கூறுக.

## 16.1.4 வானவியல்

இந்த காலத்தில் செழிப்புற்ற மற்றமொரு துறை வான சாஸ்திரமாகும். வானவியலில் ஏராளமான விளக்க உரைகள் ஏற்கனவே தோற்றுவிக்கப்பட்ட வானவியல் அபிப்பிராயங் களுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளன.

பிரோஸ்ஷா பேரரசரின் அவை வான சாஸ்திரியான மகேந்திர சூரி என்பவர், 'யான்ட்ரஜா' என்ற வானவியல் கருவியை உருவாக்கினார். கேரளாவில் பரமேஸ்வரா, மகா பாஸ்கார்யா என்ற இருவரும் மகிவும் பிரசித்தி பெற்ற வானியல் வல்லுநர்கள் மற்றும் பஞ்சாங்கம் தயாரிப்பவர்கள் குடும்பத்தை சார்ந்தவர்களாவர். நீலகந்த சோம சுட்வன், ஆர்ய பாட்டியாவின் விளக்கக் கட்டுரைகளை தயாரித்தார். கமலாகர் இஸ்லாமிய வான சாஸ்திர கருத்துகளை அவர் இஸ்லாமிய அறிவின் மேலாண்மையுரிமை கொண்டவராக இருந்தார். ஜெய்பூரின் இரண்டாவது மகாராஜா சவை ஜெய்சிங், வான சாஸ்திரத்தின் பாதுகாப்பாளர் ஆவார். அவர் ஐந்து வான சாஸ்திர ஆய்வுக் கூடங்களை டெல்லி உஜ்ஜைன், வாரனாசி, மதுரா மற்றும் ஜெப்பூரில் நிறுவினார்.

## 16.1.5. மருத்துவம்

பண்டைய காலத்திலிருந்தே ஆயுர்வேத மருத்துவ முறை தீவிரமாக வளர்ச்சியடைய வில்லை. ஏனென்றால் புரவலர்களின் ஆதரவு கிடைக்கவில்லை. எனினும் வங்கசேனாவின் சரப்தாரா சம்ஹிதா, சிகிட்சம் கிரஹா, பாவமிச்ராயின் யாகரட் பஜாரா, பாவபிரகாசா போன்ற சில முக்கியமான ஆயுர்வேத ஆய்வுக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டன. 13-ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சரங்தாரா சம்ஹிதாவில் அபினியின் மருத்துவ பொருட்கள், சிறுநீர் பரிசோதனை செய்யும் நோக்கம் இதனுடைய பயனில் அடங்கும். குறிப்பிடப்பட்ட மருந்துப் பொருட்கள் உலோகத் தயாரிப்பான ராசா சீகிட்சா முறை, இறக்குமதி மருந்துப் பொருட்களும் அடங்கும்.

ராசா சிகிட்சா முறை திரளான கனிம மருந்துகளுடன் இருபாதரசம், பாதரசம் அல்லாதவற்றுடன் முதன்மையாக தொடர்பு கொண்டது. சித்தா முறை தமிழ் நாட்டில் பெரும்பாலும் பரவியிருந்த காரணமாக வளமான கனிம மருந்துகளை நீண்ட நாள் பரிணாம வளர்ச்சிக்காக கொண்டிருந்த புகழ் பெற்ற சித்தர்கள் தான் காரணம்.

யுனானி மருத்துவமுறை இந்தியாவில் மத்திய காலத்தில் வளர்ச்சியுற்றது. அலி - பின் - ராபன் தனது பிர்தௌசு - ஹிக்மத் என்ற புத்தகத்தில் கிரேக்க மருந்துகளின் மொத்தமுறைகளுடன் இந்திய மருத்துவ அறிவு பற்றியும் சுருக்கி கூறியுள்ளார். 11-ம் நூற்றாண்டில் யுனானி மருத்துவமுறை முஸ்லீம் களுடன் இந்தியாவிற்கு வந்து உடனடியாக தனது வளர்ச்சிக்கு ஆதரவைப் பெற்றது. ஹகிம்தியா மொகமத், மஜ்னி - இ - தியே என்ற அரேபிய பாரசீக ஆயுர்வேத மருத்துவ அறிவைச் சேர்த்து ஒரு புத்தகத்தை தொகுத்தார். பிரோஸ்ஸா துக்ளக் திப்பிரோசாகி என்ற புத்தகத்தை எழுதினார். அவுரங்கசீப் பிற்கு அர்பணிக்கப்பட்ட 'திபி அவுரங்கசிபி' ஆயுர்வேத மூலங்களை அடிப்படையாகக் கொண்டது. தாரா - ஷிகோவிற்கு அர்ப்பணிக்கப்பட்ட நூருதின் முகமதுவின் 'முசாலா ஜட்டி - தர்ஷிகோஹி' கிரேக்க மருத்துவம் பெரும்பாலும் ஆயுர்வேத பொருட்களின் மருந்தைப் பற்றிக் கூறுகிறது.

### 16.1.6 வேளாண்மை

மத்திய காலத்தில் விவசாய முறைகள் ஏறத்தாழ முந்தைய கால இந்தியாவில் இருந்ததைப் போன்றே இருந்தது. புதிய பயிர்களை அறிமுகப்படுத்துதல், மரங்கள், அயல்நாட்டு வணிகர்களின் தோட்ட வேளாண்மைப் பயிர்கள் ஆகிய சில முக்கியமான மாறுதல்கள் ஏற்பட்டன. கோதுமை, அரிசி, பார்லி, தினை, பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி, சர்க்கரை, கருநீல சாயம் முதலியவை முதன்மை பயிர்வகைகளாக இருந்தன. மேற்கு தொடர்ச்சி மலை, நல்லதரமான கருப்பு மிளகை தொடர்ந்து கொடுக்கின்றது. மேலும் காஷ்மீர் தனது பராம்பரியத்தை குங்குமப்பூ, பழங்களுக்காக சீராக பராமரித்துக் கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டிலிருந்து இஞ்சி, இலவங்கப் பட்டை, கேரளாவிலிருந்து ஏலக்காய், சந்தன மரம், தேங்காய் ஆகியவை பிரபலமாகிக் கொண்டிருந்தன. புகையிலை, மிளகாய், உருளைக் கிழங்கு, கொய்யா, சீத்தாப்பழம், முந்திரி, அன்னாசிப்பழம் போன்ற முக்கியமான தாவரங்கள் இந்தியாவிற்கு 16ம் மற்றும் 17ம் நூற்றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த காலத்தில் தான் மாள்வா, பீஹார் வட்டாரத்தில் கசகசா செடியிலிருந்து அபினி உற்பத்தி செய்வது தொடங்கியது. முன்னேற்றமான தோட்ட வேளாண்கலை முறைகள் வெற்றிகரமாக தழுவப்பட்டன. முறையான ஒட்டு மாம்பழச் செடியை கோவாவைச் சார்ந்த 'ஜெசூட்ஸ்கள்' 6ம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் அறிமுகப்படுத்தினர். கம்பீரமான முகலாய தோட்டங்கள் பழமரங்களின் பரவலான விளைச்சலுக்கு பொருத்தமான இடமாக அமைந்தன.

நீர்ப்பாசனத்திற்காக கிணறுகள், நீர்த் தொட்டிகள், கால்வாய்கள், ரஹத், சரஸ் தென்கிலி சரஸ் (தோலினால் செய்யப்பட்ட ஒருவகையான வாளி, கட்டப்பட்ட எருதின் உதவியுடன் தண்ணீரை மேலே எடுப்பதற்கு பயன்படுத்தகப்பட்டது) ஆகியவை பயன்படுத்தப் பட்டது. ஆக்ரா வட்டாரத்தில் பாரசீக சக்கரம் பயன்படுத்தப்பட்டது. மத்திய காலத்தில் அரசால் விவசாயத்திற்கு திடமான அடித்தளமிட்டு நில அளவைமுறை, நிலத்தை தரவாரியாக பிரித்தல் போன்றவைகளை அறிமுகப்படுத்தினது ஆட்சியாளர், உழவர் ஆகிய இருவரும் நன்மை பெறக் கூடியதாகும்.

## இப்பகுதிக்கான கேள்விகள் 16.2

1. ஜெப்பூரின் இரண்டாவது மஹாராஜா சவை ஜெய்சிங்கினால் அமைக்கப்பட்ட வான சாஸ்திர ஆய்வுக் கூடங்கள் அமைந்துள்ள நகரங்களின் பெயர்களைக் கூறுக?
2. மத்திய காலத்தில் எழுதப்பட்ட இரண்டு ஆயுர்வேத ஆய்வுக் கட்டுரைகளின் பெயரைக் கூறுக?
3. பிர்டெளசு - ஹிக்மட் என்பது என்ன?
4. எந்த புத்தகம் அரேபிய பாரசீக, ஆயுர்வேத மருத்துவ அறிவை ஒன்றாக அளிக்கிறது?
5. மத்திய காலத்தில் இந்தியாவில் வளர்க்கத் தொடங்கிய 4 பயிர்களின் பெயரைக் கூறுக?

## நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- கல்விமுறையில் அங்கு சிறிதளவு மாற்றம் இருந்தது. அரேபிய முறை பெரிய அளிவில் அறிமுகப்படுத்தப்பட்டது. மதராசக்கள், மக்தப்கள் எல்லா இடங்களிலும் ஏற்படுத்தப்பட்டன. ஆட்சியாளர்கள் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்த முயன்றார்கள்.

குறிப்புகள்

- கணிதம், வேதியல், உயிரியல், வானவியல், மருத்துவம் போன்ற துறைகளில் பல்வேறு நூல்கள் எழுதப்பட்டன.
- பெரும்பாலான அறிவியல் நூல்களாக விளக்கவுரைகள் அல்லது முந்தைய ஆய்வுன் கட்டுரைகளின் கலைக் காட்சிகள் இந்த காலத்தில் இருந்தன.
- பல்வேறு முக்கியமான அறிவியல் நூல்களான, கணிதம், மருத்துவம், பிற அறிவியல்கள் சமஸ்கிருதத்திலிருந்து பாரசீகத்திற்கு , அரேபியத்திற்கு மற்றும் பாரசீகத்திலிருந்து, அரேபியத்திலிருந்து சமஸ்கிருத்திற்கு கொடுக்கப்பட்டன.

## பயிற்சிக்கான கேள்விகள்

1. மத்திய காலத்தில் வளர்ச்சியுற்ற கல்வி முறையைப் பற்றி விவரி.
2. மத்திய காலத்தில் மருத்துவத்துறையின் வளர்ச்சியைப் பற்றி ஆராய்க.
3. இக்காலத்தில் நீர்ப்பாசனம் எவ்வாறு நடைப்பெற்றது என்பதை விளக்குக.
4. மத்திய கால அறிவியல், விஞ்ஞானிகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 16.1

1. எண்ணியல், அளவைநூல், வடிவியல், வானவியல், கணக்கியல், பொது நிர்வாகம், வேளாண்மை.
2. கணிதவியல்
3. (i) உற்பத்தி செய்யும் முறைகள்
4. (ii) இனம் வயதினருக்கு தொழில் நுணுக்கம், தொழிற் பயிற்சி மையங்கள்.
5. அறிஞரின் பெயர் — நூலின் பெயர்

| | அறிஞரின் பெயர் | | நூலின் பெயர் |
|---|---|---|---|
| (a) | நாராயண பண்டிட் | (iii) | கணித காமுதி |
| (b) | கங்காதரா | (iv) | லீலாவதி வியாக்யா |
| (c) | கணேசதைவன் ஜா | (i) | புத்த விலாசினி |
| (d) | ஹம்சதேவா | (ii) | மிருக-பச்சி-சாஸ்த்ரா |
| (e) | ஜஹாங்கீர் | (vi) | தாரிக் - ஐ - ஜஹாங்கிரி |
| (f) | சுக்ரா கார்யா | (vii) | சுக்ரநிதி |
| (g) | நீல கந்த ஜியோடி விதா | (v) | டஜிக் |

6. காஷ்மீர், சியால் காட், ஜபராபாத், பாட்னா, மூர்சிதாபாத், அகமதாபாத், அவுரங்காபாத், மைசூரிலிருந்து ஏதாவது நான்கு.

### கேள்விகளுக்கான பதில்கள் 16.2

1. டெல்லி, உஜ்ஜைன், வாரணாசி, மதுரா, ஜெய்ப்பூர்.
2. சரங்கதாரா சம்ஹிதா, சிக்கிட் சாசம் கிடிஹா, யாகராட்பஜ்ரா பாவப்பிரகாஸ்லிருந்து எதாவது இரண்டு.
3. அலி-பின்-ராபன் எழுதிய புத்தகம், கிரேக்க மருத்துவத்துடன் இந்திய மருத்துவ அறிவியலின் முழுமுறையையும் சுருங்கக் கூறுகிறது.

4. மஜ்னி - இ - தியே
5. புகையிலை, மிளகாய், உருளைக்கிழங்கு, கொய்யா, சீத்தாப்பழம், முந்திரி, அன்னாசி பழம் இவற்றிலிருந்து ஏதாவது நான்கு

குறிப்புகள்

## செயல்பாடுகள்

1. ஜெய்ப்பூரின் இரண்டாவது மகாராஜா ஜெய்சிங் தோற்றுவித்த ஏதாவது ஒரு ஆய்வுக் கூடத்தை பார்வையிட முயற்சி செய். ஆய்வுக் கூடத்தின் பயன்பாடு காணப்படுகிற கருவிகளைப் பற்றி விவரித்து ஒரு அறிக்கை எழுதுக.
2. காகிதம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை பார்வையிட முயற்சி செய். உற்பத்தி முறைகளை பற்றி ஒரு அறிக்கை எழுதுக.
3. நீங்கள் இரண்டு மருத்துவ முறைகளை கற்றுக் கொண்டீர்கள். பண்டைய காலத்தில் வளர்ச்சியுள்ள ஆயுர்வேதம், முஸ்லீம்களால் மத்திய காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட யுனானி திப்முறை. நீங்கள் நோயுற்றிருக்கும் பொழுது பொதுவாக நீங்கள் கலந்தாலோசிக்கும் மருந்துவர்கள் கடைபிடிக்கும் அலோபதி மருத்துவ முறையை நவீன காலத்தில் அறிமுகப்படுத்தியவர்கள்.

   ஆங்கிலேயர்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? இந்த மூன்று முறைகளின் அடிப் படைக் கொள்ளைகள் ஒன்றுடன் ஒன்று எவ்வாறு வேறுபடுகிறது என்பதையும் கண்டறி. இதற்கு தகவல் பெறுவதற்காக நீங்கள் கீழ்க்காணும் எதாவது ஒன்று அல்லது அதற்கு மேலும் செய்யலாம்.

   - உனது ஆசிரியருடன் கலந்துரையாடுதல்
   - இதன் சம்பந்தப்பட்ட புத்தங்களை நூலகத்திலிருந்து எடுத்து படித்தல்
   - இணையத்தில் தேடுதல்
   - மருத்துவரை சந்தித்து கலந்துரையாடல் ஒவ்வொரு முறையின் அடிப்படைக் கொள்கைகளைக் குறிப்பிட்டு இந்த முறைகளில் உள்ள வேற்றுமைகளை உணர்த்தி ஒரு அறிக்கை எழுதுக.

4. மத்திய காலத்தில் இந்தியாவுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு பயிர்களைத் தேர்ந்தெடு அவைகளின் தொடக்கம், அவை எவ்வாறு இந்தியாவிற்கு வந்தன என்பதையும் கண்டுபிடி. அவற்றின் கதைகளை எழுதுக.

# 17

# நவீன கால இந்தியவின் விஞ்ஞானிகள்

நவீன இந்தியாவில் அறிவியல் எண்ணங்களின் வளர்ச்சி விஞ்ஞானி களையே சார்ந்ததாகும். 19-ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் சர்.சி.வி.ராமன் முன் நிகழ்ந்திராத மாறுதல்களைக் கொண்டு வந்தார். இந்திய அறிவியல் எண்ணங்கள் அணு ஆற்றல் இயற்பியலின் தந்தை முனைவர் ஹோமி ஜே.பாபா இந்திய அறிவியலைப் பற்றி முன் கூட்டியே கூறியிருந்தார். தாவர உடற்கூறுகள் துறையைச் சார்ந்த முனைவர் ஜே.சி.போஸ், அணு சக்தி, தொழில் துறையை சார்ந்த முனைவர் விக்ரம் சாராபாய், பாதுகாப்பு நுட்பவியல் துறையைச் சார்ந்த முனைவர் அப்துல் கலாம் ஆகியோர், நவீன இந்தியாவின் பெருமையை எழுச்சியுறச் செய்ய புரட்சிகரமான மாறுதல்களைக் கொண்டு வந்தனர்.

## நோக்கங்கள்

இப்பாடம் பாடத்தைப் படித்த பிறகு உங்களால்

- நவீன காலத்தில் சில சிறந்த இந்திய விஞ்ஞானிகளின் சாதனைகளை வரிசையாக கூறவும்
- மனித சமுதாயத்திற்கு அவர்களது பங்களிப்புகளை ஒன்று திரட்டவும் உங்களால் முடியும்.

## 17.1 சீனிவாச இராமானுஜம் (1887-1920)

சீனிவாச இராமானுஜர் எனறு புகழ் பெற்ற, ஸ்ரீனிவாச அய்யங்கார் இராமானுஜன் இந்தியாவின் ஒரு மிகச் சிறந்த கணிதமேதை, தமிழ் நாட்டிலுள்ள ஈரோட்டில் 1887 டிசம்பர் 22ஆம் நாள் பிறந்தார். பின்பு அவரது பெற்றோர், சென்னையிலிருந்து 160 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கும்பகோணத்திற்கு மாறினார்கள். இராமானுஜன் கும்பகோணத்திலுள்ள டவுன்ஹால் பள்ளியில் படித்தார். அங்கு அவர் தன்னை பன்முக ஆற்றலுடையவர் என நிருபித்தார், இருந்தாலும், கணிதத்தில் அவருடைய நாட்டம் வழக்கத்திற்கு மாறாக இருந்தது. எண்கள் எனும் ஒரு புதிய காந்த சக்தியால் இழுக்கப்பட்டார். பதின்மூன்றாம் வயதில் பள்ளியிலேயே ஜி.எஸ்.கார் எழுதின "அறிவுத் துறையில் தொடக்க விளைவுகளின் "சுருக்கத் தொகுப்பு" என்று அழைக்கப்படுகிற புத்தகத்தை படித்தார். இந்த புத்தகம் பழமையானதாக இருந்தாலும் இவரை கணித உலகிற்கு அறிமுகப்படுத்தியது. அவர் கணிதவியலில் தன் சொந்த கருத்துகள் வளர்ச்சியுற வேலை செய்ய ஆரம்பித்தார். அவர் தன்னுடைய கருத்துகள்





விளைவுகள் பற்றி எழுதுதல் அவருடைய கண்டுபிடிப்புகளைப் பற்றி குறிப்புக்கள் எழுதுதல் ஆகியவற்றை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இவருடைய மூன்று ஆராய்ச்சி நோட்டு புத்தகங்கள் நம்மிடையே உள்ளன. அவைகள் இராமானுஜத்தின் தேய்ந்து போன நோட்டுக்கள் என அழைக்கப்படுகிறது. அவர் தன்னுடைய கருத்துக்களை வளரச் செய்து, இந்திய கணிதவியல் சமுதாயம் என்ற பத்திரிக்கையில் புதிர் வினாக்களை எதிர் கொண்டு அதற்கு தீர்வு காணுவதில் ஈடுபட்டிருந்ததால் அவர் தனது கல்லூரி படிப்பை முடிக்க முடியவில்லை. 1911-இல் இதே பத்திரிக்கையில் 'பெமோலி எண்கள் என்ற அறிவுப்பூர்வமான ஆராய்ச்சிக் கட்டுரையை வெளியிட்டார். இது அவருக்கும் அங்கீகாரம் கொடுத்தது. மதராஸ் வட்டாரத்தில் அவர் ஒரு கணித மேதையாக பிரபலமானார்.

முறையான கல்வி இல்லாததினால் அவரது தேவை, வருமானத்திற்கு ஈடுகட்டுவது மிகவும் கடினமாக இருந்தது. மிகுந்த சிரமத்துடன் மதராஸ் துறைமுக டிரஸ்டில் குமாஸ்தா வேலை கிடைத்தது. அவரின் அதிர்ஷ்டத்திற்கு சான்றளித்தது. இங்கு கணிதவியலில் பயிற்சி எடுத்த பல மனிதர்களுடன் தொடர்பு கொண்டார். ஜி.ஹச் ஹார்டி எழுதின 'ஆர்டர்ஸ் ஆப் இன்பினிட்டி' என்ற புத்தகத்தை படித்தார். அவருக்கு ஒரு கடிதம் எழுதி அதில் 120 தேற்றங்களையும் வாய்பாடுகளையும் குறிப்பிட்டார். ஹார்டி அவரது அறிவாற்றாலை உடனடியாக அங்கீகரித்து, அவர் லண்டன் செல்வதற்கு ஏற்பாடு செய்து வழியைக் காட்டியதன் மூலம் தன்னுடைய சம்மதத்தை அளித்தார். அவருக்கு தேவையான கல்வித்தகுதி இல்லாத போதிலும், டிரினிடி கல்லூரியில் இவரது பெயரை சேர்க்க அனுமதிக்கப்பட்டு. இரண்டு ஆண்டுகளில் இளங்கலை அறிவியல் பட்டதாரி என்ற பட்டத்தைப் பெற்றார். ஹார்டி ஜே.இ.லிட்டில்வுட் ஆகியோருடன் ஒரு அற்புதமான குழுவை அமைத்து, கணிதத் துறைக்கு வியக்கத்தக்க பங்களிப்பை அளித்தார். அவர் பல கட்டுரைகளை இலண்டனில் வெளியிட்டார். இவர் இலண்டனில் ராயல் சொசைட்டியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாவது இந்தியனும் டிரினிடி கல்லூரியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியனும் ஆவார்.

இராமானுஜம் எண்களின் நுணுக்க விளக்கங்களில் வளமான அறிவைப் பெற்றிருந்தார். 1917இல் உடல்நிலை மகிவும் பாதிப்புக்குள்ளானர். அவருடைய உடல் அவரை காட்டிக் கொடுத்தாலும், அவருடைய எண்கள் அவரது தோழமையுடன் இருந்தன. துரதிஷ்டவசமாக அவரது உடல்நிலை மிகவும் மோசமானதால் 1919இல் அவர் இந்தியாவிற்கு அறிவியல் புகழுடன் திரும்பினார். 1920இல் அவர் இறந்துவிட்டார். இந்தியா உண்மையாகவே கணிதவியலின் கருத்துகளுக்கு சிறந்த மூலமும் பிறப்பிடமும் ஆகும் என்பதற்கு இவருடைய கணிதவியல் ஆற்றல் சான்றாகும்.

## 17.2 சந்திரசேகரர் - வி.இராமன் (1888-1970)

சி.வி.இராமன் என புகழ்ப்படுகிற சந்திரசேகர், ஒரு சிறந்த விஞ்ஞானி மட்டுமல்ல, மனித இன நலம், மனித கௌரவம் ஆகியவற்றின் முன்னேற்றத்தில் நம்பிக்கை கொண்டவராகவும் இருந்தார். இவர் 1930இல் இயற்பியலுக்காக நோபல் பரிசு பெற்றார். இவர்தான் இந்த விருதைப் பெற்ற முதல் ஆசியன்.

சி.வி.இராமன் தமிழ் நாட்டிலுள்ள திருச்சிராப்பள்ளியில் 1888 ஆம் ஆண்டு நவம்பர் 7-ஆம் நாள் பிறந்தார். இவருடைய தந்தை இயற்பியல், கணிதவியல் பேராசிரியர். இவர் சமஸ்கிருதம், இலக்கியம், இசை, அறிவியலின் சுற்றுச் சுழலில் வளர்ந்தார். இயற்கை அவருக்கு சிறந்த கவன சக்தி, கூர்மையான அறிவு, வினா கேட்கும் மன உறுதி ஆகியவற்றை பரிசாகக் கொடுத்துள்ளது. இவருடைய குழந்தைப் பருவத்தில் குழந்தை மேதை என பிரபலமானார்.

தனது 19-ஆவது வயதில் இந்திய தணிக்கை கணக்கியல் தேர்வில் முதலாவதாக தேர்வுற்று கல்கத்தாவில் நிதித்துறையின் உதவி கணக்கியல் உயர் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அறிவியல் மீது கொண்ட பற்றால், தனது உயர்ந்த பதவியை தியாகம் செய்துவிட்டு, கல்கத்தா பல்கலைக் கழகத்தின், அறிவியல் கல்லூரில், இயற்பியல் பேராசிரியராகச் சேர்ந்தார். இசையின்மீது இருந்த ஈடுபாட்டினால், வீணை, வயலின் தபலா மிருதங்கம் போன்ற இசைக்கருவிகளை இசைக்கத் தொடங்கினார். 1921ல் இலண்டன் ராயல் சொசைட்டியில் “நரம்பிசைக்கருவிகளின் கோட்பாடு என்ற கட்டுரையைப் படித்தார். 1924இல் ராயல் சொசைட்டியின் அங்கத்தினரானார்.

இங்கிலாந்துக்கு பயணம் செய்யும்பொழுது கடலின் நீல நிறம் இவரை மிகவும் கவர்ந்தது. பெரிய அலைகள் மேல் ஏழும்பி சுற்றினால் கூட ஏன் நீல நிறம் அப்படியே இருக்கின்றது என்பதைப்பற்றி அறிய ஆர்வம் கொண்டிருந்தார். பிறகு அவர் நீரின் மூலக் கூறுகளால் உடைந்து சிதறிய சூரியனின் வெளிச்சத்தினால் தான் என அவரது உள்ளுணர்ச்சி மின்னி மறைந்து அவர் பல பரிசோதனைகளை நடத்தி, “ஒளியின் சிதறலில் மூலக்கூறுகள்” எனனும் தலைப்பில் நீளமான ஒரு கட்டுரையை தயாரித்து, அதை இலண்டன் ராயல் சொசைட்டிக்கு அனுப்பி வைத்தார். அறிவியல் உலகம் இவரது புத்திக் கூர்மையைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தது.

## இராமன் விளைவு

ஒற்றை நிறமுள்ள ஒளிக்கீற்று இது ஒளி ஊடுறுவுகிற திட அல்லது திரவ பொருட்களைக் கடக்கும் பொழுது சிதறுகிறது. இராமன் சிதறிய ஒளிகளைப் பற்றி கற்றார். அவர் மிகவும் குறைந்த சக்தியைக் கொண்ட ஒளினிழற் பட்டைகள் ஒற்றை நிறக் கோட்டிற்கு இணையாக செல்வதை கண்டு பிடித்தார். இது ஒளிக்கதிர் ஒரு பரப்பின் மீது படும் பொழுது ஒற்றை நிறுத்துடன் இருந்தாலும், சிதறிய ஒளிக்கு ஒற்றை நிறமில்லை என்பதைக் காட்டுகிறது. இவ்வாறாக, இயற்கையில் மறைந்திருக்கின்ற ஒரு சிறந்த காரண காரியத் தொடர்பு அவருக்கு வெளிப்பட்டது. இந்த காரணகாரியம், இராமன் விளைவாக மாறியது ஒளினிழற் பட்டைகள், சிதறிய ஒளியில் இராமன் கோடுகளானது. விஞ்ஞானிகள், ஒளியானது அலைகளைப் போன்றதா அல்லது சிறு கூறுகளா என்று விவாதிக்கும் பொழுது ஒளி கூறுகள் என்றழைக்கப்படுகிற போட்டான்களால் ஆனது என்று ராமன் விளைவு நிருபித்தது. ஆங்கில அரசு சி.வி. இராமனுக்கு சர் என்ற பட்டத்தை வழங்கி கவுரவித்தது. அதனால் அவர் சர்.சி.வி இராமன் என்றழைக்கப்படுகிறார்.

முனைவர் இராமன் ஒரு சிறந்த ஆசிரியரும் ஒரு சிறந்த வழி காட்டியும் கூட. அவர் தனது மாணவர்களிடையே நம்பிக்கையை பெரிய அளவில் உருவாக்கினார். இவருடைய மாணவர்களில் ஒருவர் குறைந்த மன உறுதி கொண்டவர். ஏனென்றால் அவர் ஒரு கிலோ வாட்டில் இயங்கும் எக்ஸ் கதிர் உபகரணங்களைக் கொண்டிருந்தார். அதே சமயம் இங்கிலாந்திலுள்ள விஞ்ஞானி ஒருவர் 5 கிலோ வாட் இயங்கும் எக்ஸ் கதிர் உபகரணங்களைக் கொண்டிருந்தார். முனைவர் இராமன் அவரை உற்சாக மூட்டி 10 கிலோ வாட் சக்திக்கு பதிலாக அவரது மூளையை பயன்படுத்தினார்.

முனைவர் இராமனின் வாழ்க்கை நாம் பின்பற்றவதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். இந்தியா ஆங்கிலேயே ஆட்சியின் கீழ் இருந்த போதிலும் கூட அங்கு பரிசோதனைக்காக அடிப்படை கட்டமைப்புகள் அரிதாக இருந்ததால் அவரது சிறந்த மனதை அறிவியல் ஆய்வுக் கூடமாக பயன்படுத்தினார். எவ்வாறு நமது முன்னோர்கள் அவர்களின் மனித சக்தியை பயன்படுத்தி சிறந்த கோட்பாடுகளை உருவாக்கினார்.

## 17.3 ஜெகதீஸ் சந்திர போஸ் 1858 - 1937

நவீன இந்தியாவிற்கு பெருமை சேர்த்த மற்றுமொரு சிறந்த விஞ்ஞானி ஜே.சி.போஸ் ஆவார். இப்பொழுது வங்காள தேசத்திலுள்ள மைமன்சிங் என்ற இடத்தில் 1858 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் நாள் பிறந்தார். இவர் தனது உயர் கல்வியை கல்கத்தாவிலுள்ள புனித சவேரியார் கல்லூரியில் பெற்றார். 1885இல் பிரசிடென்சி கல்லூரியில் இயற்பியல் உதவி பேராசிரியராக நியமிக்கப்பட்டார். ஆனால் சம்பளம் வாங்க மறுத்துவிட்டார். ஏனென்றால் இது ஒரு ஆங்கிலேயே மனிதர் வாங்குவதில் பாதியாக இருந்தது. பிறகு பழங்காலத்தில் உலகம் முழுவதிலும் இந்தியா அனுபவித்த புகழை, திரும்பவும் பெறுவதற்காக அவர் ஒரு விஞ்ஞானியாக வேண்டுமென்று முடிவு செய்தார். மின் அலைகளின் சிறப்பியல்புகளைக் கற்பதற்காக ஒரு செயற்கருவியை தயாரித்தார். அவருடைய "மின் காந்த கதிர் வீச்சு மின்சார கதிரின் முனைவாக்கம் என்ற கட்டுரைக்காக அவருக்கு 1917 இல் 'சர்' பட்டம் வழங்கி, 1920இல் இலண்டனில் ராயல் சொசைட்டியின் உறுப்பினராகவும் ஆக்கப்பட்டார். இவர் தான் இந்த பெருமையைப் பெற்ற முதல் இயற்பியல் விஞ்ஞானியாவார்.

முனைவர் சந்திர போஸ் கிரஸ்கோகிராபிக்கை கண்டுபிடித்தற்காக உலகம் முழுவதும் பிரபலமானார். அது மில்லி மீட்டர் தாவரத்தின் மில்லியனாவது பகுதியின் தாவர வளர்ச்சி மற்றும் இயக்கங்களை கூட பதிவு செய்கிறது. கிரஸ்கோகிராபினால் எடுக்கப்பட்ட விளக்க வரை கட்டத்தின் மூலம் முனைவர் போஸ் தாவரங்களுக்கும் சுழற்சி முறை உண்டு என நிரூபித்தார். தாவரத்தில் மேல் நோக்கி வருகின்ற திரவம் அல்லது பால் தாவரத்திலுள்ள உயிரணுவின் செயல் என கிரஸ்கோகிராபியில் காட்டப்பட்டுள்ளன.

உலோகங்களை கூட புறம்பான தூண்டலுக்ககு எதிர்வினையாற்றும் என்பதை நிரூபிக்க முனைவர் போஸ் உலகம் முழுவதும் போஸ் கருவிகள் என புகழ்பெற்ற மற்ற பல கருவிகளையும் தயாரித்தார். கத்தரிக்கோல் மற்றும் இயந்திரங்களில் பயன்படுத்தப்பட்ட இரும்பு மற்றும் உலோகங்கள் கூட மழுங்கி விடுகின்றன மற்றும் சிறிது காலத்திற்குப்பின் சக்தியை திரும்பவும் பெறுகின்றன என போஸின் கருவிகள் நிருபித்தன.

கிரஸ்கோ கிராபி, போஸ் கருவிகள் தவிர அவருடைய கம்பியில்லாத கண்டு பிடிப்புகள் மார்க்கோனி காலத்திற்கும் முந்தைய நாட்களிலாகும். இவர் தான் முதன் முதலில் கம்பியில்லா பிணையி (வானொலி சிக்னல் பொறியமைவு), மின் அலைகள் திசை மாறிச் செல்லுதலை காட்டும் கருவிகளைக் கண்டுபிடித்தார். ஒருவர் இந்த உண்மையை நோக்கி இவருடைய கவனத்தை திருப்பும் பொழுது கண்டுபிடித்த வரைவிட இந்த கண்டுபிடிப்பு மனித இனத்திற்கு மிகவும் முக்கியமானது என்று சாதாரணமாகக் கூறினார்.

### இப்பகுதிக்கான கேள்விகள் 17.1

1. இந்தியாவில் அணு ஆற்றல் இயற்பியலின் தந்தை என அழைக்கப்படுகிறவர் யார்?
2. ஸ்ரீனிவாச ராமானுஜன் எந்தத் துறையில் மேம்பட்டிருந்தார்?
3. இந்திய கணிதவியல் சமுதாய பத்திரிக்கையில் ராமானுஜ ஸ்ரீனிவாசாவின் எந்த நூல் வெளியிடப்பட்டது?
4. ஆர்டர்ஸ் ஆப் இன்பினிடி என்ற நூலை எழுதினவர் யார்?
5. சி.வி.ராமன் எப்பொழுது இயற்பியலுக்காக நோபல் பரிசு பெற்றார்?
6. சி.வி.ராமன் இங்கிலாந்திற்கு பயணம் செல்லும்போது அவரை வெகுவாகக் கவர்ந்தது ஏது?
7. எந்த கட்டுரை சி.வி.ராமனால் எழுதப்பட்டு, இலண்டனிலுள்ள ராயல் சொசைட்டிக்கு அனுப்பட்டது?

8. ராமன் விளைவு என அழைக்கப்படுவது எது?
9. போட்டோன்கள் என்பது என்ன?
10. எந்த நூலில் ஜெகதீஸ் சந்திர போஸ்க்கு லண்டனில் ‘சர்’ தகுதி கிடைத்தது?
11. கிரஸ்கோகிராபை கண்டுபிடித்தவர் யார்?
12. கிரஸ்கோகிராப் எதைப் பதிவு செய்கிறது?
13. கம்பியில்லாத தந்தி இணைப்பை கண்டுபிடித்தவர் யார்?

## 17.4 ஹோமி ஜஹாங்கீர் பாபா (1909-1966)

முனைவர் ஹோமி பாபா ஒரு சிறந்த விஞ்ஞானி அவர் இந்தியாவை அணு காலத்திற்கு நடத்திச் சென்றார். இவர் இந்தியாவின் அணு அறிவியலின் தந்தை என அழைக்கப்படுகிறார். சிறுவனாக இருக்கும் போதே அவருடைய புத்திக் கூர்மையைக் காண்பித்து பல பரிசுகளை வென்றார். இவர் தனது ஆரம்ப கல்வியை மும்மையில் பயின்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் மெக்கானிகல் பொறியாளர் பட்டப் படிப்பில் முதலாவதாகத் தேர்ச்சி பெற்றார். ஆராய்ச்சி படிப்பை முடித்து 1935-இல் முனைவர் பட்டத்தை வாங்கினார். 1939 வரை அண்டக்கதிர்கள் சம்பந்தமாக புதிய ஆராய்ச்சியைத் தொடங்கினார். இரண்டாம் உலகப் போர் தொடங்கின பொழுது இந்தியாவிற்குத் திரும்பினார்.

முனைவர் பாபா பெங்களூரிலுள்ள இந்திய அறிவியல் நிறுவனத்தில் முனைவர் சி.வி.இராமனின் வேண்டுகோள் படி சீடராக சேர்ந்தார். அவர் இயற்பியல் பேராசிரியர் ஆனார். இயற்பியலின் சில புதிய பகுதிகளை ஆராய்ச்சி செய்ய ஒரு நிறுவனம் கட்டுவதற்கு இங்கு இவருக்கு யோசனை தோன்றியது. மிக தைரியத்துடன் ஒரு முடிவெடுத்து, சர் தோரப் - ஜி டாடாவிற்கு இந்தியாவில் ஒரு நிறுவனத்தை தோற்றுவித்து. அது உலக அணு சக்திக்கு அடித்தளமாக இருக்க வேண்டும் என்று யோசனை கூறி ஒரு கடிதம் எழுதினார். இந்நிறுவனம் இத்துறை நிபுணர்களை தானே உருவாக்கும். மேலும் இந்தியா வெளியுலக மூலங்களை எதிர்பார்க்க வேண்டியதில்லை. இதன் விளைவாக 1945 ஆம் ஆண்டு முனைவர் பாபா வின் மூதாதையர் வீட்டில் டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் தொடங்கப்பட்டது.

பாபா அணு ஆராய்ச்சி மையம் என்று இப்பொழுது அழைக்கப்படுகின்ற இந்தியாவின் முதல் அணு ஆராய்ச்சி மையத்தை டிராம்பேயில் தோற்றுவிக்கப்பட்டது. இந்தியாவின் முதல் அணு உலையான அப்சராவும் இவருடைய ஆலோசனையால் ஏற்படுத்தப்பட்டதாகும். 1948இல் ஏற்படுத் தப்பட்ட அணு சக்தி கழகத்திற்கு பாபா முதல் துறை நெறியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அணு சக்தி துறையில் அவரது படிப்பு, பன்னாட்டு நிபுணர்களிடையே சிறந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. அவர் ஐக்கிய நாடுகளின் ஆதரவினால் அணு ஆற்ற லின் சமாதான பயன்பாடுகள் என்ற மாநாட்டிற்கு தலைவராக பணியாற்றினார். இந்திய அரசாங்கம் அவரை பத்மபூஷன் விருது வழங்கி கௌரவித்தது. 1966இல் விமான விபத்தில் பாபா காலமானார்.

## 17.5 முனைவர் விக்ரம் அம்பலால் சாராபாய் (1919-1970)

முனைவர் விக்ரம் அம்பலால் சாராபாய் நவீன இந்தியாவின் மற்றுமொரு சிறந்த மேதையாவார். இந்தியாவின் முதல் செயற்கை கோளான ஆர்யபட்டாவை செலுத்துவதில் இவர் முக்கிய பங்கு வகித்தார். இவர் தனது தொடக்கக் கல்வியை தனது பெற்றோரால் நடத்தப்பட்ட பள்ளியில் பெற்றார். இவர் முனைவர் சி.வி.இராமனின் வழிகாட்டியில் அண்டக்கதிர்கள் பற்றி கற்று முனைவர் பட்டத்தை கேம்பரிட்ஜ பல்கலைக் கழகத்திலிருந்து பெற்றார். இவரின் அண்டக்கதிர்கள் பற்றிய படிப்பு, அண்டக்கதிர்கள் விண்ணின் வெளிப்பரப்பிலிருந்து சாரிசாரியாக சக்திக்கூறுகள் வருகின்றன என்பதை தெளிவாக்குகின்றன. அவை பூமியை அடையும் வழியில் சூரியன், வளிமண்டலம், காந்த விசையால் தாக்கப்படுகின்றன.

முனைவர் சாராபாய் பன்முகத் தன்மை கொண்ட பண்புடையவர். அவர் ஒரு தொழில் அதிபர். இன்று அவரால் தொடங்கப்பட்ட சாராபாய் கெமிகல்ஸ், சாராபாய்கிளாஸ், சாராபாய் கிஜிலிமிடெட், சாராபாய் மெர்க்லிமிடெட் போன்ற பல தொழற்சாலைகள், பிற தொழிற்சாலைகள் ஆகும். படைத் துறையைச் சார்ந்தவன் பொருள்களை உற்பத்தி செய்யக் கூடிய ஒரு குழுவை ஆரம்பித்து முன்பு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து கொண்டிருந்த நுண்ணுயிர் எதிரிகளையும் பென்சிலினையும் உற்பத்தி செய்து அவரும் கோடிக்கணக்கான பணத்தை இந்தியாவிற்காக சேமிப்பதில் உதவினார். இவர் அஹமதாபாத் ஜவுளி தொழில்துறை சங்கத்தின் நிறுவனரும் அஹமதாபாத் பண சங்கத்தின் நிறுவனரும் ஆவார். இவ்விதமாக இவர் வெற்றிகரமாக ஏராளமான தொழில்சாலைகளை ஏற்படுத்தினார்.

முனைவர் விக்ரம் அம்பலால் சாராபாய் பன்னாட்டு புகழ் பெற்ற பல நிறுவனங்கள் நிறுவினார். அவற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கவை, இந்திய வேளாண்மை நிறுவனங்கள், இவை மேலாண்மை படிப்பிற்கு உலகத்தரம் வாய்ந்தவை என கருதப்படுகிறது.

இவர் இந்திய விண்வெளி ஆராய்ச்சி தேசிய கமிஷனின் தலைவரும் அணு சக்தி கமிஷனின் தலைவரானார். இவர் தும்பா பூமத்திய ராக்கெட் செலுத்தும் தளத்தை அமைப்பதற்கு வழிகாட்டினார். கிராமங்களுக்கு செயற்கோள்தகவல் தொடர்பு மூலம், கல்வியைக் கொடுக்கும் திட்டங்களையும் தீட்டினார். 1966இல் அவருக்கு பத்மபூஷன் வழங்கப்பட்டது பத்மவிபூஷன் விருது அவரது இறப்பிற்குப் பின் வழங்கப்பட்டது. அவருடைய இறப்பு நாட்டிற்கு மிகப் பெரும் இழப்பாகும்.

## 17.6 முனைவர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம்

இந்தியாவின் பதினொன்றாவது குடியரசுத் தலைவரான முனைவர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம். 1931 அக்டோபர் 15-ஆம் நாள் தமிழ்நாட்டிலுள்ள தீவு நகரமான இராமேஸ்வரத்தில் பிறந்தார். இந்தியாவின் உயர்ந்த சிவிலியன் விருதான 'பாரத ரத்னா' என்ற விருது அவருக்கு 1977இல் அறிவியல், பொறியியல் துறைக்கு வழங்கப்பட்டது.

முனைவர் கலாம் தன்னுடைய தொடக்கக்கல்வியை ராமேஸ்வரத்தில் பயின்றார். அவர் தனது 10 ஆம் வகுப்புத் தேர்வை இராமநாதபுரத்திலுள்ள ஸ்கிவார்டஸ் உயர் பள்ளியிலும் வானூர்தி பொறியியல் பட்டத்தை மதராஸ் தொழில் நுட்ப நிறுவனத்திலும் பெற்றார்.

முனைவர் கலாம், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் 1963 லிருந்து 1982 வரை பணி புரிந்தார். விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தில், ரோகிணி என்ற செயற்கை கோளை சுற்றுப்பாதையில் விடுவதற்கு செயற்கைகோள் ஏவுகலத்தை உருவாக்கினார். 1982இல் பாதுகாப்பு ஆராய்ச்சி அபிவிருத்தி அமைப்பின் நிர்வாகியான இவருக்கு, ஒருங்கிணைந்த ஏவுகணை மேம்பாட்டுத்திட்டத்தின் பொறுப்பும் கொடுக்கப்பட்டன. இவர் பிரிதிவி, திரிசூல், ஆகாஷ், நாக், அக்னி போன்ற 5 திட்டப் பணிகளை பாதுகாப்புப் பணிக்காக உருவாக்கினார். அவர் இந்தியாவை தன்னிறைவு பெற்ற காலமாக மாற்றினார். மேற்பரப்பான ஒரிடத்திலிருந்து மற்றொரு மேற்பரப்பிற்கு செல்கின்ற ஏவுகணை ஒரு நிகரற்ற சாதனையாகும். ஏவுகணை செலுத்தப்பட்டத்தின் வெற்றி இந்தியாவை வளர்ச்சி அடைந்த நாடுகளின் குழுமத்தில் ஒரு உறுப்பினராகச் செய்தது. அக்னிக்காக, கார்பன் பொருட்களால் மிகக் குறைந்த எடையில் வடிவமைக்கப்பட்ட மாதிரிகள் இளம்பிள்ளை வாதத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடுக்கிமானியாக பயன்படுத்தப்பட்டது. பொருட்கள், கிடுக்கிமானியின் எடையை 4 கிலோவிலிருந்து 400 கிராம் ஆக குறைக்கப்பட்டது. மனித இனத்திற்கு இது ஒரு சிறந்த வரபிரசாதமாகும். பொருட்கள் நெகிழும் வளையங்கள், ஸ்டென்ட்ஸ் என்று அழைக்கப்படுகிற கம்பிச் சுருள்களும் இருதய நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக பலூன் ஆஞ்சியோ பிளாஸ்டியில் பயன்படுத்தப்படுகிறது.

முனைவர் அப்துல்கலாமின் வாழ்க்கை இந்தியாவின் மன உறுதிக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. அவர் இந்திய மரபையும் சமயத்தையும் உண்மையாக பின்பற்றுகிறார். அவர் அறிவியலை சமயத்துடமை தத்துவத்துடனும் ஒருங்கிணைத்தார். உள் மனதின் ஆலோச னையை அழுத்தமாக நம்புகிறார். அதாவது உள் மன எண்ணங்களுக்கு மிகவும் சார்ந்தும் புறம்பான, நினைவு படுத்தக் கூடிய சொற்களுக்கு குறைவாக இடங் கொடுத்தால் பணியை தன்னலமில்லாமல் செய்ய வேண்டுமென்று முனைவர் கலாம் கூறுகிறார். இந்த உலகத்தைப் பொருத்த வரை எனக்கு என்று எதுவுமேயில்லை, நான் பெற்றுக் கொண்டது ஒன்றுமில்லை. எதுவும் கட்டவில்லை. என்னிடம் ஒன்றும் இல்லை மகன்கள், மகள்கள், குடும்பம் என்று எதுவும் இல்லை என்று கூறுகிறார். தனக்காக வாழாமல் தான் பிறந்த நாட்டுக்காக வாழ்ந்து பெருமை பெற்றார்.

## இப்பகுதிக்கான கேள்விகள் 17.2

1. முனைவர் ஹோமி ஜே.பாபாவின் ஆராய்ச்சி கட்டுரை என்ன?
2. 1945 இல் எந்த நிறுவனம் முனைவர் பாபாவின் மூதாதையர் வீட்டில் ஆரம்பிக்கப்பட்டது?
3. முதல் அணு உலையின் பெயர் என்ன?
4. அண்டக் கதிர்கள் யாவை?
5. முனைவர் விக்ரம் சாராபாயால் எவ்வாறு கோடிக்கணக்கான இந்திய பணத்தை மிச்சப்படுத்த முடிந்தது?
6. டி.ஈ.ஆர்.எல்.எஸ் என்பது என்ன?
7. முனைவர் அப்துல்கலாமினால் பாதுகாப்பு பணிக்காக உருவாக்கப்பட்ட பணித்திட்டங் களின் பெயர்களை கூறுக?
8. முனைவர் அப்துல் கலாம் எவ்வாறு இளம்பிள்ளை வாத பாதிப்புக்குள்ளான மக்களுக்கு உதவினார்?

## நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- இந்தியாவின் கணித மேதையான ஸ்ரீனிவாச ராமானுஜம் இந்த துறையில் பல்வேறு முதல் தரமான சாதனைகளைக் கொண்டிருப்பது அவரது சிறப்பாகும்.
- 1930இல் இயற்பியலுக்காக நோபல் பரிசு பெற்ற சி.வி.ராமன் முதல் தரமான இந்திய விஞ்ஞானி ஆவார். அவரது கண்டுபிடிப்பு போட்டான்கள் என்று அழைக்கப்படுகிற சிறு துணுக்குகளிலிருந்து ஒளி உருவாவதைத்தான் ராமன் வளைவு என அறியப்படுகிறது.
- முனைவர் ஜே.சி.போஸ் தாவர வளர்ச்சி, அதன் இயக்கத்தை பதிவு செய்யக் கூடிய கிரஸ்கோ கிராபின் கண்டுபிடிப்பு போஸ் கருவிகள் என தெரியப்படுகிற வடிவமைக்கப்பட்ட புதிய உத்தி கருவிகள், மற்ற எல்லா சாதனைகளுக்காவும் சிறப்படைகிறார்.
- இந்தியாவை அணுகாலத்திற்கு இட்டுச் சென்ற முனைவர் ஹோமி பாபா மற்றுமொரு இந்திய விஞ்ஞானி ஆவார்.
- இந்தியாவின் முதல் செயற்கை கோளான ஆர்யப்பட்டா செலுத்துவதில் பின்னணியில் இருந்த முனைவர் விக்ரம் சாராபாய் நவீன இந்தியாவின் மற்றுமொரு சிறந்த மேதையாவார். பல தொழிற்சாலைகளை நிறுவின இவரும் ஒரு சிறந்த தொழிலதிபர் ஆவார். இவர் ஐ.என்.சி.ஓ.எஸ்.பி.ஏ.ஆர், அணு சக்தி கமிட்டியின் நெறிப்படுத்துபவராக இருந்தார்.

- இந்திய குடியரசுத் தலைவர் முனைவர் ஏ.ஜே.பி.அப்துல்கலாம் உருவாக்கின எஸ்.எல்.வி 3 யை செயற்கை கோளான ரோகிணியை, இவைகள் சுற்றுப்பாதையில் விடுவதற்காக உருவாக்கினார். டி.ஆர்.டி.ஓ. விண் நெறியானரான இவர் ஐந்து திட்டப் பணிகளான பிரிதிவி, திரிசூல், ஆகாஷ், நாக், அக்னி I உருவாக்கினார். இந்நாள் வரை இவர் இந்திய இளைஞர்களை ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார்.

## பயிற்சிக்கான கேள்விகள்

1. அறிவியல், தொழில் நுட்பத்துறைக்கு ஜெகதீஸ் சந்திர போஸின் பங்களிப்புக்களை விவரி.
2. இந்தியாவை உன்னத அணு சக்தி நாடாக்க முனைவர் ஹோமி பாபாவின் முயற்சிகளை விளக்கு.
3. நமது மூதாதையர்கள் அவர்களின் மன ஆற்றலை பயன்படுத்தி, சிறந்த கோட்பாடுகளை உருவாக்கினதை எவ்வாறு சி.வி.ராமனால் நிரூபிக்க முடிந்தது?
4. முனைவர் அப்துல் கலாமின் வாழ்க்கை இந்தியாவின் உண்மையான ஊக்கம் என்பதை விவாதி

## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 17.1

1. ஹோமி . ஜே.பாபா
2. கணிதவியல்
3. பெமோலி எண்களின் ஆராய்ச்சிக் கட்டுரை
4. ஜி.ஹச். ஹார்டி
5. 1930 ல்
6. கடலின் நீல வண்ணம்
7. சிதறுகின்ற ஒளியின் சிறுமூலக் கூறுகள்
8. நிறமாலை வரிகளின் குறைந்த தீவிரமுள்ள இணையான ஒற்றை நிற ஒளிகள் பிளவுபட்ட ஒளியில் உள்ளன. இது, ஒளிக்கதிர் ஒரு பரப்பின் மீது படும் முறையை ஒற்றை நிற ஒளி இல்லை என்றாலும் பிளவுபட்ட ஒளி ஒற்றை நிற ஒளி இல்லை என்பதை காட்டுகிறது.
9. ஒன்று சேர்ந்த துணக்குகள் ஒளியை உருவாக்குகிறது.
10. மின்காந்த கதிர் வீச்சு எதிர்மின்னூட்டம் என்ற இவரது கட்டுரை.
11. ஜெகதீஸ் சந்திர போஸ்
12. மில்லியனாவது பகுதி ஒரு சென்டி மீட்டர் தாவரம் அதன் இயக்கங்களில்
13. ஜெகதீஸ் சந்திர போஸ்

### கேள்விகளுக்கான பதில்கள் 17.2

1. அண்டக் கதிர் வீச்சு
2. டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம்
3. அப்சரா
4. அண்டக் கதிர் வீச்சுகள், விண்வெளியிலிருந்து சக்தி துணக்குகள் சாரையாக வருதல்.
5. அவர் இந்தியாவில் ராணுவ வன் இயந்திரங்கள் நோய்களை குணப்படுத்தக்கூடிய மருந்துகள் பென்சிலினை உற்பத்தி செய்ய தொடங்கினார்.
6. தும்பா பூமத்திய ராக்கட் செலுத்தும் தளம்.
7. பிரிதிவி, திரிசூல், ஆகாஷ், நாக், அக்னி.
8. அவர் கிடுக்கிமானியின் எடையை 4 கிலோவிலிருந்து 400 கிராமாகக் குறைத்தார்.

# அலகு - VII

## கல்வி

*18. இந்தியாவில் கல்வி*

# 18

# இந்தியாவில் கல்வி

இத்துணை காலமாக பண்பாட்டின் பல்வேறு அம்சங்களான கலை, கட்டிடக்கலை, சமயம் அறிவியல் போன்றவற்றை நீங்கள் படித்துக் கொண்டிருந்தீர்கள். பண்பாட்டின் மற்றுமொரு முக்கியமான அம்சம் கல்வியாகும். ஆனால் கல்வி என்பது என்ன? பள்ளியில் அல்லது புத்தகங்களில் சிலவற்றை படிப்பது எளிது என்று நீங்கள் கூறலாம். இது பாதி உண்மையானது. கல்வி என்பது கற்றலின் அனுபவம். ஆனால், கற்றல் ஒருவருடைய வாழ்க்கையில் எல்லா இடங்களிலும் உள்ளது. இருப்பினும், சில அனுபவக் கற்றல்கள், அங்கொன்றும் இங்கொன்றுமாக அல்லது இயற்க்கையிலேயே தற்செயலாக விளைவது, அதே சமயம் கற்றல் அனுபவங்கள் வழக்கமாக ஆழ்ந்து சிந்திக்கக் கூடிய, தனி மனிதரை பாதிக்கக்கூடிய முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட சில குறிப்பிடத்தக்க நடத்தைகளின் மாறுதல் களுடன் திட்டமிடப்பட்டுள்ளது. நீங்கள் இப்பொழுது இந்த மாதிரி அனுபவங்களை பெறப்போகிறீர்கள், ஏனென்றால், இந்தப் படிப்பின் பல்வேறு பாடங்களைக் காணப் போகிறீர்கள். ஆனால் எப்பொழுதாவது நீங்கள் கல்வி எவ்வாறு பண்பாட்டுடன் தொடர்பு கொள்கிறது என்று ஆச்சரியப்பட்டிருக்கிறிர்களா? பண்பாடு என்பது முந்தைய தலைமுறையினிடமிருந்து, சமூகத்தின் அங்கத்தினர்களான பின்வருபவர்களினால் பெற்றுக் கொண்ட ஒன்று திரட்டப்பட்ட அனுபவங்கள் மற்றும் சாதனைகளாகும். அனுபவங்கள் மற்றும் சாதனைகளின் கட்டமைப்பு செயல்களை கல்வி என அழைக்கலாம், கல்வி என்பது, பண்பாட்டு நம்பிக்கைகளையும் கருத்துகளையும் எடுத்துச் செல்கிற ஊடகம் மட்டும் மல்ல, ஆனால் இதுவும் பண்பாட்டின் நம்பிக்கைகளால் உருவமைக்கப்பட்டது. பண்பாட்டில் மாற்றங்கள் ஏற்படும் பொழுது கல்வி முறையும் மாறுகிறது. இந்த பாடத்தில் பண்டைய காலத்திலிருந்து இந்தியாவில் காணப்பட்ட கல்வி முறையின் பரிணாம வளர்ச்சி ஏனென்றால், சமுதாய கல்வியை தன்னுடைய அங்கத் தினர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளுள் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த கடமையாகும்.

## நோக்கங்கள்

நீங்கள் இந்த பாடத்தை படித்தபின்பு, உங்களால்

- இந்திய வரலாற்றின் பண்டைய, மத்திய, நவீன வெவ்வேறு காலங்களில் வழங்கப்பட்ட கல்வியின் தன்மை பற்றி விவரிக்க
- சமண மற்றும் புத்த சமய கல்வி முறையின் பங்களிப்பை மதிப்பிட
- சமுதாயத்தில் கல்வியின் அணுகு முறை மற்றும் வழங்கப்பட்ட கல்வியின் தன்மை, இவற்றைப் பொருத்து, பெண்களின் கல்வித் தகுதியை மதிப்பிட

- மத்திய காலத்தில் டெல்லி சுல்தானியர்களின் தோற்றத்துடன், கல்வித்துறையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நினைவு கூற
- கல்வியை, மிகவும் அறிவார்ந்த விளக்கமாகச் செய்வதில் முகலாய ஆட்சியாளர்களின் பங்கை பாராட்ட
- காலனி ஆதிக்கக் காலத்தில், நவீன கல்வி பரவுதலின் தாக்கத்தை ஆராய
- சுதந்திர இந்தியாவில் இடைநிலைக் கல்வி, தொழிற் கல்வி உயர்கல்வி, முதியோர் கல்வி போன்ற கல்வி அம்சங்களின் பங்கை மதிப்பிட உங்களால் முடியும்.

## 18.1 பண்டைய காலத்தின் கல்வி

### 18.1.1 வேத காலம்

பண்டைய இந்தியாவில், குருக்கள் என அழைக்கப்பட்ட ஆசிரியர்களால் அவர்களைச் சுற்றி ஒன்று சேர்ந்து, அவர்கள் அவர்களோடு குடும்பத்தின் அங்கத்தினராக வாழ்ந்த மாணவர்களுக்கு கல்வியறிவு வழங்கப்பட்டது. அத்தகைய இடம் குருகுலம் என அழைக்கப்பட்டது. குருகுலம், உறையுள் பள்ளிகள் போல நடைபெறுகின்றன. ஆசிரமத்தில் குழந்தைகளுக்கு கல்வியறிவு, தனிப்பட்ட தகவல்கள், தனிக்கவனம் கொடுத்து குருக்களால் கற்பிக்கப்பட்டது. கல்வி மேல் சாதியைச் சார்ந்தவர்களின் முதன்மையான சிறப்புரிமையாக இருந்தது. கற்றல் என்பது ஆசிரியருக்கும் மாணவனுக்குமிடையே குரு சிஷ்ய பரம்பரா என்று அழைக்கப்பட்ட ஒரு நெருக்கமான உறவாகும் பொதுவாக கற்றல் செயல்பாடு உபநாயனா(புனித நூல் சடங்கு) என்ற சமய சடங்குடன் தொடங்கப்பட்டது. கல்வி சாதாரணமாக, வாய்மொழியில் வழங்கப்பட்டது. இது வேதங்கள், தர்ம சாஸ்திர நூல்களை முழுவதுமாக அல்லது பாதியளவு மனப்பாடம் செய்வதில் அடங்கியது. பிறகு இலக்கணம், தர்க்கம் மெய்ப்பொருள் துறை போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன. மைத்ராயினி உபநிடதங்கள், முதன்மையான அறிவு (கியான்) பிரதிபலிப்பு (சிந்தன்) ஆடம்பரமின்மை (தபஸ்) ஆகியவை கற்றலின் விளைவுகள் என நமக்கு போதிக்கின்றது. தன் உணர்வு எண்ணங்களைத் தானே ஆய்வு செய்வதின் மூலம் (ஆத்மாவிஷ்லேஷ்னா) ஒருவர், நற்குணம்(சத்வா) தூயமனது, திருப்தி ஆகிய ஆன்மாவின் நிலைகளை அடைந்தவராகிறார். இக்காலத்தில் சுய கல்வி, உயர்ந்த அறிவைப் பெறுவதற்கு ஒரு சரியான முறை என கருதப்பட்டது. ஒரு சிறந்த உதாரணத்தை, தைத்ரேயா உபநிடதங்களில் காணலாம். வருணாலின் மகளான பிருகு, அவனுடைய தந்தையை அணுகி அவரை பிரம்மா என்றால் என்னவென்று கற்றுக் கொடுக்க கேட்கிறான். அவனுடைய தந்தை. அவனிடம் இதை தியானத்தின் மூலம் அறிந்து கொள் எனக் கூறுகிறார்.

### 18.1.2 மௌரியர் காலம்

மௌரியர் காலம், பிந்தைய மௌரியர் காலங்களில் இந்திய சமுதாயம், தீவிரமான மாறுதல் கட்டத்தை கண்டுள்ளது. நகர மையங்களின் வளர்ச்சி மற்றும் வாணிகத்துடன், வாணிக சமூகம், முக்கியமான நிலையை பெறுவதற்கு வந்தது. இதன் விளைவாக வணிகர்களின் சங்கம், கல்வியை வழங்குவதில் முக்கிய பங்கை எடுக்கத்தொடங்கியது. தொழில் நுட்பக்கல்வி, சுரங்கத் தொழில் உலோகவியல், தச்சுப்பணி, நெசவு சாயம் இடுதல் ஆகியவற்றுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. கட்டடங்கள் கட்டிடக் கலையில் நகர வாழ்க்கையின் எழுச்சியுடன் புதிய கட்டடக்கலை சார்ந்த படிவங்கள் பரிணாமித்தன. சங்கங்களும், வானவியல் நட்சத்திரங்களின் நிலையைப் பற்றிய படிப்பு, ஆகியவற்றிற்கு ஆதரவளித்தது. அவர்களது பெருங்கடல் பயணத்திற்கு உதவியது. வான் கணிப்பாளர்கள், பிரபஞ்ச ஆய்வாளர்கள்,

ஆகியோர் காலத்தின் (கலா) மீது விவாதத்தை தொடங்கினார்கள். இது காலத்தை (கலா) கடந்த காலத்துடன் ஒப்பிடக் கூடிய கூர்மையான உணர்வு வளர்ச்சியடைய உதவியது. மருத்துவ அறிவு ஆயுர்வேதமாக முறைப்படுத்த தொடங்கியது. மூலக் கூறுகள் இந்திய மருத்துவ முறைக்கு அடிப்படையாக அமைந்தன. ஆரோக்கியமான உடலுக்கு, மூன்று சரியான கூட்டிணைவு அவசியமாக இருந்தது. மூலிகைகளின் மருத்துவ குணங்களின் அறிவு அவற்றின் பயன்பாடு. சிறப்பான வளர்ச்சி நிலையை அடைந்தது. மருத்துவத்தில் சாரகா், அறுவை சிகிச்சையில் சுஸ்ருதாவும் புகழ் பெற்றவர்களாயினர். சாரகாவால் மருத்துவத்தின் மீது எழுதப்பட்ட “சாரக சம்ஹிதா” நுட்பமான, யாவும் அடங்கிய நூலாகும்.

தத்துவஞானி, அறிஞர், ஆசிரியர் என புகழ் பெற்ற சாணக்கியரைப் பற்றி நீங்கள் கேள்விபட்டிருப்பீர்கள். அர்த்த சாஸ்திரம் இவரது புகழ் பெற்ற நூலாகும். பாடத்திட்டத்தை பற்றிய ஆய்வுகள், அர்த்த சாஸ்திரத்தில் முக்கியமாக இளவரசர்களுக்கு மட்டுமான கல்வியைக் குறிப்பிடப்பட்டடுள்ளது. இளவரசன் உபநயனத்தை முடித்த பிறகு, நான்கு வேதங்கள், அறிவியல் பாடங்களை உள்ளடக்கிய வேத பாடங்களைக் கற்றுக் கொண்டனர். அவர்கள் தர்க்கம் பொருளாதாரம், அரசியலையும் கற்றுக் கொண்டனர். இன்றைய கல்வியிலிருந்து மிகவும் வேறுபட்டு, அக்காலத்தில் கல்விமுக்கியமாக திறமைகளை அடிப்படையாகக் கொண்டு இருந்தது. இராமாயணத்தில், இளவரசர்களுக்கான பாடங்கள், தனூர் வேதம், நிதிஷாஷ்திரா, சிக்ஷா யானைகள், ரதங்களைப்பற்றிய அறிவு (புலமை) அலேக்யா லிகேயா(வர்ணம் பூசுதல், எழுதுதல் லாங்கனா (குறித்தல்) தைரானா (நீந்துதல்)ஆகியவையாகும்.

## 18.1.3 குப்தர் காலம்

குப்தர் காலத்தில், சமண புத்தகல்வி முறைகள் பல்வேறு பரிமாணங்களை பெற்றன. புத்த மடாலயங்கள் மாணவர்களை 10 ஆண்டு காலத்திற்கு அனுமதித்தனர். வாய்மொழி முறையில் கற்றல் தொடங்கியது. பிறகு இலக்கிய நூல்களை படிப்பதற்கு மாற்றப்பட்டது. மடாலயங்கள் நூலகத்தைக் கொண்டிருந்தன. கையெழுத்துப் பிரதிகள் நகல் எடுக்கப்பட்டு, பத்திரப்படுத்தப்பட்டன. சீனா, தென் கிழக்கு ஆசியா போன்ற பிற நாடுகளிலிருந்து மாணவர் கள், புத்த மடாலயங்களுக்கு கல்வி கற்க வந்தனர். புத்த மடாலயங்கள், சாதாரணமாக, அரசர்கள், செல்வ வாணிய வகுப்பினரிடமிருந்து பெற்ற மானியத்தினால் நடத்தப்பட்டது. அவை வெகுதூரத்திலும் அருகிலுமுள்ள அறிஞர்களைக் கவர்ந்து. பாஹியானும் புத்த சமய நூல்களை படிப்பதில் பாடலிபுத்திராவிலுள்ள மடாலயத்தில் பல ஆண்டுகளை செலவழித்தார். பாடலிபுத்திராவைத் தவிர, வாரணாசி, மதுரா, உஜ்ஜைன், நாசிக் போன்ற பிற கற்றல் மையங்களும் இருந்தன. நாளந்தா பல்கலை கழகத்தின் உயர்ந்த படிப்பு உதவித் தொகைப்பற்றி, ஆசியா முழுவதும் நன்கு தெரியப்பட்டிருந்தது. வேதாந்த தத்துவம், புராண பாடங்கள், காவியங்கள், இலக்கணம், தர்க்கவியல், வானவியல் தத்துவம், மருத்துவம் முதலியவை அடங்கிய பாடங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன. அரசு மொழியான, சமஸ்கிருதம் போதனா மொழியாக இருந்தது. முந்தைய கட்டத்தில் சமணர்கள் ‘ஆதி புராணர்’ யாஷடிலகா போன்ற சமஸ்கிருத இலக்கியங்களை கல்வி நோக்கத்திற்காக பயன்படுத்தினார்கள். ஆனால் கல்வியை மிகப்பிரபலப்படுத்த, போதனாமொழி ‘பிராகிருத’ மொழிக்கும் பிற வட்டார மொழிகளான தமிழ், கன்னடா போன்ற மொழிகளுக்கும் மாற்றப்பட்டன. சமண புத்த சமய நூலகத்திலுள்ள ‘கிரந்தாக்கள்’ என அழைக்கப்பட்ட நூல்கள் பனை ஓலையில் எழுதப்பட்டு, அவற்றை ஒன்றாக கட்டப்படடன. மெதுவாக, சமண புத்த சமயம் அரச ஆதரவை இழந்தன. கல்வி மையங்களாக இருந்த அவர்களின் மடாலயங்கள் வீழ்ச்சியடையத் தொடங்கின. பிராமணர்களால் ஆதரவளிக்கப்பட்ட ‘மதங்கள்’ சமண,த்த மடாலயங்களுக்கு இணையான

நிறுவனங்களாக இருந்தன. மதங்கள், ஆசிரம்மங்களைப் போன்று, கல்வி நோக்கத்திற்காக செயல்பட்டன.

### 18.1.4 குப்தர்களின் பிற்பட்ட காலம்

ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தில், கலையும், கல்வியும் மிக விரைந்த வளர்ச்சியை அடைந்தன. இவர் கல்வியை எல்லா நிலைகளிலும் ஊக்கப்படுத்தினார். கோவில்களிலும், மடாலயங்களிலும் கல்வி வழங்கப்பட்டது. உயர்கல்வி, தட்சசீலம், உஜ்ஜைன', கயா, நளாந்தா பல்கலைக் கழகங்களில் வழங்கப்பட்டது. நளாந்தாவில் யுவான் சுவாங், புத்தர்களின் சிற்பக்கலை சார்ந்தவைகளைப் படிப்பதில் பல ஆண்டுகளை செலவழித்தார். புகழ் பெற்ற அறிஞரான 'ஷிலபத்ரா' இதனுடைய தலைவராக இருந்தார்.

7ஆம் மற்றும் 8ஆம் நூற்றாண்டுகளில், கோவில்களுடன் இணைக்கப்பட்ட 'கடிகைகள்' அல்லது கல்லூரிகள், புதிய கற்றல் மையங்களாகத் தோன்றின, கடிகைகள் பிராமண கல்வியை வழங்கின. சமஸ்கிருதம் போதனா மொழியாக இருந்தது. இந்த கோவில் கல்லூரிகளில் மேல் சாதி அல்லது 'திவிஜாஸ்' (இரண்டுமுறை பிறந்த) வைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் உளளே அனுமதி வழங்கப்பட்டது. சாதாரண மக்களை கல்வியிலிருந்து வெகுதூரம் கொண்டு செல்லப்பட்டனர். சமுதாயத்தின் மேல்நிலையிலிருக்கக் கூடிய பிரிவினர்களுக்கு மட்டும் கல்வி சிறப்பு உரிமையாக ஆனது.

## 18.2 கல்வியின் நோக்கங்கள்

பண்டைய இந்தியாவில், கல்வி தனி மனிதர்களின் ஈடுபாட்டைப் பொருத்து இருந்தது. மாணவனின் மொத்த ஆளுமையின் வளர்ச்சி தான், கல்வியின் குறிக்கோளாக இருந்தது. ஒருவருடைய மனநிலையின் வளர்ச்சி சுய மனநிறைவுகள். நுட்பங்கள், நியதிகள் முறைகள் ஆகிய கல்வியின் கருத்துகள் செயல்பாடுகளுடன் பரிணமித்தன. மனிதனின் வளர்ச்சி என்பது, முதன்மையாக அறிவைப் பெறுவதற்கு கருவியாக இருக்கின்ற அவன், அவள் மனதின் பயிற்சியைக் குறித்தது என நம்பப்படுகிறது. இந்த அறிவு அவன், அவள் உருவாக்கும் வலிமையை உயர்த்தக்கூடும். சிந்திக்கின்ற கொள்கையான 'மனை ஷக்தி' பொருளைப்பற்றிய சிந்தனையை விட உயர்ந்தது என மதிப்பிடப்படுகிறது. இதனால் மனது மட்டுமே கல்வியின் முதன்மையான பாடமாகும்.

## 18.3 பாடங்கள்

பண்டைய இந்திய மக்களுக்கு, உலோகவியல், செங்கல் சுடுதல், மெருகேற்றுதல், இடப்பரப்பின் அளவைகள், கொள்ளவுகள் தெரிந்திருந்தன. அறிவியல் முறையான மருத்துவம். பிந்தைய வேத காலத்தில் வளர்ச்சியடைந்தது. தட்சசீலா, வாரனாசி போன்ற கற்றல் மையங்களில் மருத்துவம் பாடமாக ஆனது. இந்தத் துறையில் மருத்துவத்தின் மீது சாரக சம்ஹிதா அறுவை சிகிச்சையின் மீது 'சுஸ்ருதா சம்ஹிதா ஆகிய இரண்டு முக்கியமான நூல்கள் இருந்தன. சுஸ்ருதா அறுவை சிகிச்சையை முக்கியமான குணப்படுத்தக் கூடிய கலைகளின் பகுதி, வாதத்திற்கு மிகச் சிறய அளவில் இடம் கொடுப்பது என கருதப்பட்டது. கணிதவியல் அல்லது கணிதம் கணக்கியல், வடிவியல், இயற்கணிதம், வான சாஸ்திரம் சோதிடம் ஆகியவை அடங்கும். வாணிகத்தில் இதனுடைய பயன்பாடு இருந்ததினால், கணக்கியலில் ஆர்வம் இருந்தது. ஆர்யபட்டாவால் எழுதப்பட்ட ஆர்யபாட்டியா கணிதத்துறையில் முக்கிய பங்களிப்பாகும். பிராமண மூடநம்பிக்கைகளால், வானவியலின்

சிறப்பு குன்றியது. வானவியலின் மீதான ‘சூர்ய சித்தாந்தா’ என்ற நூல் கருவிகள் பற்றிய வர்ணனை உற்று நோக்கும் முறைகளான இவை பிழையில்லாததாகவும் இல்லை, போற்றத்தக்கதாகவும் இல்லை. சிந்து சமவெளி நாகரிக காலத்திய வெண்கலம் செம்புவின் எஞ்சிய பகுதிகள் வேதியியல், உலோகவியல் வளர்ச்சியை சுட்டிக் காட்டுகிறதாக உள்ளன. இக்காலத்தில் தோல் பதனிடுதல், சாயம்பூசுதல் நொதித்தல் போன்ற செயல்முறைகள் திட்டமிடப்பட்டன.

## 18.4 மொழி

பண்டைய இந்தியாவில் சமஸ்கிருதம் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. பிராமண கல்விக்கு போதனா மொழியாக இருந்தது. சமஸ்கிருதம் உயர்ந்த சாதியைச் சார்ந்த கற்றவர்கள் இந்து ஆட்சியாளர்கள் அரசவையினர் ஆகியோரின் பொது மொழியாக இருந்தது. புத்த சமயத்தின் எழுச்சியுடன் பிராகிருத மொழியும் முன்னேற்றமடைந்தது. இது மக்களின் மொழியாக மாறியது. மௌரிய அரசன் அசோகர் தனது பிரகடனத்தில் பிராகிருத மொழியைப் பயன்படுத்தினார் சமஸ்கிருத நாடகத்தில் பெண்கள், பணிவான கதாபாத்திரங்களை முறைபடுத்தப்பட்ட பிராகிருத’ மொழியில் பேச வைத்ததார்கள். முந்தைய சிறிதளவு மாறுபட்டு பிரா கிருதமொழிகளில் பாலி ஒரு மொழியாக இருந்தது. சில சமஸ்கிருத இலக்கியங்களும் புழக்கத்தில் இருக்கும் பொழுது பெரும்பாலான புத்த சமய சட்டதிட்ட எழுத்துக்கள் பிராகிருதம் மொழியிலும், பாலி மொழியிலும் இருந்தன.

குஜராத், ராஜஸ்தானிலுள்ள சமண எழுத்தாளர்களால் கவிதைகளைத் தொகுப்பதற்காக மற்ற மொழியான அப்ரம்ஷா பயன்படுத்தப்பட்டது. திராவிடர்களின் மொழிகளான தமிழ், தெலுங்கு கன்னடம், மலையாளம் இந்தியாவின் தென் பகுதிகளில் பயன்பாட்டில் இருந்தன. அவை இக்காலத்திய இலக்கியங்களில் சொற்றொடர்களாக காணப்பட்டன.

பண்டைய கால இந்தியாவின் முனனேற்றத்திற்கு நாளந்தா பல்கலைக்கழகம் ஒரு சிறந்த உதாரணமாக இருந்தது. சீனப்பயனி யுவான் சுவாங் நாளந்தா பல்கலைக்கழகத்தை உயர்தரமான படிப்பு, ஆராய்ச்சி பட்டதாரி பல்கலைக் கழகம் என பதிவு செய்திருக்கிறார். நாளந்தா, விவாதிக்கக்கூடிய பள்ளிகளுக்கும் பெயர் பெற்றவையாகும் என சொந்தமாக விடுதி வைத்திருந்த ஒரு மாணவனால் குறிப்பிடப்படுகிறது. பாலபுத்ரதேவா நாளந்தாவில் படிப்பதற்காக, ஜாவாவிலிருந்து வந்த ஜாவாவைச் சார்ந்த மாணவர்களுக்காக பால புத்ர தேவா என்ற அரசன் ஒரு கோவிலைக் கட்டினான்.

### இப்பகுதிக்கான கேள்விகள் 18.1

1. கல்வி எவ்வாறு பண்பாட்டுடன் தொடர்புபடுத்தப்படுகிறது?
2. உபநாயனா சடங்கு என்றால் என்ன?
3. பண்டைய காலத்தில் கல்வி எங்கு வழங்கப்பட்டது?
4. பண்டைய காலத்தில் இந்திய மருத்துவ முறையின் அடிப்படை யாது?
5. பண்டைய காலத்தில் சமணர்களால் பயன்படுத்தப்பட்ட இரண்டு இலக்கிய நூல்களின் பெயரைக் கூறுக?
6. பண்டைய காலத்தில் சாதாரண மக்கள் எந்தெந்த காரணங்களினால் கல்வியிலிருந்து வெகு தூரம் விலகியிருந்தார்கள்?

குறிப்புகள்

## 18.5 இடைக்காலத்தில் கல்வி

டெல்லி சுல்தானியர்களின் ஆட்சியில் இஸ்லாமியக் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இடைக்காலத்தில் கல்வி. பாக்தாத்தைச் சார்ந்த அப்பாசித்தனின் கீழ் மரபு வழியில் திட்டமிடப்பட்டு வளர்ச்சி அடைந்தது. இதன் விளைவாக சாமர்கண்ட் புக்காரா, ஈரான் ஆகிய பகுதிகளிலிருந்து அறிஞர்கள், இந்திய அறிஞர்களின் ஆலோசனையை மதித்துப் போற்றினார்கள். போற்றத்தக்க கவிஞரான அமீர்குஸ்ரு உரைநடையும் செய்யுளையும் எழுதும் திறமையை வளர்த்தது மட்டுமில்லாமல் உள்நாட்டுக்குப் பொருத்தமான புதிய மொழியையும் உருவாக்கினார். மினஹஜ்-உஸ் சிராஜ், ஜியாவுதீன் பரானி, அபிப் போன்ற சில சமகாலத்திய வரலாற்று ஆசிரியர்கள் இந்தியர்களின் புலமையைப் பற்றி எழுதியிருக்கிறார்கள்.

பள்ளிக்கல்வியை வழங்கின நிறுவனங்கள் மக்தப்புகள் என்றும், அதே சமயம் உயர் கற்றலை மதரசாக்கள் என்றும் அழைக்கப்பட்டன. மக்தப்புக்கள், பொதுவாக பொது நன்கொடைகளினால் அதே சமயம் மதரசாக்கள், ஆட்சியாளர் மற்றும் பிரபுக்களின் நன்கொடையால் நிர்வகிக்கப்பட்டன. அங்கு ஆறு வெவ்வேறு வகையான நிறுவனங்கள் இருந்தன.

1. பிரபுக்களாலும் ஆட்சியாளர்களாலும் தோற்றுவிக்கப்ட்டவை
2. அரசு மானியம் அல்லது நன்கொடைகளுடன் தனிநபர்களால் தொடங்கப்பட்டவைகள்
3. மசூதிகளுடன் இணைக்கப்பட்டவைகள்
4. சமாதிகளுடன் இணைக்கப்பட்டவைகள்
5. தனிமனிதர்களால் தொடங்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டவை
6. சுபி சிறப்பு மருத்துவ மனைகளுடன் இணைக்கப்பட்டவைகளாகும்.

டெல்லியிலுள்ள மியுசி, நசிரி, பிருசி, பீடாரில் காவனின் மதராசா, பதேபூர் சிகாயில் அபுல் பாசிலின் மதரசா ஆகியவை மிகுந்த புகழ் பெற்றவை ஆகும். சிரட்டஜ-பிகஸ்ஷாஹி மதராசக்களில் கற்றுக் கொடுக்கப்பட்ட 14 பாடங்கள், சட்டஇயல் அல்லது திரத் போன்றவைகளை ஒப்புவித்தல், புள்ளி குறியீடு இடுதல், குரான் நூலிலிருந்து ஓதுதல் ஆகியவை கற்றுக் கொடுக்கப்பட்டன.

மரபு ஈடுபாடு, சமய சித்தாந்த பாடப்பொருள் முஸ்லிம் கல்விமுறையில் முக்கியமான அம்சமாக இருந்தது. பாடத்திட்டம் இரு பெரும் வகைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மரபு வழி (மான்குலத்) அறிவார்ந்த (மக்குள்த) அறிவியல்களாகும். தர்க்கம் தத்துவம், மருத்துவம், கணிதவியல் வானவியல் ஆகியவை அறிவார்ந்த அறிவியல்களின் கீழ் வந்தன. பிறகு மரபு சார்ந்த அறிவியல்களைவிட, அறிவு சார்ந்த அறிவியல்கள் வலியுறுத்தப்பட்டன. இல்துமிஷின் (1211-12360 காலத்திலிருந்து, சிக்கந்தர் லோடி (1489-1517) ஆட்சிகாலம் வரை, கல்வியில் மரபுப்பாடங்கள் அதிகாரம் செலுத்தின. சிக்கந்தர்லோடி, இரு சகோதரர்களான ஷேக் அப்துல்லாவையும் ஷேக் அஜிஜீல்லாவையும் முலதானிலிருந்து டெல்லிக்கு வரவழைத்தார். கல்வியின் சூழ்நிலை மாறத் தொடங்கியது. அவர்கள் பாடதிட்டத்தில் தத்துவ இயல் தர்க்கவியலை பாடதிட்டத்தில் அறிமுகப்படுத்தினர்.

### முகலாயர்களின் கீழ் கல்விமுறை

முகலாயர் காலம், கற்றல், கல்வியில் ஏராளமான மாற்றத்தை உருவாக்கியுள்ளது. முகலாயப் பேரரசர்கள் கற்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தனர் பாடசாலைகள், வித்யா பீடங்கள், மக்தப்புகள், மதரசாக்கள் மூலமாக கல்வியைப் பரப்புவதில் மிகப் பெரிய பங்கை

அளித்தார்கள். அக்பர் கல்வி நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கினார், ஜீம்மா மஸ்ஜித் அருகில் ஒரு கல்லூரியை தொடங்கினார். அந்த சமயத்தில் கல்வி அரசுப்பாடமாக இல்லை. பொதுவாக, கோவில்கள், மசூதிகள், தொடக்கக்கல்வியின் மையங்களாக இருந்தன. அவை ஆட்சியாளர்கள், செல்வந்தர்கள், நன்கொடையாளர்களால் கொடுக்கப்பட்ட நன்கொடையை சார்ந்திருந்தனர், சமஸ்கிருதமும், பாரசீகமும் கோவில்களிலும் மசூதிகளிலும் கற்றுக் கொடுக்கப்பட்டன. பெண் கல்விக்கான சட்டம் எதுவும் இருக்கவில்லை. அரச குடும்பத்து செல்வந்தர்கள் குடும்பத்துப் பெண்கள் வீட்டிலேயே கல்வியைப் பெற்றனர்.

முகலாய ஆட்சியாளர்கள் கற்றலின் இலக்கியத்தின் சிறந்த ஆதரவாளர்களாவர். இக்காலம் பாரசீகம் இந்தி அதாவது துருக்கியர்கள் மற்றும் இந்தியர்களுக்குமிடையே இருந்த நீண்ட கால தொடர்வின் காரணமாக உருது ஒரு மொழியாக எழுச்சி அடைந்தது. பாபர் துஜிகி-இ-பாபரி என்ற தனது சுய சரிதையை துருக்கிய மொழியில் எழுதினார். முகலாயப் பேரரசர் கணக்கியல் வானவியல் புவியியல் பாடங்களை டெல்லியிலுள்ள மக்தீப்புக்களில் அறிமுகப்படுத்தினார். இது நடைமுறையிலிருந்த கல்வி முறையில் பாரபட்சத்தை குறைப்பதில் உதவியது. பல இந்துக்கள், பாரசீகத்தை கற்கத் தொடங்கினர். சமஸ்கிருதத்திலிருந்து பாரசீக மொழி மொழி பெயர்ப்புகள் உருவாகின. அக்பர் கணக்கியல், பொது நிர்வாகம், வடிவியல் ஆகிய பாடங்களை சேர்த்தார். தனது அரண்மனைக்கு அருகில் ஒரு பணி மனையையும் கட்டினார். அவர் தாமாகவே பணி மனையை மேற்பார்வையிட்டார். மத சார்பற்ற, அறிவியல் முறை கல்வியை அறிமுகப்படுத்த எடுத்த முயற்சிகள் பழமை விரும்பிகள் பிரிவினைரால் விரும்பப்படவில்லை. அக்பரின் கடின உழைப்பு நூற்றாண்டுகளாக மாற்றங்கள் தொடரப்பட்டன. 18ஆம் நூற்றாண்டில் கல்வியில் மேற்கத்திய முறைகளை அறிமுகப்படுத்தலில் சில பிரபுக்கள் விசாரணை உற்று நோக்கல், புலனாய்வு செய்தல், பரிசோதனையை நிகழ்த்துதல் ஆகியவற்றை அறிமுகப்படுததுவதற்கு எதிராக இருந்தார்கள். மதரசாவில் பாடங்களை மனப்பாடம் செய்தல் கலந்தாலோசித்தல், எழுதுதல் ஆகியவை தகவல்களின் அடிப்படைகளாக இருந்தன.

## இப்பகுதிக்கான கேள்விகள் 18.2

1. மத்திய காலத்தில் எந்த நிறுவனங்கள் பள்ளிக்கல்வியை வழங்கின?
2. மத்திய காலத்தில் மதராசாக்களை பராமரித்தது யார்?
3. மத்திய காலத்தின் புகழ் பெற்ற சில மதராசாக்களின் பெயரைக் கூறுக?
4. முஸ்லிம் கல்வி சார்ந்த முறையில் முக்கியமான அம்சம் என்ன?
5. மத்திய காலத்தில் எந்தெந்த முறைகள் மேற்கத்திய நாடுகளால் தழுவப்பட்டது?
6. கல்வியியல் எந்தெந்த மாறுதல்கள் அக்பரால் செய்யப்பட்டன?

## 18.6 நவீன காலத்தில் கல்வி முறை

### 18.6.1 18ம் நூற்றாண்டு நவீன காலத்தின் தொடக்கம்

இந்தியாவில் முந்தின நூற்றாண்டுகளில் சமூக வாழ்க்கையின் நோக்கம், மரபு அம்சங்கள் கல்வித்துறையில் தொடரப்பட்டன. பகல்பூருக்கு அருகில் தட்சசீலம், நாளந்தா, விக்ரமசிலா, வடக்கு வங்களாத்தில் ஜகதல் சத்தியவாரில் வல்லபி, தெற்கில் காஞ்சி போன்ற பழைய சிறப்பு பெற்ற உயர் சுற்றலின் மையங்கள் வெகு நாள்களுக்கு முன்பே மறைந்து விட்டன. மற்றபடி

இஸ்லாமியக் கல்வி, ஆட்சியாளர்களின் பிரபுக்களின் ஆதரவின் கீழ் தொடர்ந்து வளர்ச்சியடைந்தது, பெரும்பாலான இந்து மக்கள் கல்வியை பெருமை வாய்ந்த நிறுவனங்களில் பெறும்வரை, வட்டார பேச்சு மொழி இலக்கிய வளர்ச்சியுடன், அவர்கள் சிறந்த நூல்களை படித்தார்கள் 1891இல் தாமஸ் எழுதிய நாடு அங்கு இல்லை. மாறாக கற்றலில் விருப்பமே தொடக்கமாக இருந்தது. அதுவே சக்தி வாய்ந்த செல்வாக்கை கொண்டிருந்தது. இவருடைய கூற்றுப்படி இந்தியாவில் காணப்பட்ட ஆங்கிலம் பரவலான தொடக்கக் கல்விமுறை, உயர்கல்வி முறையே பரவலாகக் கொண்டிருந்தது. இதில் முந்தையது பயிற்சிகளை முக்கியமாக கொண்டிருந்தது. அதே சமயம் பிந்தியது இலக்கிய தத்துவத்தையும் சமயங்களையும் முக்கியமாக கொண்டிருந்தது.

சுமார் 150 ஆண்டுகளாக ஆங்கிலேயர்கள் இந்தியாவில் வாணிகம், ஆக்கிரமிப்பு ஆகியவற்றில் முழ்கி இருந்தார்கள். ஆகையால் அவர்கள் கல்வி உள்பட எல்லாவிதமான பண்பாட்டு செயல்பாடுகளிலிருந்து வெகுதூரம் விலகி இருப்பதை பராமரித்ததார்கள். கிழக்கிந்திய நாடுகளுக்கான கல்வி மானியம் 1781இல் வாரன் ஹேஸ்டிங்ஸ்சினால் கல்கத்தாவில் மதரசா உருவாக்கப்பட்டது. இவருடைய பெருமுயற்சி, நிர்வாக காரணங்களை முதன்மையாகக் கொண்டிருந்தது. பதினோரு வருடங்களுக்குப்பிறகு அதாவது 1792இல் வாரணாசியைச் சார்ந்த ஜோனாதன் டன்க்கன் இந்து பூர்வ குடிமக்களான ஐரோப்பியர்களுக்கு கல்வி கற்க உதவி செய்ய சமஸ்கிருத கல்லூரியை தொடங்கினார்.

இந்த சமயத்தில் கிறிஸ்தவ சமய பரப்பாளர்கள் தொடக்கப் பள்ளிகளைத் திறந்து சமுதாயத்தில் மிகவும் தாழ்ந்த பிரிவினைச் சார்ந்த மக்கள், தீண்டாமை சாதியைச் சார்ந்தவர்களுக்கு மேற்கத்திய கல்வியை அறிமுகப்படுத்துவதில் கடின முயற்சியை மேற்கொண்டனர்.

### 18.6.2 19ஆம் நூற்றாண்டு

19ஆம் நூற்றாண்டின் முற்பகுதி கல்வி சார்ந்தவைகளின் பரிசோதனைக் காலம் என அழைக்கப்படலாம். கிழக்கு இந்திய கம்பெனியின் 1813 ஆம் ஆண்டு சாசனச் சட்டம் இலக்கியத்தின் வளர்ச்சியை பூர்வ குடிமக்களின் கற்றலை உற்சாகப்படுத்த அறிவியல் அறிவை ஆங்கிலேய மாகாணத்தில் வாழும் மக்களின் முன்னேற்றத்திறகாக ஒரு லட்சம் ரூபாயை கம்பெனி ஒதுக்குவதற்கு முடிந்தது. பூர்வ குடிமக்களுக்கும் ஆங்கில மரபு வழியாருக்கும் இடையே நடந்த விவாதத்தின் விளைவை மெக்காலேயின் குறிப்புகள் பென்டிக்கின் 1835ஆம் ஆண்டுத் தீர்மானித்தினால் இறுதி முடிவு கொண்டு வரப்பட்டது. இந்த நிதியை ஐரோப்பிய இலக்கியத்தை, அறிவியல்களை வளர்ச்சியடையச் செய்ய பயன்படுத்தப்படும் என முடிவு செய்யப்பட்டது, வில்லியம் பென்டிங் ஆங்கிலத்தை அரசு மொழியாக மேற்கொண்டார். 1844இல் ஹோர்டிங்ஸ் பிரபு ஆங்கில கல்வியை பெற்ற இந்தியர்களுக்கு வேலை வாய்ப்பை அனுமதித்தார்.

1854ஆம் ஆண்டின் உட்ஸ்குழு கல்விக் கொள்கையின் முக்கியமான நோக்கம் “வளர்ச்சியடைந்த கலைகள் அறிவியல்கள், தத்துவம், ஐரோப்பாவின் இலக்கியம் ஆகியவற்றின் பரவுதலை ஆங்கிலம் அல்லது மற்ற நவீன மொழிகளில் போதனா மொழியாக வலியுறுத்தப்பட்டது. உட்சின் அறிக்கை பம்பாய் (நவீன மும்பை) மெட்ராஸ் (நவீன சென்னை) கல்கத்தா (நவீன கொல்கத்தா) ஆகிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படவேண்டும் என கருத்து தெரிவித்தது. இது தனிமனிதர் வணிகத் தொழில் வளர்ச்சி, மானிய உதவி வழங்கும் முறை பள்ளிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பெண் கல்வி ஆகியவற்றை வலியுறுத்தியது. 1857இல் பம்பாய், மெட்ராஸ் மற்றும் கல்கத்தா ஆகிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. பஞ்சாப் மற்றும் அலகாபாத் பல்கலைக் கழகங்கள் 1882இல் மற்றும் 1887இல் முறையே ஏற்படுத்தப்பட்டது.

### 18.6.3 20ஆம் நூற்றாண்டின் தொடக்கம் கல்வியின் நோக்கங்கள்

190இல் கர்சன் பிரபு, பொது ஆணை இயக்குனர்களின் மாநாட்டை நடத்தி இதனுடைய முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு கல்வி சீர்திருத்தங்களின் சகாப்தத்தை தொடங்கி வைத்தார். 1904இல் இந்திய பல்கலைக்கழக சட்டம் இயற்றப்பட்டது. இது கற்பித்தலை மேற்கொள்ள கல்லூரிகளை ஆய்வு செய்யவும் உயர்கல்வியில் தரமான முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இச்சட்டம் வழி வகுத்தது.

காலனி ஆதிக்கத்தின் கீழ், மக்கள் கூட்டத்திற்கு கல்வி ஒதுக்கப்பட்டது, ஆட்சியாளர் மக்களுக்கு இடையே மொழி பெயர்பாளராக இருப்பதற்கு நகர கற்றல் குழுவை உருவாக்கும் முயற்சியை மேற்கொண்டது. தேர்வு முறைகள், உயர்பள்ளி, பல்கலைக்கழகங்கள் இரண்டிலும் வலியுறுத்தப்பட்டன. ஆங்கிலக்கல்வியின் தாக்கம் ஒரே சீராக இருக்கவில்லை. எழுத்தறிவும் கல்வியும் கிராமங்களைவிட, நகரகங்களில் அதிகமாக பரவின. இந்திய விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்த படித்த அரசியல் தலைவர்களையும் சமூக சீர்திருத்தவாதிகளைகளையும் உருவாக்கியது. இதனுடைய நேர்முறை அம்சமாக இருந்தது. செய்தித்தாள்கள், துண்டு பிரசுரங்களின் வெளியீடுகள் மக்களிடையே விழிப்புணர்ச்சியைக் கொண்டு வந்தன.

### 18.6.4 ஆங்கிலக் கல்வியின் தாக்கம்

ஆங்கிலேயர்கள், நிர்வாக அலுவலங்களில் எழுத்தர்கள் அல்லது பாபஸ் ஆக வேலை செய்ய மக்களின் தேவை இருந்ததால் ஆங்கில மொழியை பள்ளிகள், கல்லூரிகளில் கற்றுக் கொடுத்தலை ஊக்கப்படுத்தினார்கள். இது பிறகு அவர்கள் ஆளும் இந்திய நிர்வாகத்தின் பல்வேறு அம்சங்களில் உதவின. புதுப்பிரிவினைச் சார்ந்த மக்களை உருவாக்குவதில் உதவின. இதன் விளைவாக கிறிஸ்தவ சமய பரப்பாளர்கள் இந்தியாவிற்கு வந்து, ஆரம்பித்த பள்ளிகளில் ஆங்கிலம் கற்றுக் கொடுக்கப்பட்டது. நீங்கள் இந்த சமயத்தில் திறந்த பல பள்ளிகளை இன்றும் காணலாம். டெல்லியில் இந்த மாதிரியாக பிரசன்டேஷன் காண்வென்ட பள்ளி உள்ளது. இது இன்று வரை நடத்தப்பட்டு நல்ல கல்வியை வழங்கிக் கொண்டு இருக்கிறது. பல இந்தியர்கள் இம்மாதிரியான பள்ளிகள், நீக்கப்படவேண்டும். அரசு அலுவலகங்களில் வேலை கிடைப்பதற்கு உதவியாக இருக்கும் என நினைத்து தங்களுடைய குழந்தைகளை இத்தகைய பள்ளிகளுக்கு அனுப்பினர்.

ஆங்கிலேய ஆட்சியாளர்கள் தங்களுடைய சொந்த விருப்பத்திற்கு தகுந்த மாதிரி ஆங்கிலம் கற்றுக் கொடுத்தலை ஊக்கப்படுத்தப்பட்டாலும், பல வழிகளில் இந்தியர்களுக்கு பயனுள்ளதாக இருந்ததை நிருபித்தது உங்களுக்குத் தெரியுமா? இந்தியாவின் பல பகுதிகளில் வாழ்ந்த மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசினாலும் ஒரு மொழியை கூட எல்லோராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்தியர்களால் பயன்படுத்தப்பட்ட ஆங்கிலம் நாடுமுழுவதும் ஒரே மொழியை வழங்கி அவர்களுக்கு தொடர்பு மொழியாக மாறியது. ஆங்கில புத்தகங்கள் செய்தித்தாள்கள், கடல் கடந்து அதாவது மற்ற நாடுகளிலிருந்து புதிய கருத்துகளை அவர்களுக்கு கொண்டு வந்தது. மேற்கிலிருந்து சுதந்திரம் ஜனநாயகம், சமத்துவம் சகோதரத்துவம் போன்ற புதிய கருத்துகள், ஆங்கிலம் கற்ற இந்தியர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தி தேசீய உணர்வை எழச் செய்தன. கல்வி கற்ற இந்தியர்கள் இப்பொழுது ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுதலையைப் பெற எண்ணினார்கள்.

## 18.7 சுதந்திரத்திற்குப் பின் இந்தியாவில் கல்வி

1947இல் ஆங்கிலேய ஆட்சியிலிருந்து, நாம் விடுதலை பெற்று, நமது மக்களின் கல்விக்கு திட்டமிடும் பொறுப்பு, சுதந்திர இந்தியாவின் அரசின் மீது விழுந்தது என்பது உங்களுக்குத் தெரியுமா? அலுவலகத்தில் பணி புரிபவர்கள், பொருளாதார சமூக, அரசியல் பண்பாடு முன்னேற்றத்தின் இலக்கை அடைய, பல்வேறு நிலையின் வளர்ச்சியில் வாழ வேண்டிய, பல்வேறு மொழிகள், சமூக, கலாச்சார பண்புகள் மக்களுக்காக ஒருங்கிணைக்கப்பட்ட கல்வி நிகழ்வுகளாகும், இம்மாதிரியான நிகழ்வுகள், பொதுவான பாடத்திட்டத்தை அடிப்படையாக கொண்ட வேற்றுமையில் ஒற்றுமை, நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு இடம் பெயர எளிதாக்கப்படுகிறது.

கல்வியை பரப்புவதில், தேவையான அளவு நடவடிக்கை எடுக்காவிடில், பொருளாதார சமத்துவமின்மை, வட்டார எற்றத்தாழ்வு, சமூக அநீதி ஆகிய பதற்றமான விளைவுகள் சமுதாயத்தில் உருவாகும். இதனால் தான் 1964இல் கல்விக் குழு அறிக்கை (1966-64) (கோத்தாரிக் கல்வி குழு என்று அழைக்கப்பட்ட) கல்வி என்பது சமாதான சமூக மாற்றத்தின் ஒரு கருவி என குறிப்பிடுகிறது. இதன் அடிப்படையில் 1976 ஆம் ஆண்டில் அரசியல் சட்ட திருத்த மசோதா, கல்வியை பொதுப் பட்டியலில் சேர்க்கப்பட்டது. அதாவது மத்திய மற்றும் மாநில கல்வியின் பொறுப்பை ஏற்கிறது.

### 18.7.1 தொடக்கக் கல்வி

தொடக்ககல்வி என்பது கல்வியில் மிக சிக்கலாமன கட்டமாகும். ஒன்றாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை (1 முதல் 8 வரை)யுள்ள எட்டாண்டு காலம், மாணவர்களின் ஆளுமைப்பண்பு, மனப்பான்மைகள், சமூக நம்பிக்கை, பழக்கங்கள், வர்ழ்க்கைத்திறன்கள் தகவல் பரிமாற்றத்திறன்களின் வளர்ச்சிக்கு அடித்தளமிடுகிறது. இந்திய அரசியல் சாசனம் 45ஆம் பிரிவு, 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு கட்டாய இலவசக் கல்வியை அறிமுகப்படுதியது. தொடக்கக் கல்வியின் காலம் அரசியலமைப்பு திருத்தத்தில் இலவச் கட்டாயக் கல்வி கல்வியை அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நாம், இந்த சட்டத்தைப்பற்றி இந்த பாடத்தில் 18.9 பிரிவின் கீழ் படிக்கலாம். தேசீய கல்விக் கொள்கை, 1986 தொடக்க கல்வியின் கடினமான பகுதிகளாக, அதாவது

1. அனைவரையும் சட்ட பூர்வமாக பதிவு செய்தல்
2. பள்ளியில், 14 வயது வரை, குழந்தைகளை இருத்தி வைத்தல்
3. கல்வியின் தரத்தினை கணிசமாக முன்னேற்றுவது எல்லா குழந்தைகளுக்கும் தேவையான கற்றலின் நிலையின் இலக்கை அடைதலாகும்.

மத்திய அரசு 2001இல் தொடங்கின சர்வ சிக்ஷ்ய அபியான், அனைவருக்கும் தொடக்கக்கல்வி என்ற முதன்மையான திட்டத்தை வலியுறுத்துகிறது.

### 18.7.2 இடைநிலைக் கல்வி

“இடைநிலைப் கல்வி என்பது தீவிரமான உடல் வளர்ச்சியையும் அடையாளத்தையும் ஒருங்கமைத்தலின் காலமாகும். இது கிளர்ச்சிமிக்க, வலிமை கொண்ட காலமும் ஆகும்”.

சுதந்திரம் அடைந்ததிலிருந்து இடைநிலைக் கல்வியில் தனிச்சிறப்பான விரிவாக்கம் இருந்து கொண்டிருந்தது. இது 14-18 வயது குழு குழந்தைகளைக் கொண்டது (9ஆம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரை) 2001-ஆம் ஆண்டு கணக்கின்படி, 88.5 மில்லியன்

குழந்தைகள் இடைநிலைக்கல்வியில் பதிவு செய்யப்பட்டார்கள். இருப்பினும் பதிவு எண்ணிக்கைகள் 31 மில்லியன் மட்டுமே, 2001-2002இல் பள்ளிகளில் ஆஜராகி இருந்தார்கள் என்பதை காட்டுகின்றன. ஏராளமான பள்ளிகளில் பதிவு செய்தல் சிறப்பாக அதிகரித்த பொழுது, குறைந்த அளவு எண்ணிக்கையிலான ஆசிரியர்கள் இருந்தனர். உண்மையாகவே, மொத்ததிலுமாக ஆசிரியர் மாணவர் சதவிதத்தை எதிரான பாதிப்புக்கு உள்ளாக்கியது. அனைவருக்கும் கல்வி என்பதில் நாடு முன்னேறிச் செல்லும் பொழுது, விரிவாக்கத்திற்கான கட்டாயப்படுத்துதல் நிச்சியமாக தொடரலாம். இந்தியாவில் யாராவது ஒருவர் இடைநிலைக்கல்வியை (10-ஆம் வகுப்பு வரை) தொடர விரும்புகிறார்களோ, அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். பாதிக்கு மேல் கூட இல்லாமல் மேல் தொடக்க நிலையில் தேறியவர்கள் இடைநிலை வகுப்புகளில் சேருகிறார்கள். இடைநிலைக்கல்வியில் சர்வ சிக்ஷஅபியானின் வெற்றிக்கு பிறகு மத்திய அரசு ராஷ்டிரிய மத்யாமிக் சிக்ஷா அபியான் கீழ் அனைவருக்கும் இடைநிலைக்கல்வி என்ற இலக்கை அடைவதற்கு அமைந்தது. இதைப்பற்றி 18.9 பிரிவின் கீழ் நாம் படிக்கலாம்.

முதுநிலை மேனிலைக் கல்வியில், தொழிற்கல்வி, குறிப்பிடத்தக்க கல்வியாகும். இது மாணவர்களை வெவ்வேறு தொழில்களுக்காக, வெவ்வேறு செயல்களில் ஈடுபடச்செய்வது இதன் நோக்கமாக இருக்கிறது. தொழில் சார்புடைய மேனிலைக் கல்வி முக்கியமான நோக்கமாக 1968இல் முதல் கல்விக் கொள்கையில் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும் இன்று வரை கல்வியில் 50 சதவிகிதம் கூட பலன்தரவில்லை. மேனிலை நிலையில் ஒரு சில மாநிலங்களைப் பொருத்தவரை சொற்பமான அளவில் எஞ்சியுள்ளது, திட்டகுழுவினின் 11-ஆவது 5 ஆண்டுத்திட்டத்தின் கூற்றுப்படி 57 பொறியியல், 50 பொறியியல் அல்லாத வாணிக நிறுவனங்களான கிட்டத்தட்ட 5114 தொழிற்பயிற்சி நிறுவனங்கள் பயிற்சியை வழங்கிக் கொண்டிருந்தன. அண்மைக் காலங்களில் நேர்மறை நடவடிக்கையாக தேசிய திறன் மேம்பாட்டுத் திட்டம், பயிற்சிக் குழுவை அமைத்ததாகும்.

## 18.7.3 உயர் கல்வி

இந்தியாவின் முதல் பிரதமராக இருந்த பண்டித ஜவர்லால் நேரு, இந்தியாவின் கல்வியை நவீனமயமாக்குதலின் செயல்பாடுகளை கல்லூரிகளுடன் இணைந்து முயற்சி செய்தால், நாட்டினுடன் எல்லாமே நல்லதாக முடியும் என பிரகடனப்படுத்தினார். ஒரு மாணவன் உயர் மேனிலைக் கல்வியை (12ஆம் வகுப்பு) முடித்தப்பிறகு உயர்கல்வி தொடங்குகிறது, பிறகு அவன் பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியான கல்லூரியில் நுழைகிறான். உயர்கல்விக்கு முக்கியமான பங்கு கொடுக்கப்பட்டிருந்தாலும், இத்துறையில் வளர்ச்சி மிகவும் சரிசமநிலையில்லாத அளவில் உள்ளது. பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் நாட்டிற்கு மிகச் சிறந்த அக்கறை கொண்டிருப்பவைகளாக இருக்கும் தறுவாயில் பல்கலைக் கழகங்களும் கல்லூரிகளும் சிறப்பான கல்வி சார்ந்த நிலையில் பெரும் பங்கு வகிக்கின்றன.

18 - 20 வயதுடைய ஏராளமான மாணவர்களின் உயர் படிப்புக்காக பதிவு செய்யப்பட்டவை மிகவும் குறைவாக உள்ளன. சில வட்டாரங் களில் குறிப்பாக பெண்கள், பின்தங்கிய சாதிகள், பழங்குடியினரின் தகவுப் பொருத்த அமைவு மிகவும் பாதகமாக இருக்கிறது. உயர்நிலைக்கல்வியின் தரம் கிராமப்புற பகுதிகளில் ஒரளவிற்குத்தான் எட்டியுள்ளன வசதி வாய்ப்புகள், கல்லூரிக்கு கல்லூரி பெருமளவில் வேறுபடுக்கின்றன. வாழ்க்கைக்கு நெருக்கமான தொடர்பான, ஆளுமைப் பண்பை வளர்ப்பதின் நோக்கத்தை கொண்டுள்ள பகுத்தறிவாய்கின்ற, கற்றலின் திறமைகளைக் கொண்ட படித்தலின் நிகழ்வுகள் பாடப்பகுதிகள் மாணவர்களுக்கு கொடுக்கப்படுகின்றன. ஒரு கல்லூரி மாணவன் சிறு தொகையை மட்டுமே கட்டணமாக செலுத்துகிறான். அவனது கல்வியின் மீதியுள்ள

செலவுகளை மத்திய அல்லது மாநில அரசால் கட்டப்படுகிறது. இந்த பொது பணத்தை கவனமாக யார் உயர்கல்விக்கு பொருத்தமானவர்களோ அவர்களுக்கு செலவிட வேண்டும்.

இந்தியாவில் உயர்கல்வியின் அறிக்கைபடி 1950-51இல் 0.7% லிருந்து 11% பதிவு சதவிதம் 2006-2007இல் கூடியுள்ளது. 2012இல் (11வது திட்டத்தில் முடிவில்) 15% உயரும் என எதிர்பார்க்கப்பட்டது.



## முதியோர் கல்வி

முதியோர் எழுத்தறிவின்மையை நீக்குவது கட்டாய இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. 6ஆவது 5 ஆண்டுத்திட்டத்தில், முதியோர் கல்வி குறிப்பாக 15-35 வயது வரை குறைந்த அளவு நிகழ்வுகளாக சேர்க்கப்பட்டுள்ளது. இவற்றை பொருத்தவரை 80 மில்லியன் எழுத்தறிவில்லாத மக்களுக்கு, செயல்பாட்டு எழுத்தறிவை புகுத்துவது தேசீய எழுத்தறிவு இயக்கத்தின் நோக்கமாகும். சுதந்திரத்திற்கு பின் 1951இல், இந்தியாவின் மக்கட் தொகை 18.3 ஆக குறைந்தது. இது 2011இல் 74.0% க்கு அதிகரித்தது. ஆணின் எழுத்தறிவு 82.4% பெண்ணின் எழுத்தறிவு 65.46% ஆகும்.

## 18.7.4 தொழில் நுட்ப கல்வியும் தொழிற் கல்வி பயிற்சியும் (TVET)

தொழில் நுட்பக்கல்வியை தகுதிக்கு மீறி மதிப்பிடுதல் என்பது இயலாததாகும். ஏற்கனவே இந்தியா பயிற்சி பெற்ற மனித சக்திகளை கொண்ட பெரிய தேசமாக உள்ளது. தொழில் நுட்ப, பாடத்திட்ட மேலாண்மை தற்பொழுது தொழிற்சாலைகளின் தேவைகளை வெளிப்படுத்தக் கூடிய இலக்குகளாக உள்ளன. தொழில் நுட்ப பயிற்சியாளர்கள் அறிவியல் முன்னேற்றம், தொழிற்சாலை முன்னேற்றம் ஆகியவற்றிற்ன கருவாக அமைந்திருந்தன. நல்ல திறமையுள்ள பொறியில் மாணவர்களுக்கு, சாதனை உணர்வு, வேலை வாய்ப்பை வழங்கக் கூடிய வேலைகள் மற்றும் பணி செய்யக்கூடிய சூழ்நிலையை வழங்குவதில்லை. அறிவுத்திறன் உள்ளோர், முன்னேறிய நாடுகளுக்கு புலம் பெயர்தல் அல்லது மேலாண்மை கல்விக்கு புலம் பெயரக்கூடிய குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் இதன் விளைவாக ஏற்பட்டன. இளவயது கல்வி கற்ற திறமையான ஆண், பெண் இளைஞர்கள் தங்களுடைய நாட்டைவிட்டு, வெளிநாடுகளுக்கு நல்ல வருமானத்தை தேடி செல்வதை, அறிவு திறன் மிக்கோர் புலன் பெயர்தல் என அழைக்கப்படுகிறது. இந்திய மேலாண்மை நிறுவனம் போன்ற தொழில் நுட்ப, தொழில் கல்வியின் சிறந்த மையங்கள் இந்தியாவிலேயே உள்ளன.

## தேசிய கல்விக் கொள்கை

சுதந்திரம் அடைந்ததிலிருந்து, நாடு தனது வளங்களில் பெரு வாரியான பகுதியை கல்வியில் முதலீடு செய்துள்ளது, ஆகையால் இது கல்வி சார்ந்த நிறுவனங்களின் திறமையான செயல்பாடுகளை எதிர்பார்பது இதனுடைய உரிமையாகும். 1986 ஆம் ஆண்டின் தேசிய கல்விக் கொள்கை சுதந்திர இந்தியாவின், இந்தியக் கல்வி வரலாற்றில் குறிப்பிடத்தக்க நடவடிக்கையை குறிப்பிட்டது. இது, தேசிய முன்னேற்றம் குடியுரிமை, பண்பாட்டு உணர்வு, தேசீய ஒருங்கிணைப்பு ஆகியவற்றறை வலிமைபெறச் செய்தலை நோக்கமாகக் கொண்டிருந்தது. இது, கல்விமுறையில் தீவிர கட்டமைப்பு, தொழில் நுட்பம், ஒழுக்க விழுமங்களை உருவாக்குதல் கல்வி மக்களின் வாழ்க்கையில் நெருங்கிய தொடர்பு ஆகியவற்றை வலியுறுத்தியது.

1986 ஆம் ஆண்டின் புதிய தேசீயக்கல்வி கொள்கை, கடந்த சில ஆண்டுகளில் கணிசமான சாதனைகளை உருவாக்கியது. இந்தியா, ஏற்கனவே பள்ளிகள் சார்ந்த கூட்டிணைவை பரவலாகக் கொண்டுள்ளது. ஏறத்தாழ மக்கள் தொகையில் 95% தொடக்கப்பள்ளி ஒரு கிலோ



குறிப்புகள்

மீட்டர் தூரத்தில் 3 கிலோ மீட்டருக்குள் இடைநிலைப்பள்ளிகள் இருந்தன. தேசீய கல்விக் கொள்கை (1986) யைப் பொருத்தமட்டில் அனைத்தையும் உள்ளடக்கிய "தேசிய எழுத்தறிவு இயக்கம், 15 லிருந்து 35 வயது வரையிலுள்ளவர்களுக்கு கல்வி புகட்டுவதற்காக தொடங்கப்பட்டதாகும்.

இந்தியா, வானொலி, ரேடியோ வலைப்பின்னல்களை பெரிய அளவில் கொண்டுள்ளது. இவை சந்தேகமில்லாமல், கற்றல் கற்பித்தல் முறை, முறை சார்ந்த கல்வியை வளப்படுத்துதல் முறை சாரா கல்வி தொலை தூர கல்வி சார்ந்த நிகழ்வுகளை ஆதரிப்பதால். தற்பொழுது இருக்கக்கூடிய செயற்கைக்கோள் வானொலி வலைப்பின்னல், பெரும்பான்மையான மக்களின் குறிப்பிடத்தக்க ஒரு காரணியாக உள்ளன.

முன்னோடிப் பள்ளிகளான நவோதய வித்யாலயா பள்ளிகள் கல்விக்கு முக்கியமான அர்ப்பணிப்பை விரிவாக்குவது மட்டுமில்லாமல் எல்லோருக்கும் கல்வியில் சம அக்கறை கொடுக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தின் படி ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டது. இத்தகைய பள்ளிகளின் மூலம் புகழத்தக்க, குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள மாணவர்கள், அவர்களது பெற்றோர்களின் பொருளாதார ஏற்றத்தாழ்வின்றி, தரமான கல்வியைப் பெறுவதற்கு முடிகின்றது.

## திறந்தநிலைக் கல்வியும் தொலைதூர கற்றல்முறையும்

பல கற்றவர்கள், முறை சார்ந்த கல்வியில் அவர்களது படிப்பை இடைநிறுத்தம் செய்ய் வற்புறுத்தப்படுகிறார்கள். இது ஒருவேளை, நீதி சார்ந்த, இயற்பியல் பாடப்பொருள் சார்ந்த அல்லது மருத்துவ காரணங்களைச் சார்ந்ததாக இருக்கலாம். திறந்த நிலைக்கல்வியும் தொலைதூரக் கற்றல் முறையும், இம்மாதிரியான மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டதாகும். இந்த முறையில் கற்பவர் தொலைதூர கற்றல் நிறுவனத்திலிருந்து அனுப்பப்பட்ட, பாடங்களின் மூலம் வகுப்பில் ஆஜராகாமலேயே கற்றுக் கொள்வர். இத்தகைய மாணவர்கள் பணியில் அல்லது வியாபாரத்தில் ஈடுபடும் பொழுது தங்களை ஈடுபடுத்திக் கொள்வர்.

கற்பவர், நேரடியாக, ஆசிரியருடன் தொடர்பு கொள்வதில்லை. அவர் வெகு தூரத்தில் இருக்கிறார். தற்பொழுது, திறந்த பள்ளி, உயர்நிலைப்பள்ளி (10-ஆம் வகுப்பு) முதுநிலை உயர்நிலைப்பள்ளி (12-ம் வகுப்பு) ஆகிய இரண்டிற்கும் கல்வி வழங்குகிறது, நீங்கள் திறந்த வெளிப்பள்ளியில் சேர்ந்துள்ளீர்களா? உங்களுடைய வேலை வாய்ப்பை திரும்பப் பெற்றுக் கொள்வதற்காக, நீங்களும் உங்களுக்கு அனுப்பிய பாடங்களைப் படிக்கிறீர்கள் இத்தகைய பாடங்கள், மிகுந்த கவனத்துடன் தயாரிக்கப்பட்டது. இது ஒரு திறந்த வெளி பள்ளி ஏனென்றால் கட்டமைப்பு இடம், காலம் ஆகியவை நெகிழும் தன்மைகளைக் கொண்டவை. நீங்கள் எந்த பாடச் சேர்க்கைகளையும், உங்கள் விருப்பத்திகேற்ப, தேர்ந்தெடுத்து, அவற்றை 5 ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெறச் கூடிய வசதிகளைக் கொண்டது, இதே போன்ற வசதி வாய்ப்பு, உயர்ந்த அளவில் இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தினால் அளிக்கப்படுகிறது.

இத்தகைய நிறுவனங்கள், யார் ஒழுங்கான கல்வி கூட்டமைப்பில், கல்வி பெறவில்லையோ அந்த ஒவ்வொரு குடிமகனுக்கும் கல்வியை கொடுப்பதற்காக, வெகுதூரம் செல்கின்றன. இவ்வாறாக இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து, கல்வி ஒரு விருட்சமாக வளர்ச்சியுற்றது. ஒருமைப்பாடு, கல்வி சமத்துவம் ஆகிய தேசீய வளர்ச்சியின் இலக்குகள், நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தையும், குறைந்த பட்சமாக கல்வியைப் பெற்றிருக்க வேண்டும். முன்னேற்றத்தின் சுமுகமான சூழ்நிலை, கடின உழைப்பு பாராட்டத்தக்க நிகழ்வுகளை கட்டமைத்தலில் ஒவ்வொருவரும் புதிய மனப்பான்மைகள் கருத்துக்களை வழங்கப பெறுபவர்களாக ஆவார்கள்.

## 18.8 அண்மையில் கல்வியின் முன்னேற்றம்

### கல்வி உரிமைச் சட்டம்

2002இல் பாராளுமன்றத்தில், 86-ஆவது அரசியலமைப்பு திருத்தப்படி, கல்வி அடிப்படை உரிமை என சட்டம் இயற்றப்பட்டது. குழந்தைகளின் உரிமையான இலவச, கட்டாயக்கல்வி சட்டம், ஏப்ரல் 2010ல் நாடாளுமன்றத்தில் அடிப்படை உரிமைகளை செயலாற்ற இயற்றப்பட்டது.

இச்சட்டம், மாநில அரசும் உள்ளூரில் உள்ள துறைகளும் 6-14 வயதுடைய ஒவ்வொரு குழந்தைக்கும் இலவச இடைநிலைக் கல்வியை தங்களுக்கு அருகில் உள்ள பள்ளியில் வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தது. தற்பொழுது 22 கோடி குழந்தைகள் இந்த வயதுக்குழுவில் உள்ளார்கள் இருப்பினும் 4.6ு குழந்தைகள் (கிட்டத்தட்ட 92 இலட்சம்) பள்ளிக்கு வெளியில் இருக்கிறார்கள்.

சட்டத்தின்படி, பள்ளி மேலாண்மை குழு அல்லது உள்ளூர் அதிகாரிகள், இடையில் நின்ற மற்றும் பள்ளிக்கு வெளியே உள்ள ஆறு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளை அடையாளங்கண்டு அவர்களுக்கு சிறப்பான பயிற்சி கொடுத்து, அவர்களுடைய வயதிற்குதகுந்தாற்போல் வகுப்பில் அவர்களை அனுமதிக்க வேண்டும்.

### ராஷ்டிரிய மத்யமிக் சிக்ஷா அபியன் (ஆர்.எம்.எஸ்.ஏ)

11ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இடைநிலைக் கல்வியில் அனைவருக்குமான தரமான கல்வியை ஆர்.எம்.எஸ்.ஏ.வினால் அளிக்கப்பட்ட திட்டமிடப்பட்டது.

ஆர்.எம்.எஸ்.ஏ.வின் இலக்கு 15-16 வயதுக்குழு (9ஆம் 10ஆம் வகுப்புகள்) மாணவர் களுக்கு நல்ல தரமான, எளிதில் கிடைக்கக்கூடிய இடைநிலைக் கல்வியை வழங்குவதே திட்டத்தின் முக்கியமான நோக்கமாகும். (1)15-16 வயதுக்குழுவை ஒத்த எல்லா மாணவர்களுக்கும் 2015க்குள், 5 கிலோ மிட்டருக்குள் வசிக்கும் எந்த ஒரு மாணவர்க்கும் இடைநிலைக்கல்வி உயர் மேனிலைக்கல்வி 7 கிலோ மீட்டர் தூரத்தில் குடியிருப்பினும் (11) 2010க்குள் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும்.

### ஆர்.எம்.எஸ்.ஏ வின் செயல்பாட்டிற்கான உத்திகள்

I. இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்கு கீழக்காணும் ஆர்.எம்.எஸ்.ஏவின் இயலக்கூடிய ஆதாரக்கட்டமைப்புக்களாவன.

அ. உயர் தொடக்கப்பள்ளிகளை உயர்ததுதலில், வகுப்புக்கள், சோதனைக் கூடங்கள், கணிணி அறைகள், தலைமை ஆசிரியரின் அறை, நூலக அறைகள், பெண்கள் ஆண்களுக்கான தனித்தனி கழிவறைகள் கட்டுதல் கூடுதலாக ஆசிரியர்கள் நியமினம் செய்தல்

ஆ. இருக்கின்ற, இடைநிலைப்பள்ளிகளை நிலைநிறுத்த வகுப்புக்கள், கணணி அறைகள், ஆண்கள், பெண்களுக்கான தனித்தனி கழிப்பறைகள் கட்டுவதன் மூலம் கூடுதலான ஆசிரியர்களை நியமனம் செய்தல், பரிசோதனைக் கூடங்களை வலிமையாக்குதல் இருக்கின்ற கட்டிடங் களை பழுது பார்த்தல் புதுப்பித்தல் மூலம் வலிமையாக்குதலாகும்.

II. பல்வேறு சமூக குழுக்களின் இடையே வேற்றுமைகளை அகற்றுதல், சமுதாயத்தில் தாழத்தப்பட்ட பழங்குடியினர் பிற நலிந்த பிரிவினையைச் சார்ந்த மாணவர்களுக்கு சிறப்பு சலுகைகள் முடிந்தவரையில் வழங்குதல்.

III. ஆர்.எம்.எஸ்.ஏ வின் தரத்ததை உயர்த்துவதற்காக கீழ்க்காணும் பணிகளைச் செய்ய வேண்டுவது அவசியமாகிறது.

அ. அறிவியில் கூடம், நூலகங்களைக் கட்டுதல்

ஆ. ஆசிரியர்களுக்கு புத்தாகப்பயிற்சி அளித்தல்

இ. பள்ளித்தலைமைக்கு தலைமைப் பொறுப்பு பயிற்சி அளித்தல்

ஈ. பாடத்திட்ட சீர்த்திருத்தங்கள்

உ. அறிவியல், கணக்கு கல்வி

ஊ. கணிணி உதவிக்கல்வி

எ. கல்வி சார் இணை நடவடிக்கைகள்

ஏ. கற்றல், கற்பித்தல் துணைக்கருவிகள்

## இப்பகுதிக்கான கேள்விகள் 18.3

1. 1835 ஆம் ஆண்டின் பென்டிக்கின் தீர்மானம் என்ன?
2. ஆங்கிலத்தை அரசாங்க மொழியாக தழுவியவர் யார்?
3. இந்திய பல்கலைக்கழக சட்டம் எந்த ஆண்டு கொண்டுவரப்பட்டது?
4. 1857இல் மூன்று பல்கலைகழகங்கள் எங்கு தோற்றுவிக்கப்பட்டன?
5. காலனி ஆட்சியில் கல்வியின் அடிப்படையாக இருந்தது எது?
6. இந்தியாவில் சுதந்திரத்திற்கு முன் இருந்த ஆங்கிலக் கல்வியின் ஆக்கப்பூர்வமான நோக்கு எது?
7. எப்பொழுது கல்வி அரசியலமைப்பின் பொதுப்பட்டியலின் கீழ் வந்தது?
8. புதிய தேசியக்கல்வி கொள்கை எப்பொழுது உருவாக்கப்பட்டது?
9. இடைநிலைக் கல்வியில் கடினமான பகுதிகள் எவை?
10. மேனிலைக் கல்வியின் முக்கியத்துவம் என்ன?
11. உயர் கல்வி நிலையின் அச்சமுட்டக் கூடிய சூழ்நிலை என்ன?
12. முதியோர் கல்வியின் வயதுக்குழு என்ன?

## நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- வேத காலத்தில் முக்கியத்துவம் வாய்ந்த மேல் சாதிகள் (வர்னாஸ்கள்) என அழைக்கப்பட்ட சிறப்புரிமை பெற்றவர்களுக்கு ஆஸ்ரமங்களில் கல்வி வழங்கப்பட்டது.
- கல்வியை வழங்கிய சங்கங்களும், தொழில் நுட்பக்கல்வியின் மையங்களாக, கி.மு.200-கி.பி 300இல் மாறின.
- புத்த சமய மடாலயங்கள், சமணமுறைக்கல்வி,இந்தியாவை உலகிலேயே ஒரு சிறந்த உன்னதமான கற்றல் மையமாக உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்தன.
- டெல்லி சுல்தானிய ஆட்சியை தோற்றுவித்த பிறகு, தொடக்கக்கல்வி உயர்கற்றல் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய விரிவான முறையில் முஸ்லீம் முறை கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.

- மேற்கத்திய கல்வியின் அறிமுகம் சமுதாயத்தின் தீண்டாமையினர் உள்பட எல்லா பிரிவினருக்கும் கல்வியை வழங்குவது சில தீவிரமான மாறுதல்களைக் கொண்டு வந்தது.
- கல்வி வரலாற்றில் 1986 தேசீய கல்விக் கொள்கை 1986 குறிப்பிடத்தக்க சுதந்திர இந்தியாவின் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

## பயிற்சிக்கான கேள்விகள்

1. பண்டைய காலத்தில் கல்வியின் முன்னேற்றத்தை சுருக்கமாக விவரி?
2. மத்திய காலத்தில், கல்வித்துறையின் மீது, டெல்லி சுல்தானியர்களுடன் எடுக்கப்பட்ட நடவடிக்கையைப்பற்றி விவரி?
3. மொகலாயர் காலத்தில் கல்வி முறையில் எந்தெந்த மாறுதல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன?
4. 1854லிருந்து 1904 வரை கல்வி வளர்ச்சியை பற்றி விவரி?
5. சுதந்திர இந்தியாவில், எழுத்தறிவின்மையை ஒழிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விவாதி?

## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 18.1

1. பண்பாட்டு மாற்றத்துடன், கல்வி முறையும் மாறுகிறது
2. கற்றல் செயல்பாடுகள், புனித நூல் சடங்குகளுடன் தொடங்குகிறது.
3. ஆஸ்ரமங்களில்
4. வாயு, கப், பிட் (காற்று, சளி,பித்தநீர்)
5. ஆதி புராணம் யஷாடிலகா
6. அ) கல்வி, மேல் வகுப்பு சமுதாயத்தின் சிறப்புரிமையாக இருந்தது
   ஆ) கல்வியில் சமஸ்கிருத மொழியின் பயன்பாடு

### கேள்விகளுக்கான பதில்கள் 18.2

1. மக்தப்க்கள்
2. அரசர்களும் (ஆட்சியாளர்கள்) பிரபுக்களும்
3. மியுசி, நசிரி, பிருசி-டெல்லியில்
   முகமத் கவாணியின் மதர்சா-பீடார்
   அப்துல் பாசலின் மதர்சா-பதேபூர்சிகரி
4. இது மரபுப்படி ஊக்கம், பாடப்பொருள்படி சமயம்
5. இது, விசாரணை உற்று நோக்கல், புலனாய்வு கல்வியில் பரிசோதனை
6. இவர் கல்வியில் மத சார்பற்ற அறிவியல் முறையை அறிமுகப்படுத்தினார்.

### கேள்விகளுக்கான பதில்கள் 18.3

1. ஐரோப்பிய இலக்கியத்தையும் அறிவியல்களையும் முன்னேற்ற
2. வில்லியம் பெண்டிங்





3. 1904
4. பம்பாய், மெட்ராஸ், கல்கத்தா
5. ஆட்சியாளர் மற்றும் ஆளப்படுபவர்களுக்கு இடையே மொழி பெயர்பாளரான, மற்றும் சமுதாயத்தில் கற்றவராகக் கருதப்படுபவர்
6. புதிய, சமூக சீர்திருத்தவாதிகள், பிரிவினர் மற்றும் கற்ற அரசியல் தலைவர்கள் உருவானது, நாட்டின் விடுதலை போராட்டத்தில் உதவின
7. 1976 ஆம் ஆண்டு அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின் படி
8. 1986ல்
9. அ.உலகளாவிய அணுகல் மற்றும் சேருதல்

   ஆ. உலகளாவிய குழந்தைகளை 14வயது வரை இருத்தி வைத்தல்

   இ. கல்வியின் தரத்தில் கணிசமான முன்னேற்றம், எல்லா குழந்தைகளும் தேவையான அளவில் கற்பதற்கு முடிகிறது.
10. இது குழந்தைகளை அறிவின் உட்பிரிவுகளின் அடிப்படைகளைப் பரிச்சயமாக்குகிறது.
11. அ) 18-20 வயதுக்குழு மாணவர்கள் உயர்கல்வியில் பதிவு செய்வது மிகக் குறைவாக உள்ளது.

    ஆ) பெண்களின் தகவுப் பொருத்த அளவு, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினரின் உயர்கல்வி மிகவும் மோசமாக உள்ளது.
12. 15-35 வருடங்கள்

# அலகு - VIII

## சமூகக் கட்டமைப்பு

19. இந்திய சமூகக் கட்டமைப்பு

20. சமகாலத்திய இந்தியாவின் சமூக, பண்பாட்டுபிரச்சனைகள்

# 19

# இந்திய சமூகக் கட்டமைப்பு

நாம் இந்திய பண்பாட்டில் பல்வேறு வகையான மக்கள் குடி கொண்டிருந்த நாடு, வெவ்வேறான வழக்கங்கள், மரபுகள் ஆகியவை பற்றி விவாதித்தோம். ஒரு வேளை, உலகின் எந்த ஒரு பகுதியியைக் காட்டிலும் மக்கள் பல வட்டார அடிப்படையில் (உ.த. வட இந்தியா தக்காணம், தென் இந்தியா) மொழியைப் பொருத்த மட்டில் (ஹிந்தி, தமிழ் தெலுங்கு) சமயத்தை பொருத்த வரை (இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள். புத்த மதத்தினர், சமண சமயத்தவா் சீக்கியர்கள்) முதலிய அடையாளங்கள் பெற்றார்கள். ஒவ்வொரு அமைப்பிலும் அடையாளங்கள் தனிப்பட்ட அடையாளங்களுடன் சமூக உறவுகளை அதாவது தனிப்பட்ட சமூக கட்டமைப்புடன் ஒத்திருந்தது. இருப்பினும், சில நூல் இழைகள் பலவற்றை ஒன்றாக சேர்த்தன. ஆகையால் இந்திய சமூகக் கட்டமைப்பற்றி அறிந்து கொள்வது மிக முக்கியமானது. ஏனென்றால், இது சமுதாயத்தில் ஒவ்வொருவரிடமும் உள்ள நமது உறவை விளக்குகிறது. இது எந்த விதமான சமூக நிறுவனங்கள் நமது சமுதாயத்தில் இருக்கின்றன, எவ்வாறு அவை குறிப்பிட்ட காலத்திற்கு மேல் மாறுதல்களை அடைந்துள்ளன என்பதை நமக்கு கூறுகின்றன. இந்தப் பாடத்தில் காலங்காலமாக, இந்திய சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சி அது எடுத்துக் கொண்ட வடிவம் ஆகியவற்றை நீங்கள் இன்று படிக்கும் பொழுது அறிவீர்கள்.

## நோக்கங்கள்

நீங்கள் இந்தப் பாடத்தைப் படித்த பிறகு உங்களால்

- இந்திய சமூக கட்டமைப்பை ஆராய
- தீண்டாமை நடைமுறை இந்திய சமூக முறையின் வழக்கமானது என்பதை விவரிக்க
- இந்தியாவில் அடிமை நிறுவனம் இருந்தது பற்றின தொகுப்பை வழங்க
- புருஷார்த ஆஷ்ரமா, சமஸ்கராவை புரிந்து கொள்ள
- ஜஜ்மணி முறையை விவரிக்க
- இந்திய சமூக முறையில் குடும்பம், திருமணத்தின் பங்குகளை மதிப்பிட
- இந்திய சமூக கட்டமைப்பில் பெண்களின் நிலையை மதிப்பிட
- இந்தியாவில் பழங்குடியினரின் நிலையை ஆராய்வதற்கு முடியும்

## 19.1 இந்திய சமுதாயத்தின் கட்டமைப்பு

இனக்குழு, முந்தைய நாளில், சமூக அமைப்பு அடையாளங்களைக் கொண்ட நிறுவனங்களுள் ஒன்றாகும். இந்தியாவில் பல பகுதிகளில் முண்டா, ஹோ, ஒரன், பில், கடி சன்த்தால், கோல், கந்த், காசி, கரோ, மிஜோ, நாகா ஆகிய ஏராளமான இனக்குழுக்கள் இருக்கின்றன. இவையெல்லாம் ஒன்று சேர்ந்து, இந்திய அரசியலமைப்பில் பழங்குடியினர் பட்டியலில் உள்ளன. ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொருத்தமான கேள்வி இனக்குழு என்பது யார்? எது இனக்குழுவை சாதி அல்லது வர்ணாவின் அடிப்படையில் வேறு குழுக்களிடமிருந்து வேறுபடுத்துகிறது? நாம் இனக்குழு என்பதை கீழ்க்காணும் அம்சங்களின் மூலம் அடையலாம் காணலாம்.

(அ) எல்லோரும் ஒருவரோடு ஒருவர் இரத்த உறவு கொண்டவர்கள்

(ஆ) எல்லா உறுப்பினர்களும் அத்தகுதியில் சமமானவர்கள்

(இ) எல்லா உறுப்பினர்களும் தாங்கள் தங்களின் பொதுவான முன்னோர்களின் வழி தோன்றல்கள் என நம்பினார்கள்

(ஈ) எல்லா உறுப்பினர்களும் வளங்களுக்கு சம தகுதியை கொண்டிருந்தார்கள்

(உ) தனியார் சொத்து என்ற உணர்வு மிகக் குறைவாகக் காணப்பட்டது

(ஊ) முக வேறுபாடுகள் வயது மற்றும் பாலினத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இனக் குழுக்கள் அடிக்கடி ஒன்று சேர்த்து ஒரே இனக்குழுவாக ஆயின.

இம்மாதிரி இனக்குழுக்கள் வேத காலத்தில் இருந்தன. பரதர்கள், யாதுக்கள், துர்வாசாக்கள், ட்ருதையுக்கள், புருங்கள் அனுசுக்கள் இவர்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்த இனக் குழுக்களாகும். இவர்களிடையே முதலாவாதாக உள்ளவரை ராஜா அல்லது அரசன் என அழைக்கப்பட்டான். முக்கியமான வேறுபாடுகள், வர்ணா அல்லது நிறத்தை அடிப்படையாகக் கொண்டு மக்களை வகைப்படுத்தும் நிலை இருந்தது. ஆகையால் வேத இனக்குழுவை சாராத மக்களை தாச வர்ணா என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் அந்நிய மொழிகளைப் பேசுபவர்கள், கருப்பு நிறம் உடையவர்கள், பல்வேறு கடவுள்களை வணங்கியவர்கள் என்று சொல்லப்படுகிறது.

இந்த தொடக்க வேறுபாடுகள் பின்பு வளர்ச்சியுற்று வர்ணாமுறை தொகுப்பாகி, இவை சமுதாயத்தில் இனக் குழுவை பிராமண, சத்ரிய, வைஷ்ய, சூத்திரர்கள் என்ற வகையில் பிரித்தது. குழுக்களில் உள்ள ஒவ்வொருவருக்கும் இடையேயான சண்டை, ஒவ்வொரு குழுவிற்கும் இடையேயான போர்கள், அடக்கி தோல்வியுறச் செய்தல், போர் தலைவர்களால் மற்ற குழுவனரிடமிருந்து முறையின்றி கொள்ளையடித்தல், சரி சமமில்லாத செல்வம், ஆகியவை குழுக்களிடையே இத்தகைய வேறுபாடுகள் முதன்மையாகத் தோன்றின.

'வர்ணா' என்று அழைக்கப்பட்ட, பிராமண உறுப்பினர்கள் குழுக்களாக பணி செய்தனர். சத்ரியர்கள் அரசியல் சம்பந்தமான வேலைகளை, வைசியர்கள் பெரும்பாலும் விவசாயிகளாவும், சூத்திரர்கள் அடிமை வேலை செய்பவர்களாவும் இருந்தனர். முதல் இரண்டு வர்ணாக்கள் ஏராளமான பொருட்களை தயாரிக்கின்ற வைஷ்யா வர்ணாவை சுரண்டினார்கள், அதே சமயம் இந்த மூன்று உயர்வான திவிஜாஸ் (இருமுறை பிறத்தல்) என்றழைக்கப்பட்ட வர்ணாக்கள் புனித (உப நாயனம்) நூல் சடங்கை செய்வதற்கு உரிமை பெற்றவர்களாக இருந்தார்கள்.

பிந்தைய வேத காலத்தில் பொருளாதாரத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. இத்தகைய மாறுதல்கள் கருத்தியல் ஆதரவு தேவைப்பட்டதால் மத மரபு வழியில்லாத புத்த சமயம் போன்ற ஏராளமான இயக்கங்கள், பிராமண சமூக முறையை ஏளனம் செய்தன. ஆனால் புத்த சமயம்

சாதி முறையை முழுவதுமாக அழிக்க முடியவில்லை. பழங்குடி வரிசையில் உயர்ந்த வர்ணாவாகக் கருதப்பட்ட சத்ரியர்களை புத்த சமயத்தாராக கருதப்பட்டார்கள். பிராமணர்களின் கீழ் சுரண்டப்பட்ட வைசியர்கள், இத்தகைய சமயங்களில் மதிப்பு பெறுவதற்காக பெரிய எண்ணிக்கையில் உறுப்பினர்களாக ஆனார்கள். இருப்பினும் புத்த சமய, சமண சமய மடலாயங்களில் சமயப் படிநிலைகள் இருக்கவில்லை.

சாகர்கள், குஷாணர்கள், பார்த்தியர்கள், இந்தோ - கிரேக்கர் போன்ற புதிய குழு மக்கள் இந்தியாவிற்கு வந்ததிலிருந்து, வர்ணா முறை, மேலும் பல மாறுதல்களுக்கு உள்ளானது. பொருளாதாரமும் பல மாறுதல்களுக்கு உள்ளானது. நகரமயமாதல், கைவினைப் பொருட்கள் உற்பத்தி, வியாபார வளர்ச்சியின் விளைவாக சங்கங்கள் அல்லது ஷ்ரேணி தோன்றின. பிந்தைய நாளில் இவை சாதிகளாக மாறின. சங்க அங்கத்தினர்களின் நடத்தைகள் சங்க நீதிமன்றங்களின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டன. வழக்கம் போல சங்கம் (ஷெர்னி - தர்மா) சட்ட அதிகாரத்தைக் கொண்டிருந்தது. இத்தகைய சங்கங்கள், வங்கியாளர்களாக, நிதி உதவி செய்பவர்களாக, அறங்காவர்களாக பணிசெய்ய முடிந்தது. பொதுவாக இத்தகைய பணிகளை ‘ஷ்ரெஷ்தின்கள்’ என அழைக்கப்பட்ட பல்வேறு வகையைச் சார்ந்த வணிகர்களால் (இந்நாளில் வட இந்தியாவைச் செஸ்துகள், தென்னிந்தியாவைச் சார்ந்த செட்டிகள் செட்டியார்கள்) நடத்தப்பட்டன. ஆகையால் கி.மு. 500 மற்றும் கி.பி. 500 நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலங்கள் சாதி முறையை தெள்ள தெளிவாக்கக் கண்டன. ஏராளமான கைவினைஞர்கள் மக்கள் தொகையில் பல்வேறு கூறுகளின் வருகை, கலப்பு சாதி திருமணங்கள் (அனுலோமா மற்றும் பிரதிலோமா) இனக்குடியினரின் சாதி படி நிலைகளில் சேர்க்கை, ஏராளமான பலவகையான ஜாதிகளை அதிகப்படுத்தின. தர்ம சாஸ்திரங்கள், ஸ்மிரிதிகள் ஒவ்வொரு சாதியின் கடமைகளை குறிக்க முயன்றார்கள். சாதிகளுக்கிடையே உள்ள உறவை பொதுவாக கைவினைஞர்கள் சமூகம் தவிர குலப்பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கு இடையே மட்டும் நடக்கும் திருமணங்கள் சாதிகளுக் கிடையே உள்ள உறவை வலுபடுத்தியது.

5ஆம் மற்றும் 7ஆம் நூற்றாண்டுகளுக்கிடையே மேலும் மாற்றங்கள் வர்ணா , சாதி அமைப்பு களில் ஏற்பட்டன. நிலமானியத்தின் மூலமாக உருவான நிலக்கிழார்கள், வைஷ்யாவிலிருந்து மிகப் பனிவான உழவர்களாக மாற்றப்பட்டதின் விளைவாகும். ஏராளமான உழவர்கள், சூத்திரர்களாக பதிவு செய்யப்பட்டனர். இதன் விளைவாக சூத்திரர்கள், வைசியர்களைப் போலவே உழவர்களாகத் தோன்றினார்கள். இப்பொழுது, வைசியர்களும் சூத்திரர்களும் முழு மொத்தமாக சேர்ந்து கொண்டனர் இருப்பினும் கங்கா வட்டாரத்தை தவிர சாதிமுறை வட்டாரங்களில் பல்வேறு வடிவங்களில் அமைந்தது. வங்காளம், தென் இந்தியா, மற்றும் எல்லைப் பகுதிகளில், பிராமணர் சூத்திரர்கள் ஆகிய முக்கியமான 2 சாதிகள் தோன்றின. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து ராஜபுத்திரர்கள், வட இந்திய சமுதாயத்தின் முக்கிய காரணியாகத் தோன்றினார்கள். இந்த காலத்தில் சாதி முறையைப் பற்றிய மக்களின் மனதை உறுதிப்படுத்தியது, தாவரங்களைக் கூட வர்ணா, ஜாதி முறையால் பிரிக்கப்பட்டன. வர்ணாக்களின் படி வீட்டின் அளவுகளும் வேறுபட்டிருந்தன என ஒரு நூல் குறிப்பிடுகின்றது.

மத்திய காலத்தில், குறிப்பாக தென் இந்தியாவில் சூத்திரர்கள் தூய்மையான (சாட்) தூய்மை அற்றவர்கள் (அசட்) என பிரிக்கப்பட்டது முக்கியமான வளர்ச்சியாகும். தென்னிந்தர்களை இடதுகை (இடங்கை), வலது கை (வலங்கை) சாதிகள் என அழைக்கப்பட்டன. மனு 61 சாதிகளைக் குறிப்பிட்டது. அதே சமயம் பிந்தைய நூல்கள் நூற்றுக்கணக்கான கலப்பு ஜாதிகளைக் கூட்டுகின்றன. (வர்ணா சங்கரா) ராஜ புத்திரர்களைத் தவிர ‘கயஸ்தா’ என்ற மற்றுமொரு சாதி இக்காலத்தில் வளர்ச்சியுற்றது. பாரம்பரிய எழுத்தர்களான ‘கயத்தாக்கள்’ தனித்தனி சாதிகளை மாற்றியமைத்து தன் இன மரபுக்குள்ளேயே திருமணம் செய்து

கொள்கின்ற ஒரு மரபுக்குழுவாக அமைப்பதற்காக ஒன்று சேர்த்தினார்கள். அடிக்கடி இத்தகைய சாதிகள், உயர்வான முன்னோர்களிடமிருந்து சிறப்பை பெறவும், தற்பொழுதுள்ள கீழான நிலையை, பொருளாதாரம் அல்லது மற்ற காரணிகளால் விவரிக்கவும் செய்தன. வட இந்தியாவில் ‘கத்ரிஸ்’ என்ற முக்கியமான சாதி அவர்கள் சத்திய மூலங்களிலிருந்து வந்தவை என்றும், ஆனால் வாணிகத்தை கொண்டதால், அவர்களுடைய சாதி ஆட்கள் அலட்சியமாக இருந்தால் அவர்கள் வைசியர்களின் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. கூர்ஜராகள், ஜாட்டுகள், அதிர்கள், எல்லோரும் சத்ரிய தொடக்கத்தை பெற வேண்டினார்கள், பிறகு அவர்களுடைய தகுதியை பல்வேறு காரணங்களினால் இழக்க நேரிட்டது. இதே உயர் சாதிக்கான கோரிக்கை, இந்திய அரசியலமைப்பில் 1950 வரை, கீழ் சாதியைச் சார்ந்த மக்களுக்கு, பெரும்பாலான அரசு வேலைகளில் இட ஒதுக்கீடு வழங்கியது தொடரப்பட்டது.

சாதிமுறை வட்டார வேறுபாடுகளைக் கொண்டுள்ளது. கி.பி.8ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு வட்டார அமைப்புகள், வட்டார உணர்வுகள் இந்த வேறுபாடுக்கு பெரும்பங்கை வகித்தன. வட இந்திய பிராமணர்கள், கோத்ராக்களின் அடிப்படையில் இல்லாமல் அவர்கள் குடியிருப்பைச் சார்ந்த அடிப்படையிலும் பிரிக்கப்பட்டார்கள். இவ்வாறாக கன்யாக்குபுஜா, சரயு பாரியர் கன்னோஜ், சரயு ஆறு மிதிலாவைச் சார்ந்த முறையே மைதிலா பிராமணர்களை நாம் கொண்டுள்ளோம். ஏராளமான, ராஜபுத்திர துணை சாதிகள், அவர்களுடைய முந்தைய தோமரர்கள் கச்சவாதர்கள், ஹாடத்துகள் மற்றும் சௌஹாளக்கள் என்ற பழங்குடி பெயரை கொண்டிருந்தார்கள். இத்தகைய துணை சாதிகளும், தங்களுக்காக கோத்ராக்களைப் பெற்றார்கள். இவ்வாறாக, இடைக்காலத்தில் ஜாதிகள் துணை ஜாதிகள், கோத்ராக்களின் எண்ணிக்கை கூடுதலாகிக் கொண்டே சென்றது. மராத்தியர்களும் ஒரு சாதியாக ஆயினர்.

நவீன காலத்தில் சாதிமுறை புதிய அம்சங்களைப் பெறுகிறது. இதனால் பட்டப் பெயர்களும் சேர்க்கப்பட்டன. ஒரு குறிப்பிட்ட சாதி அல்லது துணை சாதி ஒன்று சில சமயங்களில் ஒன்றிற்கும் மேற்பட்ட பட்ட பெயர்களைப் பெற்றது. இருப்பினும் ஏராளமான வேறுபாடுகள் இந்த விஷயத்தில் காணப்பட்டன. சாதி இயக்கங்கள் மற்றும் எதிர் சாதியின் இயக்கங்களின் விளைவாக புதிய சாதிகளின் அமைப்பு மேலும் உருவாகின. இவ்வாறாக பிரம்ம சமாஜத்தின் சாதியை போன்றே ஒரே மாதிரியான அந்தஸ்த்தைப் பெற்றனர்.

மேற்கண்ட விளக்கத்திலிருந்து சாதிமுறை ஒரு சிக்கலான வேலை சார்ந்த முறை என்பதைக் காண முடிகிறது பெருமளவிலான வேறுபாடுகள் வட்டார அளவில் காணப்பட்டன, இருப்பினும் சுருங்கிய அளவில் வட்டார துணை வட்டார பொருளாதரா அந்தஸ்து, அரசியல் அதிகாரத்திற்கு உட்பட்டு கைவினைத் தொழில் குறிப்பிட்ட கடவுளை வழிபடுதல் எல்லாமே இதனுடைய அமைப்பு, தொடர்ந்து நிகழ்ந்த மாற்றங்கள் இவற்றில் முக்கிய பங்கு வகித்தன.

இடைக்காலத்தில் சாதி முறையின் செல்வாக்கு அதிகமாக இருந்தாலும் எல்லாரும் சமம் என்ற கொள்கை கொண்ட சமய சீர்த்திருத்தவாதிகளான பாசவா, ராமனந்த், கபீர் போன்றவர்கள் சாதியை, தங்களுடைய ஆதரவாளர்களிடையே ஓழிக்க முயற்சித்தார்கள். அவர்களுடைய சாதி பிரிவுகள் விரைவாக ஒரு புதிய ஜாதிகளின் பண்புகளைக் கொண்டதானது. சீக்கியர்கள் சாதி உணர்ச்சிகளிலிருந்து விடுபட இயலவில்லை. முஸ்லீம்கள் கூட சாதி குழுக்களை அமைத்தனர். கேரளாவைச் சார்ந்த சிரியன் கத்தோலிக்கர்கள், முன்பே சாதி அடிப்படையில் பகுதிகளாகப் பிரிந்தனர். சாதிமாறிய கிருஸ்தவர்கள் அவர்களுடைய சாதி பாரபட்சங்களை கொண்டு வந்தனர் உயர் சாதியில் மாறியவர்கள் தங்களை கீழ்சாதி வகுப்பிலிருந்து தனித்துக் கருதிக் கொண்டனர்.

## இப்பகுதிக்கான கேள்விகள் 19.1

1. முந்தைய அடையாள சமூக அமைப்பு எது?
2. வேத காலத்தில் இருந்த ஏதாவது இரண்டு பழங்குடியினரின் பெயரைக் கூறு?
3. 'திவிஜாஸ்' என்பதன் பொருள் என்ன?
4. எந்த மக்களின் வருகை இந்தியாவில் சாதி முறையில் ஏராளமான மாற்றங்களைக் கொண்டு வந்தது?
5. எப்பொழுது சூத்திரர்கள் தூயவர்களாகவும் தூய்மையற்றவர்களாகப் பிரிந்தார்கள்?

## 19.2 தீண்டாமை

இந்திய சமுதாயத்தில் தூய்மை, மாசுபடுதல் ஆகிய கோட்பாடுகள், தீண்டாமையினர் (ஆன்யஜாகள்) என்று அழைக்கப்பட்ட சிறந்த வகையினரிடம் பிரதிபலித்தது. இவர்களை பிராமண சமுதாயத்திற்கு அப்பாற்பட்ட சமூகத்தை சார்ந்தவர்கள் என கருதப்பட்டார்கள். இந்த தீண்டாமையின் எண்ணம் வேத காலத்தின் கடைசிக் கட்டத்தில் வேறுன்றியது புத்தருடைய காலத்தில் தனிப்பட்ட சமூக வகையானது. சில சமயம் அவர்கள் 5-ஈவது வர்ணாக்கள் (பஞ்சந்த்) என அழைக்கப்பட்டனர். 'சண்டாலா' என்ற சொல் பலவகை தீண்டாமையினருக்குப் பயன்படுத்தப்பட்டது. அவர்களுக்கு சாதி கிராமங்களில் குடியிருக்க அனுமதி வழங்கப்படவில்லை, பிரதான குடியேற்றங்களுக்கு வெளியே இருந்த காலனிகளில் குடியேறினர். இறந்த சடலங்களை சுமந்து, அவற்றை எரிப்பது அவர்களுடைய முக்கிய பணியாக இருந்தது. அவர்கள், சடலங்களை தகனம் செய்யும் பொழுது அணியக்கூடிய உடைகள், உணவை உடைந்த பாத்திரங்களில் உண்ணுதல், இரும்பு ஆபரணங்களை அணிய வேண்டுமென்று, சட்ட புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. குப்தர் காலத்தில் அவர்களது நிலை இன்னும் மோசமான நிலையானது.

அவர்கள் நகரத்தில் நுழையும் பொழுது மரத்திலான மணியின் நாக்கை, வலிமையாக ஆட்ட வேண்டும் என வலியுறுத்தப்பட்டார்கள். வேட்டையாடுபவர்கள் (நிஷடா), மீன் பிடிப்பவர்கள் (கைவர்தர்கள்), தோல் தொழிலாளர்கள் (சர்மகாராஸ்), துப்புறவு தொழிலாளர்கள் (கக்கூசா) ஆகிய் கூடை தயாரிப்பாளர்கள் (வென்ட்) எல்லோரும் தீண்டாமையினராக ஆயினர். "தூம்" , "தோம்" சாதிப்பிரிவினை குழுவுடன் தொடர்பு கொண்ட பின்னர் இது தீண்டாமை வகை ஆனது. நாமும் பல சூத்திர அரசர்களைத் தவிர, 'தோம்ப்' அரசர்களைப் பற்றி கேள்விப்படுகிறோம். மிலேச்சர்களும் தீண்டாமையினர் என கருதப்பட்டது அண்மை காலம் வரை இந்த தீண்டாமை தொடர்ந்தது. தீண்டாமை பழக்கத்தை குற்றம் என கருதினாலும் கூட இன்றும் கிராமப்புற பகுதிகளில் தொடர்கிறது. மகாத்மா காந்திஜி இந்த தீண்டாமை பழக்கத்தை எதிர்த்து பிரச்சாரத்தை தொடங்கினார். அவர் இவர்களை 'ஹரிஜனங்கள்' என்று அழைக்கப்பட வேண்டும் என அபிப்பிராயப்பட்டார். இந்திய அரசு யாராவது தீண்டாமையை நடைமுறைப் படுத்தினாலோ அல்லது தீண்டாமையை ஆதரித்தலோ அவர்களுக்கு எதிரான சட்டத்தை இயற்றியது. கல்வி மற்றும் சமூக இயக்கங்கள் அவர்களுக்கும் மற்றவர்களுக்குமிடையே இருந்த நீண்ட இடைவெளியை இணைப்பதில் பெரும்பங்கு வகித்தன. விரைவிலேயே இந்த மனிதாபிமானமில்லாத இப்பழக்கத்தை தகர்த் தெரியப்படும் என்பதில் நம்பிக்கை உண்டு.

## 19.3 அடிமைத்தனம்

இந்தியாவில் காணப்பட்ட அடிமைத்தனம் கிரேக்க, ரோமானிய பழமைக்குரிய மரபிலிருந்து படிவம் சாராம்சம் ஆகியவற்றில் வேறுபட்டது. அதனால் தான் மெகஸ்தனிசால் அடிமைகளை இந்தியாவில் காணமுடியவில்லை என்றார்கள். அவர் தனது தீர்ப்பில் நிச்சியமாக தவறி உள்ளார். அடிமைத்தனம் என்பது தோற்றுவிக்கப்பட்ட நிறுவனமாகும். எஜமானருக்கும் அடிமைக்கும் இடையே உள்ள உறவு பற்றி தெளிவாக வரையறுக்கப்பட்டது. உதாரணமாக ஒரு பெண் அடிமை தன்னுடைய எஜமானருக்காக மகனை சுமக்கும் பொழுது, சட்ட அளவில் அவன் விடுதலையானலும் அவளுடைய மகன் சட்டப்படி சட்ட அந்தஸ்தைப் பெற உரிமையுண்டு. அர்த்த சாஸ்திராவின் கூற்றுப்படி ஒரு மனிதன் பிறப்பினாலோ தன் விருப்பபடியே தன்னை விற்றிருந்தாலும், போரில் பிடிபட்டிருந்தாலும் அல்லது நீதி தண்டனையில் இருந்தாலும் அவன் அடிமையாகக் கருதப்படுகிறான். அடிமை என்ற சொல்லுக்கு சமஸ்கிருதத்தில் 'தாசா' எனப் பொருள். இவை ஆர்ய கும்பலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களின் ஒரு அங்கத்தினராகும். பல அந்த மாதிரி தாசாக்கள் அடிமைத் தனமாக்கப்பட்டனர். இந்தியாவில் அடிமைகளை வீட்டுவேலை செய்பவர்களாக தனிப்பட்டவர்களுக்கு ஊழியம் செய்பவர்களாக நியமிக்கப்பட்டார்கள். உண்மையாகவே அடிமை தனது எஜமானின் வீட்டு வேலைகளில் உதவி செய்பவராக இருந்தார். எஜமானருக்கு தங்களுடைய அடிமைகளின் வாழ்க்கையின் மீது எந்த உரிமையும் இருக்கவில்லை. முந்தைய காலங்களில், அடிமைச் சந்தைகள் இல்லை, இருப்பினும் கிறிஸ்துவ சகாப்தத்தின் முந்தைய நூற்றாண்டுகளில் அடிமைப் பெண்களை விற்கும் முறை இந்தியாவிற்கு ரோமனியப் பேரரசுக்கு மிடையே இரு திசைகளில் நடைபெற்றது, 16-ஆம் நூற்றாண்டில் விஜய நகரப் பேரரசில் அடிமை சந்தைகள் இருந்தன.

டெல்லி சுல்தானியர்கள் ஏராளமான அடிமைகளை (பண்டகான்கள்) வைத்திருந்தனர், இருந்தாலும் அவர்களுடைய சூழ்நிலை மிகவும் வேறுபட்டவையாகும். அடிமைகளுன் ஒருவரான மாலிக்கபூர் என்றழைக்கப்பட்டவர், அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவரானர். 16-ஆம் நூற்றாண்டில் போர்ச்சுக்கீசியர்கள் அடிமை வாணிகத்தில் பெரிய அளவில் ஈடுபட்டார்கள். லிங்கோட்டன் என்பவர் கோவாவின் அடிமை வியாபாரத்தை நாம் இங்கு குதிரைகளை ஓட்டுவது போல அவர்கள் அடிமைகளை ஒட்டினார்கள் என அதிர்ச்சி தரக்கூடய அறிக்கையை கொடுத்திருக்கிறார். ஏராளமான எண்ணிக்கையிலான அடிமைகள் கலிசா (கிரீடபூமி) பூமியில் காரகனாக்களில் (காராகனாஸ்) பணிமனையில் பயன்படுத்தப்பட்டனர். இவ்வகையான அடிமைத்தனம் ஆங்கிலேய ஆட்சியின் பொழுது நீடித்தது காரன்வாலிஸ் பிரபுவின் அதிகாரப் பூர்வமான அறிக்கையால் தகர்க்கப்பட்டது. இப்பொழுது அடிமை வாணிகம் முற்றிலும் தடை செய்யப்பட்டுவிட்டது.

## 19.4 புருஷார்த்தா, ஆஷ்ரமா, சமஸ்காரா

புருஷார்த்தா, ஆஷ்ரமா, சமஸ்காரா ஆகிய மூன்று கோட்பாடுகளும் ஒன்றையொன்று உள்ளூர இணைக்கப்பட்டுள்ளது புருஷார்தா என்பதன் பொருள் வாழ்க்கையின் குறிக்கோளை, நான்கு ஆசிரமங்களாக, அல்லது நான்கு வாழ்வின் நிலைகளாகப் பிரிக்கப்பட்டதாகும். ஒவ்வொரு ஆஷ்ரமங்களுக்கு சமஸ்காரா அல்லது செயல்படத் தேவையான சடங்குகள் நிறைவேற்றப்பட்டன. வர்ணர்ஸ்ரம - தர்மா அதாவது வர்ணாவின் தருமம் வாழ்க்கையின் நிலைகளை, அடிக்கடி கேள்விப்படுகிறோம். வாழ்க்கையின் நான்கு குறிக்கோள்களான தர்மம் (நல்ல நடத்தை) ஆர்தா (செயல் மூலம் வாழ்க்கையைப் பெறுதல்) கர்மம் (உலக ஆசைகள்) மோட்சம் (முக்தி அடைதல்) ஆகியவையாகும்.

ஒரு மனிதன் நான்கு புருஷார்தாக்களை கடைப்பிடித்தலை அவனால் முடியும் பொழுது, அந்த மனிதனின் வாழ்க்கையை நான்கு ஆஷ்ரமங்கள் அல்லது நிலைகளாக பிரிக்கப்படுகிறது. நடத்தையின் ஒழுங்கு முறைகள் ஒவ்வொரு ஆஷ்ரமத்திலும் விளக்கமாக உற்று நோக்குதலையும் கொடுக்கப்பட்டுள்ளது. நான்கு ஆஷ்ரமங்களும் ஏணியின் நான்கு படிகள் போன்றவையாகும்.

முதல் ஆஷ்ரமா என்பது பிரம்மச்சர்யம் இதை ஒரு மனிதர் உபநாயன சனங்கரா அல்லது புனித நூல் சடங்கு முடிந்தவுடன் நுழைகிறார். இச்சமயமான 'ஆஷ்ரமா' இவன் கல்வியைப் பெறுகிறான் தன்னுடைய ஆசைகள் மனவெழுச்சிகளை ஒழுங்குபடுத்த கற்றுக் கொள்கிறான். அவன் தன்னுடைய குருவுடன் காட்டிலுள்ள அவருடைய ஆஷ்ரமத்தில் தங்கி, கீழ் படிதலை கற்றுக் கொள்கிறான் அவருக்குப் பணி செய்கிறான். அவன் தனக்காகவும் தன்னுடைய குருவுக்காகவும் பிச்சை எடுக்கிறான். தண்ணீர் எடுத்துவருதல் ஆஷ்ரமத்தை சுற்றிலும் சுத்தம் செய்தல் போன்ற கடினமான வேலைகளைச் செய்கிறான். இவன் எளிமையான வாழ்வையும் உயர்ந்த சிந்தனைகளையும் நடைமுறைப் படுத்துகிறான். அரச இளவரசர் கூட இத்தகைய கடமைகளைச் செய்கிறார்கள். ஆகையால் பிரம்மசார்ய நிலை, ஒரு தனி மனிதரை வீட்டுப் பொறுப்புகளுக்கு தயாராக்குகிறது.

ஒரு மனிதனின் வாழ்க்கையில் 'கிரஹஸ்த்தா ஆஷ்ரமா' ஒரு மிக முக்கியமான நிலையாகும். இந்த நிலையில் அவன் 'ஆர்த்தா', காமாவை, தர்மாவின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்துகிறான். குழந்தைகளை பெறுகிறான் தன்னுடைய குடும்பத்திற்கு ஆதரவளிக்க சம்பாதிக்கிறான் சமுதாயத்திற்கு தன்னுடைய கடமைகளைச் செய்கிறான்.

ஒரு குடும்பத் தலைவனாக எல்லா கடமைகளையும் செய்து முடித்தப் பிறகு, வனப்பிரஸ்தா ஆஷ்ரமத்திற்குள் நுழைகிறான். இந்த நிலையில் இவன் குடும்பத்தை விட்டு விட்டு காட்டிற்கு செல்கிறான். அங்கு அவன் எல்லாவிதமான உலக ஆசைகள், விருப்பங்களை விட்டு விடுகிறான். அவன் பழக்கங்கள் காய்கறிகளை உணவாக மான் தோல் அல்லது மரத்தின் மரப்பட்டைகளை உடைகளுடனும் வாழ வேண்டியிருந்தது. இவன் தியானம், கடுமையான பழக்க வழக்கங்களை நடைமுறைப்படுத்துகிறான் இந்த நிலையில் இவன் இறந்தால் மோட்சத்தை அடைகிறான் மற்றபடி இவன் சந்நியாச ஆஷ்ரமத்தில் நுழைகிறான். இதில் இவன் முழு துறவு நிலையை நடைமுறைப் படுத்துகிறான். சமுதாயத்துடன் எல்லா உறவுகளையும் தகர்த்தெறிந்துவிட்டு மோட்சத்தை அடைவதற்காக சன்னியாசத்தை கடும் முயற்சியுடன் தொடருகிறான்.

இத்திட்டம் இலட்சியத்தை பிரதிபலிக்கிறது உண்மையான சூழ்நிலையை அல்ல. பெரும்பாலான ஆண்கள் வாழ்க்கையின் முதல் நிலையை எழுதினதின் மூலமாக கடக்கவில்லை. அதே சமயம் ஒரு சிலர் மட்டுமே இரண்டாவது நிலைக்கு அப்பாற்பட்டு சென்றனர். இதுவும், ஒரு தனி வாழ்க்கையின் சமயத்தில், முரண்பாடான படிப்புகளுக்கான தேடுதல், குடும்பவாழ்வு, சந்நியாசம் ஆகியவற்றிற்கான கடும் முயற்சி ஆகும். ஆஷ்ரம முறை பாதியாக பரிணாமித்தது, மரபு வழியில்லாத பிரிவினரான புத்த சமயம், சமண சமயம் ஆகியன இளைஞர்களை குடும்ப வாழ்க்கையுடன் சன்னியாச வாழ்வையும் எடுக்க ஊக்கப்படுத்தினதை பழமை விரும்பிகளின் ஆதரவைப் பெறவில்லை.

இத்திட்டத்தின் படி வாழ்க்கையின் நான்கு நிலைகள் உடலின் பிறப்பில் தொடங்குவதில்லை. ஆனால் புனித நூல் சடங்குடன் தொடங்குகிறது. இவ்வாறான ஒரு குழந்தை புனித நூலினுடன் தீட்சை பெற்றதற்கப்புறம், சமுதாயத்தில் முழு அங்கத்தினராக ஆக முடியும். சமஸ்கரா மனிதனின் எல்லா நிலைகளிலும் அதாவது கருவாக உருவானதிலிருந்து இறக்கும் வரை இது ஒரு முக்கியமான சடங்குகளில் ஒன்று. இது போன்று சில 40 சமஸ்கராக்கள் உள்ளன.

சில முக்கியமானவைகளாவன் கர்ப்பதானம் (கருத்தரித்தல்), பும்சாவனா (ஆண் குழந்தை), சிமன்டோனாயனா (பாதுகாப்பு), ஜடகர்மா (பிறப்பு சடங்கு) நிஷ்கரமனா (சூரியனைக் காட்டுதல்) அன்னபிரஷன்னா (முதல் முறையாக திடப் பொருளை ஊட்டுவது) சுடாகர்மா (மொட்டை அடித்தல்) உபனாயனா (புனித நூலுடன் தீட்சை பெறுதல்) சாமவர்தனா (முதல் நிலையின் முடிவு) விவாகா (திருமணம்) ஆண்டியஸ்தி (கடைசி சடங்குகள்) முதலியன. இத்தகைய எல்லா சன்ஸ்கரானாக்கள் மூன்று மேல் வகுப்பிலுள்ள வர்ணாக்களுக்கு மட்டும் தான், சூத்திரர்களுக்கும், தீண்டாமையினருக்கும் கிடையாது. சொல்லப்போனால் உயர்ந்தவர்ணாக்களை சார்ந்த பெண்கள் கூட, ஏராளமான சன்ஸ்கராக் களில் உரிமை கொள்ள இயலாதிருந்தது.

## 19.5 ஜஜ்மனி முறை

முந்தைய இடைக் காலத்திலிருந்து நவீன காலம் வரை தொடர்ந்த ஒரு முக்கியமான நிறுவனம், கிராமத்து சமுதாயத்தில் வளர்ச்சியுற்ற ஜஜ்மனி முறையாகும். முக்கியத்துவமான உழவர்களின் சாதிக்குழு ஒரு பக்கம் கைவினை பணிகள் செய்யும் கைவினைஞர் களின் சாதி ஒரு பக்கம் ஆக இது ஒரு முழுமையாக பொருந்திருயிருக்கக் கூடிய உறவாகும். இந்த முறையில் பணி செய்யும் சாதிகள் சொந்த நிலத்தைக் கொண்டுள்ள உழவர்களின் நிலத்திலும் குறிப்பிடத்தக்க உயர் சாதியிலுள்ளவர்களின் நிலத்திலும் பணி செய்தார்கள் உற்பத்தியில் மரபுப்படி பங்கை பகிர்ந்து கொள்ளவும் இன்றும் சில விஷயங்களில் சிறு பகுதி நிலத்தைப் பெற உரிமை கோரப்பட்டது. ஆகையால் தோல் தொழிலாளர்கள் சவரத் தொழிலாளர்கள் மத குருமார்கள், பூமாலை செய்பவர்கள் ஏர் உழுபவர்கள் பல்வேறு வகையான கொல்லர் தொழில் செய்பவர்கள் ஆகியோர் உயர்ந்த சாதி அல்லது அதிகார மிக்க நிலச் சொந்தக்காரர்கள் குழு இவர்களின் நிலங்களில் வேலை செய்தனர். அவர்களுக்கு சில சந்தர்பங்களில் மட்டும் தானியங்கள் கூலியாக கொடுக்கப்பட்டது அல்லது நிலங்களாக கொடுக்கப்பட்டது. இருப்பினும் இந்த மாதிரி பணி செய்யும் சாதிகள் எப்பொழுதும் தங்களுடைய பொருட்கள் பணிகளை செய்ய சுதந்தி ரத்தைப் பெற்றனர். இந்த பணி உறவு முறை பணிமயமாதல் நகரமயமாதல் தொழில்மய மாதல் ஆகியவற்றின் கீழ்வந்தது. இடைக்காலத்தின்பொழுது, மந்தமான சூழ்நிலை இயற்கை சீற்றங்களின் பொழுதும், பாதுகாப்பு நடவடிக்கையான இந்த முறை பணி செய்தது. ஆகையால் ஜஜ்மனி முறையுடன் எந்த கைவினைஞர்கள் தழுவாமல் இருக்கிறார்களோ அவர்கள் கிராமப்புற ஏழை மக்களை விட மிகவும் கடினமாக தாக்கப்படுகிறார்கள்.

### இப்பகுதிக்கான கேள்விகள் 19.2

கோடிட்ட இடத்தை நிரப்புக

1. __________ வை 5ஆவது வர்ணா (பஞ்ச்சனா) என அழைக்கப்பட்டது.
2. மகாத்மா காந்திஜி தீண்டாமையை எதிர்த்து பிரச்சாரம் செய்ய தொடங்கி அவர்களை __________ என அழைத்தார்.
3. அடிமைத்தனம் பல்வேறு படிவங்களில் காணப்பட்டாலும் __________ அடிமைத்தனத்தை காண முடியாது.
4. தன் பிறப்பால் தானாகவே தன்னை விற்பதால், போரில் பிடிபடுவதால் அல்லது சட்டத்தினால் தண்டனையைப் பெறுவதால் ஒரு மனிதன் அடிமையாகிறான் என __________ அறிக்கையிடப்பட்டது.
5. புருஷர்தா (வாழ்க்கையின் குறிக்கோள்கள்) நான்கு __________ பிரிக்கப்பட்டுள்ளது.
6. ஜஜ்மனி முறை தகர்த்தெறியப்பட்டதற்கான காரணம் என்ன?





## 19.6 குடும்பம்

இந்திய மரபுக் குடும்பம் குடும்ப உறவுகளைக் கொண்ட ஒரு பெரிய கூட்டுக் குடும்பமாகும். கூட்டுக்குடும்பம் என்பது, ஒன்று அல்லது இரண்டு தலைமுறையினர், ஒரே கூரையின் கீழ் அல்லது வெவ்வேறு கூரையின் கீழ், ஆனால் ஒரே சமையல் அறையைக் கொண்ட இடத்தில் வாழ்பவர்களாவர். எல்லா உறுப்பினர்களும் அசையாத சொத்துகளின் மீது உரிமை கொண்டவர்கள் குடும்பம் பொதுவாக ஆண் வழி மரபு வழி அல்லது தந்தை வழி அதாவது வீட்டிற்கு தலைவர் தந்தை அல்லது மூத்த ஆண் உறுப்பினர் ஆவர் சொத்துக்களை நிர்வகிக்க கூடியவர் தலைமைப் பொறுப்பு தந்தையிடமிருந்து மகனுக்கு வருவது ஆகும். நவீன நகரங்களில் ஏராளமான தனிக் குடும்பங்கள் மனைவி, கணவன் குழந்தைகள் அடங்கிய தனிக்குடும்பங்கள் காணப்பட்டன. இத்தகைய குடும்பங்களும் ஆண் வழி மரபுமுறை, தந்தை வழி கொண்டது. ஆனால் தாய் வழி கொண்ட தலைமைப் பொறுப்பை தாயிடமிருந்து மகளுக்கு கொடுக்கப்பட்ட பல குடும்பங்கள் கேரளா, நாகாலாந்து,மேகாலயாவின் வட கிழக்கு வட்டாரங்களில் இருந்தன.

குடும்பம் எந்த நிலையில் இருந்தாலும் இது சமுதாயத்தில் முக்கியமான அலகாக உள்ளது. குடும்பத்திலுள்ள அங்கத்தினர்கள் அனைவரும் 'ஷர்தா' குடும்பத்தை யாருக்கெல்லாம் 'சபின்தாஸ்' என்ற சடங்கில் கலந்து கொள்ள உரிமை பெற்றிருக்கிறார்களே அவர்கள் குடும்ப குழுவின் உறுப்பினர்கள் என வரையறுப்படுகிறது. குடும்ப உறுப்பினர்களுக்கிடையே உள்ள பிணைப்பு சமூக பாதுகாப்பை அவர்களுக்கு கொடுத்தது. ஒருவர் தன் மனத்துயரத்தின் பொழுது அவன் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களை சார்ந்து இருக்க முடிகிறது. பண்டிகை திருமணம் போன்ற காலங்களில், பொறுப்புகளைப் பகிர்ந்து குடும்பப்பிணைப்பை வலிமையாக்குதலாகும்.

இந்தியாவில், மரபு வழி குடும்பம், இரு மரபு வழிக்குழுவால் அதாவது புனிதமான சட்டம் வழக்கங்களினால் நடத்தப்படுகிறது. இவை 'மிட்டாஷரா' 'தயாபாக்யா' வின் அடிப்படையில் அமைந்துள்ளது. வங்காளம் அஸ்ஸாமைச் சார்ந்த பெரும்பாலான குடும்பங்கள் 'தயா பாக்யா' வின் விதிகளைப் பின்பற்றுகின்றன. அதே சமயம் இந்தியாவில் மீதமுள்ளவர்கள் பொதுவாக 'மிட்டகஷாரா'வை பின்பற்றுகின்றன. மிகப் பெரிய நிர்வகிக்க முடியாத கூட்டுக் குடும்பங்களுக்காக புனித சட்டங்கள் நிபந்தனைகளை உருவாக்கின. இம் மாதிரியான இடைவெளிகள் தந்தை வழி மரபு இறத்தலில் இடம் பெற்றன. குறைந்த பட்சமாக இடைக் காலத்திலிருந்து கூட கூட்டுக் குடும்பத்தின் சொத்துகள், தனி மனிதரின் சொத்துக்களுடன் சேர்க்கப்படவில்லை அந்த மாதிரி சொத்துகள் பிரிக்கப்பட கூடியதாகவும் இல்லை. சுதந்திரத்திற்கு பிந்தைய காலங்களில் இந்திய அரசியலமைப்பு ஒவ்வொரு சமூக வகுப்பினரும் அவர்களுடைய சமய தனிப்பட்ட சட்ட திட்டங்களை திருமணம், விவாகரத்து, மரபு வழி சொத்துகளை அடைதல், மரபு வழி உரிமை அடைதல், தழுவுதல், காப்பாளர் பொறுப்பு, குழந்தைகளின் பாதுகாப்பு பராமரித்தல் போன்ற விஷயங்களில் பிரயோகிப்பதற்கு சட்டத்தை வழங்கியது. இவ்வாறாக ஹிந்து, புத்த சமய, சீக்கிய, சமண வகுப்பினரை 1955 - 56ஆம் ஆண்டில் இந்து சட்டத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டது. முஸ்லீம் கிறிஸ்தவ, பார்சி குடும்பங்கள் சமயத்தை அடிப்படையாகக் கொண்ட அவர்களுடைய சொந்த தனிப்பட்ட சட்டங்களைப் பெற்றுள்ளார்கள்.

## 19.7 திருமணம்

குடும்பங்கள் என்பது, திருமணம் என்றழைக்கப்பட்ட 'சமஸ்கரா' என்ற மிக முக்கிய சடங்கின் விளைவாகும். இயற்கையை சார்ந்திருக்கின்ற திருமணம் பலவகைப்படும். அவையாவன 'ஹைபர்கேமஸ்' (உயர் சாதியைச் சார்ந்த ஆண், கீழ் சாதியைச் சார்ந்த பெண்)

அல்லது ‘அனுலோமா’ ‘ஹைப்போகேமஸ்’ (கீழ் சாதியைச் சார்ந்த ஆண் மற்றும் மேல் சாதியைச் சார்ந்த பெண்) அல்லது பிரதிலோமாவை அடிப்படையாகக் கொண்ட திருமண உறவு வெவ்வேறு வர்னாக்கள், சாதிகளுடன் நடந்தன. ஒரு கணவன் ஒரு மனைவியுடன் இருப்பது, ஒரு கணவன் பல மனைவிகளுடன் இருப்பது, ஒரு மனைவி பல கணவருடன் இருப்பதை, ஏராளமான கணவன்களை அடிப்படையாகக் கொண்டதாகும். எல்லா வகையான திருமணங்களின் எடுத்துக்காட்டுகளை இந்திய சமுதாயத்தில் காணலாம். மரபு முறையாக பேசும் பொழுது திருமணங்கள் வழக்கமாக ஒரே சாதியைச் சார்ந்த ஜோடிகளின் பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் பல்வேறு ‘கோத்ராக்கள்’ (பொதுவான முன்னோடிகளைக் கொண்ட மனிதர்கள்) ‘பிரவராக்கள்’ (தடை செய்யப்பட்ட படம்) அவர்கள் ‘திவிஜா’, ‘கோத்ரா’ ‘பிரவாரர்’ வகைச் சார்ந்த கீழ் வர்ணாக்களில் இருக்கவில்லை இருப்பினும் ஏராளமான இனக் குழுவினர் தங்களுக்காக ‘கோத்ராக்’களைப் பெற்றுக் கொண்டார்கள். பிரவாரா தடை செய்யப்பட்ட பட்டங்களின் விதிகள் தொடர்பானதாகும். நபர்கள் பொதுவாக தந்தையர் வழி முன்னோர் என்பது ஏழு தலைமுறையினருக்குள் அல்லது தாய் வழி முன்னோர்கள் என்பது 5 ஆண்டிற்குள் இல்லையெனில் அத்திருமணம் தடை செய்யப்படும் என்பதில் இவைகள் மிக கண்டிப்பாக இருந்தன. இருந்தாலும் இந்தியாவின் தெற்கு பகுதியில், இந்த மாதிரி விதிமுறைகள் கடைப்பிடிக்கவில்லை ஒன்றுவிட்ட சகோதரர்கள், சகோதரிகள் மற்றும் இனக்கலப்பு சகோதரர்கள் இவர்களுக்கிடையே நடந்த திருமணங்களின் ஆவணங்கள், இந்த திருமணங்களை சட்டம் மற்றும் சமூகத்தின்படி அங்கீகரிக்கப்பட்டவை என கருதப்பட்டது. இத்தகைய குழுக்களுக்கு 1955-ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தில் விலக்கு வழங்கப்பட்டுள்ளது.

பொதுவாக, ஒரு பெண் ஒரு ஆண் திருமணத்தில், ஒரே சமயத்தில் ஒருவர் மற்றொருவரைத் திருமணம் முடிக்கிறார். ஆனால் மரபுப்படி, ஒரு ஆண், பல பெண்களை மணப்பது தடுக்கப்படவில்லை. வசதி படைத்த, அதிகாரம் மிக்க ஒருவர், ஒரு மனைவிக்கு மேல் வைத்துக்கொள்ளலாம். பாலிகாமி, பொதுவாக கடைபிடிக்கப்பட்டது. பண்டைய காலத்தில், அரசர்கள் அதிகாரம் படைத்த மக்களுடன், உடன்படிக்கை செய்வதற்கு, தேவையாக இருந்தபொழுது, திருமணம் ஒரு வசதியான முறையாக இருந்தது. சந்திரகுப்தர், அக்பர் ஆகியோரின் திருமணங்கள் இவ்வகையைச் சார்ந்ததே. மகனைப் பெறுவதற்கு எந்த பின்னணி சமய கருத்தும், பல மனைவிகளை கொள்வதற்கு காரணமாகின்றன. இருப்பினும், நவீன சட்டத்தின் கீழ், பாலிகாமி சட்டத்திற்கு எதிரானது. முஸ்லீம்கள் மட்டும் நான்கு முறை, அதுவும் சில முன் நிபந்தனைகளுடன் திருமணம் செய்து கொள்ளலாம்.

பிராமண புனித சட்டம், ஏழு படிநிலைகளை (அதாவது ஏழுபெறா) ஒரு தடவை ஒன்றாக எடுக்கப்பட்ட திருமணத்தை முறிக்க முடியாதது என கருதுகிறது. விவாகரத்துக்கு இங்கே இடமில்லை என்பது பொருளாகும்.இருப்பினும், குறிப்பிட்ட நிகழ்வில் விவாகரத்து அனுமதிக்கப்பட்டதை, அர்த்த சாஸ்திரம் காட்டுகிறது. பிந்தைய காலங்களில், அந்த மாதிரியான சட்டங்கள் மறக்கப்பட்டு விட்டன. இருப்பினும் கீழ் சாதிகளிடையே, விவாகரத்து இன்னும் அனுமதிக்கப்படுகிறது. நவீன காலங்களில், பரஸ்பர ஒப்புதல், முரண்பாடான, கைவிடப்படல், கொடுமை, ஆகியவை இருபக்கத்திற்கும் விவாகரத்து பெறுவதற்கு சட்டப்படி சரியான காரணங்களாகும்.

திரௌபதி, 5 பாண்டவ சகோதரர்களை திருமணம் செய்தாள் என்பது நாம் எல்லோரும் அறிந்ததே. இவ்வகையான திருமணம், ஒரு மனைவி, பல கணவன்களை மணப்பது பாலியன்ட்ரஸ் என்றழைக்கப்படுகிறது. இவ்வகையான திருமணத்தை, ஏராளமான இனக்குழுவினர் சரியானது என்றும், விரும்பத்தக்கது என கருதினார்கள். பொதுவாக, பெண்கள், சகோதரர்களை திருமணம் செய்வது, வெவ்வேறு பெற்றோர் மரபுவழி திருமணம், மிக அரிதாக இந்தக் குழுவில் இருந்தது. இம்மாதிரியான திருமணங்கள், சமூக எதிர்ப்பு

திருமணங்கள் என உயர் வர்ணா, சாதிகள் கருதினார்கள். ஆனால் சமுதாயத்தில் இம்மாதிரியான திருமணங்கள் மதச் சடங்குகளோடு நடைபெற்றன, ஒரு கணவனுக்கு மேல் வைத்துக் கொள்வது, பெருமைபடத்தக்கதாக இருந்தது, வெட்கப்படக்கூடியதாக இருக்கவில்லை.

## 19.8 பெண்கள்

இந்தியாவில், பெண்களின் வரலாறு, வீழ்ச்சியில் முன்னேறக்கூடிய கதையாக உள்ளது. வேதகாலத்தில் ஆணாதிக்கத்தின் கீழ், பழங்குடி இனக்குழுவின் போர்களில் பெண்கள் எல்லா விஷயங்களிலும் பங்கெடுத்தனர் அவர்கள் சமயப் பாடல்கள் தொகுப்பாளராக இருந்தனர். அவர்கள் திருமண வயதில் அவர்களுடைய விருப்பத்திற்கேற்ப ஆண்களை திருமணம் செய்து கொள்ளலாம். பிந்தைய வேதகாலக் கட்டத்தில், பழங்குடி நிறுவனங்களின் சிதறுதலுடன் அவர்களுடைய நிலை படுமோசமானது. முந்தைய சட்ட புத்தகங்கள், பெண்களை, சூத்திரர்களின் தகுதிக்கு குறைத்தது. சிலதனிப்பட்ட சொத்துகளை (ஸ்டிரிதனா) தவிர அவர்கள் எந்த சொத்தையும் உரிமை கோர விடவில்லை. வேத அறிவு கூட, பெண்களுக்கு மறுக்கப்பட்டது. இச்சமயத்தில் புறக்கோட்பாட்டு பிரிவினர், பெண்களுக்கு, அவர்களுடைய சமூக மரபு, பெண் துறவிகளுக்கான நிறுவனத்தில் முக்கியமான இடத்தைக் கொடுத்தனர்.

முந்தைய வரலாறு முந்தைய இடைக்காலங்கள் முழுவதும், பொதுவாக, பெண்களை அறிவார்ந்த செயல்பாடுகளில் ஆர்வமூட்டப் படவில்லை. அவர்களுடைய உண்மையான வேலை, திருமணம் முடித்து, அவர்களுடைய குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டியது. உயர் வகுப்பை சார்ந்த பெண்கள், கல்வியை பெற்றார்கள். அவர்களில் சிலர் கவிஞர்கள் நாடக ஆசிரியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சமஸ்கிருத நாடகங்களில் முதன்மை பெண் கதாபாத்திரங்களை, படிப்பது, எழுதுவது பாடல்களை தொகுப்பது போல அடிக்கடி வர்ணிக்கப்பட்டார்கள். இடைக்காலத்திலிருந்து, அண்மைக் காலம் வரை இசை நடனம் ஆகியவை உயர்சாதிப் பெண்களுக்கு ஏற்றவை அல்ல என்றும் கீழ் சாதிப் பெண்கள் விலை மாதர்களால் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆனால், முந்தைய காலங்களில் இம்மாதிரி இல்லை. ரிக்வேத காலம் நீங்கலாக, பெண்கள் சமுதாயத் தாழ்ந்த தகுதியைக் கொண்டிருந்தார்கள். இளவயது திருமணம் புனிதப் படுத்தப்பட்டது. சதி எனும் உடன்கட்டை ஏறுதல் பொதுவான வழக்கமாக ஆனது. இருப்பினும், வெளிநாட்டுப் பயணி, இபின் பட்டுடா குறிப்பிடுகையில் இடைக்காலத்தில் சதிமுறையை நடைமுறைப்படுத்த சூல்தானிடமிருந்து அனுமதிபெற வேண்டும் என கூறுகிறார். விதவைத் திருமணம் அனுமதிக்கப் படவில்லை. ஆனால் விதவைகள் குறிப்பிட்ட சில சொத்துகளை அடையக்கூடிய உரிமை அங்கீகரிக்கப் பட்டது.

இடைக்காலத்தில், முகத்தில் பர்தா அணியும் பழக்கம் மேல் வகுப்பு பெண்களிடையே மிகவும் பரவியது. அரேபியர்களும் துருக்கியர்களும் இப்பழக்கத்தை ஈரான் இடமிருந்து தழுவி, இந்தியாவிற்கு அவர்கள் வரும்பொழுது தங்களுடன் கொண்டு வந்தார்கள். அவர்களினால் வடஇந்தியாவில், இப்பழக்கம் மிகவும் பரவலானது. பெண்களுக்கு இதைக் கவனமாக கையாளும் முறை, வேதகாலத்திலேயே செயல்படுத்த அமைக்கப்பட்ட முறைகளின் விளைவைக் காட்டுகிறது. இடைக்காலத்தில், பர்தா முறை, சமுதாயத்தில் உயர்ந்த வகுப்பினரின் அடையாள சின்னமானது, தங்களை மதிக்கப்படவேண்டும் என்று கருதினவர்கள், அதை பின்பற்ற முயற்சித்தனர். இது தாழ்ந்த சாதிப் பெண்களிடையே சிறிதளவில் தான் காணப்பட்டது.

முகலாய ஆதிக்கத்தின் வீழ்ச்சி காலனி கட்டமைப்பின் விரிவாக்கத்துடன், இந்தியாவில் நவீன கருத்துகள், பல்வேறு திசைகளில், மாறுதல்களைச் செயல்படுத்தத் தொடங்கியது. நவீன கல்வியின் தாக்கத்தினால் சமூக சீர்திருத்தவாதிகள் குரு, சமுதாயத்தில் பெண்களின் நிலையை உயர்த்த சட்டம் இயற்ற செயல்பட்டார்கள். இராம் மோகன் ராய், ராதா கந்த தேப், பவானி சரண் பானர்ஜி ஆகியோரின் கடும் முயற்சியுடன், 1821இல் சதி ஒழிக்கப்பட்டது. 1895இல் பெண் சிசுவைக் கொல்லுதலை, கொலை செய்தல் என அறிக்கையிடப்பட்டது. சுதந்திர இந்தியாவில், இந்து திருமணச் சட்டம், 1955 மூலம் மாப்பிள்ளைக்கு வயது வரம்பு 18 என்றும், பெண்ணிற்கு 15 என்றும் வரையறுக்கப்பட்டது. 1856இல் ஈஷ்வர் சந்திரா வித்யாசாகரின் முயற்சியால், முதல் விதவைத் திருமணம் நடைபெற்றது. பண்டிட் விஷ்ணு சாஸ்திரி, விதவைத் திருமண அசோசியேசனை 1860இல் நிறுவினார். இவர்கள் எல்லாருடைய முயற்சியின் விளைவாக, பெண்களின் நிலை கணிசமாக உயர்ந்தது. அண்மையில் இந்தியாவின் உச்ச நீதி மன்றம், மேலும் தந்தையின் சொத்தில், மகளுக்குப் பங்கு உண்டு என அங்கீகரித்துள்ளது. எதிர் காலத்தில் பெண்களின் நிலை சமுதாயத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் விழிப்புணர்வுடன் சட்டங்களின் செயல்முறையுடன் முன்னேற்றம் அடையப்போகிறது.

### இப்பகுதிக்கான கேள்விகள் 19.3

1. அனுலோமா பிரதிலோமா திருமணங்களின் அடிப்படை எது?
2. மோனோகமஸ் திருமணம் என்றால் என்ன?
3. இந்தியாவில் மரபு வழி குடும்பத்தை ஆளுகினற புனித சட்டம் வழக்கத்தின் இருமரபுக் குழுவின் பெயரைக் கூறு?
4. பண்டைய இந்தியாவில் சொத்துரிமையைத் தவிர பெண்ணின் தனிப்பட்ட சொத்தை எவ்வாறு அழைக்கப்பட்டது?

## 19.9 இந்தியாவின் பழங்குடி இனத்தவர்கள்

மிகப் பழமையான இனக்குழுவின், நவீன சொல்தான் ‘குலம்’. துணைக்கண்டத்தில் குடியேறினவர்களிடையே மிகப் பழமையானவர்கள் பொதுவாக, பழங்குடி மக்கள் தொகையிடம் எதிர்பார்க்கக்கூடிய சில பண்புகளாவன.

1. பழங்குடியினர், மிக முந்தைய காலத்திலிருந்தே இந்த நிலத்தில் வேரூன்றியவர்களாவர்.
2. அவர்கள், மலைகள், காடுகளில் தனிமையான தொடர்புடன் வாழுகின்றனர்.
3. அவர்களின் சமூக, பொருளாதார, கல்வி சார்ந்த முன்னேற்றத்திற்கு, முக்கியத்துவம் கொடுக்கப் பட வேண்டியது அவசியமாயிற்று.
4. அவர்களின் பண்பாட்டின் அடிப்படைக் கூறுகள் (மொழி, நிறுவனங்கள், நம்பிக்கைகள் மற்றும் வழக்கங்கள்) அவர்களுடைய வாழும் பாணி ஆகியவை சமுதாயத்தில் மற்ற பிரிவினையைக் காட்டிலும் வேறுபட்டு இருந்தன.

பழங்குடியினர், நான்காவது உலகம் என்றழைக்கப்பட்ட தாய்நாட்டிற்குரியவராவர். இத்தகைய மக்கள், தொடகக் காலந்தொட்டு வாழ்கின்ற, நாட்டின் முன்வழியில் தோன்றின மரபு மக்கட் தொகையினர், இன்று, அவர்களின் சொந்த மாகாணத்தின் மீதுள்ள உரிமையை முழுமையாக அல்லது பாதியாக இழந்தனர். தாய்நாட்டுத் தோன்றலான இம்மக்கள் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் பண்பாட்டில் வேறுபாடுகள், சமயம், சமூக, பொருளாதார அமைப்புகளில் கொண்டிருந்தனர். அவர்களை இன்றும் வெளிஉலகம் சுரண்டிக் கொண்டு



தான் இருக்கிறது. அவர்களை, சிலரால், ஆன்மீக விழுமங்களின் இலட்சியப் பண்புருவம் எனவும், மற்றவர்களால் பொருளாதார முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக நியமனம் செய்யப்பட்டவர்கள் என கருதினார்கள். அவர்கள் தங்களுடைய குறிப்பிடத்தக்க பண்பாட்டினை வளர்த்தார்கள். அவர்கள் கடந்த காலனி ஆதிக்கத்தின் பலியாக்கப்பட்டவர்கள், சிலர் நலன்களைப் பெறுகிறர்கள், சிலர் தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்கள், மற்றவர்கள் வேறு தொழிலில் இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் வாழுகின்ற பூமி நிலத்துடன் நெருக்கமான வாழும் உறவை பராமரித்தார்கள், கூட்டுறவு மனப்பான்மையான கொடு எடு போன்ற கொள்கை ஆதரிக்கின்ற பூமியின் மீது மரியாதையை கொண்டிருந்தார்கள்.

இந்தியாவில், உண்மையான குடியேற்றங்களான பழங்குடியினரை ஆதிவாசிகள் என அழைக்கப்பட்டனர். பண்டைய இடைக்கால இந்திய இலக்கியங்கள் ஏராளமான பழங்குடியினர்கள், இந்தியாவில் வாழ்கிறார்கள் என குறிப்பிடுகிறது. பிராமண காலத்தில், சாதிமுறை அறிமுகமாவதற்கு முன்பே, மக்கள் பல்வேறு பழங்குடிகளாக பிரிந்திருந்தனர்.

இந்திய அரசு, 427 இனக்குழுக்களை குறிப்பிட்டுள்ளது, அவற்றை தாழ்த்தப்பட்ட பழங்குடியினரில் உள்ளடக்கியுள்ளது. அவர்கள் தனிப்பட்ட பாதுகாப்பு சிறப்பு உரிமைகளை இந்திய அரசியலமைப்பின் கீழ் பெறுவதற்கு உரிமை பெறுகிறார்கள்.

மூன்று பழங்குடி வகுப்பினரான கோன்ஸ்சுகள், பில்ஸ்கள் சாந்தல்கள் ஆகியோர் எண்ணிக்கையில், ஒவ்வொரு பிரிவினரும் 30 லட்சத்திற்கு மேல் மக்கட் தொகையைக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு அடுத்த படியாக, மினாஸ்கள், முன்டாஸ்கள், லூர்கோள்கள் என்ற பழங்குடி பிரிவினர் ஒவ்வொரு பிரிவினரும் 5 லட்சத்திற்கு மேல் மக்கட் தொகையைக் கொண்டிருக்கிறார்கள் பிறகு ஒவ்வொரு பழங்குடியினரும் ஒன்று முதல் 5 லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட 42 பழங்குடி வகுப்பினர் இருக்கின்றனர்.

இந்தியாவின் பழங்குடி மக்கள், 2001 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி, எண்ணிக்கையில் 8.43 கோடி, நாட்டின் மக்கள் தொகையில் 8.2 ᵛ கொண்ட பழங்குடி மக்கள் இந்திய அரசியலமைப்பில், பின் தங்கிய பழங்குடியினர் என்ற வரிசையின் கீழ் உள்ளனர்.

பழங்குடி மக்கள் தொகையை பகிர்ந்தளித்தல் வெவ்வேறு வகை சூழலை நோக்கும் கருத்திலிருந்து இந்தியாவை ஏழு மண்டலங்களாகப் பிரிக்கலாம்.

### 1. வடக்கு மண்டலம்

இந்த மண்டலம், இமாசலப் பிரதேசம், பஞ்சாப், துணை ஹிமாலயன் உத்திர பிரதேசம் பீஹாரை அடங்கியுள்ளது. இங்கு காசா, தரூ, போக்சா, போட்டியாக்கள், குஜார்கள் ஜெனன்சாரிகள் போன்ற குறிப்பிடத்தக்க பழங்குடி வகுப்பினர் உள்ளனர். காசாக்கள், பழங்குடியினர், ஒரு கணவன் பல பெண்களை திருமணம் செய்து கொள்ளக் கூடிய இனமாகும். போட்டியாக்கள் ஜமக்காளம் செய்பவர்கள் இந்தோ-சீனா எல்லையில் வணிகத்தில் ஈடுபாடு கொண்டவர்கள். குஜார்கள், நாட்டுப்புற இனப்பிரிவைச் சார்ந்தவர்கள். இந்த இனக்குழுவின் முதன்மையான பிரச்சனைகள், அணுகின்மை, தகவல் தொடர்பின்மை, ஏழ்மை, ஏழுத்தறிவின்மை நில உரிமையின்மை ஆகும்.

### 2. வட - கிழக்கு மண்டலம்

இந்த மண்டலம் ஏழு வடகிழக்கு மாநிலங்களை உள்ளடக்கியுள்ளது நாகர்கள், காசினரோ, மிஷிங், மிரி, கர்பி சுபடௌசி ஆகியவை முக்கியமான பழங்குடி இனக்குழுக்கள் இங்கு உள்ளன. இடம் மாறி வேளாண்மை செய்வதால் சுற்றுப்புற சூழல் சீரழித்தல், தொடர்பு சாதன வசதியின்மையால் அணுகின்மை ஆகிய இரண்டு முதன்மையான பிரச்சனைகள்

இப்பழங்குடியினருக்கு உள்ளன. தனித்திருப்பதால், இந்திய முக்கியமான போக்குகளுடன் உண்மையாகவே பங்கு பெற முடிவதில்லை தங்களுடைய வரலாற்றை அண்டை இனத்தவர்களுடன் பங்கு கொள்ள முடிகிறது. இது இந்த பழங்குடியினருக்கும், இந்திய முக்கியமான போக்குகளுக்கும் ஏன், முரண்பாடான கூறுகள் உள்ளன என்பதை விவரிக்கிறது.

### 3. மைய மண்டலம்

மைய மண்டலம், பழங்குடி மக்கள் தொகையின் மீது பெரும் பகுதியான கவனத்தை கொண்டுள்ளது. இது, வட ஒரிசாவை கடந்து, தெற்கு மத்திய பிரதேசத்திலிருந்து, தெற்கு பீகார் வரை பரவியிருக்கிறது. சாந்தல்கள், ஹோ, பைகா, அபுஜனாரியா, முரியா, முண்டா பிர்ஹோர் ஆகிய முக்கிய பழங்குடியினர் இங்கு உள்ளனர். நில உரிமையின்மை கடன்பட்ட நிலை ஆகிய இரு முக்கிய பிரச்சனைகள் இந்த பழங்குடியினரால் எதிர் கொள்ள வேண்டியுள்ளது. இந்த பழங்குடியினரிடையே, சாந்தல்கள், ஒலி சிக்கி என அழைக்கப்பட்ட அவர்களுடைய சொந்த எழுத்துக்களைக் கண்டுபிடித்தார்கள். பைகாக்கள், இடமாற்றுப் பயிரிடுவதில் குறிப்பிடத்தக்க பழங்குடியின ராவர். பிகோர்கள், இந்த வட்டாரத்தின் மிகவும் பின்தங்கிய பழங்குடியினர் மிகவும் பின்தங்கிய நிலை, வாழ்க்கைக்கு எந்தவித பாதுகாப்பும் இல்லாதது, அவர்கள் முழு அழிவிற்காக அச்சுறுத்தப் பட்டார்கள்.

### 4. தெற்கு மண்டலம்

இந்த மண்டலம், ஆந்திரப் பிரதேசம் கர்நாடகாவின், மலை வட்டாரங்களை ஒட்டியுள்ள நீலகிரி தெற்கு மண்டலம் முழுவதையும் உள்ளடக்கியுள்ளது. இது மிகச்சிறியதாக, மிகவும் உள்ளடக்கியுள்ளது. இது, மிகச்சிறியதாக மிகவும் பின்தங்கியுள்ள, பழங்குடி வகுப்பினரின் முதன்மைப் பகுதியிடமிருந்து தனிமைப் படுத்தப் பட்டுள்ளதாகும். சூதாடா, கோயா, சென் அல்லார்கள் இந்த வட்டாரத்தின் பழங்குடியினராவர். எருமைகளை மேய்ப்பவர்களான, தோடர்கள் நாட்டுபுற மக்களாவர். அல்லார்கள் குகை வாழ் மக்கள், அவர்களும் மரத்தின் உச்சியில் வாழ்ந்தனர். சென் கூக்கள் மிகவும் பின் தங்கிய பழங்குடியினர் வேட்டையாடுதலை முதன்மையாகக் கொண்டு வாழ்கின்றனர். இடமாற்ற உழவுத் தொழில், பொருளாதார பின்தங்கிய நிலை, தனிமைப் படுத்துதல், பிறருடன் தொடர்பின்மை, அச்சம், ஆகியவை இத்தகைய பழங்குடியினரின் முதன்மையான பிரச்சனைகளாகும்.

### 5. கிழக்கு மண்டலம்

மேற்கு வங்காளத்தையும் ஒரிசாவையும் உள்ளடக்கிய கிழக்கு மண்டலத்தில், பரஜா, கோந்தர்கள், போண்டாக்கள், பூமியா, கடபாக்கள், பூயிக்யாக்கள் ஸ்கோராக்கள் ஆகிய பழங்குடியினர் உள்ளனர். பின்தங்கிய பொருளாதாரம், காட்டு அதிகாரிகள் ஒப்பந்ததாரர்களின் சுரண்டல், நில உரிமையின்மை, பரவலாகக் காணப்படுகிற நோய்கள் தொழிற்சாலை செயல் திட்டங்களுக்காக இடம் மாற்றப்படுதல் ஆகியவை இந்த மண்டலத்தின் முதன்மையான பிரச்சனைகளாகும்.

### 6. மேற்கத்திய மண்டலம்

ராஜஸ்தான், குஜராத் ஆகியன மேற்கு மண்டலத்தில் அடங்கியுள்ளன. பில்ஸ், கராசியா மீனாக்கள் இந்தப் பகுதியில் காணப்படுகின்ற பழங்குடியினராவர். மீனாக்கள், மிகவும் வளர்ச்சியுற்ற, நன்கு படித்த பழங்குடியினராவர்.

## 7. தீவு மண்டலம்

அந்தமான் நிக்கோபர்தீவுகள், லட்சத்தீவு டாமன் டையூ இந்த தீரவு மண்டலத்தல் அடங்கும். கிரேட் அந்தமானியர்கள், சான்டினிலிகள் ஷாம்பன்கள் இந்த மண்டலத்தின் பழங்குடி மரபினராவர். இவற்றில் சில பழங்குடியினர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பவர்கள், கற்கால வாழ்கை பாணியிலிருந்து விடுபட போராடிக் கொண்டிருப்பவர்கள். இந்த பழங்குடியினரின் பெரும்பாலானவைகள் அழிவின் அச்சுறுத்தலை எதிர் நோக்கியுள்ளவைகளை மைனர் பழங்குடியினர் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. வாழ்வதற்கான பிரச்சனைகளைத் தவிர பரவலாகக் காணப்படுகின்ற நோய்கள் சத்துணவு பற்றாக்குறை ஆகியவை இந்த மண்டலத்தின் மற்ற பிரச்சனைகளாகும்.

பழங்குடியினருக்கு பாதுகாப்பளித்தல் அவர்களுடைய பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவது போன்றவை அரசின் அடிப்படை செயல்திற அணுகுமுறை, பழங்குடி மண்டலத்தின் முன்னேற்றத்தின் குறிக்கோளாக இருந்தது. 5ஆவது, 5 ஆண்டு திட்ட காலத்தில் பழங்குடி துணை திட்ட அணுகுமுறை தொடங்கப்பட்டது. இது, சுருக்கமான நன்கு வடிவமைக்கப்பட்ட ஒருங்கமைக்கப்பட்ட நிகழ்வாகும். பழங்குடியினரை சுரண்டலில் இருந்து விடுதலை, சமூக பொருளாதாரத்தை மேம்படுத்துவது, வளர்ச்சியுற்ற பகுதிகளை வளர்ச்சியில்லாத பகுதிகளுடன் இணைப்பது வாழ்ககைத் தரத்தை உயர்த்துவது, ஆகியவை இதனுடைய நோக்கங்களாகும்.

### இப்பகுதிக்கான கேள்விகள் 19.4

1. பழங்குடி மக்கள் தொகையின் பண்புக் கூறுகள் இரண்டினை அறிக்கையிடு?
2. தாய்நாட்டிற்குரிய மக்கள் என்பவர் யார்?
3. இந்தியாவில், பழங்குடியினர் என்ற சொல்லுக்கு என்ன சொல் பயன்படுத்தப் படுகிறது?
4. இந்தியாவில், எத்தனை இனக்குழுவினருக்கு பழங்குடி இனத்தவர் என்ற அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளது?
5. இந்தியாவில் எத்தனை சதவிதம் பழங்குடி மக்கள் இருக்கிறார்கள்?
6. இந்தியாவல் பழங்குடி மக்கட் தொகையின் கூறுகள் யாவை?
7. பின்தங்கிய பழங்குடியினரின் அடையாளங்களான இரண்டு அளவுறுக்கள் யாவை?
8. வட இந்தியாவில் குறிப்பிடத்தக்க பழங்குடியினர் யார்?
9. கிழக்கு மண்டலத்தில், பழங்குடியினரின் முக்கியமான பிரச்சனைகள் யாவை?
10. குறைவான மக்கட் தொகையைக் கொண்ட பழங்குடியினர் சிலவற்றின் பெயரைக் கூறுக?
11. எப்பொழுது, பழங்குடியின் துணை உத்தி தொடங்கப்பட்டது?
12. பழங்குடி துணை திட்டம் என்பது என்ன? அதன் நோக்கங்கள் யாவை?

### நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- இந்தியா, வட்டாரம், மொழி, சமயம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு அடையாளங்களைக் கொண்ட நாடு, ஒவ்வொன்றும், ஏறத்தாழ குறிப்பிடத் தக்க சமூக கட்டமைப்புகளை, காலங்காலமாக பரிணமித்துக் கொண்டிருக்கிறது.
- பழங்குடியினர், முந்தைய சமூக அமைப்புகள், வேதகாலத்திற்கு அடையாளம் காட்டுகிறது.



குறிப்புகள்

- தொடக்கத்தில் வேறுபாடுகள், தோலின் நிறத்தைப் பொறுத்து இருந்தது. பிறகு வர்ணா முறையாக வளர்ச்சியடைந்து, பிராமணம், சத்ரியா, வைஷ்யா, சூத்திரா வகைகளாகப் பிரிக்கப்பட்டது.
- பிந்தைய வேதகால சமூதாயங்களில் புத்த மதம், சமண சமயத்தின் எழுச்சியுடன்; இந்தியாவின் புதிய மக்களான சாகர்கள், குஷாணர்கள், பார்த்தியர்கள் இந்தோ - கிரேக்கர் வருகையுடன், வர்ணா , ஜாதி முறை மேலும் பல மாறுதல்கள்களுக்கு உள்ளானது.
- கி.பி. 8ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு, வட்டாரங்களின் உருவாக்கம் வட்டார உணர்வுகளினால், சாதி முறை வட்டார வேறுபாடுகளைக் கொண்டது. ஏராளமான காரணிகளால், இது மேலும் மேலும் மிகவும் சிக்கலானது, ஏராளமான சாதிகள் துணை சாதிகள் பெருகின.
- வேத காலத்தின், இறுதிக்கட்டத்தில் வேரூன்றப்பட்ட, தீண்டாமை, மிகவும் வெறுப் பூட்டுகிற பழக்கமாகும் புத்தருடைய காலத்தில், தனிப்பட்ட அடையாளமாக தெள்ளத் தெளிவானது.
- அடிமைத்தனம், கிரேக்க ரோமானிய அடிமைத்தனத்திலிருந்து வேறு பட்டிருந்தாலும், இந்தியாவிலும் காணப்பட்டது.
- புருஷார்தா, ஆஷ்ரமாக்கள், சமஸ்கராக்கள், ஒன்றோடொன்று இணைந்த கோட்பாடுகளாகும்.
- ஜஜ்மனி முறையானது, குறிப்பிடதக்க உழவர்கள் சாதிகள் ஒரு பக்கமும், பணி மற்றும் கைவினைஞர் சாதிகள் ஒரு பக்கமும் கொண்ட இருவருக்கும் இடையே உள்ள உறவுமுறை, இவை இந்திய கிராமிய சமுதாயத்தில், நவீன காலம் வரை தொடர்ந்து இருந்தது. ஆனால் இப்பொழுது, பணமயமாதல், தொழிற்சாலை களாக்குதலின் தாக்கத்தின் கீழ் சிதறுண்டுவிட்டன.
- திருமணம் என அழைக்கப்பட்ட 'சமஸ்காரா' சடங்குகளின் விளைவே குடும்பமாகும். 'அனுலோமா' பிரதிலோமா போன்ற பல்வேறு வகையான திருமணங்களை அடிப்படையாகக் கொண்டு, வர்ணா,சாதியினிடையே கொண்ட திருமண உடன்படிக்கைகள், ஒரு ஆண், ஒரு பெண் திருமணம், ஒரு ஆண் பல பெண்களுடன் திருமணம் ஒரு பெண் பல ஆண்களுடன் திருமணம், ஆண்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டது. இவை எல்லாவற்றையும் இந்திய சமுதாயத்தில் காணக்கூடும்.
- இந்திய மரபு குடும்பம் ஒரு கூட்டுக் குடும்பம், 'மிட்டாக்ஷரா' 'தயாபாக்யா' என்ற இரண்டு மரபுக் குழுவினால் புனித சட்டம் வழக்கத்தினால் ஆனப்பட்டது.
- இந்திய வரலாற்றில், பெண்களின் நிலை, நவீன காலம் வரை, வளர்ச்சியின் வீழ்ச்சி கதையாக இருந்தது, மேற்கத்திய கல்வியின் பரவுதலுடன், சமூக, சமய சீர்திருத்தங்கள் மூலம் அவர்களது நிலையை முன்னேற்ற கடும் முயற்சி எடுக்கப்பட்டது.

## பயிற்சிக்கான கேள்விகள்

1. இந்தியாவின் பலவகை அடையாளங்களின் தொடக்கத்தை விவரி.
2. வர்ணா முறையையும் ஜஜ்மனி முறையையும் வேறுபடுத்துக.
3. இந்தியாவில் சாதி முறையின் பண்புகளைப் பற்றி விவரி.
4. புருஷார்தா, ஆஷ்ரமா சன்ஸ்கரா எவ்வாறு ஒன்றோடொன்று தொடர்பு கொண்டுள்ளன.

5. இந்திய சமுதாயத்தில் காணப்பட்ட பல்வேறு வகை திருமணங்களைப் பற்றி அறிக்கை கொடு.
6. இந்திய சமுதாய வரலாற்றில் பெண்களின் நிலையைப் பற்றி ஆராய்க.
7. ஜஜ்மனி முறை என்பது என்ன? ஏன் இது அண்மையில் சிதறுண்டது?

## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 19.1

1. பழங்குடி
2. பரதவர்கள், யாடுஸ், புருஸ் முதலிய (ஏதாவது இரண்டு)
3. இருமுறை பிறத்தல்
4. சாகர்கள், குஷாணர்கள், பார்தியனர்கள், இந்தோ-கிரேக்கர்கள் முதலிய
5. இடைக்காலங்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 19.2

1. தீண்டாமையினர்
2. ஹரிஜன்
3. மெகஸ்தனிஸ்
4. அர்த்த சாஸ்திரம்
5. ஆஷ்ரமங்கள்
6. நகரமயமாதல் மற்றும் தொழிற்சாலை மயமாதல்

### கேள்விகளுக்கான பதில்கள் 19.3

1. அவைகள், பல்வேறு வர்ணா, சாதிகளை அடிப்படையாகக் கொண்ட உடன்படிக்கை.
2. ஒரு நபர், ஒரே சமயத்தில் ஒருவரை திருமணம் செய்வது.
3. மிட்டாக்ஷ்ரா, தயாபாக்யா.
4. ஸ்ரீதனா.

### கேள்விகளுக்கான பதில்கள் 19.4

1. (அ) முந்தைய வேத காலத்திலிருந்தே, பழங்குடியினர் இந்த மண்ணில் வேரூன்றினர்.
   (ஆ) அவர்கள், மலைகள், காடுகளினின்று தனித்து வாழ்கின்றனர்.
2. பழங்குடியினர்
3. ஆதிவாசிகள்
4. 427 இனங்கள்
5. 8.2%
6. அவை இந்திய மக்களின் அரசியல் நிர்வாக முன்னேற்றத்தை கருதினது. மலைகள், காடுகளின் ஓரமாக இருந்த மக்களின் வளர்ச்சியை முதன்மையாக கருதப்பட்டது.
7. தனிமையுடன் கூடிய பின் தங்கிய நிலை.
8. காசா, தரு, போகாஸ், குஜார்ஸ் ஜான்சரீஸ்
9. தொழிற்சாலை செயல்முறையால் பொருளாதார பின்தங்கிய நிலை, காட்டு அதிகாரிகளாலும் ஒப்பந்ததாரர்களினாலும் சுரண்டப்படல், நில உரிமையின்மை, பரவலாகக் காணப்படுகிற நோய்கள் தொழிற்சாலை திட்ட செயல்களினால்.
10. சிறந்த அந்தமானியர், ஜார்வாஸ், நிக்கோபார்கள் ஷாம்பர்.
11. 5ம், 5 ஆண்டுத் திட்ட காலத்தில்.
12. இது, வெகுவாக சுருக்கமானது, நன்கு பின்னப்பட்டது ஒருங்கமைக்கப்பட்ட நிகழ்வு பழங்குடியினரை சுரண்டலிலிருந்து விடுவித்தல், சமூக பொருளாதார முன்னேற்றம் மற்ற பகுதிகளை, முன்னேறிய பகுதிகளுடன் இணைப்பது நல்லதரமான வாழ்க்கையை முன்னேற்றுவது ஆகியவை இதன் நோக்கங்களாகும்.

# 20

# சம காலத்திய இந்தியாவின் சமூக, பண்பாட்டு பிரச்சனைகள்

முந்தின பாடத்தில் நீங்கள் இந்தியாவின் சமூக கட்டமைப்பு பற்றி படித்துள்ளீர்கள். பழங்குடி, கிராமிய நகர சமுதாயத்தில் ஜாதி வகுப்பு என்ற பெயரில் பிரிவினைகள் குடும்பம், திருமணம் இந்திய சமுதாயத்தில் பெண்களின் நிலை பற்றி படித்தீர்கள். இந்திய சமுதாயம், காலங் காலமாக வளர்ச்சியடைந்து வெவ்வேறு துறைகளில் முன்னேற்றம் அடைந்து உள்ளது. இந்திய சமுதாயத்தின் சமூக சீர்த்திருத்தங்களைப் பற்றியும் நீங்கள் படித்துள்ளீர்கள். இருந்தாலும் ஒவ்வொரு சமுதாயத்திலும் சமூக பண்பாட்டு பிரச்சனைகளை அறிந்து, சமாளிக்க வேண்டும். குறிப்பாக பெண்கள், குழந்தைகள், வயது முதிர்ந்தோர் போன்ற வலிமை குறைந்த மக்களின் பாதுகாப்பில் முக்கிய அக்கறையாக சமகாலத்திய இந்திய சமுதாயத்தில் இருந்து வந்தது. நமது சமூக, பண்பாடு விழுமங்களை பாதுகாக்கப்பட வேண்டும் என்றால், இந்த பாடத்தில் நாம் நமது உடனடி கவனம் தேவைப்படுகின்ற முக்கிய சமூக மற்றும் பண்பாட்டு பிரச்சனைகளைப் பற்றி படிப்போம். இந்நாளில் சில முக்கியமான முன்னிலைப் படுத்தவேண்டிய சமூக பண்பாட்டு பிரச்சனைகள், வரதட்சனை, வகுப்பு பிரிவினை குடிப்பழக்கம், போதை மருத்துக்கு அடிமை முதலியனவாகும். இங்கு விவாதிக்கக் கூடிய பிரச்சனைகள் அவ்வளவு பெரும்பான்மை யானதல்ல. நாட்டினால் எதிர் கொள்ளப்பட்ட பொதுவான பல பிரச்சனைகள் குறிப்பாக வட்டார, சமுதாயக் குழுக்களிடையே உள்ள பிரச்சனைகளை பற்றி நாம் எல்லோரும் நினைக்கவேண்டும். இத்தகைய பிரச்சனைகளை உங்களால் பட்டியலிட முடியுமா?

## நோக்கங்கள்

இந்தப் பாடத்தைப் படித்த பிறகு உங்களால்

- சம காலத்திய இந்திய சமுதாயத்தின் முக்கிய பிரச்சனைகள், சிக்கல்களை பட்டியிலிட
- ஜாதிமுறை, வரதட்சணை, திட, திரவப் பொருட்களை துஷ்பிரயோகம் செய்தல் போன்ற பிரச்சனைகளை விவாதிக்க
- வலிமையுற்ற குழுக்களான குழந்தைகள், பெண்கள் முதியவர்களின் தொடர்பான பிரச்சனைகளை ஆராயவும்
- வறுமை வேலையின்மை போன்ற பொருளாதார பிரச்சனைகள் பற்றி விவாதிக்கவும் முடியும்.

## 20.1 சாதி முறை

ஏற்கனவே நீங்கள் நான்கு சாதிகளைப் பற்றி முந்தைய பாடத்தில் படித்துள்ளீர்கள். உங்களால் "ஞாபகப்படுத்த முடியுமா? இங்கு அவற்றை எழுதுக.

1. ____________ 2. ____________

3. ____________ 4. ____________

பண்டைய இந்தியாவிலிருந்தே சாதி முறை வேரூன்றி இருந்தது. உலகின் தனிமனிதர்கள் வாழ்க்கையின் குறிப்புப்படி ஆஷ்ரமாதர்மா நியதிகள், கடமைகளை ஒரு தனிநபர் எந்த சாதியைச் சார்ந்தவரோ அதன் குறிப்புப்படி, வர்ணா அல்லது சாதி முறையின் கடமைகள் குறிப்பிடப்பட்டன. முன்பு அவர்கள் சமுதாய அந்தஸ்தில் எல்லோருமே சமமாகக் கருதப்பட்டவர்கள் அவர்கள் விரும்பிய எந்த தொழிலையும் எடுத்துக்கொள்ளக் கூடியதாக இருந்தது. உணவு உண்ணுதல் அல்லது மற்ற தொழில் செய்பவர்களுடன் திருமணம் செய்தல் ஆகியவற்றைப் பொருத்து அங்கு எந்த வித தடையும் இல்லை. ஆனால் பரம்பரைத் தொழிலில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கியது, சொந்த மண்ணில் பிறந்த மக்களின் தொடர்பு சூழ்நிலையை மாற்றினது, மனிதனின் பிறப்பு அவர்களுடைய சாதியைத் தீர்மானித்தது. இதனால் இக்காலத்தில் வர்ணாமுறை வளர்ச்சியடைந்தது. சமூக, பொருளாதார வளர்ச்சியின் விளைவாகும். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல இது சமுதாயத்தில் உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி மக்கள் என பிரிவினையை வகுத்தது. ஒருவரோடு ஒருவர் சேரவில்லை. சமபந்தி அல்லது திருமணம் தடை செய்யப்பட்டது. கீழ் சாதியைச் சார்ந்த மக்கள் என்று சொல்லப்பட்டவர்களை சுரண்டினா. மேலும் நாட்கள் போகப் போக அவர்களுடைய நிலைமை மிகவும் மோசமாகியது. அவர்கள் ஏழ்மையான மக்கள் சமுதாயத்தில் அவர்கள் சமத்துவத்தை உணர்ந்ததில்லை. அவர்களுக்கு பொது கிணறுகளில் தண்ணீர் எடுக்க அனுமதிக்கப்படவில்லை அல்லது அங்குள்ள கோவிலுக்குள் நுழையவோ அல்லது மேல் சாதி மக்கள் என்று சொல்லப்பட்டவர்களுடன் நெருங்கிப் பழகவோ அனுமதிக்கப்படவில்லை. இவ்வாறாக சாதிமுறை, வெவ்வேறு வகை தொழில்களை இடையூறுகளுக்குள்ளாக்கி, பிறப்பின் அடிப்படையில், திறமை அடிப்படையில்லாமல் ஒரு குறிப்பிட்ட தொழிலாக மாறியது.

சில சமயம், சாதி அடிப்படையிலான பாரபட்சம் வன்முறைக்கு அடி கோலுகிறது. சாதி முறை நம் நாட்டின் ஜனநாயக பணியையும் கடினமாக்குகிறது. சமுதாயம், செயற்கை குழுக்களாகப் பிளவுபட்டு அது தங்களுடைய சாதியைச் சார்ந்த வரை ஆதரிக்க மனம் விரும்புகிறது. அதாவது அவன் , அவள் தகுதியான வேட்பாளரா, இல்லையா என்று அவர்கள் உண்மைக்கு அதிக கவனம் செலுத்துவதில்லை. இது இந்தியாவின் ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு நல்லதல்ல. இந்த முறையை வேரோடு முழுவதுமாக அழித்தால் ஒழிய, நமது நாடு உண்மையான வளர்ச்சியடைய முடியாது.

சுதந்திரத்திற்குப் பின், அதாவது 1947 ஆம் ஆண்டிற்கு பிறகு, தெரிந்த நிலையிலுள்ள இத்தகைய பிரச்சனைகளை அரசாங்கம், சட்டமியற்றுதல் மூலமாக (பிரச்சனைகளின் பாதிப்பை தடுப்பதற்கு சட்டமியற்றுதல்) கூடவே, சமூக செய்கைகள் மூலமாகவும் (மக்கள் சமுதாயம் அரசாங்கத்திற்கு அப்பாற்பட்ட நிறுவனங்கள்) சமூக குழுக்கள் மூலமாகவும், சமாளித்தது. இத்தகைய நடவடிக்கைகள், சூழ்நிலைக்கு உதவியாக இருந்தது. ஆனால் இன்னும் நிறைய செய்து முடிக்க வேண்டியுள்ளது.

உன்னுடைய இனமில்லாமல் வேரொரு இனத்தைச் சார்ந்தவரின் வீட்டிற்கு சென்று பார்வையிடு. அவர்களுடைய வாழும் வகை உணவு உண்ணும் பழக்கங்களில் எதாவது மாற்றங்களைக் கண்டாயா? ஒற்றுமைகள் வேற்றுமைகளை முன் வைத்து ஒரு சிறிய கட்டுரை எழுதுக.

## 20.2 பெண்கள் தொடர்பான பிரச்சனைகள்

நமது அரசியலமைப்பு ஆண்கள், பெண்கள் இருவருக்கும், எல்லா துறைகளிலும் சமமான உரிமைகளைக் கொடுக்கிறது. இன்று பெண்கள் ஓட்டுரிமை, பரம்பரை சொத்துகளை அனுபவிக்கிற உரிமையைக் கொண்டிருக்கிறார்கள். உண்மையாகவே, அரசாங்கம் சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்று அரசியலமைப்பில் எழுதப்பட்டுள்ளது. சுதந்திரம் கிடைத்தலிருந்து பெண்களின் தேவைகள் நிறைவேற பல்வேறு சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இத்தகைய சட்டங்கள் திருமணம், பாரம்பரிய சொத்துக்களை அடைதல், விவாகரத்து, வரதட்சணை முதலியவற்றிக்கு தொடர்பாக உள்ளன. ஆண், பெண் இருவருக்கும் ஒரே மாதிரியான வேலைக்கு சம ஊதியம் கொடுப்பதற்காக 1976இல் சம ஊதியச் சட்டம் இயற்றப்பட்டது.

சமீப காலமாக, அரசாங்கம் பெண் குழந்தையின் பாதுகாப்பிற்காக ஒரு திட்டத்தை தொடங்கி உள்ளது. ‘லட்லி’ என்றழைக்கப்படுகிற திட்டத்தில், பெண் குழந்தை பிறந்த சமயத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையை அந்த பெண் குழந்தையின் பேரில் செலுத்துதல் இதை, அந்த குழந்தை 18 வயதை முடிந்தவுடன் அவளுக்கு கிடைக்கிறது. இந்தத் தொகையானது, அவளின் படிப்பு அல்லது திருமணத்திற்காக பயன்படுத்தப்படுகிறது. இதே போன்று ‘ஜாச்சா பாச்சா திட்டம்’ என்று அழைக்கப்படுகிற மற்றொரு திட்டமும் உண்டு. இந்த திட்டத்தின் கீழ் குழந்தையின் பிறப்பு மருத்துவ உதவிகள் தொடர்பான செலவுகளை குழந்தை வளர்ப்புக்காக மாநில அரசுகள் ஏற்றுக் கொள்கிறது. இருப்பினும், இத்தகைய சாசன சட்டங்கள் இருந்த போதிலும் நாம் பெண்களுக்கு எதிரான நிறைய பாரபட்சங்களை காண்கிறோம்.

### 20.2.1 பாலின வேற்றுமைகள்

இந்தியாவில் பெண்களை சுகாதாரம், கல்வி, வேலை வாய்ப்புகள் போன்ற பல்வேறு துறைகளில் வேற்றுமை படுத்துகிறார்கள். பெண்கள் வரதட்சணை என்ற இடர்ப்பாடான பொறுப்பை தங்களது தலையில் சுமக்கிறார்கள், திருமணத்திற்குப்பின் அவர்கள் தங்களது பெற்றோரின் வீட்டை விட்டு செல்ல வேண்டியுள்ளது. இது தவிர அவர்களது முதுமைக் காலத்தைப் பாதுகாக்க பெற்றோர் ஆண் சந்ததியை பெறுவதற்கு முன்னுரிமை கொடுக்கின்றனர். மேலும் அவர்கள் பெண்கள் என்பதினால் பல பெண் குழந்தைகளை கருக்கலைப்பு செய்கிறார்கள், கைவிடப்படுகிறார்கள் வேண்டுமென்றே ஒதுக்கப்படுகிறார்கள், உணவு கொடுப்பதில்லை. ராஜஸ்தான் மாநிலத்தில் இது மிகவும் இழிந்த நிலையில் உள்ளது. ஆனால் இப்பொழுது இந்தப் போக்கில் நிறைய மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஹரியானா போன்ற சில மாநிலங்களில் பெண் குழந்தைகளின் விகிதம் மிகக் குறைந்த அளவில் உள்ளது. அரசாங்கம் பல திட்டங்களை பெண் கல்வியின் வளர்ச்சிக்காக எடுத்து உள்ளது. இவற்றை தவிர வேலையில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு, ஆறு மாத பிரசவ விடுப்பும் கூட அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

உலக வங்கி ஆவணமான “பெண்களின் சுகாதாரம், ஊட்டச் சத்திற்கான ஒரு புதிய பட்டியல் (வாஷிங்டன் 1995) வளர்ந்த நாடுகளில் பெண்கள் தங்களுடைய குழந்தைப் பருவத்தில் புரோட்டீன் குறைபாட்டினால் 450 மில்லியன் வயது வந்த பெண்களின் வளர்ச்சியில் பிரச்சனைகள் உள்ளது என கணக்கிடுகிறது. பல வகுப்புகளில் ஆண்கள் இளைஞர்களை ஒப்பிடும் பொழுது பெண்கள் மற்றும் மகளிர் குறைவான உணவை பெறுகிறார்கள். அவர்கள் நோயுற்ற வேளையில் குறைந்த அளவு கவனிப்பு அல்லது நோய் மிகவும் ஆபத்தாகும் பொழுது சில கவனிப்புகளைப் பெறுகிறார்கள். ஆண் மற்றும் பெண்ணின் ஆரோக்கிய நிலையில் வேறுபாடுகள் உள்ளன. மருத்துவச் சேவைகளைப் பயன்படுத்துவதற்கு உலக அளவில் ஏராளமான சான்றுகள் உள்ளன.

பெரும்பாலான நாடுகளில் ஆண்களைவ விட பெண்களின் எழுத்தறிவு விகிதம் குறைவாக உள்ளது. 66 நாடுகளில் ஆண், பெண்களின் எழுத்தறிவு விகித இடைவெளி பத்து சதவீதத்தை விட அதிகம் என்றும் 40 நாடுகளில் இது 6 லிருந்து 11 வயது வரையுள்ள தொடக்க நிலைக்கல்விக்கு தொடர்பான வயதுக்குழு 20ஈ என்றும், கணக்கிடப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி, எழுத்தறிவு விகிதம் அங்கு ஆண், பெண் இடையே 16.7 சதம் அதாவது ஆணின் எழுத்தறிவு விகிதம் 82.14 சதவீதம், பெண்ணின் எழுத்தறிவு விகிதம் 65.46 சதவீதமாக உள்ளது. சுமாராக உலக அளவில் 16.4 சதவீதம் (60 மில்லியன்) பையன்களுக்கு ஒப்பிடும் பொழுது 24.5 சதவீதம் (85 மில்லியன்) பெண்கள் பள்ளியில் பயிலாமல் வெளியில் இருக்கிறார்கள் என கணக்கிடப்படுகிறது.

முந்தைய காலத்திலிருந்தே பெண்களை உயர்வாக மதித்தாலும், பெரும்பாலான இந்தியக் குடும்பங்களில், பெண் குழந்தைகளை மிக மிகக் குறைவாக விரும்புகிறார்கள். பெண்கள் கல்வியில் மரபில் பழக்க வழக்கங்கள், சமூக செயல்கள் ஆகியவற்றில் சிறப்புற்று விளங்குவதின் எடுத்துக்காட்டுகள் அதிகமாகிக் கொண்டே போனாலும் சிறப்பான மதிப்பை மகன்கள் மீது வைத்து, மகள்களை ஒரு பொருளாதார பளுவாக காண்கிறார்கள். சமுதாயத்தின் மனப்பான்மையும் பெண் குழந்தை தனது உள்ளார்ந்த ஆற்றலை சாதனையாக்குவதற்கு தடையாக உள்ளது. பெண்கள் உலகத்தின் மிகவும் தேவையற்ற வெகுமதி அவர்கள் உள்ளார்ந்த ஆற்றலுடன் கூடிய விலை மிக்க மனித இனம், ஆனால் உலகின் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் வரை பொதுவாக அவர்களது அடிப்படைத் தேவைகளை அடைவதில் கடைசியாகவும் அடிப்படை உரிமைகளை மறுக்கப்பட்ட வர்களில் முதலாவதாக இருக்கிறார்கள்.

உணவு, உடை, உறையுள், உடல் நல அக்கறை, கல்வி, விளையாடுவதற்கு நேரம் ஆகிய பெண்களின் தேவைகள் அடிக்கடி நிவர்த்தி செய்ய முடியவில்லை. அவர்களுடைய உரிமைகளை பாதுகாக்க தொல்லை சுரண்டலிலிருந்து விடுதலை அடைய ஆகிய உரிமைகள் அதே போன்று அவர்களுடைய உரிமைகளை வளர்க்க, முன்னேற்ற மற்றும் வளம் பெறக் கூடிய உரிமைகளும் மறுக்கப்பட்டன.

ஆறு வயதுக் குழந்தையின் பால்விகித கணக்கிலிருந்து, பெண் குழந்தை பற்றின தவறான எண்ணம் தெளிவாக துல்லியமானதாக உள்ளது. 2011 கணக்கெடுப்பில் இந்த விகிதம் 914 ஆகவும், 2001 கணக்கெடுப்பில் 927 ஆக பதிவாகியுள்ளது. குழந்தை பால் விகிதம் நிதானமாக 1961 லிருந்து 976 ஆகவும் 2011 வரை 914 ஆகவும் சரிந்துள்ளது.

### 20.2.2 வரதட்சணை முறை

நமது பண்பாட்டை பாழ்படுத்தியுள்ள வரதட்சணை பழக்கம். சமூக பழக்கங்களில் ஒரு மோசமான பழக்கமாகும். சுதந்திர இந்தியாவில் இந்திய அரசாங்கத்தால் 1961இல் குறிப்பிடத்தக்க வரதட்சணை தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இந்த சட்டத்தின் மூலம் வரதட்சணை கொடுப்பதும், ஏற்றுக் கொள்வதும் சட்டப்படி குற்றம், இதை சட்டமுறைப்படி தடை செய்யப்பட்டும் கூட இந்த பழக்கம் நமது பண்பாட்டில் நன்கு ஊறியுள்ளது. இது தணிக்கப்படமுடியாமல் தொடருகிறது. கிராமமாக இருந்தாலும் சரி, நகரமாக இருந்தாலும் சரி அப்பட்டமாக சட்டத்தை மீறுதலை இந்த சட்டத்தினாலும் கட்டுப்படுத்த முடியாது. வரதட்சணை இறப்புகள் மட்டுமல்ல பெண்களுக்கு எதிரான மனமற்றம் உடல் ரீதியான குடும்பக் கொடுமைகள் உட்பட, எல்லாமே வரதட்சணைத் தொடர்பானவையாகும். பெரும்பாலும் ஒவ்வொரு நாளும் பெண்களின் சில அடிப்படை மனித உரிமைகளும் சட்டத்தை மீறுகின்றன. சில பெண்கள் தங்களுடைய உரிமைகளை வரதட்சணைக்கு எதிராக இருப்பதை

சில சமயம் காணும் பொழுது நம்பிக்கை ஊட்டுவதாக உள்ளது. ஆனால் அந்தக் கைகளை வலுவாக்குவதற்கு தெளிவான, விசாலமான சமூக பொருளாதார அரசியல், நிர்வாக நடவடிக்கைகள் இந்திய சமூகத்தை இந்த நோயிலிருந்து விடுவிப்பதற்கு மிக அவசரத் தேவையாக உள்ளன.

பள்ளிக்கு செல்லாத ஒரு பெண் குழந்தையைக் கண்டுபிடி. அரசாங்கம் லட்லி என்ற திட்டத்தை பெண் குழந்தையின் முன்னேற்றத்திற்காக, அவள் என்றும் பெற்றோர்களுக்கு ஒரு சுமையாக இருக்கமாட்டாள், ஓரளவு பயன்படக் கூடியவளாகத்தான் இருப்பாள். ஆகையால் அவர்கள் அவளை பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என அவளது பெற்றோர்களிடம் கூறு.

### இப்பகுதிக்கான கேள்விகள் 20.1

1. சாதிமுறை எவ்வாறு ஜனநாயகத்தை பாதிக்கிறது?
2. இந்திய அரசாங்கத்தின் 'லட்லி திட்டம்' என்பது என்ன?
3. எந்தச் சட்டம் வரதட்சணை தடுப்பு சட்டத்தை மீறுகிறது?

## 20.3 திட / திரவப் பொருள் முறைகேடான பயன்பாடு / தீய பழக்கத்திற்கு அடிமையாதல்

வழக்கமாக பயன்படுத்தக்கூடிய அல்லது ஊறு விளைவிக்கக்கூடிய மதுபானம், போதைப் பொருள் அடங்கிய குடிவகைகள், புகையிலை, பீடிகள், சிகரெட்டுகள், மருந்துச் சரக்குகள் (மருத்துவ சிகிச்சைக்காக, மருந்துகள் தவிர) திட திரவப் பொருட்களின் முறைகேடான பயன்பாடு அல்லது தீய பழக்கத்திற்கு அடிமையாதல் என அழைக்கப்படுகிறது. இந்த அடிமைப் பழக்கம் மிகமிக அதிகமான மக்களிடையே தொடர்ந்து குறிப்பாக இளம் வயதுக்குழுவினர் இந்த பழக்கத்திற்கு அடிமையாகிறார்கள். பலகாரணிகள் அவை இளவயதினரையும் பெரியவர்களையும் இந்த போதைப்பொருள் பழக்கத்தின் வலையில் சிக்குவதற்கு பொறுப்பாகின்றன. சம வயதுடைய நண்பர்களின் வற்புறுத்தல், சாதகமில்லாத குடும்ப சூழ்நிலை மன அழுத்தம் ஆகிய காரணிகள் இதில் அடங்கும்.

போதைப் பொருள் பயன்படுத்தக்கூடிய நிலை, இவற்றிக்கு மருத்துவ மனோதத்துவ உதவி தேவையாக உள்ளது. பெற்றோர்கள் குழந்தைகளின் விருப்பங்கள், உணர்ச்சிகளை உணர வேண்டும். குறிப்பாக குழந்தை பருவத்திலிருந்து குமரப்பருவம் வயது வந்த நிலைக்கு செல்லும் பொழுது அவர்களுது உடலமைப்பில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. புதிய உலகங்கள், கருத்துகள் நடத்தைகள், உறவுகளை ஆய்வு செய்கின்றனர். குமரப்பருவத்தினர் இயற்கையாகவே ஒன்றைத் தெரிந்து கொள்ள அல்லது கற்றறிய ஆர்வம் உள்ளவர்கள். இந்த செயல்பாடுகளில் சிலர் போதை பழக்கத்திற்கு உட்படுகிறார்கள். அவர்களுது சுற்றப்புறசூழல், குடும்பங்கள், பள்ளிகள் நண்பர்கள் போதைப் பொருட்களை உபயோகித்தலின் விளையும் தீமைகளை கற்றுக் கொடுக்காவிடின் அவர்கள் போதை பொறியில் பிடிபடக்கூடும். மது அருந்துதல், புகைபிடித்தல் ஆகியவை மிகவும் பொதுவானவை ஆனாலும் தீமை விளைவிக்க கூடிய செயலாகும்.

மது அருந்துதல் அல்லது போதையூட்டும் மதுபான வகைகளை எடுத்துக் கொள்வது சமுதாயத்தில் கவலைக்குரிய பிரச்சனையாக உள்ளது. தற்காலிகமாக கவலையை மறக்க, மன உளைச்சலை குறைக்க, மது அருந்துதல் பொழுது போக்குச் செயல்பாடாக இருக்கிறது.

இதனுடைய பழக்கத்திற்கு அடிமையாவதால் அபாயகரமான விளைவுகளை இது உருவாக்குகிறது. மிகக் குறைந்த வருமானமானாலும் குடிகாரர்கள் குடும்பத்தின் தேவைகளை பணயம் வைத்து, மதுபானங்களை வாங்குகிறார்கள். தரமான மதுபானங்களை அதிக விலை கொடுத்து வாங்க முடியவில்லையென்றால், அவர்கள் மலிவான மது வகையை வாங்குகிறார்கள். சில சமயங்களில், விஷப் பொருட்கள் அடங்கியதைக் கூட குடிக்கிறார்கள். குடித்து முடித்த பிறகு அவர்கள் தங்களது உணர்வை இழக்கிறார்கள். சில சமயம் இதனுடைய விளைவு, இறப்பு அல்லது நிலையான ஊனமாகுதலாகும். பெரும்பாலான சமயங்களில் மதுபானத்தை அருந்திய பின்பு தங்களின் மனைவி குழந்தைகளை துன்புறுத்துகிறார்கள்.

மது அருந்துதலை விட. உடல் நலத்திற்கு மிகவும் கேடு விளைவிப்பது புகை பிடிக்கும் பழக்கமாகும். புகை பிடிப்பவர்களை மட்டும் சேதப்படுத்துவதில்லை. ஆனால், அவர்களைச் சுற்றியுள்ளவர்களும் வளி மண்டலத்திலுள்ள புகையினால் பாதிக்கப்படுகிறார்கள். நாம் மற்றவர்களின் உரிமையை மதிக்கின்றோம் என்றால் பிறகு பொது இடங்களான பஸ்கள், ரயில்கள், சந்தைகள், அலுவலகங்கள் முதலிய பொது இடங்களில் புகை பிடிக்கக் கூடாது. புகைபிடித்தல் மாசு படுதலின் முக்கியமான காரணம் புற்றுநோய், இருத நோய்கள். மூச்சு திணறல் முதலிய கொடிய நோய்களை உருவாக்குகிறது. உலக சுகாதார நிறுவனத்தின் கூற்றப்படி புகையிலை உபயோகித்தல், குறிப்பாக புகைபிடித்தல் உலகம் முழுவதிலும் முதல் தர கொலையாளியாகிறான். பொது இடங்களில் புகைபிடிப்பதை மத்திய அமைச்சரவை தடை செய்தது. பள்ளிகள், கல்லூரிகள் அருகில் புகையிலைப் பொருட்களை விற்பதற்கு இது தடை செய்தது. இத்தகைய பொருட்களின் உற்பத்தியாளர்கள் பொருட்களின் மீது இதனுடைய தீமையான விளைவுகளை நுகர்வோருக்கு எச்சரிக்கை கொடுக்கப்பட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டது.

## 20.4 வகுப்பு வாதம்

இந்தியா வெவ்வேறு சமய நம்பிக்கைகளைக் கொண்ட நாடு. இந்துக்கள், சீக்கியர்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், பார்சியர்கள் போன்ற பல்வேறு வகுப்புகளைச் சார்ந்தவர்கள் இந்தியாவில் வாழ்கின்றனர். ஒரு இனத்தினர் மற்ற இனத்தவரை கடுமையாக அணுகும் பொழுது இரு சமய வகுப்பினருக்கிடையே பதற்றம் மற்றும் மோதல்கள் உருவாகிறது. நூற்றுக்கணக்கான மக்கள் வகுப்புக் கலவரத்தில் இறக்கிறார்கள் இது வெறுப்பையும் ஒருவரை ஒருவர் சந்தேகிப்பதையும் உருவாக்கிறது. வகுப்பு வாதம் என்ற பிரச்சனையை சமாளித்து முற்றிலுமாக அழிக்கப்பட அவசியமாகிறது. இது ஜனநாயகத்துக்கும் நாட்டின் ஒற்றுமைக்கும் பெரிய சவால் விடுப்பதாக உள்ளது. ஆகையால் இது நமது வளர்ச்சி பாதையில் பெரிய முட்டுகட்டையாக உள்ளது. கல்வி என்ற முக்கியமான கருவியின் மூலம் சமுதாயத்தில் சமாதானம், ஒற்றுமையை கொண்டுவர முடியும். எந்த சமய வகுப்பை சார்ந்தவர்கள் என்பதற்கு முன், நாம் எல்லோரும் மனித இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதை முதலில் “ஞாபகப்படுத்தி கொள்ள வேண்டும். எல்லா சமயத்தையும் நாம் மதிக்க வேண்டும். நமது நாடு சமய சார்பற்ற நாடு, அதன் பொருள், எல்லா மதத்தையும் சமமாக கருதிளால் ஒவ்வொருவரும் அவர்களுடைய மதத்தை தடையின்றி பின்பற்றலாம்.

> புகைபிடித்தல், மதுபானங்களை அருந்துதல் அல்லது சீட்டு விளையாடுதல் போன்ற பழக்கத்திற்கு அடிமையான ஒரு மனிதரை சந்திக்கவும். அவனுக்கு இதனுடைய தீய விளைவுகளைப் பற்றியும் இந்த பழக்கத்திலிருந்து விடுபட சில யோசனைகளை கூறு.

## 20.5 முதியவர்கள் தொடர்பான பிரச்சனைகள்

உலக மக்கள் தொகை வளர்ந்து கொண்டே போகிறது. உலகளவில் 1950 ல் 8% முதியவர்கள், 2000இல் 10%  2050இல் 21% ஆக அதிகரிக்கவுள்ளது என கணக்கிடப் பட்டுள்ளது. இந்தியாவில் 1961இல் முதியவர்களின் எண்ணிக்கை 5.8% (25.5 மல்லியன்) 1991இல் இந்த எண்ணிக்கை 6.7% (56.6 மில்லியன்) ஆக உயர்ந்தது. 2011இல் 8.1 (96 மில்லியன்) அதிகரிக்கும் என கணக்கிடப்பட்டது, அதாவது 2021இல் 137 மில்லியன் வளர்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இந்திய முதியவர்களின் அளவு (60 ஆண்டு அதற்கு மேல்) அடுத்த சில பத்தாண்டு காலங்களில் மூன்று மடங்கு ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. சமூக பொருளாதார, உளவியல் ஆதரவை முதியவர்களுக்கு வழங்குவது சமூக வளர்ச்சியின் அடிப்படை அக்கறையாக வெளிப்படுகின்றது.

கூட்டுக்குடும்பம் பிளவு படுதல், குறிப்பாக நகர் புறங்களில் முதியவர்களை அவர்களுடைய சொந்த குடும்பங்களிலேயே வேண்டாதவர்களின் எண்ணிக்கையில் அதிகமாகிக் கொண்டேபோகிறது. அங்கு தனிக் குடும்பத்தின் மனப்பாங்கு தான் உள்ளது. முதியவர் களுக்கு வகுப்பு அடிப்படை பெரிய அளவிலான முக்கியத்துவத்தை கொடுக்கிறது, முதியவர்களை மதித்தல் என்ற நமது பண்பாடு, இளைய தலை முறையினரின் மனதில் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் முதியவர்கள் தங்களது மரியாதையை காப்பாற்ற முடியும். வயது முதிர்ந்த மக்களை மரியாதை செய்ய வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் இளமையாக இருந்த பொழுது, உங்களை கவனித்துக் கொண்டார்கள், இப்பொழுது திருப்பி கொடுப்பது உங்களது வாய்ப்பாகும். நீங்கள் உங்களுடைய தாத்தா பாட்டியை கவனித்து, அவர்களுக்கு பணிவிடை செய்ய வேண்டும்.

முதியோர் இல்லத்தை பார்வையிட்டு அங்கு வாழ்கின்ற முதியோரிடம் பேசு. நீங்கள் எவ்வகையில் அவர்களின் சிறந்த, சந்தோஷமான வாழ்க்கைக்கு உன்னால் அவர்களுக்கு உதவி செய்யமுடியும்.

### இப்பகுதிக்கான கேள்விகள் 20.2

1. திட, திரவ பொருள்களை துஷ்பிரயோகம் செய்தல் என்றால் என்ன?
2. உலக சுகாதார நிறுவனத்தின் கூற்றுப்படி நம்பர் 1 கொலைகாரன் யார்?
3. 2021ல் முதியவர்களின் எதிர்பார்த்த மக்கள் தொகை என்ன?
4. வயது முதிர்ந்தவர்களை பராமரிக்காமல் இருப்பதின் முக்கிய காரணம் என்ன?

## 20.6 வறுமை, வேலையின்மையின் பிரச்சனைகள்

இந்தியா பரப்பளவில் பெரிய நாடு, உலகத்தின் மொத்தப் பரப்பளவில் சுமாராக 2.4 சதவீதமாக உள்ளது. ஆனால் உலக மக்கள் தொகையில் இது எவ்வளவு சதவீதத்தை கொண்டுள்ளது என்பது பற்றி உங்களுக்குத் தெரியுமா? நல்லது கிட்டத்தட்ட 16.7 சதவீதமாகும். 2011 கணக்கெடுப்பின் படி இந்தியாவின் மக்கள் தொகை 1210 மில்லியனாகும். சில பொருளாதாரப் பிரச்சனைகள் அப்படிப்பட்ட பெருமளவிளான மக்கள் தொகையுடன் வளர்ந்தது. இவை வேலையின்மை, பணவீக்கம், வறுமை, விலைவாசி உயர்வு போன்ற பிரச்சனைகளாகும். நமது மக்கட் தொகையின் பெரும்பகுதியான மக்கள் வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்கிறார்கள். வேலையின்மை மிகப் பெரிய அளவில் இருந்தது. இந்த பிரச்சனையுடன், பணவீக்கம்  விலைவாசி உயர்வும் சேர்ந்து கொண்டன.





தரம் குறைந்த வாழ்க்கை, நோய், குறைந்த எழுத்தறிவு, சத்துணவின்மை, குழந்தை தொழிலாளர் ஆகியவற்றுடன் சொற்ப அளவிலான சமூக பொருளாதாரத்தின் தாக்கம், குறிப்பிட்ட எண்ணிக்கையில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும மக்களின் மக்கள் தொகையில் ஏறக்குறைய கால் பங்கு பின் தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்கள். கிட்டத்தட்ட முழுவதுமாக வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்கள். வறுமை என்பது ஒரு அடிப்படைப் பிரச்சனை, வளர்ச்சிக்கான நோக்கங்களை தடைசெய்கிறது.

வேலையின்மை என்பது ஒரு சூழல் அங்கு உடல் வலிமையுள்ள மக்கள் வேலை செய்வதற்கு விரும்புகிறார்கள். ஆனால் வாழ்க்கையை வாழ்வதற்கு வேலையைத் தேடுவதில் தோற்றுவிடுகிறார்கள் நாட்பட்ட வேலையின்மை, வறுமையின் விளைவு ஆகியவை, மனித விழுமங்கள் அழிவதற்கு பொறுப்பாகின்றன. வறுமையின் கட்டாயத்தின் காரணமாக பெற்றோர் தங்கள் குழந்தைகளை கூலி வேலைக்காக சந்தைக்கு அனுப்ப கூட தயங்குவதில்லை. இந்த குறிப்பிடத்தக்க நிகழ்வால், மில்லியன் கணக்கான குழந்தைகள் தங்களுடைய குழந்தைப் பருவத்தை இழக்கிறார்கள். எழுத்தறிவின்மை அறியாமையாக இருப்பது, அவர்களது வேலையின்மை அல்லது வேலைக்குத் தகுந்த கூலி இல்லாமல் வேலை செய்வது வறுமை ஆகியவை இவற்றின் விளைவுகளாகும்.

### 20.6.1 பிச்சையெடுத்தல்

நாம் எங்கு சென்றாலும் பிச்சைகாரர்களை கடப்பது, ஒரு வேதனைமிக்க அனுபவமாகும். சந்தை, ரயில் நிலையம், ஆஸ்பத்திரி, கோவில் கடக்கும் பாதையில் கூட சிலர் கையேந்தி உங்களை அணுகுவதை கவனித்திருப்பீர்கள். அவர்கள் பணம் அல்லது உணவிற்காக கேட்பார்கள். பல குழந்தைகள் தெருக்களில் பிச்சை எடுப்பதை நாமும் பார்க்கிறோம். இந்தியாவில் பிச்சையெடுத்தல் என்பது ஒரு சமூக பிரச்சனையாகும். நம் நாட்டில் வறுமை, வேலையின்மை பிச்சையெடுப்பதன் முக்கியமான காரணங்களாகும். இன்றைய நாளில் பல கும்பல்கள் நமது சமுதாயத்தில் பிச்சை எடுத்தலை ஒழுங்கான முறையில் இயக்கி வளப்படுத்துகிறார்கள். இருந்தாலும் பிச்சையெடுத்தல் ஒரு சமூக சாபக்கேடு, இதை கண்டிப்பாக முற்றிலும் ஒழிக்க வேண்டும். நீங்கள் பிச்சைக்காரர்களை தெரு அல்லது வேறு எங்காவது பார்த்தீர்களானால் பிச்சை எடுப்பவர், பிச்சை கொடுப்பவர் இருவருமே சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என கூறுங்கள்.

## 20.7 குழந்தைகளின் பிரச்சனைகள்

எந்த ஒரு நாடும் குழந்தைகளது வளர்ச்சிக்கு போதுமான அளவு கவனிப்பை கொடுத்தா லொழிய முன்னேறாது. ஒரு குழந்தைதான் நாட்டின் எதிர் கால குடி மகனாகிறான். சுகாதார சூழ்நிலையில் வளர்ந்த குழந்தைகள் மட்டுமே, நாட்டின் வளர்ச்சி வலிமைக்கு பங்களிக்க முடியும். நமது நாடு குழந்தைகளின் எண்ணிக்கையை மிகுதியாகக் கொண்ட நாடு. அவர்களுக்கு நல்ல சுகாதாரம் கல்வியையும் வழங்கிடச் செய்தல் நமது கடமை என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

அதிக அளவு எண்ணிக்கையான குழந்தைகள் வறுமையினால் தங்களது தொடக்க கல்வியை முடிப்பதற்க்குள் பள்ளியிலிருந்து விலக்கப்பட்டு, தொழிற்சாலைகள், செங்கல் சூளைகள், தங்கும் விடுதிகள், ஹோட்டல்கள், கடைகள் முதலிய இடங்களில் அனுபவ முதிர்ச்சியற்ற இளம் வயதில் வேலை செய்யத் தொடங்க கட்டாயப் படுத்தபடுகிறார்கள். இது அவர்களது உடல், மனம் உணர்ச்சிகளின் வளர்ச்சிக்கு தடையாக உள்ளது. அவர்கள் வெறுப்பு மன உளைச்சலில் வளர்வதால் நாட்டின் தகுதியான குடி மக்களாக ஆக முடிவதில்லை.

6 லிருந்து 14 வயது வரையுள்ள குழந்தைகள் பள்ளியில் இருக்க வேண்டும். ஆனால் துரதிஷ்டவசமாக இதே வயதை ஒத்த 200 மில்லியன் இந்தியக் குழந்தைகளில் கிட்டத்தட்ட 11.3 மில்லியன் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். என்.ஜி. ஒக்களால் 60 மில்லியனாகக் கணக்கீடு செய்து, அதில் 2 லட்சம் பேர் வீட்டு வேலை உதவிக்காகவும் கிட்டத்தட்ட பாதி எண்ணிக்கையினர் பிணைத் தொழிலாளர்களாகவும் வேலை செய்கின்றனர். இவர்களை பட்டினி கிடத்தி, அடித்து பாலியல் சுரண்டலுக்கும் உட்படுத்துகிறதால் இந்தக் குழந்தைகள் தாங்க முடியாத உடல் மன சுரண்டலுக்கு ஆளாகிறார்கள். இது ஒரு சிக்கலான பிரச்சனை ‘குழந்தை முறைகேடு’ என பொதுவாக கருதப்படுகிறது.

2009 இல் கல்வி கற்கும் உரிமைச் சட்டம் 6 லிருந்து 14 வயது வரையுள்ள எல்லா குழந்தைகளுக்கும் கல்வி வழங்குகிறது. ஒரு தடவை எல்லாருக்கும் இந்த பாராட்டுக்குரிய கல்வியின் நோக்கம் நிறைவேறினால் நமது குழந்தைகளின் எதிர்காலம் மிகச் சிறப்பாக அமையும்.

## இப்பகுதிக்கான கேள்விகள் 20.3

1. 2011 கணக்கெடுப்பின் படி இந்தியாவின் மக்கள் தொகை என்ன?
2. என்ன காரணங்களால் மக்கள் ஒருவரிடமிருந்து மற்றொருவரிடம் பணம், உணவு உடைகளுக்காக கெஞ்சுவது?
3. நீ ஒரு பிச்சைக்காரனை கடந்து வந்தால் என்ன அறிவுரை அவன் , அவளுக்கு வழங்குவாய்?
4. குழந்தை முறை கேடு என்றால் என்ன?

## நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- அண்மைக் காலத்தில் வரதட்சணை, குழந்தை தொழிலாளர், குழந்தை முறைகேடு, போதை முறைகேடு குடி பழக்கம் போன்ற திகிலடைய செய்கிற தீய செயல்கள் முழுமையாக உள்ளன.
- பெண்களுக்கு எதிரான பாலின வேற்றுமை, அதன் தொடர்பான தொல்லைகள் இந்திய சமுதாயத்தில் கட்டுக் கடங்காமல் உள்ளதால் இது அவர்களுடைய முழு ஆற்றலையும் புரிந்து கொள்ள தடுக்கின்றது.
- கூட்டுக் குடும்பத்தின் பிளவுமுறை, தனிக் குடும்பத்தின் தோற்றம், முதியோர்களால் எதிர் கொள்ளப்படுகிற பிரச்சனைகள் அதிகரித்து கொண்டே போகிறது.
- வறுமை,வேலையின்மை, சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தில் சீரழிவான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

## பயிற்சிக்கான கேள்விகள்

1. எவ்வாறு சாதிமுறை ஒரு தனி மனிதனுக்கு அவனுடைய தொழிலைத் தேர்ந்தெடுக்க தடையானது?
2. “வரதட்சணை ஒரு சமூகப் பிரச்சணை஖ - விளக்கு.





3. பெண்களின் வளர்ச்சி எவ்வாறு நாட்டிற்கு நன்மையை தருகிறது?
4. நமது நாட்டின் சொத்து குழந்தை, நீங்கள் இந்த அறிக்கையுடன் சம்மதமா?
5. வரதட்சணை பிரச்சனையைத் தடுப்பதற்காக 1961இல் கொண்டுவரப்பட்ட வரதட்சரண தடுப்புச் சட்டம் சக்தி வாய்ந்தது என நினைக்கிறாயா? காரணமான பதிலை கொடு.
6. பெண்கள் உலகத்தின் மிக வேண்டப்படாத பரிசு - விவாதி.
7. வறுமை வேலையின்மை பல சமூக பிரச்சனைகளின் மூல காரணம் விவாதி

## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 20.1

1. சமுதாயம், செயற்கை குழுக்களாகப் பிளவுபட்டு அது தங்களுடைய சாதியைச் சார்ந்த வரை ஆதரிக்க மனம் விரும்புகிறது. அதாவது அவன் , அவள் தகுதியான வேட்பாளரா இல்லையா என்று அவர்கள் உண்மைக்கு அதிக கவனம் கொடுப்பதில்லை.
2. பெண் குழந்தையைப் பாதுகாக்க ஒரு திட்டம் அதில் பெண் குழந்தை பிறந்த சமயத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையை அந்த பெண் குழந்தையின் பேரில் செலுத்துதல் இதை அந்தக் குழந்தை 18 வயதை முடிந்தவுடன் அவளுக்கு கிடைக்கிறது. இந்த தொகையானது, அவளின் படிப்பு அல்லது திருமணத்திற்காக பயன்படுத்தப்படுகிறது.
3. 1961 ல் வரதட்சணை தடுப்பு சட்டம்

### கேள்விகளுக்கான பதில்கள் 20.2

1. வழக்கமாகப் பயன்படுத்தக் கூடிய அல்லது ஊறு விளைவிக்கக் கூடிய திட , திரவங்களான, மதுபானம் , போதைப் பொருள் அடங்கிய குடி வகைகள், புகையிலை, பீடிகள் , சிகரெட்டுகள், மருந்து சரக்குகளை (மருத்துவ சிகிச்சைக்காக, மருத்துகள் தவிர) திட திரவப் பொருட்களின் முறை கேடான பயன்பாடு அல்லது தீய பழக்கத்திற்கு அடிமையாதல் என அழைக்கப்படுகிறது.
2. புகையிலை
3. 137 மில்லியன்
4. கூட்டுக் குடும்பம் பிளவுபடுதல், குறிப்பாக நகர்ப் புறங்களில் முதியவர்களை, அவர்களுடைய சொந்த குடும்பங்களிலேயே வேண்டாதவர்களின் எண்ணிக்கையில் அதிகமாகிக் கொண்டே போகிறது, அங்கு தனிக் குடும்பத்தின் மனப்பாங்கு தான் உள்ளது.

### கேள்விகளுக்கான பதில்கள் 20.3

1. 1210 மில்லியன்
2. வறுமை வேலையின்மை
3. பிச்சை எடுப்பது சட்டப்படி குற்றம், பிச்சை எடுப்பவர், பிச்சை கொடுப்பவர் இருவருமே தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.
4. 6 லிருந்து 14 வயது வரையுள்ள குழு குழந்தைகள் பள்ளியில் இருக்க வேண்டும். ஆனால் துரதிஷ்டவசமாக இதே வயதை ஒத்த 200 மில்லியன் இந்தியக் குழந்தைகளில் கிட்டத்தட்ட 11.3 மில்லியன் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். என்.ஜி. ஒக்களால், 60 மில்லியனாகக் கணக்கீடு செய்து, அதில் 2 லட்சம் பேர் வீட்டு வேலை உதவிக்காகவும் கிட்டத்தட்ட பாதி எண்ணிக்கையினர் பிணைத் தொழிலாளர்களாகவும் வேலை செய்கின்றனர். இவர்களை பட்டினி கிடத்தி, அடித்து பாலியல் சுரண்டலுக்கும் உட்படுத்துகிறதால், இந்தக் குழந்தைகள் தாங்க முடியாத உடல் மன உளைச்சலுக்கு ஆளாகிறார்கள். இது ஒரு சிக்கலான பிரச்சனை 'குழந்தை முறை கேடு' என பொதுவாகக் கூறப்படுகிறது.

# அலகு - IX

# இந்திய பண்பாடு அயல் நாடுகளில் பரவுதல்

*21.* இந்திய பண்பாடு அயல் நாடுகளில் பரவுதல்

# 21

# இந்திய பண்பாடு அயல்நாடுகளில் பரவுதல்

இன்றைய நாள்களில் மக்கள் மிகுதியாக பயணங்கள் மேற்கொள்கின்றனர். அவர்கள் தரை வழியாக, வான் வழியாக, கடல் வழியாக, இரயில் வழியாக மேலும் எந்தெந்த வழிகளில் செல்ல இயலுமோ அவ்வழியாக செல்கிறார்கள். ஆனால் உங்களுக்கு தெரியுமா, முந்தைய கால நாள்களில் அவர்கள் நீண்ட தூரம் பயணம் செய்துள்ளனர். அப்போது இந்தியாவில் இரயில் வழி இல்லை, வான் வழி இல்லை. கி.மு. 3000 ஆண்டில் இருந்தே, இந்தியா அயல்நாட்டவருடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது. இந்தியா மூன்று பக்கம் கடலால் சூழப்பட்டு, வடக்கே இமயமலை இருந்தும். இந்தியர்களின் வெளி உலகத் தொடர்பினை நிறுத்த முடியவில்லை. அவர்கள் வெகுதூரம் பயணம் செய்து, தங்களின் பண்பாட்டுச் சுவடுகளை விட்டுச் சென்றிருக்கிறார்கள். அதற்கு பதிலாக, கருத்துகள், தடயங்கள், பழக்கவழக்கங்கள், மரபு முறைகள் முதலியவற்றை கொண்டு வந்துள்ளனர்.

மேலும் குறிப்பிடத்தக்க ஒரு அம்சம் என்ன வென்றால், இந்தியாவின் பண்பாட்டையும், நாகரிகத்தையும் உலகின் பல்வேறு பகுதிகளில் பரப்புவதேயாகும். முக்கியமாக மத்திய ஆசியா, தென் கிழக்கு ஆசியா, சீனா, ஜப்பான், கொரியா. குறிப்பிடக்கூடிய இந்தப் பரவுதல்முறை, நாட்டை ஆள்வதோ, ஒரு தனிமனிதனையோ அல்லது ஒரு சமுதாயத்தையோ அச்சுறுத்தவது அல்ல. ஆனால் இந்தியாவின் பண்பாடு ஆன்மீக விழுமங்கள் ஏற்றுக் கொள்வதற்காக மட்டுமே.

இந்த பாடத்தில் நாம் எவ்வாறு இந்திய பண்பாடு, அதனுடைய விளைவுகள் மற்ற நாடுகளுக்கு பரவினது என்பதைக் காணலாம். மேலும் நல்ல கோட்பாடுகள், மற்ற நாடுகளுடன் சமாதான உறவு, நல்ல கருத்து பரிவர்த்தனை, ஆகிய கருத்துகளால் நமது வாழ்வு ஒரு பயனுள்ள வாழ்வாக மாற்ற உதவுகிறது.

## நோக்கங்கள்

நீங்கள் இந்த பாடத்தை படித்த பிறகு

- இந்திய பண்பாடு அயல் நாடுகளில் எவ்வாறு பரவியுள்ளது என்பதை விவரிக்க
- எந்த வாணிக வழியில் வணிகர்கள், பண்பாட்டுத் தூதுவர்களாக மாறி, இந்திய பண்பாட்டைப் பரப்பினார்கள் என்பதை கண்டு கொள்ள
- இந்திய பண்பாட்டைப் பரப்புவதில், பழங்கால பல்கலைக்கழகங்கள், ஆசிரியர்கள் சமய போதகர்கள்-இவர்களின் பங்கை விவரிக்க

- கிழக்கு ஆசிய, தென் கிழக்கு ஆசிய நாடுகளில் எவ்வாறு இந்திய பண்பாடு பரவியது என்பதைக் கண்டு கொள்ள
- இந்தியாவின் வாணிகத் தொடர்பு எவ்வாறு ரோமானியப் பேரரசுடன் இருந்தது என்பதை விவரிக்க
- எவ்வாறு புத்த மதம் பல நாடுகளில் ஒரு சமாதான மதமாக பரவியது என்பதை ஆராய
- மொழி, இலக்கியத்தால் சமஸ்கிருத்தின் விளைவு பற்றி ஆராய
- இந்திய காப்பியங்களின் புகழ், இந்திய தத்துவம், இந்திய நிர்வாகம், சட்டம் பற்றிய குறிப்பு தருவதற்காக
- பல நூற்றாண்டிற்கும் மேலாக பெரிய கோவில்கள், சிற்பங்கள் ஓவியங்கள் எவ்வாறு இந்திய மரபினை இந்த நாடுகளில் பரப்பின என்பதைக் காட்ட
- அரேபிய நாகரிகத்துடன் இந்திய பண்பாட்டின் ஊடுருவலை விவரிக்க

## 21.1 இந்திய பண்பாடு வணிகர்கள் ஆசிரியர்கள், தூதுவர்கள், போதகர்கள் மூலமாக பரவுதல்

பழங்காலத்தில் இந்திய வாணிகத்தில் வியாபாரத்தில் புதிய வாய்ப்புதத் தேடி தூர நாடுகளுக்குச் சென்றனர். மேற்கே ரோமாபுரிக்கும், கிழக்கே சீனாவுக்கும் சென்றனர். முதலாம் நூற்றாண்டில் தங்கத்தை தேடி இந்தோனேசியா, கம்போடியா ஆகிய நாடுகளுக்குச் சென்றனர். குறிப்பாக ஜாவா, சுமத்ரா மலாயா போன்ற நாடுகளுக்கு பயணம் செய்தனர். ஆதலால் இத்தகைய நாடுகளை 'சுவர்ண தீவு' என்று அழைக்கப்பட்டது. (சுவர்ணா என்பதற்கு தங்கம் என்று பொருள் 'விப்பா' என்பதற்கு தீவு என்று பொருள்). இந்த வணிகர்கள் காசி, மதுரா, உஜ்ஜயினி, பிரயாகை பாடலிபுத்திரம், கிழக்கு கடற்கரையில் அமைந்துள்ள துறைமுகங்களான மாமல்லபுரம், தாமரலிப்தி, பூரி காவேரிபட்டினம் ஆகிய வளமான நகரங்களிலிருந்து பயணித்துள்ளனர். பேரரசர் அசோகர் காலத்திலிருந்தே கலிங்க அரசு, இலங்கையுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது. இந்த வணிகர்கள் எங்குச் சென்றாலும், பண்பாட்டுத் தொடர்பு ஏற்படுத்தினார்கள். இவ்வாறு வணிகர்கள் பண்பாட்டுத் தூதுவர்களாகப் பணியாற்றி வெளி உலகுடன் வாணிகத் தொடர்பை ஏற்படுத்தினர்.

கிழக்கு கடற்கரையைப் போலவே, பண்பாட்டு விரிவாக்கம் மேற்கு கடற்கரையோரமும் காணப்பட்டது. உதாரணமாக கார்லே, பாஜா, கன்ஹேரி, அஜந்தா எல்லோரா ஆகியவை பிரசித்தி பெற்ற இடங்களாகும். பெரும் பான்மையான இந்த மையங்கள் புத்த மடலாயங்களால் ஏற்படுத்தப்பட்டவை ஆகும்.

பல்கலைக் கழங்கள், பண்பாட்டுப் பரவலில் முக்கிய மையங்களாக திகழ்ந்தன. அவை பெரும்பான்மையான மாணவர்களையும், அறிஞர்களையும் வெகுவாக கவர்ந்தன. இந்த அறிஞர்கள் ஏழு அடுக்கு மாடிகளைக் கொண்ட நாளந்தா பல்கலைக்கழகத்தில் உள்ள நூல் நிலையத்தை அடிக்கடி பார்வையிட்டனர். இந்த மாணவர்களும், ஆசிரியர்களும் இந்திய பண்பாட்டுடன் அறிவு சமயம் ஆகியன பற்றி கருத்துகளை அயல் நாடுகளுக்கு எடுத்துச் சென்றனர். சீனப்பயணி 'யுவான் சுவாங்' இந்த பல்கலைகழகத்தை பற்றிய பெரும்பான்மையான விவரங்களை, இங்கு வருகை தந்த பொழுது கொடுத்துள்ளார். உதாரணமாக இரண்டு முக்கிய பல்கலைகழகங்கள் ஒன்று கிழக்கே நாளந்தா, மற்றொன்று மேற்கே வல்லபியை பற்றி வர்ணக்கின்றார்.

மற்றொரு பல்கலைக்கழகம் கங்கை நதிக்கரையோரம் அமைந்துள்ள விக்ரமசீலா பல்கலைக்கழகம் ஆகும். இங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் அறிஞர்கள் மிகவும் புகழ் வாய்ந்தவர்கள் ஆவர். மாணவர்களிடையே பொதுவான பண்பாட்டையும், அறிவுக்கூர்மை யையும் மேம்படுத்துவதற்காக திபெத்திய அரசர் ஒரு தூதுக்குழுவின் மூலமாக பல்கலைக் கழகத் தலைவருக்கு அழைப்பு விடுத்தார். திபெத்திய அறிஞர் தாரநாதர் இதைப் பற்றி விவரித்துள்ளார்.

மற்றுமொரு பல்கலைக்கழகம் பீகார் மாநிலத்திலிலுள்ள 'ஓடந்தபுரி' பால வம்ச மன்னர்களின் ஆதரவால் நல்ல நிலைக்கு வந்துள்ளது. ஏராளமான துறவிகள் இந்த பல்கலைகழகத்திலிருந்து இடம் பெயர்ந்து திபெத்தில் குடியேறினார்கள்.

கி.பி 67இல் சீனப் பேரரசின் அழைப்பை ஏற்று கஷ்பா மார்டங்கா, தர்மரக்ஷிதா என்ற இரு ஆசிரியர்கள் சீனாவிற்கு சென்றனர். நளாந்தா, தட்ச சீலா, விக்கிரம சீலா மற்றும் ஓடந்தபுரி பல்கலைகழகத்தைச் சார்ந்த ஏராளமனான ஆசிரியர்களும் சென்றனர். ஆச்சர்யா குமார ஜிவா, சீனாவிற்கு சென்ற போது, அவரை சமஸ்கிருத புத்தங்களை சீன மொழியில் மொழி பெயர்த்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். யோகா தத்துவத்தில் சிறந்து விளங்கிய அறிஞர் போதி தர்மா, இன்று வரை சீன, ஜப்பானிய மக்களால் மதிக்கப்படுகிறார்.

நாளந்தா பல்கலைகழகத்தைச் சேர்ந்த ஆசார்ய கமலாஷில் என்பவரை, திபெத்திய அரசர் வரவழைத்தார். அவர் இறந்த பிறகு அவரது உடலை புனிதப் படுத்தி, லாசாவிலுள்ள ஒரு மடாலயத்தில் வைத்தார்.

மற்றுமொரு சிறந்த அறிஞர் "ஞான பத்ரா என்பவர். அவர் தன் இரு மகன்களுடன் திபெத்திற்கு 'தர்மத்தை' பற்றி போதனை செய்ய சென்றார். பிஹாரில், ஓடந்தபுரி பல்கலைகழகத்தின் சாயலாகவே ஒரு மடாலயம் திபெத்தில் தோற்றுவிக்கப்பட்டது.

விக்ரமா சீலா பல்கலைக்கழகத்தின் மேலாளர் ஆச்சார்ய அட்சா என்பவர் 'திபன்கார சிரிஜனா' என்று அழைக்கப்பட்டார். பதினோரம் நூற்றாண்டில் அவர் திபெத்திற்கு சென்று புத்த மதக் கொள்ளைக்கு அடித்தளம் அமைத்தார். சீனப்பயணி யுவான் சுவாங் இந்தியாவிற்கு வருகை தந்த பொழுது தாம்னி சம்போட்டா என்ற திபெத்திய மந்திரி, நாளந்தா பல்கலை கழகத்தின் மாணவாரக இருந்தார். தாம்னி சம்போட்டா அங்கு படித்து விட்டு திரும்பும் பொழுது அவர் புத்த மதத்தை திபெத்தில் போதித்தார். ஏராளமான திபெத்தியர்கள் புத்த மதத்தை தழுவினார்கள் அரசரும் புத்த மதத்தை தழுவினார். மேலும் புத்த மதத்தை அரசு மதம் என அறிவிக்கப்பட்டது. கி.பி ஐந்தாம் நூற்றாண்டில், பிரபலமான ஆசிரியர்களுள் குமார ஜிவா குறிப்பிடத்தக்கவர்.

## 21.2 இந்தியப் பண்பாடு மற்ற பாணிகளில் பரவுதல்

**ரோமாஸ் அல்லது ஜிப்சிஸ்:** சில இந்திய குழுக்கள் நாடோடிகளாக அயல் நாடுகளுக்கு சென்றனர். அவர்கள் 'ரோமஸ்' என்றும் அவர்களுடைய மொழியை ரோமனி என்றும் அழைக்கபட்டது. ஆனால் ஐரோப்பாவில் ஜிப்சியர்கள் புகழ் பெற்றனர். அவர்கள் இன்றைய பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானத்தை கடந்து மேற்கு நோக்கி சென்றனர். அங்கிருந்து அவர்களுடைய படைகள் ஈரான், ஈராக் வழியாக துருக்கிக்கு சென்றனர். பாரசிகம், டாரஸ்மலை கான்ஸ்டாண்டி நோபில் வழியாக செல்லும் பொழுது அவர்கள் பல ஐரோப்பிய நாடுகளில் பரவி விட்டனர். தற்போது கிரீஸ், பல்கேரியா, முன்னாள் யுகோஸ்லாவிய அரசுகள், ருமேனியா, ஹங்கேரி, செக் ஸ்லோவெக் குடியரசுகள், ரஷ்யா, போலந்து, ஸ்விட்சர்லாந்து, பிரெஞ்சு, ஸ்விடன், டென்மார்க் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் வாழ்கிறார்கள். மற்ற நாடுகளுக்கு பரவுதலுக்கு இவர்களுக்கு 400 ஆண்டுகளாயிற்று. அச்சமயம் அவர்கள் தம் தாய் நாட்டை மறந்தாலும், அவர்களின் மொழி, படிக்க வழக்கங்கள், வாழும் முறை அவர்களின் தொழில்

முதலியவற்றை தக்க வைத்து கொண்டனர். ரோமானியர்கள் நடனம், ஆகியவற்றுக்குப் பெயர் பெற்றவர்கள். ஒவ்வொரு ரோமானிய பாடகர்களும் சிறந்த புகழ் பெற்ற கலைஞர்கள் என்று சொல்லப்படுகிறது.

### இப்பகுதிக்கான கேள்விகள் 21.1

1. நம் பண்பாட்டை அயல் நாட்டில் பரப்பியவர் யார்?
2. சீனப் பயணி யுவான் சுவாங் எந்த இரண்டு பல்கலைக்கழகங்களைப் பார்வையிட்டார்?
3. விக்ரமசீலா பல்கலைக்கழகத்தை வர்ணித்த திபெத்திய அறிஞரின் பெயர் என்ன?
4. கி.பி 67-இல் சீனாவிற்கு சென்ற இரு ஆசிரியர்கள் யார்?
5. ஆச்சார்ய குமார ஜிவா ஏன் சீனாவிற்குச் சென்றார்?
6. பண்டைய காலத்தில் ஜிப்சிஸ் என்பவர்கள் யார்?

## 21.3 மத்திய ஆசியாவில் இந்திய பண்பாடு

கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து சீனா, மத்திய ஆசியா, மேற்கு ஆசியா ரோமானியப் பேராசுகளுடன், இந்தியா வாணிகத் தொடர்பை நிர்வாகித்து வந்தது. சீனா, ரஷ்யா, திபெத், இந்தியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு பெரிய நிலப்பரப்பாக மத்திய ஆசியா அமைந்தது. சீனாவிலிருந்து வணிகர்கள் இந்த பகுதிகளை எவ்வளவோ தடைகள் இருந்தும் கடந்து சென்றனர். அவர்கள், திறந்த மார்க்கம் 'சில்க்ரூட்'(பட்டு வழி) என அழைக்கப்பட்டது. சில்க் தான் சீனாவின் முக்கிய வணிகப் பொருளாக இருந்ததால் அது 'சில்க்ரூட்' எனப் பெயர் பெற்றது. பிற்காலத்தில் அறிஞர்கள், துறவிகள் மதபோதகர்கள் முதலானோர் இந்த சில்க் மார்க்கத்தை (பட்டுவழியை) பயன்படுத்தினர்கள். பண்பாடு இடம் பெயறுவதற்கு இந்த சில்க்ரூட் ஒரு பாலமாக அன்றைய உலகிற்கு அமைந்தது. மத்திய ஆசியாவில் இந்திய பண்பாட்டின் விளைவுகள் பெரிதும் உணரப்பட்டன.

மத்திய ஆசியாவிலுள்ள 'குச்சி' என்ற முக்கியமான நகரம், இந்திய பண்பாட்டின் மையமாகத் திகழ்ந்தது. இந்த நகரத்தில் தான். சில்க்ரூட் இரண்டாக பிரிந்து மறுபடியும் சீனாவிலுள்ள டன் - ஹீவாங் குகையை அடைகிறது. ஆகையால், சில்க்ரூட் அங்கு வடக்கு மற்றும் தெற்கு நோக்கி இருக்கிறது, வடக்காக செல்லும் மார்க்கம், சாமர்கண்ட் , காஷ்கர், டம்சுக் அக்சு, கரஷர், டர்பான், ஹமி வழியாக செல்கிறது. மேலும் தெற்காக செல்லும் மார்க்கம் யார்கண்ட், கோட்டான், கொரியா, சர்ச்சன் மற்றும் மிரன் வழியாகச் செல்கிறது. அறிவு தேடலுக்காகவும் புத்த சமய தத்துவத்தை பிரச்சாரம் செய்வதற்காகவும் ஏராளமான சீன இந்திய அறிஞர்கள் இந்த வழியாகச் சென்றார்கள்.

இந்தியாவிற்கும் மற்ற மத்திய ஆசிய நாடுகளுக்குமிடையே பண்பாட்டு மாறுதல்கள் ஏற்பட்டது என்பதை பழங்கால கண்டுபிடிப்புக்களான ஸ்தூபிகள், கோயில்கள், மடாலய உருவங்கள், ஓவியங்கள் இந்த நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டன. துறவிகள், சமய போதகர்கள், யாத்திரை செல்பவர்கள், வணிகர் முதலானோர் இவர்கள் தங்கி ஓய்வெடுக்க ஆங்காங்கே விடுதிகள் கட்டப்பட்டு இருந்தன. அதுவே பிற்காலத்தில் புத்த கல்வி மையங்களாகத் திகழ்ந்தன.

பட்டும், விலையுயர்ந்த பச்சைக்கல், குதிரைகள் ஆகியவையும் (பட்டு வழி) இந்த (சில்க் மார்க்கம்) வழியாக பண்ட மாற்றம் செய்த போதிலும், எல்லாவற்றையும் விட விலை மதிக்க முடியாத புத்தமதம் பரவியது தான் குறிப்பிடத்தக்கது. ஆகையால் இந்த வணிக மூலமாக, சமயம், தத்துவம், கருத்துகள், நம்பிக்கைகள், மொழி, இலக்கியம், கலை வழியின் பண்புகள் ஆகியவை இடம் மாறின.

கோட்டான் என்பது முக்கியமான வணிக இடம். இது (சில்க் ரூட்டின்) பட்டு வழியின் தெற்குகப் பக்கமாக அமைந்திருந்தது.

பண்பாட்டின் வரலாற்றுத் தொடர்பு, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவுக்கும் மற்ற அரசுகளுக்கும் இடையே இருந்தது. பட்டு தொழிற்சாலை, நடனம், இசை, இலக்கியம், வாணிகச் செயல்கள், தங்கம், பச்சைகல் முதலியன ஏற்றுமதி செய்யப்பட்டது.

இந்தியா, கோட்டான் ஆகிய இரு நாடுகளின் உறவுமுறை வரலாற்றுக்கு ஆசிரியர்கள் துறவிகளின் இடைவிடாத பயணமும் சான்று அளிக்கின்றனர்.

முதலாம் நூற்றாண்டில் கோட்டானில் கண்டெடுக்கப்பட்ட நாணயங்களில் மேலிருந்து கீழாக சீன மொழி வடிவத்திலும், கீழிலிருந்து மேலாக காரோஷ்டி மொழி வடிவத்திலும் செதுக்கப்பட்டுள்ளது. மேலும், ஏராளமான கையால் எழுதப்பட்ட சமஸ்கிருத பிரதிகள் மொழி பெயர்ப்புகள், சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட புத்த நூல்களை புதையுண்ட மடாலயங்களிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## 21.4 கிழக்கு ஆசியாவில் இந்திய பண்பாடு

### சீனா

சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையேயான தொடர்பு கி.மு இரண்டாம் நூற்றாண்டிலேயே தொடங்கியது. கஷ்யப்பா மார்ட்டங்கா, தர்ம ரக்ஷிதா ஆகிய இருவரும் சீன அரசர் மிங்டி என்பவரின் அழைப்பின் பேரில் சீனாவிற்கு சென்றதால், இந்திய பண்பாடு முதலில் சீனாவை அடைந்தது.

கஷ்யப்பா மார்ட்டங்கா, தர்ம ரக்ஷிதா ஆகிய இருவருக்குப்பின் ஏராளமான அறிஞர்கள் இந்தியாவிலிருந்து சீனாவிற்கும், சீனாவிலிருந்து இந்தியாவிற்கும் வந்தனர். சீனர்கள் மிக்க பண்பாடு கொண்டவர்கள். அவர்கள் ஆச்சரியமிக்க புத்தரின் கதைகளை வெகு கவனமுடன் கேட்டனர். அறிவு தேடலுக்காக இந்தியா வந்த சீனர்கள். இந்தியாவைப் பற்றியும், இந்திய பண்பாட்டைப்பற்றியும் எழுதியதால் அதுவே இந்நாளில் ஓர் முக்கியமான ஆதாரமாக இந்திய வரலாற்றில் காணப்படுகிறது. இந்தியப் பல்கலைகழகத்திலிருந்தே சிறப்புமிக்க ஆசிரியர்கள் மற்றும் மடாலயங்கள், சீனாவில் மிகவும் பிரசத்தி பெற்றன. உதாரணமாக போதி தர்மா என்ற அறிஞர், காஞ்சிபுரத்திலிருந்து சீனாவிற்கு சென்றார். அவர் நாளந்தாவிற்கு சென்று படித்து விட்டு, பின்பு சீனா திரும்பினார். அவர் தன்னுடன் யோகா தத்துவத்தை எடுத்துச் சென்றதுமில்லாமல் ‘தியானம்’, செய்வதை பிரபலப்படுத்தினார். அந்த தியானம் தான் பிறகு சீனாவில் ‘சேன்’ என அழைக்கப்பட்டது. போதி தர்மர் புகழ் மிக்க ஒரு தலைவராக ஆனதால், சீனாவிலும், ஜப்பானிலும் அவரைக் கடவுளாக வழிபடத் தொடங்கினர்.

புத்தமத தத்துவம் சீன அறிவாளிகளுக்கிடையே ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. ஏனென்றால் அவர்கள் ஏற்கனவே கன்பூசியஸ் தத்துவத்தில் ஆர்வம் கொண்டிருந்தனர்.

நான்காவது நூற்றாண்டில் ‘வை’ வம்சம் சீனாவில் ஆட்சிக்கு வந்தது. இந்த அரசின் முதல் பேரரசர் புத்தமதத்தை அரசு மதமாக பறை சாற்றினார். ஆயிரக்கணக்கான சமஸ்கிருத புத்தகங்கள், சீன மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. இது சீனாவில் புத்த மதம் பரவுவதற்கு தூண்டுகோலாக அமைந்தது. சீனர்கள் எல்லாவிதமான துன்பங்கள், தடைகள் இவற்றையெல்லாம் தாண்டி புத்தரின் இடத்திற்கு வந்தனர். அவர்கள் இந்தியாவிற்கு வந்து பல்வேறு கல்வி மையங்களில் தங்கி, புத்தரின் நினைவுச் சின்னங்களையும் புத்த மதத்தை தழுவி எழுதப்பட்ட கைப் பிரதிகளையும் கற்றனர்.

புத்த மதம் சீனாவில் பரவியதால், சீனா குகைக் கோயில்களையும், புத்த மடாலங்களையும் அதிக அளவில் கட்டியது. பிரமாண்டமான உருவங்கள் கல்லில் செதுக்கப்பட்டன குகைகளின்

உட்புறமும் அழகான ஓவியம் வரையப்பட்டது. டன் ஹீவாங், யுன் - கங் ஆகியன லங் - மென் இவைகள் உலகத்திலேயே மிகச் சிறப்பான பலபாகங்களைக் கொண்ட குகைகள் ஆகும். இந்தியர்களின் செல்வாக்கிற்கு இந்த பிரமாண்டமான கட்டடங்கள் ஓர் எடுத்துக்காட்டு.

பண்பாட்டுத் தொடர்புக்கும், கருத்துகள் பரிமாற்றத்திற்கும் அறிஞர்களும் துறவிகளும் முக்கிய தூண்களாக விளங்குகின்றனர்.

## கொரியா

சீனாவின் வடக்குப்பகுதியில் அமைந்துள்ளது கொரியா. இந்திய பண்பாட்டின் மூலக் கூறுகளை கொரியா, சீனாவிடமிருந்து பெற்றுக் கொண்டது 'சுன்டோ' என்ற முதல் புத்த துறவி கி.பி. 352இல் புத்தரின் உருவத்தையும். மந்திரங்களையும் கொரியாவுக்கு எடுத்துச் சென்றார். இவரை தொடர்ந்து ஆச்சார்ய மல்லாநந்தா என்பவர் கி.பி. 384-இல் கொரியாவை அடைந்தார். கி.பி. 404-ல் ஒரு இந்திய துறவி, யாங் யாங் என்ற நகரத்தில் இரு கோவில்களைக் கட்டினார். இந்தியாவிலிருந்து ஏராளமான ஆசிரியர்கள் அவருக்குப்பின் சென்றனர். அவர்கள் தங்களுடன் தத்துவம், சமயம், உருவம் செய்யக் கூடிய கலைகள், வர்ணம் பூசுதல் ஆகியவற்றை தங்களுடன் கொண்டு சென்றனர். கொரியாவிலிருந்து பல அறிஞர்கள் அறிவுத் தேடலாக இந்தியாவிற்கு வந்தனர். அவர்கள் வானவியல், ஜோதிடம், மருத்துவம் இன்னும் வெவ்வேறு துறைகளில் அறிவைத் தேடினர். கொரியா முழுவதிலும் மடாலயங்களும் கோவில்களும், பக்திக்கும், கற்றலுக்கும் சிறந்த மையங்களாக விளங்கின. ஏராளமான புத்த பாட புத்தகங்கள் மொழி பெயர்க்கப்பட்டன.

8-ஆம் நூற்றாண்டிலிருந்து 9-ஆம் நூற்றாண்டு வரை தியான யோகா என்ற தத்துவம் கொரியாவில் பிரபலமானது. அஞ்சாமல் இருப்பதற்காக அரசர்கள் மற்றும் அரசிகள், இளவரசர்கள், அமைச்சர்கள், வீரர்கள் கூட யோகா பயிற்சி எடுக்கத் தொடங்கினார்கள். புத்த பாடங்களை ஆறாயிரம் தொகுதிகளாக கொரியர்கள் அச்சிட்டனர். இந்திய கையெழுத்துப் பிரதிகளும் அப்பொழுது கொரியாவை சென்றடைந்தன.

## ஜப்பான்

1500 ஆண்டுகளுக்கு முன்பே, இந்திய பண்பாட்டின் கதை ஜப்பானுக்கு சென்றுவிட்டது என்று நம்பப்படுகிறது. ஆனால் இந்திய பண்பாடு ஜப்பானுக்கு கி.பி. 552 லிருந்து தான் சென்றன என்று முந்தைய வரலாறு சான்றுகள் பகர்கின்றன. அந்த சமயத்தில் கொரியா பேரரசர், ஜப்பானிய அரசுக்கு புத்தர் சிலை, சூத்திரர்கள் கடவுளை கும்பிட கருவிகள், கலைஞர்கள், சிற்பிகள், வர்ணம் பூசுபவர்கள், கட்டடக் கலைஞர்கள் ஆகியோரை பரிசாக கொடுத்தனுப்பினார்.

புத்த மதத்திற்கு உடனடியாக அரசு மதமாக தகுதி கொடுக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான ஜப்பானியர்கள் துறவிகளாகவும், பெண் துறவிகளாகவும் மாறினர். ஜப்பானில் சமஸ்கிருதம் புனிதமான மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சமஸ்கிருத பன்மை வடிவங்கள், மந்திரங்கள் எழுதுவதற்கு சிறப்பான பயிற்சி துறவிகளுக்குக் கொடுக்கப்பட்டது. இந்த எழுதப்பட்ட கையெழுத்துப் பிரிதிகளை 'ஷித்தன்' என்று அழைக்கப்பட்டது. 'ஷித்தன்' தான் 'சித்தம்' என்று நம்பப்படுகிறது. (வெற்றிகரமாக செய்து முடிக்கப்பட்ட).

இன்றைய கால கட்டத்தில் கூட ஜப்பானிய அறிஞர்கள் சமஸ்கிருதம் கற்று கொள்வதில் விருப்பமாக உள்ளனர். புத்த மதத்தின் கைப் பிரதிகள் ஜப்பானுக்கும் இந்தியாவுக்கும் இடையே உறவை வளர்க்க உதவியன.

இளவரசர் 'ஷோடோ குட்டைஹி' புத்த மதத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தமையால், அவருடைய காலத்தில் அதாவது ஏழாம் நூற்றாண்டில் புத்தமறை நூல் சீனா மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு, ஜப்பானுக்கு கொண்டு செல்லப்பட்டது.

### திபெத்

இமயமலையின் வடபுறமும் ஒரு பீடபூமியின் மேல் திபெத் அமைந்துள்ளது. திபெத்திய மக்கள் புத்த மதத்தை சார்ந்தவர்கள். திபெத்திய அரசன் 'நாரதேவர்' தன்னுடைய அமைச்சர் 'தோன்மி சம்போட்' உடன் 16 சிறந்த அறிஞர்களையும் மகத நாட்டிற்கு அனுப்பி இந்திய ஆசிரியர்களிடம் கல்வி கற்கச் செய்தார் என்று நம்பப்படுகிறது. சில ஆண்டுளுக்குப் பின் 'தோன்மி சம்போட்' காஷ்மீருக்கு சென்று விட்டார். அவர் திபெத் மக்களுக்காக இந்திய மொழியின் எழுத்து தொகுதிகளை பிராமி எழுத்து வடிவத்தில் எழுதத் திட்டமிட்டார் என்று சொல்லப்படுகிறது. அதே எழுத்துகள் தான் திபெத்தில் இன்னாள் வரை பயன்பாட்டில் உள்ளது. இது மங்கோலியா மொழி மஞ்சூரிய மொழி எழுத்துகளிலும் ஆதிக்கம் செலுத்தியது.

'தோன்மி சம்போட்' தன்னுடன் ஏராளமான புத்தகங்களை இந்தியாவிலிருந்து எடுத்துச் சென்றார் என அறியப்படுகிறது. திபெத்திற்கு சென்ற பின்பு, பானினி எழுதிய சமஸ்கிருத இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய இலக்கணத்தை திபெத்திய மக்களுக்காக எழுதினார் என்று சொல்லப்படுகிறது. அரசன் தான் எடுத்துச் சென்ற இலக்கியத்தினால் கவரப்பட்டு, அவற்றைப் படிக்க நான்கு ஆண்டுகள் தன்னை அர்ப்பணித்தார். சமஸ்கிருத புத்தகங்களை திபெத்திய மொழியில் மொழி பெயர்ப்பதற்கு அடித்தளமிட்டார். இதன் விளைவாக 7 ஆம் நூற்றாண்டிலிருந்து 17 ஆம் நூற்றாண்டு வரை மொழி பெயர்ப்பு பணி கடின முயற்சியுடன் தொடர்ந்து நடைபெற்றது. இந்த மரபுப்படி 96,000 சமஸ்கிருத புத்தகங்கள் திபெத்தில் மொழி பெயர்க்கப்பட்டன.

### இப்பகுதிக்கான கேள்விகள் 21.2

1. சீனாவுக்கு செல்லும் வழி ஏன் 'பட்டு வழி' (Silk Route) என அழைக்கப்பட்டது?
2. குச்சி எங்குள்ளது? ஏன் இது மிகவும் புகழ் வாய்ந்துள்ளது?
3. முதலாம் நூற்றாண்டில் எங்கு, சீன நாணயத்தில் மேலிருந்து கிழாக சீன மொழி வடிவத்திலும், கிழிலிருந்து மேலாக காரோஷ்டி மொழி வடிவத்தில் செதுக்கப்பட்டுள்ளன?
4. டன் - ஹிவாய், யன் காங், லங் மென் என்பவை எவை?
5. தியான யோக தத்துவம் எப்பொழுது கொரியாவில் வளர்ந்தது?
6. இந்திய பண்பாடு எவ்வாறு ஜப்பானில் பரவியது?
7. ஜப்பானில் 'ஷித்தன்' என்பது எதை குறிக்கிறது?
8. கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து, பதினேழாம் நூற்றாண்டு வரை எவ்வளவு சமஸ்கிருத புத்தகங்கள் திபெத்திய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன?

## 21.5 இலங்கையிலும் தென் கிழக்கு ஆசியாவிலும் இந்திய பண்பாடு

### இலங்கை

மிகச் சிறந்த இதிகாசமான ராமாயணத்தில் ராமர் என்கிற அயோத்திய மன்னன், சீதாவை கொண்டு வருவதற்காக இலங்கைக்கு சென்றான் என்பதை நீங்கள் படித்து இருக்கலாம்.

அந்த நாள்களில் சிலோனும் இலங்கையும் வேறு வேறு இடங்களாக இருந்திருக்க கூடும்.

பேரரசர் அசோகர் புத்த மதத்தை அண்டை நாடுகளில் பரப்பு வதற்காக பெரிதும் முயற்சி செய்தார்.

அவர் தன்னுடைய மகன் மகேந்திரனையும், மகள் சங்க மித்திரையையும் தமது கொள்ளைகளை பரப்புவதற்காக இலங்கைக்கு அனுப்பினார். அவர்களுடன் பல அறிஞர்களும் சேர்ந்து கொண்டனர். அவர்கள் புத்த கயாவிலுள்ள போதி மரத்திலிருந்து மரத்தின் கிளையை வெட்டி எடுத்து சென்று அதை இலங்கையில் நட்டனர் என்று சொல்லப்படுகிறது. அந்நாளில் ‘தேவனாம் பிரியதிசா’ என்பவர் இலங்கை அரசராக இருந்தார். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு சென்றவர்கள் புத்தரின் போதனைகளை வாய் மொழி வாயிலாக எடுத்துரைத்தனர். இலங்கை மக்கள் மகேந்திரனால் மாற்றியமைக்கப்பட்ட புத்த மறை நூல் பிரதிகளை, ஏறத்தாழ 200 ஆண்டுகளாக பாதுகாத்து வந்துள்ளனர். மஹாலிகள், அபயகிரி என்ற மடாலயங்கள் முதன் முதலில் கட்டப்பட்டவைகளாகும்.

இன்றைய நாள்வரை, இலங்கை, புத்த மதத்தின் அடித்தளமாக விளங்குகிறது. பாலிமொழி படிக்கக் கூடிய மொழியாக விளங்குகிறது. இலங்கை பண்பாட்டினை உருவாக்குவதில் புத்த மதத்திற்கு பெரும் பங்கு உண்டு. ‘தீபவம்சம்’', “மஹா வம்சம்’ ஆகியவை பிரபலமான புத்த மூலங்கள் ஆகும்.

இந்தியக் கலைகள், ஆய்வுகள், பேச்சு நடை, நயம்பட ஓவியம் வரைதல், நடனம், நாடோடிக் கதைகள், கலை, கட்டடக்கலை ஆகியன புத்தமதத்துடன் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டன. மிகவும் புகழ் பெற்ற ஓவியமான சிக்ரியா என்னும் இடத்தில் உள்ள குகையிலும், மடாலயங்களிலும் புகழ்பெற்ற இலங்கை ஓவியங்கள் காணப்படுகின்றன. ஐந்தாவது நூற்றாண்டில் அந்த இடத்தை கஷ்யப்பா என்ற மன்னன் பலப்படுத்தினான் என்று நம்பப்படுகிறது.

இந்தியாவில் உள்ள அமராவதி கலை நடைமுறையை மாதிரியாகக் கொண்டு, குகைகளில் உருவங்கள் வரையப்பட்டுள்ளன.

## மியான்மர்

இந்திய மக்கள், அவர்களின் பண்பாடு, கிருஸ்துவ காலத்திலேயே மியான்மரை சென்றடையத் தொடங்கியது. இரண்டாவது நூற்றாண்டுக்குப் பின், அமராவதி தாமரலிப்டி பகுதிகளிலிருந்து மக்கள் மியான்மரில் குடியேறினர். குடியேறியவர்களில் வணிகர்கள், பிராமணர்கள். கலைஞர்கள் கைவினை பொருட்கள் செய்பவர்கள் ஆவர்.

11, 13-ஆம் நூற்றாண்டு வரை பர்மாவில் உள்ள “பகன்” என்ற இடம் புத்த மத பண்பாட்டின் மையமாக விளங்கியது. இந்தக் கம்பிரமான கோபுர அமைப்பில் அமைந்துள்ள வழிப்பாட்டுத் தலம் இன்னும் புகழ் பெற்று விளங்குகிறது. “அனிருதா” என்ற மன்னன் சிறந்த கட்டிட கலைப்பிரியர். அவர் ஹியுஜிகான் என்ற கோபுர அமைப்பு, வழிபாட்டுத்தலங்கள் மற்றும் ஆயிரக்கணக்கான கோயில்களையும் கட்டினார். அவர்கள் தங்களது தாய் மொழியான ‘பாலி’ மொழியை வளர்ச்சியடைய செய்ததுமல்லாமல் புத்த இந்து மத மறை நூல்களையும், பாலி மொழியில் மொழி பெயர்த்தனர்.

பர்மிய அமைச்சரவையில் இந்திய மரபுகளும் வழக்காறுகளும் பின்பற்றப்பட்டன. அவர்கள் ஜோதிடர்கள், தீர்க்கதரிசிகள், பேராசிரியர்களை “பொன்னாஸ்” என்று இன்றைய நாள் வரை அழைக்கப்படுகின்றனர். அதில் பெரும்பாலோர் மணிப்பூரைச் சார்ந்தவர்கள் என்று நம்பப்படுகிறது. பண்டிதர்கள் மிகவும் சுறுசுறுப்பானவர்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்களின் அறிவியல் அறிவு, மருத்துவம், ஜோதிடம் இவற்றில் மிகவும் பிரசத்திப் பெற்றவர்களாக விளக்கினார்கள்.





## தாய்லாந்து

1939 ஆம் ஆண்டு வரை 'சயாம்' என்று அதன் உண்மைப் பெயரால் அழைக்கப்பட்டது. முதலாம் நூற்றாண்டில் இந்தியப் பண்பாட்டின் தாக்கம் அங்கு தொடங்கியது. இந்திய பண்பாட்டை இந்திய வணிகர்களும் அவர்களை தொடர்ந்து ஆசிரியர்களும், போதகர்களும் எடுத்துச் சென்றனர். தாய் அரசுகளுக்கு தவாரவதி, ஷிரிவிஜய், சுக் கோடயா, ஆயுத்திய என்ற சமஸ்கிருத பெயர்கள் வழங்கப்பட்டன. அவர்களின் நகரங்களின் பெயர்கள் கூட இந்திய பண்பாட்டை வலிமையாக பறை சாற்றுகின்றன. உதாரணமாக கஞ்சனா பூரி என்ற பெயரிலிருந்து கஞ்சனா பூரி, ராஜ்பூரி என்ற பெயரிலிருந்து ராஜ்பூரி லேஸ்பூரி என்பதிலிருந்து லாவாபூரி, பிரசன்னாபூரி சிங்கப்பூரி என்ற பெயர்கள் எல்லாமே சமஸ்கிருத மொழியை தழுவி எடுக்கப்பட்டது. நகரத்தில் உள்ள வீதிகளின் பெயர்களான இராஜாராம், இராஜாராணி, மஹாஜயா, கக்ரவம்ஷா ஆகிய பெயர்கள் கூட நமக்கு இராமாயணத்தின் சிறப்பை நினைவுக் கூறுகிறது.

3ஆவது மற்றும் 4ஆம் நூற்றாண்டுகளில் பிரம்ம உருவங்களும், புத்தமத கோயில்களும் கட்டப்பட்டன. அவற்றுள் இறைவன் விஷ்ணுவின் பழமையான உருவமும் காணப்படுகிறது.

வெவ்வேறு காலக் கட்டங்களில், ஓர் இடத்திலிருந்து வேறு இடத்திற்கு, அந்த தாய் அரசு மாற்றப்பட்டது. எல்லா இடங்களிலும், ஏராளமான கோவில்கள் கட்டப்பட்டன. இன்றைய காலகட்டத்தில் பெரும்பாலான கோவில்கள் அழிந்தாலும், "அயோத்யாஞ என்னுமிடத்தில் உள்ள ஏராளமான கோவில்கள் இன்னும் நிலைத்து நிற்கின்றன. இன்றைய தலை நகரமான பாங்காக்கில் மட்டும் 400 கோவில்கள் இருக்கின்றன.

## கம்போடியா

புகழ் பெற்ற அரசுகளான 'சம்பா (அன்னம்) மற்றும் கம்பூஜா (கம்போடியா)' வை இந்திய மரபு வழியில் வந்த அரசர்கள் ஆட்சி செய்தனர். இந்தியாவிற்கும், கம்போடியாவிற்கும் இடையே முதலாம், இரண்டாம் நூற்றாண்டிலிருந்தே ஆழமான பண்பாட்டுத் தொடர்பு, இருந்தது. முதலாம் நூற்றாண்டிலிருந்தே, காம்பூஜா வை, கவுன்டின்யா வம்சத்தை சார்ந்த இந்திய மரபு வழி மன்னர்கள் ஆண்டனர். ஏராளமான சமஸ்கிருத கல்வெட்டுகளிலிருந்தும் இலக்கிய சான்றுகளிலிருந்தும் அவர்களுடைய வரலாற்றை மறு நிர்ணயம் செய்ய முடியும். அங்குள்ள பிரமாண்டமான கோவில்களின் மூலம் அவர்களின் சிறப்பை அறியலாம்.

கம்போடியா மக்கள் பிரமாண்டமான நினைவு சின்னங்களை எழுப்பி அதை, இந்திய இதிகாசங்களிலும் புராணங்களிலும் பிரதிநிதிகளாக விளங்குகின்ற சிவன், விஷ்ணு, புத்தர், பிற கடவுள் தன்மையுள்ள சிற்பங்களால் அழகு படுத்தினர்.

புத்தகத்தில் உள்ள நிகழ்வுகளை அரசரால் தேர்ந்தெடுக்கப்பட்டது, பெரிய வரலாற்று நிகழ்வுக்கு அடையாளமாகும் பதினான்காம் நூற்றாண்டு வரை, சமஸ்கிருத மொழி ஆட்சி மொழியாக இருந்தது.

மன்னர்கள் சமஸ்கிருத பெயர்களைக் கொண்டு இருந்தார்கள். பிராமணர்கள் உயர்ந்த பதவியில் இருந்தனர். இந்துமத அமைப்பு முறையையும் பிரமாண நீதி சாஸ்திர முறையையும் அடிப்படையாகக் கொண்டு ஆட்சி நடத்தப்பட்டது. கற்றல் மையங்களான ஆஸ்ரமங்கள் கோவிலுக்கு அருகாமையிலேயே அமைக்கப்பட்டு நிர்வக்கிப்பட்டன. தாமரபுரா, துருவபுரா மற்றும் விக்ரமபுரா போன்ற இந்திய பெயர்கள், ஏராளமான வட்டாரங்களுக்கு கொடுக்கப்பட்டன. செட், பிசக், ஜெஸ் அசத் மாதத்தின் பெயர்கள் அவர்களது மொழியில் செட், பிசக், ஜெத், அசத் என வழங்கப்பட்டது. ஆயிரக்கணக்கான சொற்கள் உச்சரிப்பில் சிறிது மாறுதலுடன் இன்றைய நாள்வரை புழக்கத்தில் உள்ளன.

வைகுண்ட தாமா, அதாவது விஷ்ணு தங்கின இடம் "அங்கோர் வாட்" என்று யூகிகப்படுகிறது. அதனுடைய ஐந்து கோபுரங்கள், சுமேருமலையின் 5 சிகரங்கள் என்று கூறப்படுகிறது. அங்கு அரசன் சூர்யவர்மனை, அவனுடைய மெச்சத்தக்க செயல்களுக்காக, விஷ்ணுவின் அவதாரம் என வர்ணிக்கப்பட்டுள்ளது. விரிவான அகழி நான்கு புறமும் சூழ, ஒரு சதுர மைலில் கட்டுப்பட்டுள்ளன கண்ணைக் கவரக் கூடிய இந்த கோவில் ஒரு அடையாளமாக திகழ்கிறது. இராமாயணம், மகாபாரத்தில் வரும் சம்பவங்கள் இந்தக் கோவிலின் சுவர்களில் செதுக்கப்பட்டுள்ளது. சமுத்திர மந்தன் கடலை கடையும் நிகழ்வுதான் எல்லா நிகழ்வுகளைவிட பெரிய நிகழ்வாகத் திகழ்கிறது. பதினோராம் நூற்றாண்டில் யசோதாபுரம் என்ற இடத்தில் கட்டப்பட்ட பிரமாண்டமான, 'பாபுவான்' என்று அழைக்கப்படுகிற மற்றுமொரு கோவிலில் இதிகாசங்களில் வரும் சம்பவங்களான இராமனுக்கும், இராவணனுக்கும் நிகழ்ந்த போர், கைலாயத்தில் பார்வதியுடன் இருக்கும் சிவன், காமதேவனை அழிக்கும் காட்சிகள் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளன.

## வியட்நாம் (சம்பா)

வணிகர்கள், இளவரசர்கள் ஆகியோர் இடம் பெயர்ந்து, அரசியல்வாதிகளாகவும் முன்னோடிகளாகவும் தங்களை நிலை நாட்டி, இந்தியப் பண்பாட்டை தொலை தூர நாடான வியட்நாமிற்கு எடுத்து சென்றனர். அவர்கள் அங்குள்ள நகரங்களுக்கு இந்திரபுரா, அமராவதி, விஜயா, கௌதாரா பாண்டு ரங்கா எனப் பெயரிட்டனர்.

சம்பா நகரத்து மக்கள் 'சாம்' என அழைக்கப்பட்டனர். அவர்கள் ஏராளமான இந்து கோயில்களையும், புத்த கோவில்களையும் கட்டினார்கள். சாம் மக்கள் சிவா, கணேசா, சரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி, புத்தா மற்றும் லோகஸ்வராவை வழிபட்டனர். இந்த கோவில்கள் பெண் தெய்வங்களின் உருவங்கள் சிவலிங்கம் குடியிருக்கும் இடங்களாக இருந்தன. இன்று, பெரும்பலான கோவில்கள் அழியும் நிலையில் உள்ளன.

## மலேசியா

பழங்காலத்திலிருந்தே நமக்கு மலேசியாவைப் பற்றி தெரியும். இராமாயணம், ஜடகா கதைகள், மலின்ட பன்ஹா, சிலப்பதிகாரம், ரகுவம்சம் ஆகிய காப்பியங்களிலும் பிறகாப்பியங்களிலும் இதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. சைவ, சமயத்தைப் பற்றின, நம்பகமான ஆதாரங்கள் 'கெடா', வெல்லெஸ்லி என்ற மாகாணத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. திரிசூலாயுதத்துடன் கூடிய பெண்ணின் சிறிய உருவம் நிலத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. ஏழாம், எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த கடினமான பாறையால் செய்யப்பட்ட நந்தியின் தலை, துர்காவின் உருவச் சின்னம், சிவலிங்கம் ஆகியவற்றை பல்வேறு இடங்களிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பழங்கால மலேசியாவில் "பிராமி" என்ற எழுத்து வடிவம் தான் "கெடா" என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பழைய தமிழ் எழுத்தைப் போன்றே, புத்தமத பட்டயத் தகடுகள் ஒத்திருந்தது. சமஸ்கிருதம் அவர்களது மூல மொழிகளில் ஒன்றாகும். ஏராளமான சமஸ்கிருதசொற்கள் உதாரணமாக, ஸ்வர்கா, ராசா, குணா, தடா, மந்திகி 'லக்ஷா' போன்ற வார்த்தைகள் அவர்களுடைய மொழியில் காணப்படுகிறது. மலேசியாவில் அனுமான் கருடா போன்றவர்கள் மனித ஆற்றலுக்கும் மேம்பட்ட திறமைசாலிகளாக அறியப் படுகிறார்கள். சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட கல்வெட்டுகள் முந்தைய காலத்தில் நமக்கும், மலேசியாவிற்கும் இருந்த பண்பாட்டுத் தொடர்பு பற்றி கூறும் ஓர் முக்கியமான ஆவணம் ஆகும். அவைகள் 4-ஆம் மற்றும் 5-ஆம் நூற்றாண்டில் இந்திய எழுத்து வடிவத்தில் எழுதப்பட்டன. "லிக்கர்ஞு என்ற இடத்தில் தான் முக்கியமான கல்வெட்டு உள்ளது. இந்த இடத்தைச் சுற்றி ஐம்பதுக்கும் மேலான கோவில்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.





## இந்தோனேசியா

இந்தோனேசியாவின் மிகப்பெரிய சிவன் கோவில் ஜாவா தீவில் அமைந்துள்ளது என சமயக் கட்டிடக்கலை ஆய்வு கூறுகின்றது. இந்தக் கோவில் 9-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ளது. இங்குள்ள சிவன் கோவிலுக்கு வலப்பக்கமும், இடப் பக்கமும் விஷ்ணு கோவில்கள் பிரம்மன் கோவில்கள் உள்ளன. இந்த மூன்று கோவில்களுக்கு எதிர்புறமாக அவர்களின் வாகனங்களுக் காக கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. அவை நந்தி (எருது) சிவனுக்காக, கருடன் விஷ்ணுவுக்காக, பெண் வாத்து பிரம்மனுக்காக கட்டப்பட்டன. இதற்கு இடையில் துர்க்கைக்கும் கணேசனுக்கும் அர்ப்பணிக்கப்பட்ட 8 கோவில்களும், இரண்டு வரிசைகளில் 240 கோவில்களால் சூழப்பட்டுள்ளன. இது ஒரு சிறந்த கட்டிடக்கலைக்கு அற்புதமான எடுத்துக் காட்டாகும். உலகிலேயே மிகப் பழமையான கட்டடக் கலையின் பிரதிநிதித்வம், கோவில் சுவர்களில் செதுக்கப்பட்டுள்ள இராமாயணமும் கிருஷ்ணனின் கதைகளுமாகும்.

பூஜையின் பொழுது சமஸ்கிருத துதி பாடல்கள் ஒதப்பட்டன. ஐந்நூறுக்கும் மேலான துதி பாடல்கள், ஸ்தோத்திரங்கள் சிவன், பிரம்மன், துர்க்கை, கணேசன், புத்தருக்கு அர்ப்பணிக்கப்பட்டன, பிறபெண் தெய்வங்களின் உருவங்கள் ‘பாலி’ நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டன. பாலி என்ற ஒரே ஒரு நாட்டில் மட்டும் தான் இந்து பண்பாடு செழிப்புற்று தொடர்ந்து புழுக்கத்தில் உள்ளது. இன்றைய நாளில் தீவுகளால் சூழப்பட்ட நாடுகள் முழுவதும், இஸ்லாமிய மதத்தை ஏற்றுக் கொண்ட போது, பாலி நாடு மட்டும் இந்து மத பண்பாட்டையும் இந்து சமயத்தையும் கடைப்பிடிக்கின்றது.

ஜாவாவில் ஏராளமான திருமறை நூல்கள் கண்டெக்கப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பான்மையானவை பனை ஓலைகளில் ‘கவி’ என்ற பழமையான எழுத்து வடிவத்தால் எழுதப்பட்டுள்ளன. ‘பிராமி’ என்ற எழுத்து வடிவத்தின் சாயலைக் கொண்டு ‘கவி’ என்ற கைப் பிரதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில சமஸ்கிருத கவிதைகள் (ஸ்லோகங்கள்) அதனைத் தொடர்ந்து கவி மொழியில் விளக்க உரைகளம் இருந்தன. சைவ, சமய மற்றும் தத்துவம் புத்தகங்களுக்கிடையே “புவன கோட்சாஞ என்ற புத்தகம் மிகப் பழமையான நீண்ட புத்தகமாகும். இந்த புத்தகத்தில் ஐநூற்றி இருபத்தி ஐந்து ஸ்லோகங்கள் சமஸ்கிருத மொழியல் உள்ளன. பொருளை விவரிப்பதற்கு விளக்க உரை எழுதப்பட்டிருந்தன.

உலகில் எந்த ஒரு பகுதியும், இந்திய பண்பாட்டின் சமயத்தின் தாக்கத்தை, தென் கிழக்கு ஆசியாவைப் போல் உணர்ந்த இல்லை. பண்பாட்டு தொடர்பு, பண்பாட்டின் தாக்கம் ஆகியன பற்றி அறிய உதவக் கூடிய முக்கியமான மூலக் கூறுகள். இந்திய கையெழுத்து பிரதிகளில் எழுதப்பட்ட சமஸ்கிருத புத்தகத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இவை இந்த வட்டாரத்தில் எங்கும் காணப்படுகிறது. மொழி, இலக்கியம், சமய, அரசியல், சமூக நிறுவனங்கள் இந்தியாவினால் செல்வாக்கு பெற்றன. அவர்களுக்கு வர்ணாஸ்ரம் முறையில் சமுதாயத்தில் உள்ள 4 ஜாதி பிரிவுகளான பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்தரர்கள் பற்றி நன்கு தெரியும். ஆனால் அந்த முறை இந்தியாவை போல் வளைந்து கொடுக்க முடியாததாக இருந்தது. ரிக் வேத காலத்தைப் போலவே, சமுதாயம் தொழில் அடிப்படையில் பிரிக்கப்படடிருந்தது. ஆனால் குறிப்பாக பாலி நாட்டில் பிறப்பின் அடிப்படையில் தான் சமுதாயம் பிரிக்கப்பட்டு வந்தது. அவர்களுடைய திருமண பழக்க வழக்கங்களும் ஒரே மாதிரியாக உள்ளன.

மிகவும் புகழ் பெற்ற கேளிக்கையான நிழல் விளையாட்டை “வாயங்ஞ என்று அழைக்கப்படுகிறது. (இந்திய பொம்மலாட்டம் போல). இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதத்திலிருந்து எடுக்கப்பட்ட கருப்பொருளை மூலமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட “வாயங்ஞ என்று அழைக்கப்படுகிற நிழல் விளையாட்டு, இன்னும் தென்கிழக்கு ஆசியாவில் மகிவும் புகழ் பெற்று விளங்குகிறது.





## இப்பகுதிக்கான கேள்விகள் 21.3

1. இலங்கையில் உள்ள முதல் இரண்டு மடலாயங்களின் பெயர்களைக் கூறுக?
2. புத்த மதம் எவ்வாறு இலங்கை அடைந்தது?
3. எந்த மொழி இலங்கையின் இலக்கிய மொழியாக ஆனது?
4. அங்கோர்வாட் என்பது என்ன?
5. அங்கோர்வாட்டின் ஐந்து கோபுரங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?
6. அங்கோர்வாட்டில் எது சித்தரிக்கப்பட்டுள்ளது? ஏன்?
7. அங்கோர்வாட் கோவில் எதற்கு பிரதிநிதித்துவமாக விளங்குகிறது?
8. அங்கோர்வாட் சுவர்களில் என்ன செதுக்கப்பட்டுள்ளது?
9. எந்த ஒரு முக்கியமான காட்சியை அங்கோர்வாட் கோவில் சுவர்களில் செதுக்கப் பட்டுள்ளது?
10. பழனை அழகுபடுத்துவது எது?
11. இந்திய பண்பாட்டை அடிப்படையாக்கக் கொண்டு வியட்நாமிலுள்ள இரண்டு நகரங்களின் பெயர்களைக் கூறுக?
12. சைவத்திற்கு சான்றுகள், மலேசியாவில் எங்கு கண்டு பிடிக்கப்பட்டுள்ளன?
13. மலேசியாவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சில கவர்ச்சியான பெண்களின் உருவங்கள் என்ன?
14. எந்தெந்த சமஸ்கிருத எழுத்துகள் மலேசிய மொழியில் இடம் பெற்றுள்ளன?
15. கி.பி. நான்காம், ஐந்தாம் நூற்றாண்டுகளில் மலேசியாவின் மிக முக்கியமான கல்வெட்டு எது?
16. "லிகோரில்ஞ எத்தனை கோவில்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன?
17. "பிரமபனன்ஞ என்பது என்ன?
18. சிவன், விஷ்ணு, பிரம்மன் கோவில்களுக்கு எதிராக கட்டப்பட்டுள்ளவை எவை?
19. இந்தோனிசியாவில் உள்ள ஜாவா என்னும் தீவில் எத்தனை கோவில்கள் உள்ளன?
20. எந்த கதைகள் இந்தோனிசியாவில் உள்ள கோவில் சுவர்களில் செதுக்கப்பட்டுள்ளன?
21. இந்தோனிசியாவில் உள்ள பாலியில் என்ன கண்டுபிடிக்கப்பட்டது?

## 21.6 இந்தியாவிற்கும் அரேபிய நாகரிகத்திற்கும் உள்ள தொடர்பு

பண்டைய காலத்திலிருந்தே, இந்தியா மேற்கு ஆசியாவுடன் தரை வழியாகவும் கடல் வழியாகவும் தொடர்பு கொண்டிருந்தது. இவ்விரு பண்பாட்டு மண்டலங்களுக்கிடையே ஏற்பட்ட பிணைப்பு, மேற்கு ஆசியாவில், இஸ்லாமிய நாகரிகத்தின் தோன்றலுக்கும் பரவுதலுக்கும் முற்றுப்புள்ளி வைத்தது. பொருளாதரா உறவு பற்றி ஏராளமான குறிப்புகள் 9ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் அரேபிய மற்றும் பிற பயணிகளான சுலைமான், வியாபாரி, அல்மசூடா, சிபின் ஹௌகல், அல்இட்ரிசி முதலியவர்கள் பொருளாதாரா உறவுக்கு உறுதி அளித்துள்ளனர். பண்பாட்டு பரிமாற்றத்திற்கு சான்றுகள் 8-ஆம் நூற்றாண்டிலும் அதற்கு முன்பிருந்தும் கிடைத்தன.

இந்தியாவுக்கும், மேற்கு ஆசியாவிற்கும் இடையிலான பண்பாட்டு பிணைப்பிற்கு ஆதாரங்கள் பல இடங்களில் உள்ளன. இதனால் இஸ்லாமிய உலகம் எவ்வாறு செல்வாக்கு பெற்றது என்பதை இங்கு காணலாம். வான சாஸ்திர துறையில் பிரம்ம-சுபுடா-சித்தாந்தா-

அரேபிய உலகிற்கு பரிச்சயமான 'சித்தன்', "கண்டக தாயகா" (ஆர்கன்ட் என்று அழைக்கப்படுகின்ற) என்ற 2 முக்கியமான நூல்கள் சிந்திலிருந்து பாக்தாத்திற்கு தூதுவர்களால் கொண்டுவரப்பட்டது. இந்த தூதுரகத்தைச் சார்ந்த இந்திய அறிஞர்களின் உதவியால் இவைகள் அரேபிய மொழியில் 'அல்பாசாரி' என்பவரால் 'யாகூப் லன்டாரிக்' என்பவரின் உதவியுடன் மொழி பெயர்க்கப்பட்டன. பிறகு ஆர்யப்பட்டா மற்றம் வராகமிகிராவின் வாச சாஸ்திர நூல்கள் படிக்கப்பட்டு அரேபியர்களின் அறிவியல் இலக்கியத்தோடு சேர்த்துக் கொள்ளப்பட்டன.

அரேபிய நாகரிகத்திற்கு இந்தியாவின் மற்றுமொரு முக்கியமான பங்களிப்பு என்னவென்றால் 'கணிதத்தை' 'ஹின்டிசா' என அழைப்பதன் மூலம், அரேபியர்கள், இந்தியாவிற்கு அவர்களது நன்றிக் கடனை ஒப்புக் கொண்டார்கள். அவர்களது படிப்பிலும் கலந்துரையாடலிலும், இந்தியக் கணிதம்., மிகவும் பிடித்தமானதாக அமைந்தது. 'அல்கிண்டி' மற்றும் பிறரால் இதனுடைய புகழ் மேலும் உயர்ந்தது.

பூஜ்யத்தை மையமாக வைத்து சிறந்த பண்புக் கூறுகளான இந்திய தசம முறையை அவர்கள் மிகவும் பாராட்டினார்கள். அதே காலத்தில் வாழ்ந்த சிரியாவைச் சார்ந்த அறிஞர் சிறப்பான பங்களிப்பை கொடுத்தார். ஓன்பது வகை குறியிடுகளினால் இந்த கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏனென்றால் அவர்கள் கிரேக்க மொழி பேசுவதால், அறிவியலின் அளவை அடைந்தவர்களாக அறிய வேண்டும். கொஞ்சம் தெரிந்த மற்றவர்களையும் இணங்க வைக்கவேண்டும்.

10ஆம், 13ஆம் நூற்றாண்டுகளில் கிடைத்த அரேபிய மூலங்கள் ஏராளமான இந்தியப் படைப்புகளான மருத்துவம், நோய் தீர்க்கும் முறைகள், பாக்தாத்தின் அரசன் A.D. 786 லிருந்து 809 வரை காலிப்ஹரூன்-அல்-ரஷிட்டின் கட்டளைப்படி அரேபிய மொழியில் எழுதப்பட்டன. இந்திய அறிஞர்களும் இந்த மொழி பெயர்த்தலில் ஈடுபட்டார்கள். உதாரணமாக சுஸ்ருதா சம்ஹிதாவை மாங்க் என்று அழைக்கப்படுகின்ற ஒரு இந்தியர் அரேபிய மொழியில் மொழி பெயர்த்துள்ளார்.

வானியல், ஜோதிடம், கணிதம், மருத்துவம் தவிர இந்திய பண்பாட்டின் நாகரிகத்தின் பண்புக்கூறுகளை அரேபியர்கள் மிகுதியான ஈடுபாட்டுடன் பாராட்டினார்கள். அவர்கள் இந்திய நூல்களை பல்வேறு பாடங்களில் மொழி பெயர்த்தனர். ஆனாலும் அவர்கள் அத்துடன் திருப்தியடையாததால், மறுபடியும் அந்த நூல்களின் மூலப் படிவத்தின் ஆக்கக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டும் அல்லது ஆய்வுக் கட்டுகரைகளை அடிப்படையாகக் கொண்டும் மொழி பெயர்த்தனர். பாம்புகடி விஷம், கால்நடை மருத்துவம் தர்க்கவியல் தத்துவம், ஓழுக்கவியல், அரசியல், அறிவியல் போராட்டம் ஆகியவை அடங்கும். அவர்களின் செயல்முறையும், சொல் தொகுதியும் பெரும அளவில் வளர்ச்சியடைந்தன எனலாம்.

கப்பல் போக்குவரத்தினால் மதிப்புமிக்கவர்களாக, நிறைய சொல் தொகுதி தெரிந்தவர்களாக மாறினார்கள் என்பதை ஹோரி என்ற சொல்லிலிருந்து 'ஹிர்டர்' (ஒரு சிறிய படகு) 'பானவி' என்பதிலிருந்து பானியர் அல்லது வானிக் டோன்றி என்பதிலிருந்து டோங்கி என்ற ஏராளமான இந்திய தொடக்கத்தை கொண்ட அரேபிய சொற்களிலிருந்து உணர முடியும்.

## 21.7 ரோமாபுரியுடன் இந்தியாவின் தொடர்பு

தென் இந்தியாவின் பொருட்களுக்கு மேற்கத்திய நாடுகளில் தேவை அதிகமாக இருந்தது. கிருஸ்துவ சகாப்தத்தின் முதல் முன்று நூற்றாண்டுகளில் மேற்கத்திய நாடுகளுடன் செய்த

கடல்வழி வாணிகத்தில் முக்கியமான பிரதிநிதியாக ரோமானியப் பேரரசு விளங்கியது. அதுவே இந்தியாவின் சிறந்த வாடிக்கையாளராகவும் மாறியது. இந்த வாணிகம் பெரும்பான்மையாக தென்னிந்தியாவில் நடைபெற்றது என்பதை, இலக்கிய புத்தகங்களிலும் கோயமுத்தூரிலும் மதுரையிலும் காணப்பட்ட ரோமபுரி நாணயங்களும் சான்று பகர்கின்றன. மிளகு, வெற்றிலை, நறுமண பொருட்கள், வாசனைத் திரவியங்கள், விலையுயர்ந்த கற்களான வெண்ணிற உலோகம், இரத்தினம், வைரம், சிவப்புக்கல், நீலம் கலந்த சிவப்பு மணிக்கல், முத்து, தங்கம், பட்டு மட்டும் மென்துகில் வகை போன்ற பொருட்களுக்கு பெருமளவில் தேவை ஏற்பட்டது.

ரோமப் பேரரசுடன் கொண்ட வாணிகம் இந்தியாவிற்கு தங்கத்தை கொடுத்ததுமில்லாமல், அவர்களுக்கு வாணிகத்தில் ஒரு சாதகமான நிலையையும் ஏற்படுத்தியது. மேலும் அந்நாள்களில் குஷாணப் பேரரசில் தங்க நாணய செலவாணி முறை ஏற்படுத்தியது. தமிழக அரசர்கள் போர்க்களத்தில் தங்களுடைய கூடாரங்களைக் காவல் செய்வதற்கும், மதுரை நகரத்தின் நுழைவாயிலைக் காப்பதற்கும் யவனர்களை நியமித்தனர். பண்டைய கால இந்தியாவில், மேற்கு ஆசியா, மத்திய தரைக்கடல் வட்டாரங்களை சார்ந்த மக்கள், கிரேக்கர்கள் மற்றும் ரோமனியர்கள் உள்பட யாவனர்கள் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. சில வரலாற்று ஆசிரியர்கள், "யவனா" என்ற மெய்க்காப்பாளர்கள், பண்டைய ரோமாபுரி படைப்பிரிவின் ஒரு பகுதியினர் ஆக இருந்தனர்.

இந்த சமயத்தில் காவேரிப்பட்டினம் மிக முக்கியமான அயல்நாட்டு வாணிக மையமாக விளங்கியது. தளமேடை, பண்டகச் சாலைகள், விற்பனைப் பொருள் ஆகியவற்றை சேகரிக்கும் இடங்கள் காவேரிபூம்பட்டின கரையோரத்தில் கட்டப்பட்டன. இந்தப் பொருட்களின் மீது, சோழர்களின் 'புலி' சின்னம் பொறிக்கப்பட்டு, சுங்க வரி கட்டின பிறகு வணிகர்களின் வணிகக் கிடங்குகளுக்கு அனுப்பப்பட்டன (பட்டினப்பாலை). அதனருகில் யவண வணிகர் குடியிருப்பும் பல அன்னிய மொழிகளைப் பேசுபவர்களின் தனி குடியிருப்பு பகுதிகளும் இருந்தன. அந்தக் குடியிருப்போருக்கு தேவையான பொருட்கள் பெரிய சந்தைகளில் கிடைக்கப் பெற்றனர்.

இங்கு நறுமண பசை, நறுமணப்பொடி, மலர்கள், சாம்பிராணி விற்பவர்கள், பட்டாடை, கம்பளி, பருத்தி ஆடைதைக்கும் தையல்காரர், சந்தனம், பவழம், முத்து, தங்கம், விலையுயர்ந்த கற்கள் ஆகியவற்றை விற்பனை செய்பவர்கள். தானிய வணிகர்கள், சலவைத் தொழிலாளர், மீன் விற்பவர், உப்பு விற்பவர், இறைச்சிவிற்பவர், கொல்லர், தச்சு வேலை செய்பவர், பொற் கொல்லர், ஓவியர், சிற்பிகள், செருப்பு பழுது பார்பவர் பொம்மை செய்பவர்கள் ஆகியவர்கள் காணப்பட்டனர். அரேபிய நாடுகளிலிருந்து குதிரைகளும் இந்த சந்தைகளுக்கு கொண்டு வரப்பட்டன.

பெரும்பாலான பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்காக திரட்டப்பட்டன. இந்தியாவின் ஏற்றுமதி பொருட்களில் மிளகு விலை, இஞ்சியின் விலை, அவற்றின் அசல் விலையை விட நூறு மடங்கு ஏறியது என்பது பிளினியன் கூற்றாகும்.

இந்தியாவிலிருந்து சாம்பிராணி, மசாலா பொருட்கள், நறுமணப் பொருட்கள் ஆகியவற்றுக்கு தேவை அதிகமாக இருந்தது. ரோமபுரியில் இந்தப் பொருட்களின் உபயோகத்தின் அளவு ஏராளமாக இருந்தது.

அயல்நாட்டவருடன் கொண்ட வாணிகம் மிகவும் அதிகமாக இருந்தது என்பதை, இந்திய அரசர்கள் அனுப்பிய ஏராளமான அரசுத்தூதுவர்கள் மூலம் புரிந்து கொள்ளலாம். முதலாம் நூற்றாண்டில், பாண்டிய மன்னன் ஒரு அரசுத் தூதுவரை ரோமாபுரி மன்னர் அகஸ்டசுக்கு





அனுப்பினான். கி.பி.99க்கு அப்புறம் தூதுவர்கள் ட்ராய் நகரத்துக்கு அனுப்பப்பட்டனர். கிளாடியஸ் (இலங்கையிலிருந்து) டிரோஜன், ஆன்டோன்மிஸ், புயிஸ், இன்ஸ்டிமான் மற்றும் பிற அரசுத் தூதுவர்கள் பல்வேறு இந்திய மன்னர்களின் அவையை அலங்கரித்தனர்.

ரோமாபுரியுடன் பெருமளவிலான வாணிகம் இருந்ததால் அதை எளிதாக இயக்க, மேற்கு கடற்கரை பகுதியில் சோப்ரா, பர்காசா (புரோச்) ஆகிய துறைமுகங்கள் கட்டப்பட்டன. அதே சமயம் கிழக்கே கோரமண்டல கடற்கரைப் பகுதியில் தங்க கெர்சோனிஸ் (சுவர்ணபூமி) மற்றும் தங்க கிரில் (சுவமட்வியா) உடன் வாணிகம் நடந்தது.

சோழ மன்னர்கள் இரவில் கப்பல்கள் துறைமுகத்திற்கு செல்ல வழி காட்டு வதற்காக, சுடரொளி வீசக் கூடிய விளக்குகளால் ஆன கலங்கரை விளக்கத்தை அமைத்தனர்.

பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ள அரிக்காமேடு என்ற இடத்தில் களி மண்ணால் செய்யப்பட்ட “அரிட்டைன்” என்று அழைக்கப்படுகிற இத்தாலிய மண்குடத்தின் மாதிரி துணுக்கு மண்பாண்டங்கள் செய்யும் குயவரின் முத்திரை பதித்த மற்றும் ரோமானிய விளக்கின் உடைந்த ஒரு சிறு பகுதியும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அயல்நாட்டு வாணிகம் ஆந்திரா வட்டாரத்தில் நடந்தது என்பதற்கு ஆதார சான்றுகள் உள்ளன.

‘பைதானா’ என்ற நகரத்தில் கப்பலில் கற்கள், தகரம், பருத்தி, மென்துகில், நெசவு சார்ந்த பொருட்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டன. ஆந்திரா அரசன் ‘யக்னஹீ’ என்பவர் கப்பல் வடிவத்திலான அரிதான வகையைச் சார்ந்த நாணயத்தை நாட்டின் கடல் வழி வாணிகத்தின் சின்னமாக வெளியிட்டார்.

## 21.8 கப்பல்களும் அயல்நாட்டு வாணிகமும்

இவ்வாறு வாணிகம் முக்கிய தொழிலாக மாறி, இந்திய பண்பாடு அயல் நாடுகளில் பரவுவதற்கு உதவியது. பழங்காலத்தில் பல நாடுகளுடன் வாணிகத் தொடர்பை ஏற்படுத்துவதற்காக நமது கப்பல்கள் பரந்த கடல் வெளியில் பயணம் செய்து அயல் நாட்டுக் கடற்கரையை அடைந்தார்கள். அண்டைய நாடுகளின் இலக்கியம், கலை, சிற்பக்கலை ஆகியவை, இந்திய பண்பாடு மற்றம் நாகரிகத்தின் தாக்கத்தை தெளிவாக காண்பிக்கின்றன. சுரிளான் கரீபியன் தீவுகள் போன்ற இடங்கள் அமெரிக்க கடற்கரையோரத்திற்கு வெகு தூரம் இருந்தாலும் பழங்கால இந்திய பண்பாட்டின் சான்றுகள் அங்கு உள்ளன.

சமுத்திர குப்தர் (கி.பி.340-380) சக்தி வாய்ந்த தரைப்படை வைத்திருந்தது மட்டுமில்லாமல், வலிமையான கடற்படையையும் வைத்திருந்தார். குப்தர்கள் காலத்தில் இந்திய மாலுமிகளின் செயல்கள் பற்றிய கல்வெட்டுகள் டிரான்ஸ்கங்கை தீபகற்பத்திலும், தீவுகள் நிறைந்த கடலால் சூழப்பட்ட மலேயாவிலும் கண்டெக்கப்பட்டன. பேரரசர் ஹர்ஷரின் (கி.பி.606-647) ஆட்சி காலத்தில் “யுவான் சுவாங்” இந்தியாவிற்கு வருகை புரிந்து, இந்தியா அந்த நாள்களில் எப்படி இருந்தது என்பது பற்றி விளக்கமான வர்ணனை எழுதியுள்ளார். சோழ மன்னர்கள் வலிமையான கப்பற் படையை உருவாக்கி, கடல் கடந்து தாக்குதல் நடத்தினார்கள்.

போர்ச்சுக்கீசியர்கள் சில இந்திய வணிகர்கள் ஐம்பதிற்கும் மேற்பட்ட கப்பல்களை சொந்தமாக்கிவிட்டார்கள் என்பதை கூர்ந்து கவனித்தார்கள். அவர்களை பொருத்தவரை, வணிகர்கள் சொந்தமாக கப்பல் வைத்திருப்பது ஒரு வழக்கமான நடைமுறையாக இருந்தது.

மேற்கில் பல்வேறு பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்ட சிந்து சமவெளி நாகரிக காலத்தைச் சார்ந்த குறிப்பிடத்தக்க பொருட்கள் மூவாயிரம் நூற்றாண்டுகளில் வாணிகம் கலாச்சார தொடர்பு, எகிப்திய, மெசபடோமியன் நாகரிகத்திற்கும் இருந்தது என்பதை நிரூபிக்கின்றன. இந்தியாவும் பழங்கால பெர்சியா, கீரிஸ், ரோமாபுரியுடன் இந்தியா கொண்டிருந்த தொடர்பு, கலாச்சார சமயம் சார்ந்த மற்றும் சமூகக் கருத்துக்கள் பரிமாற்றம் செய்வதற்கு தூண்டு கோலாக அமைந்தது. ரோமானியப் பேரரசுடன் இந்தியா கொண்ட செழிப்பான வர்த்தகம் ரோமாபுரியின் பொருள் வளத்தை நலிவுறச் செய்தது என்று வரலாற்று ஆசிரியர் 'பிளினி' ஊர்ஜித்தப்படுத்துகிறார்.

## 21.9 இந்தத் தொடர்பினால் இந்தியர்கள் எவற்றை கற்றுக்கொண்டார்கள்

இந்தியர்கள் பல புதிய விஷயங்களை அயல் நாட்டவரிடமிருந்து கற்றுக் கொண்டனர். உதாரணமாக, கீரிஸ், ரோமானிய மக்களிடமிருந்து தங்க நாணயம் அச்சடிக்கும் முறை, சீனாவிடமிருந்து பட்டு உருவாக்கும் கலையை கற்றுக் கொண்டனர். இந்தோனேசியாவிட மிருந்து வெற்றிலை வளர்ப்பதைப் பற்றி கற்றுக் கொண்டனர். அவர்கள் அயல் நாட்டவருடன் வாணிகத் தொடர்பை ஏற்படுத்தி கொண்டனர். பல்வேறு நாடுகளின் கலையும், பண்பாடும், இந்திய பண்பாட்டில் பிரதிபலித்தன. ஆனால் மற்ற நாடுகள் அதை காட்டிலும் பிரகாசித்தன.

### இப்பகுதிக்கான கேள்விகள் 21.4

1. எத்தனை ஆண்டுகளாக இந்தியாவிற்கும் அரேபியாவிற்கும் இடையே பொருளாதார உறவு இருந்தது?
2. புகழ் பெற்ற அரேபிய பயணிகள் சிலரின் பெயரைக் குறிப்பிடுக?
3. அரேபிய உலகிற்கு, இந்தியாவினால் கொடுக்கப்பட்ட இரண்டு வானியல் சார்ந்த படைப்பு களின் பெயரைக் கூறுக?
4. அரேபியர்களுக்கு கணிதத் துறையில் இந்தியர்களின் பங்களிப்பு என்ன?
5. 'சுஸ்ருதி சம்ஹிதாவை' அரேபிய மொழியில் மொழி பெயர்த்தவர் யார்?
6. இந்திய படைப்புகளை (மருத்துவம் மற்றும் நோய் தீர்க்கும் கலை பற்றின) யாருடைய கட்டளையின் கீழ் அரேபியர்களுக்கு வழங்கப்பட்டது?
7. மற்ற எந்த துறைகளில் இந்தியரின் அறிவாற்றலைப் பற்றி அரேபியர்கள் படித்துள்ளனர்?
8. இந்தியாவில் எங்கு ரோம நாணயம் காணப்பட்டது?
9. அரேபியாவில் எந்தெந்த பொருட்களுக்கு அதிக தேவை இருந்தது?
10. எவ்வாறு குஷாண பேரரசில் நிலையான தங்க செலவாணி ஏற்படுத்தப்பட்டது?
11. யவனர்கள் என்பவர் யார்?
12. பழங்கால இந்தியாவில் யவனர்களின் வேலை யாது?
13. இத்தாலியின் களிமண்ணாலான மட்பாண்டத்தின் சிறுகூறு இந்தியாவில் எங்கு கண்டெடுக்கப்பட்டது?
14. எந்த ஆந்திர மன்னன், கப்பல் வடிவத்திலான அரிதான வகையைச் சார்ந்த நாணயத்தை நாட்டின் கடல்வழி வாணிகத்தின் சின்னமாக வெளியிட்டார்?

## நீங்கள் படித்து தெரிந்து கொண்டது

- பழமையான காலத்தில், இந்திய பண்பாடு உலகின் பல்வேறு பாகங்களுக்கு வெவ்வேறு பாணியில் பரவினது.
- இந்திய பல்கலைக்கழகங்கள், கல்வி தரத்தில் புகழ் பெற்று இருந்ததால் பல நாடுகளிலுள்ள மாணவர்களால் கவரப்பட்டது.
- இந்த மாணவர்கள் இந்திய பண்பாட்டை பரப்பும் பிரதிநிதிகளாக ஈடுபட்டனர்.
- சமஸ்கிருதம், புத்த சமய நூல்கள் வெவ்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. அவை இந்திய பண்பாட்டைப் பெருக்குவதற்கு சிறந்த பாணியாக அமைந்தன.
- இத்தகைய நாடுகளில் ஏராளமான மடாலயங்களும் கோவில்களும் கட்டப்பட்டு, இந்திய பண்பாடும், சமயமும் அங்கு பரவியன.
- இந்தியக் கலைப்பாணி பல நாட்டின் கலைஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- பல நாடுகளில் இந்திய காவியங்கள் மிகவும் புகழ் பெற்றுள்ளன.
- காவியங்களான இராமாயணம், மகாபாரதம் தெற்கு ஆசியா நாடுகளில் மிகவும் புகழ் பெற்றது.
- புத்த மதத்தை தழுவின முதல் நாடு இலங்கை ஆகும்.
- தெற்கு ஆசிய நாடுகளில் இந்திய எழுத்து படிவமான பிராமி, பல மொழிப் படிவங்களுக்கு எடுத்துக்காட்டாகும்.
- இத்தகைய நாடுகளில் கண்டெடுக்கப்பட்ட ஏராளமான சமஸ்கிருத கல்வெட்டுகள் முக்கியத்துவம் வாய்ந்தவை.
- பர்மா, தாய்லாந்து, இலங்கை, கம்போடியா ஆகிய நாடுகளில் புத்த மதம் நடைமுறையில் உள்ளது.
- அரேபிய நாகரிகத்திற்கு இந்தியாவின் முக்கியமான பங்களிப்பு கணிதம் ஆகும்.

## பயிற்சிக்கான கேள்விகள்

1. இந்திய பண்பாடு எந்தெந்த பாணியின் மூலமாக அயல்நாடுகளில் பரவினது?
2. இந்திய பண்பாட்டை அயல்நாடுகளில் பரப்புவதில் பழமையான பல்கலைக்கழங்களின் பங்கு என்ன?
3. எவ்வாறு சமாதானத்தின் சமயமாக புத்தமதம் கிழக்கு ஆசிய நாடுகளை அடைந்தது?
4. தாய்லாந்தில், இந்திய பண்பாட்டின் முக்கியத்துவம் பற்றி கூறு?
5. இந்தோனேசியாவின் சமய கட்டடக்கலைப் பற்றி விவரி?
6. ரோமப் பேரரசுடன் இந்தியாவின் வாணிகத் தொடர்பு பற்றி சுருக்கமாக விவரி?
7. கடல் கடந்த அயல்நாட்டு வாணிகத்திற்கு பழங்கால இந்தியாவில் தலை சிறந்த நுழைவாயில் இருந்தது - விவாதி.

## பதில்கள்

### கேள்விகளுக்கான பதில்கள் 21.1

1. வணிகர், ஆசிரியர்கள், தூதுச் செய்தியாளர்கள், சமயப் பரப்பாளர்கள்
2. நாளந்தா, வல்லபி பல்கலைக்கழகங்கள்
3. தாரநாத், திபெத்திய அறிஞர்
4. கஷ்யப்ப மார்டாங்சா, தர்மரக்ஷிதா
5. அவர், அரசனின் வேண்டுகோள் படி, சில சமஸ்கிருத நூல்களான சீன மொழியில் மொழி பெயர்த்தார்.
6. இந்தியாவை விட்டு வெளியேறிய மக்களும் ஐரோப்பாவில் எந்த வித நோக்கமும் இல்லாமல் சுற்றித் திரிந்தவர்கள் அல்லது குடியேறியவர்களும் வெளிநாட்டில் இந்திய பண்பாட்டிற்கு தூதுவர்களாக இருந்தார்கள்.

### கேள்விகளுக்கான பதில்கள் 21.2

1. பட்டு, சீனாவின் முதன்மையான விற்பனைப் பொருளாக இருந்தது.
2. மத்திய ஆசியாவில் குச்சி உள்ளது. இந்திய கலாசாரத்திற்கு இது மிகவும் புகழ் பெற்ற மையம். பட்டு வழி, (Silk Route) இங்கு இரண்டு பகுதிகளாகப் பிரிந்து போகிறது.
3. கோட்டான் ஒரு பாலைவன நாடு
4. உலகின் புகழ் பெற்ற குகைத் தொகுதிகள்
5. எட்டாம் நூற்றாண்டிலிருந்து 9ஆம் நூற்றாண்டு வரை
6. இந்திய பண்பாடு, ஜப்பானுக்கு கொாரியா வழியாகச் சென்றடைந்தது.
7. கொரியப் பேரரசர், புத்தர் சிலை, சூத்திரம், கடவுளை வணங்குவதற்கான கருவிகள், கலைஞர்கள், சிற்பிகள், வர்ணம் பூசுபவர் மற்றும் கட்டடக்கலைஞர்களை பரிசாக ஜப்பானியப் பேரரசர் அனுப்பினார்.
8. 96,000 சமஸ்கிருத புத்தகங்கள்.

### கேள்விகளுக்கான பதில்கள் 21.3

1. மஹாவிகார், அபயகிரி
2. அசோகர், அவருடைய மகன் மகேந்திரனையும், மகள் சங்கமித்திரையையும், ஒரு தூதுவருடன் இலங்கைக்கு அனுப்பினார். இங்கு புத்த கயாவிலிருந்து கொண்டு வரப்பட்ட போதி மரத்தின் கிளையை நட்டார்.
3. பாலி
4. இது விஷ்ணு வாழும் இடமாக ஊகிக்கப்படுகிறது
5. அவை சுமேருமலையின் ஐந்து சிகரங்கள் என அழைக்கப்படுகின்றன.
6. சூர்ய வர்மன் அரசரை விஷ்ணுவின் அவதாரமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. தன்னுடைய புகழ தக்க செய்கைகளினால் அவன் சொர்க்கத்தில் ஓர் இடத்தை அடைந்து கொண்டான்.
7. இது அகலமான அகழியுடன் கூடியது. சரிசம நாற்கட்ட வடிவத்தில் கட்டப்பட்டுள்ளது. வியக்கத்தக்க வண்ணம் மெருகூட்டுகிறது.
8. இராமாயணத்திலும், மகாபாரத்திலுமுள்ள காட்சிகள் கோவில் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ளன.
9. சமுத்தரமந்தன், சமுத்திரத்தை அடையும் காட்சிகள்

10. இராமர் மற்றும் இராவணா காவியத்திலிருந்து காட்சிகள் கைலாச மலையில் பார்வதியுடன் சிவன் காமதேவனை அழிக்கும் காட்சிகள்
11. இந்திரபுரா, அமராவதி, விஜயா, சௌதாரா, பாண்டுரங்கா
12. கெடாவில், வெல்லெஸ்லி மாகாணம்
13. திரிசூலத்துடன் கூடிய பெண் உருவங்கள், நந்தியின் தலை, துர்காவின் உருவப்படிவம், கணேசா மற்றும் சிவலிங்கம்.
14. ஸ்வர்கா, ராசா, குனா, தடா, மஸ்திரி, திபடி, லக்ஷா ஆகியவை சில வார்த்தை
15. லிகோர் என்ற இடத்தில் தான் மிக முக்கியமான கல்வெட்டு உள்ளது.
16. 50க்கும் மேலான கோவில்கள்
17. ஜாவா தீவிலுள்ள பெரிய சிவன் கோவிலை 'பிரம்பனன்' என்று அழைக்கப்படுகிறது.
18. அங்கு சிவா, விஷ்ணு, பிரம்மாவின் வாகனங்களுக்காக கோயில்கள் உள்ளன
19. எட்டு பெரிய கோவில், 240 சிறிய கோவில்களால் சூழப்பட்டுள்ளன.
20. இராமாயணம், கிருஷ்ணா
21. ஐநூறுக்கு மேலான துதிப்பாடல்கள், சூத்திரங்கள், சிவன், பிரம்மா, துர்கை, கணேசன் ஆகியவர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. புத்தருக்கும் பல பிற தெய்வங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

## கேள்விகளுக்கான பதில்கள் 21.4

1. இது 9 ஆம் நூற்றாண்டில் தொடங்கியது.
2. வணிகர், சுலைமான், அல்-மசூடி, இபின் ஹக்கல் அல் இடிரிசி
3. (அ) பிரம்ம - கஸ்புடா - சிந்தாந்தா, அரேபிய மொழியில் 'சிந்தன்' என்றும்

   (ஆ) கண்டகதயகா வை ஆர்கண்ட என்றும்
4. பூஜ்யம் என்ற கருத்துடன் கூடிய தசம முறை
5. மங்க்
6. காலிப் ஹருன் - அல் - ரஷித்
7. படைப்புகளான பாம்பு விஷம், விலங்கியல், மருத்துவம் தர்க்க சாஸ்திரம், தத்துவம், ஒழுக்கவியல், அரசியல், அறிவியல், போர் ஆகியவற்றைப் பற்றிய புத்தகங்கள்.
8. கோயம்புத்தூர், மதுரை
9. மிளகு, வெற்றிலை, வாசனைப் பொருட்கள், நறுமணங்கள் போன்ற உருப் படிகள், விலையுயர்ந்த கற்களான வெள்ளை உலோகம், ரத்தினம், வைரம், சிகப்புக்கல், முத்து, தந்தம், பட்டு, மென்துகில்
10. ரோமாபுரியுடன் செய்த வாணிகம், இந்தியாவுக்கு தங்கத்தை கொண்டு வந்தது. இது பேரரசுக்கு நிலையான அன்னிய செலவாணியை ஏற்படுத்தியது.
11. மக்கள், மேற்கு ஆசியா, மத்திய தரை வட்டாரத்திலிருந்து வந்தவர்கள். இது கிரேக்கரும் ரோமானியர்களும் அடங்குவார்.
12. போர் காலங்களில் கூடாரங்களையும் மதுரை நுழைவாயிலையும் காவல் செய்தல்
13. பாண்டிச்சேரிக்கு அருகில் அரிக்கமேடு என்று அழைக்கப்டுகின்ற இடம்
14. யக்னஹீ

# 223

## பாடத் திட்டம்

## இந்திய பண்பாடும் பாரம்பரியமும்

### 1.0 அறிவார்ந்த கோட்பாடு

உலக நாகரிகங்களில், இந்தியாவின் பண்டைய நாகரிகம் ஒன்றாகும். இவை சோதனையின் காலத்தில் நின்றது. உண்மையாக, இந்தியப் பண்பாட்டை, பண்டைய நாகரிகங்களிடையே நிகரற்ற நாகரிகமாக ஆக்குவதற்கு வெளியுலக் செல்வாக்கிற்கு இடமளித்து மற்றும் தன்வயப்படுத்தி, தன்னுடைய சொந்த பண்பாடாக மாற்றி அமைத்தற்கான திறமையைக் கொண்டிருந்தது. இந்த பல்கூட்டு செல்வாக்குகள், இந்தியாவின் பண்பாட்டுச் சூழ்நிலையை மட்டும் வளப்படுத்தவில்லை, இதை பலப்படுத்தவும் செய்தது. இந்திய கலை கட்டடக்கலை, இசை, மொழி, தத்துவம், சமயம் ஆகியன வேறுபட்ட செல்வாக்கை, நூற்றாண்டு காலமாக பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றன. இது இந்திய பண்பாடும் பாரம்பரியத்தின் அழகுமாகும். இந்திய குடிமக்களாகிய நாம், இந்த பன்முக வளமான பண்பாட்டு பாரம்பரியத்தை பற்றிப் பெருமை கொள்வதுமில்லாமல், இதை தடையில்லாமல் படித்து திறனாய்வும் மதிப்பீடும் செய்வதாகும்.

### 2.0 நோக்கங்கள்

இந்தப் பாடப்பகுதியின் நோக்கங்களாவன்

- இந்தியாவின் பண்பாடு, பாரம்பரியத்தின் பல்வேறு அம்சங்களை கற்பவருக்கு அறிமுகப்படுத்துதல்.
- சமயம், தத்துவம், அறிவியல், கலைகள், கல்வி, மொழிகள், இலக்கியம் ஆகிய பகுதிகளில் நமது முன்னோர்களின் பங்களிப்பை, கற்பவர்களிடம் தெரியப்படுத்துதல்.
- இந்திய பண்பாட்டில், எல்லா அம்சங்களிலும், வேற்றுமையில் ஒற்றுமை, என்ற முக்கிய கூறு மறைபொருளாக உள்ளதை, பாராட்ட கற்பவருக்கு வேலைவாய்ப்பளித்தல்,
- உலகின் பல்வேறு நாடுகளில் இந்திய பண்பாட்டின் தாக்கத்தை, கற்பவர்களிடம் தெரியப்படுத்துதல்.
- பல்வேறு கூறுகளைக் கொண்ட இந்திய பண்பாட்டினை பாராட்ட, கற்பவர்களுக்கு வாய்பபளித்தல்,
- கற்பவர்களிடையே, அன்பையும் நாட்டைச் சார்ந்தவர்கள் என்ற உணர்வை வளப்படுத்துதல் ஆகும்.

### 3.0 பாடப்பகுதியின் விளக்கம்

| அலகு | தலைப்பு | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1 | பண்பாடு புரிந்துகொள்ளல் | 10 |
| 2 | காலங்களின் வழியாக வரலாறும் பண்பாடும் | 15 |
| 3 | மொழிகளும் இலக்கியங்களும் | 10 |
| 4 | சமயமும் தத்துவமும் | 12 |
| 5 | ஓவியம், செயல்பாட்டுக்கலைகள் கட்டிடக்கலை ஆகியன | 12 |
| 6 | அறிவியல், தொழில்நுட்பம் | 10 |
| 7 | கல்வி | 09 |
| 8 | சமூக கட்டமைப்பு | 10 |
| 9 | இந்திய பண்பாடு அயல்நாடுகளில் பரவுதல் | 12 |
| | மொத்தம் | 100 |

## பாடப்பகுதியின் விளக்கம்

### அலகு I பண்பாட்டை புரிந்து கொள்ளல்

மதிப்பெண்கள்: 10 கற்கும் நேரம்: 20

**அணுகுமுறை**

இந்த அலகு, பண்பாட்டின் கோட்பாடு, பொருள் ஆகியவற்றை புரிந்து கொள்ளத்தக்கபடி வடிவமைக்கப் பட்டுள்ளது. இந்திய பண்பாட்டின் சிறப்பியல்புகள், இதனை குறிப்பிடத்தக்கனவாக மாற்றப்பட்டிருப்பதையும், விவாதிக்கப்படும்.

**பாடம் 1 பண்பாடு ஓர் அறிமுகம்**

- பண்பாட்டின் கோட்பாடு
- பண்பாடும், நாகரிகமும்
- பண்பாடும், பாரம்பரியமும்
- பண்பாட்டின் பொதுவான அம்சங்கள்
- உள்ளடங்கிய பகுதிகள் - பண்பாட்டின் அம்சங்கள்
- மனித வாழ்க்கையில் பண்பாட்டின் முக்கியத்வம்

**பாடம் 2 இந்திய பண்பாடு**

- பண்பாட்டின் பொருள்
- இந்திய பண்பாட்டின் பண்புகள்
- பண்பாட்டு அடையாளங்கள், சமயம், வட்டாரம், மனித இன ஆய்வு ஆகியன
- பண்பாட்டின் செல்வாக்கு

### அலகு II காலங்களின் வழியாக வரலாறும் பண்பாடும்

மதிப்பெண்கள்: 15 கற்கும் நேரம்: 35

**அணுகுமுறை**

இந்த அலகு, இந்திய பண்பாட்டின், வரலாற்று வளர்ச்சியைப் புரிந்து கொள்வதை நோக்கமாக கொண்டிருக்கிறது. காலங்காலமாக, இந்திய பண்பாட்டின் பரிணாமத்தை கண்டறிதல், பண்டைய, இடைக்கால நவீன காலத்திய இந்திய வரலாற்றில், குறிப்பிடத்தக்க பண்பாட்டு வரலாற்று வளர்ச்சியினை எடுத்துக் காட்டுவதை நோக்கமாக கொண்டிருக்கிறது.

**பாடம் 3 பண்டைய இந்தியா**

- ஹாரப்பா நாகரிகம்
- வேதகாலப்பண்பாடு சமுதாயம், சமயம், பொருள் சார்ந்த வாழ்க்கை, பொருளாதாரம் ஆகியன.
- பிரபலமான சமய சீர்த்திருத்தங்கள்
- பாரசீக படையெடுப்பும், இந்திய பண்பாட்டின் மீது அதனுடைய தாக்கமும்
- கிரேக்க படையெடுப்பும் இந்திய பண்பாட்டின் மீது அதனுடைய தாக்கமும்

- தலை சிறந்த அசோகா்
- மௌரிய, பிந்தைய மௌரிய காலத்திய கலையும் கட்டிடக்கலையும்
- குப்தா் கால கட்டடக்கலையும் ஓவியங்களும்.
- வேத பிராமணத்தை புராண இந்து சமயமாக மாற்றுதல்.
- சிறந்த கல்வி மையமாக நாளந்தாவின் தோற்றம்.
- இந்தியாவில் கிறிஸ்துவ மதம்.
- தென் இந்தியா், பல்லவா்கள் சோழா்கள் ஆகியோா்.

### பாடம் 4 இடைக்கால இந்தியா

- முஸ்லீம்களின் வருகை.
- சூபிசத்தின் எழுச்சி
- காலத்தின் அரசியல் பின்னணி.
- இந்தியாவில் பண்பாட்டு முன்னேற்றம்
- சமயம், சமுதாயத்தின் மீது செல்வாக்கு
- நாட்டுப்புறக்கலைகள், இசை, ஓவியங்களின் வளா்ச்சி
- நவீன இந்திய மொழிகளின் எழுச்சி
- புதிய மதங்களின் எழுச்சி சீக்கிய மதம், ஜொராஸ்டிரிய மதம்.
- தென்இந்தியா் சோழா்கள், விஜயநகர அரசுகள் பாமினி அரசுகள் ஆகியவற்றின் கீழ் வளா்ச்சி

### பாடம் 5 நவீன இந்தியா

- இந்தியாவின் மீது மேற்கத்திய மறுமலா்ச்சியின் சீா்திருத்த இயக்கத்தின் தாக்கம்.
- 18-ஆம் நூற்றாண்டில் இந்திய சமூக நிலைகளும் சமய நிலைகளும்.
- சமூக மற்றும் சமய சீா்திருத்தவாதிகள் ராஜாராம் மோகன்ராய், சுவாமி தயானந்த சரஸ்வதி, ஜோதிபா பூலே, நாராயண குரு, பண்டித ரமாபாய்.
- பத்திரிகைத்துறை, நவீன மொழிகளின் வளா்ச்சி, இலக்கியம் செய்தித்தாள் களின் பங்கு, சில முக்கியமான செய்தித்தாள்கள்.
- சுதந்திரத்திலிருந்து இந்தியா் சமூக, அரசியல் முன்னேற்றங்கள்

## அலகு III மொழிகளும், இலக்கியங்களும்

மதிப்பெண்கள்: 10 கற்கும் நேரம்: 25

### அணுகுமுறை

இந்த அலகு, கற்பவரை, இந்தியாவின் மொழிகள் மற்றும் இலக்கியத்தை, தெரியப்படுத்தும் நோக்கத்தை கொண்டது. இந்த அலகு, பண்டைய இந்தியாவில், சமஸ்கிருதத்தின் முக்கியமான பங்கை ஆராயும். இது சமஸ்கிருதம், பிராகிருதம் பாலியில் உள்ள இலக்கியத்தின் நிலையை ஆய்வு செய்கிறது. தமிழில் சங்க இலக்கியத்திலுள்ள வளமான பண்புகள் மற்றும் பிற தென்னிந்திய மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளையும், கற்பவா்களை அறியச் செய்கிறது.

### பாடம் 6 இந்திய மொழிகள் மற்றும் இலக்கியம் பாடம் - 1

- இந்திய மொழிகள் - சமஸ்கிருதத்தின் பங்கு
- வேதங்கள் - ரிக்வேதம், யஜிா் வேதம், சாம வேதம், அதா்வ வேதம்.

- உபநிடதங்கள்
- காவியங்கள் ராமாயணமும் மற்றும் மகாபாரதமும்
- பகவத்கீதை
- புராணங்கள், ஸ்மிரிதிகள்
- பாலி, பிராகிருதம், சமஸ்கிருத மொழிகளில் புத்தசமய, சமண சமய இலக்கியங்கள், திரிபீடகங்கள், ஜடகா கதைகள்.
- மற்ற சமஸ்கிருத இலக்கியம் தா்ம சாஸ்திரங்கள், கௌடில்யாவின் அா்த்த சாஸ்திரம், பாஷா, சூத்ரகா, காளிதாசா், பானபட்டாவின் வளமற்ற நூல்கள், மருத்துவ அறிவியல் மீது புத்தகங்கள், காஷ்மீரில் சமஸ்கிருத இலக்கியம்
- சங்கம இலக்கியம்
- தெலுங்கு, கன்னட, மலையாள இலக்கியங்கள்.

### பாடம் 6 இந்திய மொழிகளும் இலக்கியங்களும் பாடம் - 12

- வட இந்திய மொழிகளும் இலக்கியங்களும் - மொழிகளின் பாிணாமம் பேசப்பட்ட, எழுதப்பட்ட மொழிகள், பிராமி எழுத்துகள், ஹிந்தி மற்றும் அதனுடைய கிளை மொழிகள்.
- உருதும் பாரசீக இலக்கியங்களும்
- ஹிந்தி இலக்கியம்
- வங்காளிய, அஸ்ஸாமிய, ஒரியா இலக்கியங்கள்
- பஞ்சாபி, ராஜஸ்தானி இலக்கியங்கள்
- குஜராத்தி இலக்கியம்
- சிந்தி இலக்கியம்
- மராத்தி இலக்கியம்
- காஷ்மீரி இலக்கியம்
- கிறிஸ்துவ சமயப் பரப்பாளா்களின் பங்கு் கல் அச்சு அச்சகங்கள், சமயப்பரப்பாளா் களின் பள்ளிகள், கல்லூரிகளின் பங்கு

## அலகு IV சமயமும் தத்துவமும்

மதிப்பெண்கள்: 12 கற்கும் நேரம்: 25

### அணுகுமுறை

இந்த அலகு, இந்தியாவில் இந்திய தத்துவ எண்ணங்களின் முன்னேற்றத்தை அடையாளம் காணவும் முதன்மையான சமய மரபுகள், வெகு காலத்திற்கு முன்பே தோன்றி வளாச்சியடைந்தது என்பதை ஆராய்கிறது. இந்த அலகு நவீன காலத்தில் இந்தியாவின் பல்வேறு சமயங்களில் சீா்த்திருத்த இயக்கங்கள் தொடங்கப்பட்டன என்பது விவாதிக்கப்படும்.

### பாடம் 8 பண்டைய இந்தியாவில் சமயமும் தத்துவமும்

- முந்தைய வேதமும் வேத சமயமும்.
- மரபு வழிப்படாத சமய இயக்கங்கள் - புத்தசமயமும் சமண சமயமும்.
- கடவுள் உண்டு என்ற நம்பிக்கை கொண்ட சமயங்கள் - வைஷ்ணவிசம், சைவிசம், சக்தியிசம் ஆகியன.

- நாட்டுப்புற சமயப் பிரிவுகள் - யக்ஷர்கள், நாகர்களை வழிபடுதல்.
- தென் இந்தியாவில், வைணவ, சைவ இயக்கங்கள்.
- வேத தத்துவம் - சாங்க்யா, யோகா, நியாயா, வைஷேசிகா, மிமாம்சா, அத்வைதா.
- சாரவாக்கா தத்துவ மரபுக்குழு.
- சமண தத்துவம்.
- புத்த சமய தத்துவம்.

### பாடம் 9 இடைக்கால இந்தியாவில் சமயமும், தத்துவமும்

- சூபி இயக்கம் - சிஷ்டி, சுஹ்ரவார்டி சில்சிலாக்கள் - சூபி இயக்கத்தின் முக்கியத்வம்
- பக்தி இயக்கம் - நிர்குண, சகுண பக்தி மரபுக்குழுக்கள் கபீர், நானக், மீராபாய், புனிதர்களின் பங்களிப்பு.
- இடைக்காலத்தில் தத்துவம்: வாஷிஸ்டாத்வைதா, சிவாத்வைதா, த்வைதா, த்வெத்தாத் வைதா, சுத்தா வைதா.

### பாடம் 10 நவீன காலத்தில் சமய சீர்திருத்த இயக்கங்கள்

- பிரம்ம சமாஜ்ம் இராஜாராம் மோகன்ராய்
- பிரார்த்தன சமாஜம் இரணடே.
- ஆர்ய சமாஜம் தயானந்த சரஸ்வதி
- இராம கிருஷ்ணா மிஷன் சுவாமி விவேகானந்தர்
- பிரும்மஞான சபை அன்னி பெசண்ட் அம்மையாரும்
- அலிகார் இயக்கம் சையத் அகமது கான்.

## அலகு V ஓவியம், செயல்பாட்டுக்கலைகள், கட்டடக் கலை.

மதிப்பெண்கள்: 12 கற்கும் நேரம்: 25

### அணுகுமுறை

இந்திய பண்பாட்டை, ஓவியங்கள், சிற்பக்கலை, இசை அல்லது நடனமாக, அடிக்கடி இதனுடைய பண்புகளாக கலை உருவங்களாக சிறப்பிக்கப்படுகிறது. ஏனென்றால், கலைகள், பண்பாட்டு அம்சங்களின் வெளிப்பாடாகும். இந்த அலகு இந்தியாவின் வெவ்வேறு கலைப்படிவங்களான, ஓவியங்கள், கைவினைப் பொருட்கள், இசை, நடனம், நாடகம், கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றின் பரிணாமத்தைக் காட்டுகிறது.

### பாடம் 11 இந்திய ஓவியங்கள்

- பண்டைய இந்தியாவின் கலை ஹரப்பா நாகரிகத்தில் உருவாக்கப்பட்ட ஓவியங்கள், புத்த சமய ஓவியங்கள், கல்வெட்டுக்குகைகள், சித்திரைச் சாலைகள் ஷில்பசாஸ்திரங்கள்.
- மத்திய இந்தியாவின் கலை முகலாய நுணக்க ஓவியங்கள், பஹாரி ஓவியங்கள்
- நவீன காலத்திய கலை ரபிந்திரநாத் தாகூர், அபினானந்திரநாத் தாகூர், நந்தலால் போஸ், எம்.எப்.ஹீசைன், பிறரின் செல்வாக்குகள்
- அலங்கரிப்பு கலை ரங்கோலி, அல்பனா, அய்ப்பன், ரங்க வள்ளி, குலாம், மென்டானா

- நாட்டுப்புற ஓவியங்கள் மிதிலை ஓவியங்கள், கலம்கரி ஓவியங்கள், வார்லி ஓவியங்கள், கலிகட் ஓவியங்கள்.
- இந்திய கைவினைப் பொருட்கள் ராஜஸ்தானிலிருந்து பந்தினி, ஆந்திர பிரதேசத்திலிருந்து பித்ரி, போச்சம்பள்ளி, தமிழ்நாட்டிலிருந்து காஞ்சிபுரம் பட்டு புடவைகள், மைசூரிலிருந்து சந்தன மரப்பொருட்கள், அஸ்லாமிலிருந்து பிரம்பு மரச்சாமான்கள், வங்களாத்திலிருந்து பழுப்புநிறக்களிமண்ணாலான மாதிரிகள்.

### பாடம் 12 செயல்பாட்டுக்கலைகள் இசை, நடனம், நாடகம்

- செயல்பாட்டுக் கலையின் கோட்பாடு சுருக்கமான வரலாறு.
- இந்திய மரபு சார்ந்த இசையின் பிரிவுகள் ஹிந்துஸ்தானி, கர்நாடகம்
- நவீன இந்திய இசை, நாட்டுப்புற இசை
- இந்தியாவின் நடனங்கள் பல்வேறு நடன படிவங்கள், நவீன இந்தியாவின் புகழ்பெற்ற நடனக் கலைஞர்கள்.
- நாடகம் மரபு சார்ந்த, கிராமியம், நவீன அரங்கங்களின் தோற்றம், பல்வேறு வகை நாடகங்கள், முக்கியமான நாடகங்கள், அவற்றின் எழுத்தாளர்கள்.
- செயல்பாட்டுக்கலையும் மனித ஆளுமையில் அதனுடைய தாக்கமும்

### பாடம் 13 இந்திய கட்டடக்கலை

- கட்டடக்கலை இதனுடைய தொடக்கமும் இந்தியரின் அணுகுமுறையும்
- இந்தியக் கட்டடக் கலையின் பரிணாம வளர்ச்சி வரலாற்றுக்கு முந்தைய ஹரப்பர் காலம், ரிக்வேத காலத்திய வளர்ச்சி, முந்தைய வரலாற்றுக் காலம், குகைக் கட்டடக்கலை, கல்வெட்டுக்கோவில்கள், முகலாயரின் கட்டடக்கலை
- காலனி ஆதிக்க கட்டடக்கலை நவீன காலம்.

## அலகு II அறிவியலும் தொழில்நுட்பமும்

மதிப்பெண்கள்: 10 கற்கும் நேரம்: 30

### அணுகுமுறை

பண்பாட்டின் மற்றத்துறைகளைப் போலவே, அறிவியல், தொழில்நுட்பத் துறையிலும், இந்தியர்கள் தங்களுடைய முன்னோர்களிடமிருந்து சிறந்த வளங்களைப் பெற்றுள்ளனர். இந்த அலகு இந்தியாவின் வரலாற்று காலப்போக்கில் அறிவியல், தொழில் நுட்பங்களின் வளர்ச்சியை ஆராய்கிறது. இது இந்தியாவின் நவீன காலத்திய குறிப்பிடத்தக்க அறிவியல் வல்லுநர்களால் அளிக்கப்பட்ட பங்களிப்பையும் மதிப்பிடுகிறது.

### பாடம் 14 இந்தியாவில் அறிவியல், தொழில் நுட்பம்

- பண்டைய இந்தியாவில் அறிவியலின் முன்னேற்றம், வான சாஸ்திரம் கணிதவியல் துறையில், ஆர்யபட்டா, வராகமிகிரரின் பங்களிப்புகள், சாரகர், சுஸ்ருதாவின் பங்களிப்புக்கள், உலோகவியலில் முன்னேற்றம், புவியியலின் முன்னேற்றம்.
- இடைக்கால இந்தியாவில் அறிவியல் தொழில் நுட்ப முன்னேற்றங்கள் இஸ்லாமிய உலகம் ஐரோப்பாவின் செல்வாக்கு, மக்தப்புக்கள் மதராசக்கள் கார்கனாக்களின் பங்கு, கணிதவியல், இராசயனம், வான சாஸ்திரம், மருத்துவத்துறைகளின் முன்னேற்றங்கள், விவசாயத் துறையில் புதிய செயல்முறைகள் - புதிய பயிர்கள், பாசனத்திற்குரிய புதிய நுட்பங்கள் முதலியன அறிமுகப்படுத்தப்பட்டன.

- நவீன கால இந்தியாவில் அறிவியல், தொழில் நுட்பம் சி.எஸ்.ஐ.ஆர், டி.ஆர்.டி.ஓ போன்ற ஆராய்ச்சி அமைப்புகளின் வளர்ச்சி, அணுசக்தி கமிஷனை தோற்றுவித்தல், விண் வெளியில் செயற்கைக்கோள்களை செலுத்துதல், அறிவியல், தொழில் நுட்பத்தில் பிற முன்னேற்றங்கள்.

## பாடம் 15 பண்டைய கால இந்திய விஞ்ஞானிகள்

- கணிதவியல், வானவியல்
- பௌதாயன்
- ஆர்யபட்டா
- பிரம்மகுப்தா
- பாஸ்கரா சார்யா
- மகா வீராச்சார்யா
- அறிவியல்
- கனாட்
- வராகமிகிரா
- நாகார்ஜீனா
- பண்டைய இந்தியாவின் மருத்துவ அறிவியல் (ஆயுர்வேதம் மற்றும் யோகா)
- சுஸ்ருதா
- சரகர்
- யோகா பதஞ்சலி

## பாடம் 16 மத்திய கால இந்தியாவின் அறிவியலும் விஞ்ஞானிகளும்

- மத்திய கால அறிவியல்கள்
- கணிதவியல்
- உயிரியல்
- வேதியியல்
- வானவியல்
- மருத்துவம்
- வேளாண்மை

## பாடம் 17 நவீன கால இந்தியாவின் விஞ்ஞானிகள்

- சீனிவாசராமனுஜன் காகிதத்தின் மீது பெர்னோலி எண்கள்
- சி.வி.ராமன், ராமன் விளைவு
- ஜகதிஸ் சந்திரபோஸ், கிரஸ்கோகிராப், கம்பியில்லாத தந்தி கருவிகள்
- ஹோமி ஜஹாங்கிர்பாபா டி.ஐ.எப்.ஆர் தொடங்கப்பட்டது, அணுசக்தி கமிஷனின் முதல் சேர்மன்.
- முனைவர் - விக்ரம் சாராபாய், ஒரு சிறந்த தொழிலதிபர் ராணுவ மென்பொருள்களை பென்சிலினையும் தயாரிக்க ஆரம்பித்தார், இந்திய தேசிய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவர், தும்பா அணுசக்தி ஏவுகணை செலுத்தும் தளத்தை நெறிப்படுத்தினார், பத்மபூஷன் மற்றும் பத்ம விபூஷன் விருதுகளைப் பெற்றவர்.
- முனைவர் ஏ.பி.ஜே அப்துல் கலாம், இந்தியாவின் 11ஆவது குடியரசுத்தலைவ்ர, ஐ.எஸ்.ஆர்.ஓ மற்றும் டி.ஆர்.டி.ஓ போன்ற நிறுவனங்களில் கௌரவமான பதவிகளில் இருந்தவர், இந்தியாவை சுய பாதுகாப்பின் சகாப்தத்திற்கு முன்னேறியது.

## அலகு VII கல்வி

மதிப்பெண்கள்: 9 கற்கும் நேரம்: 30

### அணுகுமுறை

கல்வி என்பது, பண்பாட்டு மாற்றங்களுக்கான ஒரு ஊடகமாகும், சமூக குழுக்களுக்குள் ஒன்று திரட்டப்பட்ட அறிவு என்ற பாணியின் மூலம் வடிவமைக்கப்பட்டன. பண்டைய காலத்திலிருந்து, இந்தியா குறிப்பிடத்தக்க கல்வி முறையை தன்னுடைய மற்ற நாகரிகங்களின் செல்வாக்குகளிலிருந்து எடுத்துக் கொண்டு பரிணாமித்தது. இந்த அலகு இந்திய வரலாற்றின் பல்வேறு காலங்களில் கல்விமுறைகளின் வளர்ச்சியை அடையாளம் காட்டுகிறது. இது பாடங்கள் மற்றும் பாடப்பொருள் முதலியவற்றை, இந்த துறையின் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் கோடிட்டு காட்டுகிறது. இந்த அலகு கற்பவர்களை முந்தைய கல்வி முறைகள் மற்றும் பிந்தைய கல்விமுறைகளின் பலம் மற்றும் பலவீனங்களை திறனாய்வு செய்து மதிப்பிட செய்கிறது.

### பாடம் 18 இந்தியாவில் கல்வி

- பண்டைய இந்தியாவில் கல்வி வேத ஆஸ்ரமங்கள், மௌரியர் மற்றும் பிந்தைய மௌரிய சங்கங்கள், சமண மற்றும் புத்த மடாலயங்கள், கழகங்கள் அல்லது கல்லூரிகள், கல்வியின் குறிக்கோள்கள், கற்றுக் கொடுக்கப்பட்ட பாடங்கள், பெண்களின் கல்வியின் நிலை.
- இடைக்காலத்தில் கல்வி மதராசாக்கள், மக்தப்புக்கள், பரம்பரை சார்ந்த மற்றும் அறிவார்ந்த அறிவியல்கள், பொது நிர்வாகம், வடிவியல் மற்றும் கணக்கியல் போன்ற பாடங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.
- நவீன காலத்தில் கல்வீ காலனி ஆதிக்க கல்வி மெக்காலேயின் குறிப்புகள், உட்ஸ் அறிக்கை மற்றும் இந்திய பல்கலைக்கழக சட்டம்.
- இந்திய சுதந்திரத்திற்குப் பின் கல்வி, தொடக்கக்கல்வி அனைவருக்கும் கல்வி இடைநிலைக்கல்வி, 10 + 2 + 3 முறை, தொழிற்கல்வி உயர்கல்வி, முதியோர் கல்வி, சமூக இசைவு மற்றும் தொழிற்கல்வி, தேசீய கல்விக்கொள்கை, அஞ்சல் வழிக்கல்வி, தொலை தூரக்கல்வி ஆகியவற்றை குறிப்பிடலாம்.

## அலகு VIII சமூக கட்டமைப்பு

மதிப்பெண்கள்: 10 கற்கும் நேரம்: 30

### அணுகுமுறை

இந்தியப் பண்பாட்டின் எல்லா அம்சங்களையும் அறிவதற்கு, அதனுடைய சமுதாயத்தின் கட்டமைப்பை படித்தல் அவசியம். இந்த உலகின் நோக்கமானது இந்திய சமுதாயத்தின் வெவ்வேறு பகுதிகள் மற்றும் அவற்றின் கட்டமைப்பை ஆராய்ந்து அறிவது ஆகும். இது சமகாலத்திய இந்தியாவின், சமூக பண்பாட்டு பிரச்சனைகளை ஆராயவும் முயற்சிக்கிறது.

### பாடம் 19 இந்திய சமூக கட்டமைப்பு

- பழங்குடியினர், வர்ணா மற்றும் ஜட்டி
- தீண்டாமை
- அடிமைத்தனம்
- புருஷார்தா, ஆஷ்ரமா, சன்ஸ்கரா
- ஜஜ்மனி முறை

- இந்தியாவில் குடும்பமும் திருமணமும்
- பெண்களின் நிலை
- இந்தியாவில் பழங்குடி இனங்கள்

### பாடம் 20 சமகாலத்திய இந்தியாவில் சமூக பண்பாட்டு பிரச்சனைகள்

- சாதிமுறை
- பெண்கள் சார்ந்த பிரச்சனைகள்
- வரதட்சனை முறை
- பெண் குழந்தைகள் மற்றும் பெண்களின் பிரச்சனைகள்
- பொருள்களைத் தவறாகப் பயன்படுத்துதல்
- வகுப்பு பிரிவினை
- மூத்தோர் தொடர்பான பிரச்சனைகள்
- ஏழ்மை, வேலையின்மை பிரச்சனைகள்
- பிச்சை எடுத்தல்
- குழந்தைகளின் பிரச்சனைகள்

## அலகு IX இந்திய பண்பாடு அயல்நாடுகளில் பரவுதல்

மதிப்பெண்கள்: 12 கற்கும் நேரம்: 30

### அணுகுமுறை

பண்டைய காலத்திலிருந்தே, வெளி உலகத்துடன், இந்தியர்கள் தொடர்பு கொண்டிருந்தனர். அவர்கள் தொலை தூரமாக, பரவலாக பயணம் செய்து, அழிக்கமுடியாத அடையாளங்களை எங்கெல்லாம் சென்றார்களோ அங்கு விட்டுச் சென்றுள்ளனர். இதே போன்று, இதனுடைய வரலாறு முழுவதிலும் இந்தியாவிற்கு, அயல்நாட்டுப் பயணிகள் அடிக்கடி பயணம் செய்து, தங்களுடைய நாட்டிற்குத் திரும்பும் பொழுது, இந்தியப்பண்பாட்டின் சில அடையாளங்களையும் தங்களுடன் எடுத்துச் சென்றனர். இதற்கு பதிலாக இந்தியாவும் வெவ்வேறு வகை மக்களின் பண்பாடுகளையும் அவர்களின் நாகரிகங்களின் பல்வேறு கூறுகளை எடுத்துக் கொண்டது. இந்த அலகில் இந்தியாவிலும் உலகின் மற்ற பகுதிகளிலும் பண்பாட்டு செல்வாக்குகளின் பரிமாற்றங்களை, நாம் ஆராயலாம்.

### பாடம் 21 இந்திய பண்பாடு அயல்நாடுகளில் பரவுதல்

- பண்பாட்டு பரிமாற்றங்களின் வழிகள் - வணிகர்கள், ஆசிரியர்கள், தூதுச் செய்தியாளர்கள், சமய பரப்பாளர்கள், நாடோடிகள் மூலமாக.
- மத்திய ஆசியாவிலும் கிழக்கு ஆசியாவிலும் இந்திய பண்பாடு.
- இலங்கை, தென்கிழக்கு ஆசியாவில் இந்திய பண்பாடு.
- அரேபிய நாகரிகத்துடன் இந்தியாவின் பண்பாட்டுத் தொடர்பு.
- ரோமாபுரியுடன் இந்தியாவின் தொடர்பு
- இந்தியா மற்றும் உலகிற்குமிடையேயான, பண்பாட்டு பரிமாற்றத்தில், கப்பல்கள் அயல்நாட்டு வணிகத்தின் பங்கு.

# இந்திய பண்பாடு மற்றும் பாரம்பரியம் (223)

## வினாத்தாள் வடிவமைப்பு

### பாடம் : இந்திய பண்பாடு மற்றும் பாரம்பரியம்

**அதிகப்பட்ச மதிப்பெண்கள் : 100** **நிலை : உயர்நிலை**

**I. நோக்கங்களை பொறுத்து நிறையிடுதல்** **நேரம் : 3 மணி**

| நோக்கங்கள் | மதிப்பெண்கள் | மொத்த மதிப்பெண்களின் % |
|---|---|---|
| அறிந்து கொள்ளுதல் | 50 | 50% |
| புரிந்து கொள்ளுதல் | 30 | 30% |
| திறனை பயன்படுத்தல் | 20 | 20% |
| | **100** | **100%** |

**II. வினாக்களின் அமைப்பை பொறுத்து நிறையிடுதல்**

| வினாக்களின் வகை | வினாக்களின் எண்ணிக்கை | ஒவ்வொரு வினாவிற்கும் மதிப்பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| நீண்ட விடை வினாக்கள் | 5 | 8 | 40 |
| குறுகிய வினாக்கள் | 9 | 4 | 36 |
| மிக குறுகிய வினாக்கள் | 8 | 2 | 16 |
| எம்.சி.கியு. | 8 | 1 | 08 |
| | **30** | | **100** |

**III. பொருளடக்க பகுதிக்கான நிறையிடுதல்**

| அலகுகள் | மதிப்பெண்கள் |
|---|---|
| 1. பண்பாட்டை புரிந்து கொள்ளல் | 10 |
| 2. காலங்கள் வழியாக வரலாறு மற்றும் பண்பாடு | 15 |
| 3. மொழிகள் மற்றும் இலக்கியம் | 10 |
| 4. சமயம் மற்றும் தத்துவம் | 12 |
| 5. ஓவியம், செயல்பாட்டுக்கலைகள் மற்றும் கட்டிடக்கலை | 12 |
| 6. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் | 10 |
| 7. கல்வி | 09 |
| 8. சமூக கட்டமைப்பு | 10 |
| 9. இந்திய பண்பாடு அயல்நாடுகளில் பரவுதல் | 12 |
| **மொத்தம்** | **100** |

# மாதிரி வினாத்தாள்

## பாடம் : இந்திய பண்பாடு மற்றும் பாரம்பரியம் (223)

## உயர்நிலை பாடத்தொகுதி

மொத்த மதிப்பெண்கள் : 100 — நேரம் : 3 மணி நேரம்

குறிப்புகள்: 1. அனைத்து வினாவிற்கும் கட்டாயமாக விடை எழுத வேண்டும்.

2. கேள்வித் தாளில் குறிப்பிட்ட மதிப்பெண்கள் அந்த கேள்விக்கான பதில்கள்.

குறிப்பு: 1லிருந்து 8 வரையிலான ஒவ்வொரு கேள்விக்கும் நான்கு மாற்று இருக்கின்றன. A, B, C மற்றும் D. இந்த நான்கில் ஒன்று எது? சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து உங்களுடைய விடைத்தாளில் எழுதவும். விடைத்தாளில் சரியான கேள்வியின் எண்ணைக் குறிப்பிடவும்.

1. காரோஷ்டி எழுத்துகள் எவ்வாறு எழுதப்பட்டன? [1]
   (அ) வலதிலிருந்து இடப்புறத்திற்கு (ஆ) இடப்புறத்திலிருந்து வலது புறத்திற்கு
   (இ) மேலிருந்து கிழாக (ஈ) பெரிய எழுத்துக்களில்

2. பண்டைய இந்தியாவில், சமண, புத்த சமயத்தினரால் கல்வி எங்கு வழங்கப்பட்டது? [1]
   (அ) கோவில்கள் (ஆ) மடாலயங்கள்
   (இ) பள்ளி (ஈ) பஞ்சாயத்து இல்லங்கள்

3. வரதட்சணைத் தடுப்புச் சட்டம் எப்பொழுது இயற்றப்பட்டது? [1]
   (அ) 1951 (ஆ) 1971 (இ) 1961 (ஈ) 1981

4. பெண் சிசுக் கொலை என்பது என்ன? [1]
   (அ) ஆண் குழந்தையைக் கொல்லுதல் (ஆ) பெண் குழந்தையைக் கொல்லுதல்
   (இ) தாயைக் கொல்லுதல் (ஈ) சிற்றன்னையைக் கொல்லுதல்

5. எது தனிக்குடும்பத்தை உருவாக்குகிறது? [1]
   (அ) கணவன், மனைவி, அவர்களுடைய குழந்தைகள்
   (ஆ) கணவன் மட்டும்
   (இ) மனைவி மட்டும்
   (ஈ) தாத்தா, பாட்டி

6. உபநாயனா சடங்கு என்றால் என்ன? [1]
   (அ) இறுதி சடங்குகள் (ஆ) ஈமச் சடங்கு மந்திரங்கள்
   (இ) புனித நூல் சடங்கு (ஈ) மாசுபடுதலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்

7. புத்த சமயத்தில், மஹாயான மரபுக்குழு மட்டும் ஹீனயான மரபுக் குழுவுக்குமிடையே பிளவுபட்டதற்கான 2 காரணங்களைக் கூறுக. [1]
   (அ) போர் (ஆ) தீண்டாமை
   (இ) முந்தையதில் உருவ வழிபாடு (ஈ) குழந்தையை தவறாகப் தொடருதல் பயன்படுத்தல்

8. கபீரின் போதனைகள் எவ்வாறு, வடஇந்திய கவிஞர்களின் போதனைகளிலிருந்து வேறுபடுகிறது? [1]
   (அ) (1) இடத்திற்கு இடம் நகர்ந்தது
   (2) சமயம் சார்ந்த நிறுவனங்களை நம்பவில்லை
   (ஆ) (1) ஒரு இடத்தில் நகர்ந்தது
   (2) சமயம் சார்ந்த நிறுவனங்களை நம்பவில்லை

(இ) (1) இடத்திற்காக நகர்ந்தது

(2) நிறுவனம் சார்ந்த சமயங்களை நம்புதல்

(ஈ) (1) ஒரு இடத்தில் தங்கினது

(2) சமயங்களின் நிறுவனங்களை நம்புதல்

9. சங்க இலக்கியம் புகழ் பெற்றதன் இரு காரணங்களைக் கூறு? [2]

10. இந்தோ - இஸ்லாமிய கட்டடக்கலையின் நான்கு குறிப்பிடத்தக்க அம்சங்கள் யாவை? [2]

11. 19-ஆம் நூற்றாண்டில், முஸ்லீம்களிடையே கல்வியை பரப்புவதில் சையத்கானின் பங்களிப்பு என்ன? [2]

12. அறிவியல், தொழில்நுட்பத்தில் முனைவர் ஏ.பி.ஜே அப்துல்கலாமின் சாதனைகளை சுருக்கமாக விவரி? [2]

13. நவீன காலத்தில், வெளி நாட்டவரால் வேளாண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட மாறுதல்களை பட்டியலிடுக? [2]

14. பண்டைய இந்தியாவில், மருத்துவம் பற்றிய நல்ல அறிவு இருந்தது என்பதை எவ்வாறு கூறுவாய்? [2]

15. எவ்வாறு கல்வி, பண்பாட்டுடன் தொடர் கொள்கிறது? [2]

16. 6-14 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு ஏன் தொடக்கக்கல்வி கட்டாயமாக்கப்பட்டது? [2]

17. அடிப்படைக் கூற்றின் துஷ்பிரயோகம் என்பதன் பொருள் என்ன? [4]

18. பண்டைய இந்தியாவில், புத்த சமயம், சமண சமயம் சமயங்களாக எழுச்சியானதற்கான 4 காரணங்களைக் கூறுக? [4]

19. முந்தைய 18-ஆம் நூற்றாண்டில், உருது எவ்வாறு பிரபலமான மொழியாக ஆனது? [4]

20. இந்தியாவில், இலக்கிய வளர்ச்சியில் கிறிஸ்தவ சமய பரப்பாளர்களின் பங்கை விவாதி? [4]

21. பண்டைய, மத்திய கால, நவீன இந்தியாவின் கட்டிடக்கலை சார்ந்த அம்சங்களை வேறுபடுத்துக? [4]

22. ஆயுதங்கள், வெடி மருந்துகள் முன்னேற்றத்தில் முகலாயர்களின் பங்களிப்பை விவரி? [4]

23. இந்தியாவில் 1853-1904க்குமிடையே அறிமுகப்படுத்தப்பட்ட கல்வி சீர்திருத்தங்களை விவரி? [4]

24. பண்டைய காலத்தில் எவ்வாறு மேற்கு ஆசியா இந்தியப்பண்பாட்டுடன் பரிச்சயமானது? [4]

25. எது ஒரு குறிப்பிட்ட பழங்குடியை மற்றைய பழங்குடியினடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது? [4]

26. பண்டைய காலத்திலிருந்து, நமது இந்திய பண்பாட்டில் வேற்றுமையில் ஒற்றுமை ஒரு சிறப்பு அம்சமாக ஆனது பற்றி விவரி? [8]

27. மத்திய காலத்தில், இந்திய சமுதாயத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதில் சமூக, சமய சீர்திருத்தங்களின் பங்கை விவரி? [8]

28. பண்டைய இந்தியாவில் ஷடாதர்ஷனா என அழைக்கப்பட்ட, ஆறு வெவ்வேறு தத்துவங்களின் பெயர்களைக் கூறு அவற்றில் எதாவது ஒன்றை விளக்குக. [3 + 5 = 8]

29. இந்தியாவிற்கு ஐரோப்பியரின் வருகையுடன் எந்தெந்த மாற்றங்கள் அரங்கத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன? [8]

30. இந்திய பண்பாட்டை, சீனாவிலும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் பரப்புவதில், இந்திய வணிகர்கள் சமயப் பரப்பாளர்களின் பங்கை விவாதி? [8]

# இந்திய பண்பாடு மற்றும் பாரம்பரியம் (223)

## மதிப்பெண் வழங்கும் முறை

| வினா எண் | எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டு புள்ளிகள் | மதிப்பெண்களை பகிர்ந்தளித்தல் | மொத்தம் மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| 1. | (அ) வலமிருந்து இடதுக்கு | 1 | 1 |
| 2. | (ஆ) மடாலயங்கள் | 1 | 1 |
| 3. | (இ) 1961 | 1 | 1 |
| 4. | (ஆ) பிறந்த பெண் சிசுவைக் கொள்வது | 1 | 1 |
| 5. | (அ) கணவன், மனைவி அவர்களுடைய குழந்தைகள் | 1 | 1 |
| 6. | (இ) புனித நூல் சடங்கு | 1 | 1 |
| 7. | (இ) மஹாயான மரபுக்குழு உருவ வழிபாடு, ஹீனயான மரபுக் குழு முந்தைய புத்தசமயத்தின் பழக்கங்களை தொடர்ந்தது. | ½ + ½ | 1 |
| 8. | (அ) கபீர் - உருவமில்லாத கடவுளின் பக்தன் - இடத்திலிருந்து இடம் நகர்ந்தது - சமயம் சார்ந்த நிறுவனங்களை நம்பாமை | ½ +½ | 1 |
| 9. | (a) இலக்கியம் - மதசார்பற்ற தன்மை<br>(b) ஏராளமான கதாநாயகர்கள் கதாநாயகிகளைப் புகழ்ந்து, நீண்ட குறுகிய கவிதைகளை, பல்வேறு கவிஞர்களால் தொகுக்கப்பட்டது. | 1 + 1 | 2 |
| 10. | (a) சமுக கல்வி சார்ந்த விஷயங்களில் ஆண்கள் பெண்கள் சமஉரிமை.<br>(b) பரம்பரையான சாதிமுறை மறுக்கப்பட்டது.<br>(c) தீண்டாமையை எதிர்த்து போராடப்பட்டது.<br>(d) கலப்புத் திருமணம் ஆர்வமூட்டப்பட்டது. (ஏதாவது 2) | 1 + 1 | 2 |
| 11. | (a) மேற்கத்திய கல்வியில் நம்பிக்கை<br>(b) பெண்களின் கல்வி<br>(c) குரானை அறிவார்ந்த கோட்பாடு, அறிவியல் தகுதியில் விளக்கப்பட்டது.<br>(d) தாராள, சமூக, பண்பாட்டு இயக்கங்கள் (ஏதாவது 2) | 1 + 1 | 2 |
| 12. | (a) பாதுகாப்பு நிகழ்வு பணிகள்<br>(b) விண்வெளி (எஸ்.எல்.வி-3)<br>(c) ரோகினி<br>(d) சமயத்துடனும் தத்துவத்துடனும் ஒருங்கிணைக்கப்பட்ட அறிவியல் (ஏதாவது 2) | 1 + 1 | 2 |
| 13. | (a) ஒருங்கமைக்கப்பட்ட புதிய பயிர்கள், மரங்கள் மற்றும் தோட்டக்கலை தாவரங்கள்<br>(b) நீர்ப்பாசனம் - பாரசீக சக்கரம் அறிமுகப்படுத்தப்பட்டது.<br>(c) நில அளவை முறைகள் மற்றும் நில வகைப்பாடுகள் | 1 + 1 | 2 |
| 14. | (a) அதர்வ வேதம் - நோய்கள் குணமாகுதல், மருந்துகள்<br>(b) சரக்கால் எழுதப்பட்ட சரக்சம்ஹிதா (மூலிகை செடிகள்)<br>(c) சுஸ்ருத சம்ஹிதா - சுஸ்ருதா (அறுவை சிகிச்சை)<br>(d) உப்பு இல்லாத பத்திய உணவு | 1 + 1 | 2 |

| வினா எண் | எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டு புள்ளிகள் | மதிப்பெண்களை பகிர்ந்தளித்தல் | மொத்தம் மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| 15. | (a) பண்பாடு என்பது தலை முறையினரின் ஒன்று திரட்டப்பட்ட அனுபவங்கள்<br>(b) கல்வி என்பது, பண்பாட்டினை மாற்றக்கூடிய செயல்பாடு | 1 + 1 | 2 |
| 16. | அடித்தளமிடுகிறது<br>(a) ஆளுமைப் பண்பின் வளர்ச்சி<br>(b) மனப்பான்மைகள்<br>(c) சமூக நம்பிக்கை<br>(d) பழக்கங்கள<br>(e) கற்கும் திறன்கள்<br>(f) தொடர்பு கொள்ளும் திறன்கள<br>(g) திறமைகள் (ஏதாவது இரண்டு) | 1 + 1 | 2 |
| 17. | பரிந்துரைக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை தவிர வேறு மருந்துகள் பயன்படுத்துதல். | 4 | 4 |
| 18. | (a) பிராமணர்கள், சடங்குகளில் உள்ள ஆர்வத்தை வளர்த்தார்கள்<br>(b) பெரிய அறக்கட்டளைகள் கோரிக்கை விடுத்தன<br>(c) பெரிய அளவில் விலங்குகள் பலியிடுதல்<br>(d) மிகவும் விலையுயர்ந்த யஜ்னாக்கள்<br>(e) பிராமண சமூகத்தின் விஞ்சிய மனப்பான்மை<br>(f) பிராமணர்களின் செருக்கான போக்கு<br>(g) சமுதாயப்பிரிவுகள் மாற்ற முடியாத வர்ணாக்கள் (ஏதாவது நான்கு) | 1 + 1 + 1 + 1 | 4 |
| 19 | (a) மேல் வகுப்பினரின் தகவல் தொடர்பு ஊடகம்<br>(b) பண்பாட்டின் மொழி<br>(c) முஸ்லீம்கள் இந்துக்களிடையே உள்ள தொடர்பு மொழி.<br>(d) அரசவை மொழி | 1 + 1 + 1 + 1 | 4 |
| 20 | (a) உள்ளூர் மொழியில் அகராதிகளை வெளியிடுதல், இலக்கணத்தை உள்ளூர் மொழியில் வெளியிடல்<br>(b) சமய குருக்களுக்கு புத்தகங்கள் உதவுதல்<br>(c) கல் அச்சு அச்சகம்<br>(d) பள்ளிகள், கல்லூரிகளைத் தோற்றுவித்தல் | 1 + 1 + 1 + 1 | 4 |
| 21. | **பண்டைய இந்தியாவின் கட்டிடக்கலை -**<br>கல்வெட்டுக்கோவில்கள், ஸ்தூபிகள்,மரப்பயன்பாடு, பாரசீக, கிரேக்கபாணி<br>**இடைக்கால இந்தியாவின் கட்டிடக்கலை -**<br>மாடவிதானங்கள், தூண்கள்,வளைவுகள்<br>**நவீன இந்தியாவின் கட்டிடக்கலை -**<br>பாரசீக ரோமானிய பாணி விதானங்கள், ஜல்லி பயன்படுத்தப்பட்டன. மணல்கற்கள் போன்ற மண்ணில் தோன்றல் பொருட்கள் | 4 | 4 |

| வினா எண் | எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டு புள்ளிகள் | மதிப்பெண்களை பகிர்ந்தளித்தல் | மொத்தம் மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| 22. | (a) வெடி மருந்துகள் தயாரிக்கும் உத்திகள்<br>(b) வான வேடிக்கையும் வெடித்தலும்<br>(c) பீரங்கிகளின் வார்ப்புகள்<br>(d) வாசனைத் தைலங்கள் | 1 + 1 + 1 + 1 | 4 |
| 23. | (a) 1854 ஆம் ஆண்டின் உட்ஸ் அறிக்கை - கல்விக் கொள்கைகளின் நோக்கங்கள்<br>(b) 1857ல் பல்கலைக்கழகங்கள் தோற்றுவித்தல்- பம்பாய், மெட்ராஸ், கல்கத்தா. 1882,1887இல் பஞ்சாப், அலகாபாத் பல்கலைக் கழகம் தோற்றுவித்தல்.<br>(c) 1901-ஆம் ஆண்டு மாநாடு கர்சன் பிரபுவின் பொது ஆணை, கல்விசார்ந்த சீர்திருத்தத்தை தொடங்கியது.<br>(d) 1904ஆம் ஆண்டு இந்திய பல்கலைக்கழக சட்டம் அனுமதித்து போற்றப்பட்டது.<br>- கல்லூரிகளில் ஆய்வு<br>- போதனையைக் மேற்கொள்ள<br>- உயர்நிலையில் தரமான கல்வி | 1 + 1 + 1 + 1 | 4 |
| 24. | (a) பரிமாற்ற வணிகம்<br>(b) பயனுள்ள கலாச்சார உறவு<br>- வானவியல்<br>- கணிதவியல்<br>- பத்தின் கூறுகள் முறை<br>- பூஜ்யம் எண்<br>- 9 அடையாளம்<br>(c) மொழிபெயர்ப்பு புத்தகங்கள்<br>- உதாரணமாக சுஸ்ருதா சம்ஹிதா<br>- மருத்துவம்<br>- சோதிடம் | 4 | 4 |
| 25. | (a) எல்லா உறுப்பினர்களும் ஒருவரோடு ஒருவர் ரத்த உறவை கொண்டிருந்தனர்.<br>(b) எல்லா உறுப்பினர்களுக்கும் சமமான அந்தஸ்து<br>(c) முன்னோர் வழியில் இருந்து வந்தவர்<br>(d) எல்லா உறுப்பினர்களும் வளங்களை சமமாக பெறக் கூடியவர்கள் ஆவர்.<br>(e) தனிப்பட்ட சொத்து என்ற உணர்வே இல்லை<br>(f) வயது, பாலின அடிப்படையில் சமூக வேறுபாடுகள் இருந்தன.<br>(ஏதாவது நான்கு) | 1 + 1 + 1 + 1 | 4 |
| 26. | வகைகளுக்கான காரணங்கள்<br>(a) பல்வேறு வகையான இயற்கை அமைப்பு, தட்பவெட்ப அம்சங்களுடன் கூடிய பரந்த நாடு<br>(b) வெவ்வேறு இனக்குழுக்கள் ஒன்றோடொன்று இணைந்திருத்தல்<br>(c) இந்தியாவின் பல்வேறு வட்டாரங்களின் பண்பாட்டுப் பரிமாற்றம் | | |

| வினா எண் | எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டு புள்ளிகள் | மதிப்பெண்களை பகிர்ந்தளித்தல் | மொத்தம் மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| | (d) மொழிகள், உடை, உணவு, சில வழக்கங்களில் பண்பாட்டு வேறுபாடுகள்.<br>**ஒற்றுமையின் அடிப்படைகள்.**<br>(a) நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு வியாபாரத்திற்காக அல்லது புனிதப்பயனமாக செல்வது.<br>(b) இராணுவ முகாம்கள்<br>(c) சீதோஷ்ண நிலை<br>(d) இசை, நடனப்படிவங்கள், நாடகம், ஓவியங்கள் சிற்பக் கலை, கட்டிடக்கலை போன்ற கலைப் படிவங்கள்<br>(e) அரசியல் படிவங்கள்<br>(f) போக்குவரத்து, தகவல் தொடர்பு, இடப்பெயர்வு<br>(ஒவ்வொன்றிலிருந்தும் ஏதாவது நான்கு) | 1 + 1 + 1 + 1 | 4 |
| 27. | **சமய சீர்திருத்தவாதிகளின் பெயர்கள்.**<br>கபீர், நானக், மீராபாய், ரக்ஷன், அப்துர்ரஹிம், கான்கி கன்னா, சூர்தாஸ், காளிதாஸ், சைதன்யா, நாம்தேவ் சூபிக்கள், பக்தி புனிதர்கள்.<br>(a) அவர்கள் சமயத்தை வழிபாட்டாக கருதவில்லை ஆனால், வழிபட்டவைகளுக்கும் வழிபடுபவர் களுக்கும் இடையே, அன்பை அடிப்படையாக கொண்ட அன்பின் பிணைப்பு என கருதினார்கள்.<br>(b) கடவுளின் முன்பு, சாதி, இனம் அல்லது சமயம் என எந்த விதவேறுபாடுகளையும் காட்டவில்லை.<br>(c) கடவுளின் முன்பு சமத்துவத்தை வலியுறுத்தினார்கள் சாதி முறை, நிறுவனம் சார்ந்த சமயங்களை தாக்கினார்கள்.<br>(d) சதியையும் பெண் சிசுக்கொலையையும் எதிர்த்தார்கள்.<br>(e) இந்துக்கள், முஸ்லிம்களிடையே தொடர்பு படுத்த நோக்கம் கொண்டார்கள்<br>(ஏதாவது நான்கு) | 4 + 4 | 8 |
| 28. | (i) சாங்க்யா யோகா<br>நியாயா வைஷேஷிகா<br>மிமாம்சா<br>வேதாந்தா<br>(ii) இவற்றில் எதாவது ஒன்றை விளக்குக | ½ + 6 = 3<br>3 + 5 | 8 |
| 29. | (a) அரங்கம் ஏற்படுத்தப்பட்டது<br>(b) ஒரு இந்தியன் வங்காள அரங்கத்தை அமைத்தார்.<br>(c) அரங்கம் பரிணாமித்தது<br>(d) நாடகம், சோகங்கள், ஹாஸ்யங்கள் நகர வாழ்க்கையின் சிக்கல்களை சித்தரிக்கின்றன.<br>(e) நாடகம், வட்டார மொழியில் எழுதப்பட்டன. | | |

| வினா எண் | எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டு புள்ளிகள் | மதிப்பெண்களை பகிர்ந்தளித்தல் | மொத்தம் மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| | (f) நாட்டுப்புற அரங்கம் வளமடைந்தது<br>(g) பல்வேறு துறைகளில் வல்லவர்<br>(h) மக்களுக்கு சென்றடைவதற்கு நாட்டுப்புறக் கலைகளை அறிமுகப்படுத்தினார்.<br>(ஏதாவது நான்கு) | 2 + 2 + 2 + 2 | 8 |
| 30 | **சீனா**<br>(a) அறிஞர்களின் தொடர்ந்த வருகை<br>(b) இந்திய பல்கலைக்கழகத்திலிருந்து புகழ்பெற்ற ஆசிரியர்களின் சீன வருகை.<br>(c) யோகாவின் தத்துவம்<br>(d) தியானப் பழக்கம்<br>(e) ஆயிரக்கணக்கான புத்தகங்கள் சீன மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன.<br>(f) சீனாவில் குகைக் கோவில்கள், மடாலய கட்டடத் தொகுதிகள் கட்டப்பட்டன.<br>**கொரியா**<br>(a) இந்திய பண்பாட்டுக் கூறுகள் கொண்டு வரப்பட்டன.<br>(b) தத்துவம்<br>(c) சமயம்<br>(d) உருவங்களை அமைக்கும் கலை<br>(e) ஓவியங்கள<br>(f) உலோகவியல்<br>(g) தியான யோக தத்துவம்<br>(h) இந்திய எழுத்துக்கள் கொரியாவிற்கு அனுப்பப்பட்டன.<br>**ஜப்பான்**<br>(a) புத்த சமயத்திற்கு சம அந்தஸ்து கொடுக்கப்பட்டது.<br>(b) சமஸ்கிருதம், புனித மொழியாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.<br>(c) சமஸ்கிருத மொழி, ஜப்பானுக்கும் இந்தியாவுக்கும் இடையே ஒரு இணைப்பு சக்தியாக ஆனது. | 2 + 2 + 2 + 2 | 8 |

# பாடங்கள் பற்றிய பிரதிபலிப்பு

| பாடங்கள் பற்றிய பிரதிபலிப்பு | | பொருளடக்கம் | | | மொழி | | உதாரணங்கள் | | நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்? | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாடங்கள் எண். | பாடங்களின் பெயர் | கடினம் | நாட்டத்தை தூண்டக் கூடியது | குழப்புகின்றது | சாதாரணம் | சிக்கல் | பயனுடையது | பயனல்லாதது | உபயோகமாக இருந்தது | உபயோகமாக இல்லை |
| 1 | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | |
| 5 | | | | | | | | | | |
| 6 | | | | | | | | | | |
| 7 | | | | | | | | | | |
| 8 | | | | | | | | | | |
| 9 | | | | | | | | | | |
| 10 | | | | | | | | | | |
| 11 | | | | | | | | | | |
| 12 | | | | | | | | | | |
| 13 | | | | | | | | | | |

அன்பார்ந்த மாணவர்களே,

இந்த பாடப்புத்தகத்தைப் படித்து மகிழ்ந்து இருப்பீர்கள். எங்களுடைய ஆசை என்னவென்றால் இந்த கற்கும் சாதனம் ஆனது நடப்பைக் குறிப்பதாகவும், ஒருவருக்கொருவர் விவாதிப்பதிற்காகவும், உங்கள் நாட்டத்தையும் அதிகரிக்க வேண்டும் என்பதுதான். உங்களுடைய இந்தப் புத்தகத்தின் பிரதிபலிப்பு எங்களுக்கு மிகவும் நன்மை பயக்கும். நீங்கள் சில நிமிடங்களை எடுத்துக் கொண்டு இந்த பிரதிபலிப்பு அட்டவணையை நிரப்பி எங்களுக்கு அனுப்பினால் அந்த அட்டவணையை வைத்துக் இந்த கற்கும் சாதனத்தை மேலும் நன்முறைப்படுத்த நாங்கள் இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி!

**ஒருங்கிணைப்பாளர், பொருளாதாரம்**

| | | பாடக்கேள்விகள் | | பொது கேள்விகள் | | |
|---|---|---|---|---|---|---|
| பாடங்கள் எண். | பாடங்களின் பெயர் | பயனுடையது | பயனல்லாதது | சுலபம் | கடினம் | மிக கடினம் |
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |
| 5 | | | | | | |
| 6 | | | | | | |
| 7 | | | | | | |
| 8 | | | | | | |
| 9 | | | | | | |
| 10 | | | | | | |
| 11 | | | | | | |
| 12 | | | | | | |
| 13 | | | | | | |

உங்களுடைய யோசனைகள்

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

நீங்கள் பொருளாதாரம் படிக்க வேறு ஒரு புத்தகத்தை படித்தீர்களா? ஆம் / இல்லை

ஆம் என்றால் படித்தற்கான காரணங்களைக் கூறுக

______________________________________________

______________________________________________

பெயர் :

வருகைப் பதிவு எண்

முகவரி :

பாடம்

புத்தக எண்

Course Cordinator
Economics
National Institute of Open Schooling
A-24-25, Institutional Area
Sector 62 – NOIDA (UP)

Postage
Stamp